# பொருளியல் மூலம்

(பகுதி I)

ஜ. தி. எசு. வீரவர்த்தனரும் பரியாரும்

356

1081

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

பொரு 10

# பொருளியல் மூலம்

(பகுதி I)

2253

1081

330.

# பொருளியல் மூலம்

(பகுதி I)

முன்னைநாள்
இலங்கைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்
**கலாநிதி ஐ. தி.எசு. வீரவர்த்தனவும், பாரியாரும் இயற்றியது**

**தமிழாக்கவுரிமை அரசினர்க்கே**

**1968**

இலங்கை அரசாங்க அச்சகத்தாரால் பதிப்பிக்கப்பெற்றது

முதலாம் பதிப்பு 1960
இரண்டாம் பதிப்பு 1968

## இரண்டாம் பதிப்பு

## முன்னுரை

இந் நூல், பொருளியல் மூலம் பற்றி எழுதப்பட்டுள்ள பிற நூல்களுடன் பல் கலைக்கழகங்களில் பயன்படுவதால் மறுபடியும் வெளியிடப்படுகின்றது. இப் பதிப்பு திருத்தியும் புதுக்கியும் அமைக்கப்பட்டிருப்பதால், பல இடங்களில் விடயம் முன்னையிலும் விளக்கமாகவிருக்கும்.

58, சிறிமதிபாயா,
கொழும்பு 3.

மா. அ. பெரேரா,
ஆணையாளர்.

---

## දෙවැනි මුද්‍රණයේ

## පෙරවදන

ආර්ථික විද්‍යාව පිළිබඳව අනිකුත් ග්‍රන්ථ සමඟ විශ්ව විද්‍යාලවල පරිශීලනය සඳහා මේ ග්‍රන්ථය ඉමහත් ප්‍රයෝජනයක් වන හෙයින් එහි දෙවැනි මුද්‍රණය පළකරන ලදී. මෙය නොයෙක් තැන්වලින් හරිවැරදි බලා සකස් කරනු ලැබූ හෙයින් විෂය පිළිබඳ පැහැදිලි අවබෝධයක් ලැබෙනු ඇත.

ඇම්. ඒ. පෙරේරා,
අධ්‍යාපන ප්‍රකාශන කොමසාරිස්.

# முன்னுரை

"பொருளியல் மூலம்" என்னும் இந்நூல் இலங்கைப் பாடசாலை உபயோகத்திற்கென ஆக்கப்பெறும் இவ்வகை நூல்களுள் முதலாவதாகும். இது சிங்கள மூலநூலின் மொழிபெயர்ப்பு. ஒவ்வோர் அத்தியாயத்தின் இறுதியிலும் ஆங்குப் பயன்படுத்தப் பெற்ற நுட்பச் சொற்களின் தொகுதியொன்று தரப்பட்டுள்ளது. இது மாணவர்கள் பார்த்துப் படித்தற்கு வசதியாகும்.

திருத்தத்திற்கான ஆலோசனைகள் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

**நந்ததேவ விசயசேகரா,**
அரசகருமமொழி அலுவல்களுக்கான
ஆணையாளர்.

அரசகருமமொழித் திணைக்களம்,
(வெளியீட்டுப் பகுதி),
புல்லர் வீதி,
கொழும்பு 7.

# முகவுரை

பொருளியல் வித்தையானது ஆழமானவொரு கலையாகும். அதிலடங்கியிருக்கும் பொருளைச் சிங்கள மொழியில் படிக்கும் வாய்ப்பு இல்லை. ஆகையால் இப்புத்தகத்தை இயற்றும்பொழுது பொது வழக்கிலில்லாத கலைச்சொற்கள் பலவற்றையும் அமைக்க நேர்ந்தது. தேவையான சில விடங்களிலொழிய, இதன் கண் உபயோகித்திருக்கும் கலைச்சொற்கள், அரசகருமமொழிப் பகுதியாரால் அமைக்கப்பட்ட சொற்கள் என்றே கூறுவோம். அவர்களுக்கு யாம் இங்கு நன்றி கூறுகின்றோம்.

கலையின் ஆழம் காரணமாகவும் பழக்கமில்லாத கலைச்சொற்களையமைக்க நேர்ந்த காரணமாகவும் மாணவ மாணவிகளுக்கு இந்நூலின் மேலான பயனைப் பெற்றுக்கொள்வது கடினமாயினும், இதை ஆசிரியரின் உபதேச மூலம் வாசித்துப் பயன் பெறலாம். புத்தியுள்ள சாதாரண மாணவனுக்கு எனின், இது கடினமாயிருக்குமென நாம் கருதவில்லை.

இந்நூலை ஆக்கும்பொழுது நமக்குத் துணைபுரிந்த எல்லோரையும் நாம் நன்றியறிவுடன் குறிப்பிடுகின்றோம். பூந்தோட்டத்துப் பெரிய புத்தகோவிலில் உபநாயகரான வணக்கத்துக்குரிய அமுனுகம விபச்சி நாயக சுவாமியாருக்கும் நமக்குப் பெரிய ஊக்கத்தோடும் ஆவலோடும் துணைபுரிந்த செல்வி சுசாதா குமாரி விசயரத்தினவுக்கும், பல்கலைக் கழகத்து ஆசிரிய குழுவில் போராசிரியர் தொ. ஈ. எற்றியாராய்ச்சி அவர்களுக்கும், ஆசிரியர் த. சே. விசயரத்ன அவர்களுக்கும், சிங்கள விசுவகோச ஆசிரியர் குழுவில் விமல் அபயசுந்தரா அவர்களுக்கும், அரசகரும மொழித் திணைக்கள எம். சே. பெரோரா, தொ. ம. எற்றியாரச்சி, தி. எம். வெதகே, என். இரத்தினக்கார ஆகியோருக்கும், இப்புத்தகத்தை முழுவதும் வாசித்து மிக்க அன்புடன் புத்திமதியளித்த நம் நண்பரான ஆசிரியர் எம். பி. ஆரியபாலா அவர்களுக்கும், எசு. வணிகத்துங்கா அவர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

சமரதாச வீரவர்த்தன,
மாகரெட்டு வீரவர்த்தன.

இலங்கைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
1958 ஆம் ஆண்டு மார்சு மீ 20 ஆந் உ.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1 ஆம் | அத்தியாயம் : மானிய யுகம் | 1 |
| 2 ஆம் | அத்தியாயம் : பெரும் புரட்சி | 21 |
| 3 ஆம் | அத்தியாயம் : முதலாண்மையும் சமுதாயவாதமும் பேணல் அரசும் | 40 |
| 4 ஆம் | அத்தியாயம் : புதுச்சமுதாயத்தில் பொருளியல் ஒழுங்கு | 62 |
| 5 ஆம் | அத்தியாயம் : மனிதனுடைய தேவைகளும்—அவற்றைத் தணித்தலும் | 87 |
| 6 ஆம் | அத்தியாயம் : உறுதிக்கேள்வி | 109 |
| 7 ஆம் | அத்தியாயம் : போட்டியுற்பத்தியாளன் | 126 |
| 8 ஆம் | அத்தியாயம் : தனியுரிமை | 143 |
| 9 ஆம் | அத்தியாயம் : கேள்வியும் நிரம்பலும் விலையும் | 157 |
| 10 ஆம் | அத்தியாயம் : சம்பளங்கள் | 178 |
| 11 ஆம் | அத்தியாயம் : வாடகை | 195 |
| 12 ஆம் | அத்தியாயம் : வட்டியும் இலாபமும் | 205 |
| 13 ஆம் | அத்தியாயம் : பணமும் வங்கிகளும் | 218 |
| 14 ஆம் | அத்தியாயம் : அரசாங்க வரவுசெலவுப் பரிபாலனம் | 270 |

## 1 ஆம் அத்தியாயம்

# மானிய யுகம்

ஏறக்குறையப் பத்துலட்சம் வருடங்களுக்கு முன்னர், மனிதவருக்கத்தின் சரித்திரம் தொடங்கினதென்று சரித்திரகாரர் கூறுகின்றனர். ஆனால், பலவிதமான சமூக-பொருளாதார-இராச்சிய பரிபாலன ஏற்பாடுகளால் நிறைந்த நாம் வாழும் இவ்வுலகம், ஏழெட்டு நூற்றாண்டுகளுக்குமேல் பழமையானதன்று. இன்று நூதனமென்று எண்ணப்படும் இந்தப் புதிய சமூக-பொருளாதார-இராச்சிய பரிபாலன அபிவிருத்திகள், மெல்லமெல்லத் தொடங்கிப் பலவிதமான வேகங்களோடு உலகத்தின் பல பாகங்களிற் பரவத்தொடங்கின. இந்தப் புதிய நாகரிகத்தின் அதிகாரத்துக்ககப்படாதவொரு தனிப்பிரதேசம் உலகத்திலில்லை. ஆனால், வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு விதமாகவே உலகத்தில் பலதேசங்கள் நவீன நாகரிகத்தின் செல்வாக்கையடைந்துள்ளன.

மேற்கு ஐரோப்பாவிற்றான் புது நாகரிகம் முதலில் தோன்றியது. ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் ஏனைப்பாகங்களுக்குப் புது நாகரிகம் பரந்து விட்டது. இதை முன்னிட்டு, தொயின்பி போன்ற வரலாற்றாசிரியர்கள் புதுயுகத்துக்கு "ஐரோப்பிய நாகரிகம்" என்று கூறுவாராயினர். உலக நாகரிகத்தின் பிறப்பிடமான மேற்கு ஐரோப்பாவிலிருந்து, புதுநாகரிகங்களின் மத்தியத்தானங்கள் அன்னிய தேசங்களிலும் வேகமாகத்தோன்றுவதை அடிக்கடி காணலாம். அது எப்படியாயினும் புதுநாகரிகத்துக்குப் பிறப்பிடமாகவுள்ள இடத்தையே எங்கள் அவதானத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும். இன்றேல், அதன் முக்கிய அம்சங்களை விளக்கிக்கொள்ளவியலாது.

புது நாகரிகம் தொடங்குமுன்னர் மனிதரின் வாழ்க்கை முறைக்கு "மானிய முறை" என்ற பெயர் வழங்கப்பட்டது. அப்பொழுது ஐரோப்பாவிலும் துருக்கிப்பேராசிலும் ஆசியநாடுகளிலும் இந்த மானியமுறை மூலமாகவே நாகரிகம் சீர்திருத்தமடைந்ததென்று கூறலாம். மூவாயிரம் (3000) ஆண்டுகளுக்கு முன்தொட்டு சீனாவில் ஒரு மானியமுறை விளங்கியது. ஆனால், ஐரோப்பிய மானிய முறையின் செழிப்பான சமயம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டுக்கும் 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகும். இந்தக்காலத்திலேயே "சாசன்" இராச்சியத்திலும் ஒற்றோமன்-எகித்து இராச்சியங்களிலும் மானியமுறை பூர்த்தியாகியிருந்தது.

நாட்டுவித்தியாசங்களும் சாதிவேற்றுமைகளும் இருந்தபோதிலும், இந்நாடுகள் எல்லாவற்றிலுமிருந்த மானியமுறையின் முக்கிய உறுப்புக்கள் ஓரேவிதமாகவே இருந்தனவென்று கூறினால், அது மிகையாகாது. புது நாகரிகத்தின்

"பிறப்பிடம்" ஐரோப்பாக்கண்டமாதலால், இப்பொழுது ஐரோப்பிய மானிய முறைபற்றி அவதானிக்க வேண்டும். ஆனல், ஐரோப்பிய மானியமுறையிலேயே மாகாணத்திற்கு மாகாணம் பலப்பல வேறுபாடுகள் உள்ளன.

புதிய இலங்கையைப் போல மத்தியகாலத்திலுள்ள ஐரோப்பாவும், முக்கியமாக, விவசாய நாடாகவே விளங்கியது. பதினும் நூற்றண்டில் ஐரோப்பிய சனத்தொகையினர் ஏறக்குறைய நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் ஊரவர்களாகவே இருந்தனர். அக்காலத்து நகரங்களுள் சில நகரங்களிற்றன் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட சனத்தொகை இருந்தது. பெரும்பாலும் நிந்தகம் முறையின்கீழே கிராமிய ஐரோப்பா இயற்று தொழில்களுக்காக அமைக்கப்பட்டது. இதனல், நிந்தகம் முறை, ஐரோப்பா முழுவதிலும் பரந்திருந்த ஒரேயொரு முறையாகவோ, பொதுமுறையாகவோ விளங்கினதென்று எண்ணக்கூடாது. எப்படியென்றலும், அது, மிகத்திட்டமான ஒரு முறையாகவே திகழ்ந்தது.

மானிய சமுதாடத்தினை நடாத்தற்பொருட்டு, வேண்டிய உணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் குடிகள், நிலங்களிலிருந்தே பெற்றுக்கொண்டனர். நிலங்களிலிருந்து பெற்றுக்கொண்ட நற்பலன்களை யருந்தியே அரசன், பிரபுக்கள், குருமார், கிராமத்தார் ஆகியோர் சீவித்தனர். பொதுவாக, நிலவுரிமையுள்ளவர்களாக விளங்கினவர்கள் நரேந்திரர், பிரபுக்கள், சிறந்த குருமார் என்று கூறினும் தவறில்லை. எனினும், எப்பொழுதும் அரசாங்க உத்தியோகங்களிலும் பலப்பல விநோதங்களிலு மீடுபட்டிருந்தபடியால், இவர்கள் நிலங்களைப் பயிரிடுவதில் ஈடுபடவில்லை. ஆகையினல், நிலங்களைப் பயிரிடுவதிலும், பொருள்களையுண்டாக்குவதிலுமிருந்த சிரமமான தொழில்கள் யாவும் ஊரவர்களாற் செய்யப்பட்டன.

மானியசமுதாயத்தில் பொருள்களை இயற்றுவதற்கென நிகழ்ந்த ஒழுங்குகளை இனி நாம் விரிவாக ஆராய்ந்து பார்ப்போம். நாட்டில் நிலங்களெல்லாம் அரசுக்குரியவைகளாக இருந்தன. அரசனல் தனக்குத் துணையான பிரபுவகுப்புக்குரிய செய்கைக்காரர்களுக்கு அவை கொடுக்கப்பட்டன. காணி உரிமையாளன் அரனகவோ, பண்டாரன் ஒருவனகவோ இருக்கலாம். அவனது பிழைப்புக்காக இந்த நிலங்களின் ஒரு பெரிய பாகம் பிரிக்கப்படும்; சிலவேளையில் இந்தப் பாகம் நிலத்தினளவில் ஒருபாதியாக இருக்கும். இது பண்டார நிலமென்று வழங்கப்பட்டது. *பண்டார வளவும் அங்கு நிறுவப்பட்டது. பண்டாரனும், அவர் குடும்பமும், அவர் உத்தியோகத்தர்களும், பண்டாரப்பிள்ளைகளும் அங்கு வசித்து வந்தனர். பண்டாரனின் ஏனை நிலங்களெல்லாம், பயிரிடப்படும் பொருட்டு ஊரவர்களுக்குக் கைம்மாருகக் கொடுக்கப்பட்டன. கிராமவாசிகள்

---

* பின்னர் விரித்துரைக்கும் வண்ணம் கிராமத்தவரின் நிலங்களைப்போல பண்டாரநிலமும் அடுத்தடுத்தமைந்துள்ள ஒரு நிலத்தொகுதிசயல்ல; முழுநிலமும் இங்கு மங்குமாக வயல்களுள் இடையிடையே அமைந்துள்ள பல வயல்களாக இருந்தன. அவைகளே பண்டார (சுவாதீன) நிலங்களென்று வழங்கப்பட்டன.

வருடத்தில் பலநாட்களை பண்டாரநிலத்தில் பயிரிடுதற் பொருட்டுக் கழித்து வந்தனர். மேலும், அவர்கள் தங்கள் நிலங்களின் விளைவில் ஒரு பாகத்தை, அல்லது அதற்குப் போதுமான பணத்தொகையைப் பண்டாரனுக்களித்தனர்.

இவ்வண்ணமாராய்ந்து பார்க்கையில், சொந்தநிலங்களிலிருந்து பண்டாரனுக்குப்பிரதானமான வருமான வழிகள் இரண்டாகும். ஒன்று, ஊரவர்களால் பயிரிடப்பட்ட பண்டார நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம். மற்றையது சிலவேளைகளில் பண்டார நிலத்தைப் பயிரிடுதலோடு, அதற்குப் பதிலாக பண்டாரனுடைய ஏனைய நிலங்களைப் பயிரிடும் ஊரவர்களால் சுயவருமானத்திலிருந்து கொடுக்கும் பாகம், அல்லது அதற்குப்பதிலாகச் செலுத்தும் பணம்.

அரசர்களினதும் பண்டாரர்களினதும் நிலங்களெல்லாம் அடுத்தடுத்து அமையவில்லை. நாட்டின் பல மாகாணங்களில் அவர்களது காணிபூமிகள் பரந்திருந்தன. சொலமன் அரசனுக்கு முடிக்குரிய அரசநிலங்களாக 1,600 தோட்டங்கள் இருந்தனவென்று கூறுகின்றனர். அரசனதாகட்டும், பண்டாரர்களதாகட்டும், அந்தக் காணிபூமிகள் யாவையும் நிந்தகமம் முறையின்படியே பரிபாலிக்கப்பட்டன. கூடும் ஊதியங்களை, அல்லது போகங்களை அனுபவித்துக் கொண்டு அரசர்களும் பண்டாரர்களும் சொந்த நிலங்களில் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாறிக்கொண்டு இருந்தனர். ஆனால், தம் சொந்த நிலங்கள் வெகுதூரத்தில் இருந்தால், அவற்றின் ஒரு பாகத்தையாவது பண்டாரநிலமாக அமைக்காமல், அதன் பயன்களிலிருந்து ஒருபாகத்தை, அல்லது யாதாவது ஒருபணத்தொகையைத் தமக்குக் கிடைக்கத்தக்கதாக முழுநிலத்தையும் ஊரவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பர். சந்தை முதலியவை அருகேயிருப்பினும் சில நிலங்கள் அதிகம் செழிப்புற்றிருந்தாலும், பண்டாரர் தம் நிலத்தின் பிரமாணத்தை விசாலித்துக்கொள்ளுவர். இவ்வாறு பலவிதமான அன்னிய முறைகள் இருந்த போதிலும், மிகவும் இட்டமான முறை யாதெனில், ஒரு நிலத்தைப் பண்டார நிலமாகப் பகுத்து, எஞ்சிய பங்குகளைக் கிராமத்தாரிடையே பிரித்துக் கொடுத்தலே ஆகும். இது நிந்தக முறை எனப்படும்.

அன்று, நிலங்களைப் பயிரிடுவதில் ஈடுபட்ட ஊரவர்கள் பிரீமன், அல்லது சுவாதினன், வாரக்குடி, குடிசைவாசி, அடிமை என நான்கு பிரிவினராகப் பிரிக்கப்பட்டனர். வெற்றிவீரன் வில்லியம் அரசனைதும், இங்கிலாந்திலுள்ள நிலங்களுக்கு ஓரிடாப்பை இயற்றியபொழுது அக்காலச் சனத்தொகையின் நூற்றுக்குப் பன்னிரண்டு வீதம் சுவாதினர்களும், நூற்றுக்கு முப்பத்தெட்டு வீதம் வாரக்குடியினர்களும், நூற்றுக்கு முப்பத்திரண்டு வீதம் குடிசை வாசிகளும், நூற்றுக்கு ஒன்பது வீதம் அடிமைகளும் இருக்கக்கண்டனர். ஊரவர்களிடையே நிகழ்ந்த இந்த வேறுபாடு, பொருளியல் நிலைமைக்கு மட்டும் அவசியமானதன்றித் தனிமனிதனின் சுவாதீனத்திற்கும் அவசியமாயிருந்தது. ஊரவர்களுள் சுவாதீனர்களுக்கே விசேடமான உரிமைகள் இருந்தன. போர்க்காலத்தில் தொண்டு செய்ய அவர்கள் சட்டமுறை நியமிக்கப்பட்டிருந்தனர். தத்தம் இட்டத்தின்படி தம் பெண்மக்களை விவாகஞ்செய்து கொடுக்கவோ, தம் ஆண்மக்களைக் குருமாரின் சேவைக்காக அனுப்பவோ, தாம் விரும்பும் பிராணியை

விற்கவோ, அவர்களுக்கு அதிகாரமிருந்தது. இப்படிப்பட்ட சுவாதீனமுடையோர் பொதுவாக, வருடத்துக்கொருமுறை விடுகாசை, அல்லது நிலத்தின் நற் பலன்களுள் ஒரு பாகத்தைக் கொடுத்தே தம் நிலத்தை வகித்தனர். பண்டாரருக்கு வழங்கவேண்டிய சம்பளத்தின் ஒரு பாகமாக, பண்டார நிலத்தில் வேலை செய்ய ஊராவர்களுக்கு வசதி இருந்தது. என்றாலும், பயிர்களையறுத்துச் சேர்க்கும் காலம் போன்ற வேலைகள் செறிந்துள்ள காலங்களில் மட்டும் சில நாட்களுக்கு வேலைசெய்யவே அம் முறை வரையறுக்கப்பட்டது. ஒரு வாரத்தில் இத்தனை நாட்களுக்குப் பண்டாரநிலத்தில் வேலைசெய்யவேண்டுமென்று அவர்களுக்கு கட்டளைபிறக்கவில்லை. அவ்வண்ணம், பண்டார நிலத்தில் மிகவும் கடுமையான மனவெறுப்பான வேலைகளை அவர்களைக்கொண்டு செய்விக்கவும் முடியாது. பண்டாரருக்கு அவர்கள் முழுதும் கடமைப்பட்டிருக்காதபடியால் தமது நிலங்களிற் பயிரிடுவதை விட்டுவிடவும் அவர்களுக்கு இயலும். சுயாதீனமானவரை ஏவி, வழங்கும் முறைமைக்கு முரண்பாடாகக் கடுமையான வேலைகளைச் செய்விக்கப் பண்டாரருக்கு இயலாது. அப்படிச் செய்வித்தால் சுயாதீனர் அரச சபையில் பண்டாரருக்கு எதிராகக் குற்றஞ்சாட்ட முடியும்.

இப்படிப்பட்ட சிறப்பான நிலைமையை வாரக்குடிகள் வகிக்கவில்லை. சுயாதீனரைக்கொண்டு போர்ச்சேவையைச் செய்விப்பதுபோல வாரக்குடியினரினின்று அதை எதிர்பார்க்கவியலாது. ஆனால், பண்டாரரின் அனுமதியின்றி, தம்மக்களை விவாகஞ்செய்து கொடுக்கவோ, தம் சொந்த மகனைக் குருமார்களின் தொண்டுகளுக்கு அனுப்பவோ, தமக்குரிய ஒரு பிராணியை விற்கவோ, இவர்களால் முடியாது. ஒரு வாரத்தில் வேலைகளுக்கு நியமிக்கப்பட்ட நாட்களிலும், வேலைகள் நிறைந்துள்ள காலங்களிலும், உரிய அளவைக் காட்டிலும் அதிகமாக, வாரக்குடியினர் பண்டாரநிலத்தில் வேலை செய்யவேண்டியிருக்கும். பண்டார நிலத்தில் வாரக்குடியினர் காம்போடுதல், சூடுமிதித்தல் முதலிய கடுமையான வேலைகளைச் செய்யவேண்டும். வாரக்குடிக்குப்பிறகு, அவர்கள் வேலை செய்த நிலத்துண்டைப் பெற வேண்டுமானால், அவர்களின் பிள்ளைகள் அதிகமான பணம் வழங்கவேண்டும். எப்பொழுதேனும் அரச சபையில் குற்றஞ்சாட்ட அதிகாரம் மக்களுக்கில்லை. நிந்தகம முறையிற் பொது வழக்கானது, வாரக்குடிக்கிருந்த ஒப்பற்ற பாதுகாப்பே. அவர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற அது பிரபல்மான ஒரு கருவியாயிருந்தது.

சுய குடும்பங்களின் நிருவாகத்துக்குப் போதுமான வருமானத்தை ஈட்டுவதுடன் குடும்பத்தார் தாம் வேலைகளில் ஈடுபட்டிருக்குமளவிற்கு நிலப்பாகங்களைச் சுவாதீனர்களிடமும் வாரக்குடிகளிடமும் பெறுவர். ஏக்கர் 25–35 வரை விசாலமுள்ள நிலப்பாகம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடும். ஆயின், ஏக்கர் 1–5 உக்கு இடையேயுள்ளசேற்று நிலப்பாகமே குடிசைவாசிகளுக்கு உரித்தாக்கப்பட்டது. குடிசைவாசி ஒருவருக்குக் கிடைக்கும் நிலப்பாகம் அவர் குடும்பத்தாரை எப்பொழுதும் வேலைகளில் ஏற்படுத்தவோ, அவருடைய குடும்பத்தின் நிருவாகத்துக்கு உரிய ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ளவோ, போதாது. ஆகையினால், அவருடைய நேரத்தின் ஒருபாகத்தைக்

கொல்லவேலை, நெசவுவேலை, கோதம்பை அப்பத்தொழில் போன்ற கைத்தொழில் ஒன்றிற் செலவிட நேரும். இன்றேல், அவர் பண்டார நிலத்திலோ, செல்வம்படைத்த கமக்காரர்களுடைய நிலங்களிலோ, கூலிவேலை செய்தல் வேண்டும்.

வாரக்குடிகளும், குடிசைவாசிகளும் பண்டாரருக்குப் பெரிய வரிகள் செலுத்த வேண்டியிருந்தது. தோட்டங்களிலிருந்து பெற்ற நற்பலன்கள் மூலமாகவோ, பணமூலமாகவோ, சேவைமூலமாகவோ, இந்த வரிகள் செலுத்தப்பட்டன. பண்டாரருக்கு வழங்கும் வேதனமாக வாரக்குடிகள் ஒரு வாரத்தில் 3-5 நாள்களாளச் சில நாட்களுக்குப் பண்டாரநிலத்தில் வேலை செய்தனர். இதனால், வாரக்குடிகளின் நிலங்களில் வேலைக்காகச் சில நாள்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. வாரக்குடிக்கு மிகப்பெரிய குடும்பமிருப்பின், இத்தொழில் அவ்வளவு சங்கடமாகாது.

வாரக்குடியினரால் பண்டார நிலத்தில் செய்யவேண்டிய வேலைகள் பலவாயின. வயல்களையுழுதல், விதைத்தல், சூடுமிதித்தல் என்னும் வேலைகள் இவற்றுள் சிலவாகும். மேலும், பண்டார வளவினையும் கட்டடங்களையும் திருத்துதலும், வேலி, கடவைகளைத் திருத்துதலும் அவரால் செய்யப்பட்டன. வேலைகள் நிறைந்துள்ள காலங்களில் வாரக்குடியைக் கொண்டு இவற்றைக்காட்டிலும் அதிகமான வேலைகள் செய்விக்கப்பட்டன. இது* "பூண்" (சிறப்பானவேலை) என்று வழங்கியது. பண்டாரர் வேட்டைக்குச் செல்லும்பொழுது பிராணிகளைக் கிளர்த்துதல், வேட்டை மிருகங்களைக்கொணர்தல், அவர்கள் ஒரு நிலத்திலிருந்து வேறுநிலத்துக்குச் செல்லும்பொழுது அவருடைய பொருள்களைக் காவிக்கொண்டு போதல் —என்பன இவருக்குரிய வேலைகளுள் சிலவாகும். இந்த வேலைகள் வெறுப்பூட்டும் நிலைமையில் இருந்தபடியால், இவற்றில் விருப்பத்தையுண்டாக்கும் பொருட்டு பண்டாரர் இவ்வேலைகளில் ஈடுபட்டுள்ள ஊரவர்களுக்கு அன்னபானங்கள் கொடுப்பர்.

தாம் அனுபவிக்கும் நிலங்களுக்குப் பதிலாக, சில கிராமத்தவர்கள் தம் சொந்த நிலங்களின் நற்பலன்களால் பண்டாரனை உபசரித்தனர். அதன் பொருட்டு அவர்கள் முட்டை, கோழி, செம்மறியாடு, தானியம், பாலாடைக் கட்டி, உப்பு, குடி வகை, சீலை முதலியவற்றைக் கொணர்ந்து பண்டாரருக்குக் கொடுத்தனர். குடிசைவாசி கம்மாளனாக இருந்தால், அவன் பண்டாரருக்குக் குதிரையிலாடன்செய்து கொடுப்பான். இன்னும் சிலர் பண்டாரருக்கு வேதனத்தைப் பணமாகச் செலுத்துவர். ஆனால், இது சிலவேளைகளில் மட்டுமே நடந்தது. நாட்டில் பணம் இருந்த போதிலும், அப்பணம் உபயோகத்தில் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

வாரக்குடிகளாலும் குடிசைவாசிகளாலும் பண்டாரருக்குச் செலுத்த வேண்டிய வேறுஞ்சில வரிகளிலிருந்தன. தம் சொந்த மகளை விவாகம் செய்து கொடுக்க உத்தரவுபெறும் பொருட்டு, வாரக்குடிகள் பண்டாரருக்குச் செலுத்த வேண்டிய ஒரு வரி இருந்தது. விதவையொருத்தி மறுபடியும் விவாகமாகும் பொழுது பண்டாரருக்கு ஒரு வரி செலுத்துதல் வேண்டும். தந்தையினால் பயி

* இங்கிலாந்தில்.

ரிடப்பட்ட நிலப்பாகத்தைத் தான் ஒப்புக்கொள்ளும் பொழுது புதல்வன் செலுத்தவேண்டிய ஒரு வேதனமுமிருந்தது. இவை தவிர, சாதாரண உபயோகத்திலிருந்த சில காரியங்களும் பண்டாரருக்கு உரியவை ஆயின. கோதம்பை அப்பம் சுடுமிடமும் யந்திரமும் பண்டாரரின் உரிமைகளாக இருந்தபடியால், தங்கள் தானியங்களை அரைக்கவும் அப்பம் சுடவும் பண்டாரருக்குரிய அந்தத் தொழிற்சாலைகளுக்குக் கிராமத்தவர் சென்றனர். அங்கே அற்ப வேதனங் கொடுத்துத் தம் வேலைகளை நிறைவேற்றினர்.

பண்டார நிலங்கள் :—(பண்ணைகள்) ஊரவர்கள் பயிரிட்ட பண்டாரநிலங்கள், இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன வென்று முன் கூறினோம். வயல்களும் புற்றரைகளும் மாடுகளுமே அப்படிப்பிரிக்கப்பட்டன. பண்டாரநிலங்களெல்லாம் வயல்களும் புற்றரைகளும் மட்டுமல்ல. அவற்றுட் சில காடுகளுமிருந்தன. வேறு சில வனங்களுமிருந்தன. இன்னும் சில, சேனை நிலங்களாக விளங்கின. இவை யாவும் கமத்தொழிலுக்குரிய மானியப்பொருளியல் திட்டத்துக்குப் பொதுவாகத் தேவைப்படும் பகுதிகள் என்பது பின்னர் புலப்படும். இவ்வண்ணம், பணத்திலும் நற்பயன்களாலும் சேவையினாலும் ஊரவர் பண்டாரருக்குச் செலுத்திய வேதனத்துக்குக் கைம்மாறாக, அவர்களுக்கு (குடிசைவாசிகளும், அடிமைகளுமாக இராவிடின்) ஒரு வீடும், ஒரு நிலப்பாகமும், போதிய வயற்காணியும் கிடைக்கும். அத்துடன் புற்றரைகள், காடுகள், வனங்கள், சேனைநிலங்கள் ஆகியவற்றின் சில உரிமைகளும் அவர்களுக்குக் கிடைக்கும்.

நிந்த கமத்தில் ஊரவர்கள் சீவித்த முறைகள் இரண்டாகும். ஊரவர்கள் ஒரு திரளாக வீடுகளைக் கட்டிக்கொண்டு கூட்டங்கூட்டமாச் சீவித்து, அருகிலுள்ள வயல்களில் வேலைக்குச் சென்றார்கள். இவ்விடத்தில் சேற்று நிலம் முழுவதையும் வயல்களாகப் பிரித்தனர். ஒரு வயல், 220 யார் நீளமும், 22யார் அகலமுமான ஒடுக்கக் காணியாகப் பிரிக்கப்பட்டது. மேற்பரப்பு ஏக்கர் 25-35 இற்கு இடையில் சேற்று நிலமுடையதாகப் பிரிக்கச்பட்டது. வாரக்குடிகளுக்கு நிலமானது ஒரே வரிசையாகக் கிடைக்கவில்லை. முழுச்சேற்று நில அளவின்படி, இடையிடையே பரந்த வயல்களாகவே அவை கிடைத்தன. இரண்டாவது முறைப்படி, கிராமத்தவருக்கு ஒரே வரிசையாக நிலங்கள் கிடைத்தன. அவருடைய இருப்பிடமும் அங்கேயே அமைந்தது. மும்முறைப்படி, கிராமத்து வீடுகள் ஒரு திரளாக அமையவில்லை. அவை இடையிடையே பரந்திருந்தன. எப்படியென்றாலும், முன்னர் விரித்துரைத்த முறையே மிகவும் சாதாரணமானது. இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமுண்டு. முன்னர் விரித்துரைக்கப்பட்ட முறையின்கீழ் ஊரவர்களின் வயல்களோடு பண்டார நிலத்தின் உரிமையாளனாகிய பண்டாரனின் வயல்களும் கலந்திருந்தன.

பொருளியற் பெறுமதியில், சேற்று நிலங்களுக்கு மட்டும் முதலிடம் கொடுத்துப் புன்னிலங்கள் இரண்டாமிடம் வகித்தன. ஊரவர்கள் வளர்த்துவந்த மாடு, ஆடு, செம்மறி முதலிய பிராணிகள் புன்னிலங்களிலிருந்து கிடைத்த காய்ந்த புல்லிலேயே கார்காலத்திற் பிழைத்தன. சேற்றுநிலத்தைப்போலப் புற்றரையும் கால்வாயினால், அல்லது வேலியினால் காப்பாற்றப்பட்டது. புன்னிலத்துப் புல்லும்

அளவளவாகவே ஊரவர்களிடை பிரிக்கப்பட்டது ; இன்றேல், புன்னிலம் வருடந் தோறும் பங்குபங்காகப் பிரித்து ஊரவர்களிடையே கொடுக்கப்படும். சேற்று நிலங்களையும் புன்னிலங்களையும் தவிர, பண்டாரரின் ஏனை நிலங்கள் வேலியினுல் சூழப்பட்ட பொது நிலங்களாயின. இவற்றிலுள்ள காடுகள் ஊரவர்களுக்கு மிகவும் உபயோகமாயின. அவர்கள் தங்கள் பிராணிகளை அங்கே அவிழ்த்து விட்டனர் ; அக்காடுகளிலிருந்தே அவர்கள் காய்கனிகளையும் மரங்களையும் விறகையும் பெற்றனர்.

இப்படிப்பட்ட பொருளியல் ஒழுங்கில் இரண்டு தடைகள் இருந்தன. பண்டாரருக்கிருக்கவேண்டிய பணத்திலுைம், நற்பலன்களாலும், சேவையிலுைம் செலுத்தப்பட்ட வேதனங்களின் தொகைக்கு இடாப்பெழுதுதலும் அதனை ஒழுங்குபண்ணுதலும் முதலாவது தடையாகும். பண்டாரருக்கு இந்த வேலையைச் செய்து கொடுத்தவர் "**விதானை**" என்ற பெயரால் வழங்கியவரேயாம்.

இரண்டாவதாக, சேற்றுநிலங்களிற் பயிரிடுதலைக் கிரமமாகச் செய்தலும், புன்னிலங்கள், சேனைகள் காடுகள் முதலியவற்றின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளுதலும் ஆகும். தலைமுறையாக வந்த கிராமத்துக் கூட்டுறவியக்கத்தின் மூலமாகவே இக்காரியம் செய்யப்பட்டது. இவ்வண்ணம், வயல்களையுழுதல் தொடக்கம், சூடுமிதித்தல்வரை கையாளவேண்டிய சட்டங்களும் விதிகளும் இருந்தன. மேலும், அவர்கள் பயிரிடவேண்டிய கிரமமும் வழக்கமாக ஒப்ப முடிந்த முறையால் நியமிக்கப்பட்டது. காய்ந்த புல்லைச் சேர்த்தபின்னர், புன்னிலங்களுக்கு மாடுகளை அவிழ்த்து விடவேண்டிய நாட்கள்கூட அவ்வண்ணம் நியமிக்கப் பட்டிருந்தன.

தலைமுறையாகவந்த வேளாண்மை முறைகளை அக்காலத்துக் கிராமத்தவர்கள் பின்பற்றினர். ஐரோப்பாவில் பல பாகங்களில் சேற்றுநிலங்களாகிய வயல்களை இரண்டாகப்பிரித்து ஒரு வருடத்தில் ஒரு வயலில் வேலைசெய்து, அடுத்த வருடத்தில் அவ்வயலை ஓய விடல்* "இருதவணை" முறையாகும். வேறுபிரதேசங்களில் "முத் தவணை" முறைப்படி வேளாண்மை செய்யப்பட்டது. இம்முறைபபடி சேற்று நிலத்தை மூன்று வயல்களாகப் பிரித்து ஒரு வருடத்தில் ஒரு வயலில் கோதுமை பயிரிடப்படும். அடுத்த வருடத்தில் ஓற்சு, அல்லது வாற் கோதுமை, அல்லது வேருெருதானியம் பயிரிடப்படும். மூன்ருவது வருடத்தில் அவ்வயல் ஓயவிடப்படும். ஊரினின்று மிகத்தூரத்தில் அமைந்துள்ள சில பிரதேசங்களில் வயல்கள் சொற்பகாலத்துக்குப் பயிரிடப்பட்டு அதற்குப்பின் பாழாகும்படி விடப்படும்.

**மத்தியகாலத்தில் ஐரோப்பிய கிராமத்தவர்களின் சீவியம், வேலைகள் நிறைந்த** கடுமையானதொன்ருயது. வருடம் முழுவதும் அவர்பாடுபட்டு வேலைசெய்ய வேண்டும். ஆனல், வியர்வை சிந்தச்சிந்தச் செய்த வேலைகளினுல் மிகவும் அற்ப

---

* ஈராண்டுச் சுழற்சிமுறை, மூவாண்டுச் சுழற்சிமுறை.

பயனே அவருக்குக் கிடைத்தது. அவருடைய முழுக்குடும்பமும் அவரோடு வருத்தப்பட்ட பின்னர், அந்தச் சொற்ப பயனே அவராற் பெறமுடிந்தது. சீவியத்தின் இன்றியமையாத் தேவைகளிற் செலவிட்ட பின்னர், அவர்களுடைய அற்பமான ஊதியத்தில் சிலவேளைகளிற்றான் ஏதாவது மிஞ்சும். சிலவேளைகளில், மூன்று குடும்பங்கள் ஒரு சின்ன வீட்டிற் சீவித்தன. மிகப் பழமையான முறைகளின்படி கமம் செய்தமையால் மிகவும் குறைந்த விளைவே அவர்களுக்குக் கிடைத்தது. ஒரு புசல் தானியத்தை விதைக்க ஐந்து புசல் விளைவே அவர்களுக்குக் கிடைத்தது. தொற்று நோய்கள் தோன்றிய சமயங்களிலும் பஞ்சகாலங்களிலும் கிராமத்தவர் யாதொரு சார்புமிலாராயினர். ஒரு பக்கத்தில் இயற்கையினாலும் மற்றைப் பக்கத்தில் சமுதாய-பொருளியல் பீடைகளாலும் அவர்கள் வருந்தினர்.

இங்கிலாந்தின் மானியயுகத்தில் சீவித்துவந்த ஒரு கிராமத்தவனுடைய வாழ்க்கை முறையைப்பற்றி நன்கு அவதானித்துப் பார்த்தால், எங்களுக்கு இது நன்கு புலனாகும். இங்கு, முப்பது ஏக்கர் நிலத்தை மூவாண்டுச்சுழல் முறையின்கீழ்க் கமஞ் செய்துகொண்டு ஒரு நிந்தகமத்திற் சீவித்த ஒரு பாரக்குடியின் வாழ்க்கையைப்பற்றி அவதானிப்போம். இந்த முறையின்கீழ், சொந்தமாயிருந்த முப்பது ஏக்கர்களுள் பத்து ஏக்கர் தரிசாக இருந்தபடியால் அவரால் தம்பொருட்டு இருபது ஏக்கர்மட்டும் கமம் செய்ய வியன்றது. நிந்தகமத்தில் பயிரிடப்பட்ட இரண்டு வயல்களுள் ஒரு வயலில் இலையுதிர்காலத்தில் கோதுமை, அல்லது கம்பு விதைக்கப்பட்டது. எஞ்சிய வயலில் வசந்தகாலத்தில் ஓற்சு, அல்லது வாற்கோதுமை விதைக்கப்பட்டது. ஒரு வயல் தரிசாக இருந்தபோதிலும் அடுத்த வருடத்தில் அதைப் பயிரிடவேண்டுமானபடியால் அதை ஒழுங்குபண்ண மிகவும் முயலவேண்டியதாயிற்று. ஒவ்வொரு வயலிலும் பத்து ஏக்கர் நிலம் தமக்குச் சொந்தமாக இருந்தபடியால் ஒவ்வொரு வயலின் பத்து ஏக்கரில் தம் சொந்த வருமானத்திற்கு அவர்கள் வேலை செய்ய வேண்டியதாயிற்று. பொதுவாக, தம்முடைய தரிசுச் சேற்று நிலத்தை விதைக்குமுன், வருடத்துக்கு மூன்றுமுறை உழவேண்டும். சித்திரை மாதத்திலும் அதற்கிரண்டு மாதங்களுக்குப் பின்பும், ஐப்பசி மாதத்திலும் உழவேண்டும். இதன் காரணம், இலையுதிர்காலத்தில் தானியங்களை விதைக்கும் பொருட்டேயாகும். பயிரிடப்பட்ட சேற்றுநிலத்தின் இருபது ஏக்கரில் வேலைக்காகக் கிராமத்தவர் தம் நேரத்தைப் பெரும்பாலும் கழிக்கவேண்டும். இலையுதிர்காலத்தில் விதைக்கு முன்னர் தம்முடைய வயல்களில் இட்டு உழுவதற்காகக் கார்காலம் நிகழும் தை-மாசி-பங்குனி ஆகிய மாதங்களில் கிராமத்தவர் இயன்றவளவு பசளை சேகரிப்பர். வயல்களுக்குப் பசளை இழுத்துப் பரவிவிடல் அவருக்குரிய வேலையாகும். இரண்டு எருதுகள் இழுக்கும் சிறிய ஏர் கொண்டு உழுவார்கள். இக்கிரமம் பெரும்பாலும் இலங்கையில் வயலுழும்முறைக்கு நிகரானது. சில நேரங்களில் இத்தொழிலுக்குக் குதிரைகளும் கோவேறுகழுதைகளும் உபயோகிக்கப்பட்டன.

நிலம் சீர்ப்படுத்தியபின்னர் தானியம் விதைக்கப்பட்டது. உழவன் தன் கழுத்தினின்று தொங்கும்படி தானியப் பெட்டியைத் தரிப்பான். பெட்டியி லிருந்து தானியத்தை எடுத்துக்கொண்ட உழவன் யாதாவதொரு இசைச்சந் தத்தின்படி வயல் முழுதும் வீசுவான். இடைக்காலத்தில் கமத்தொழில் சம் பந்தமாக எழுதப்பட்ட ஒரு நூல் உழவர்களுக்கு இவ்வண்ணம் புத்திமதி கூறி னது. "வயலில் நடக்கையில் இடதுகாலைத் தூக்கும்பொழுது வலது கையினல் தானியத்தை வீசுக. வலதுகாலைத் தூக்கும்பொழுது இடதுகையினல் தானி யத்தை வீசுக." விதைத்தபின்னர் மண்சமப்படுத்தும் கருவியினல் வயல் சமப் படுத்தப்பட்டது. மண்சமப்படுத்தும் கருவி குதிரைகளால் இழுக்கப்படும். மண் சமப்படுத்தும்கருவி இல்லாவிடின், கிராமத்தவர் குதிரையின் வாலில் ஒரு முட் கொப்பைக்கட்டி அதை வயலில் ஓட்டுவர்.

இந்த நிலைதொடக்கம் தரிசு நிலத்தை உழும்வரை உழவனுக்குக் கடுமையான வேலைகள் இல்லை. அக்காலத்தில் அவன் மாரியில் நிறைந்துள்ள வாய்க்கால்களை மறுபடியும் தோண்டுவதில், அல்லது வேலிகளைத் திருத்துவதில், அல்லது வேறு அற்பவேலைகளில் ஈடுபட்டிருப்பான். ஆனி மாதத்தில் காய்ந்தபுல்லை ஒழுங்கு பண்ணுதலாகிய கடும் வேலை தொடங்கிவிடும். அவன் பண்டாரருடைய புன்னி லத்தில் செய்ய வேண்டிய வேலைகளை முடித்துவிட்டு, தன் நேரத்தைக் காய்ந்த புல் சேர்ப்பதிற் கழிப்பான். காய்ந்த புல்லைத் திரட்டிய பின்னர், விதைத்த வயல்களில் களை பிடுங்க நேரும். களை பிடுங்குவோனுடைய ஒருவகையில் நீள மான ஒரு கம்பு இருக்கும். இதனல் வயலிலிருக்கும் முட்களைச் சேர்த்துப் பிடுங் கித் தனது மற்றைக்கையிலுள்ள அரிவாளால் வெட்டிவிடுவான். பொதுவாக ஒருமுறையிற்றான் களைகள் இப்படிப் பிடுங்கப்படும். ஆனல், சிலசமயம் இரு முறைகளிலும் இது செய்யப்பட்டது. இதற்கிடையில், தரிசு நிலங்களை மறுபடி யும் உழுவர். வாரக்குடிக்குக் கிடைக்கும் நிலப்பரிமாணத்திற்கேற்க, இறையா கப் பண்டாரருடைய நிலங்களில் அவ்வாரக்குடிகள் வேலை செய்ய வேண்டும் மென்பதை நாம் முன்பு கண்டோம். ஆகையால், ஒரு வாரத்திற் சில நாட் களுக்குத் தம் சொந்த நிலங்களில் வாரக்குடிகள் வேலை செய்துவிட்டுப் பின்பு, வாரத்தில் மூன்று நாட்களுக்குப் பண்டாரருடைய வயல்களில் வேலை செய் தனர்.

ஆவணி மாதத்தில் நிகழும் சூட்டுமிதியற் காலத்தோடு, கமக்காரருடைய அதிக வேலையுள்ள அமைதியற்றகாலமும் முடிந்து விடும். மற்றை நாட்களிற் போல, கிராமத்தவர் இக்காலமும், பெரும்பாலும் பண்டாரநிலத்திலேயே வேலை கள் செய்து கழிப்பர். சூடுமிதிக்கும் காலத்திற் பண்டாரர், கிராமத்தவரைக் கொண்டு அதிகமான வேலைகளைச் செய்விப்பர். சூடுமிதிக்கும் கூட்டம் ஐவரைக் கொண்டது. இவர்களுள் நால்வர் அரிவிவெட்டும்பொழுது ஒருவர் அதைச் சேக ரித்துக்கட்டுவர். பிற்காலத்தில் "சயித்து" என்ற பெயரால் அழைக்கப்பட்ட பெரிய அரிவாளை உபயோகித்தாலும் இக்காலத்தில் பொதுவாக, சிற்றரிவாள்

ஒன்றே உபயோகிக்கப்பட்டது. சூடுமிதிக்கும் காலம் முடிந்தவுடனே உழவனின் முயற்சிக் காலமும் முடிவடையும். அவர்கள் இக்காலந் தொட்டுக் கார்காலத்துக் கென ஆயத்தமாவர். காட்டிலிருந்து பழவர்க்கங்களையும், கார்காலத்தின் அதிக குளிரை நீக்கும் பொருட்டு விறகையும் சேகரித்துக் கொள்ளுவர். வீடுகளை வேயும் பொருட்டு "சேட்சு" என்னும் புல்வகையும் சேர்த்துக்கொள்வர். மெத்தை செய்யும் பொருட்டும் கூரைவேயும் பொருட்டும் மாட்டுணவுக்கும் அரிவி அடிக்கட்டை வெட்டிச் சேகரிக்கப்பட்டது.

இப்படி உழவர் ஓய்வில்லாமல் பாடுபட்டபோதிலும் அவருடைய சீவியம் மேலோங்கவில்லை. ஒரு கமக்காரன் ஓரேக்கர் நிலத்தில் இரண்டரைப் புசல் கோதுமையை விதைத்தாலும், அதிலிருந்து அவன் பெற்ற இலாபம், எட்டு ஒன்பது புசல் மட்டுமே. இறை, வாற்கோதுமை, ஓட்சு ஆகிய தானியங்களும் "பீசு"ப் பயறும் விதைக்கும்பொழுது இதனினும் சிறிது அதிகமான பயன் கிடைக்கும். சாதாரண வாரக்குடி ஒன்றிற்கு ஒரு வருடத்தில் பீசுத் தானியங் களைத் தவிர, ஏனைத்தானியம் நூற்றறுபத்துமூன்று பறை (163) மட்டும் கிடைத்ததாகச் சிலர் கூறுகின்றனர். எந்திரக்கூலி கொடுத்த பின், ஒரு கிரா மிய குடும்பத்துக்கு 153 பறைகள் மட்டும் மிஞ்சின. இவை :—கோதுமை 48 பறை, வாற்கோதுமை 66 பறை, ஓட்சு 39 பறை ஆகும். இவையாவற்றையும் கிராமத்தவன் உபயோகிக்கவில்லை. உழவன் தான் உண்டாக்காதவையும் தன்னி டம் இல்லாதவையுமான பொருள்களை வாங்கவும், தீர்க்க வேண்டிய கடன்களைத் தீர்க்கவும் பணம் பெறும் பொருட்டுப் போதியவளவு கோதுமையை விற்றான். மிஞ்சிய தானியம் சொந்த உபயோகத்துக்கு எடுக்கப்பட்டது.

கிராமத்தவர்கள் தம் உணவாகத் தானியத்தை மட்டும் உபயோகிக்கவில்லை. தமக்கு வேண்டிய பிராணிகளையும் அவர்கள் வளர்த்தார்கள். மாடுகள் சிலவற் றையும் செம்மறியாட்டுப்பட்டியையும் பன்றிகளையும் கோழிகளையும் வளர்த்தார் கள். அதனால் பால், வெண்ணெய், பாலாடைக்கட்டி, முட்டை, உப்பிட்ட மாமி சம் ஆகியவை ஓரளவிற்குக் கிடைத்தன. தடுக்கப்பட்ட போதிலும் காடுகளில் பறவைகளையும் காட்டு மிருகங்களையும் அவர்கள் வேட்டையாடினர். மேலும், காடுகளிலிருந்து பெறும் பழவர்க்கங்களும் சொந்தத் தோட்டத்தினின்று பெறும் காய்கறிகளும் அவருக்கிருந்தன. கிராமத்தவர் சுயஉணவுக்காக அதிக மான மீன்வகைகளையும் அண்மையிலிருந்து பெற்றுக் கொண்டனர்.

இப்படிப்பட்ட சீவியம் ஊரவர்கள் எல்லோரும் பொதுவாக அனுபவிக்க வில்லை. சில சமயங்களில் சுவாதீனராலும், வாரக்குடிகளினாலுமே இப்படிப் பட்ட சீவியம் விரும்பப்பட்டது. தமக்குப் போதிய நிலம் இல்லாத குடிசை வாசிகள் கமத்தொழிலுடனே வேறு கைத்தொழில்களையுஞ் செய்து மிகவும் எளிய சீவியத்தை நடாத்தினர்.

சாதாரண வாரக்குடியினரின் சீவியம் அவ்வளவு இன்பமானதல்ல. அவர்கள் இரண்டு அறையுடைய, வரிச்சினால் செய்யப்பட்ட வேய்ந்த கூரையையுடைய ஒரு சிறிய வீட்டிற்றான் சீவித்தனர். மனிதருக்குமட்டுமன்றி, பிராணிகளுக்கும்

இதுவே இருப்பிடமாயது. புகைவாயில் புது மாதிரியாக அமைந்தபடியால், அக்காலத்து வீடுகளுக்குப் போதிய காற்றோட்டமில்லை. எனினும், அது உரிய அளவுக்காயினும் அமையவில்லை. சிறியவாயில் வழியாகவோ பல கணி வழியாகவோ, வீட்டிலிருந்து புகை புறப்பட்டது. தரையும் மண்ணு லமைந்தபடியால் தண்ணீர் சிதறினவுடன் மாரி காலத்தில் அங்கு மிங்கும் உலாவ நிலம் சதுப்பாயது. வீட்டுச்சாமான்கள் சில தட்டுப்களும், கிண்ணங் களுமேயிருந்தன. கட்டில்கள் அரிதாயின; கிராமியக் குடும்பத்தார் வைக்கோல் அரிவியடிக்கட்டை முதலியவற்றிலேயே தூங்கினர்; ஒரேதன்மையுள்ள உண வையே எப்பொழுதும் அருந்தினர். காலைச்சாப்பாடாக ஊரவர் பலர் உரொட்டி யோடு ஒருவகைப் பீர் அருந்தினர். பகற்சாப்பாட்டுக்கு உரொட்டியும், பாலா டைக்கட்டியும், பீரும் அருந்தினர். இறுக்கமான ஒரு கறியோடு, அல்லது இறைச்சிக்குழம்போடு உரொட்டியும் சிறு பாலாடைக் கட்டியும் இரவுச்சாப் பாடாயின. விசேடமான சமயங்களில் மட்டுமே இறைச்சியும் முட்டைகளும் முக்கியமானவுணவாயின.

கிராமத்தலைவன் கலப்பற்றவொரு சீவியத்தை நடாத்தி வந்தான் என்று இத னுற் புலப்படுகிறது. ஊரிலே, பொருளியல் அமைப்பும் தனிச்சுவாதீனமும் ஒன்றேயாயின. ஒவ்வொரு ஊரிலுள்ள குடிகளுக்கும் போதிய தானியம் கிடைத் தது. ஊர்கள் தனித்தனியாக அமைந்திருந்தன. வயல்களும் வளர்த்த பிராணி களும், உணவும் சீலையும் சம்பாதித்துத்தந்தன. வீடுகளைக் கட்டுவதற்கு அண் மையிலிருந்த காடுகளிலிருந்து மரங்கள் பெறப்பட்டன. பெண்கள் கம்பளியை யும், சீலைகளையும் "பிளாக்சு" பட்டுச் சணலினின்றும் நெய்தனர். வீட்டிலும் வயலிலும் உபயோகத்துக்கு வேண்டிய ஆயுதங்கள் வீட்டிலேயே செய்யப்பட் டன. கார்காலத்தில் ஆள்கள் கூடி, கலங்களையும் மரவகப்பைகளையும் செய்த னர். அவர்கள் மீன் பிடிக்கச் சின்ன வலைகளைப் பின்னினர். இப்படி, ஒவ்வொரு வீடும் சொந்த இயக்கத்தாலாய பல பொருள்களால் நிரம்பப்பெற்றது. கம்மா ளர், தச்சர்போன்ற கைப்பணியாளர்களும் குடிகளுள் அடங்கியபொழுது, ஒவ் வொரு ஊரும் சகல உறுப்புக்களாலும் நிறைந்தது.

மத்தியகாலச் சீவியம், பெரும்பாலும் கிராமியமாகவே இருந்தபோதிலும் முழுமையும் அப்படியாகவில்லை. சனத்தொகையின் சிறிதளவு (நூற்றுக்குப் பத்துவீதத்திலும் குறைந்த பங்கு) நகரங்களில் வசித்து வந்தது. மத்திய காலத்தில் இந்த நகரங்கள் புதிய நகரங்களைப்போல விசாலமாக இல்லை. இந் நகரங்களிற் சீவித்த சனங்கள் சில வேளைகளில் நூற்றுக்கணக்காயினர். சில வேளைகளில் ஏறக்குறைய இரண்டு மூன்று ஆயிரமாயினர். மத்தியகாலத்தில் ஐரோப்பாவில் பாதுகாப்புக்கும் வியாபாரத்துக்குமே நகரங்கள் தோன்றின. போர்க்காலங்களில் சனத்தொகையின் பாதுகாப்புக்கு மதில் சூழ்ந்த நகரம் மிக வும் உதவியாயிருந்தது. வியாபாரத் தொழில்களுக்குத் தகுதியுள்ள இடங்களி லும் நகரங்கள் தோன்றின.

தொடக்கத்தில் நகரங்கள் தொழில்களுக்கன்றி வியாபாரத்துக்கே மத்திய தானங்களாகவிருந்தன. இந்த நகரங்களுமே மானிய முறையின் உறுப்புக்களா யின. நகரமாந்தர்களினது சிறந்த தொழில் கமத்தொழிலேயாயது. நகரத்தின்

எல்லை அதன் மதிலருகில் மட்டும் அமையவில்லை. அதற்கப்பாலுள்ள வயற்றேடரையும் கடந்து செய்மையில் இருந்தது. நகரங்களுமே பண்டாரனின், அல்லது அரசனின் பரிபாலனத்தின்கீழ் இருந்தன. நகரமாந்தர் பண்டாரநிலங்களைப்பெற்று, கிராமத்தலைவர்களைப் போல பண்டாரருக்கு அடிமைப்பணி செய்ய வேண்டியதாயிற்று. தம் வியாபாரத்துக்காக நகரமாந்தரும் பண்டாரருக்கு ஒரு வரி செலுத்தவேண்டி ஏற்பட்டது. ஆதலினால், இந்த அடிமைப் பணிகளிலிருந்து தப்பிக்கொள்ள நகர மாந்தர் இயலுமட்டும் முயன்றனர். அரசனுக்கு, அல்லது பண்டாரனுக்கு வருடாந்த வரிப்பணஞ் செலுத்தினர். அரசனுக்கு, அரசாங்கத்தில் அனேகவிதமான வேலைகள் இருந்தபடியால், அவனும் வருடாந்த வேதனத்துக்கியைந்து அரசநிலங்களில் அமைந்துள்ள நாடுகளை ஆண்டுக்குரிய பணங்கொடுத்து விடுவிக்க விரும்பினான். இவ்வண்ணம் இங்கிலாந்தில் விடுதலை பெற்ற சில நகரங்கள் அவற்றின் விடுதலையை உறுதிப்படுத்தும் அனுமதிச் சிட்டுக்களையும் அரசனிடமிருந்து பெற்றன.

மானியமுறையாகிய அடிமை நிலையிலிருந்து நீங்கின நகரங்கள், தம் காரியங்களைச் சுதந்திர முறையில் நடாத்தின. ஆதிகாலத்தில் ஏதாவது கைத்தொழிலில் ஈடுபட்ட நகரமாந்தர், அத்தொழில்களுக்கு அவசியமான பொருள்களைச் சம்பாதிப்பதற்கும் உண்டாக்கிய பொருள்களை விற்பதற்கும் வியாபாரச் சங்கம் என்னும் ஒரு சங்கத்தின் அங்கத்தினராயினர். இப்படிப்பட்ட சங்கத்திற் சேர, அங்கத்தினரால் செலுத்தவேண்டிய பிரதேசப் பணமும் வருடப் பணமுமிருந்தன. அங்கத்தினருக்கு உரிமைகளும் கடமைகளும் சில இருந்தன. நோயுற்ற காலத்திலும் உத்தியோகங்கள் குறைந்த காலத்திலும் அங்கத்தினருக்குச் சாதாரண மூலநிதியின் உதவிபெற ஓருரிமையிருந்தது. கடன்களைச் சேகரித்துக்கொள்ளவும், வேறொரு நகரத்தில் கைதியாக்கப்பட்டால், அதிலிருந்து விலகவும் அங்கத்தினருக்குச் சங்கம் உதவி புரியும். தமக்குரிய வாணிபப் பொருள்களுக்குப் பாதுகாப்பும் தாம் ஏதாவது அபாயத்தினால் இறந்தால் தம் விதவைகளுக்கும் பிள்ளைகளுக்கும் உதவியும் அங்கத்தினர்களுக்குச் சங்கத்தினால் அளிக்கப்பட்டன. இந்தச் சிறப்பான உரிமைகள் நிமித்தம் அங்கத்தினரால் நிறைவேற்ற வேண்டிய பல கடமைகள் இருந்தன. அவர்கள் சிறந்த திரவியங்களை உண்டாக்க வேண்டும். சங்கத்தின் சட்டங்களுக்குக் கீழ்ப்படவும்வேண்டும்; தம்மோடொத்த அங்கத்தினருக்கெதிரே வழக்குத் தொடாமல் சமாதானமாகச் சீவிக்க வேண்டும்.

பட்டினங்கள் தொகையிலும் அளவிலும் கிரமமாகப் பெருக, அவற்றில் வாணிபமும் அதிகரித்தது. அவற்றிலுள்ள கைத்தொழில்களில் ஈடுபட்ட சனத்தொகையும் அதிகரித்தது. இந்நிலைக்கு ஒரு சங்கம் மட்டும் போதியதாகவில்லை. ஆகையால், ஒவ்வொரு கைத்தொழில் நிமித்தமும் ஒவ்வொரு "சிற்பிகள் சங்கம்" என்ற பெயரால் சங்கங்கள் அமைந்தன. தற்பொழுது செல்வமுற்ற சில சிற்பியர் கைத்தொழில்களைக் கைவிட்டுத் தமக்கு வேண்டிய பொருள்களை உண்

டாக்கும் பொருட்டு அன்னியரை ஈடுபடுத்தித் தாம் வியாபாரத்தில் மட்டும் ஈடுபட்டனர். விசேடமாக, இங்கிலாந்தில் உரோமத் தொழிலிலே இந்நிலை இருந்தது. இவ்வண்ணம், ஒரு வியாபார வகுப்பின் எழுச்சி இக்காலத்தில் காணப் பட்டது.

புரோ-புதிய ஐரோப்பாவில் சனத்தொகையினரிற் பலர் சுதந்திர ஊர்வாசி களாக இருந்து வந்ததை முன்னர் நாம் அறிந்தோம். ஒவ்வொரு கிராமத்த வரும் தமக்கு வேண்டிய உணவு, ஆடை, இருப்பிடம் ஆகியவற்றைச் சம்பாதித் துக் கொண்டனர். சில தொழில்களில் கைவேலையாளர் பலர் இருந்தபடியால் ஒவ்வொரு கிராமமும் ஏறத்தாழ பரிபூரணமாக இருந்தது. ஆகையால், தமக்கு நன்றாகச் செய்துகொள்ள வியலாத தொழில்களை ஊரவர் இந்தக் கைவேலை யாட்களைக் கொண்டு செய்வித்தனர். ஒவ்வொரு ஊரிலும் யந்திர அறிஞனும், கொற்றனும், உரொட்டிக்காரனும், குடிவகை செய்வோனும், கம்மாளனும், தோல்பதனிடுவோனும் இருந்தனர். இவர்களுட் சிலர், பொருள் கேட்பவர்கள் கொணர்ந்து கொடுக்கும் திரவியங்களை எடுத்துத் தம் கைக்கருவிகளால் தம் சொந்த வீட்டிலேயே ஆக்கத் தொடங்கினர். உரொட்டிக்காரன் ஊரவர் மாவி னால் சொந்தப் போறணையில் உரொட்டி செய்தான் என்பது இதற்கு ஒரு சான் ருகும். சிலர் சுய கருவிகளை எடுத்து வீடுதோறும் சென்று தொழில்களைச் செய் தனர். தமது ஊர் விசாலமானால், அல்லது தாம் நகரவாசிகளாக இருந்தால், நெசவுகாரர், அல்லது தோல் பதனிடுவோர் தம் சொந்தச் செலவில் சீலைகளைத் தருவித்து, அல்லது தோல்களைச் செய்து விற்பர். இப்படியாகும் பொழுது தொழிற்சாலையானது ஆவணமாகி விடும். இக்காலத்தில் விளங்கின பல தொழிற் சாலைகள் இவ்வுருவத்தையே பெற்றன. ஆனல், இவற்றைக்காட்டிலும் விசால மாக நிகழ்ந்த தொழில்களுமுள. இவற்றுள் சில பருத்திநூல், பட்டுநூல் நூற் கும் தொழில்களாகும்.

நெசவுத்தொழில் விசாலமானதால், அதன் ஒழுங்குகள் விசேடப் பிரிவுகளில் அமைக்கப்பட்டன. இத்தொழில் விசாலமாக இருந்ததனுல் பண்படுத்தாப் பொருள்கள் அதிகம், புறத்திலிருந்தே வருவிக்கப்பட்டன. சீலைகளும் பெரிய அங்காடிகளில் நிரப்பி வைத்து விற்கப்பட்டன. சீலைகளை நெசவு செய்து விற்க அதிக காலம் கழிந்தபடியால், இந்த வியாபாரம் பெரிய பணத்தொகையுள்ள செல்வர்களுக்கு மட்டுமே சாத்தியப்பட்டது. சிறிய கைத்தொழிற் சிற்பிகளால் இப்படிப்பட்ட தனித்த வாணிகம் செய்ய முடியவில்லை. பொதுவாக, பணம் கையில் வைத்திருந்த வாணிபனே வியாபாரியானன். சில வேளைகளில், அவர் கள் நகரத்தில் அங்காடிக்குப் போய், பெரிய சந்தைகளில் விற்கும் பொருட்டுக் கைத்தொழிற் சிற்பிகளிடமிருந்து சீலைகளை வாங்குவர். அப்படியின்றேல் அவர் கைத்தொழிற் சிற்பிகளுக்கு உபகரணங்களையும் பண்படுத்தாப் பொருள்களையும் கொடுத்துச் சம்பளமும் கொடுத்து அவர்களைக்கொண்டு சீலைகளை நெசவு செய் விப்பர். பின் அவைகள் பெரிய சந்தைகளில் விற்கப்படும். மத்தியகாலத்தில்

உள்ள கைத்தொழில்களுக்கும் நூதனத் தொழிற்சாலைகளில் நிகழ்ந்த தொழில்களுக்குமிடையில் உள்ள இந்த முறை "கிருகமுறை" என்று வழங்கப்பட்டது. இந்தக் "கிருக" முறையின் கீழ் வேலை செய்த கைத்தொழிற் சிற்பி சம்பளம் பெறும் தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளி ஒருவனுக்கு நிகராவன். ஒரேயொரு வித்தியாசமென்னவென்றால் இம்முறையின் கீழ், சிற்பி தன் வீட்டிலேயே பொருள்களை அமைத்தல் கூடும். மேலும், வேந்தர்களும், பண்டாரர்களும் சமயத்தொண்டுக்காகவோ, சுகத்துக்காகவோ கட்டிடங்களையமைக்கும் போது காங்கத் தொழிலிடங்களிற் போல, தொழிலாளர் கூட்டமும் ஒன்று தோன்றும். ஆனால், முன்னர் விரித்துரைக்கப்பட்ட சில பெரிய தொழிற்சாலைகள் இருந்தபோதிலும், தொழிலாளர் கூட்டங்கள் இல்லை. மேலும், மத்தியகாலத்தில் தொழில்கள் பெரும்பாலும் கைத்தொழில்களாகவே இருந்தன.

ஊருக்கும் நகரத்துக்குமிடையேயும், ஊரவனுக்கும் தொழிலாளிக்குமிடையேயும், பொதுவான கருமங்கள் பலவிருந்தன. கமக்காரனைப் போலத் தொழிலாளியும் சுயநுகர்ச்சிக்காகவே வருந்தினன். கிராமத்தைக்காட்டிலும் நகரத்திற் கூடியவளவு வியாபாரம் இருந்தது. ஆனால், நகரத்துத் தொழில்களிடையே சுயநுகர்ச்சிக்குரிய தொழிலே மிக்க அவசியமானது. தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்குச் சீவனம் நடாத்தப் போதிய ஊதியத்தைப் பெற்றுக் கொடுப்பது தான் சங்கத்தின் முக்கிய வேலையாகும். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் சீவனோபாயத்தைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றையவர்கள் சார்பாகச் சிலர் செல்வராதலைத் தடுப்பதும் ஆகிய இந்தப் பொதுநல வேலைகளையே சங்கங்கள் கொண்டு நடாத்தின. ஊரில் தனிக் கூட்டமானது ஒரு குடும்பத்தைப்போல, நகரத்திலும் முதற்சிற்பி மூப்பனர், சிற்பி மாணக்கர் முதலியவர்களும் அமைத்த சிற்பியர் கூட்டம் பிரதானமானது.

ஊர்களும் நகரங்களும் சுய நுகர்ச்சிக்காக அமைந்திருந்தாலும், பெரும்பாலும் ஊரே சுயநுகர்ச்சியைப் பெற்றிருந்தது. எங்கும் வியாபாரம் ஓரளவுக்கு இடம் பெற்றது. ஊரவர்களால் உண்டாக்கப்படாத திரவியங்களை வாங்குவதற்கு, ஊரில் உண்டாக்கிய பொருள்களைப் பண்டமாற்றுச்செய்ய வேண்டியிருந்தது. நகரமாந்தரும் தாம் உண்டாக்கிய பொருள்களைப் பண்டமாற்றுச் செய்து சீவித்தனர். இந்த உள்நாட்டு வியாபாரம், வேறுபாடுகளில் மிகக்குறைந்திருந்தமையால், ஐரோப்பாவில் எங்கும் பரவினது. அற்பமானவையும் இன்றியமையாதவையுமான வியாபாரம், "மாக்கெற்று" என்னும் சந்தைகள் மூலமாகவே நடந்தது. பொதுவாக, சந்தைகள் நகரங்களுக்கருகில் ஒரு வாரத்துக்கொருமுறையே கூடின. இங்கிலாந்தில் ஊர்ப்பிரதேசங்களில், ஐந்து மைலுக்கும் பத்து மைலுக்குமிடையில் ஒரு சந்தை கூடியது. இவை நெருங்கிப் பரந்திருந்தன. சுற்றியிருந்த கிராமங்களுக்கு ஒரு சந்தையினால் அதிக இலாபம் கிடைத்தது என்பது இதனால் நன்கு புலப்படும். ஆதலால், அந்தச் சிறுபிரதேசத்தில் தேவைகள் சிக்கனமாக்கப்பட்டன. கிராமிய திரவியங்களும் தினசரி வாழ்க்

கைக்கு இன்றியமையாத பொருள்களும் சந்தைகளில் விற்கப்பட்டன. இவ்வண்ணம் இந்தச் சந்தையைக் கருதிவாழும் மனிதனின் தேவைகள் நிறைவேற்றப்பட்டன. இவற்றை நிறைவேற்றும்படி காரியங்களைச் செய்தவன், என்றும் அலைந்து திரிந்த அற்ப வியாபாரியாவான்.

இச்சந்தர்ப்பத்திலே இடைக்காலத்தில் வேண்டிய வேறொரு திரவிய வகையுமிருந்தது. அது ஐரோப்பாவிலிருந்த சில பணக்காரர்களுடைய இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றியது. அரசர், இளவரசர், பண்டாரர், உயர்ந்த பாதிரிமார் நயிற்றுப் பட்டதாரிகள், செல்வமுள்ள நகரத்தவர் ஆகியோர் தங்கள் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு வேண்டிய பொருள்களைத் தேடி வந்தனர். அவர்களுடைய தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைச் சொந்த நிலங்களிலிருந்து பெற்றுக்கொண்டனர். ஆனால், அவர்களுடைய பெருமித வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுமிருந்தன. அவர்களுக்குத் திராட்சாசம் போன்ற உயர்ந்த குடிவகைகள், மயிர்செறிந்த தோல்கள், மீன்வகைகள், சரக்குக்கள், புத்தகங்கள், பித்தளைச் சாமான்கள் முதலிய திரவியங்கள் தேவைப்பட்டன. ஆதலின், இந்தத் திரவியங்களின் பெறுமதி அதிகரித்தது; இன்றேல், இவை அருமையாயின. ஆகையால், பொது மக்களுக்கு இவற்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய செல்வம் கிடைக்கவில்லை. பெரும்போக நுகர்ச்சிக்குரிய இந்தத் திரவியங்கள் ஐரோப்பாவில் பலபாகங்களிலிருந்து தருவிக்கப்பட்டன. பிராஞ்சிலிருந்து திராட்சாசமும், இரசியாவிலிருந்தும் கண்டினேவியாவிலிருந்தும் மயிர்த் தோல்களும் தருவிக்கப்பட்டன. இவ்விதமான நுகர்ச்சிப்பொருள்களைப் பெற்றுக்கொள்ளவே சந்தைகள் நிறுவப்பட்டன.

சந்தையும் அங்காடியைப் போலவே பொருள்களை விலைக்கு வாங்குவோரினதும் விற்போரினதும் தற்காலிய கூட்டமாயது. ஒரு சந்தை மூன்று நான்கு நாள்கள்தொட்டு ஒருவாரம் வரையில் கூடியது. ஒரு வருடத்தில் ஒரு தவணை, அல்லது இரண்டு தவணையே சந்தைகள் கூட்டப்பட்டன. எந்தச் சந்தை தேசிய சம்பந்தமான, அல்லது சர்வதேச சம்பந்தமான புகழ்பெற்றிருந்ததோ, அதில் அதிக விலையுயர்ந்த அருமையான பொருள்கள் இருந்தன. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் விற்போரும் விலைக்கு வாங்குவோரும் அங்கு கூடினர். சந்தை சருவதேச சம்பந்தமான புகழ்பெற்றவொன்றானதினால் பிறநாட்டுக்கொள்வோரும் அங்கு குழுமினர்.

அக்காலத்தில் பிறநாட்டு வியாபாரப் பகுதியும் இருந்ததென்று இதனால் புலப்படுகிறது. இந்த வியாபாரம் பெரும்பாலும் "கென்சியடிக்குச்" சங்கம் என்ற பெயர் படைத்த கொலோன், பிரெமன், கம்பேக்கு போன்ற சேர்மனிய நகரங்களைப் பரிபாலித்த நகரசபையின் கையில் அகப்பட்டது. வட ஐரோப்பாவில் வியாபாரம் மட்டும் இவர்களுக்குச் சொந்தமாயது. செனேவா, வெனிசு முதலிய இத்தாலிய நகரங்கள் மூலமாகவே தென் ஐரோப்பிய சாக்கு வியாபாரம் நடாத்தப்பட்டது. வடஐரோப்பாவுக்கும் தென் ஐரோப்பாவுக்குமிடையில் பண்டமாற்றுனது, நெதலந்து வியாபாரிகளால் கையாளப்பட்டது.

மத்திய காலத்தில் ஐரோப்பிய வியாபாரிகள் பெரும்பாலும் அலைந்து திரிந்தவர்களே. அவர்கள் திரவியங்களைக் கொண்டு சந்தைதோறும் நடந்தனர். சில வேளைகளில் திரவியங்களை வாங்கும் பொருட்டும் விற்கும் பொருட்டும் தூர தேசங்களுக்குக் கப்பற் பிரயாணஞ் செய்தனர். செல்வம் படைத்த பின்னர், அல்லது மூப்படைந்த பின்னர் தம் நகரத்தில் வாழத் திரும்பினர். இப்படியான பின்னர், அவர்கள் சுய வியாபாரத்திற்காகக் கூட்டுத்தொழில் தாபனங்களை நிலை நாட்டிக் கொண்டனர். ஆனால், இந்தக் கூட்டுத் தொழில் பெரும்பாலும் வியாபார முயற்சிக்குள்ள நிலையில்லாத தாபனமாயது. இதைக்காட்டிலும் நிலையானதும் நித்தியமானதும் என்னக்கூடிய கூட்டுத்தொழில் நிறுவப்படின், பரம்பரை பரம்பரையாகவந்த வியாபாரக் குடும்பங்களிடையே இது நிலையாக வேரூன்றும்.

நாம் இதுவரை படித்துக்கொண்ட விடயங்களை மறுபடியும் அவதானித்துப் பார்த்தால், மத்திய காலத்தில் ஐரோப்பா பற்றிய ஒரு வாழ்க்கைப் படம் அமைக்கவியலும். சனத்தொகையின் பெரும் பகுதி ஊர்ப்பக்கங்களில் சீவித்தது. அவர்கள் ஒடுக்கமானதும் அசையாததும், வேறுபாடில்லாததுமான சீவியத்தையே நடாத்தி வந்தனர். தம் நிலங்களில் வழக்கமாக இருந்த பழக்கங்களில் வேரூன்றிய சமுதாயமே அங்கு விளங்கியது. இந்த மக்கள் சுய நுகர்வுக்காக உண்டாக்கும் தொழில்களில் ஈடுபட்டனரேயொழிய இலாபங்களைப் பெறுவதற்காக ஈடுபடவில்லை. இவர்களிடையே ஒருவர்மேலொருவர்க்கு ஆதரவு இருந்தது. கீழ்வகுப்பினரின் முயற்சியினலே மேல்வகுப்பினரின் தேவைகள் நிறைவேறின. ஓய்வுச் சுகத்தினுல் காலம் கழிப்பதையொழிய, செல்வத்தையாக்குவது மேல் வகுப்பினரின் குறிக்கோளாகவில்லை.

ஒவ்வொரு ஊரும் சுய நுகர்ச்சியைப் பெற்றது. புறத்திலிருந்து வாங்க வேண்டிய திரவியங்கள் ஊரில் பண்டமாற்றுமூலம் சந்தைகளிலிருந்தும் அலைந்து திரிந்த வியாபாரிகளிடமிருந்தும் வாங்கப்பட்டன. மேல்வகுப்பினருக்குத் தேவையான பொருள்கள் சந்தையில் பெறப்பட்டன. நாம் அறிந்த நூதன நாகரிக வாழ்க்கை அக்காலத்தில் இல்லை. பெரிய பட்டணங்களாகிய பாரிசும், இலண்டனும் தவிர, ஏனை நகரங்கள் உண்மையாகவே கிராமிய அடையாளங்களைப் பாதியளவு கொண்டிருந்தன. ஒவ்வொரு கைத்தொழிலாளரும் தம் சீவனோபாயத்தைக் கருதிக்கொள்ள இடம் கிடைக்கும் வண்ணம், நாகரிக வாழ்க்கை ஒழுக்கமடைந்திருந்தது. ஐரோப்பா முழுவதும் பெரும்பாலும் மாருத வாழ்க்கை முறையே திகழ்ந்தது. பின்பு, மெல்ல மெல்ல மாறுதல்கள் தொடங்கின. நவீன காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நகரங்களிலுமே மாற்றங்கள் மெல்லமெல்லத் தோன்றின.

இக்காலத்தில் ஐரோப்பிய வாழ்க்கையைப் பற்றிப் பல செய்திகள் வெளிவந்திருக்கிறபடியால், அதைப் பற்றிய நல்ல விளக்கம் மாணவனுக்குக் கிடைக்கக்கூடும். ஆனால், உலகத்து ஏனை நாடுகளின் மத்தியகால வாழ்க்கையைப் பற்

றிய விவரங்கள் அருமையாயிருக்கிறபடியால் அதைப்பற்றி இது போன்ற விளக்கமொன்று பெற்றுக்கொள்ளல் இயலாது. ஒன்றேடொன்று முரண்பாடுள்ள ஒன்றைச் சொல்வதில் பயனில்லை. ஆசியாவில் பல பிரதேசங்களிலும்—அதாவது சீனவில், இந்தியாவில், யப்பானில்—மத்திய கிழக்கு நாடுகளிலும், சிழ்த்திசை ஆசியாவின் பல நாடுகளிலும் மானியமுறைகள் நிகழ்ந்தன. இவற்றை, பலவற்ருலொத்த மானியமுறைகள் என்று ஐயமின்றிக் கூறலாம். இந் நாடுகளிலுள்ள சனத்தொகையின் கூடியபங்கினர் ஊரவரே. ஊர்களில், அவர் தாம் நடாத்திய தொழிலைக் கொண்டு சீவியத்தை நிகழ்த்தி வந்தனர். இங்கு சில நகரங்களே இருந்தன; வியாபாரமும் வரையறுக்கப்பட்டது; தொழில் களும் கைத்தொழில்களேயாகும்.

இந்தியாவில் நிகழ்ந்த நிலைமையை அவதானித்துப் பார்த்தால் நமக்கு இது நன்கு புலனுகும். இன்றுபோலவே, ஆதிகாலத்திலும் இடைக்காலத்திலும் இந்தியா பெரும்பாலும் கிராமமாகவிருந்தது. சனத்தொகையினர் நூற்றுக்கு எண்பத்தைந்து விதம் ஊர்களில் சீவித்தனர். ஒரு கிணற்றையோ ஒரு பொய்கையையோ சுற்றிக் கட்டப்பட்ட ஒரு வீட்டுக் கூட்டத்திற்றன் கிராமம் அமைந்திருந்தது. இடைக்காலத்திலும் இக்காலத்திலும் அப்படி இல்லாவிட்டாலும், ஆதிகாலத்தில் இந்திய கிராமங்களைச்சுற்றி ஒரு மதில், அல்லது பெரிய மரவேலி இருந்தது. சமுதாய வாழ்க்கையே ஊர்களில் திகழ்ந்தது. கிராமச் சபை சனங்களின் அபிவிருத்திக்கேதுவாகிய குளங்களையும் அணைக்கட்டுக்களையும் கட்டுதலிலும் புதுப்பித்தலிலும், பாதைகளை அமைத்தலிலும் சீர்திருத்துதலிலும் ஈடுபட்டுத் தொண்டுகள் செய்தது. கிராமச் சனங்களுள் பெருந்தொகையினர் சுதந்திரக் குடிகளேயாவர்.

சிறிய கிராம நிலங்கள் கமக்காரனுலும் அவன் குடும்பத்தினராலுமே பயிரிடப்பட்டன. இப்படி நாட்டில் நிலங்களெல்லாம் ஊரவர்களால் தம் நுகர்வுக்கெனப் பயிரிடப்படவில்லை. அடிமைகளாலும் கூலிகளாலும் பயிரிடப்பட்ட (நிலச்சுவான்கள்) இளவரசர்களுக்குரிய பெரிய நிலங்களுமிருந்தன. ஒரு கமக்காரனுக்கு அளவுக்கு மிஞ்சிய நிலங்களோ அவனுற் பயிரிடமுடியாத நிலங்களோ இருந்தால், அவற்றின் பயனிலிருந்து ஓரளவு தனக்கும் கிடைக்குமாறு, அவற்றை இறையற்ற ஆட்சிக்கு, அல்லது வரிக்குக் கொடுப்பான்.

இன்று இந்தியாவின் பல பிரதேசங்களில் நிகழும் முறையின்படியே பழைய இந்தியாவிலும் விவசாயத்துக்குரிய தொழில்கள் நிகழ்ந்தன. ஊரவர்கள் தனித்த சிறிய கலப்பைகளால் உழுது, அரிவாளால் அரிவி அரிந்து, மாடுகளை ஏவிச் சூடுமிதித்துப் பலனைப் பெற்றனர். மாடு, எருமை, ஆடு, செம்மறி ஆகியவற்ருலமைந்த மிருகக்கூட்டங்கள் அவர்களுக்கிருந்தன. குதிரைகளையும் யானைகளையும் கொண்டு சிலவிடங்களில் வேலைசெய்வித்தனர்.

கிராமவிதிகளினுல் ஊர்கள் வெவ்வேறுயின. சமநிலங்களில் அமைந்துள்ள ஊர்கள் பெரிதாக இருந்தபோதிலும் செழிப்பில்லாத மலைகளடர்ந்த பிரதேசங்களில் அமைந்துள்ள ஊர்கள் சிறியனவாயின. இந்திய ஊர்களும் சுதந்திர

மடைந்தன. வியாபாரமும் குறைந்தது; அதுவும் நகைகளைப்போன்ற இன்ப நுகர்ச்சிப்பொருள்களைச் சம்பாதிக்கும் பொருட்டேயாகும். ஆதலினால், ஊரவர்கள் சுயஉணவையும் கருவிகளையும் வீட்டுச்சாமான்களையும் தாமாகவே சம்பாதித்துக்கொண்டனர். இடைக்கால ஐரோப்பாவைப்போலவே இந்திய ஊர்களிலும் சில தொழில்களுக்குக் கைதேர்ந்த தொழிலாளர்கள் இருந்தனர். அவர்கள் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு வேண்டிய பொருள்களைத் தேடி வந்த சேவைகளுக்கே இந்தக் கைத்தொழிலாளர் நிலப்பாகங்களைப் பெற்றனர். மேலும், சூடுமிதிக்கும் காலத்தில் ஒவ்வொரு கிராமத்தவரின் விளைவிலிருந்து சிறிய அளவினையும் இந்தத் தொழிலாளர்கள் பெற்றனர்.

பழைய இந்தியாவில் சில பட்டணங்களே இருந்தன. அங்கு சில தொழில்களும் அற்ப வியாபாரமும் இருந்தன. தொழில்கள் கைத்தொழில்களாகவே விளங்கின. நகைசெய்தல் போன்ற சில பெரிய தொழில்களும் இருந்தன. ஒரு தொழிலைமட்டும் செய்துகொண்டு ஒரு நகரத்தில் வசித்து வந்த கைத்தொழிலாளர் ஒரு சங்கத்தின்கீழ் சேர்ந்தனர். சங்கம்—வேலைகள், வேதனம், விலை, திரவியங்களின் இனம் ஆகியவற்றைப்பற்றிய சட்டங்களை அமைத்தது. அது அங்கத்தினருக்குள் தோன்றிய கிளர்ச்சிகளை விசாரித்து நீக்கினது. விதவைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் ஆதரவளித்து அங்கத்தினரின் நோய் வருத்தம் முதலியவற்றுக்குப் பண உதவி செய்து தொண்டுபுரிந்தது.

இந்தியாவில் புராதன யுகத்தில் புண்ணியச் செய்கைகளுக்கும், சட்ட நிரூபணத்துக்கும், வியாபாரத்துக்கும் மத்திய தானங்களாகிய இடங்களிலேயே நகரங்கள் அபிவிருத்தியடைந்தன. வியாபாரத்தின் மத்திய தானங்களாக விளங்கிய நகரங்கள் அரசர்களினதும், பிரபுக்களினதும், பண்டாரர்களினதும் தேவைகளை நிறைவேற்றின. ஆனால், நாட்டிற் சாதாரண பொருளியல் ஒழுங்கின்படி, நகரங்கள் அவ்வளவு இன்றியமையாதனவாக அமையவில்லை. அப்படி நோக்கும்போது இந்தியாவும், ஒன்றுக்கொன்று அற்பமான தொடர்புகளுடைய தன்னுகர்ச்சி பெற்ற சிறிய சமுதாயங்கள் பலவற்றால் இணைந்திருந்தது.

ஐரோப்பா, ஆசியா, எகிப்து முதலிய நாடுகளைத்தவிர, உலகத்தில் ஏனை நாடுகளில், நாகரிகம் பல்வேறு தன்மைகளில் விளங்கியது. வட அமெரிக்காக் கண்டத்தில் வசித்த செவ்விந்தியர் மாட்டுமந்தைகளின் பயன்களை நுகர்ந்து, நிலையற்ற வாழ்க்கையை நடாத்தி வந்தனர். சிறிய குழுக்களாகச் சீவித்து வந்த இச்சாதியார், வேட்டையிலும் சண்டையிலும் எப்பொழுதும் ஈடுபட்டிருந்தனர். ஆபிரிக்காக் கண்டத்தில் சகாரா பாலைவனத்துக்குத் தென்திசையில் அமைந்துள்ள பிரதேசத்தில் வாழ்ந்த சனங்களும் அவ்வளவு நாகரிகம் அடைந்தவர் அல்லர். அவர்களும் சிறு சிறு குடிகளாகவே சீவித்தனர். ஆனால், அவர்கள் ஆயர் வாழ்க்கையைக்காட்டிலும் வேளாளருக்குரிய சீவியத்தையே நடாத்திக் கழித்தனர். அவுத்திரேலியாக் கண்டத்தில் சீவித்தவர்கள் வேட்டையினால் மட்

டும் பிழைத்த "புசுமன்" என்னும் நாகரிகமற்ற மனித இனத்தினரேயாகும். ஆசியாவிலுள்ளதும் ஐரோப்பாவிலுள்ளதுமான நாகரிகத்துக்கு ஒப்பிடக் கூடிய நாகரிகங்களோடு சிவித்தவர்கள் மத்திய அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள சில பிரதேசவாசிகளே ஆவர்.

பழையயுகத்தைப் பற்றிக்கருதும்பொழுது, சனநெருக்கத்தையுடைய தேசங்களாகிய ஐரோப்பாவும் ஆசியாவும் வட ஆபிரிக்காவும் சிறப்புறுப்புக்கள் குறிக்குமட்டில் சமமாக ஒப்பிடக்கூடிய நாகரிகங்களையுடைய ஒழுக்கத்தோடு விளங்கியதை நாம் காணலாம். ஆனல், புதிய யுகம் தொடங்கும்பொழுதே ஐரோப்பா விரைவில் முன்சென்று புதிய நாகரிகத்தை வளர்த்தது. அதற்குப்பின், உலகத்தின் ஏனை நாடுகள் அதனுடைய நாகரிகப் பெருமையின் கீழ்ப்பட்டன. இந்த முக்கியமான மாற்றத்தை இப்பொழுது கவனிப்போம்.

3—CP 1397 (67/7)

1 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

| | | |
|---|---|---|
| 1. அரச நிலங்கள் | ... | ... Royal estates |
| 2. முக்கியமான செய்கைக்காரர்கள் | | ... Tenants-in-chief |
| 3. பண்டாரன் | ... | ... Lord of the manor |
| 4. பண்டார நிலம் | ... | ... Demesne |
| 5. சுவாதீனன் | ... | ... Freeman |
| 6. வாரக்குடி | ... | ... Villein |
| 7. குடிசைவாசி | ... | ... Cottar |
| 8. விதானை | ... | ... Reeve |
| 9. இருதவணை முறை | | ... Two-field system |
| 10. முத்தவணை முறை | | ... Three-field system |
| 11. வியாபாரச்சங்கம் | ... | ... Merchant guild |
| 12. சிற்பிச்சங்கம் | ... | ... Craft guild |
| 13. அங்காடி | ... | ... Market |
| 14. சந்தை | ... | ... Fair |
| 15. கிருகமுறை | ... | ... Domestic system |
| 16. சுயநுகர்ச்சி | ... | ... Sustenance |
| 17. கூட்டுத்தொழில் | ... | ... Partnership |

# 2 ஆம் அத்தியாயம்

## பெரும் புரட்சி

இடைக்காலத்துக்குரிய பொருளியல் ஏற்பாடு அத்துணை கலக்கமுறவில்லை என நாம் அறிவோம். அப்பொழுது சனத்தொகையின் பெரும்பங்கு விவசாயத்திலேயே பிழைத்தது. நாடெங்கும் பரந்திருந்த ஊர்களில் மக்கள் சீவித்தனர். முக்கியமான தலைநகரங்களைத் தவிர, ஏனை நகரங்கள் சிறியவையாயின. கூட்டங்களாக ஒழுங்கு படுத்தியிருந்த தொழிலாளர்களும் வியாபாரிகளுமே பெரும்பாலும் அந்நகரங்களில் சீவித்தனர். சொந்த வீடுகளிலே வேலைசெய்த சுதந்திரமான வேலையாட்கள் மூலமாகவே நுட்பவியற்றொழிலின் அதிகப் பகுதி நடாத்தப்பட்டது.

இடைக்காலத்து ஐரோப்பாவில் சீவித்தவர்கள் பொருளியல் மூலம் சுயநுகர்ச்சியையடைந்து, தமக்குள்ளே அத்துணை தொடர்பில்லாத சிறிய கூட்டங்களாக வாழ்ந்த சமுதாயத்தினராவர். நாட்டில் தலைமையான தொழில் விவசாயமானது ; வர்த்தகமோ குறைந்தது. கலப்பற்ற, அபிவிருத்தியை யடையாத ஆக்கத்தொழில் முறைகள் பொதுவழக்காக இருந்தபொழுது, அவை பொருட்டு நிகழ்ந்த ஆக்கத்தொழில் ஒழுங்குகளும் கலப்பற்றவையாயின. பிழைப்புக்காக மட்டும் சிறிதாக நடந்த ஆக்கத் தொழிலுக்குத் தேவையான முக்கியமான பணத்தொகையும் குறுகியது. ஆகையால்தான் எளிய சீவியம் பலருக்குச் சாதாரணமாயது. சனத்தொகையின் பெரிய பங்கினர் மிகவும் பாடுபடும் பொழுது, சிலர் மட்டும் சிறப்பான செல்வாக்குடனும் போகபோக்யத்துடனும் சீவிக்கும் சமுதாயமுறையே அக்காலத்தில் விளங்கியது.

பரும்படியாக விரித்துரைக்கப்பட்ட இந்தச் சமுதாய ஏற்பாடு, ஐந்நூறு ஆண்டுகளுக்குள்ளேயே கண்டதுண்டமாகிவிட்டது. மேற்கு ஐரோப்பாவில், சிறப்பாக இங்கிலாந்திற்றொடங்கிய புது நுட்பக்கருமவியல் நாகரிகம், பலதேசங்களுக்குப் பலவிதமாகப் பரவி வெவ்வேறு பலன்களை உண்டுபண்ணிக்கொண்டு உலகம் முழுவதும் வியாபித்தது. எங்ஙனம் இப்பெரிய புரட்சி தோன்றியது? இதன் உண்மையான தத்துவம் என்னவென்று விசாரிக்கும்பொழுது, மேற்கு ஐரோப்பாவை நோக்குதல் வேண்டும்.

பதினைும் நூற்றுண்டு தொடங்கி ஏறக்குறைய இருநூற்றைம்பது வருடங்கள் வரை உள்ளகாலம், இந்தப்புரட்சி தொடங்கிய காலமென்று எண்ணலாம். அக்காலத்துக்குப் பலவிதமான பெயர்கள் வழங்கின. ஆனால், அந்தக்கால எல்லைக்கு மேற்கு ஐரோப்பாவில் ஆதிப்புதுயுகம் என்று சொல்வது மிகத்தகும். இந்த யுகத்தில், தான் எத்திசையை நோக்குகின்றது என்று மேற்கு ஐரோப்பா

நன்முகக் காட்டிவிட்டது. அதன் சனத்தொகையும் முறையாக வளரத் தொடங்கியது. குடித்தொகையுள் பெரும்பான்மையான தொகையின் முக்கிய தொழில் விவசாயமேயானாலும், விவசாயம் சம்பந்தமான ஆக்கற்றொழில்கள் சீவியம் நடாத்துதற்காக மட்டுமன்றி, மேலும் மேலும் வர்த்தகத்துக்காக விருத்தியாக்கு முறை இக்காலத்தில் தொடங்கியது. நகரங்கள், அளவிலும் எண்ணிலும் அதிகரித்தன. நுட்பவியற்றொழில்களும் விருத்தியாயின. ஆனால், இந்த யுகத்தில் விளக்கமாகத் தோன்றிய உறுப்பு, வர்த்தகப் பெருக்கமேயாம். வெவ்வேறான பலவிதப் பொருள்களைச் சேர்த்து, நடாத்திய ஒரு வர்த்தகத்தில் ஐரோப்பா ஈடுபட்டிருந்தது. ஐரோப்பிய வியாபாரிகள் வணிகப் பொருள்கள் பலவற்றை உலகத்திற் பலபாகங்களுக்குக் கொண்டு சென்று விற்றனர். இந்த வர்த்தகப் படர்ச்சிக்கு ஏதுவான காரணங்கள் பலவுள. மத்திய காலத்திலுள்ள ஐரோப்பாவின் புவியியலமைப்பைச் சிறிதளவு பார்த்தால், மேற்கிலும் வடக்கிலும் அத்திலாந்திக்குக் கடலாலும் ஆட்டிக்குக் கடலாலும், தெற்கில் சகாராப் பாலைவனத்தினாலும், அராபியர் நாடுகளாலும், கிழக்கில் துருக்கியர்களாலும், மொங்கோலிய கோத்திரத்தாராலும் சூழ்ந்தமை நன்கு விளங்கும். பிரயாசையும் கூடுஞ் செலவும் உடைய போக்குவரத்துப் பாதைகளையே ஐரோப்பா ஏனைய நாட்டினரோடு தொடர்பு நிகழ்த்த உபயோகித்தது. ஆதலால், பெரும்போக நுகர்ச்சிக்குரிய சில சாமான்களுக்கும் சரக்குப்போன்ற தேவையான பொருள்களுக்குமே இடைக்காலத்திலுள்ள ஐரோப்பிய வர்த்தகம் வரையறுக்கப்பட்டிருந்தது. இடை யுகத்தின் இப்பாலுள்ள காலத்தில், ஐரோப்பா இந்தத் தனிமையிலிருந்து நீங்கியது. தயசு, வசுக்கோதகாமா, கொலம்பசு, கபோ முதலியவர்கள் புதிய வெளிப்படுத்தல்களால், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா ஆகிய தேசங்களுக்கு இலேசான, மலிவான வழிகளைக் கண்டுபிடித்தனர். பொருளியல் விடயத்தில் இந்தக் கண்டுபிடித்தல்களின் பலன்கள் கண்ணெதிரே தோற்றுதபோதிலும் அற்பமானவையல்ல. ஐரோப்பிய வியாபாரிகள் இதுவரை வழக்கிலுள்ள பொருள்களின் பெரும் தொகையையும் புதிய பொருள்களையும் இந்நாடுகளிலிருந்து கொண்டு சென்றனர். புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நாடுகளுக்கும் பல ஐரோப்பிய பொருள்கள் விற்கப்பட்டன. கடந்த ஆண்டுகளில் ஐரோப்பியர் அமெரிக்காவுக்குச் சென்று குடிபுகுந்தபொழுது, புதிய சந்தைகளும் வர்த்தகத் தாபனங்களும் தோன்றின. இதனால் உண்டாய கடல் வியாபாரம் அதிக பலனையீந்தது.

அனித்தாய்வோர்மூலம் தோன்றிய உவந்த நிலைகளுக்கு, ஐரோப்பியர்பால் இருந்த சுகவாழ்க்கை வேட்கையானது இன்னொரு வேட்கையாகமாறியது. **விஞ்ஞான சாத்திர மறுமலர்ச்சி** என்ற பெயரால், சரித்திரத்தில் வழங்கிய ஒரு பெரிய போக்கே இந்த எண்ணத்துக்கு ஆதரவையளித்தது. இந்தயுகத்தில் கிறித்தவ சமயத்தில் தோன்றிய குருமாரின் வேற்றுமையும் இதற்கு அதிகாரம் உதவியது. இடைக்காலத்திலுள்ள ஐரோப்பிய கத்தோலிக்க சமயத்தினால் செல்வம் திரட்டுதல் கண்டிக்கப்பட்டது. தெய்வங்களைத் திருத்திசெய்யும் ஒரேயொரு

தொழில் சமயத்தொண்டுதான் என்ற எண்ணத்தோடு குருமார் வேலை செய்தனர். கிறித்தவ ஒற்றுமை தகர்ந்து போனதாலும், புரொட்டசுத்தாந்துச் சபைகள் பரவினதாலும், இந்த எண்ணம் மாறுபடத்தொடங்கியது. மட்டாகவும், அமைதியாகவும், நேர்மையாகவும், முறையாகவும் நிகழ்ந்தால், எத்தொழிலாவது தெய்வ திருத்தியை அளிக்குமென்பது புரொட்டசுத்தாந்துச் சமயிகள் கற்ற உண்மையாகும். செல்வர் தெய்வங்களால் வெறுக்கப்பட்டவரல்லர், என்ற சித்தாந்தம் ஐரோப்பிய வியாபாரிகளுக்குத் தெளிவாக விளக்கப்பட்டது.

இந்தயுகத்தில் ஐரோப்பாவில் சுதேச அரசுகளும் அதிகரித்தன. பிரான்சிலும், பிரித்தானியாவிலும் சுப்பெயினிலும் இருந்த சிற்றரசுகள் ஒன்றுபட்டுப் பெரிய சுதேச இராச்சியங்களாயின. சிறிய தேசங்களை ஆண்ட இளவரசர்கள் தங்கள் நாடுகளைப் பெரிய இராச்சியங்களாக்கி, வல்லமையுள்ள அரசர்களாகும் பொருட்டு எத்தனித்தனர். இந்த யுகத்தில் ஐரோப்பாவில் இருந்த அரசர்கள் வர்த்தகத்துக்கும் தொழிலுக்கும் பெரிதும் ஆதரவளித்து இந்த எண்ணத்தைப் பூர்த்தியாக்க முயன்றனர். ஆகையால், புதிய பாதைகள் கண்டுபிடித்தல், விஞ்ஞான சாத்திர மறுமலர்ச்சி, சமயசம்பந்தமான புதிய எண்ணங்கள் பரவுதல், சுதேச இராச்சியங்களின் முன்னேற்றம் ஆகிய எல்லாம் இவ்வர்த்தகம் பரம்புதற்கு ஆதரவையளித்தன.

மத்திய காலத்திலுள்ள வர்த்தகத்தின் எவ்வெவ்வுறுப்புக்கள் உலகத்தில் (சிறப்பாக ஐரோப்பாவில்) இருந்தன வென்று முதலாம் அத்தியாயத்தில் அறிந்தோம். இந்த வியாபாரம் அளவிற் சிறிதாயிற்று. பெரும்போக நுகர்ச்சிக்குரிய சில திரவியங்களுக்கும் தேவையான பொருள்களுக்கும் வரையறுக்கப்பட்டது. அன்றியும், இது ஒருபருவத்துக்கு மட்டுமே இருந்தது. கிராமத்தவர் வாரந்தோறும் நிகழ்ந்த சந்தையில் தமக்குவேண்டிய பொருள்களையும், பெரிய வியாபார ஆவணங்களிலிருந்து வாணிபப் பொருள்களையும் பெற்றுக்கொண்டனர். இக்காலத்திற்போல, எப்பொழுதும்-நாடோறும் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் தொகை குறைந்தது. ஊரவர்களுக்குத் தேவையான பொருள்கள் பலவற்றையும் கொண்டுசென்று விற்பவனிடமிருந்து பெற்றுக்கொண்டனர். அவனே இடைக்கால வியாபாரத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தான்.

தனித்தபண்டமாற்றம் இடைக்கால வியாபாரத்தின் வேறொரு அங்கமாயிற்று. வாங்குபவன் பண்டமாற்றுக்கு முன், பண்டத்தை நன்றாகச் சோதித்துப் பார்த்தான். இப்படிப்பட்ட இடைக்கால வியாபாரம் பெரும்பாலும் இக்காலச் சில்லறை வியாபாரத்துக்கு ஒப்பானது.

ஆதி-நவீனயுகஐரோப்பாவில் நிகழ்ந்த இந்நிலைமை, பெரும்பாலும் மாறிவிட்டது. சந்தையும் ஆவணமும் இக்காலத்திலும் முக்கியம்பெற்றிருந்தபொழுது, சாதாரண வியாபாரிகள், மொத்த வியாபாரியின் நிலைமைக்கு மாறிவிட்டனர். இதனால் சாமான்களை விலைக்கு வாங்குவோனுக்குச் சந்தைவரும் வரையும் பொருள்களை எதிர்பார்த்திருக்க வேண்டி நேரவில்லை. திரிந்து விற்பவன்

இக்கால வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தபோதிலும், என்றும் ஓரிடத்தே நிகழ்ந்த சில்லறைக்கடையும் இருந்து வந்தது. விலைக்கு வாங்கும் பொருட்டிருந்த வாணிபப்பொருள்கள் எல்லாவற்றையும் கவனியாமலே வாங்கிவிடும் பழக்கம் வியாபாரிகளிடமிருந்தது. உதாரணமாக. கமக்காரன் தன் தானியத்திலிருந்து ஒரு பகுதியை மட்டும் சந்தைக்குக் கொண்டுபோய்க் காட்டி, பின்னர் அம் முழுத் தொகையையுமே விற்ருன். கடனுக்குப் பண்டங்களை வாங்கும் பழக்கமும் படிப்படி அதிகரித்தது. வியாபாரிகள் சில வியாபாரங்களைப் பற்றி ஒரு சிறந்த முறையை விருத்தி செய்துகொண்டனர். உதாரணமாக, சிலர் வாணிபப் பொருள்களை நாட்டுக்கு வருவிப்பதில் ஈடுபட்டிருக்க இன்னும் சிலர் வியாபாரப் பண்டங்களை நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கனுப்புவதில் ஈடுபட்டனர். சிலர் புடைவை வியாபாரிகளாஞர்கள்; இன்னும் சிலர் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டனர். முன்னர் நாம் அறிந்தபடி, வியாபார அளவு மிகவும் அதிகரித்தபடியால், இந்த வியாபாரத்திலுமே ஒரு வித்தியாசமுண்டாயிற்று. பாதைகள் தோன்றுதலும், கப்பற்பிரயாண வசதிகள் தோன்றுதலும் இந்தப் பெரிய வர்த்தக விருத்திக்கு ஆதாரமாயிருந்தன. கப்பலோடும் வழிகள் பெருகியதனல் வியாபாரப் பண்டங்களை இலேசாகவே தூர தேசங்களுக்குக் கொண்டுபோய் விற்க வசதி கிடைத்தது. சந்தை பெருகும் பொழுது, மேலும் மேலும் வியாபாரப் பண்டங்களின் தேவையும் அதிகரித்தது. வேறு காரணங்களுடனே இந்தத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சியினல்தான் தொழிற்புரட்சி என்ற பெயரால் குறிக்கப்படும் பெரிய தொழில் மாற்றம் உண்டாயிற்று. இந்தப் பெரிய தொழில் மாற்றத்திற்குத் **தொழிற்புரட்சி** என்ற பெயர் ஏற்றதல்ல என்று கூறும் சில பண்டிதர்களுமுளர். "தொழிற்புரட்சி" 1789 இல் தோன்றிய பிராஞ்சுப்புரட்சியைப் போல நொடிப்பொழுதில் தோன்றிய ஒன்ருகவிராதபடியாலும், 18 ஆம் நூற்ருண்டின் நடுப்பாகத்திலிருந்து நூற்றைம்பது வருடங்களுக்குள் ஐரோப்பாவில் தோன்றிய பல வேறுபாடுகளுக்கும் அதனை உபயோகிப்பதாலும், புரட்சி என்ற சொல்லை உபயோகித்தல் ஏற்றதல்லவென்று அவர்கள் உரையாடுவர். மற்றைப்படி பார்க்கும் பொழுது, இந்த வேறுபாடுகள் ஒரு நூற்ருண்டு வரை பரந்திருந்தாலும் முழு ஐரோப்பாவிலும், இதனைத் தொடர்ந்து, முழு உலகத்திலும் வேறுபாடுகளை யுண்டாக்கியதனல், இதற்கு இதுவரை "**தொழிற்புரட்சி**" என்ற பெயரே வழங்கப்படுகிறது. அதிகம் உரையாடாது நாம் இதற்கு "பெரிய தொழிற் புரட்சி" என்ற பெயரை இடுவோம்.

பெரிய தொழிற்புரட்சியின் முக்கியமான உறுப்புக்கள் எவையென்று ஆராய்ந்து பார்ப்போம். இயற்றுதொழிலில், கைக்கருவிகளின் உபயோகத்துக்குப் பதிலாக, எந்திரக்கருவிகளை உபயோகித்தல் பெரிய தொழிற்புரட்சியின் முக்கியமான உறுப்பு என்று சிலர் கூறுவர். கைக்கருவியானது, கையினல் ஏவவேண்டிய அரிவாளைப் போன்ற கருவியாகும். ஆனல், யந்திரமானது காற்று, நீராவி, நீர், எண்ணெய், அல்லது மின்சத்தியைப் போன்றவலிய வேகங்களினல்

இயக்கப்படுமொன்றாகும். இதற்கு இழுபொறி ஓருதாரணமாகும். 18 ஆம் நூற்றாண்டுக்கு முன் இருந்த தொழில்கள் பெரும்பாலும் கைக்கருவிகளால் நடாத்தப்பட்டன. சில சிறிய எந்திரங்களே அன்று இருந்தன. அதுவரை இருந்த சின்ன எந்திரங்களை இயக்குவதற்குக் காற்றும் நீருமாகிய இருவலிய வேகங்கள் உபயோகிக்கப்பட்டன. பருவத்துக்கேற்ப இவை குறைந்தும் கூடியுமிருப்பதினால் இந்த வலு வேகங்கள் இரண்டையும் எப்பொழுதும் உபயோகிக்க முடியாது. மேலும், தொழிற்சாலையை வலு வேகமிருந்த இடத்துக்குக் கொண்டு போக நேரும். கால வேற்றுமையின் வேறுபாடுகளினால் நிலையான வேலைகளுக்கு இவ்விரண்டு வலுவுள்ள வேகங்களும் போதியனவாகவில்லை. நீரிலிருந்தும் காற்றிலிருந்தும் கிடைத்தவலு வேகங்களை இயற்றுபவனின் எண்ணப்படி குறைக்கவும் வளர்க்கவும் முடியவில்லை. அன்று தொழில்களைப் பெரும்பாலும் கைக்கருவிகளாலேயே செய்ய நேர்ந்தது ஏனென்பது இதனால் விளங்கும்.

இலேசும் மலிவுமான வலுவேகமாகிய நீராவிச் சக்தியைக் கண்டுபிடித்ததன் பின்பே இவையெல்லாம் மாறின. நீராவியாகிய வலுவேகம், எப்பொழுதும் உபயோகிக்கக்கூடிய பருவம்தோறும் மாறாது குறைக்கவும் வளர்க்கவும் கூடிய வலுவேகமாதலால், அதைக்கண்டு பிடித்ததன் பின் யந்திரங்கள் ஒவ்வொருநாளும் உபயோகிக்கக் கூடியனவாயிருந்தன. முதலில், அதிகமாக மரங்களாற்றான் யந்திரக் கருவிகள் செய்யப்பட்டன. இரும்பும் உருக்கும் சிறிதளவே அதில் அடங்கியிருந்தன. ஆனால், நீராவி வலுவைக் கண்டுபிடித்தற்குப் பின், நீராவியினால் இயக்கும் எந்திரங்கள் இன்றியமையாதனவாக, அவை இரும்பினாலும் உருக்கினாலும் செய்யவேண்டியனவாயின. ஆகையினால், இரும்புத் தொழிலுக்கும் உருக்குத் தொழிலுக்கும் ஆதரவு கிடைத்தது. பிரித்தானியாவில் அதிகம் இரும்பு இருந்தபோதிலும் அவ்விரும்பை உருக்காக்கும் விடயத்தில் எரிபொருள் மிகவும் அவசியமாயிற்று. முதலில், அதன்பொருட்டு மாக்கரியே உபயோகிக்கப்பட்டது. ஆனால், 18 ஆம் நூற்றாண்டு தோன்றவும் ஐரோப்பாவின் பல நாடுகளில் இதன்தொகை அருகியது; அதிட்டவசமாக இக்காலத்தில் உலோகங்களை உருக்குவதற்குச் சுரங்கக் கரி கண்டுபிடிக்கப்பட்டது. இதற்கு முன்னும் ஐரோப்பியர்களுக்குச் சுரங்கக் கரிபற்றிய அறிவு இருந்தபோதிலும் அதை இலேசாக உபயோகித்தல் முதலியன 18 ஆம் நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டன.

இங்ஙனம் கூறிய கலைமுன்னேற்றம், அதாவது உருக்கினால் அமைந்த நீராவி வலுவினால் இயங்கிய எந்திரக்கருவிகள் உபயோகித்தல் முதலியவை, ஆக்கற்றொழிலின் அளவு வேறுபாடுகளையும் உண்டாக்கின. முன்னர் நிகழ்ந்த தொழில்கள் சிறியவையாயின. இற்றைய தொழில்கள் பரும்படி ஒழுங்கு செய்யப்பட்டன. இதனால், வர்த்தகத்தைப் பற்றிய முறைகளும் வெவ்வேறு உருவங்களைக் கொள்வனவாயின. யந்திரங்களின் உபயோகத்தினால் இயற்றும் கருவிகளுக்குரிய முதற் பொருள்களை யந்திரங்கள் இருக்கும் இடத்துக்கு, அல்லது கட்டடத்துக்குக் கொண்டு செல்ல நேர்ந்தது. ஆகையினால், யந்திரக் கருவிகளை உப

யோகித்த காரணமாக தொழில்களை அவற்றின் தொழிற்சாலையிலேயே செய்ய நேர்ந்தது. இவ்வண்ணமே, தொழிற்சாலையில் உண்டாக்குதல் புதிய தொழில்களின் முக்கியமான உறுப்பாகிவிட்டது. எந்திரக் கருவிகளால் உண்டாக்கிய வாணிபப்பொருள்கள் கைத்தொழிலாலாய வாணிபப் பொருள்களைக் காட்டிலும் விலைகுறைந்தன. கைத்தொழிலாலாய ஆக்கவேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு யந்திரக் கருவியினால் உண்டாக்கிய வாணிபப் பொருள்களோடு போட்டியிடமுடியவில்லை. ஆகையினால், அவர்களுள் சிலர் தாம் உண்டாக்கும் தொழிலை நிறுத்திவிட்டுத் தொழிற்சாலைகளில் வேலையாளர்களாக அமையத் தொடங்கினர். எந்திரத்தொழிலாளர்களால் ஆக்கத்தொழில்கள் நடந்த இடைக்காலத்திற் போலல்லாமல், பெரிய தொழிற்புரட்சியின் பிறகு, தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்கள் இரு பிரிவினராயினர். அதாவது, எந்திரக் கருவிகளினதும் தொழிற்சாலைகளினதும் உரிமையாளரும் நித்திய சேவையில் ஈடுபட்ட தொழிலாளராணர்கள். இவ்வண்ணமே நுட்பக்கலை சம்பந்தமான தொழிலாளரின் கூட்டம் தோன்றியது.

அதிகம் செல்வாக்குள்ள இடங்களிலேயே புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. யந்திரக் கருவிகளுக்கு இன்றியமையாதன நிலக் கரியும் இரும்புமென்ற இருவகைக் கனிப்பொருள்களாதலால் இவை இருந்த இடங்களில் பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. தொழிலாளர்களும் பலர் கூடினர். இவ்விடங்கள் பிற்காலத்தில் பெரிய தொழில் சம்பந்தமான நகரங்களாயின. நகரங்கள் அளவிலும் எண்ணிலும் அதிகரித்தபொழுது, நாகரிகமுடையோர் தொகையும் பெருகியது. நகரங்களும் மாகாணங்களும் நாடுகளுமே, வெவ்வேறான ஆக்கும் தொழில்களில் சிறப்பான ஆற்றலுடன் ஈடுபடத்தொடங்கின. இப்படி நடந்தபடியால், தமக்குத் தேவையான பலவிதமான பொருள்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, ஒவ்வொரு மாகாணத்திலும் மக்களுக்கு அவாவர்களினன், ஆக்கப் பொருள்களைப் பண்டமாற்றுச் செய்ய நேர்ந்தது. ஆதலால், உள்நாட்டு வியாபாரமும் பிறநாட்டு வியாபாரமும் முன்னேயிலும் அதிகரித்தன. நூற்றைம்பது வருடங்களுக்குள், மேற்கு ஐரோப்பாவிலே இந்த வேறுபாடுகள் எல்லாம் நிகழ்ந்தன. இந்த வேறுபாடுகள், எல்லாவிதங்களிலும் மிகவும் முக்கியமானவை.

தொழிற்புரட்சி நிமித்தம் ஆக்கப் பொருள்கள் அளவில் மிகவும் பெருகின. இதற்குக் காரணங்கள் யாவையென்று நாம் ஆய்ந்து பார்ப்போம். விஞ்ஞான சாத்திர மூலம் அபிவிருத்தியடைந்த முறைகள் எவ்வளவு இருந்தபோதிலும் விவசாயத்தையொட்டி இயற்கையாகச் செய்ய வேண்டிய முக்கியமான பாகமுமுண்டு. நிலத்தில் விதைகளை விதைத்தபின், இயற்கையாக, அது முளைத்து வளரும் வசதிகளை ஆக்கவேண்டும். புதிய விஞ்ஞான சாத்திரத்திற்குரிய நீர்ப்பாய்ச்சல் முறைகள் செயற்கையான உரம்போடும்முறைகள் முதலியவைகளினால், இயற்கையானது தரும் ஊக்கத்திற்கு உதவியையும் ஆதாவையும் கொடுக்கலாம். இதனால், இயற்கையின் செயல்களை விரைவில் முடிக்க இயலும். ஆனால், வளர்ச்சி போன்ற முக்கியமான செயல் நிகழும்வரை, மனிதர் எதிர்பார்த்திருத்தல் வேண்டும்.

கலை சம்பந்தமான ஆக்கற்றொழிலில் அப்படியன்று. செடிகளைப் பயிரிடுவதிற் போல, கம்பளிப் பந்துகளை நூல்களாக நூற்பதில் இயற்கைக்கு ஒரு பொறுப்புமில்லை. எந்திரக்கருவிகள்மூலம் பொருள்களையுண்டாக்கல் விரைவாகச் செய்ய முடியுமானால், மனிதன், கமத்தொழிலிற்போலப் பிற தொழில்களிலும் இயற்கையை எதிர்பார்க்க முடியாது. தொழிற்புரட்சி கொண்டு வந்த கலைமுறைகள் இம்முயற்சியில் உதவியாயிருந்தன. வரையறுக்கப்பட்ட உணர்ச்சியின் காரணமாக, மனிதனுக்கு நேரக்கூடிய சில இடுக்கண்களை நீக்குதற்பொருட்டு, கலாவிஞ்ஞானங்களின் முன்னேற்றம் உதவியாயிருந்தது. உதாரணமாக, தொழிற்புரட்சிக்குமுன் மனிதன் கட்டடங்களுக்கும் கப்பல்களுக்கும் எந்திரக் கருவிகளுக்கும் மரப்பலகைகளை உபயோகித்தான். ஆதியில், உரிய மரப்பலகைகள் பெறக்கூடிய அளவுக்கே வீடுகளைக் கட்டவும் எந்திரக் கருவிகளை உபயோகிக்கவும் கூடியதாயிருந்தது. மரங்கள் வளர்த்துப் பெருக வேண்டியதனால் இயற்கை அன்னைக்கு அங்கு ஒரு கடமையுமிருந்தது. ஆகையால், தொழிற்புரட்சிக்கு முன் மனிதனின் கலை சம்பந்தமான ஆக்கத்தொழில்களுமே இயற்கையினால் எல்லைப்படுத்தப்பட்டன. இரும்பைக் கண்டுபிடிப்பதற்கு முன் கப்பல்களுமே மரங்களால் கட்டப்பட்டன. 18 ஆம் நூற்றாண்டில், மேற்கு ஐரோப்பாவில் கப்பல்களைக் கட்டுவதற்கு ஏற்ற மரத்தொகை குறைந்தது. இக்காரணத்தினால், கப்பல்களைக் கட்டுவது அதிக செலவுள்ள காரியமாயது. ஆனால், இரும்பை மலிவாக உபயோகித்தலைக் கண்டுபிடித்ததன்பின், இயற்கை எல்லைகள் நீங்கினவுடனே, கப்பல்களைக் கட்டுதலும் யந்திரங்களை உண்டாக்குதலும் மிகவும் வேகமாக நடந்தன. முழுத் தொழிற்புரட்சியே இப்படி மனிதனை இயற்கையின் எல்லைகளிலிருந்து மீறும்பொருட்டுத் தூண்டிற்று. கலைகளின் முன்னேற்றம் காரணமாக மனிதன் நெய்வகைகளையும் அவற்றைக் குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ளும் முறைகளையும் கண்டுபிடித்தான். ஆதலால், கனிப்பொருணெய்யானது, தாவரநெய்க்கும் விலங்கு நெய்க்கும் பதிலாக உபயோகமாகியது. கனிப்பொருணெய் கண்டுபிடித்தபின், யந்திரக் கருவிகளை இயக்குவதற்கு எண்ணெய் பெறப் பிராணிகளை வளர்த்தல், அல்லது மரம் வளர்த்தல் வேண்டியதில்லை.

இயற்கையின் உதவியைப் பெறும்வரை காத்திராமல், செய்தொழில் யாவற்றுக்கும் எண்ணெய் இலேசாகத்தேடிக் கொள்ளமுடியும். கலைகளின் முன்னேற்றத்தின் செல்வாக்குக் காரணமாக, மனிதன் இயற்கையன்னையின் தடைகளிலிருந்து நீங்கி, அவளுடைய தாமதச் செய்கைமுறையைக் கவனிக்காமல், தனக்கு வேண்டிய எல்லாவற்றையும் சம்பாதிப்பதில் ஈடுபட்டான்.

கலைகளின் முன்னேற்றங் காரணமாக மனிதன் இயற்கையின் எல்லைகளிலிருந்து சுதந்திரம் பெற்றான். அதுமட்டுமல்ல; மனிதனின் இயற்கை ஆற்றல்களுக்கும் அது பெருமையைக் கொடுத்தது. இந்தக்கலை விஞ்ஞான சம்பந்தமான முன்னேற்றமாகும். மனிதனுடைய ஆக்கும் ஆற்றல்களைத் தடுத்துக் கொண்டிருந்த எல்லைகள் எல்லாவற்றையும் நீக்குவதற்கு அவனுக்கு இது உத

வினது. உதாரணமாக, ஓடியை அளந்து, மனிதனால் அதை அங்குலத்திற் பன்னிரண்டு பிரிவுகளாக, அல்லது அரை அங்குலத்தைக்கொண்ட இருபத்து நான்கு பிரிவுகளாகப் பிரிக்க இயன்றது. அதற்குப்பின், அவன் அதை மேலும் பிரிக்க முயன்றால், அப்பிரிவின் அளவுகளில் தவறியிருப்பான். இப்பொழுதெனின், புதிய கலை விஞ்ஞான முறைகளினதும் கருவிகளினதும் உதவியால் மனிதனால் ஓரங்குலத்தின் கோடியளவையேனும் பிரித்துக்காட்ட இயலும். இவ்விதமாக மனிதனுடைய ஆற்றல், அல்லது திறமை பெரிதும் அதிகரித்துளது. மனிதனுடைய உடல் வலிமைக்கு மேலாக இயங்குதற்பொருட்டு, பரி வேகம் 60,000 உள்ள பெரிய எந்திரக்கருவிகள் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட எந்திரக்கருவிகளின் காரணமாக, விருத்தியாகும் தொழில்களுக்குச் செலவிடும் பணமும் குறைந்துள்ளது. சில உதாரணங்களால் இக்காரணங்களை விளக்கலாம். 1770 ஆம் ஆண்டில் ஒரு தனவந்தர் எட்டு மனிதர் கூடிச்செய்யும் வேலையைச் செய்தற்குத் திறமையுள்ள காகிதம் வெட்டும் எந்திரம் ஒன்றை அமைத்தார். அதனால் இவர் முதலில் செலவழித்த தொகையின் மூன்றிலொருபங்கு குறைந்தது. நிறங்களையுண்டாக்கும் ஒரு யந்திரம் 1747 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. முதலில் உரோமப் பந்துகளை நூலாக்குவதில் ஈடுபட்ட தொழிலாளர் கூட்டத்தை, ஐந்தில் ஒரு பாகமாகக் குறைக்கக்கூடிய திறமையுள்ள ஒரு எந்திரம் 1800 ஆம் ஆண்டில் உரோமத் தொழிலில் தோன்றிற்று. இவ்வண்ணமாக, மனிதனால் குறைந்த விலையில் பல பொருள்களை ஆக்க முடிந்தது. மனிதனால் இயற்கையின் தடைகள் உடைத்து விழுத்தப்பட்ட பின்பு, அவன் ஆக்கிய பொருள்களின் அளவு, பெரும்பாலும் பெருகிற்று. இவ்வண்ணம், 1800 ஆம் ஆண்டில் பிரித்தானியாவில் நிலக்கரி 10,000,000 தொன் செலவாக, 1938 இல் நிலக்கரி 230,658,000 தொன் உபயோகிக்கப்பட்டது.

சுருங்கச் சொல்லின், முதலிலேயே தொழிற்புரட்சியின் காரணமாகத் தொழில்களில் கைக்கருவிகளுக்குப் பதிலாக. எந்திரக்கருவிகள் பெரிதும் உபயோகத்தில் வந்தன. எந்திரக்கருவிகளை ஆக்க மரப்பலகைகளைத் தவிர, இரும்பும் உருக்கும் உபயோகத்தில் இருந்தபடியால், அவற்றை மேலும் மேலும் பயன்படுத்த இயன்றது. இந்த எந்திரங்கள் நீராவியைப்போன்றவொரு வலிமையுள்ள சத்தியின் மூலமே இயக்கப்பட்டன. பின்னர், எண்ணெயும் மின்சத்தியும் உபயோகத்திற்கு வந்தமையால், காற்று-நீர் போன்ற சத்தி வேகங்கள் உபயோகிக்கப்படவில்லை. நீராவிச் சத்தியுமே, பெற்றுக்கொள்ளச் சங்கடமாய விறகு-கரிகளாலல்லாமல், எப்பொழுதும் மிகவும் இலேசாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலக்கரியினாலேயே உண்டாக்கப்பட்டது. நிலவாக்கம் முதலிய தொழில்கள் இருந்தமையால், ஆக்கற்றொழில்களை வருடம் முழுவதும்-எப்பொழுதுமே செய்யவியன்றது. ஆக்கற் பண்டங்களின் அளவு பெருகியதே இவை யாவற்றிற்கும் முடிவானது.

இவ்வளவு பெரிய தொழில் சம்பந்தமான முன்னேற்றத்தோடு உடன் முன்னேறியது பிரயாணமுறைகளின் அபிவிருத்தியேயாம். உதாரணமாக, 1700 இல் இங்கிலாந்தில் ஒரு மனிதனால் ஒரு நாளுக்கு 35 மைல் மட்டுமே இரதத்தில்

போகக்கூடும். குதிரைவண்டியில் செல்வதே அப்பொழுது முக்கியமான பிரயாண முறையாயிருந்தது. சேறுள்ள சிறிய வழிகளிலேயே இப்படி வண்டிகள் சென்றன. மாரிகாலத்தில் வண்டிச் சில்லுகள் சேற்றில் அமிழ, அபாயங்கள் பிருந்தன. பாதைகள் நன்கு மட்டமாக இராததினுல், சுமை ஏற்றிப் போதல் சங்கடமாயிற்று. இப்படிப்பட்ட பாதைகள் சிறிதளவே இருந்தன. ஆகையினுல், குதிரைமேற் பிரயாணஞ் செய்யவே மனிதர் மிகவும் விரும்பினர். பிரயாண முறைகள் இத்துணை தளர்ச்சியுற்றிருந்தனவாதலால் கார்காலத்தில் ஊர்களும் மாகாணங்களும் தனிமையாகவே இருந்தன. அன்று புகையிரத வழிகளுமில்லை ; சில கடற்பாதைகள் மட்டுமே இருந்தன. இவ்வண்ணம் பிரயாண முறைகள் இவ்வளவு தளர்ச்சியுற்றிருந்தபடியால், வர்த்தகமும் மட்டாகவே இருந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டுக்குப்பின் இவையெல்லாம் பெரும்பாலும் மாறின. இந்த மாற்றங்கள் ஆதி-புதிய யுகத்தில் மிக மெல்ல மெல்ல நிகழ்ந்த போதிலும், தொழிற்புரட்சியின் பின், மிகவும் வேகமாக நிகழத்தொடங்கின. ஐரோப்பிய நாடுகளிற் புதிய தார்பூசிய வழிகள் அமைக்கப்பட்டன. பிரித்தானியாவில் தொடங்கிய இந்த முறை, ஐரோப்பாவில் பல பாகங்களிலும் பரம்பியது. புதிய கடற்பாதைகளும் அமைக்கப்பட்டன. 19 ஆம் நூற்றுண்டில் புகையிரத வழிகளும் அமையத்தொடங்கின. இப்படிப்பட்டன தோன்றிய காரணமாக, ஐரோப்பாவின் தோற்றமே முழுவதும் மாறியது. நாடுகளின் பல பாகங்கள் ஒன்றுபட்டன. திரவியங்களையும் மனிதர்களையும் கொண்டுசெல்லல் விரைவில் ஊதியந் தரும் தொழிலாகிவிட்டது.

நிலப்பாதைகளும் நீர்மார்க்கங்களும், புகையிரதப் பாதைகளும் நாடுகளை ஒன்றுபடுத்தி ; மாகாணங்களிலும் ஊர்களிலும் தனிமையை நீக்கிவிட முயன்ற பொழுது, கப்பல் தொழிலில் தோன்றிய சடுதியான வளர்ச்சியின் காரணமாக உலகம் ஒன்றுபட்டது. முதலில், மரத்தினுல் கட்டப்பட்ட கப்பல் சிறிதாயிற்று. கப்பற் பாய்களினதும், காற்றினதும் உதவியால் அவை ஓடின. நல்ல வானிலையின்படியும் பருவங்களுக்கேற்றவாறும் கப்பல்கள் ஓடின. கப்பற் பிரயாணங்கள் மிகவும் ஆபத்துள்ளவையாயின. பெரிய தொழிற் புரட்சியின் பின், உருக்கினுலேயே கப்பல்கள் கட்டப்பட்டன. நீராவிச்சத்தி மூலமாக ஓடத் தொடங்கி·' கப்பல்கள் நல்ல வானிலையைக் காத்திருக்கவில்லை. இக்காரணத்தை முன்னிட்டுக் கப்பற்சேவை நன்கு ஒழுங்குபடுத்திய முறையான ஒரு சேவையாயிற்று. இரும்புக் கப்பல்கள் பலவற்றைக் கட்டவும் சாத்தியமாயிற்று.

நீரைக்கடக்கும் சேவையில் பல அமிசங்களில் தோன்றிய முன்னேற்றத்தின் காரணமாக கப்பற் பிரயாணம் இடையூறில்லாது நிகழ்ந்தது. கப்பல்கள் பெரிதாக இருந்தபடியாலும் அபாயங்கள் இல்லாததினுலும் கப்பற்பிரயாணம் இலாபந்தந்தது. பெரிய கப்பற் கூட்டத்தின் தோற்றமும் இதற்குச் சான்முயிற்று. 1850 இல் ஐரோப்பிய கப்பல்களின் சுமையளவு, 186,000 தொன் ஆயிற்று. இதற்கு அறுபதாண்டுகளுக்குப் பின், அதாவது 1901 இல் கப்பல்களின் சுமையளவு, 19,045,000 தொன் வரையில் ஏறியது.

இடைக்காலயுகத்திலுள்ள செய்திமாற்றவழிகளும் அக்காலத்தில் இருந்த பிரயாண முறைகளுக்கொப்பாயின. குதிரைக்காரனுடைய பிரயாண வேகத்தைக் காட்டிலும் விரைவாக ஒரு தூதையனுப்ப இயலவில்லை. பெரிய தொழிற் புரட்சியின் காரணமாக செய்திமாற்றவழிகள் பிரயாண வழிகளைக் காட்டிலும் விருத்தியடைந்தன. பிரயாணவழிகள் எவ்வளவு விருத்தியடைந்தாலும், செய்திகளைக் கொண்டுசெல்லும் வழிகள் அவற்றைக்காட்டிலும் முன்னேற்றமடைந்தன. தந்திச்சேவை, தொலைபன்னிச்சேவை, வானொலிச் சேவை (இரேடியோ சேவை), பேசும் வழிகள் (வடவழிகள்) நொடி நேர அளவு விருத்தியாகியுள. கலை-விஞ்ஞான முன்னேற்றங்களின் காரணமாக உலகத்தின் இரு கோணங்களில் இருக்கும் இருவர், இடைக் காலத்திலுள்ள சந்தையிலே நேர்முகமாகச் சந்தித்துப் பேசும் இருவரைப் போலவே பேசலாம்.

ஆதி-நவயுகத்திலும் பெரிய தொழிற்புரட்சி நிகழ்ந்த யுகத்திலும் விவசாயத்தில் பல மாற்றங்கள் உண்டாயின. சிறிதுகாலம் கமத்தொழிலின் பின் ஒரு நிலப்பாகத்தின் செழிப்பு அற்றுப்போனதினால், இடைக்கால யுகத்தில் பலன்கள் வரையறுக்கப்பட்டன. அக்காலத்தில் நிலங்கள் அருமையாக இருந்தபடியால், கமக்காரர்களுக்குத் தங்கள் நிலம் பசளை குறைந்தபொழுது புதியவொரு நிலத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இடைக்காலத்திலுள்ள கமக்காரர் இந்தச் சங்கடத்தைச் சமாளிப்பதற்கு மூன்று முறைகளை உபயோகித்தார்கள். அவையாவன, பிராணிப்பசளை இடுதல், மாற்றி மாற்றித் தானியங்களை உண்டாக்கல், நிலத்தைக்காலத்துக்குக் காலம் தரிசாகும்படி விடுதல் என்பனவாம். பிராணிப் பசளையும் குறைய, இடைக்காலத்தில் இருந்த நிலங்களை மாற்றி மாற்றிப் பயிரிடும் முறையினால் நிலத்தில் மண்ணும் அவ்வளவு செழிப்படையவில்லை. மேலும், வயல்களைத் தரிசாகும்படி விடுவதன் காரணமாக பயிரிடக்கூடிய நிலங்களுள் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கிலிருந்து ஒவ்வொரு வருடமும் பலன் கிடைக்கவில்லை.

பதினாறும் நூற்றாண்டின் பின் ஐரோப்பாவில் இந்த நிலைமை மாறிவிட்டது. தானியங்களைப் பயிரிடுவதற்குத் தேவையான பசளையை நிலத்திலிருந்து உறிஞ்சிக்கொள்ளாத புல்வகைகளும் கிழங்கு வகைகளும் உழவர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. நிலத்தின் உரச்சேமிப்பிற்கு, பயிரிட்ட புல்வகைகளை வளர்த்தலும் நிலத்தைத் தரிசாகும்படி விடுதலைப் போலவே நன்மையாயிற்று. அதனோடு, புல்வகைகளை வளர்ப்பதால் உண்டான நன்மையாதெனில், பிராணிகளுக்குக் காய்ந்த புல்லுக்குறையாமல் இருந்தது. வளர்க்கும் பிராணிகள் எண்ணில் அதிகரிக்க, பாலும் இறைச்சியும் உரமும் அதிகரித்தன. இத்துடனே விஞ்ஞான சாத்திர சம்பந்தமான பயிர்ச்செய்கை முறைகளும், ஆழமாக உழும்முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இக்காலத்தில் ஐரோப்பிய உழவர்கள் நீர்ப்பாய்ச்சு முறைகளையும் கற்றுக் கொண்டனர். இன்னும், அவர் செயற்கையான பசளை வகைகளை அமைக்கும் முறைகளையும், விவசாய சம்பந்தமான எந்திரக்கருவிகளை அமைக்கும் முறைகளையும் கற்றுக்கொண்டனர்.

இந்த மாற்றத்தோடு விவசாய சம்பந்தமான ஆக்கற்றொழிலும் மாறியது. ஊரவர்கள் பயின்ற பழக்க வழக்கங்களின்படியும் கையாண்ட ஐதிகத்தின்படியுமே இடைக்காலத்தில் கிராமிய விவசாயம் செய்யப்பட்டது. ஆனல், இக்காலத்தில் விவசாயமே பெரிதும் தனித்த தோற்றங் கொண்டுளது. சந்தைப்பொருள்களுக்கேற்ற கமத்தொழிலும் சீர்திருத்தப்பட்டது. கமத்தொழிலும் சிறப்பான தேர்ச்சியின்படியே நடந்தது. ஆனல், இக்காலத்தில் கமத்தொழிலில் ஈடுபட்டவர்களின் அளவு, எதிர்பார்த்த அளவிற் குறைந்த போதிலும் விவசாய சம்பந்தமான ஆக்கங்கள் அளவில் அதிகரித்தமை நன்ருகத் தெரிகின்றது. அளவில் அதிகரித்த இந்த விவசாய சம்பந்தமான ஆக்கமுமே சில நாடுகளில்—சிறப்பாகப் பிரித்தானியாவில்—சனங்களின் பிழைப்புக்குப் போதியதாகவில்லை. ஆகையினல், தேவையான உணவுப்பொருள்களை விலைக்கு வாங்கும் பொருட்டு வியாபாரத்தில் ஈடுபடுதல் அவர்களுக்கு அவசியமாயிற்று. இந்த அரிய மாற்றங்களின் பலனக ஐரோப்பிய மானியமுறை குலைந்து விட்டது. தொழில் முன்னேற்றம், பண்டமாற்றிற்கு உண்டாக்கல் ஊதியத்தைப் பெறுவதற்கு வியாபாரங்களில் ஈடுபடுதல், தனித்த விவசாயத்தின் முன்னேற்றம் முதலியவை இதற்கு ஏதுக்களாயின. இதனல், முதலாம் அத்தியாயத்திற் குறித்த மானிய அடிமைத் தனத்திலிருந்து ஐரோப்பிய கிராமத்தவர்கள் படிப்படி விடுதலை பெற்றனர்.

அது எவ்வாருயினும் இந்த மாற்றங்களெல்லாம் உடனே நிகழவில்லை. விவசாய முன்னேற்றம் 500 ஆண்டுகளுக்குள்ளும் தொழிற்புரட்சி நூற்றைம்பது ஆண்டுகளுக்குள்ளும் பரவின. இன்னும், இந்த மாற்றம் ஐரோப்பாவில் எல்லா நாடுகளிலும் உடனே நிகழவில்லை. இவை பிரித்தானியாவில் தோன்றி அங்கேயே நல்ல அபிவிருத்தியைப் பெற்று, பின்னர் பிரான்சு, பெல்சியம், சேர்மனி ஆகிய நாடுகளிலும், அதற்குப்பின் ஏனை நாடுகளிலும் பரவின. இதன் முகாமை செலுத்துதலும் எல்லா நாடுகளிலும் ஒரேதன்மையாக அமையவில்லை பிரித்தானியா, சேர்மனி, அமெரிக்கா, ஐக்கிய நாடு போன்ற நாடுகளிற்றன் இந்த மாற்றங்களின் முகாமை மிகவும் உரமாயிற்று. பிரெஞ்சில் இந்த முகாமை சிறிது குறைந்தது. ஏனை நாடுகளில் பிரான்சைக் காட்டிலும் குறைந்தது. இன்னும், இந்த மாற்றங்களின் வேதனையிலிருந்து நாடுகள் நீங்கவில்லை. இந்த மாற்றங்கள் நடந்த யுகத்தில் பிரித்தானியர் பட்ட துக்கங்கள் அளவற்றன. ஒழுங்கற்ற ஏதாவது மாற்றத்தினல் குழப்பங்கள் ஐயமின்றியே தோன்றும். பெரிய தொழிற்புரட்சியும் ஒழுங்கான புரட்சியன்று.

அது எப்படியாஞலும், பெரிய தொழிற்புரட்சியின் காரணமாக ஐரோப்பாவில் தீர்க்கமான பலமாற்றங்கள் உண்டாயின. தொழில் சம்பந்தமான ஆக்கப்பொருள் அளவு பெரும்பாலும் அதிகரித்ததனல், ஐரோப்பிய பொருளியல் முறையில் விவசாயமும் தொழில்களும் ஒன்ருேடொன்று இடம் மாறின. விவசாயமே மத்தியகால ஐரோப்பிய சனத்தொகையின் நூற்றுக்குத் தொண்ணூறு வீதத்தினரின் சீவிய முறையாயது. புதிய ஐரோப்பாவிலும் இந்த நிலைமை மாறியுள்ளது. ஒருதாரணமாகப் புதிய பிரித்தானிய—சனத்தொகையின் நூற்றுக்குத்

தொண்ணூறு விதச் சீவிய-வழி தொழிலிலும் வாணிபத்திலும் தங்கியுள்ளது. கைத்தொழிலில் ஈடுபடும் சனத்தொகை சேர்மனியில் இதிற் குறைவாகும்; பிராஞ்சில் இன்னும் குறைவாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலோ இதனினும் குறைவாகும். பின் குறிக்கப்பட்ட நாடுகளில் தொழில் சம்பந்தமான சனத்தொகை பிரித்தானியாவைப் போன்ற நாடுகளைக் காட்டிலும் குறைந்திருந்தாலும், இடைக்காலத்திலுள்ள ஐரோப்பாவில் இதனைக் காட்டிலும் அதிகமாகவிருந்தது. இன்னும், பலநாடுகளில் நாட்டு ஆதாயத்துக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கும் ஊதியம், அளவில் அந்தந்த நாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்ட சனத்தொகையைக் காட்டிலும் குறைவாகவிருந்தது. விவசாயத்துக்கும் தொழில்களுக்குமிடையில் உண்டான வித்தியாசத்துக்கு ஏற்கவே நகரச் சனத்தொகைக்கும் கிராமச் சனத்தொகைக்குமிடையே வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. பிரித்தானியாவில் நாகரிக சனத்தொகை கிராமிய சனத்தொகையைக் காட்டிலும் மிகப்பெரிதாகும். இங்கிலாந்திலும் வேல்சிலும் சனத்தொகையின் நூற்றுக்கு எண்பது விதத்தினர் நகரமாந்தர்களாவர். கொத்திலாந்தில் நூற்றுக்கு எழுபது விதம் நகரமாந்தர்களாவர். ஏனைய ஐரோப்பிய நாடுகளில் நாகரிக சனத்தொகை இதைக்காட்டிலும் குறைவாகும். ஆனால், சனத்தொகையின் நூற்றுக்குத் தொண்ணூறு விதமே கிராமத்தவராக இருந்த இடைக்காலத்திலும் பார்க்க, இன்று நிலைமைபெரிதும் மாறியுள்ளது.

தனித்த பல கிராமங்களும் சில நகரங்களுமடங்கிய இடைக்கால யுகத்தில் போலல்லாது, புதிய ஐரோப்பாவில் ஒவ்வொரு நாடும் வண்டிப் பாதைகள், புகையிரதப் பாதைகளாலான காலத்தினுல் ஒன்றேடொன்று தொடர்புபட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் சிக்கலான ஒரு பொருளியல் முறையிருந்தது. படைத்தல் சம்பந்தமான ஒழுங்கின் மாதிரியை முழுவதும் மாற்றிய பெரிய தொழிற் புரட்சியே இந்த நிலைமையைத் தோற்றுவித்தது. ஐரோப்பிய சனத்தொகையினருள் பொருள்களைக் கருத்தாக உண்டாக்குபவர்களும், சேவையைக் கருத்தாகச் செய்பவர்களும் சிலரே இருந்தனர். பொருள்களையுண்டாக்குதல் அவற்றைப் பிறருக்கு விற்றுப் பிறரிடமிருந்து தங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ளும் விருப்பத்தினுலேயாம். ஆகையால், உற்பத்தித் தொழில்கள் வர்த்தகத்துக்காகவேயென்க. என்றும் இலேசாகப் பொருள்களை மாற்றினுலன்றிச் சீவித்தலுமே சங்கடமாகும். ஆதலின், பணமே ஐரோப்பிய நாடுகளிடையே மாற்றத்தை இலேசாக்கியது. இடைக்கால ஐரோப்பாவில் சனங்களின் சீவியத்தில் அரிதாகவே பணம் புகுந்தது. இன்று பணத்தை உபயோகிக்காத ஒரு சமுதாயமில்லை. சீவியத்துக்காக மாற்றம் தேவையானதால் நீடித்த நிரந்தரமான, முறையான மாற்றம் சீவியத்தின் முக்கியமான அமிசமாயிற்று. தொழில் சம்பந்தமான ஐரோப்பாவில் ஆக்கமும் ஒருபெரிய பரிமாணத்தின் படியே நடந்தது. உண்டாக்கும் ஒழுங்கு, மிகப்பெரிய தொழிற்சாலைகளும் தொழிலாளர் கூட்டங்களும் அடங்கியதொன்றுகும். பெருமளவு ஆக்கத்தொழில்களுக்குத் தொகையான மூலதனமும் அவசியமாயிற்று. ஐரோப்பிய ஆக்கமுறை, மூலதனத்

திலேயே தங்கியுள்ளது. அவ்வாக்கத் தொழில் புதிய—மிகப்பெரிய—வல்லமையுள்ள ஒழுங்குகளின் கீழ்நடக்கும். மத்தியகால ஐரோப்பாவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஐரோப்பாவில் பண்டங்களையுண்டாக்கும் அளவு, மிகவும் பெருகியிருந்தமை தெரிகின்றது. இவ்வண்ணம், மேற்கு ஐரோப்பியநாடுகள் சிறப்பாகப் பிரித்தானியாவும், சேமனியும், பிரான்சும்—மிகுந்த செல்வமுற்றன. இக்காலத்திலே அவைகளுக்குக் கப்பல்களையும் துப்பாக்கிகளையும் ஏனைய போர்க் கருவிகளையும் அமைக்கச் சமயம் கிடைத்ததால், அவைகள் மேலும் மேலும் செல்வாக்குள்ளவைகளாயின. தங்களுடைய பெரும் பொருளினுல் பெரிய சனத் தொகையைத் தாவரித்துக்கொள்ள இயன்றதால் தம்மிடை மேலும் மேலும் சனத்தொகையைப் பெருக்கின.

ஐரோப்பாவில் தோன்றிய இந்தத் தொழிலாளர் நாகரிகம் ஐரோப்பாவுக்கு மட்டுமென வரையறுக்கப்படவில்லை. அது உலகத்தின் ஏனைப் பாகங்களுக்கும் பரவியது. ஆனல், அது ஒரேகாலத்திலாவது ஒரே அளவிலாவது ஒரேவேகத்திலாவது பரவவில்லை. ஐரோப்பா தன்னுடைய தனிமையைத் தகர்த்துவிட்டு, கீழைநாடுகளுக்கும் மேற்கிலுள்ள புதிய நாடுகளுக்கும் வழிகளைக் கண்டு பிடித்த மாதிரியை நாம் இதற்குமுன் படித்தோம். மேற்குத்தேசத்தில் புதிய சுதேச அரசுகளுள் தென் அமெரிக்காவையும் மத்திய அமெரிக்காவையும் சுப்பானியாவும் போத்துக்கலுமே கீழ்ப்படுத்திக் கொண்டன. பிரித்தானியாவும் பிராஞ்சும் வட அமெரிக்காவிலே கீழ் நிலையிலுள்ள இராச்சியங்களைக் கைப்பற்றிக் கொண்டன. 18 ஆம் நூற்றுண்டின் இடைப் பாகத்தில் பிரித்தானியரால் உஓசியானுவைத்தவிர வட அமெரிக்காவில் ஏனை மாகாணங்களிலிருந்து பிராஞ்சியர் துரத்தப்பட்டனர். இவ்வண்ணம் இந்தப் பெரியநிவு பிரித்தானிய சனங்களின் இருப்பிடமாகிவிட்டது. இந்தப் புதிய தேசத்துக்குப் பிரித்தானிய தொழில் முன்னேற்றத்தைப் பற்றிய அறிவு எல்லாம் ஊற்றெடுத்துப்போனதால், அங்கும் பிரித்தானிய தோற்றத்தைக் கொண்ட தொழிலாளர் நாகரிகம் காலெடுத்தது. ஆனல், தென்னமெரிக்காவின் தொழில் முன்னேற்றம் மிகவும் மெல்லவே நிகழ்ந்தது. போத்துக்கலிலும் சுப்பானியாவிலும் தொழில் முன்னேற்றத்தின் தாமதமே இதற்குக் காரணமாயிற்று. அவுத்திரேலியா எனும் பெரிய தீவிலும் 19 ஆம் நூற்றுண்டில் தோன்றிய விவசாய முன்னேற்றத்தின்பின், தொழில் முன்னேற்றத்துக்கு வழி வகுக்கப்பட்டது. வட அமெரிக்காவிற் போலவே அவுத்திரேலியாவிலும் தகர்க்கமுடியாத உறுதியான வேரூன்றிய நாகரிகம் இல்லை. அதனல் இவ்விடத்திலும் பிரித்தானிய வாசிகள் ஐரோப்பிய முன்னேற்றமுறைகளைப் பரப்பினர்.

ஆசியாவையும் ஆபிரிக்காவையும் போன்ற அயனுந்த இரேகைகளுக்குள்ளான பிரதேசங்களின் நிலைமை இதற்கு மாறுனது. 16 ஆம் நூற்றுண்டின் முதற் கூறு தொடக்கம் ஐரோப்பிய சாதியார் இந்நாடுகளின் கடற்கரைப் பக்கங்களில் வர்த்தக நிலையங்களை நிறுவத் தொடங்கினர். இக்காலம் வரை அராபியர் மூலம் பரிபாலித்த கீழ்த்திசை வர்த்தக வழிகள் பெரும்பாலும் தரைமார்க்கமாகவே

இருந்தன. கீழ்த்திசை நாடுகளுக்கு முதலிற் புகுந்த ஐரோப்பியராகிய போத்துக்கேயர் இந்நாடுகளில் வியாபார நிலையங்களை அமைத்தனர். அதுமட்டுமல்ல. அவர்கள் சில கீழ்த்திசை நாடுகளில் அரசர்களை அடக்கிப் பல பிரதேசங்களைத் தமதாக்கிக்கொண்டனர். ஐரோப்பாவில் முதற் புதியயுகத்தில் போத்துக்கலும் ஒல்லாந்தும் ஆசியாவிற்குரிய வியாபாரத்தில் தலைமை வகித்தபொழுது அடிமை வியாபாரத்துக்காகப் பிரித்தானியா மேற்கு ஆபிரிக்காக் கரையோரமாக வியாபார நிலையங்களை அமைத்துக் கொண்டது. ஆனல், இக்காலத்தில் (அதாவது—முதற் புதிய யுகத்தில்) ஐரோப்பிய சாதியாரின் செயல்களால் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பொருளியல் முறைகளில் அவ்வளவு அதிகாரம் செலுத்தல் முடியவில்லை.

ஐரோப்பாவில் பெரிய தொழிற்புரட்சியின் தொடக்கத்தோடு இந்த நிலைமை பெரிதும் மாறியது. முதலில் இந்த நாடுகளில் வியாபார நிலையங்களை நிறுவிக் கொள்ள ஊக்கம் செலுத்திய ஐரோப்பிய சாதியார் இப்பொழுது ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் பெரிய வல்லரசுகளை நிறுவிக்கொள்ள எத்தனித்தனர். 19 ஆம் நூற்றுண்டு முடிவடையும் பொழுது அவர்களால் நேராக ஆளப்படாத சீனவையும் யப்பானையும் தவிர, ஆசியாவில் ஏனையநாடுகள் எல்லாவற்றையும் தமக்குள் பிரித்துக் கொண்டனர். கீழ்வரும் அட்டவணை இந்நிலைமையைப் பற்றி நல்ல விளக்கத்தைத் தரும்.

1900 இல் ஐரோப்பிய சாதியர்களாலும் அமெரிக்க ஐக்கிய நாட்டினுலும் ஆளப்பட்ட நாடுகள் :

| சதுர அளவில் | நூற்று வீதம் |
|---|---|
| ஆபிரிக்கா | 90.4 |
| பொலினீசியா | 98.9 |
| ஆசியா | 56.5 |
| அமெரிக்கா | 27.2 |
| அவுத்திரேலியா | 100.0 |

பெரிய தொழிற்புரட்சியில் பிரித்தானியா முதலிடத்தை வகித்தமையால் வல்லரசுகளுக்குரிய தொழில்களிலும் அதுவே முதன்மையை வகித்தது. இது எப்படி நடந்ததென்று பார்ப்போம்.

தொழில் சம்பந்தமான உலகத்தில் மனிதன் இயற்கையின் எல்லைகளைக் கடந்து வேலைகளைச் செய்தல் பெரிய தொழிற்புரட்சியின் முக்கியமான அங்கமாகுமென்று நாம் முன்னர் அறிந்தோம். இரும்பை உருக்குவதில் நெருப்பெரிக்க மரக்கரி உபயோகமானல், அதற்குத் தேவையான மரந்தடி முதலியவை இயற்கையின் காலவரையறைகளுள்ளே வளர்ந்தபடியால் இரும்பு உருக்குந் தொழிலும் இயற்கையினுல் வரையறுத்ததொன்றுயது. ஆனல், இயற்கையினுல் ஏற்பட்ட அவ்வெல்லைகள், நிலக்கரி உபயோகத்தினுல் நீக்கப்பட்டன. பருத்தி

நூற்பந்துகள் செய்யும் தொழிலில் மனிதருக்குப் பதிலாக எந்திரங்கள் உபயோகிக்கப்பட்டதனால் பருத்திநூற் சீலைகளை நெசவு செய்யுந் தொழில் விரைவுபெறும். ஆனால், இயற்கையினால் ஏற்பட்ட இன்னுமொரு தடை இருந்தது. நூல்நூற்கு மியந்திரங்களுக்குப் பருத்தி அவசியமானது போலத் தொழில்களுக்குப் பண்படுத்தாப் பொருள்களும் தேவையாயின. தொழில் விருத்தியுள்ள நாடுகளில் தொகையாகப் பண்டங்களை உண்டாக்கத்தொடங்கியபொழுது, அவர்களுக்குச் சொந்தமாக இருந்த முதன்மையான பண்படுத்தாப் பொருள்களின் அளவு விரைவிற் போதாது போனது. இரண்டாவதாக, இந்த நாடுகளில் தனத்தாலும் எண்ணத்தாலும் வளர்ந்த சனத்தொகைக்குச் சுகமாக வாழும் பொருட்டுப் பண்டங்கள் மேலும் மேலும் தேவையாயின. உதாரணமாக, தொழில்களில் ஈடுபட்ட பிரித்தானிய சனத்தொகைக்குக் கோதுமை, ஆட்டிறைச்சி போன்ற உணவுப் பொருள்கள் மேலும் மேலும் தேவையாயின. இன்னும் அவர்களுக்குத் தேயிலை கோப்பி போன்ற குடிவகைகளும், உரோமம் இறப்பர் முதலிய உண்டாக்குதற்குரிய பண்படுத்தாப் பொருள்களும் தேவையாயின. கோதுமை இறைச்சி போன்ற சிலவற்றை ஐரோப்பியர் உண்டாக்கிய அளவு சனங்களுக்குப் போதியதாகவில்லை. தேயிலை இறப்பர் போன்ற ஏனைய திரவியங்களை ஐரோப்பாவிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகையினால் முதற்-புதிய யுகத்தில் ஐரோப்பியருக்குக் கீழ்த்திசை நாடுகள் சரக்குகளுக்காக முக்கியமாயிருந்தாலும் புதிய யுகத்தில் அவர்களுக்கு உணவுப்பொருள்களையும் பண்படுத்தாப் பொருள்களையும் பெற்றுக்கொள்வதற்காகவே தேவையாயின. இந்தப் பண்படுத்தாப் பொருள்களுள் சில, உட்டணவலயத்துக்கும் மிதவுட்டணவலயத்துக்கும் உரிய பிரதேசங்களில் மட்டுமே வளர்ந்தன. மேலும், தம் தொழில்களில் ஈடுபட்டுத் தனவந்தராகும்பொழுது, தங்களுக்குக் கீழ்ப்பட்ட நாடுகளிலிருந்து இந்தப்பண்படுத்தாப் பொருள்களைப் பெறுவது ஐரோப்பியருக்கு இலாபத்தைக் கொடுத்தது.

ஐரோப்பிரநாடுகள் தொழில் மூலம் முன்னேற்றமடையும்பொழுது அவைகளுக்கு உணவும் பண்படுத்தா முதற் பொருள்களின் அதிக அளவும் தேவையாயின. முதலில், கீழ்த்திசைநாடுகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் பண்படுத்தாப் பொருள்களையனுப்பின. ஏதாயினும் மானிய யுகத்தில் கிராமத்தவர்கள் ஆக்கிய திரவியங்களைத் திரட்டியோ, காட்டுப்பக்கங்களில் தாமாக விருத்தியான பொருள்களைத் திரட்டியோ கொண்டனர். ஆனால், இந்தப் பண்படுத்தாப் பொருள்கள் மேலும் மேலும் தேவைப்பட்டபடியால், இம்முறை போதவில்லை. ஆகையினால், ஐரோப்பியர்கள் இந்த நாடுகளை அடிப்படுத்திக்கொண்டு, தமக்குத் தேவையான திரவியங்களைப் பரும்படியாக வளர்க்கத்தொடங்கினர். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள தேசங்களிலேயே இது பெரிதும் நிகழ்ந்தது. இவ்வண்ணம் ஐரோப்பியர் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் கடற்கரைவியாபார நிலையங்கள் மூலமாக உட்புகுந்து தங்களின் தேவைகளுக்காகப் பரும்படி பயிர்ச் செய்கைகளைத் தொடங்கினர். இதனைத் தொடங்கியவர்கள் சிறப்பாகப்

பிரித்தானியராவர். மேற்கு ஆபிரிக்க வியாபாரநிலையங்கள் மூலம் இவர்கள் தங்களுடைய செல்வாக்கை நயிசீரியா, கானா என்பனவரையில் பரப்பினர். எகித்தும், சுடானும் தென் ஆபிரிக்காவும் இவர்களுக்குக்கீழ்ப்பட்டன. இந்தியாவில் வியாபார நிலையங்களில் தங்கி, இவர்கள் இந்திய உபகண்டத்தையும் இலங்கை, பேமா, மலாயாவைப் போன்ற பிரதேசங்களையும் கீழ்ப்படுத்திக் கொண்டனர். கனடாவும் அவுத்திரேலியாவும் நவசீலந்தும் இவர்களுக்குக் கீழ்ப்பட்ட தேசங்களாக இருந்தன. இப்படியாகவே இவர்கள் இந்தப் பெரிய பிரித்தானிய சாமிராச்சியத்தை ஆக்கிக் கொண்டனர். ஒல்லாந்து, பிராஞ்சு, சேமனி, பெல்சியம், இத்தாலி ஆகிய தேசங்களும் தங்கள் வியாபாரநிலையங்களில் நின்று புதிய தேசங்களைக் கைப்பற்றின. இன்னும் எல்லாச்சாதியாரும் இயன்ற எல்லாச் சமயங்களிலும் அடிப்படுத்திய நாடுகளின் பாதுகாப்புக்காக இயன்ற இடங்கள் எல்லாவற்றிலும் படைகளை நிறுவினர். இச்செயலிலும் பிரித்தானியாவே மிகவும் சாமர்த்தியம்காட்டியது. இவ்வண்ணம் அது பெரியதீவுகள் பலவற்றைக் கைப்படுத்தியது. இப்படியாகவே உலகத்தின் பெரும் பங்கு ஐரோப்பியர் வசமாயிற்று.

முற்கூறியவாறு, இந்தச் சாதியார் சுயதொழில்களுக்குத் தேவையான தலையாய பண்படுத்தாப் பொருள்களைச் சம்பாதித்துக் கொள்வதற்காக இந்நாடுகளில் பயிர்ச் செய்கையைத் தொடங்கினர். இந்தியாவில் தேயிலை, சணல், கோப்பி முதலிய பயிர்கள் செய்கைபண்ணப்பட்டன. இதற்கிடையில் எண்ணெய் விதைகள் கருநீலம் தோமல்வகை என்பனவற்றைச் சேர்த்துப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார்கள். மலாயாவில் கரும்பு, கோப்பி, தென்னை முதலிய பயிர்ச் செய்கை தொடங்கப்பட்டது. தகரச் சுரங்கங்கள் அறுக்கப்பட்டன. இலங்கையில் கோப்பியும், தேயிலையும், இறப்பரும், தென்னையும், மத்திய ஆபிரிக்காவில் கோப்பியும், பட்டுச்சணலும், சணலும், சீசற் சணலும், மேற்கு ஆபிரிக்காவில் கொக்கோவும் சுடானிலும் எகித்திலும் பருத்தியும் செய்யப்பட்டன. இந்தத் தோட்டங்களை விருத்தியாக்குவதற்குப் பல மூலப்பொருள்கள் தேவையாயின. பயிர்களை வளர்த்து அவற்றை விற்கும்வரை காத்திருக்க நேர்ந்தபடியால் பயிர்ச்செய்கைக்காரர்களுக்கு முதற்பணமும் தேவையாயிற்று. இன்னும், இந்தத் தோட்டங்களில் வேலை செய்வதற்குத் தொழிலாளர் கூட்டமும் உண்டாக்கிய திரவியங்களைத் துறைமுகத்துக்குக் கொண்டுபோகும் முறைகளும் பிரயாண வழிகளும் தேவையாயின.

இக்காலத்தில் இந்நாடுகள் மானிய முறையையே அனுட்டித்தன. சாதியின் ஆதாரவாளர்களும் அவர்களுடைய நிருவாகக் கூட்டங்களும் ஒழிய, சிலரே செல்வர்களாக இருந்தனர். ஆனால், அவர்கள் அக்காலத்து மானிய சமுதாய முறைக்கு இத்தொழில்கள் முரண்பாடாக இருந்தபடியால் அவற்றில் ஈடுபட எத்தனிக்கவில்லை. ஆகையினால், தொடக்கத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வேலை செய்தவர்கள் ஐரோப்பியரேயாவர்.

அடிப்பட்ட நாடுகளில் தொழிலாளர் கூட்டத்தைத் தேடும் வேலைமிகவும் சங்கடமாயிற்று. மானியமுறைப்படி இந்தத் தேசங்களில் மனிதரின் நுகர்வுக்காக வன்றிச் செல்வர்களாகும் பொருட்டு எவரும் தொழிற்பட எத்தனிக்கவில்லை. ஆனபடியால், இந்தத்தேசங்களில் சனங்கள் தோட்டங்களில் வேலைக்குச் செல்ல விரும்பவில்லை. ஐரோப்பிய பயிர்ச்செய்கைக்காரர் இந்தச் சிக்கலைப் பலவாருகத் தீர்த்துக்கொண்டனர். இலங்கையைப் போன்ற சில நாடுகளுக்குப் புறத்திலிருந்து, தொழிலாளர் வருவிக்கப்பட்டனர். ஆபிரிக்காப் பிரதேசங்களில் வேறு உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டு தோட்டவேலைகளைச் செய்யாதவர்கள், இறைகளைச் செலுத்த ஏற்பாடு செய்ததனுல் ஏனையோர் பிரபுநிலைக்குரிய வழிகளாலும் நாட்டு அதிகாரஞ் சிலவற்றினுலும் தோட்டவேலைகளில் ஈடுபட்டனர். மேலும், இவர்கள் இயன்றபொழுதெல்லாம், மானியநிலவரி முறையை மாற்ற எத்தனித்தனர். இவர்கள் அடிப்பட்ட நாட்டரசுகளைக் கொண்டு வண்டிப் பாதைகளையும் புகையிரதப் பாதைகளையும் ஆக்கிக் கொண்டனர். இந்த வழிகள் பயிர்ச்செய்கைக்காரர்களுக்கு மட்டுமன்றி அந்நாட்டு அரசாட்சியின் அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ளவும் உபயோகமாயின.

இக் காரணங்களால் இந்நாடுகளில் பல மாற்றங்களுண்டாயின. பண்படுத்தாப் பொருள்களை வளர்ப்பதில் ஈடுபட்டவர்கள் வர்த்தகத்துக்காகவே பயிர்களை வளர்த்தனர். அங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டுச் சம்பளம் செலுத்தப்பட்டது. இவ்வண்ணமாக அந்நாடுகளில் பொருளியல் முறைகளுக்கு மேலும் மேலும் பணம் சேர்ந்தது. பயிர்ச்செய்கைக்கு அகப்படாத பொருளியல் முறையின் ஏனைப் பாகங்களும் வியாபாரத்துக்காகவே ஆக்கும் தொழில்களைத் தொடங்கின. ஆனபடியால் இந்நாடுகளில் படிப்படி புதிய பொருளியல் முறை தோன்றியது. வண்டிப் பாதைகளை அமைத்தல், புகையிரத வழிகளைத் திறத்தல், பண்டமாற்றுக்காக விளைவித்தல் முதலிய புதிய வேலைகளினுல் புதிய உத்தியோகங்களும் தோன்றின. வியாபார நகரங்கள் தோன்றுவதற்கு இடமும் கிடைத்தது. இந்தியாவைப் போன்றவொரு நாட்டில் ஓரளவுக்குத் தொழில் சம்பந்தமான முன்னேற்றமும் தோன்றியது. இந்தப்புதிய தொழில்கள், போக்குவரத்துப் பிரயாணமாகிய வழிகளால், மானியமுறை சிதைந்துபோக வழி தோன்றியது. வியாபாரத்துக்காகவே பயிர் வளர்க்கப்பட்டபடியால் இவற்றை வாங்கிய நாடுகளால் இவற்றிற்குப் பதிலாக விற்கவேண்டிய பொருள்களும் தேவைப்பட்டன. இதற்காகச் சொந்தத்தொழில் மூலம் உண்டாக்கிய பொருள்கள் விற்கப்பட்டன.

இப்படியாக ஐரோப்பாவில் தொழில் நாகரிகம் ஏனைய உலகத்தில் இருந்த மானியநாகரிகத்தைக் கண்டதுண்டமாக்க முயன்றது. இது பல முறைகளில் நடந்தது. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள நாடுகள் வியாபாரங்களில் ஈடுபட்டனவேயொழிய, தொழில் சம்பந்தமாக இல்லை. இதனுல் கருதுவது, இந நாடுகளில் பொருளியல் முறையானது, மாற்றத்துக்குரிய தன்மைக்கு வந்ததேயாம். ஆனுல், இந்நாடுகளில் உண்டாக்கும் முறை விவசாயத்திலேயே தங்கி

இருந்தது. தொழில்களிற் போலல்லாது விவசாயத்தில் இயற்கை பல வரையறைகளை உண்டாக்கும். ஆகையால், தொழில் சம்பந்தமான நாடுகளிற்போலல்லாது, முழுமையும் அடிப்பட்ட இராச்சியங்களிலும் பாதி அடிப்பட்ட இராச்சியங்களிலும் ஆக்கல்முறை அளவிலும் பெறுமதியிலும் அத்துணை அதிகரிக்கவில்லை. ஆகையால், இந்த நாடுகள் ஒரு பொருளாதார மாற்றத்தின் இன்னல்களை அனுபவித்துக்கொண்டு ஏழ்மையிலேயே இருந்தன. ஐரோப்பா ஒரு தொழிற்புரட்சியின் துன்பத்தை அனுபவித்துக்கொண்டு செல்வமுற்றது. ஆசியாவும் ஆபிரிக்காவும் வர்த்தகப்புரட்சியின் இன்னலை அனுபவித்துக்கொண்டு ஏழ்மையுற்றன. ஐரோப்பியரின் பிரபுத்துவத்திஞல் முழு உலகமே புதிய மானிய முறைக்கு மாறியதை இங்கு காணலாம். ஐரோப்பாவிற் போல ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகளுக்குப் பல காலங்களில் பலவிதமான முறைகளில் இந்தப் புரட்சி புகுந்தது. இந்தப் புதிய நாகரிகம் சில நாடுகளில் சனங்களின் சீவியத்தையும் தொட்டது. ஆனல், இன்று இந்த நாகரிகம் முழு உலகத்தையுமே தயைதாட்சணியமின்றி விழுங்கிவிட்டது.

புதிய உலகத்தைப்பற்றி அவதானித்தால் அது மத்தியகால உலகத்தைக் காட்டிலும் பல அமிசங்களால் வேறுபட்டிருக்கின்றதைக் காணலாம். மத்திய கால உலகத்தில் தளர்ச்சியுற்ற ஆபிரிக்கப் பிரதேசங்களைத்தவிர ஏனை நாடுகளிடையே முதன்மையான ஒரே தன்மை இருந்தது. புதிய உலகம் பொருளியல் அபிவிருத்தி மூலம் முதன்மையடைந்த தற்குச் சமானமில்லை. சில நாடுகள் தொழில் மூலம் மிகவும் பெருகிச் செல்வமுற்றன ; செல்வாக்குமுற்றன. தொழில் மூலம் அப்படி விருத்தியடையாத நாடுகள் ஏழைமையுற்றன. வலிகுன்றி;. மத்தியகால உலகத்தில் இருந்த தனிமை இன்று மறைந்துவிட்டது. எல்லா நாடுகளிலும் பொருளியல்முறை மாற்றத்துக்குரிய ஒரு முறையாகிவிட்டது. இதுவரை தொழில் சம்பந்தமாகாத போதிலும் உலகத்தில் பெருந்தொகையான நாடுகளும் இன்று தொழில் சம்பந்தப்பட முயலுகின்றன. ஆனல், தொழிற்றன்மை பல நாடுகளுக்குப் பலவிதமாக எய்தியிருந்தபடியாலும், சில வேளைகளில் ஒரு நாட்டிலேயே ஒவ்வொரு பகுதிக்கும் வெவ்வேறு விதமாக அதிகாரஞ் செலுத்துவதாலும் புதிய பொருளியல் முறை கலக்கமுற்றதாகவிருக்கும். முழு உலகமும் மாற்றத்துக்குரிய பொருளியல் முறையில் அகப்பட்டிருந்தாலும் மானியமுறையின் உறுப்புக்கள் சில நாடுகளில் பொருளியல் முறைகளில் இன்னுமிருக்கின்றன. இது பெரும்பாலும் உண்மையாவது ஆசியாவிற்ருன். ஓரளவுக்குத் தொழில் சம்பந்தமான சில ஐரோப்பிய நாடுகளிலுமே இந்தப் புதிய நாகரிகம் விவசாயத்தின்மீது சிறிதளவு அதிகாரம் செலுத்தியது. இந்த நாடுகளில் சில முயற்சிகள் அற்பமாகவே நடாத்தப்பட்டன. மேலும், தேசிய அபிவிருத்தியைப் பாதுகாத்தல் போன்ற புதிய வேலையில் ஈடுபட்ட இராச்சியங்கள் மனிதனின் பொருளியற் சீவியத்தில் முயற்சி செலுத்தின. ஆகையால், புதிய பொருளியல்முறை கலக்கமுற்றிருந்தது. அந்தப் பொருளியல் முறையைத் தெரிந்து கொள்ள முயல்வோம்.

## 2 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

| | | |
|---|---|---|
| 1. மறுமலர்ச்சி | ... | Rennaissance |
| 2. பருவத்துக்குரிய | ... | Seasonal |
| 3. திரிந்து விற்பவன் | ... | Peddler |
| 4. சிறக்கும் இயல்பு | ... | Specialization |
| 5. கைக்கருவிகள் | ... | Tools |
| 6. அளவு (பரிமாணம்) | ... | Scale |
| 7. கலையறிவின் முன்னேற்றம் | ... | Improvements in Technical knowledge |
| 8. தாரிட்டவழி | ... | Macadamised Road |
| 9. செய்தி மாற்ற வழிகள் | ... | Means of communication |
| 10. பெரிய பரிமாணம் | ... | Large-scale |

## 3 ஆம் அத்தியாயம்

# முதலாண்மையும், சமுதாய வாதமும், பேணல் அரசும்

சென்ற ஐந்நூறு ஆண்டுகளுக்குள் முழு உலகத்திலும் தோன்றிய பொருளியல் வாழ்க்கையின் மாற்றங்களை நாம் இரண்டாம் அத்தியாயத்திற் கண்டோம். பண்டங்களையுண்டாக்கும் அளவு, பெருகியமாதிரியையும் ஆக்கத்தொழில்கள் பெருகிய வண்ணத்தையும் பிரயாணமார்க்கங்களும் செய்தி செல்லும் வழிகளும் அதிகரித்த முறையையும், அடிப்படுத்தியாளும் இராச்சிய முறை பரவியதையும், ஐரோப்பாவில் தொடங்கிய மாற்றங்கள் ஏனை உலகத்தவருக்குச்செலுத்திய அதிகார ஆஞ்ஞைகளையும் ஆங்குப் படித்தோம். இவை யெல்லாவற்றினுலும் முழு உலகமும் பொருளியல் முறையில் ஐக்கியமடைந்திருக்கின்றது. ஆகையினுல், முழு உலகத்தவரின் பொருளாதார வாழ்க்கையில் பொதுவான அங்கங்களும் காணப்படுகின்றன. சென்ற ஐந்நூறு ஆண்டுகளுக்குள், சிறப்பாக, கடந்த இருநூறு ஆண்டுகளுக்குள், ஆக்கத்தொழில் முறையில் நிகழ்ந்த பெரிய புரட்சியே முற்கூறிய மாற்றங்கள் எல்லாவற்றிற்கும் முக்கியமாகிவிட்டது. இந்தப் புதிய ஆக்கத்தொழில் முறைக்குச் சமூக வித்தகர்களால் "**முதலாண்மை**" என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆனுல், முதலாண்மை என்ற சொல்லை வழங்கும் பொழுது, நாம் உடன் வைத்துக் கணிக்கவேண்டிய சில விடயங்களுமுண்டு. ஆறு ஏழு நூற்ருண்டுகளுக்கு முன்னமே, முதலாண்மை முறையின் தொடக்கங்கள் ஐரோப்பாவில் காணப்பெற்றமை இவற்றுளொன்று. ஆனுல், இந்த முறை 17 ஆம் 18 ஆம் 19 ஆம் நூற்ருண்டுகளிலேயே பெருகி வந்தது. மேலும், இது சில நாடுகளில் 19 ஆம் நூற்ருண்டில் இயலும் முறையின் முக்கியமான அங்கமாயிற்று. முதலாண்மை முறையே, எக்காலத்திலாயினும் நிகழ்ந்த ஒரே இயன் முறை ஆகாதது இதனுல் தெளிவாகும். ஆனுல், எந்தக் காலவரையறைக்குள் முக்கியமான அங்கமாக ஒரு முறை இருந்ததோ, அம்முறையின் பெயரால் அந்தக்காலப்பகுதியைக் குறிப்பிடுதல் நேரிதாகும்.

மேலும், உலகம் முழுவதும் இந்த முறை முதன்மை பெருததைக் கவனித்தல் வேண்டும். உண்மையாக, முதலாண்மை இன்றும் ஆளுமுறையில் இல்லாத நாடுகளைப் புதிய உலகத்திலும் காணலாம். ஆனுல், 19 ஆம் நூற்ருண்டில் பிரித்தானியா உட்பட மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்க ஐக்கிய நாடுமாகிய தேசங்களில் இது முக்கிய ஆக்க முறையாக இருந்தது. 20 ஆம் நூற்ருண்டு ஆனதும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அடிப்பட்ட

இராச்சியங்களிலும், அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட நாடுகளிலும் இது பரவியது. 20 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சோவியத்திரசியாவும், அண்மையில் சீனுவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், பொதுவுடைமைவாதத்தைத் தழுவினும், உலகத்தில் ஏனைய நாடுகள் முதலாண்மை முறையின் ஒழுங்காகவோ, அம்முறையின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டோ இருந்தன.

மேலும், ஒரு நாட்டுப் பொருளியல் முறையின் எல்லாப் பகுதிகளும் ஒரே அளவுக்கு முதலாண்மை முறையின்கீழ் நிர்வாகமாவதில்லை. ஏனைப் பொருள்கள் எல்லாவற்றைக் காட்டிலும் விவசாயத்தின் மேலும் சிறு வியாபாரத்தின் மேலும், இந்த முறை சிறிதளவே அதிகாரம் செலுத்தும். வெவ்வேறு நாடுகளின், பொருளியல் முறைகளில் முதலாண்மை முறையின் அதிகாரம் ஒரே அளவினதாகவில்லை. அது எப்படியென்ருலும், 1917 ஆம் ஆண்டில் தோன்றிய இரசிய புரட்சிக்குச் சிறிது முன், முழு உலகமும் முதலாண்மையின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்பட்டது. 1917 ஆம் ஆண்டுக்குப் பின்னும் உலகத்தில் மிகவும் முக்கியமான நாடுகளில் முதலாண்மையே பிரதான அம்சமாயிருந்தது. இப்பொழுதெனின், இந்த முறை, கடுமையான அச்சுறுத்துகைக்கு இலக்காகியிருக்கின்றது. ஆனுல், இன்னும் செல்வாக்குடனிருக்கும் முதலாண்மையானது பல காலம் நிலைக்கும் என்பது அறிவுடையோர் கொள்கை.

இதற்கு முதலாண்மை முறை என்ற பெயர் வழங்கினுலும், இது உண்மையாகவே மாருமல் இருந்த ஒரு முறையன்று. முதலாண்மை முறையின் சில முக்கியமான அங்கங்கள் முன்போலவே இருந்தாலும், இதிற் பல மாறுபாடுகளும் தோன்றின. உதாரணமாக, 19 ஆம் நூற்ருண்டின் முதற் பகுதியிலிருந்த முதலாண்மையை, 20 ஆம் நூற்ருண்டின் முதலாண்மையோடு நிகராக்க முடியாது. 1850 ஆம் ஆண்டில் சில நாடுகளிலிருந்த முதலாண்மைப் பொருளியல் முறையைப் பற்றி உண்மையான அறிவு இல்லை. இக்காரணத்திஞல் முதலாண்மையைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் இருவரிடத்திலுமே வெவ்வேருன இரண்டு தத்துவங்கள் மனதில் அமையக்கூடும். எப்படியாயினும், சில காரணங்களைக் கொண்டு முதலாண்மை முறையைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். முன் கூறியவாறு இம்முறை இன்றுவரை அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிரித்தானியாவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வேறுஞ்சில நாடுகளிலும் சிறப்புற்றுளது. நம் நாட்டின் பொருளாதார முறையும் இதனுல் ஒரு செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. முதலாண்மை முக்கியமாயவிடத்தில் அது பொருளியல் சீவியத்தின்மேல் மட்டுமன்றி, சீவியத்தின் வேறு பல அமிசங்களின்மேலும் அதிகாரம் செலுத்தியுளது. சிந்தனை வழிகள், எண்ணங்கள், சமுதாயப் பழக்கவழக்கங்கள், அரசியல் முறைகள் ஆகிய இவையெல்லாம் முதலாண்மையினுல் ஓராதிக்கத்தைப் பெற்றிருக்கின்றன.

முதலாண்மையின் முக்கியமான அங்கமாவது, ஆக்கன்முறை, என்று முன் கூறப்பட்டது. நாம் முதலாண்மை முறையைப் பற்றி நன்ருகத் தெரிந்து கொள்ள இயலுவதன் காரணம் அம்முறையினுல் தகர்க்கப்பட்ட புராதன முத

லாண்மை உற்பத்தி முறையை ஞாபகப்படுத்துவதற்கேயாம். புராதன-முத லாண்மை யுகத்தில், கமக்காரனும் கைத்தொழிற் சிற்பியும் சுயபோசனைக்காக, அல்லது சீவியத்தை நடாத்துதற்காகவேயன்றி வேறொன்றிற்கும் முயலவில்லை. மேல்வகுப்பினர் ஓய்வு தரும் இடாம்பீக வாழ்க்கையின் பொருட்டு இறைகள், பண்டங்கள், சேவைகள், முதலிய எல்லாவற்றையுமே தொழில்புரிவோரிட மிருந்து பெற்றனர். அவர்கள் சீவனத்துக்காகப் பிரயாசைப்பட்டு வேலை புரித லைக் கண்டித்தனர். நல்ல ஓய்வான சீவியத்தைக் கழிப்பதுவே அவர்கள் கருத் தாகிவிட்டது. புராதன முதலாளித்துவமுள்ள வியாபாரியுடைய வாழ்க்கையி லும் உயர்ந்த வாழ்க்கை நடாத்துவது மட்டுமே கருத்தாயது என்று **மாட்பூ வெபர்** கூறியுள்ளார்.

புராதன முதலாண்மை யுகத்தில் அலுவல்களும் மிகச் சுணங்கியே நடந்தன. இயன்ற சமயங்களில் மனிதர் வேலைகளை நிறுத்த விரைந்தனர். ஆதலால், அக் காலத்தி விடுதலை நாட்கள் அதிகரித்தன. பொருளாதார சீவியமும் வழமை யான முறையின்படியே ஒழுங்காயது. தொழில் முறையும் பரம்பரையாக உரிமை வழியின்படி சொந்தமாயது. ஒருவன் ஒரு கூட்டத்தில் அங்கத்தினனாயி யின், அவன் எப்பொழுது கூட்டத்தை அபாயத்தில் அகப்படாவண்ணம் தொழிற்பட எத்தனிப்பான். இப்பரோபகாரத்தை நிறைவேற்றுவதற்கு நல்ல வழியானது, கூட்டத்தினுல் ஒப்புக்கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்களை அப் படியே கைக் கொள்வதாகும். ஆகையால், புதுமையும் தொழிற்பாடும் மக்கட் சம்மதம் பெறவில்லை. வருசொம்பாட்டு என்பார் கூறியபடி, பூர்வ-முதலாண் மைச் சீவியம், அமைதியும் ஓய்வுமுள்ள ஒன்றாயிற்று.

பூர்வ-முதலாண்மை யுகத்தில் சனத்தொகையின் பெரும்பங்கு சிறப்பாக ஊா வர்களின் சுயதேவைகளை நிறைவேற்றியபடியால், அவர்களாற் பிறரிடமிருந்து எடுக்க வேண்டிய பண்டங்கள் அற்பமாயின. ஆகையால், கைத்தொழிலிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டவர்களின் தொகை மிகவும் குறைந்தது. இன்னும், தொழிற் சிற்பிகள் பலர் ஊரவர்களினதும் நகர மாந்தர்களினதும் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வேலைகளைச் செய்தனர். எனவே, புராதன-முதலாண் மையுகத்தில் சனங்கள் சுய வளர்ச்சி பெற்றதையும் அவர்களின் ஆக்கத் தொழில்கள் நுகர்ச்சியின் பொருட்டு நிகழ்ந்ததையும் கூறுதல் கூடும்.

முதலாண்மை முறையின் திட்டங்கள் இதனினும் வேறனவை. பண்டங்களும் உற்பத்திப் பொருள்களும் உண்டாக்குபவர்களுடைய நுகர்ச்சிப் பொருட்டாக வன்றி, பண்டமாற்றத்துக்காக அமைதமை முதலாண்மை முறையின் சிறப் பான அங்கமெனக் கொள்ளப்படும். முதலாண்மை முக்கியமாகும் ஒரு சமுதா யத்தில், ஒவ்வொருவரும் பண்டமாற்றுக்காகவே பண்டங்களையும் உற்பத்திப் பொருள்களையும் ஆக்குவர். பெருவேளாண்மை செய்யும் கமக்காரராகிய உற்பத்தியாளர் காமப்பொருள்களைத் தொகையாக உண்டாக்குவது, அவற்றை விற்றுப் பணம் பெறும் பொருட்டே ஆகும். இன்றேல், அக்கமக்காரன் தன்

உற்பத்திப்பொருளை விற்று, அப்பணத்திற்குத் தனக்கு வேண்டிய பொருள்களை விலைகொடுத்து வாங்குவான். எனவே, முதலாண்மை முறையின் கீழ் உற்பத்தியாளர் எவரேனும், கமக்காரரோ தொழிலாளரோ ஆசிரியரோ ஆகட்டும்-விற்கும் பொருட்டே உற்பத்தித் தொழில்களைச் செய்வர்.

வியாபாரத்துக்காக அல்லது பண்டமாற்றுக்காகச் செய்யும் உற்பத்தித் தொழில், விசேட தேர்ச்சிக்கிணங்க, அவற்றை ஆக்க வழி கோலுகின்றது. தன்னுகர்ச்சியின் பொருட்டு உற்பத்தி வேலைகளில் ஈடுபட்ட புராதன முதலாண்மைக் கமக்காரன், தனக்கு வேண்டிய எல்லாவற்றையும் தானே ஆக்கிக் கொண்டான். அவன் உணவுப் பொருள் மட்டுமன்றி உடை முதலியனவற்றையும் வீட்டுத்தளவாடங்களையும் ஆக்கிக்கொண்டான். முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் ஒருவனுக்குத் தன் உற்பத்திப் பொருள்களை விற்க இயலுமாதலால், அவன் மிகப்பெரிய இலாபத்தைக் கொடுக்கும் பொருள்களையே உண்டாக்குவான். இவ்வண்ணம், ஒரு கமக்காரன் உணவுப் பொருளையும், வேறொருவன் வீட்டுத்தளவாடங்களையும் ஆக்கவேண்டும். உண்மையாக, முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் விசேட தேர்ச்சியோடியைந்த உற்பத்தித் தொழில், சுருக்கமாகவே நிகழும். கமக்காரனல் உணவும், தையற்காரனல் உடைகளும், தச்சனல் வீடுகளும் அமைக்கப்படுமென்று நாம் எண்ணக்கூடும். எனினும், புதிய முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில், ஒருவனல் ஒரு துணியேனும் தனியே ஆக்கமுடியாது. சீலைகளை நெய்யும் வேலை வெவ்வேறான தொழில் வரிசைக்குப் பங்கிடப்பட்டிருக்கும். சீலைகளை நெய்வதில் ஈடுபட்டவர்களுள் சிலர், நூல் நூற்றலைமட்டும் செய்வர். வேறு சிலர், நெசவு செய்வர். சிலர் சீலைகளைச் சாயம் தோய்ப்பர்.

நெய்தலைப் போன்ற, ஒரே தொழிலை ஒருவனல், செய்யமுடியாது. புதிய இயந்திரக் கருவிகளுள்ள தொழிற்சாலையில் ஒருவன் செய்வது, அதை இயக்கும் பொருட்டுத் தேவையான எரிபொருள்களைக் கொடுப்பது மட்டுமே. வேறொருவன் இயந்திரம் நன்றாக இயங்குகின்றதா எனப் பார்த்துக் கொள்ளுவான். முதலாண்மை முறை விளங்கும் ஒரு நாட்டில் பொதுவாக, கமக்காரர், நூல் நூற்பவர், நெய்வோர், வீடுகட்டுவோர், அவ்வாறு வேலை செய்தலைக் காணமுடியாது. அவ்வாறின்றி, எதாவதொரு பொருளை முற்றாக ஆக்கும் வேலையில், ஒவ்வொருவரும் ஈடுபடுவது மிகவும் சிறியபாகமே. ஒருவன் ஒரு பொருளைச் சில வேலைகளிலேயே தனியாகச் செய்வான். இவ்வண்ணம், சிறப்பான அனுபவத்தோடியைந்த பொருளுற்பத்தி பெரும்பாலும் உண்டாகும். இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் பொருளியல் முறை முதலாண்மை முறையைப் போல் முன்னேறுததினல் இச் சிறப்பான அனுபவத்தோடியைந்த உற்பத்தி, எவ்வளவு சாத்தியமாகும் என அறிவது கடினமாகும். இலங்கையில் ஒரு சப்பாத்துக் கட்டி வேலை செய்வதையும் அரசாங்க சப்பாத்துத் தொழிற்சாலையில் சப்பாத்து ஆக்கப்படும் முறையையும் ஒப்பிட்டு நோக்கின், இரு முறைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் அறியலாம் சிறப்பான அனுபவத்தோடியைந்த உற்பத்தி முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில், இது முக்கியமான அங்கமாக வளர்ந்தாலும், இப்பொழுது சமூகவுடைமைச் சமுதாயத்திலும், இருத்தலை அறிதல் வேண்டும்.

சிறப்பான அனுபவத்தோடியைந்த ஆக்கத்தை எவ்வளவு தீர்க்கமாகக் கொண்டுசெல்லினும் பொருளியல்முறையை ஒழுங்காக வைத்துக்கொள்ளும் ஒரு கிரமம், அல்லது ஒரு வழி இருத்தல் வேண்டும். அப்படியாயின், முதலாண்மைச் சமுதாயத்தில், மனிதர் சிறப்பான ஆற்றலோடு செய்யும் ஆக்க வேலை அவதானமின்றிச் செய்யவியலாது. சிறப்பான அறிவுக்கேற்ற பலவித காரியங்களில் ஈடுபடும் மனிதர், பொது நன்மை விரும்பியே அப்படிச் செய்யவேண்டும். பண்டங்களையும் பயன்படு சேவையையும் செய்பவர் பொருள்களை ஆக்குவது. நாட்டின் சாதாரண பொருளியல் ஒழுங்குக்கு, அல்லது சட்டத்துக்கு ஏற்றபடியேயாம். புதிய முதலாண்மையையுடைய ஒரு சமுதாயத்தில், விலைமுறை வழியாகவே இதனை எடுத்துக் காட்டலாம். ஆகையினால், விலைமுறையும் முதலாண்மையின் முக்கிய அங்கமாகும். விலை முறையுடனும் பண்டமாற்றுடனும் வேறு பொருளியல் முறைகளும் இருக்கக் கூடும். உதாரணமாக, சமுதாயவாதத்தையுடைய ஒரு முறையில் இவை இருக்கக் கூடும். ஆனால், மானிய முறைக் காலத்தில் வளர்ந்த விலைமுறை இப்பொழுது இல்லை. பண்டமாற்று அற்பமாகவே இருந்தது. முதலாண்மையென்றால், இன்றியமையாததாகவே விலைமுறையோடும் பண்டமாற்றோடும் ஒருங்கமைந்துள தொன்றாகும்.

பண்டமாற்றும் விலை முதலை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இதன்படி, ஒருவன் செய்யும் எதாவதொரு வேலை, அதன் பெறுமானத்தால் மதிக்கப்படுகிறது. பண்டங்களிலும் ஆக்கச் சேவைகளிலும் ஒருவனுக்கு உரிமையிருந்தால், அவன் அவையெல்லாவற்றையும் பணத்தில் விலை மதிப்பான். அதுபோல் ஒருவன் தச்சனானால் அவனுடைய ஆக்கவேலை மதிக்கப்படுவது, அவனால் உண்டாக்கப்பட்ட பொருள்களுக்குரிய விலைப்படியேயாம். ஒருவன் தனக்குச் சொந்தமாயிருக்கும் ஒரு வீட்டைக் கூலிக்குக் கொடுத்து, அதனுற் சீவிப்பானானால், அவனுக்குக் கிடைக்கும் வீட்டுக்கூலி அளவின்படியே அவனுக்குரித்தாய பண்டங்களும் ஆக்கச் சேவைகளும் விலை மதிக்கப்படும். ஒரு தச்சனுக்குத் தன் நாற்காலிகளுக்குக் கிடைக்கும் பணவளவு, முன்னையிலும் அதிகரித்தால், ஆக்க வேலை மூலம் அவன் செய்த பொருளின் மதிப்புப் பெருகும். தன் வீட்டுக்கூலியிலேயே சீவிப்பவனுக்கு அதனாற் கிடைக்கும் ஆதாயம் ஏற்ற இறக்கமாக இருந்தால், அவனுக்குக் கிடைக்கும் பண்டங்களும் பயன்படு சேவைகளும் ஏற்றத்தாழ்வுடையனவாகும். இவ்வாறு ; பலரின் ஆக்கப்பொருள்களும் பண்டங்களும் சேவைகளும் கணித்துக்கொள்ள உரிமையுண்டு. இவற்றை மதிக்கும் விலை முறையின் காரணமாக, இவை பொதுவான ஓர் ஒழுங்கிற்குள் அடங்கும். பண்டமாற்றுக்குரிய பொருளியல் முறையில் சிலரின் தேவையை வேறு சிலரின் நுகர்வுடன் பொருத்துவது விலை முறையே ஆகும்.

விலைமுறையை ஏற்றுக் கொள்வது மட்டுமன்றி, அதனை இன்றியமையாததாகவும் இட்டமுடையதாகவும் முதலாண்மையானது கருதுகின்றது. சமுதாயத்தில் பண்டங்களினதும் சேவைகளினதும் ஆதாயத்துக்கு, அல்லது சுதேச

ஆதாயத்துக்குப் பலர் சேர்க்கும் பங்குகளை, அல்லது ஆக்கங்களை விலை மதிக்கும் முறை மிகவும் நல்ல முறையாக முதலாண்மை ஏற்றுக்கொண்டது. விலை மதிக்கும் முறை, சமுதாயத்தின் தேவைகளை மனிதருக்குக் காட்டுதலோடு அந்தத் தேவைகளை நிறைவேற்றுபவர்களுக்கு ஆதாவும் அளிக்கின்றது. இதனை முதலாண்மை ஏற்றுக்கொள்ளுகின்றது.

எந்தச் சமுதாயத்தில் முதலாண்மை முக்கியமானதோ, அந்தச் சமுதாய வாழ்க்கையில் விலைமுறை தொடர்ந்திருக்கும். அதில், மனிதரும் தம் பெறுமானப்படியே கருதப்படுவார்கள். விலைமுறை தங்கள் ஆக்கப்பொருள்களின் பரிமாற்றத்தை இலேசாக்கும் பண்டமாற்று உபகரணமாகத் தோன்றினும், காலம் செல்லச்செல்ல மனிதருக்கு ஆக்கத்தின் நுகர்ச்சி அயர்ந்து போகும். விலைமுறையின் காரணமாகச் சமுதாய ஏற்றத்தாழ்வை மதிக்கும் புதிய அளவுகோலும் தோன்றியுளது. மானியயுகத்திலே பிறப்பு, அல்லது பட்டப்பெயரின் படி தாரதரம் இருந்தது. ஆனால், முதலாண்மையையுடைய ஒரு சமுதாயத்தில் ஆதாயம், அல்லது செலவின்படியே ஏற்றத்தாழ்வு தீர்மானிக்கப்படும். சமுதாய ஏற்றத்தாழ்வோடு சம்பந்தப்பட்ட அதிகாரங்களும் உள.

முதலாண்மையின் இன்னுமொரு முக்கியமான அங்கமானது விவசாயமாகும். சமுதாயத்தில் போகப் பொருள்களையும், சமுதாய முன்னேற்றத் தொழில்களையும் தொழிலாட்களையும் தொண்டர் கூட்டங்களையும் கொண்டு தனி ஊதியத்துக்காக வேலையில் ஈடுபடுவதை வற்புறுத்துவது. தனி விவசாயமென வழங்கும். பொருளாதார சீவியம், சம்பிரதாய முறைப்படி நடைமுறையாயது ஆக்க வேலையை நடாத்துதற் பொருட்டு மட்டுமே. இதனால், புராதன முதலாண்மை முறையைக் காட்டிலும் இந்தப் புதிய முறை, பெரும்பாலும் வேறுபடுவது காணப்படும். முதலாண்மையின் வேதன ஒழுங்கு, புராதன-முதலாண்மை முறைக்கு முற்றும் வேறுபாடுடையது. புராதன முதலாண்மை யுகத்து மனிதன் சஞ்சலமில்லாத அமைதியான சீவியத்தைக் கழிக்க, முதலாண்மை யுகத்து மனிதன் பொருள் வேட்கையினால் வற்புறுத்தப்படுகிறான். புராதன-முதலாண்மை முறைக்கு முன்னிருந்த மனிதன் தற்போசனைக்கு மட்டும் பாடுபட, முதலாண்மையின்கீழ், தன்பொருளை அதிகரித்துக்கொள்வதிற் சிந்தனையே மனிதர் மனத்தில் முதலுதித்தது. முதலாண்மையுள்ள எல்லாக் காரியங்களிலும் இதுவே முக்கியமானது. பொருளை அதிகரிப்பதற்காகவே பொருளியற் காரியங்கள் நடைபெறும். முதலாண்மையின் பொருள் வேட்கைக்கு ஒரு வரையறையுமில்லை. பொருளாதாரத்தை முன்னிட்டுப் பொருள் வேட்கை நிகழ்த்துவது, பொருளினால் மேன்மேலும் சேவைகளையும் பண்டங்களையும் பெற்றுக்கொள்ளவேயாம். இது மட்டுமல்லாமல், கூடும் பொருளினால் வளர்ந்து வரும் ஆற்றலையும் காட்டலியலும்.

பொருள் வேட்கையானது ஒரு சன சமுதாயத்தில் தலைமையிடம் பெறச் சில காரணங்கள் உள. மேலும் மேலும் பொருளீட்டல் வேட்கை மனிதரிடைத் தோன்றக்கூடியது. இது நிகழ்வது சமுதாயத்தினால் பொருள் சேகரித்தல்

வரையறுக்கப்படாவிட்டாலேயாம். முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் இப்படிப்பட்ட ஒரு வரையறையில்லை. தனி உடைமை ஏற்பாட்டைச் சமுதாயம் ஏற்றுக்கொள்வதினல் இந்தநிலை தோன்றும். தனத்தை அதிகரித்துக் கொள்ளுதல் முதலான்மையின் மேலான கருத்தாயின், முதலாண்மை ஒரு சமுதாயத்தில் அரசு புரிகின்றதானல் தனத்தைச் சேகரிக்க உரிய சிந்தனைகள் அச்சமுதாயம் முழுவதுமே தலையெடுத்துப் பரந்து நிற்கும். ஆகையால், அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் தனத்தைச் சேகரிக்க ஏதுவாகும் பொருள்களே வளர்ச்சிக் காரணங்களாக எண்ணப்படுகின்றன. கலையறிவின் முன்னேற்றம் ஆக்கத்துக்குரிய செலவைக் குறைத்தல் ஆகும். வியாபாரப் பரப்பு முதலியவை அபிவிருத்திக்கு ஏற்றவையென எண்ணப்படும். இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் மனிதன் உரியமுறைப்படி சிந்திக்கக் கற்றுக்கொள்ளுவான். அதாவது, இப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தில் வியாபாரி, பொருளியலறிவோடும் அவதானத்தோடும் காரியங்களைச் செய்யவும் தவறின்றி விலைமதிக்கவும் அறிவான். தொழிற்சாலைகளின் பரிபாலனமும், ஆக்கும் ஏற்பாடும் விலை கொடுத்து வாங்குவதும் விற்பதுமாகிய எல்லாம், கவனத்தோடு செய்யும் வழிகளை வியாபாரி தேடுவான். கடைசியாக, வியாபாரியின் அளவு கோலாலேயே ஏனையோரும் அளக்கப்படுகின்றனர். ஏதாவதொரு முயற்சியைப் பலனுடையதாக்கிக் கொள்ள எத்தனிக்கும் வியாபாரி, தொழிலாளர்களிடத்திலுள்ள தயவைப் பேணுவதால், ஒரு வளர்ச்சியின் காரணமாகச் சுய நன்மையைக் கைவிடமாட்டான். அவன் பயனற்ற தொழிலாளர்களை உத்தியோகத்தினின்று நீக்கிவிடுவான். அவனுடைய ஊதியம் குறைந்தால் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைப்பான். இலாபம் இல்லாவிடின், தன் தொழிற்சாலையைப் பூட்டி விடுவான்.

பொருளபிவிருத்தியைக் கருத்தாகக் கொண்ட முதலாண்மைச் சீவியம், இடைவிடாத சுறுசுறுப்புத் தன்மையுடையதாகும். தொழிலாளராகட்டும் வியாபாரிகளாகட்டும், அவர்களுடைய சீவியத்தில் ஓய்வுக்கு இடமேயில்லை. ஆக்கும் அளவை, முறையாகக் குறைந்த விலையிலும் விரைவிலும் செய்தலே வேலை கொள்பவருடைய கருத்தாகும். தன்னையும் தன் தொழிலாளர்களையும் அவர் துரிதப்படுத்துவார். இத்தன்மை முழுச் சமுதாயத்திலும் பரந்து கிடக்கும். ஆதலின், மூதலாண்மை தனித்த ஊதியங்களையும் கருத்துக்களையும் முன்னிட்ட, ஓயாச் சுறுசுறுப்புத் தன்மையுடைய ஒரு முறையாகும்.

இக்காரணங்களின்படி, முதலாண்மைச் சமுதாயத்தில் மனிதரிடையே சில புதிய அபிப்பிராயங்களும் சிந்தனைகளும் இருக்கும். முதலாவதாக அவர்களிடையே தனியாண்மையின் மேல் உறுதியான நம்பிக்கையிருக்கும். ஒரு மனிதனுக்கு இட்டமான ஒரு முயற்சியில் ஈடுபட அவனுக்குச் சுயாதீனம் இருத்தல் வேண்டும். இங்கு, சாதி, சமயம், அல்லது மொழியின்படி வரையறைகளை அமைக்கக்கூடாது. இதற்காக, ஒரு மனிதனைப் பாதுகாப்புக் கொடுத்துப் பயணத்தில் அல்லது குடியிருப்பில் அமர்த்தல் வேண்டும். இவை, முதலாண்மை காரணமாகத் தோன்றும் நம்பிக்கைகளாம். ஆயின், முதலாண்மையை வெறுப்பவனுக்குமே, இவை உவப்பாகும்.

மனிதன் சகலவிதமான பொருளியல் அடக்கங்களிலிருந்தும் நீங்கவே, மிகவும் உயர்ந்த பொருளாக்கமும் மேலான சமுதாய அபிவிருத்தியும் தோன்றுமென முதலாண்மை நம்புகின்றது. "தற்போக்குக் கொள்கை" அல்லது இராச்சியத் தடைவாதத்தினாற்றான் அடிவாறாக விளக்கப்படும். நாட்டுப் பரிபாலனத்தையும் தொழில்களின் ஏற்பாடுகளையும் இணைக்காத வித்தியாசமான இருவேறு தன்மைகள் என்றும், பொருளியல் அலுவல் சில சட்டங்களை நிரூபிப்பதனாலன்றி அரசியலில் அடங்கா என்றும், முதலாண்மையானது, தற்போக்குக் கொள்கை வாதத்தின் (தலையிடாமை) சார்பாக உரையாடுகின்றது. ஒரு நியாயவாதி என்றும் தனக்கு எது நன்மையாகுமென்பதை நன்றாக அறிவான் என்று கூறலாம். மேலும், மனிதன் பாலனத்திலிருந்தும் நீங்கியவுடன், தன் நன்மையையே தேடிக் கொள்வான் என்றும் கூறலாம். இயற்கையாகவே, மனிதன் சுயநலத்தை விரும்புபவன் என்றும், ஊதியத்தைப் பெறுவதில் சமயம் இருந்தால் மட்டும் வேலை செய்யும் தொல்லையில் ஈடுபடுவானென்றும் இதனால் ஒப்புக்கொள்ளலாம்.

அப்படியெனில், இவனுக்குச் சில நம்பிக்கைகளுள்ள சூழ்நிலையில் மட்டுமே தனியுடைமைகளாக, ஊதியங்களைச் சேகரிக்க இடமுண்டு. ஆனபடியால், அது செலவுடைமை முறையாகும். அதைச் செயற்படுத்த வேண்டுமானால் போட்டியுள்ள பொருளியல் முறையும் தேவையாகும். முதலாண்மை என்னும்போது, போட்டியிடும் ஒரு பொருளியல் முறை இது என்று எண்ணலாம். இது பூரணமான போட்டியாக வேண்டியதில்லை. உண்மையாக, இது அப்படிப்பட்ட பூரண போட்டியாதலும் முடியாது. மக்கள் தங்கள் பண்டங்களையும், சேவைகளை, அல்லது உடைமைகளையும் விற்கப் போட்டியிடுவர். மக்கள் கூட்டங்களினதும் தாபனங்களினதும் பலவிதமான வியாபார ஏற்பாடுகளின் மூலம் போட்டியிடுவர். ஒரு தொழிலின் வியாபார ஏற்பாடுகளிடையே போட்டிகள் தோன்றக் கூடும். ஓருதாரணமாக, வெவ்வேறு வகையில் சிகரெட்டு உற்பத்தியாளர் தத்தமிடைபோட்டியிடுவதைக் காட்டலாம். அவ்வண்ணமே தொழில்களுக்குள்ளும் போட்டிகள் தோற்றக் கூடும். ஒரு தொழிலோடு போட்டியிட, வேறு சில தொழில்களில் வியாபார ஏற்பாடுகள் முழுமையுமே இணங்கக் கூடும். தங்கள் அடிப்படையான தேவைகளை நிறைவேற்றிய பின்னர், மக்களின் கையில் மிஞ்சியிருக்கும் பணத்தைப் பறித்துக்கொள்ளும்பொருட்டு இவ்வண்ணம் வானொலி எந்திரங்களை உண்டாக்குபவர்களிடையும், குளிரேற்றி எந்திரங்களை ஆக்குபவர்களிடையும் போட்டிகள் தோன்றக்கூடும். ஆகையால், போட்டியும் முதலாண்மையின் முக்கியமான அங்கமாகும். போட்டி சுறுசுறுப்புத் தன்மைக்கு வழிகாட்டுவதால், அது இட்டமானதென்று முதலாண்மை ஏற்றுக்கொள்கின்றது. முதலாண்மை முறையில் ஒரு வியாபாரியுடைய அலுவல்கள் பயனுள்ளனவெனப் போற்றப்படுவது அவனுக்கு இலாபம் கிடைத்தால் மட்டுமேயாம். இலாபங்களைப் பெறவேண்டுமானால், அவன் போட்டியுடன் கருமம் ஆற்ற வேண்டும். உண்டாக்கற்செலவு முதலியவற்றைக் குறைக்க வேண்டும். ஆகையால், பயிற்சியுள்ளோருக்கு மட்டும் போட்டியில் வெற்றிபெற முடியுமென்று ஒரு நம்பிக்கை உண்டு.

முதலாண்மையின்படி, முன்னேற்றத்தின் குறிக்கோளானது ஆக்கத்தின் பெருக்கமென்று நாம் முன்னமே அறிந்து கொண்டோம். மனிதன் பொருளைச் சேர்க்க முயல்வது அதைப் பெற்றுத் தன்னிடம் வைத்துக்கொள்ளத் தன்னகத்தில் இருக்கும் பெரிய வேட்கையினாலேயாம். தனி உரிமைகளை வைத்துக்கொள்ள இடமளிப்பதாலேயே முதலாண்மையானது மனிதனுக்குத் சொந்தச்செல்வத்தைச் சேகரிக்க வழி அமைக்கின்றது. முதலாண்மைச் சமுதாயத்தில் "தன் உடைமைக்குள்ள உரிமை" என்பதற்குள் பல பொருள்கள் அடங்குகின்றன. இதனால், தனி உரிமைக்கு நீதியின் படி அதிகாரம் கிடைக்கும். இந்தத்தனி உரிமையின் முக்கியமான அங்கம் தன் நுகர்ச்சிக்கு நேரே உபயோகித்துக் கொள்ள முடியாத மிகப் பெரிய அளவான உடைமைகளைக் கொண்டு நடாத்த ஒருவனுக்கு இடம் கிடைத்தலேயாகும். ஆகையால், முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் மனிதனுடைய தனி உடைமைகளுக்கு வரையறையே இல்லை. தான் பெறக்கூடிய அளவான சொத்துக்களை ஒரு மனிதன் சொந்தமாக்கிக் கொள்ளலாம்.

தனியுரிமையானது உரிமையாளனுக்குப் பூரணமான பரிபாலன அதிகாரத்தையும் கொடுக்கும். அரசாங்கம் இயற்றுகின்ற பாரதூரமான வரையறுப்புக்களைத்தவிர, உரிமையாளருக்குத் தம் சொந்த உடைமைகளில் பூரணமான பரிபாலன அதிகாரமுண்டு. இந்தப்பரிபாலன அதிகாரம் மூன்று வழிகளில் விளக்கிக் காட்டப்படும். உரிமையாளன் இந்த உடைமைகளைச் சுய நுகர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவன் தன்னுடைய அதிகாரத்தை வேறொருவனுக்கு ஒப்படைக்கலாம். கடைசியாக, தன்னை, அல்லது தான் அமைத்த ஆளைத் தவிர, ஏனையோர் சுயஉடைமைகளின் பாலனத்தில் தலையிட்டால் தடுக்கலாம்.

முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் இறந்தவர் ஒருவரின் உடைமைகள் அவருடைய உறவினருக்கு உரிமையாகும்படி அரசாங்கம் உத்தரவிடும். இன்னும், உரிமையாளனுக்குச்சுய உடைமைகளை எவருக்காவது சீதனமாகக் கொடுக்கவோ, செலுத்தவோ அதிகார முண்டு. ஈறாக, உடைமைகளுக்கு உரிமை இருந்தால், அவ்வுரிமையை விற்கவும் இயலும்.

முதலாண்மை பழக்கமாக, முன்னர் உரிமையான நிலங்கள், பிராணிகள், கட்டடங்கள், அடிமைகள், மனிதமுயற்சியினால் உண்டாகும் பலன்கள் ஆகியவை வரையறுக்கப்பட்டன. ஆனால், முதலாண்மையின் அபிவிருத்திக்குப்பின், உடைமைகளும் பலவிதமான தோற்றங்களைப் பெற்றன. இவற்றைப் பரும்படியாகப்பிரிக்கலாம். முதலாவதாக, மக்களுக்குச் சொந்தமான உடைமைகளுள. அதாவது, மக்கள் மூலம் பரிபாலிக்கப்படும் உடைமைகள்; இரண்டாவதாக, கூட்டங்களுக்குச் சொந்தமான உடைமைகள் உள. இவற்றின் பூரணமான அதிகாரம் பலர் கையிற் பிரித்துக்கொடுக்கப்பட்டிருக்கும். இதற்கு ஒருதாரணம்; வியாபார சங்கமொன்றின் பங்குடையோர் மூலம், நிகழும் பாலனமே. மூன்றாவதாக, குடியாட்சியுடைய நாடுகளுக்கே சிறப்பான பொதுவுடைமைகள் உள.

உடைமைகளை இன்னும் ஒருவிதமாகப் பிரிக்கலாம். (அ) அசைவில் உடைமைகள் : அதாவது, நிலங்களும் கட்டடங்களும் ; (ஆ) ஒருவனுக்குச் சொந்தமான அசைவுள்ள உடைமைகள் ; அவையாவன : நிலங்களையும் கட்டங்களையும் தவிர்ந்த, புத்தகங்கள் போன்ற அசையும் உடைமைகள். (இ) பரிசிக்கப்படாத உடைமைகள் : அவையாவன ; தொழில்களின் பங்குகள் முதலியன.

கடைசியாக, முதலாண்மையின் இன்னுமொரு முக்கியமான அங்கம் உண்டு. அது, அப்படிப்பட்ட சமுதாயத்தில், மனிதனை வாழும் ஒருவனுக்குக் கொடுக்கும். முதலாண்மையுடைய ஒருசமுதாயத்தில்," சகலவிதமான அன்னபானங்களும் உடைகளும் வேறு பண்டங்களும் சேவைகளும் அமைப்பது அனுபவிப்பவர்களுடைய வேட்கைகளைத்தணிக்கும் பொருட்டேயாம். உண்டாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பண்டங்களுள்ளும், சேவைகளுள்ளும் தனக்கு வேண்டிய பலனுக்கு ஏற்ப ஊதியம் கிடைப்பதனால், அனுபவிப்பவர்கள் பண்டங்களைக் கேட்கும் அளவுக்கு அவை உண்டாக்கப்படும். இக்காரணத்தின்படி, முதலாண்மையுடைய ஒருசமுதாயத்தில் அனுபவிப்பவன் அரசுபுரிவதாகச் சொல்லப்படுகின்றது.

நாம் முன்னர்க் குறித்த அங்கங்கள் பண்டமாற்றின் பொருட்டு, உண்டாக்குதல், சிறப்பான அறிவோடு ஆக்குதல், விலைமுறை, வேட்கைத் தன்மை, தனிவிவசாயம், தனிஉடைமை முறை, அனுபவிப்பவனுடைய சிறப்பான பொருள் நிலை முதலாண்மையின் முக்கியமான அங்கங்களானலும், அந்த அங்கங்கள், அல்லது அந்த ஏற்பாடுகள், அல்லது முதலாண்மை முறை மாறுது நிகழுகின்றனவென யோசிக்கக்கூடாது. ஏனையபொருளியல் முறைகளைப் போலவே முதலாண்மையும் உறுதியாக நிகழ்வதில்லை. இதன்பயனுக இன்று காணப்படும் முதலாண்மை எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்னிருந்த முதலாண்மையைக் காட்டிலும் பெரும்பாலும் மாறியிருக்கின்றது.

முதலாண்மை வளர, பொருளியல் மூலம் முக்கியமான பல சமுதாய மாற்றங்களும் வளர்த்தன. முதலாண்மை தலையெடுத்த நாடுகளில் தொழில் முன்னேற்றம் விரைவில் பரந்ததினுல் பெரிய தொழிலாளர் கூட்டமும் தோன்றிற்று. புதிய பிரித்தானியாவில் தொழிலாளர் வகுப்பானது முழுச்சனத்தொகையின் நூற்றுக்கு நாற்பத்தைந்து விதமென எண்ண இடமுண்டு. ஆனல், 1600 ஆம் ஆண்டில் இந்தத்தொகை மிகவும் குறைந்தது. முதலாண்மையுடைய நாடுகளில் தொழிலாளர் நகரங்களில் ஒன்று சேரத் தொடங்கினர். ஆகையால், அவர்கள் நாகரிகரானுர்கள். மேலும், அவர்கள் தொழில் பற்றிய சட்டங்களின்கீழ் ஒழுங்குபட்டனர். ஒரு கூட்டமாக அவர்களுடைய அதிகாரம் வளர்ந்ததுவே இதன் பயனுயிற்று. ஆகையால், சட்டமற்றிருந்த காலத்தைக்காட்டிலும் பெரியவொரு மூலதனத்தை அவர்கள் பெறவியன்றது. அமெரிக்க ஐக்கியநாடும் பிரித்தானியாவும் போன்ற செல்வமுள்ள நாடுகளில் தொழிலாளர் போதிய சம்பளத்தைப் பெறுகின்றபடியால் அவர்கள், வறிய நாடுகளில் தொழிலாளர்களைக் காட்

டிலும், வேறுன சமுதாய இலக்கணங்களைக் கொண்டனர். அவர்களுட் சிலருக் குத்தனி உடைமைகள் இருந்தன. முதலாண்மையுடைய நாடுகளில் தொழிலா ளர் வகுப்பு எண்ணில் பெருகியபொழுது, மத்திய வகுப்பும் அதிகரித்தது. உல கம் முழுவதுமே, இப்பொழுது மத்தியவகுப்பின் சனத்தொகை அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. ஆகையால், சிலர் கருதிய வண்ணம் முதலாண்மையுடைய உலகம் செல்வர் தொழிலாளர் என்னும் முறையில் பிரிக்கப்படவில்லை.

முதலாண்மையின் வெவ்வேறுன ஏற்பாடுகள் காலஞ் செல்லச் செல்லப் பல விதமான பலன்களைக் கொடுத்தன. உதாரணமாக, தனிவிவசாயம் பெரும்பாலும் மாறியுளது. தொழில்கள் முன்னேற்றமடைய, தொழிற்சாலைகளும் பெருமளவு ஆக்கப்பலன்களைப் பெற்று, பெரிய தாபனங்களாக மாறின. ஆகையால், தொழில் பற்றிய ஆக்கத்தின் பலபாகங்களில் தனிவிவசாயத்துக்கு இடமிருக்கின்றது. இது பெரும்பாலும் முன்னர் ஆக்கம் உடையவர்களுக்கே சாத்தியமாகும். இரண் டாவதாக, ஆக்கப்பாடுடையவர்களிடையில் போட்டிகள் உண்டாகும் நேரங்களி லேயே தனிவிவசாயம் பெரும்பாலும் நிகழுகின்றது. ஆக்குபவர்கள் சேர்ந்து போட்டியைக் குறைப்பதற்கு முதலாண்மையின் மலர்ச்சி ஏதுவாயிருக்கும். இந்த அபிவிருத்திகளின் பலனுக, தனி விவசாயத்துக்கு இருக்கும் வசதி குறைந்துள்ளது.

தனியுடைமை நிருவாகமும் பெரும்பாலும் மாறியிருக்கின்றது. மானிய சமு தாயத்தைக் காட்டிலும், முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்திற் பலருக்கு உடைமைகள் சொந்தமாயிருந்தாலும், அவற்றைப் பெரும்பாலும் சிலரே உரிமை பாராட்டுவர். அதனுலுஞ் சில தொகையினர் மூலமே அது நிருவகிக்கப்படும். முதலாண்மையின் இவ்வேறுபாடுகளின் காரணமாக இம் முறை பிரச்சினைக்கு இடமுகியுளது. முதலாண்மையின் தளர்ச்சிகளை விரித்துரைக்கும் பொழுது. அதன் வேறு சில அபிவிருத்திகளைப்பற்றிப் பேசுவோம். அதற்குமுன், முத லாண்மையின் சத்தியைப்பற்றியும் பலன்களைப்பற்றியும் சில கூறுவோம்.

முதலாண்மைக்குமுன், உலகத்தில் பல நாடுகளில் இருந்த சனத்தொகை அற் பமானது. முதலாண்மைக்குப்பின் பஞ்சத்திலுைம் நோயிலுைம் மடியாமல் தப் பிப் பலர் சீவித்ததால் சனத்தொகையும் பெருகியது. 1750 உக்கும் 1900 உக்குப் இடைப்பட்ட காலத்தில், உலகத்திலே சனத்தொகை 100 ஆகப் பெருகிய தெனக் கணிக்கப்பட்டுளது.

உலகத்தில் சனத்தொகை மிகவும் அதிகரித்ததாயினும், முதலாண்மை அதி காரத்தால் மக்கள் உயர்ந்த நிலைமையோடு வாழ்ந்தனர். முதலாண்மையின் கார ணமாகப் பொருளும் அதன் ஆக்கமும் பெரும்பாலும் பெருகுவதே காரண மாயது. முதலாண்மையானது கோடிக்கணக்கான சுறுசுறுப்புள்ள பெண்களை யும் ஆண்களையும் தோற்றுவித்து, அவர்களை உலகம் முழுவதும் பரப்பிப் பாழான நிலங்களைச் சீர்ப்படுத்தி, ஆக்கப் பொருள்களை பெருக்கச்செய்துளது. அதனுல், சனத்தொகையின் அதிகரிப்பைக் காட்டிலும், அவர் தம் நுகர்ச்சிக்காக

எடுத்த பொருள்களும் தொழில்களும் அளவில் பெருகின, என்று காட்டிவிவிதர் கூறுகின்றார். மேற்கு ஐரோப்பிய நாடுகளினதும் அமெரிக்க ஐக்கிய நாட்டினதும் சார்பாகக் கூறுவதாயின், இப்பேச்சு உண்மையாகும். உலகத்தில் ஏனைப் பிரதேசங்களில் பொருளியல் நிலைமை விருத்தியாகாதிருந்தாலும் சனத்தொகை அதிகரித்து, பஞ்சத்தால் உண்டாகும் வியாதி குறைந்துளது. மேலும், முதலாண்மையின் உலகறிந்த வெற்றியுமுண்டு. பிரயாண வழிகள்—செய்தியனுப்பும் வழிகளின் முன்னேற்றத்தினால் உலகம் ஒன்று சேர்ந்திருக்கின்றது. முதலாண்மையின் காரணமாக உலகம் முழுவதுமே ஆக்கிய பொருள்களின் அளவு பெரும்பாலும் பெருகியிருக்கின்றது. அதனுடன், பலபுதிய பண்டங்களும் சேவைகளும் தோன்றியிருக்கின்றன. விருத்தியடைந்த சுகாதாரத்துக்கும் கல்விக்கும் இன்பமுறைகளுக்கும் பொருளியல் அடிப்படையை முதலாண்மையானது சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றது. ஆகையால், உலக அளவு கோலினால் அளவிடின் முதலாண்மை யாவற்றிலும் மிகவும் மேலானது.

மனிதனுடைய முன்னேற்றத்தைப் பற்றிய உத்தரவாதம் அவனைச் சார்ந்திருக்கும்பொழுது அவனுடைய சுதந்திரமும் பெரும்பாலும் மேலோங்கும். தனி விவசாயத்தின் முன் கொண்டுவரும் சுய ஆற்றலுடையவர்க்கு முன்னேற வேறு முறையைக் காட்டிலும் முதலாண்மை முறையில் அதிக வசதி உண்டு. இலாபங்களைப் பெறுவதில் தம் அபிப்பிராயத்தையே முன்கொண்டு செய்யும் முதலாண்மையின் காரணமாக, தொழில் வற்புறுத்துகையும் உண்டு என்று அறிதல் வேண்டும். முதலாண்மையினால் தோன்றிய நற்பலன்கள் இவையானாலும், புதிய முதலாண்மைக்கெதிராகக் கண்டனங்கள் நாடோறும் அதிகரிக்கின்றன. அவரவர் சுயஊதியத்தையே கருதிப் பாடுபட்டு, அதனால் வெற்றிபெறும் பொழுது, அதனாலேயே முழுச் சமுதாயத்தின் அபிவிருத்தியும் தோன்றுமென்று விளங்குகின்றது. இந்தத் தருக்கத்துக்கு மாறாக, இரண்டு கண்டனங்கள் உள. முதலாவது, சுயநலத்தைப் பேணல் அவரவர் நன்மைக்கேயாயினும், விவசாயத்தை வரையறுத்தல் போன்ற முதலாண்மையின் அபிவிருத்திகள் காரணமாகப் பலருக்கு அப்படிவரையறுத்தல் சங்கடமாயிற்றென்று காட்டப்பட்டது. இரண்டாவது, ஒருவன் தனது அபிவிருத்தியையும் இலாபத்தையும் சம்பாதித்துக்கொள்வதினால், முழுச் சமுதாய முன்னேற்றத்துக்கு அழிவு ஏற்படுவது காட்டப்பட்டது. இதற்கு உதாரணமாக, அபினி விற்பதனால் வியாபார சம்பந்தமான செல்வத்தை ஈட்ட இயலுமானாலும் அதனால் சமுதாய வளர்ச்சியானது தோன்றுவதில்லையென்பது காட்டப்பட்டுள்ளது.

தனியுடைமை ஏற்பாடு பிரயோசனமுள்ளதென்று முதலாண்மை சொல்லுகின்றது. தனியுடைமை ஏற்பாடானது வேலைகளைச் செய்ய அதிகாரந் தருகிறதென்றும், குடும்பத்தின் தொடர்பு போன்ற நற்பண்புக்கு அடிப்படையென்றும் சொல்லப்படுகிறது. இந்த நியாயம் உண்மையென்றால், முதலாண்மையையுடைய ஒரு சமுதாயத்தில் எல்லோருக்கும் தனியுடைமைகள் இல்லாதபடியால், தனியுடைமைகள் இல்லாதவர்களால் குடும்பத்தின் தொடர்பு போன்ற நற்பண்புகள்

4—C P 1397 (7/67)

காப்பாற்றப்படாவென்று வாதிக்கலாம். முதலாண்மைச் சமுதாயத்தில் தனியுடைமைகள் பாடுபட்டுப் பெற்றவையன்று. பெரும்பாலும், அவை உரிமையினால் கிடைக்கும் பொருள்களே. பொருள் வேட்கைக்கு ஆதரவையளிக்கும் தனியுடைமை ஏற்பாட்டைத் தவிர, ஆக்குதலுக்கு ஆதரவைக் கொடுக்கும் ஏனைப் பொருள்களும் உள்ளனவென்று இவர்கள் காட்டியுளர். ஈறாக, முதலாண்மைச் சமுதாயத்தில் உடைமைகளை உரிமையாளர் யாதுஞ் செய்யாமல் அவைகளிலிருந்து பெரும் ஆதாயத்தைப் பெறுவார்கள் என்றும் காட்டப்பட்டது. வேலையைச் செய்யாமல், உரிமைகளிலிருந்து ஆதாயம் பெற, உடைமையின்றி ஊக்கத்தோடு வேலை செய்கிறவர்களுக்கு உத்தியோகமும் கிடைக்கும். மேலும், முழுப் பொருளியல் ஒழுங்கையே பரிபாலித்துச் சனத்தொகையின் பெரும் பகுதியினருக்குச் சீவனோபாயத்தின் மேல் அதிகாரஞ் செலுத்த வல்லமையுண்டு. சமுதாயத்தின் மேல் யாதொரு உத்தரவாதமுமில்லாத சிலருக்கு, அதில் பெரிய அதிகாரம் செலுத்துதல் குடியரசுக்குமே முரணாகுமென்றும், வேலைகளைச் செய்யாமல் பெரிய ஆதாயங்களைப் பெற்றுக்கொள்ளல் அநியாயமென்றும் அவர்கள் கூறுவர்.

முதலாண்மையின்கீழ் ஆக்கும் அளவு அதிகரித்ததனால், தனமும் பெருகியது. ஆனால், முதலாண்மைச் சமுதாயத்தில் முன் ஒருக்காலும் இருக்காத கொடுமையான ஏழைமையும் பரந்திருக்கின்றது. தனி உடைமைகளைச் சேகரிக்கச் சிலருக்கு அதிகாரம் இருப்பதால் இப்படி நேர்கின்றது. சிலர் பெரு நுகர்ச்சிக்குரிய ஒரு சீவியத்தைக் கழிப்பார்கள். ஆகையால், முதலாண்மையையுடைய ஒரு சமுதாயத்தில், நிகரிலாத் தன்மை பெரும்பாலும் நிகழ்கின்றது. இந்தச் சமமின்மை வறியவர் செல்வர் என்னும் இரு பகுதியாருக்குமே உவக்காதது. இது ஏழைகளுக்கிடையில் பிணிநோய்கள், குறைந்த வளர்ச்சி சோம்பல் முதலியவற்றைப் பரப்பி அவர்களுட் சுயமரியாதையையும் நேர்மையையும் குறைக்கின்றது. இது செல்வர்களுக்குள்ளே சோம்பலையும் கடவுளின்மை வாதத்தையும் பரப்புகின்றது. நிகரிலா ஆக்கத்தையுடைய முதலாண்மை வழங்கும் ஒரு நாட்டில், ஆக்கும் தொழில்கள் எல்லோருடைய தேவைகளையும் நிறைவேற்றும் பொருட்டன்றி, விலைமுறையின் கீழ் நிகரிலாத் தேவைகளின்படி ஒழுங்காகும் பொருட்டே. ஆகையால், முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் விலைமுறைகள் ஒரு நியாயத்தைக் காண்பதில்லை.

முதலாண்மைக்குரிய பொருளியல் முறைகள் காலத்திற்கேற்ற சிக்கல்களுக்கு இரையாகும். அக்காலங்களில் தோன்றும் வியாபாரத் தளர்ச்சியின் காரணமாக, உத்தியோகங்களும் குறைவாக விருக்கும். உத்தியோகங்களின் குறைவு காரணமாக ஏற்படும். ஏழைமையைக் காட்டிலும், உத்தியோகங்கள் மேலும் இல்லாமல் போகுமென்ற அச்சத்தினால் உண்டாகும் நிலையற்ற தன்மையானது, மிகப் பெரியதாகும். முதலாண்மையுள்ள இடத்தில் பெரும்பாலும் அதிகாரத்தைச் செலுத்துபவர்கள் முதலாளிகளேயாம். வறுமையுற்ற பெரிய கூட்டத்தினது நன்மையைச் சம்பாதித்தலைக் காட்டிலும், பல முதலாண்மையுடைய அரசாட்சி

கள், செல்வமுற்ற சிலரின் நன்மையைப் பாதுகாத்துக் கொள்கின்றன. ஆகையால், அரசியல் மூலம் குடியாட்சி நிகழ்ந்தாலும்—பொருளியல் நிகரிலாத் தன்மையின் காரணமாக, குடியாட்சிக்குரிய சமநிலையிலும் அதிகாரமானது குறைவுபடும்.

மேற்கு நாடுகளில் தோன்றிய முதலாண்மை, அந்தந்த நாடுகளில் சனங்களை உலகம் முழுவதும் கீழ் நிலையிலுள்ள நாடுகளைப் பற்றிக் கொள்ள வற்புறுத்தினது மன்றி, அந்நாடுகளிற் சனங்களை வறியமக்களாகவும் தூண்டிற்று. இவ்வண்ணம், ஆபிரிக்க-ஆசிய நாடுகளை, இலாபந்தேட வந்த மேலைநாட்டுச் சனங்கள் தம்மை இரையாக்கிய பல துன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு, அந்நாடுகளைத் தனத்திலும் பெலத்திலும் தளர்ந்திய மாதிரியை, நாம் முன்னர்க் கண்டோம்.

இலாபங்களைத் தேடும் முதலாளிமார் காரணமாக, ஆக்கும் அளவினை வரையறுக்கும் நிலைக்கு, முதலாண்மையானது புகுந்திருக்கிறதென்று கூறலாம். இந்த இலாபங்களைத் தேடுங் காரணமாக ஆக்கத்தின் சில பகுதிகளில் சில சமயங்களில் உற்பத்தித் தொழில்களில் பெரிய தடைகள் நேர்ந்தன. தேவை தோன்றும் பொழுது மட்டுமே இலாபங்களைப் பெற முடியுமாதலால், பண்டங்கள் மிகுதியாகும் வரை முதலாண்மையின் ஆக்க அலுவல்களைக் கொண்டு நடாத்த முடியாது. அப்படியெனின், முதலாண்மையானது, நீக்கக்கூடிய வறுமையை நீக்கவில்லை ; அது நிலையில் தன்மைக்கும், நிகரில் தன்மைக்கும் வழியைக் காட்டுகின்றது ; அது சோம்பேறியான ஒரு முதலாளி வகுப்பைத் தோற்றுவிக்கின்றது : அதனுல், ஆக்கத் தொழில்கள் வரையறுக்கப்பட்டுள. அது, சமுதாய பரிபாலனத்தையுமே யாவருக்கும் சொந்தமில்லாத சிலரின் கைக்குட் புகுத்துகின்றது. கடைசியாகக் கூறின், முதலாண்மையும் வேறொரு நல்ல திட்டத்துக்கு இடங்கொடுக்க வேண்டியவொன்றேயாகும். முதலாண்மை இன்று தளர்வுற்றிருப்பதால், அக்காலம் இப்பொழுதே வந்துளதென்று, சிறப்பாக நாட்சுக் கொள்கையினர் வாதிக்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு முதலாண்மைக் கொள்கையினர் விடைகூறுகின்றனர். முதலாண்மையுண்டாதற்கு முன்னமே சமமின்மை இருந்தது. மானிய சமுதாயத்தில் பொருளியற் சமமின்மை மட்டுமல்ல, அரசியற்-சமுதாய சமமின்மைகளும் இருந்தன. முதலாண்மையினுற் பொருளியற் சமமின்மை மேலும் அதிகரித்தாலும் அது அரசியற் சமுதாயச் சமமின்மையை அகற்றவோ தணிக்கவோ, மிகவும் உதவியது. மானிய சமுதாயத்தில் பஞ்சம், நோயச்சம் காரணமாக இருந்த பெரிய நிலையற்ற தன்மையானது, வளர்ந்து வந்த ஆக்க அளவால் தணிக்கப்பட்டதென வாதிக்கலாம். சமுதாயத்திலுள்ள சோர்வுகள் அதற்கு இயல்பில்லாத படியால், அதனுல் உண்டாகும் நன்மையை இழக்காது, முதலாண்மையின் சோர்வுகளை இலேசாக அகற்றிவிடலாம்.

ஆனுல், முதலாண்மையைக் கண்டிப்பவர்கள் முன் குறித்த மறுப்புக்களால் திருத்தியடையமாட்டார்கள். முதலாண்மை ஒரு காலத்தில் பயனுள்ளதாகவிருந்தாலும், இப்பொழுது அதன் பயனளிக்கும் தன்மை முடிந்துவிட்டதென்

பது இவர்களுடைய நம்பிக்கையாகும். முதலாண்மையினால் நேர்ந்த நன்மையைப் பற்றிப் புகழும் பொழுது, அதனாற் செய்யவியலாத காரியம் வேறு வழியால் இலேசாகச் செய்யக்கூடியதாக இருந்தபடியால், அதனை விலக்கல் வேண்டுமென்று கூறுகிறவர்களும் உளர். முதலாண்மை, தொடக்கத்தில் பெரிய நன்மையைப் புரிந்தாலும், அதன் காரணமாகத் தோன்றிய கட்டுப்பாடு இருந்த நன்மையை மேலும் அதிகரித்தது. முதலாண்மையின் கட்டுப்பாடுகளை அவிழ்க்க வல்ல இன்னொரு புதியமுறை தோன்றவேண்டு மென்று கூறுபவரும் உளர்.

முதலாண்மையின் ஆராய்ச்சியாளர்கள் பல பாகங்களில் உளர். அவர்கள் எல்லோரும் சமுதயவாதக் கொள்கையினரின் வருப்பில் சேருகின்றனர் என்று பரும்படியாகச் சொல்லலாம். அவர்களிடையில் பல வேற்றுமைகள் இருந்தாலும் அவற்றைப்பற்றி நாம் பின்பு யோசிப்போம். சமுதாயவாதக் கொள்கையினருக்குப் பொதுவான சில மாதங் உள்ளன. புதிய சமுதாயத்தில் துக்கத்தையும் வருத்தத்தையும் அனுபவிப்போனின் நிலைமையை எற்றிவிடுதலே அவர்கள் நோக்கமாகும். சமுதாயத்தில் பலர் அனுபவிக்கும் துக்கங்களையும் வருத்தங்களையும் கண்டு அவர்களுடைய மனம் திடுக்கிட்டுள்ளது. இப்பொழுது இருக்கும் நிலைமை அநியாயமானதென்று அவர்கள் கருதுகிறார்கள். இந்த அநியாயம் நீண்ட காலத்துக்கு நிலைக்க இடங்கொடுக்கப்படாதென்றும், இவை மனிதனாலேயே உண்டாக்கப்பட்டனவாதலால் இவற்றை இலேசாக நீக்கக்கூடுமென்றும் இவர்கள் கருதுகிறார்கள். இப்பொழுதிருக்கும் முறைமைக்குப் பதிலாக மிகவும் சாதாரணமான முறையை அமைக்கவேண்டுமென்றும், அப்படிப்பட்ட முறையை மனிதனுடைய ஊக்கத்தினால் நிறுவக்கூடுமென்றும் இவர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சாதாரண முறையை நிறுவச் சமுதாயவாதிக் கொள்கையையுடைய ஒவ்வொருவராலும் ஒவ்வொரு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

முதலாண்மை முறையைக் காட்டிலும், ஆதாயத்தைச் சமமாகப் பிரிக்க முயலுதல், சமுதாயத்தில் எல்லோருக்கும் தங்கள் திறமைகளை வளர்க்கச் சந்தர்ப்பங் கொடுத்தல் என்பன இவர்களின் நோக்கமாகும். மனிதருடைய தேவைகளை எண்ணி அவற்றின்படி சமுதாயத்தில் ஆதாயத்தைப் பிரித்து விட இவர்கள் கருதுகின்றனர்.

இம்முயற்சியை நிறைவேற்றுவதற்கு முதலிற் செய்யவேண்டிய பல காரியங்கள் இருப்பதாகச் சமுதாயவாதிகள் கூறுவர். நாட்டிற் சம்பத்துக்களை அழிக்கும் சமுதாயத்தில் சச்சரவுகளையுண்டாக்கும் முதலாண்மைக்குரிய போட்டி முறையை அகற்றல் வேண்டுமென அவர் கூறுவர். வேலைநிறுத்தம் தோன்றுதல் முதலாண்மையுடைய சமுதாயத்திற் கிளர்ச்சிகள் இருப்பதற்கு ஒரு சான்றாகும். இப்படிப்பட்டவை கெடுதியையே யுண்டாக்கும். இவற்றால் சமுதாயத்துக்கு நன்மையில்லை. இன்னும், இதனால் முழுச் சமுதாயத்திலுமே ஆக்கம் அழிந்து போகும். உற்பத்தி முயற்சிகள் தனியுரிமையின் கீழ் இருக்கிறபடியால், தனவந்தர் பொது நலத்தைப்பற்றி யோசிக்காமல் தனித்த செல்வத்தைத் தேடுவதில் மட்டும் கருத்துக் கொள்ளல் முதலாண்மை முறையின்கீழ் கெடுதியையுண்டாக்

கும். போட்டி உண்டாவதை அவர்களே காட்டிக் கொடுப்பர். ஆகையால், மனிதத் தன்மையல்லாத ஆக்கக் கருவிகள், (அதாவது தொழிற்சாலைகள், யந்திரக் கலிவிகள், நிலங்கள், வங்கிகள் முதலிய எல்லாமே,) தனி உரிமையின் கீழ் அன்றி ப்பொது உரிமையின் கீழ் இருக்கவேண்டும், என்பது பற்றிச் சமுதாயக் கொள்கையினர் உடன்படுவர். சமுதாயக் கொள்கையினர், ஆக்கிய பண்டங்களின் தனி உரிமையை நீக்கிவிட முயல்வதேயொழிய, புத்தகங்கள் நாற்காலிகள் போல, ஒருவனுடைய அசைவுகள் உடைமைகளுக்கிருக்கும் உரிமையை நீக்குவதில்லை. இவ்வண்ணம், ஆக்கும் கருவிகள் எல்லாமே சமுதாயத்தின் பொது உரிமையின் கீழ் இருக்கும் பொழுது, சமுதாயத்திற்குக் கடப்பாடுள்ள அதிகாரச் சங்கங்களால் பொது நலத்துக்கு அதை உபயோகிக்க இயலும், அப்பொழுது சமுதாயத்தில் கிளர்ச்சிகள் அற்றுப்போவது திண்ணமென்று சமுதாயவாதக் கொள்கையினர் நம்புகின்றனர்.

சமுதாயத்தில் பொதுநலத்துக்காக ஒழுங்காகிய ஒரு முறையின்படி உற்பத்தி வேலையைக் கொண்டுபோகும் பொழுது, தனி இலாபங்களைத் தேடுபவர்களின் போட்டியில் உண்டாகும் கெடுதியை வேரற அழிக்க வியலும். இவ்வெண்ணத்தினுல் சமுதாயவாதக் கொள்கையினர் பொருளியல் முறைமை ஒழுங்குபண்ணுதலைப் பற்றி மிக்க நம்பிக்கை காட்டுவார்கள். பொருளியல் ஒழுங்கில் பல விடயங்கள் அடங்கவேண்டும். எல்லாச் சனசமுதாயத்துக்குமே உத்தரவாத ஏற்பாடுகளைச் செய்யும் ஓரதிகாரச் சங்கம் கீழ்வரும் மாதிரியான தீர்ப்புக்களைச் செய்தல் வேண்டும். அவை (அ) எது உற்பத்தி செய்ய வேண்டியது? (ஆ) ஒவ்வொரு திரவியமும் உண்டாக்க வேண்டிய அளவு என்ன? (இ) எவ்வளவு காலம் உற்பத்தி செய்தல் வேண்டும்? (ஈ) எவ்விடத்தில் உற்பத்தி செய்தல் வேண்டும்? என்பன.

எது உண்டாக்க வேண்டியது என்பதை நிச்சயிக்கும்பொழுது, ஏற்பாடுகளைச் செய்யும் அதிகார சங்கம் மனிதனுடைய தேவைகளைப்பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டும். முதலாண்மைக்குரிய விலைமுறையை மனிதருடைய சேவைகளைத் தேடுவதில் நல்ல முறையாகச் சமுதாயவாதக் கொள்கையினர் ஏற்றுக்கொள்ளாதபடியால், ஒழுங்குபண்ணும் அதிகார சங்கங்களால் ஒரு புதிய முறை கண்டுகொள்ள வேண்டும். மனிதருடைய பல தேவைகளுள் தணிக்கவியலாத சில தேவைகளுமிருக்கக்கூடும். ஆகையல், சில தேவைகளுக்கு முதலிடத்தைக் கொடுத்து வெவ்வேறுன பொருள்களுள் எவ்வளவு உண்டாக்க வேண்டுமென்பதைப்பற்றி ஓரட்டவணை ஆக்க வேண்டியிருக்கின்றது. ஒழுங்குகளைச் செய்யும் அதிகார சங்கத்தினுல் கவனிக்க வேண்டிய வேறெரு காரணமுமுண்டு. அதாவது, மனிதருக்குத் தேவையான பொருளை ஒருங்கே உண்டாக்குவதற்குச் சம்பத்துக்கள் எல்லாவற்றையும் ஏற்படுத்த வேண்டுமா? அன்றேல், சில சம்பத்துக்களை, மனிதருடைய தேவைகளை உடனே பூர்த்தி செய்யாது காலகதியில் பூர்த்தி செய்யும் பண்டங்களை ஆக்கும் அளவை அதிகரிக்கும் பொருள்களை உண்டாக்குவதற்கு ஏற்படுத்த வேண்டுமா? என்பதாம். இன்றேல், பொருள்கள் எல்லாவற்றையும் உடனே உபயோகிக்கக்கூடிய **"உணவு-உடை-இருப்பிடம்"**

முதலியவற்றை வழங்குவதா? முதலில், உணவு-உடை-இருப்பிடங்களின் அதிக அளவை வழங்க உபயோகமாகும் தொழிற்சாலைகள், எந்திரக்கருவிகள் முதலியவற்றை ஆக்கவும், சில பொருள்களில் ஓரளவு மட்டும் உண்டுபண்ண வேண்டுமா? அப்படியாயின் எவ்வளவு உண்டுபண்ணவேண்டும்?

நாட்டின் ஆதாயத்தை எங்ஙனம் பிரித்துவிடவேண்டும் என்பதை ஒழுங்கு படுத்தும் அதிகார சங்கங்கள் தீர்மானிக்க வேண்டியதாயிற்று. அப்பொழுது "சமத்துவம்" என்ற தத்துவத்தையும் அவர்கள் கருதுதல் வேண்டும். தவிர்க்க கூடிய வறுமையையும் தவிர்த்தல் வேண்டும்.

சோம்பேறித்தனத்தை அகற்றுதலும் சுறுசுறுப்பிற்கு உற்சாகஞ் செலுத்தலும் வேண்டும். வேலைகளைச் செய்யாதிருந்தாலும் அதிகம் வறுமையுற்றவர்களுக்கும் தளர்ச்சியுற்றவர்களுக்கும் உதவி புதிய வேண்டும். கடைசியாக, வகுத்தலை எங்ஙனம் செய்வதென்றும் நிச்சயிக்க வேண்டும். தனிநுகர்ச்சிக்காக எவ்வளவு கொடுக்கவேண்டும்? அதாவது, உணவு-உடை-இருப்பிடம் எனும் நுகர்ச்சி ஆகியவற்றின் பொருட்டுச் செலவிடுதற்காக ஒரு மனிதனுக்குக் கொடுக்கும் வேதனம் எவ்வளவு? சமுதாய நுகர்ச்சியாக எவ்வளவு கொடுக்க வேண்டும்? அதாவது, நந்தவனங்கள், நூதனசாலைகள், சுகாதார சேவைகள், கல்விச் சேவைகள் ஆகியவற்றின் பொருட்டு எவ்வளவு வகுக்கவேண்டும்? என்பன.

இவ்வண்ணம் உண்டாக்கும் கருவிகள் எல்லாம் பொது உரிமையாக இருக்க வேண்டுமெனவும், ஆக்கமானது பேராசையைத் தணிப்பதற்கன்றித் தேவைகளையே தணிக்க ஒழுங்கு படுத்த வேண்டுமெனவும் சமுதாயவாதக் கொள்கையினர் நம்புவர். இம்மாதிரி, தவிர்க்கக்கூடிய வறுமையை அழித்தல் சமுதாயவாதக் கொள்கையின் நோக்கமாகும். அது ஆக்க உயர்சம நிலையை ஆக்கவும் முயல்கின்றது. இன்னும், பொருளியல் முறையை ஒழுங்கு படுத்துவதால், வியாபார உயர்ச்சி தாழ்ச்சிகளையும் தடுத்து, உத்தியோகங்களின் குறைவையும் நீக்குகின்றது. ஆகையால், சமுதாயகிதக்கொள்கை உத்தியோகங்களின் நிலையான தன்மையை உண்டாக்கும். ஊக்கம் தேவை ஆகியவற்றின்படி, பொருளைப் பிரித்துக் கொடுத்தால் அது, சோம்பலான ஒரு செல்வர்களின் வகுப்பைத் தோன்றவிடாது தடுக்கும். ஆக்கும் கருவிகளின் பரிபாலனத்தை, சமுதாயத்திற்குப் பொறுப்புள்ள ஓர் அதிகார சங்கத்தின் கையிற் கொடுப்பதால், செல்வம் படைத்த சிலரால் மட்டும் நடக்கும் சமுதாய பரிபாலனத்தைத் தடுக்கலாம். இம்மாதிரிக் கொள்கையுடைய ஒரு சமுதாயம், மிகவும் குடியாட்சிவாதியாகுமென்று சமுதாயவாதக் கொள்கையினர் கூறுவர்.

இவ்வண்ணம், சமுதாயவாதக் கொள்கையினரிடையில் சார்பான அபிப்பிராயங்களும் உடன்பாடுகளுமிருந்தாலும் அவர்களிடையில் அடிப்படை முரண்பாட்டு அபிப்பிராயங்களும் பலவுள. **காள்மாட்சினால் விரிக்கப்பட்ட** சில சமுதாயவாதக் கொள்கையினர் புரட்சிகள் மூலம் சமுதாயவாதத்தைத் தாபிக்கக் கூடுமென்று நம்புகின்றனர். மாட்சினால் மலர்விக்கப்பட்ட பொதுவுடைமை

யும் இலங்கையில் உரோட்சியினர் போன்ற சமுதாயவாதத்தினர் கொள்கையும், தொழிலாளர் வகுப்பையும் வறுமையுற்ற சனத்தொகையையும் சின்ன அரசியற் கட்சி மூலம், கொண்டு நடத்தக்கூடுமென்று நம்புகின்றனர். **சின்டிக்கெலிட்சைப்** போன்ற ஏனைச் சமுதாயவாதக் கொள்கையினரும், தொழில் சம்பந்தமான சகல வகுப்பினருமே பெரிய, பொதுவான, நாட்டு வேலைநிறுத்தமொன்றைக் கைக்கொண்டு, சமுதாயவாதக் கொள்கையை ஏற்படுத்தலாமென்று நம்புகின்றனர். இன்னும் சில சமுதாய வாதிகள் சமுதாய வாதக்கொள்கையைப் படிப்படியாக ஏற்படுத்தல் இயலுமென்று நம்புகின்றனர். ஐரோப்பாவில் சமுதாய வாதிக் கட்சிகள் பொதுவில் இம்மதத்தைக் கைக்கொள்ளுகின்றன. பாராளுமன்றம் மூலமும், குடவோலைப் பெட்டிமூலமும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு படிப்படியாக உண்டாக்கும் கருவிகளைப் பொதுவுரிமையின் கீழே
கொண்டு படிப்படியாக உண்டாக்கும் கருவிகளைப் பொதுவுரிமையின் கீழே
கொண்டு வந்து, மனிதருடைய பொருளியற் சீவியத்தைச் சமுதாயவாதக் கொள்கையின்படி ஒழுங்கு செய்யவே அவர்கள் நோக்குவர். இந்தக் கட்சிகள் பெரும்பாலும் தொழிலாளர் வகுப்பிலிருந்தும் கிராமிய சனத்தொகையிலிருந்தும் உதவிகளை எதிர்பார்க்கும். எனினும், வேறு வகுப்புக்களுக்கும் தங்கள் நோக்கங்களின் முறைமையும் மரியாதையையும் காட்டி, அவர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்ளும்.

எவ்விதமான சமுதாயவாதக் கொள்கைக்கும் விரோதிகள் இருக்கிறார்கள். சமுதாயவாதக்கொள்கையின்படி, ஏற்பாடாகிய அரசாங்கத்தில் எல்லோருமே அரச சேவகர்களாவர். அப்பொழுது இராச்சியத்தின் காரியங்களைக் கண்டிக்கவியலாததினால், சமுதாயவாதக்கொள்கையின் காரணமாகத் தனி மனிதனின் சுதந்திரமே இல்லாமற் போகுமென்று சிலர் சொல்லுவர். இன்னும், சமுதாய வாதக் கொள்கையுடைய நாடுகளில் ஆக்கும் வேகமானது, முதலாண்மையுடைய நாடுகளில் ஆக்கும் வேகத்தைக் காட்டிலும் குறையுமென்று சொல்லப்படுகின்றது. சமுதாயவாத ஏற்பாடுகளுள்ள பரிபாலனத்தை மனிதர் வெறுப்பார்கள் என்றும், அதனால் பலவிதமான சிதைவுகள் தோன்றுமென்றும் சொல்லப்படுகின்றது. முதலாண்மையின் நல்ல விலைமுறைக்குப் பதிலாக, சமுதாயவாத ஒழுங்கானது ஒரு தளர்ச்யுற்ற ஈடென்றும் காட்டப்படுகின்றது. போட்டி இல்லாவிடத்து, நாட்டுக்குரித்தாகிய தொழில் தளர்ச்சியுற்றுச் சோர்வடைய இடமுண்டு. முதலாண்மை சருவாதிகாரத்துக்கு வழி காட்டுகிறதென்றும், நாட்டுரிமையாக்கலும் ஒரு விதமான சருவாதிகார முறையென்றும், சமுதாயவாதம் ஆக்கத்திற்கு ஓராதரவான. இலாபங்களைத் தருவதில் இது போன்ற வலியுள்ள ஒன்று இன்னும் கண்டதில்லையென்றும் அவர்கள் சொல்லுவர்.

ஆனால், சமுதாயவாதக் கொள்கையினரால் சுயகட்டின்மைக்குச் சார்பாகச் சொல்லக்கூடிய காரணங்கள் பலவுள. இந்தக் கண்டிப்புக்கள் அவ்வளவு ஆழமில்லையென்று சமுதாயவாதக்கொள்கையினர் சொல்லுகின்றனர். எப்படியென்றாலும், சமுதாயவாதக் கொள்கையைப் பற்றி நாம் எல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு விடயமுண்டு. சமுதாயவாதக் கொள்கையும்

முதலாண்மையைப் போலவே உற்பத்தியாக்கும் ஒரு வழியாகும். இது எங்கள் பொருளியல் முறையை ஒழுங்காக்கும் ஒரு வழியாகும். ஆகையால், சமுதாய வாதக் கொள்கை வேலை செய்யும் பொருட்டுள்ள வேட்கையை அழிப்பதில்லை. சுருங்கச் சொல்லின், சமுதாயவாதக் கொள்கையானது செழிப்பையும் இன்பத்தையும் தரக்கூடிய ஒரு வழியாகும். இதனை ஒப்புக் கொண்டாலும் இது ஒரு வழிமட்டுமே என்பதை மறக்கக்கூடாது. நாம் இவ்வழியைப் பின்பற்ற வேண்டியதுதான்.

ஒரு சமுதாயவாதமுறையின் ஆக்கத்தை ஒழுங்குசெய்ய, உயர்ந்த ஆற்றலுடைய பெண்களும் ஆண்களும் தேவை. தனத்தைச் சமமாப் பிரித்து விட நேர்மையுள்ள பெண்களும் ஆண்களும் தேவை. சமுதாயவாதக் கொள்கையின் கீழெனின், சனங்கள் பாடுபட்டு வேலைகளைச் செய்தால் மேலான சீவியநிலையை அடைய இயலும். சமுதாயவாதம் பயன்பட வேண்டுமானால், மனிதரின் ஊக்கமும் ஆதரவும் தேவை. சிறந்த அபிப்பிராயத்துக்கு, உயர்ந்த சேவையும் காவாத கொடையும் வேண்டும். ஆகையால், சமுதாயவாதத்தை மருவிடச் செய்தல் இலேசான காரியமன்று. அது தளர்ச்சியுற இடங்கொடாமற் கொண்டு நடத்துதலும் கடுமையான காரியமாகும். ஆகையால், சமுதாயவாதம் பிரயோசனமுள்ள இட்டமான பொருளாகும்; வெற்றியின் தானுமாகும்; ஆனால், அந்த வெற்றியின் துணையையடைவது கடுமையான காரியமாகும். அடைந்தபின் அவ்விடத்தில் எப்பொழுதுமிருத்தல் அதனினும் கடுமையாகும். இதனைப்பற்றி ஆச்சரியமடைய வேண்டியதில்லை; வெறுக்க வேண்டியதுமில்லை. நன்மையுள்ள ஒரு பொருளை எப்படி மலிவுக்குப் பெற்றுக் கொள்ளமுடியும்?

பொது உடைமை வகுப்புக்குரிய சமுதாயவாதக் கொள்கையினர் இரசியா, சீனு, வட இந்தோச்சீனு, கீழ் ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அதிகாரத்தைச் செலுத்துதல் முதலடிவைத்தல் மட்டுமே. பொது நலத்துக்காக இன்னும் வேலைசெய்தல் வேண்டும். முறையாக வேறுபட எண்ணுகிறவகையில், சமுதாயவாதக் கொள்கையினர் காலத்துக்குக் காலம் பிரித்தானிய இராச்சியங்களை நிறுவிக் கொண்டனர். பிராஞ்சு அரசாங்கத்திலும் அவர்கள் முறைக்கு முறை தம் அதிகாரத்தைச் செலுத்தினர். பிராஞ்சிற் பொது உடைமைக் கட்சியும் ஒரு காலத்தில் இத்தேச மந்தணத்தில் ஆசனம் வகித்தது.

அரசாங்கங்களை நிறுவியும் நிறுவாமலும் சமுதாயவாதக்கொள்கையினர் உலகத்திற் பலவாறுக அதிகாரம் செலுத்தியிருக்கின்றனர். முதலாண்மையுடைய சமுதாயத்தை மிகுந்த கண்டனத்துக்குள்ளாக்கியது சமுதாயவாதமே. ஏழையுடைய துன்பத்தைக் குடிசனங்களின் கவனத்துக்குள்ளாக்கியது சமுதாயவாதமே. அவர்களுடைய துக்கத்தைத் தணிக்க உதவியதும் இதுவே. ஒரு பொருளியல் முறையானது மனிதனுடைய நன்மைக்காகவே நிலவ வேண்டுமென்பது இதனல் காட்டப்பட்டது. இது தொழிலாளர் வகுப்பையும் ஊரவர்களையும் ஒருங்கு சேர்த்தது. சமுதாய வாதக்கொள்கையினர் சிலர் இருந்த

இடத்திலும் இக்கொள்கையானது பெரிதும் அதிகாரத்தைச் செலுத்தியது. நன்மைபுரியும் இராச்சியத்தின் அபிவிருத்தியினுல் இது நன்ருகக் கணிக்கப்படுகின்றது.

சமுதாயவாதிகளும் சமுதாயத்தை ஒழுங்குபடுத்துவோரும் முதலாண்மையைக் கண்டிப்புக்குள்ளாக்கியபொழுது, எல்லோருடைய கவனமும் பொது சனங்களுடைய துன்பமான நிலையைப்பற்றி நோக்கத் தொடங்கிற்று. முழுச் சமுதாய முறையையும் மறுபடி ஏற்பாடு செய்வதற்கு அதிகாரம் பெற்றுக் கொள்ளப் பல சமுதாயவாதக் கட்சிகள் எதிர்பார்த்தன. இவை தம் தேவைகளுக்காக ஒழுங்காக்கிய தொழிலாளர்களின் வல்லமை காரணமாக, "பொருளியல்முறையாயினும் திருத்தப்படல் வேண்டும், இன்றேல், அதை முழுவதுமே அகற்ற வேண்டும்", என்று வாதாடினர். இந்தக் காலத்தில் பொருளியல் அலுவல்களில் ஈடுபட்டு அரசாங்கம் பெரிதும் ஊக்கங்கொடுத்து, எல்லாக்குடி சனங்களுடைய அபிவிருத்திக்காக வேலை செய்ய வேண்டுமென்ற மதம் எல்லா நாடுகளிலும் பரவத்தொடங்கியது. இந்த மதத்துக்குச் சுகந்தரும் அரசாங்கம் பற்றிய நம்பிக்கையென்று சொல்லப்படுகின்றது.

சமுதாயவாதக் கொள்கையினரிடையிற் போலவே, நன்மைபுரியும் அரசாங்கத்தின் மேல் நம்பிக்கை செலுத்துபவர்களிடையிலும் அப்படிப்பட்ட அரசாங்கத்தினுல் செய்யவேண்டிய தென்னவென்பதைப்பற்றிய கொள்கை மாறுபாடுகள் உள. சமுதாயவாதத்தைப் போன்று, நன்மை புரியும் அரசாங்கத்தின் மேலும் நம்பிக்கையானது படிப்படி வளர்ந்து வந்துள்ளது. தொழிற்புரட்சியும் முதலாண்மையும் முதன் முதற்றேன்றிய பிரித்தானியா போன்ற நாடுகளில், அந்தந்தத் தொழிற் புரட்சி முதலாண்மை என்பன காரணமாகத் தோன்றிய தீயபலன்களை அகற்ற அரசாங்கம் முன்வரவேண்டுமென்று அந்நாட்டு மேதாவிகள் வாதாடினர். பலபேர், தலையிடாமை வாதம் (இலசி பெயர்) மிகவும் நல்ல தத்துவமென்று ஏற்றுக் கொண்டகாலத்திலேயே முன்குறித்த மதமும் முறையாக மக்கள் நயக்கும் தன்மையையடைந்தது. ஆகையால், பொருளியல் விடயங்களில் அரசாங்கம் தலையிடுதல் அவசியமென்ற எண்ணம் படிப்படி தொடங்கிற்று.

பேணும் அரசின் மேல் நம்பிக்கை காட்டுபவர்கள், சில காரணங்கள் பற்றி உடன்படாவிடினும், வேறு சில காரணங்கள் பற்றிப் பொதுவில் நம்புவர். பேணும் அரசையும் முதலாண்மையின் முரடான அடிப்படையின் மேல் நிறுவக் கூடுமென்று அவர்களுக்கு நம்பிக்கை உண்டு. ஆகையால், பேணும் அரசியல் தனி விவசாயத்துக்கும் தனியுடைமை ஏற்பாட்டுக்கும் இடமுண்டு. ஆனுல், அவற்றைப் பொது நன்மைக்காக உபயோகிக்கவும் கூடும்.

தளர்ச்சியுற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் தேவையான ஆதாயத்தைக் கொடுக்கும் வண்ணம் ஆதாயம் பிரிந்துபோதலை நிறுத்துதல், நாட்டிற் பொருளியலதிகாரம் சிலரின் கையில் தங்கியிருப்பதை நீக்குதல், விலைமுறையின்படி தொழில் நிகழும்வரை காலந் தாழ்த்தாது ஆக்கும் அளவை அதிகரித்து

ஆதாயத்தை பொதுவில் பிரித்துவிடுதல், முதலியனவற்றைக் கவனித்தல் அரசாங்கத்தின் வேலைகளாகும். எல்லோருக்கும் பொருளியற் பாதுகாப்பைக் கொடுப்பது இவையெல்லாவற்றிலும் அடிப்படையான கடமையாகும். முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்திற் குறைந்த சம்பளம், அபாயங்கள், பிணி நோய்கள், ஒரு குடும்பத்தைத் தாங்குபவரின் இறப்பு, மூப்பு, உத்தியோகக் குறைவு, முதலியவற்றின் காரணமாகப் பாதுகாப்பிராவிடின், வறுமை உண்டாகும். இவையெல்லாவற்றையும் நீக்கப் பேணும் அரசானது முயலுகின்றது. இழிவுக் கூலியைப் பெற்றுக் கொடுத்தல், வேலை செய்ய வேண்டிய மணிநேரக் கணக்கு வரையறுத்தல், உத்தியோகங்களைப்பற்றிய சங்கங்களுக்கு முகாமை கொடுத்தல், கூட்டுடன்படிக்கைகளுக்கு முகாமை கொடுத்தல், இளைப்பாறற் சம்பளம், சுகாதாரம், சேவையிலிருந்து நீங்குவோரைக் காத்தல், முதலிய சமுதாயப் பாதுகாப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல், பூரணமாகச் சேவையில் ஈடுபடுத்தல் ஆகியவழிகளால் இது செய்யப்படுகிறது.

பேணும் அரசின் பொருளியல் ஒழுங்கு, சமுதாயவாதத்தையுடைய ஒரு நாட்டிலுள்ள பொருளியல் ஒழுங்கைக்காட்டிலும் வேறாகும். பேணும் அரசின் கீழ், சகல பொருளியல் முறையின் அடிப்படைப் பகுதிகளை விதிகள் மூலம் அரசாங்கம் பரிபாலிக்க, ஏனைய தனியுரிமையின் கீழ் நிகழுபவற்றை அது வழிநடத்திக் கொண்டும் வற்புறுத்திக்கொண்டும் சீர்திருத்திக்கொண்டும், பொருளியல் விருத்தியில் ஈடுபடும். அரசாங்கம் மேற்கொண்ட பொருளியல் முறையின் அடிப்படைப் பகுதிகள், அரசாங்க ஒழுங்குகளோடு நேராகப்பரிபாலிக்கப்படும் பொழுது, ஏனைப்பகுதிகள் அரசாங்கத்தினால் நடாத்தப்பட்டுத் தனி விவசாயிகள் மூலம் பரிபாலிக்கப்படும்.

மூன்று விதிகளோடு தனி உரிமையின் கீழுள்ள பகுதிகள் நடாத்தப்படும். அருமையான பொருள்களைப் பொதுவாகப் பிரித்தல், (சீட்டு முறை முதலிய முறைகளின் கீழ்) அருமையான சம்பத்துக்களைச் சமுதாயத்தின் தேவைகளைச் சம்பாதிக்கும் பொருட்டு இணைத்தல், முயற்சியைச் செலுத்தி வியாபாரத்தளர்வுப் பண்டங்களின் விலையுயர்த்தல் ஆகியன மூன்று விதமான விதிகளாகும். இந்தக் கடைசிக் காரணத்தை நிறைவேற்ற வேண்டுமெனின், பொது உரிமையின் கீழ் நிகழும் பாகத்தையும் நன்றாகப் பரிபாலிக்க வேண்டும். பொது உரிமையின் கீழிருக்கும் பாகத்துக்குள்ளானவை அடிப்படைத் தொழில்கள் மட்டுமன்று. தளர்ச்சியை நிறுத்துவதற்கும் அரசாங்கம் வழிகள் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

இப்படியான, பேணும் அரசியற் பொருளியல் முறையில் பல உறுப்புக்களுண்டு. அவற்றுட் பல முதலாண்மை முறையின் உறுப்புக்களாகும். பொது நலத்துக்காகப் பல விதிகளும் அதில் நிரூபிக்கப்படும். பொது உரிமையின் கீழ் நிகழும் வியாபாரம், அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும். தொழில்கள் பேணும் அரசியற் பொருளியல் முறைகளுமுண்டு. ஆகையால், பேணல் அரசு முதலாண்மைக்கும் சமுதாயவாதத்துக்கும் நடுவான நிலையைப் பெறுகின்றது.

## 3 ஆம் அத்தியாயம்

# கலைச்சொல் வரிசை

| | | |
|---|---|---|
| 1. உண்டாக்கும் அளவு | ... | Volume of Production |
| 2. முதலாண்மை | ... | Capitalism |
| 3. முதன்மை ... | ... | Dominant |
| 4. புதுமை ... | ... | Innovation |
| 5. தொழிற்பாடு ... | ... | Enterprise |
| 6. பண்டமாற்றம் ... | ... | Exchange |
| 7. கேள்வி ... | ... | Demand |
| 8. நிரம்பல் ... | ... | Supply |
| 9. தனியாண்மை | ... | Individualism-Individuality |
| 10. அசைவில் உடைமை | ... | Tangible property |
| 11. செழிப்பு-ஏற்றம் | ... | Booms |
| 12. இறக்கம்-மந்தம் | ... | Depressions |
| 13. பிரதியீடு-பிரதியிடுதல் | ... | Substitute |
| 14. பேணல் அரசு ... | ... | Welfare state |
| 15. தாழ்வெல்லை ... | ... | Minimum |

## 4 ஆம் அத்தியாயம்

# புதுச் சமுதாயத்தில் பொருளியல் ஒழுங்கு

முதலாம் அத்தியாயத்தில் புதுப்பொருளியல் ஒழுங்கின் தோற்றத்துக்கு ஏது வாகிய சாதனங்களைப் பற்றிப் படித்தோம். அமெரிக்க ஐக்கியநாடு, இரசியா, பிரித்தானியா, சேமனி, பெல்சியம், அவுத்திரேலியா, கனடா முதலிய நாடுகளி லிருந்து முற்றாகவும்; ஐரோப்பாவின் ஏனைய நாடுகளிலிருந்தும், மத்திய அமெரிக்காவில் பெரும்பாலான நாடுகளிலிருந்தும் ஓரளவு, மானியப் பொரு ளியல் முறை வெளியேறியுள்ளது. மானிய முறையின் சில உறுப்புக்கள் ஆசியா விற் சில பிரதேசங்களில் இன்னும் நடைமுறையிலிருந்தாலும், ஆசிய நாடுகள் பண்டமாற்றுக்காக ஆக்கவியல், தொழிலியல் முதலாண்மை, சமுதாயவாதம், முதலிய பொருளியற் செல்வாக்குக்களிலிருந்து முன்னேற்றமடைந்திருக்கின் றன. ஆபிரிக்காவின் சில நாடுகளில் இற்றைக்கும் சாதிக்குரிய பொருளியல் முறைகள் இருந்தாலும் ஆசியாவிற் போல, அவைகளும் புதிய பொருளியல் முறைகளின் செல்வாக்கைப் பெற்றிருக்கின்றன.

உலகத்தின் பொருளியல் முறைகளைப் பார்த்தால், மானியமுறை, முத லாண்மை, சமுதாயவாதம், பேணலாசுமுறை ஆகிய எல்லாவற்றினதும் சிலசில உறுப்புக்கள், பலநாடுகளில் இருப்பதைக் காணலாம். சிலநாடுகளில் ஒரேமாதிரி யான அங்கங்கள் தலையெடுக்கும் பொழுது, ஏனைநாடுகளில் வேறுமுறைகளின் உறுப்புக்கள் முதன்மையடையும். ஆனால், உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடுமே உலகம்முழுவதும் பரந்திருக்கும் பண்டமாற்றுப் பொருளியல் முறையின் கீழ் இருக்கின்றது.

அந்தந்த நாடுகளில் உண்டாக்கும் தொழில்களை சுயநுகர்ச்சியைக் காட்டிலும் மாற்றத்துக்காக நிகழ்த்தலே புதிய உலகத்தின் பொருளியல் முறையின் முக்கிய மான அமிசமாகும். எவன் நாடோறும் ஆக்குந் தொழிலில் ஈடுபடுவானோ, அல் லது யாதும் சேவையைச் செய்வானே அவன், அவ்வழியாக வேண்டிய ஏனைய தேவைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளுவான். உதாரணமாக, ஓராசிரி யன் தனக்கு வேண்டிய உணவையும் ஆடையையும் இருப்பிடத்தையும் வேறு பண்டங்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளும் பொருட்டே தன் சேவை யைச்செய்கின்றான். ஆசிரியன் படிப்பிக்கும் தொழிலிலேயே ஈடுபடுவதொழிய அவனுக்குத் தேவையான மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் உண்டாக் கிக்கொள்ள முயல்வதில்லை. படிப்பிக்கும் தொழிலைப் போன்ற ஏதாவது சேவை யைச் செய்வதனாலோ, ஒருவன் பொதுவாகத் தன் விசேட இயல்புக்கமைய வேலையில் ஈடுபடுவான். விசேட இயல்புக்கேற்றசிரமத்தை இணைக்கும் பொழுது, அது தொழிற்பிரிப்பு என்று பெயர்படும். ஆனால், சிறக்கும் இயல்புக்கேற்ற

ஒழுங்கு, சிரமத்துக்கு மட்டும் வரையறுகப்படவில்லை. நிலங்களை, அல்லது மூல தனத்தை இணைக்கும் பொழுதும் இதன்படிவேலைகளைச் செய்யலாம். எந் நிலத்தையாவது, எப்பொழுதும் மரக்கறிகளைப்பயிரிடவோ, கோவா, கீரை போன்ற ஒரேயொரு பயிரை இடவோ, பண்படுத்தக் கூடுமென்று காட்டலாம். இலங்கையிற் சிலர் தங்கள் நிலங்களை மாக்கறி பயிரிடுவதற்கே பயன்படுத்துவார் கள். மூலநிதியை இணைக்கும் பொழுதும் மூலதனமுள்ளவனொருவன் அதைப் பணசம்பந்தமான காரியங்களில் மட்டும், அல்லது தொழில் சம்பந்தமான காரியங்களில் மட்டும் பயன்படுத்துவான். மூலதனத்தையாவது நிலங்களையா வது சிறக்கும் இயல்பின்படி விருத்தியாக்கும் ஏதுக்களையும் அதனாலுண்டாகும் நன்மைகளையும் தெரிந்து கொள்ளல் கடுமையன்று. ஆனால், தொழிற்பிரிப்பைச் சிறிது விரித்துரைக்க வேண்டியிருக்கும்.

பலபேர் பலவிதமான ஆற்றல்களுடன் பிறப்பார்கள் என்பது பொதுவிதி யாகும். முற்காலத்தைய 'சுபாசிதை' நூலாசிரியருமே இதையுணர்ந்து "உல கத்தில் ஒருவன் ஒரு காரியத்தில் மட்டும் கெட்டிக்காரனாகலாம். இன்னொருவன் வேறொரு காரியத்தில் நிபுணனாகலாம்", என்ற வாக்கியத்தினுற் புலப்பட வைத் துள்ளார். ஆதலால், யாதும் ஆக்க இயன்றவன் எல்லாப் பொருள்களையும் சிறிது சிறிதாக உண்டாக்காமல், ஒரு திரவியத்தை மட்டுமே உண்டாக்கினால், அத்திர வியத்தை மேன்மேலும், சிறக்கச் செய்யவே, அது முன்னையிலும் அதிகவளவு உண்டாக்கப் படுமென்பது திண்ணம். அதனால், ஒருவன் கூடிய ஊதியத்தையும் பெற்றுக் கொள்ளலாம். ஒருமனிதனுக்கு எட்டுமணிநேரத்தில் நூறு மரவிளை யாட்டுச் சாமான்களையாவது நாற்பது மாவகப்பைகளையாவது (இருவகையும் நிகரான விலையோடு) செய்யவியலுமானால், அவன் மாவகப்பைகளை ஆக்காமல், தன்னுடைய ஆற்றல் மேலோங்கும் வண்ணம் விளையாட்டுச் சாமான்களை மட் டும் அமைத்தால், அது அவனுடைய நன்மைக்கேயாகும். இதை மேலும் விளக் கின் "அ" என்றும் "ஈ" என்றும் பெயருள்ள இரு மனிதர்களைக் கொண்டு "அ" உக்கு எட்டுமணிநேரத்தில் ஒரேவிலைக்கு விற்கக்கூடிய நூறுவிளையாட் டுச் சாமான்களையாவது; நாற்பது அகப்பைகளையாவது அமைக்கக்கூடுமென் றும் "ஈ" உக்கு நாற்பது விளையாட்டுச் சாமான்களையாவது நூறுமரவகப்பை களையாவது அமைக்கக்கூடுமென்றும் வைப்போம். ஆனால், "அ" என்பவன் விளையாட்டுச் சாமான்களையே அமைக்கும் பொழுது, "ஈ" என்பவன் அகப்பை களையே அமைத்தால், அது இருவரினதும் நன்மைக்கே ஆகும். அது மட்டு மன்றி "அ" என்பவனுடைய கையினால் நூறு விளையாட்டுச் சாமான்கள் அமை யும் பொழுது "ஈ" என்பவனுடைய நூறு அகப்பைகள் அமையும். இயல்பா கவே, இவர்கள் சிறக்கக் காரியங்களைச் செய்யலாம். மேலும், இதன் சிறப்பான அங்கமாகிய "தொழிற்பிரிப்பின்" காரணமாக, சமுதாயத்துக்குமே நன்மை யுண்டாகும்.

இவ்வுதாரணத்தில், விளையாட்டுப் பொருள்களையுண்டாக்குவதில் "ஈ" என்ப வனிலும் "அ" என்பவனுக்கு எதிர்பாராத ஆற்றலிருந்தது. அகப்பைகளை ஆக்குவதில் "அ" என்பவனிலும் "ஈ" என்பவனுக்கு எதிர்பாராத ஆற்ற

விருந்தது. இதற்குச் சிறிது வேறான நிலைமையை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். "ஆ" என்பவனுக்கு நூறுவிளையாட்டுச் சாமான்களையாவது நாற்பது அகப்பைகளையாவது அமைக்கச் சாமர்த்தியமிருந்தும் அவன் உண்மையாக ஐம்பது விளையாட்டுச் சாமான்களையும் இருபது அகப்பைகளையும் அமைப்பான் என்று வைப்போம். "ஆ" என்பவனைப் போல "ஓ" என்பவன் அத்துணை கெட்டிக்காரனல்ல என்றும் கொள்வோம். "ஆ" என்பவனைப் போலத் திறமையற்ற "ஓ" என்பவன் அறுபது விளையாட்டுச் சாமான்களையாவது முப்பது அகப்பைகளையாவது அமைக்க ஆற்றல் இருந்தபோதிலும், உண்மையாக முப்பது விளையாட்டுச் சாமான்களையும் பதினைந்து அகப்பைகளையும் அமைப்பானென்று வைப்போம். அப்பொழுது, இருவருமே எண்பது விளையாட்டுச் சாமான்களையும் முப்பத்தைந்து அகப்பைகளையும் அமைப்பார்கள். "ஆ" என்பவன் விளையாட்டுச்சாமான்களை அமைத்தலிலும், "ஓ" என்பவன் அகப்பைகளை அமைத்தலிலும் நன்றாக ஈடுபட்டால், அவர்களால் நூறு விளையாட்டுச் சாமான்களும் முப்பது அகப்பைகளும் அமையும். ஒரு விளையாட்டுப் பொருளின் விலை ஓரகப்பையின் விலைக்கு நிகரான தாதலால், சிறக்கும் இயல்போடு வேலைகளைச் செய்வர். அவர்கள் அமைக்கும் பொருள்களின் முழுவிலை மதிப்பு, நூற்றுப் பதினைந்து அலகுகளன்றி, நூற்று முப்பது அலகுஆகும். இவ்வுதாரணத்தில் விளையாட்டுச் சாமான்களும் அகப்பைகளும் என்ற இருவகைகளையே உண்டாக்குவதில் "ஓ" என்பவனிலும் "ஆ" என்பவனுக்கு எதிர்பாராத ஆற்றலிருந்தது. ஆனால், அகப்பைகளைக் காட்டிலும் விளையாட்டுச் சாமான்களையுண்டாக்குவதில் "ஓ" என்பவனிலும் "ஆ" என்பவனிடம் எதிர்பார்க்கக் கூடிய ஆற்றல் இருந்தது. 40 : 30. விளையாட்டுச்சாமான்களையுண்டாக்குவதில் ஆற்றல் 100 : 60 ஆனதால், மனிதர்களுக்குள் எதிர்பாராத ஆற்றலாவது எதிர்பார்க்கக் கூடிய ஆற்றலாவது இருந்தால், சிறக்கும் இயல்புக்கேற்ற வேலைகளைச் செய்து, ஆக்கும் அளவை அதிகரித்துக் கொள்ளலாம். வெவ்வேறு வழிகளாலும், சிறக்கும் இயல்புக்கேற்ற சிரமத்தையிணைப்பதனால், தொழிற்பிரிப்பினால் உண்டாக்கும் அளவை அதிகரித்துக் கொள்ளலாம். ஒருவன் ஒரு காரியத்தில் சிறக்கும் இயல்பைக்காட்டி விட்டால், அவனுக்கு அதில் நல்ல ஆற்றல் கிடைக்கும். அவனுக்கு அந்தத்தொழிலிற் பயிற்சியும் கிட்டும். நீண்ட காலப் பயிற்சியின் காரணமாக அவனுக்கு அந்தத் தொழிலைச் சுயமாகவே செய்யவும் அதிற்றோன்றும் தடைகளை நீக்கவும் இயலும்.

இது, நன்றாகப் பொருளியலை வழங்கிக் கொள்ளவும் தொழிற் பிரிப்பு வழியை விளங்கிக்கொள்ளவும் செய்கிறது. தேவையான உணவுகளையும் உடைகளையும் இருப்பிடங்களையும் உண்டாக்குவதில் ஒருவன் ஈடுபட்டால், அவனுக்கு விவசாயம், நெசவு வேலை, நூல் நூற்றல், வீடுகட்டல் முதலியவற்றுக்குச் சில கருவிகள் இருக்கவேண்டும். அவன் விவசாயத்தில் ஈடுபடும் பொழுது விவசாயக் கருவிகளைத் தவிர ஏனைக்கருவிகள் வீணே இருப்பது திண்ணம். ஒருவன் சிறப்பியல்புக்கமைய ஈடுபட்டால், ஒரு கருவியைமட்டுமே பயன்படுத்துவான். அது

எப்பொழுதும் உபயோகிக்கப்படும். ஆகையால், ஒவ்வொரு மனிதனும் தன் சிறப்பியல்பின்படி ஈடுபட்டால், உரிய கருவிகளுக்குத் தேவையான பொருளும் கணிப்படையும். தொழிற்பிரிப்பினல் மனிதர்கள் வேலை செய்யும் நேரமும் குறையும். ஒரு மனிதன் பல மணி நேரம் ஈடுபட்டு ஒரு நாற்காலியையமைப்பான். அவன் ஒரே மாதிரியான வேலையைவிட்டு, ஒரு சுவரைச் செய்வதில் ஈடுபட்டால், அவனுக்குப் புதிய வேலை பழகச் சிலகாலம் கழியும். தொழிற்பிரிப்பினல் இத்தாமதம் நீங்கும்.

தொழிற் பிரிப்பை மேலும் விரிப்பின், சில தொழில்களுடன் எந்திரக்கருவிகளையும் இணைக்கலாம். அன்னதாழையைத் தகரங்களில் அடைக்கும்பொழுது, ஏற்படும் வேலைகள் ஆதி முதல் அந்தம்வரை, எல்லாத் தொழிலாளரும் செய்ய வேண்டியன என்று கொள்ளாமல், சிலர் பழங்களைச் சீவவும், சிலர் அவற்றைத் துண்டிக்கவும், சிலர் அவற்றைப் பருக்கவும், இன்னும் சிலர் அவற்றை அடிக்கவும், இன்னும் வேறு சிலர் தகரங்களில் நாம விலாசங்களை ஒட்டவும் செய்து, தொழிற்பிரிப்பைப் பலவிதமாக்கைக் கொள்ளலாம். இப்படிச் செய்வதால் பிரித்தல் அடைத்தல் போன்ற சில வேலைகளை மிகவும் விரைவாக நடாத்தவியலும். இதனை எந்திரங்கள் மூலமும் விரைவில் செய்ய இயலும். அப்பொழுது, சிலர் மட்டும் எந்திரத்துக்கு வெட்டிய அன்னதாழைகளைப் போடுதலேயாம். இப்படித் தொழிற் பிரிப்பினல் புதிய எந்திரங்களையோ புதிய முறைகளையோ அமைக்க முனைப்பு ஏற்படும்.

தொழிற்பிரிப்பினல் முகாமை பெற்று; உண்டாக்க எந்திரங்களை உபயோகிக்க நற்பலன் கிடைக்கும். ஓர் எந்திரம் யாதும் ஒரு காரியத்தைச் செய்தால், ஏலவே அளந்த அளவுகளின் படியே அக்காரியஞ் செய்யப்படும். அதன்படி, யந்திரமூலம் அன்னதாழைத்துண்டுகளைப் பகுத்தால், ஒரு வருக்கத் துண்டுகளின் அளவில் வேற்றுமை தோன்றுது. இந்த எந்திரமோகம், இலங்கையிற் புதிய தேயிலைத் தொழிற் சாலைகளில் நன்ருகக் காணப்படுகிறது. ஏதாவதொரு தொழிற்சாலையில் எந்திரங்கள் மூலம் இரேடியோ குளிரேற்றி முதலிய நுட்பப் பொருள்கள் உண்டாக்கப்படின், அப்பொருள்களைக் கணிக்கலாம். ஒருவகையில், ஓரிரேடியோ அப்படிப்பட்ட வேறென்ரேடு பெரும்பாலும் நிகராகலாம். செய்து காட்டலின் இன்றியமையாமை, அதனை வாங்குவோருக்குத் தாம் வாங்கும் பண்டம் அனுபவத்திலும் காட்சியிலும் ஏலவே பரீட்சிக்கப்பட்டதெனக்காட்டலாம். அதனல், பண்டங்களையுண்டாக்குபவருக்குத் தம் திரவியங்களை விற்பது சுலபமாகுமென்பது சொல்ல வேண்டியதில்லை. பண்ட வகைகளைக் கணிக்கும்பொழுது, அவற்றின் சிறப்பான பாகங்கள் சிறப்பான நியமங்களின்படி அமைக்கப்படும். அலகுப்படி அளந்த ஒரு பண்டத்தின் சிறப்பான பகுதிகளைத் (தனியாகப்) பெற்றுக்கொள்ள வியலுமாதலால், நுகர்வோன் அந்தப் பண்டங்களை மட்டும் வாங்க மிகவும் விரும்புவான்.

மனிதர் தொழில்களிற் செலுத்தும் கவனம், எந்திரங்களை உபயோகிப்பதால் மேன்மேலும் அதிகரிக்கும். "போலிடர் அணையில்" உற்ற நீர்ச்சத்தியினல் வேலைகளைச் செய்யும் பதினைந்து சுழல்சக்கரப் பொறிகளுள் ஒன்று, கோடி

"ஆள்வலு" வுக்கு நிகரான ஒரு சத்தியை உண்டாக்குவதை உதாரணமாகக் காட்டலாம். அப்படியே மனிதர்களும் அதிகம் வேண்டிய சுய போசணைக்கு இதமாகும். காரியங்களை எந்திரங்கள் மூலம் செய்ய இயலும். மனிதர்களால் ஒருபொழுதும் செய்யவியலாத காரியங்களையுமே எந்திரங்கள் மூலம் செய்ய இயலும்.

ஆனால், தொழிற்பிரிப்பினலும் எந்திரங்களையுபயோகிப்பதனலும் சில நட்டங்களுண்டாகும். எந்திரங்கள் காரணமாக மனிதருக்குக் கிடைக்கும் உத்தியோகங்கள் சில குறையும். தொடக்கத்தில் எந்திரங்கள் காரணமாகச் சில தொழிலாளர்களுக்கு உத்தியோகங்கள் இல்லாமற்போகும். காலஞ்செல்லச்செல்ல, ஆக்கும் அளவு அதிகரிப்பதனல், எந்திரங்களைத் திருத்துதல் போன்ற தொழில்கள் அளவில் அதிகரிக்கும். ஆனல், இலங்கையைப் போன்ற நாட்டில் இங்ஙனமாக நீண்டகாலப் பலனைப் பெற, ஆண்டுகள் செல்லும். அதனல், தொடக்கத்திற் சிலருக்குத் தடைகள் உண்டாகவும்கூடும். எந்திரக் கருவிகளை உபயோகிப்பதனல் ஆக்கும் அளவு அதிகரிக்குமாதலால் எந்திரக்கருவிகளை முறையாக ஆக்க வேலையில், உபயோகிக்க வேண்டும். அத்துடன், இடையிலுண்டாகும் ஊறுகளை நீக்கவோ, குறைக்கவோ யாதுமொரு ஏற்பாடு இருக்கவேண்டும். புதியதொழில்களுக்காகக் கருவிகளை உபயோகிப்பதனல் இருக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு துன்பமுமில்லாமல் நாட்டுநிலைமையை உயர்த்தலாம்.

எந்திரங்களை உபயோகிப்பதனல் சனநெருக்கமுற்ற, இடுக்கான, சுகாதாரமில்லாத தொழிற்சாலைகளில் வேலைசெய்யவும் நேரிடும். ஒரு எந்திரத்துக்கு உதவி புரியும் மனிதர், அவ்வெந்திர வேகத்தின்படி இயங்கவேண்டுமாதலால், அவர்களுக்கு அதற்கென நல்ல பயிற்சியும் அடக்கமும் இருக்கவேண்டும். பலவாறு எந்திரங்கள் உபயோகமாகும் அமெரிக்க ஐக்கிய நாட்டில், கம்மாளருடைய வேலைகள் எந்திரங்கள் மூலம் இயங்கும். தொழிற்சாலைவேலைகள் எப்பொழுதும் மாருமல் ஒரேபடித்தாய் இருக்கும். உதாரணமாக :—வேலை செய்யும் ஒவ்வொரு நாளும் ஒருவருக்கு விலாசங்களைப் போத்தல்களில் ஒட்டுதலே தொழிலாகலாம். ஆனல், இலங்கையில் ஒரு கமக்காரருடைய தினசரி வேலைத் தொகுதியும் தாமதமின்றி இருக்கும். படித்தவனுக்கும் புலவனுக்கும் ஊர்க் காட்சியும் அதில் நிகழும் அமைதியும் சமாதானமும் தெரிந்திருக்கலாம். கமக்காரனுக்குத் தன்னுடைய தினசரி அனுபவமாகக் கடுமையான வெயிலும், சேறும், பாடுபடும் வேலைகளுமே தெரியும். ஆதலினல், எந்திரங்கள் மூலமாகவோ, அவை இல்லாமலோ செய்யும் ஆக்கத் தொழில்களில் வெறுப்படைய இடமுண்டு. ஆனல், எந்திரங்களை உபயோகிப்பதனல் ஆக்கும் அளவு அதிகரிப்பதையும் அதனல் நாட்டு நலம் வளர்வதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேண்டும். நாட்டின் சீவிய நிலையை உயர்த்த, இப்படிச் செய்தல் வேண்டும். அத்துடன், எந்திரங்களை உபயோகிப்பதனல் சிலர் அடையும் துன்பங்களை வேறு வழிகளால் நீக்கிக்கொள்ளவும் முயலவேண்டும்.

எந்திரங்களையுபயோகிப்பதனுல் மட்டுமல்ல, தொழிற் பிரிப்பினுலும் சில நட்டங்கள் ஏற்படல்கூடும். ஒருவன் பெரும்பாலும் ஏதாவதொரு சிறக்குந் தொழிலை வளர்த்தால், அவனுடைய தொழிலிற்குக் கெடுதி நிகழ இடமுண்டு. ஒருவனுடைய தொழில் மாற்றுவதனுல் ஓய்வையும் உற்சாகத்தையும் பெறக் கூடுமென்று நாம் அறிவோம். ஆனுல், சிறக்குமியல்பை அளவு கடந்து வளர்த்தால் இவ்வசதி இல்லாமற் போக இடமுண்டு. ஓராசிரியன் சுய உழைப்புக்காக நாடோறும் ஒவ்வொரு மணிநேரம் புவியியலைப் படிப்பித்தால், அவனுடைய தொழிலை பெரிதும் துன்பமளிப்பதற்கு ஏதுவாகும். தொழிற்பிரிப்பின் காரண மாக, தொழில் அதிகரிக்கக்கூடும். ஒரு மனிதன் பியானே இசைகளை ஒழுங்கு பண்ண மட்டும் அறிந்திருந்தால் அம்மாதிரித் தொழில்கள் அரிதாயின், வேறென்றும் தெரியாதவிடத்து அவனைத் தொழிலின்மை எதிர்க்கலாம். அவன் பலவகையான தொழில்களை அறிந்திருந்தால், அத்தடை நீங்கக்கூடும். தொழிற் பிரிப்பின் காரணமாக, சகல சாதியின் முன்னேற்றத்தையும் கவனிக்காமல், ஒருவன் தன்வரையறுக்கப்பட்ட தொழிலில் மட்டும் கவனத்தையும் ஆவலையும் செலுத்தக்கூடும். கப்பலில் வேலை செய்யும் எழுதுவினைஞர்களுக்குத் தங்கள் தொழில், சாதியினர் முன்னேற்றத்தைக் காட்டிலும் முக்கியமானதென்று தோற்றக்கூடும். அம்மாதிரி நகர சேவகர்களுக்கும் வைத்தியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தோட்டவேலையாட்களுக்கும் புலப்படக்கூடும். இவ்வண்ணம் சாதி முன்னேற்றத்தைக் கவனிக்காமல் தங்கள் தனிநலத்தை மட்டும் கருதி வேலைகளைச் செய்யக் கூட்டங்கள் முன்வருகின்றன.

ஆனுல், சிறக்கும் இயல்பை ஓரளவின்படி வளர்க்கவேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடு பிரித்தானியா போன்ற நாடுகளில் கருவிகள் பலவாறு உபயோகமாகும் பொழுதும், சிறக்கும் இயல்புக்கேற்ற வேலைகளைச் செய்தலே பெரும்பாலும் நிகழும். இலங்கையைப் போன்றவொரு நாட்டிலென்ருல், இயல்புக்கேற்ற வேலைகள் இங்கு மங்குமாகவே நடக்கும். அவையும் தொழில்களாகவே நடைபெறும். ஆனுல், அமெரிக்காவைப் போன்ற நாடுகளிலென்ருல், சிறக்கும் இயல்பு, இன்னும் சிறப்பானவொரு உருவம் எடுக்கும். ஒருதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் புதிய சப்பாத்துத் தொழிற்சாலையில் சப்பாத்துச் சோடி அமைக்கத் தொண்ணூறு விதமான முறைகளிருப்பதைக் காணலாம்.

சிறக்கும் இயல்பை வளர்க்கும் தன்மை, யாதாவதோரடிவாருன சாதனையின் மேல் தங்கியுளது. ஒருவன் பெரும்பாலும் சிறக்கும் இயல்பை வளர்ப்பதற்கு, அதன் பயனுகத் தன்னுடைய பண்டங்களை விரும்பி வாங்க மனிதர் இருத்தல் வேண்டும். இலங்கையில், நாட்டுப்புறத்து ஒரு வைத்தியனுக்கு காதுமிடறு-மூக்குச் சம்பந்தமான நோய்களுக்கு மட்டும் வைத்தியஞ் செய்து சீவித்தலியலாது. ஏனெனில், அவனுக்குப் போதிய அளவு நோயாளிகள் அப்பிரதேசங்களில் இல்லை. ஆனுல், கொழும்பைப்போன்ற எல்லா மாகாணங்களிலிருந்தும் பிரயாண வசதியுள்ள சனநெருக்கமுள்ள ஒரு பிரதேசத்திலென்ருல், அப்படிப்பட்ட வைத்தியனுக்குச் செல்வத்தோடு சீவிக்க வியலும். ஆதலால், கொழும்பி

விருக்கும் அனுபவமுள்ள கைபடிந்த வைத்தியனொருவனுக்குக் கொழும்பை யும், இலங்கையின் ஏனைய பிரதேசங்களையும் தன்னுடைய தொழிலிற்கு இயை பாக்கலாம். கிராமத்து வைத்தியரின் செல்வாக்குச் சிறிதாகும். ஆதலால், சிறக் கும் இயல்பை வளர்க்கக்கூடிய அளவு அவா ஆற்றலில் தங்கி இருக்கும். சில பண்டங்களை விற்றலில் பிரித்தானியாவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் முழு உலகமே ஒரு சந்தையாக விளங்குகின்றது. ஆதலால், அவர்கள் இந்தப் பண்டங்களைப் பெரும்படியாக ஆக்குவார்கள். அவர்களுக்குச் சிறக்கும் இயல்பை மிக உச்சத்துக்குக் கொண்டு செல்ல இயலும். பிரித்தானியாவில் ஒரு வியாபாரத் தாபனத்துக்கு மின்சாரக்குமிழ்களை மட்டும் ஆக்க இயலும். ஆத லில், அந்தத் தாபனத்துக்கு முழு உலகமுமே ஒரு சந்தையாக விளங்கும். அந் தத் தாபனத்தில் மனிதருக்குக் குமிழை ஆக்கும் தொழிலில் சிறக்கும் இயல்பை விருத்தி செய்ய முடியும். ஆனால், இலங்கையில் எனின், ஒரு வியாபார தாபனம் மோட்டர் வண்டி வளையங்களை உண்டாக்கச் சிறக்கும் தன்மையைப் பெறும விருப்பது, இலங்கையில் அதற்குள்ள சந்தை சிறிதாயிருப்பதாலேயாம். மேலும், உலக சந்தையில் போட்டியிடுதலும் இலங்கைக்குக் கடுமையாகும்.

புதிய பொருளியல் வாழ்க்கையின் இன்னொரு சிறப்பான அங்கமாவது, ஆக் கும் அளவின் பெருக்கமேயாம். ஆதி முதலாண்மை யுகத்தில், ஆக்கம் அற்ப அளவாயிருந்தது. செருப்புக்கட்டியும் தச்சனும் கம்மாளனும் தங்கள் வீடு களில் அமைத்த சிறிய தொழிற்சாலைகளில் வேலைகளைச் செய்தனர். இவர்களுள் ஒவ்வொருவருமே பழக்கிய உதவியாளர்களுடனும் கைவேலையாட்களுடனும் வேலைகளைச் செய்தனர். இது புதிய இலங்கையில் பொற்கொல்லரிடையே இன் றும் நிகழும் பழக்கமாகும். ஆனால், புதிய உலகத்திலோ வழக்கமாக ஆக்க அளவு பெரும்பாலும் அதிகரித்திருக்கின்றது. பிரித்தானியா, அமெரிக்க ஐக் கிய நாடுகள் போன்ற மேற்கு நாடுகளில் எனின், ஆக்கும் அளவு மிகவும் பெருகி யுளது. இப்படியாக, சே. கோட்சு, பீ. கோட்சு சங்கமூலம் தைக்கும் எந்திரத் தின் நூல்களைப் பரும்படியுண்டாக்கும் பொழுது, முழு உலகமும் அதனை வாங்கு கின்றது. உலகம் முழுவதுமே அதனை ஆக்கும் அளவினை வளர்த்துக் கொண்டு போகின்றது. ஆகையால், புதிய உலகம், முதலாண்மைக்கு முன்னிருந்த உலகத் தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அன்று ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வோ ராக்கம் அற்ப பரிமாணத்தின் படி நிகழ்ந்தது. இன்று எல்லா ஆக்கும் அளவு கள் உலகம் முழுவதுமே அதிகரித்திருப்பது தெரிகின்றது. பிரித்தானியாவைப் போன்ற சில நாடுகளில், பொருள் வளம் பெரும்பாலும் ஆக்கப்படுவது பரும் படியான வியாபார ஏற்பாடுகள் மூலமேயாம். இதற்கு உதாரணங்கள் :—பெரிய கப்பல்களைக் கட்டும் தாபனங்கள் ; கோடி தொன் கணக்கில் ஆக்கும் பெரிய உருக்குத் தொழில் என்பன. இவை எப்பொழுதும் பெருகிக்கொண்டே இருக் கின்றன. உதாரணமாக, இந்தியாவில் நெசவுத் தொழிற்சாலைகளைக் கூறலாம். இன்னும் சில நாடுகளில் பரும்படி ஆக்கம் கொண்டு நடாத்தப்படுவது சில தொழில்களில் மட்டுமேயாம். இப்படி இடங்களிலும் பரும்படி ஆக்குதல் அள வில் பெருகிக் கொண்டேயிருக்கும். மேலும், பரும்படி ஆக்கம் பெரும்பாலும்

சுரங்கத் தொழில்களில் நிகழ்வதையும், அது வேளாண்மை அற்ப வியாபாரம் என்பன உள்ள நாடுகளில் நிகழாததையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும். ஆகையால், புதிய உலகத்தில் சில ஆக்கத் தொழில்கள் பெருமளவி லும், சில தொழில்கள் அற்ப அளவிலும் நிகழும். சில செல்வமுள்ள நாடுகளில் ஆக்கத்தொழில் பெரும்பாலும் அதிக அளவுக்கு நிகழும்பொழுது, வறுமையுற்ற நாடுகளில் அப்படி நிகழுவதில்லை. இனி, சில நாடுகளில் பரும்படியான ஆக்கம் நிகழும்பொழுது வேறு சில நாடுகளில் அற்ப அளவான ஆக்கத் தொழில் இருக் கின்றதேன்? இயலுமிடத்தில் பெரிய அளவான ஆக்கத்தைக் கொண்டு போவ தினல் நன்மையுண்டாகுமோ என்பதை இப்பொழுது நாம் ஆராய்ந்து பார்ப் போம்.

**பெரிய அளவு** என்பதை இரண்டு பொருளில் எடுக்கக்கூடும். உதாரணமாக, மொரட்டுவாவில் வீட்டுத் தளவாடத்தொழில் பரும்படியுளது என்று நாம் சொல்வது, இத்தொழில் அங்கு பலருடைய சீவனமாதலாலேயாம். ஆதலால், மொரட்டுவாவில் வீட்டுத்தளவாடத்தொழில் பெரிய அளவானவொரு தொழிலா கும். மேலும் வியாபாரத்தாபனமூலம் பரும்படி ஆக்குந் தொழிலொன்றைத் தொடக்கக்கூடும். உதாரணமாக, கொழும்பில் இரண்டு வியாபாரத் தாபனங்கள் மூலம் உரொட்டியும் அப்படிப்பட்ட வேறு பொருள்களும் கிராமத்து உரொட்டி சுடுமிடத்தைக் காட்டிலும் பரும்படியாகப் பெறலாம். இந்த வியாபார ஏற்பாடு களைப் பரும்படி ஆக்குதலுக்கு உதாரணமாகக் கூறலாம்.

யாதாவதொரு தொழிலில் வியாபாரத் தாபனத்தவர்களும் சொத்தை ஆக்கு பவர்களும் அதனைப்பரும்படியாகச் செய்யாது விடினும், அதனை நிலைநாட்டி விட்டால் பெருமளவிற்கு அதனை ஆக்க நியாயங்கள் தோன்றும். வீட்டுத்தள வாடத் தொழிலை மொரட்டுவாவில் ஓரிடப்படுத்தியிருப்பதால், அங்கு ஆக்குபவர் களுக்கு அதிகமான ஊதியம் கிடைக்கக்கூடும். அப்பிரதேசத்தில் வீட்டுத் தளவாடத் தொழில் நிபுணர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். யாதாவதொரு வியாபார ஏற்பாட்டுக்குச் சுயதொழில்களை வளர்க்க எண்ணினுல், அவற்றைச் சுலபமாகச் செய்ய இயலுவது, அப்பிரதேசத்தில் ஆற்றலுள்ள தொழிலாளர் இருப்பதாலேயாம். ஆக்கிய பொள்களை ஏற்றிக்கொண்டு போதற்கு அதற்கேற்ற வண்டிகள் இருப்பின் இலகுவாகும். சகல பிரதேசத்திலும் பலபேர் இந்த வியா பாரத்தில் ஈடுபட்டிருக்கிறபடியால் தொழிலைப்பற்றிய எல்லாப் புதினங்களையும் இலேசாகப் பெற்றுக்கொள்ளவியலும். உதாரணமாக :—பண்டங்களைக்கேட்கும் அளவு, உழைப்பின் விலை, திரவியங்களினதும் பிரயாணங்களினதும் செலவு, புதியமாதிரிகள் பற்றிப்பொதுவாக அறிந்து கொள்ளல் என்பன. அப்படியே மொரட்டுவாவில் வீட்டுத்தளவாட வியாபார ஏற்பாடுகள்மூலம் பல அமிசங் களில், சிறக்கும் இயல்பை அதிகரிக்கலாம். சிலரால் பிரம்புத்தளவாடங்களையும், சிலரால் நாற்காலிகளையும் செய்யமுடியும். வேறு சிலரால் அமைப்கபபட்ட பண்டங்களை ஒப்பஞ் செய்ய மட்டும் இயலும். இப்படித் தொழிற்பிரிப்பின்படி காரியங்களைச் செய்வதனுல் உண்டாகும் நன்மையை நாம் முன்னமே படித்துக்

கொண்டோம். அந்த நலன்களெல்லாம் வீட்டுத்தளவாடத் தொழிலுக்குமுண்டாம். இலங்கையில் எந்தத்தொழிலினுலும் எடுத்துக் காட்டமுடியாத, கிளேட்டிற் கப்பல்கட்டும் தொழிலும், இலங்காசயரில் நெசவுத்தொழிலும் மிக மிகப்பெரிய அளவான ஆக்கம் இருக்கும் போது, உண்டாகும் இலாபம் (இலங்கையிற்போலல்லாது) மிகப் பெரிதாகும். இத்தொழில்களுக்கு தம் தொழிலைப்பற்றிய செய்திகள் அடங்கியுள்ள பிரசாரப் பத்திரிகைகளைப் பிரசுரிக்கவும், ஆராய்ச்சித்தொழில்கள் செய்யவும் சிறப்பான பிரச்சினைகளைத் தீர்க்கவும், தாபனங்களைத் நிறுவிக்கொள்ளப் பொருள் உண்டு. மேலும், இப்படிப்பட்ட இடத்தில், முன்குறித்த மொராட்டுவாவைக் காட்டிலும் சிறக்கும் இயல்பை மேலும் விருத்திசெய்ய இயலும். ஆதலால், ஆக்க இலாபங்களும் மிகப் பெருகும். எனவே, ஒரு தொழிலை ஓரிடப்படுத்துவதால் பெரிய அளவான இலாபங்களும் தொழில்களை ஓரிடத்தில் நிலைநாட்டுவதில் ஊதியமும் நாட்டுச் சிறப்பியல்புக் கேற்ற திட்டத்தின் இலாபமும் உண்டாகும்.

பரும்படியாக்குதலால் வியாபார ஏற்பாடுகளுக்கு உண்டாகும் இலாபங்களும் பிரயோசனங்களும் பலவாகும். பொருள்களுக்கேற்ற சிற்பமுறைகளை அமைத்து இப்படிப்பட்ட தாபனங்களால் இலாபத்தையும் பிரயோசனத்தையும் பெற்றுக் கொள்ளவியலும். குறைந்தவிலைக்குப் பண்டங்களையுண்டாக்கக் கூடிய மிகப் பெரிய எந்திரங்களைச் சிறிய எந்திரங்களாக ஆக்கவியலாது. ஆகையால், பரும்படி ஆக்குதலில் பெரிய எந்திரங்களை இணைக்கவேண்டும். பெரிய செய்தித்தாள் அச்சகத்துக்குச் சுழலும் அச்சு எந்திரத்தையும், ஒருமுறைக்கு வரிசைதோறும் அச்செழுத்துக்களைக் கோக்கக்கூடிய விசேடமான ஒரு எந்திரத்தையும் தாபித்துக் குறைந்த விலைக்குப் பத்திரிகைகளை அச்சிடுவிக்கலாம். இவ்வேற்பாடு மூலம் நாடோறும் ஒரு பத்திரிகையாவது பாக்கவிலையாகும். பத்திரிகைகளைத் தொகையாக அச்சிடுவதனுல் அதிக பணம் செலவிடவேண்டுமாதலால், இப்படிப்பட்ட யந்திரங்களை விலைக்கு வாங்குதல் பிரயோசனமாகும். ஆனுல், கிழமை தோறும் அச்சிடப்படும் அற்பமாக விலையாகும் பத்திரிகையின் அச்சகத் திலென்றுல், அப்படிப்பட்ட எந்திரங்களை நிறுவுதலினுல் நன்மை இல்லை. அப்படிப்பட்ட சுழலும் அச்சு எந்திரங்களை இயக்குவது, வலுமிகுந்த மின்சாரசத்தியாலோ, நீராவியாலோ என்க. அப்படிப்பட்ட எந்திரமூலம் தோன்றும் பெரிய ஆக்கப் பரிமாணத்தின்படி இதுவும் ஊதியத்தைத் தரும். ஆனுல், சின்ன அச்சகத்தில், கையினுலோ, காலினுலோ இயக்கும் எந்திரங்களையே அமைக்கவேண்டும். இவ்வச் செந்திரங்கள்மூலம் அற்பபரிமாண ஆக்கமே நடைபெறுகிறபடியால், ஆக்கும் அளவின்படி அதற்கு இடும் செலவு அதிகமாகுமென்று கூறலாம். ஆகையால், அற்ப பரிமாண ஆக்கத்தால் பெற்றுக்கொள்ள வியலாத நன்மைகள், எந்திரங்களை அமைக்கப் பரும்படியாக ஆக்குதலிற் கிடைக்கும்.

பரும்படி ஆக்கும் தாபனங்களில் ஏற்படும் செலவுகளையும் குறைக்கலாம். உதாரணமாக, கடற்போக்குவரத்து பற்றி நிறுவிய ஒரு தாபனம், இருக்கும் கப்பல்களைக் காட்டிலும் இருமடங்கு பெரிய கப்பலொன்றை விலைக்கு வாங்கினுல், அக்கப்பலில் வேலைசெய்ய முன்னிருந்த கப்பலொன்றில் வேலைசெய்யத்தேவை

யான மனிதர்களிலும் இரு மடங்கிற்குத் குறைந்த தொகையினரே தேவையென அத்தாபனம் அறியும். இரண்டுதட்டுக்களுடைய ஒரு பசுவண்டியை வாங்குஞ் செலவு, ஒரு தட்டுடைய பசுவண்டியை வாங்குஞ் செலவைப்போல இருமடங்கிற் குறையும். இரண்டு தட்டுக்களையுடைய ஒரு பசுவண்டியை ஓட்ட ஒரு பாகன் மட்டும் அவசியமாவான் என்பது பசுவண்டிச் சங்கத்துக்குப் புலப்படக்கூடும். இம்மாதிரிப் பெரியபரிமாண உற்பத்தியினுற் செலவுகளைக் குறைக்கலாம்.

அற்ப அளவு உற்பத்தியாளர் மூலமாவது அற்ப அளவு ஏற்பாட்டு மூலமாவது ஓரளவுக்கு ஒருநட்டமுண்டாக்கக்கூடும். பெரிய பரிமாண உற்பத்தியினுல் இதை நீக்கக்கூடும். கிராமத்துப்பிராணிகளைக் கொல்வோனின் கவனமின்மையினுல் பிராணிகளுடைய குளம்பு கொம்பு முதலியவை வீணுகப்போக இடமுண்டு. ஆனுல், சிக்காக்கோ நகரத்தில் அமைந்துள்ள பெரும்படியான இறைச்சி வினியோக தாபனங்களிலென்ருல் இவற்றினுல் நல்ல பயன் பெறப்படுகின்றது. குளம்புகளும் கொம்புகளும் சீப்புச்செய்தல் முதலிய ஆக்கவேலைகளுக்கு உபயோகப்படும். பரும்படியான ஆக்கத்தால் இவ்விலாபங்கள் உண்டாவது நல்ல எந்திரங்களை உபயோகிப்பதனுல், அல்லது நல்ல நுட்பவியல்முறைகளை உபயோகிப்பதனுலாகும். ஆதலால், இவற்றை **நுட்பவியல்** இலாபங்கள் என்று கூறலாம்.

பரும்படியாக்கத்தினுல், முகாமையாளருக்கு இலாபங்களும் உண்டாகக்கூடும். ஆற்றலும், தாளாண்மையுமுள்ள ஒருமனிதன் மூலம், ஒரு சிறிய கடையேனும், பரிபாலிக்கப்பட்டால் அவனுடைய மதிப்பும் ஆற்றலும் வீண் போகலாம். பெரிய தாபனத்தை நன்ருகப் பரிபாலிக்கும் சாமர்த்தியம் அவனிடம் விளங்கக்கூடும். அப்படிப் பரும்படியாக உற்பத்தி செய்யும் தாபனமொன்றின்மூலம் தம் சாமர்த்தியத்தை விணுக்குபவரை உபயோகிக்கலாம். பரும்படியாக்கத்தில் தொழிற்பிரிப்பிற் போலவே பரிபாலனத்தைச் சிறக்குமியல்புக்கேற்ப இணைப்பதால் சலுகைகள் பெறக்கூடும். அதற்கெனின், வியாபாரத் தாபனம் பெரிதாயிருக்க வேண்டும். சிறியகடையின் பரிபாலகன், அல்லது உரிமையாளன்மூலம் பண்டங்களை விலைகொடுத்து வாங்குதல் விற்றல், கணக்கு வைத்தல் முதலியனவெல்லாம் நடத்தல் வேண்டும். பெரிய தாபனத்திலென்ருல் இந்த வேலைகளெல்லாம் சிறப்பியல்புடையோரால் நடைபெறும். சிலர் விற்றலையே செய்வர். சிலர் விலை கொடுத்து வாங்குதலை மட்டுமே செய்வர். ஆற்றலுள்ள ஒரு கணக்குப் பரிசோதகரிடமிருந்து தக்க பயன்களைப் பெற இயலுவதும் பெரிய தாபனத்திலேயாம். மேலும், பெரிய தாபனம் ஆராய்ச்சிவேலைகளிற் செலவிடும் நேரம் சிறிய தாபனங்களாற் செலவிட இயலாது.

விலைகொடுத்து வாங்குவதிலும் பெரிய தாபனத்துக்கு இலாபங்கள் அமையும். பெரிய செய்தித்தாள் அச்சுச் சங்கமொன்று பரும்படி பத்திரிகைத்தாள்களைப் பெறுவதால் அவற்றை, ஒருகழிவோடு குறைந்த விலைக்கு வாங்க முடியும். தொகை வியாபாரத்தில் சில்லறை வியாபாரத்தைக் காட்டிலும் விற்போனுக்கு இலாபங்கிடைக்கும். உதாரணமாக பத்துச் சிகரெட்டுக்களைக் கொண்ட ஒரு

கட்டை விற்கக் கழியும் நேரத்தைக் காட்டிலும் அதிக நேரம் இருநூறு சிகரெட்டுக்களடங்கிய பெட்டியை விற்கக்கழியாது. ஆதலால், சிரமத்தையுபயோகிக்கும் தொகை வியாபாரிக்கு இலாபமிருப்பதால் அவன் ஒரு கழிவோடும் விற்பான்.

பெரிய வியாபார தாபனங்கள் மூலம் பெறக்கூடிய வேறு இலாபங்களுமுண்டு. பணக்குறைவு நேரிட்டால், ஒரு வங்கியிலிருந்து பணத்தைப்பெற எளிதாகும். கிராமத்துச் சிறிய கடைக்காரனைக்காட்டிலும் கொழும்பிலுள்ள பெரிய தாபனத்துக்கு ஒரு வங்கியிலிருந்து பணத்தை இலேசாகப் பெற முடியும். மேலும், பெரிய தாபனத்துக்குத்தன் பங்குகளை விற்பதனால் வியாபாரம் பரம்புதற்காக மூலப் பணத்தைத் தேடிக்கொள்ளலாம். சிறிய தாபனத்தின் பங்குகளை எடுப்பதைக் காட்டிலும், பெரிய புகழ்பெற்ற ஒரு தாபனத்தின் பங்குகளை எடுக்க மனிதர் விரும்புவார்கள். மேலும், சிறிய தாபனத்துக்குப் போலல்லாது, பெரிய தாபனத்திற்கிருக்கும் அபாய நட்டமும் குறையும். இத்தாபனம் பெற்ற புகழின் சக்தியே இதற்குக் காரணமாகும். பெரிய பரிமாண உற்பத்தியினால் பெரிய எந்திரங்களை உபயோகிப்பதன் இலாபங்கள், அமைப்புநுட்ப இலாபங்கள், பரிபாலன இலாபங்கள், விற்பனை இலாபங்கள், விலைகொடுத்து வாங்குதலின் இலாபங்கள், தொழிற்பிரிப்பின் இலாபங்கள், ஆகிய இலாபங்களைப் பெறமுடியும்.

இப்படி அதிக இலாபம் பெறமுடியுமாயினும், சிறிதளவு ஆக்கம் செய்யும் உற்பத்தியாளர் இன்னும் இருக்கின்றனர். இதற்குப் பலகாரணங்கள் உண்டு. ஒரு தாபனம் பரும்படி ஆக்கத்தில் ஈடுபடும் பொழுது, அவ்வழியாகப்பண்டங்கள் பெரிய தொகைகளாக உற்பத்தி செய்யப்படும். ஆனால், அந்த ஆக்கப் பண்டங்களெல்லாவற்றையும் ஆக்கச் செலவைக் காட்டிலும் உயர்ந்த விலைக்கு விற்க முடியும். உற்பத்திசெய்யப்படும். சந்தைசிறிதானால், பரும்படி ஆக்கத்தினால் சில இலாபங்கள் இருந்த போதிலும், இலாபங்களுடன் ஆக்கப்பட்ட பண்டங்களெல்லாவற்றையும் விற்க இயலாமையினால் பெரிய நட்டங்களும் ஏற்படக்கூடும். ஆக்கிய அளவுப்படி, அதிகசெலவோடேனும் ஆக்கிய பொருளெல்லாவற்றையும் விற்கவியலுவது, அற்ப அளவையாக்குவதனாலென்றால், சிறு பரிமாண உற்பத்தி செய்வோனுக்குப் பிரயோசனமாகும். ஆகையால், பரும்படி ஆக்கமும் சந்தையின் அளவின்படி வரையறுக்கப்படும்.

சில நேரங்களில் சிறியவாக்கமும் இலாபம் தரும். கொழும்பில் உரொட்டிகளை மலிவிற்கு ஆக்குவது உண்மையேயாம். ஆனால், இந்த உரொட்டிகளைக் கண்டிக்குக் கொண்டுபோவதில் பிரயாணச் செலவு காரணமாக ஒவ்வொரு இருத்தல் உரொட்டியின் விலைவுமேறும். ஆகையால், கண்டியிற் சிறிய உரொட்டி சுடுமிடத்தில் அவற்றைச் சுட்டு உரிமையாளர் இலாபம் அடையும் வண்ணம் விற்கவியலும். கொழும்பிற் பரும்படியாக ஆக்கிய உரொட்டிகளை இலாபத்துடன் ஆக்குதல்கூடும்; ஆனால், கண்டிக்குக் கொண்டுவரும்போது பிரயாணச்செலவு காரணமாக அதிக விலைக்கு விற்கவேண்டி நேரும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கொழும்பில் உரொட்டி சுடும் பெரிய தாபனம் ஒன்றை வேறு நகரத்தில் தாபிக்க நேரும். ஆனால், அந்தந்த நகரங்களில் உரொட்டிகளின்தேவை அதிக

மாயிராவிடின், அவற்றை ஆக்கும் எந்திரங்களை நிறுவுவதனால் பிரயோசன மில்லை. தேவை பெரிதானால், தூரத்திலிருந்து பரிபாலனம் செய்வது சங்கட மாகும். எந்திரங்களை அமைப்பதனால் உண்டாகும் இலாபங்கள் அழியக்கூடும்.

பெரிய தாபனங்களைப் பரிபாலிக்க, வேண்டிய ஆற்றல் அருமையாகவேகிடைக் கும். ஆதலால், தாபனங்கள் சிறியவைகளாகவே இருக்கும். இலங்கைபோன்ற ஒரு நாட்டிலெனின், பரிபாலிக்கும் சத்தி அரிதாகும். ஒரு பாலகனுக்குச் சொந் தச் சாமர்த்தியத்திற்கு மேலாக முன்னேற இடமில்லை. அப்படி மித்தனித்தால் நட்டங்கள் நேரக்கூடும். மேலும், சில தாபனங்களுக்கு அப்படி முன்னேற மூல தனமும் இல்லை. இலங்கையைக் குறிக்குமிடத்து இது உண்மையாகும். கடை சியாக, சில தொழில்களில் சிறிதளவு ஆக்கத்தினால் அதிக இலாபம் பெறலாம். வேளாண்மையிலும், சிறிய வியாபாரத்திலும் இப்படியேயாகும். தொழில்களை நடத்துகிறவர்கள் அற்பபொருள்களிலுமே கவனஞ் செலுத்த வேண்டும். அதற் குச் சிறிய தாபனங்கள் மிகவும் பொருத்தமானவை. தையற்காரன் தன்வாடிக் கைக்காரரைத் தனியே திருத்தியாக்கவேண்டும். ஆகையால், உடைகளைத் தைக் கும் தாபனங்கள் அற்பமானவையாகும். வேளாண்மை நாடுகளிலும் உற்பத்திப் பரிமாணம் பொதுவாகச்சிறிதாகும். பயிர்த்தொழிலில் உற்பத்தியளவு ஓரளவுக் குப் பெரிதாகும். ஆனால், உணவுப்பொருள்களைப் பயிரிடுவதிலென்றால் அது சிறி தாகும். ஒரு நாடு தொழில் சம்பந்தமாக முன்னேறும்பொழுதே நிலைமை மாறும். பரும்படி ஆக்கத்தினால் அதிக ஊதியம் பெறுவது தொழில்களாலேயாம்.

இதுவரை கண்ட விரிப்புரையினால் சில விடயங்கள் விளங்கவேண்டும். பரும் படி ஆக்கமானது குறைந்தவிலைக்குப் பண்டங்களை ஆக்குவதிலும் இலாபத்தைத் தரும். சந்தை சிறிதானால் பரும்படி ஆக்கத்தினால் நட்டமேற்படும். பரும்படி யாக்க வேளாண்மையைக் காட்டிலும் ஆக்கத் தொழில் ஏற்றதாகும். ஆகை யால், ஒருநாடு தொழில் சம்பந்தமான சந்தையை வளர்த்தாலே பெரியபரி மாண உற்பத்தியினால் பயன்களைப் பெறவியலும். பரும்படியாக்கங்கள் அதிகரிப் பதினால் தீமைகள் ஏற்படவுமிடமுண்டு. தொழில் தாபனங்கள் இரண்டு காரணங் களுக்காகவே பெரிய பரிமாண உற்பத்தியைச் செய்கின்றன. இது பொருளா தாரங் காரணமாகவும், முழு உரிமை காரணமாகவும் நிகழும். முதலாம் காரண மானது விரும்பத்தக்கதாகும். இரண்டாவது காரணம் அப்படியன்று. மிக்க பெரிய முயற்சியினாலாவது தலைமையான உற்பத்தியாளருடைய முயற்சியினாலா வது வர்த்தக ஏற்பாடுகள் ஒன்று சேர்ந்தால், நுகருபவர்களிடமிருந்து பெரிய இலாபத்தைப் பெற முடியும். இது எங்ஙனம் நிகழுமென்று ஒன்பதாம் அத்தி யாயத்தில் காண்போம். போட்டியாளர் குறைவதனால் இலாபம் பெரிதாகுமென் றும், நிலைபெறுமென்றும் முழுவுரிமையுடைய தாபனங்கள், ஆக்கும் சாமர்த் தியத்தை அதிகரிக்கவாவது செலவுகளைக் குறைக்கவாவது விரைவதில்லை. மேன் மேலும் சோதிக்காமல்முழுவுரிமையுடைய ஒவ்வொரு தாபனத்தையுமே வெறுப் புக்கு இலக்காக்கவியலாது. பிறநாட்டுப் போட்டியாளன் ஒருவனை நாடுகடத்த விரும்பினால், சிலநாட்டுத் தாபனங்கள் ஒன்று சேரும். இது பயனளிக்கவியலும். ஆனால், நிலைபெறும் இலாபங்களை அதிகமாகப் பெறுதல், தொழிலாளர்களின்

அதிகாரத்தைப் பெறுதல், நாட்டின் ஒரு மதிப்பை வகித்தல் முதலிய எண்ணங்களோடு தான் முழு உரிமையுடைய பல ஏற்பாடுகள் அமைக்கப்படும். இவ்வண்ணம் பரும்படி ஆக்கம் முழுவுரிமையையடையக்கூடும். ஆனால், ஒரு பிரதேசத்துக்குரிய பொதுத்தாபனமாவது ஓரிராச்சியமாவது ஏதாவது உற்பத்தியின்மூலம் முழுவுரிமையையடைந்தால், பரும்படி ஆக்கத்தினால் கிடைக்கக்கூடிய இலாபங்களைக் குடிசனங்களின் முன்னேற்றத்திற்கென அமைப்பதால், அப்படிப்பட்ட ஒரு முறைவிரும்பப்படும். ஆனால், தனியுரிமையினப்படை நோக்கமானது பொது நலத்துக்கு முற்றுமே மாறானது.

முழுவுரிமையுடைய சொத்துக்களை ஆக்குவதில், வழிகளும் சமயங்களும் பல வுள. ஆகக் குறைந்த விலைநியமித்தால், ஆக்கும் பரிமாணத்தை வரையறுத்தல், சந்தையைப் பிரித்துக் கொள்ளல், முதலிய நோக்கங்களோடு சில தாபனங்கள் தனியாக இயங்கும். இன்னும் சிலர் உடன்படிக்கைகளை எழுதிக் கையொப்பங்களை இட்டுக் கொள்ளுவார்கள். தொழில் சம்பந்தமான இரண்டு தாபனங்களின் பணிப்பாளர்கள் மாற்றுப் பிரதிநிதிகளாக நின்று பொதுக் கிரியைப் பாரம்பரைகளைச் சம்பாதித்துக் கொள்வர். தொழில் சம்பந்தமான சில தாபனங்கள் ஆகக் குறைந்த விலையையாவது, ஆக்கிய அளவையாவது, நியமிக்கச் சேர்க்கும் பொழுது அதற்குக் 'காட்டல்" என்ற பெயர்கொடுக்கப்படும். தொழில் சம்பந்தமான தாபனங்களின் பெரியதொகையை ஒரு சிறிய கூட்டம் பரிபாலனஞ்செய்யின், அது **நம்பிக்கைப்பொறுப்பு**[12] என்று பெயர் படும். ரூபா 100,000 (நூற்றுக்கு 20 முதல் 50 வரை) உரிமையுள்ள சில பங்காளர் மூலம் பாலனமாகவியலும். இந்தச் சங்கம் மூலம் ரூபா 200,000 முதல் 500,000 வரை மூலநிதியுள்ள வேறொரு சங்கத்தின் பங்குகளை விலைகொடுத்து வாங்குவதனால் அந்தப்பெரிய தாபனத்தின் பாலனம் முற்கூறிய சிறிய கூட்டத்துக்கு உரிமையாகும். இம் மாதிரியான தாபனம், பரிபாலிக்கும் சங்கமென்று[13] சொல்லப்படும். ஆகையால், பரிபாலிக்கும் சங்க மூலம், நம்பிக்கைப் பொறுப்புக்களை நிறுவிக் கொள்ளவியலும். மிகவும் தெளிவான தொடர்புண்டாவது, தொழில் சம்பந்தமான சில தாபனங்கள் ஒருங்கு இயையும் பொழுதேயாகும்.

முழுவுரிமையுடைய கூட்டுறவுகள் பலவிதமானவை. சில சமயங்களில் ஒரே மாதிரியான பண்டங்களை ஆக்கும் தாபனங்கள் ஒருங்கியையும் உதாரணமாக, சிகரெட்டுக்களை ஆக்கும் சில தாபனங்கள் ஒன்று சேர்ந்து சிகரெட்டுக்களை ஆக்கும் பொருட்டு முழுவுரிமையொன்றைத் தாபித்துக் கொள்ளும் எனக் காட்டலாம். இதனைக் **கிடைக்கூட்டுறவு**[14] என்று சொல்லலாம். இதுநிற்க, சிகரெட்டுக்களையமைக்கும் ஒரு தாபனம் புகையிலை வளர்க்கும் ஒரு தாபனத்தோடுசேரும். இது ஆக்கும் தாபனமும் அதற்குப் பண்படுத்தாப் பொருள்களைச் சம்பாதிக்கும் தாபனமும் ஒன்று சேருதலாகும். இவ்வண்ணமாக, ஒரேயொருபண்டத்தைச் சந்தைக்குக் கொண்டுவருவதற்காக, தேவையான பல சந்தர்ப்பங்களும் முறைகளும் கவனிக்கப்படும். இதனை **நிலைக்குத்துக் கூட்டுறவு**[15] என்று சொல்லலாம். ஒருவிதமான சேவையைச்செய்யும் ஒரு தாபனம் அந்தத்தாபனத்தின் வாடிக்

கைக்காரர்களுக்குத் தேவையான வேறொரு சேவையைச்செய்யும் இன்னுமொரு தாபனத்தோடு சேரும். இப்படி ஒரு பசுவண்டிச் சங்கம் முக்கியமான பசுவண்டி தங்குமிடங்களிற் போசனசாலைகளை அமைத்தால், அதனைப் பாகக் **கூட்டுறவு**[16] என்று சொல்லலாம். கடைசியாக, முன்குறித்த கூட்டுறவுகள் ஒரு நாட்டின் எல்லை கடந்து அதிகரிக்கவும் கூடும். இப்படிப்பிரித்தாயனிாவில் இறப்பர் வாயுவளையங்களை அமைக்கும் ஒரு தாபனம் மலாயாவில் இறப்பர்ப் பயிர் செய்யும் ஒ ருதாபனத்தோடு சேர்ந்தால், அதனை **ஆணிலத்துக்குரிய கூட்டுறவு**[17] என்று சொல்லலாம். அமைக்கும் ஒரு தாபனம் மலாயாவில் இறப்பர்ப்பயிர் செய்யும் ஒரு தாபனத்தோடு சேர்ந்தால், அதனை **ஆணிலத்துக்குரிய கூட்டுறவு** என்று சொல்லலாம்.

புதிய பொருளியல் சீவியத்தில் இரண்டு அங்கங்கள் உள. அவை ; சிறக்கும் இயல்பின்படியும் பரும்படி ஆக்கத்தின்படியும் அமைதலேயாம். இவ்விரண்டும் முதலாண்மையினுடைய, அல்லது சமுதாயவாதத்தினுடைய கூட்டுறவைச் செய்துகொண்ட புதிய முன்னேற்ற நாடுகளுக்குப் பொதுவாகும். ஆனால், பொருளியல் ஏற்பாட்டின் மாதிரிகள், முதலாண்மையின்படியும் சமுதாய வாதத்தின்படியும் மாறும். உலகத்தில் எந்த நாடாவது முற்றுமே முதலாண்மையையுடையதாகவோ, முற்றுமே சமுதாயவாதத்தையுடையதாகவோ இராதபடியால், ஒருநாட்டில் பலவாறான பொருளியல் ஏற்பாட்டுமுறைகள் நிகழும். முதலாண்மை தலைமையாக விருக்கும் நாடுகளில், முதலாண்மை ஒழுங்குகள் தலைமையாகவே இருக்கும். சமுதாயவாதத்தையுடைய நாடுகளில், பெரும்பாலும் சமுதாயவாத ஒழுங்குகளும், இலங்கை போன்ற நாடுகளில் இம்முறைகள் எல்லாமுமே காணப்படும்.

நாம் முதலிலே முதலாண்மை யுருவங்களைக் கொண்ட பொருளியல் ஒழுங்குகளை ஆராய்ந்து பார்ப்போம். பரும்படியாகச் சொன்னால், இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவையாவன :—**தனியுரிமை, பங்குடைமை, கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனி** என்பனவாம். பழைமையான தெளிவான முறையே தனியுரிமை முறையாகும். ஒருவன் தன் உரிமையின் கீழ் ஒரு தொழிலை ஆரம்பிப்பதே இதன் பொருளாகும். இவ்வண்ணம், ஒரு நிலத்துண்டையுடைய ஒருவன், கமக்காரனாகத் தன்சொந்த அலுவல்களை ஆரம்பிக்கலாம். ஒருவன் ஓரூரில் ஒரு கடையைத் தாபித்து, அதைப் பரிபாலிக்கலாம். ஒருமனிதன் பெரியவொரு நெசவுத் தொழிற்சாலையைத் தாபித்து அதைப் பரிபாலிக்கலாம். இவ்வண்ணமாகச் சட்டத்தினால் தவிர்க்கப்படாத தொழில்களைத் தொடங்குவது பற்றி, முதலாண்மைச் சமுதாயத்தில் ஒரு வரையறையில்லை. தனியுடைமை முறையின்கீழ் ஒரு மனிதன் தன் செல்வத்தை, அதாவது நிலங்களையும் பணத்தையும் சிரமத்தையும் இணைத்து, ஒரு தொழிலை ஆரம்பித்துக் கொண்டால், அது அவனுக்கு உரிமையாகலாம். அதனால் நட்டமேற்பட்டால் அவனாலேயே அதுவும் அனுபவிக்கப்படும்.

தனியுரிமை முறையில் சில இலாபங்களுமுண்டு. கிடைக்கும் இலாபங்கள் எல்லாம் தனக்கே கிடைக்கிறபடியால், ஒருவன் தன்வேலையில் சகல முயற்சிகளையும் செலுத்துவான். நட்டங்கள் ஏற்பட்டால், எல்லாவற்றையும் தானே பொறுத்துக் கொள்ளவேண்டுமாதலின், அவன் மிகவும் கவனமாக இருப்பான். அவன் ஆரம்பிக்க யோசிப்பது ஒரு சிறிய தொழிலென்றால், சிறிய மூலதனம் அதற்குப் போதியதாகும். ஒரு மனிதனுக்கு நிலங்கள் இருப்பதால் கமக்காரனுக அலுவல்களை ஆரம்பிக்கச் சிலகருவிகள் மட்டுமே தேவையாகும். ஒரு சிறிய கடையைத் தொடங்கச் சில ரூபாக்கள் போதும். தனி உரிமையாளனை எண்ணும் பொழுது, தொழிலை அதிகரிக்கவாவது குறைக்கவாவது யாதொரு தடையுமிராது. மேலும், தொழிலின் பரிபாலனம் அவனிடமே இருக்கும்.

ஆனல், தனியுரிமைத் தொழில்களால் சில நட்டங்களுமுண்டாகும். ஒரு மனிதன் சுயதொழில்களைக் கொண்டு நடாத்தற்குப் பணத்தைக் கடனுக்கெடுத்திருந்தால், அந்தத் தொழில் பயனற்றுப் போகும்போது எடுத்த அந்தக் கடனைத் தீர்க்க அவனுக்குச் சொந்தமான முழுவதையும் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆதலால், அவனுக்கு வரையறுக்கப்படாதவொரு பொறுப்புண்டு. தனியுரிமையின்கீழ் ஒரு கடைக்காரனல் சுயகடன்காரர்களுக்குள்ள பொறுப்பாகச் சொந்தக் கடையையும் அங்குள்ள பண்டங்கள் எல்லாவற்றையும் வரையறுக்க வியலாது. அவனுடைய ஏனைச் சொத்துக்கள் எல்லாம் கடன் தீர்க்கும் வரை பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

முழுத்தொழிலுமே ஒருமனிதனுடைய அதிகாரத்தின்கீழ் இருக்கிறபடியால் அவனுடைய நோய்காரணமாகவோ சோர்வுகாரணமாகவோ, தொழில் தளர்ச்சியுறக்கூடும். உரிமையாளன் இறந்தபின், தொழில் கெட்டழிய இடமுண்டு. இக்காரணங்களைக்கொண்டு தொழிலை அதிகரிக்க நீண்டகாலக்கடனெடுத்தல் எளிதன்று. அடகுபோன்ற ஒரு பிணையில்லாமல் ஒருவனவது கடன் கொடுக்க விரும்பான். ஆகையால், அவனுடைய தொழிலைப் பெருக்கிக் கொள்ள அவன் கையிலிருக்கும் பொருளையே இணைத்தல் வேண்டும். உரிமையாளன் ஏழையானல், அவனுடைய தொழிலும் சிறிதாகும். உரிமையாளன் பொருளுடையவனனல் தொழிலும் சிறிது பெருகும். சிலதொழில்களுக்கு அதிக பணம் தேவையானபடியால் பணமில்லாதவனுக்கு அத்தொழில்களில் ஈடுபடவியலாது. பணம் உடையவனுக்கு ஓரூரில் ஒரு கடையைத் தாபித்து வைக்க இயலும். ஆனல், அதிக பணம் படைத்தவனுக்கு ஒரு நகரத்தில் ஒரு மருத்துவ சாலையையுமே ஆரம்பிக்கவியலும்.

தனியுரிமை பெரும்பாலும் நிகழ்வது :—வேளாண்மை, சில்லறை வியாபாரம், போசனசாலைப்பரிபாலனம், உணவு ஆக்குதல், அச்சிடுதல், வீடு கட்டுதல் போன்ற சில தொழில்களில் மட்டுமாம். இவை அற்ப மூலதனம் மட்டும் தேவையானவை. பரிபாலகனுக்கும் வாடிக்கைக்காரர்களுக்குமிடையில் தொடர் இருப்பது சாமர்த்தியத்துக்குத் தேவையானதாகும். (உதா : சில்லறை வியாபாரம்) பொருளியல் முறைமூலம் முன்னேறிய அமெரிக்க ஐக்கிய நாடு, பிரித்

தானியா போன்ற நாடுகளிலென்றால், தனியுரிமைமுறை விசாலமாக விருந்தா லும் பொருளியல் விடயத்தில் அவ்வளவு முக்கியமான முறை ஆகாது. ஆனால் இலங்கையைப்போன்ற நாடுகளிலென்றால், தனியுரிமை பொருளியல் விடயத் தில் முக்கியமாக இராவிடினும் மேன்மையானதென்று மதிக்கப்படும் ஒரு முறை யாகும்.

தனியுரிமையின் சிலசோர்வுகளை நாம் அறிவோம். மூலப்பணத்தின் குறைவு காரணமாகத் தொழிலை அதிகரிக்கவோ பெரிதாக்கவோ தனியுரிமையாளனுக்கு இயலாமல் இருப்பது அவற்றுள் முக்கியமாகும். மேலும், ஒரு முதற்பணத் தொகையுடன், தேவையான வேலைகளை ஆரம்பிக்கத் தனியுரிமையாளர்களுக்கு இயல்வதில்லை. ஆனால், பங்குடைமை ஏற்படுவதினால், இந்தச் சோர்வுகள் பல வற்றை நீக்கவியலும். ஒரு தொழிலுக்காக இருவராவது அதற்குக்கூடிய தொகையினராவது சேரும்பொழுதே ஒரு பங்குடைமை அமையும். இந்தப் பங் குடைமையாளர், தொழிலிற் போடவேண்டிய முதற்பணம், தொழிலின் அலு வல்களைப் பரிபாலித்தல், இலாபங்கள் நட்டங்கள் ஆகியவற்றைப் பிரித்துக் கொள்ளுதல் முதலியனபற்றி உடன்பாடுடையர். மேலும், இவர்கள் எல்லோ ரும் தொழில் அலுவல்களில் ஈடுபடுவாராயின், அந்த அலுவல்களுக்குக்கிடைக்க வேண்டிய வேதனங்களையும் இவர்கள் நியமித்துக்கொள்வர்.

தனியுரிமையிலிருந்து உண்டாகும் இலாபங்கள் யாவும் வேறு இலாபங்களு டன் பங்குடைமையாகக் கிடைக்கும். பங்குடைமையாளருக்கு அதிகமான முதற்பணம் சம்பாதிக்க வியலும். ஒருவனுடைமை போலன்றிச் சிலருடைய சாமர்த்தியங்களும் அனுபவங்களும் இங்கு ஒன்று சேரும். ஆகையால், பங்கு டைமைகள் இருக்குமிடத்தில் பரிபாலனத்தைச் சிறக்கும் இயல்புக்கேற்கச் செய்யலாம். உற்பத்திப் பரிமாணத்தை ஓரளவுக்குப் பெரிதாக்கவும் வாய்ப்புக் கிடைக்கும். எப்படியாயினும், பங்குடைமை முறையினால் நட்டங்களுமுண்டா கும். பங்குடைமையாளர் தொகுதிபற்றி ஒருவரையறையில்லை. ஆனால். புதிய பங்குடைமையாளர் ஒருவர் சேரும்பொழுதிலும் பழைய பங்குடைமையாளர் ஒருவர் இளைப்பாறும் பொழுதிலும், விலகும்பொழுதிலும், இறக்கும் பொழுதி லும், ஒப்பந்தத்தை மாற்றவேண்டியிருக்கும். பங்குடைமையாளர்களின் பொறுப்பும் வரையறுக்கப்படுவதில்லை. ஒரு பங்குடைமையாளர் முதற்பணத் துக்களித்த ஆதாவு நூற்றுக்குப் பத்து வீதமானால், இலாபங்களிலிருந்து நூற் றுக்குப் பத்துவீதமே அவருக்குக் கிடைக்கும். ஆனால், தொழில் முறிவுற்ற காலத்தில், அதன் ஆதாயத்தினாலாவது, அதை விற்றாவது கடன் பணத்தைத் தீர்க்கவியலாதானால், அன்னியருக்குத் தீர்க்க வேண்டிய அளவு சொத்துமே இல்லாவிடின், முற்கூறிய பங்குடைமையாளரோ எல்லாம் தீர்க்க வேண்டும். தம் முடைய உடைமைகளையும் கடன் தீர்க்கும்வரை ஒப்புவிக்க வேண்டும். மேலும், பங்குடைமை சார்பாக யாரும் பங்குடைமையாளருக்கு வேலை செய்ய இய லும். ஆனால், அவர்மூலம் ஒரு குற்றம் நிகழ்ந்தால், எல்லோரும் அதற்குப் பொறுப்பாளிகளாக வேண்டும். இன்னும், பங்குடைமைகளில் அகக்கிளர்ச்சி கள் அதிகரிக்க இடமிருக்கும். ஆதலால், ஒரு பங்குடைமை நிகழும் காலவரை

யறை நிலையில்லாததாகும். எனவே, பொருளியல் முறையில் பங்குடைமைகள் அவ்வளவு முக்கியமாக எண்ணப்படமாட்டா. பொதுவாக, சில்லறைவியாபாரம், தொகைவியாபாரம் தொழில் சம்பந்தமான உத்தியோகம் ஆகியவற்றிலேயே பங்குடைமைகள் தங்கி இருக்கின்றன.

சில நாடுகளிலுள்ளதும், வேறு சில நாடுகளில் வளர்ந்து கொண்டேயிருப்பதுமான சிறந்த பொருளியல் முறையாவது, கூட்டுப்பங்குத் தொகுதிக் கப்பனி முறையாகும். இதற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டில் "கூட்டுறவு" என்ற பெயர் வழங்கும். இது கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனித்தொழில்களைப் பரிபாலிக்கும் பொருட்டு அமையும் சங்கமொன்றாகும். தொழிலுக்குத் தேவையான நிதியைச் சின்னப் பங்குகள் பலவாகப் பிரித்து, இப்பங்குகளை விலைகொடுத்து வாங்க ஒழுங்குபண்ணி, நிதிக்குப் பங்காளராகக் குடிசனங்கள் சேர்க்கப்படுவார்கள். இலங்கையர் சிலர், ஒரு நெசவுத்தொழிற்சாலையைத் தாபித்து வைக்க எண்ணி, அதற்குத் தேவையான முதற்பணம் ரூபா 2,000,000 எனத் தீர்மானித்தார்கள் என வைப்போம். அப்படியாயின், அதனை ரூபா 100 கொண்ட 20,000 பங்குகளாகவாவது ரூபா 10 கொண்ட 200,000 பங்குகளாகவாவது பிரிக்கலாம். முதலில், தீர்மானித்த கூட்டம், இப்பங்குகளுள் இயன்ற அளவு வாங்கி எஞ்சிய அளவைக் குடிசனங்களிடையே விற்குமுன், கூட்டத்தினர் சில சட்டங்களை அனுசரிக்க வேண்டும்.

பங்குகளை விலைகொடுத்து வாங்குபவர்கள் தொழிலின் பங்காளர்களாயினும், அவர்களின் பொறுப்பு, தாம் சம்பாதித்த பணத்தின்படி வரையறையாதலே முக்கியமான அங்கமாகும். ஒருவன் ஒரு கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனியின் ரூபா 1000 விலைமதிப்புள்ள பத்துப் பங்குகளை வாங்கினால், சங்கம் முறிவுற்றாலும் அவன் கையிலிருந்து அழிந்து போகக்கூடிய தொகை ரூபா 1000 மட்டுமே. தொழிலின் கடனைத்தீர்க்க அவன் தன் ஏனைய உடைமைகளைப் பணையம் செய்ய வேண்டியதில்லை. கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனியொன்றைத் தாபித்தபின், அதன் உரிமையாளர்களுக்கும் பங்காளர்களுக்கும் கம்பனியின் பரிபாலன வேலைகளுக்காக இயக்குநர்களின் ஒரு குழுவை நியமிக்க அதிகாரமுண்டு. கம்பனியின் அலுவல்களிலிருந்து இலாபங்கள் கைப்பட்டால் இயக்குநர் சில நேரங்களில் அவற்றுள் ஒரு பங்கை எதிர்காலத்திற்கெனக் காப்பாக வைப்பர். ஏனைய பாகங்கள் பங்காளர்களால் கொடுக்கப்பட்ட பணத்தின் அளவுப்படி அவர்களுக்குள் பிரித்து விடப்படும். 20,000 பங்குகளுள்ள ஒரு கம்பனியில் பிரித்து விடுகிறவர்களுக்கு இலாபம் ரூபா 200,000 என்றால், ஒரு பங்குக்கு 10 ரூபாவாகக் கிடைக்கும். இது பங்கிலாபம் என்று சொல்லப்படும். ஒரு பங்கின் விலை 10 ரூபா ஆனால், பங்கிலாபமாகப் பத்துக்கிடைத்தபடியால் ஒரு பங்கிலாபம் 10% என்று சொல்லப்படும்.

இப்படிப் பரும்படியாகக் குறிக்கப்பட்டது, கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகளின் முக்கியமான அங்கமாகும். இது பொதுமாதிரியானதெனினும் இதிற் பல வேறுபாடுகள் இருக்கக்கூடும். சில நேரங்களில் சிறிது காலங்கழிந்தபின்

முன்னேறுவதற்காக இப்படிப்பட்ட கம்பனியொன்றுக்கு மேலும் பணம் அவசியமாகலாம். ஒரு கம்பனிக்கு இப்பணத்தைப் பெறப் பலவழிகள் உண்டு. **உடன்படிக்கை** என்றழைக்கப்படும் வாக்குறுதிப்பத்திரங்களைப் போன்ற ஒரு வழியில் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அவை ஒவ்வொரு பெயரால் அச்சிடப்படும். அதாவது, அவற்றை விலைகொடுத்து வாங்குபவனுக்கு, சீட்டிற் குறிக்கப்பட்ட நாள்வரை 6% வட்டி செலுத்த வாக்குறுதியளிக்கும் ரூபா 100 ஒப்பங்கொண்ட சீட்டாகும். இது ஒரு குறித்த நாளில் இதன் சொந்தக்காரனுக்குக் குறிக்கப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப் பொருந்தும் வாக்குறுதிப் பத்திரமாகும். எப்படியாவது, கம்பனியின் அலுவல்கள் அவ்வளவு பயன்படாவிடின், எல்லாவற்றிற்கும் முன்னமே, அதற்குக் கிடைக்கும் மொத்த ஆதாயத்தினுல் வாக்குறுதிப் பத்திரங்களின் வட்டியும், குறிக்கப்பட்ட நாட்கள் எய்தும்பொழுது முதற் பணமும், செலுத்தப்படும்.

மற்றையது **தேர்வுப்பங்கு** முறையாகும். இதன்படி, தொழிலுக்கு இலாபங்களாவது நட்டங்களாவது உண்டாகும். ஆனால், தேர்வுப்பங்குகளை விலைகொடுத்து வாங்கியவனுக்கு நியமிக்கப்பட்ட பங்கிலாபங்களைச் செலுத்த வாக்குறுதியளிக்கப்படும். கம்பனிக்கு இலாபங்கள் உண்டானால், முதலிலேயே வாக்குறுதிப் பத்திரங்களில் பணமும் வட்டியும் செலுத்தப்படும். அடுத்தபடியாக, தேர்வுப்பங்குகளில் நியமிக்கப்பட்ட பங்கிலாபம் செலுத்தப்படும். கடைசியாகச் செலுத்துவது சாதாரண பங்காளர்களின் பங்கிலாபமாகும். ஒரு வருடத்துக்குள் வாக்குறுதிப்பத்திரங்கள் உரிமையாளர்களுக்கு வட்டியாவது முதற் பணமாவது செலுத்தப்படும். அதற்குப்பின், தேர்வுப் பங்குரிமையாளர்களின் நியமிக்கப்பட்ட பங்கிலாபங்களையும், சாதாரண பங்காளர்களுக்கு ஒரு பங்கிலாபத்தையும் செலுத்தக் கம்பனிக்கு யாதும் மிஞ்சாமல் இருக்கலாம். ஆனால், அடுத்த வருடத்தில் எல்லோருக்குமே செலுத்தக் கூடியவளவு இலாபம் கம்பனிக்குக் கிடைக்கக்கூடும். அப்பொழுது தேர்வுப்பங்காளர்களுக்கு, கம்பனியானது இலாபங்கள் இல்லாமையால் பல வருடங்களாகச் செலுத்த முடியாமலிருந்த நிலையான பங்கிலாபங்களின் முழுத்தொகையையும் செலுத்தும், பின்னர், சாதாரண பங்காளர்களின் பங்கிலாபங்கள் செலுத்தப்படும். தேர்வுப் பங்குகள் குறிந்த தேர்வுப்பங்குகளாகும் பொழுதே இது இப்படி நிகழும். தேர்வுப்பங்குகள் கம்பனியினுல் மறுபடி விலைகொடுத்து வாங்கக்கூடுமானுல், அவை **அழைக்கக்கூடியபங்குகள்** என்று பெயர்படும். அவற்றை உரிமையாளனுல் முதலில் நியமிக்கப்பட்ட ஒரு விலையளவின்படி சாதாரண பங்குகளுக்கு மாற்றிக் கொள்ளவியலுமானுல், அவற்றை **மாற்றவேண்டிய பங்குகள்** என்று சொல்லலாம்.

கம்பனிக்கு இலாபங்கள் அமையும்பொழுது, ஒரு சாதாரணபங்குடையவனுக்கு ஒரு பங்கிலாபம் கிடைக்கும். கம்பனிக்கு இலாபங்கள் இல்லாதபொழுது சாதாரண பங்காளர்களுக்குப் பங்கிலாபங்கள் இல்லாமற்போகும். மேலும், ஒரு பங்கு ஒரு வாக்குரிமையாக எண்ணப்படுவதால், சாதாரண பங்காளர்

களுக்கும் கம்பனியில் ஒரு வகையான பரிபாலன அதிகாரம் இருக்கும். இவ் வண்ணம் நூறு பங்குகள் உடையவனுக்கு நூறு வாக்குரிமைகளுமுண்டு. ஒரு முன்னுரிமைப் பங்காளர், ஒரு சாதாரண பங்காளரைப்போல ஓராபத்தையும் தாங்குவதில்லை. சாதாரண பங்காளனொருவனுடைய பங்கிலாபத்தைச்செலுத்து முன், ஒரு முன்னுரிமைப் பங்காளனுக்கு நியமிக்கப்பட்ட பங்கிலாபம் செலுத் தப்படுவது இதன் காரணமாகும். வாக்குறுதிப் பத்திரங்களைத் தாங்குகிறவ னுக்கு, எல்லாவற்றிற்கும்முன், வட்டி செலுத்தப்படும். ஆதலால், அன்னியரைக் காட்டிலும் அவனுக்கு இடையூறுகள் குறையும். ஆனால், கம்பனி முறிவுற்றால் இவையெல்லாவற்றிற்கும் நட்டமேற்படும். வாக்குறுதிப் பத்திரங்கள் உரிமை யாளர்களுக்கும், தேர்வுப்பங்குகளின் உரிமையாளர்களுக்கும் பரிபாலன அதி காரமில்லை.

கூட்டுப்பங்குத்தொகுதிக் கம்பனி முறையில் பல இலாபங்கள் உள. பெரிய அளவான ஒரு தொழிலுக்குத் தேவையான பெரிய முதற்பணத்தையாயினும் இப்படிப்பட்ட தாபனங்கள் மூலம் தேடிக்கொள்ளலாம். கூட்டுப்பங்குத் தொகு திக் கம்பனியானது. சட்டத்துக்குள் அடக்கிய ஒரு தாபனமாகும். அது சட்டத் தின்முன் ஒருவனைப்போல எண்ணப்படுவதால் அதன்மேல் குற்றஞ்சாட்டவோ, அன்னியர்களால் வழக்குத் தொடரவோ இயலும். மேலும், கம்பனி முடிக்கும் வரையில் அது நித்தியமாகவே நிகழும். ஒரு பங்காளன், அல்லது பங்காளர்கள் சிலர் இறத்தலினால் கம்பனிக்கு எதாவதொரு வேறுபாடும் நிகழ்வதில்லை. பங் காளர்களுக்குரிய பங்குகளை அன்னியருக்கு விற்க இயலும், அதனால், கம்பனி முடிக்கும்வரை, காத்துக்கொண்டிருக்காமல், அவர்களுக்குத் தங்கள் முதற் பணத்தைப் பெற்றுக்கொள்ளவியலும். அவர்கள் எடுத்த பங்குகளின் பெறு மதியின்படி, பொறுப்பும் வரையறுக்கப்படுமாதலால், பலர் இக்கம்பனிகளின் பங்குகளை வாங்கவிரும்புவார்கள். இவ்வழியில் பல சனங்களினுடைய அற்ப மான சேமிப்புக்களைப் பொருளியல்முன்னேற்றத்துக்காகத் திரட்டிக் கொள்ள லாம். ஆகையால், இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில், இப்படிப்பட்ட ஒழுங்கு முறையொன்றுமிகவும் துணைசெய்யும்.

இந்தக் கம்பனிகளின் உரிமைகள் பலரிடையில் பரம்பி இருக்கின்றன. எனி னும், போதியவளவு பங்குகளையெடுத்த சில பங்காளர் மூலம் சகல கம்பனிகளை யும் பரிபாலிக்க இயலுமென்று அனுபவத்திற் காணப்பட்டுளது. முழுப் பணத்தி லிருந்து பொதுவாக 20% ஆவது 10% ஆவது உரிமையுள்ள சில பேருக்குக் கம்பனியில் அலுவல்களைப் பரிபாலிக்க இயலுவது, பங்காளர்கள் எல்லோரும் கம்பனியின் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காதபடியாலேயாம். ஆதலால், பரி பாலிக்கும் கம்பனி முறைகள் சார்பாக, சில பேருக்குக் கூட்டுப்பங்குத் தொகு திக் கம்பனியொன்றைப் பரிபாலிக்க இயலக்கூடும். ரூபா 10,000 பெறுமதி யுள்ள ஒரு பங்காளருக்கு முதற்பணத்திலிருந்து ரூபா 100,000 உள்ள ஒரு கம் பனியைப் பரிபாலிக்கவியலும். அப்படியென்றால், முற்கூறிய கம்பனி ரூபா 1,000,000 உக்கு முதற் பணமுள்ள வேறொரு கம்பனியின் பங்குகளிலிருந்து 10 % விலைகொடுத்து வாங்கினால், முற்கூறியபங்காளனுக்கு முதற்பணத்தில்

ரூபா 1,000,000 உள்ள கம்பனியைப் பரிபாலிக்களியலும். யாதுமொரு தத்துவ மில்லாதவர்களுக்கு இவ்வதிகாரம் கிடைத்தால், அவர்களுடைய வாக்குரிமையே உபயோகித்து இயக்குநர் குழுவுக்குட் புகவோ, இயக்குநர்களாகப் பெரிய வேதனங்களைப் பெறவோ அவர்கள் முயல்வர். மறுதரப்பில் உயர்ந்த வேதனங்களைப் பெறும் நிருபகர்களின் கையில் முக்கியமான அலுவல்கள் எல்லாவற்றையும் வைத்து இயக்குநர் குழு சிலசமயங்களில் முயற்சியற்றிருக்கும். இதுவும் குடியாட்சிக்குரிய நல்ல அங்கமாகாது. சிலநேரங்களில், சிலர் எதாவதோரெதிர்கால நலனுமில்லாத கம்பனிகளைத் தாபித்து, தமக்கு ஒப்புக்கொண்ட பங்குகளைப் பொய்ப்பிரசாரத்தினல் அதிகவிலைக்குப் பணங் கொடுத்து வாங்கப் பொதுசனங்களை வற்புறுத்துவர். இப்படி அவர்கள் அநியாயமாகச் செல்வதைப் படைக்கும்போது. பொது சனங்கள் துன்பமடைவார்கள். இக்காரணங்களைக் கொண்டு பல நாடுகளில் அரசியல்கள் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனி ஏற்பாடுகளை அமைத்து, அவற்றில் அலுவல்களைக் கவனத்தோடு பார்த்துக்கொள்வது பொது சனங்கள் ஏமாறுவதைத் தடுக்கும் பொருட்டேயாம்.

இலங்கை போன்றநாடுகளில் தனித்த **வரையறுக்கப்பட்ட பொறுப்புச் சங்கங்கள்** என்ற பெயரால் குறிக்கப்படும் வேறு மாதிரியான ஒரொழுங்குண்டு. கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகளுக்கு ஒப்பான தத்துவங்களின்மேலேயே இது செயற்படும். ஆனல், இதன் பங்குகள் பொது சனங்களுக்கு விற்கப்படுவதில்லை. வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய பாதுகாப்போடு ஒரு தொழிலுக்காகச் சில பேருக்கு ஒன்றுபட இவ்வொழுங்கு வழிவகுக்கும்.

பொருளியல் ஒழுங்குக்குரிய தனி விவசாயத்தின் அமிசம் இப்படிப்பட்ட ஒழுங்குகளின் கீழே இயங்கும். ஆட்களோ, தனிக்கூட்டத்தினரோ, இலாபங்களைப் பெறும்வேட்கையினல், இப்படி விவசாயத்தில் ஈடுபடுவர். முதலாண்மையைத் தலையாகக்கொண்ட சமுதாயங்களில் முற்குறித்த பொருளியல் ஒழுங்கு முறைகள் பெரும்பாலும் இருக்கின்றன. ஆனல், சமுதாய வாதத்திலிருந்து பெற்ற கடினமான கண்டிப்புக் காரணமாகவும், பேணல் அரசின் அபிவிருத்திகாரணமாகவும், இன்று உலகத்தில் எந்தநாட்டிலாவது பொருளியல் முறை தனிவிவசாயமூலம் மட்டும் பரிபாலிக்கப்படுவதில்லை. வெவ்வேறு ஏதுக்கள் காரணமாக, வெவ்வேறு சமயங்களில் அரசு சில தொழில்களை நடாத்துகின்றது. சில சமயங்களில் இவற்றை முழுவதுமே ஏற்று இயங்குகின்றது. முதலாண்மை முறையில் முன்னேற்றமடைந்தநாடு பிரித்தானியாவாதலால், இங்கு அதனைக் கவனிப்பது மிகவும் ஏற்றதாகும். 1945 ஆம் ஆண்டில் தொழிற் கட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு முன்னர், பொது சன சேவைகளெனக் குறிக்கப்பட்ட சில தொழில்கள் பொதுப் பரிபாலனத்தின் கீழ் இருந்தன. பிரித்தானிய பெரிய அரசு, தபாற் சேவையைப் பரிபாலித்தது. பிரித்தானிய நகரசபைகள் வாயுவையும் மின்சத்தியையும் மாகாணங்களுக்குரிய போக்குவாத்தையும் பரிபாலித்தன. கனிப்பொருணெய் தூய்மையாக்கல், இரும்பையும் உருக்கையும் ஆக்குதலைப்போன்ற மூலத்தொழில்களைப் பற்றி அரசாங்கம் பொறுப்பெடுத்தல் வேண்டும் என்ற கொள்கை, இன்று ஆசியநாடுகளில் வேரூன்றியிருக்கின்றது.

காரணம்யாதாயினும், இன்று சமுதாயவாதம் சுவருத நாடுகளிலுமே அரசிய லால் பரிபாலிக்கப்படும் சில தொழில்கள் உள. அவை ஒரு தொகுத்த ஒழுங்கு முறையின்கீழ் நடக்கும். முதற்படியாக அரசாங்கப்பகுதி, அல்லது மந்திரிப் பகுதி அமையும். தொலை பன்னிச் சேவை, தந்தியனுப்பல் முறை, தபாற் சேவை, வானொலி பெருக்கு சேவை முதலியவை, இலங்கையிலும் இந்தியாவிலும் அர சாங்கப் பகுதிகளால் பரிபாலிக்கப்படுகின்றன. வாயு, மின்சத்தி, நீர்ப்பாநீடு முதலியவை பிரித்தானியாவில் நகரசபைகளாற் பரிபாலிக்கப்படும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் பிரித்தானியாவிலும் பலவிதமான தொழில்களை நடாத்துதற் பொருட்டு ஆட்சிச் சபைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிறநாட்டு வர்த்தகத்தொடர்புச்சபை, பிரித்தானியாவில் **மாற்றுச்சம மாக்கும் சங்கங்கள்** முதலிய தாபனங்கள் தொழில் நடாத்தும் தாபனங் களாகும்.

பொதுக் கூட்டுறவு முறையே பெரிதும் வழங்குகின்றமுறையாகும். இம்முறை யின்படி, அரசாங்க உரிமையின் கீழ் நிகழும் ஒரு தொழில், அரசாங்கத்தினல் நியமிக்கப்பட்ட ஒரு கூட்டுறவு மூலம் பாலனமாகும். இப்படிப்பட்ட ஒரு கூட் டுறவானது அரசாங்கப் பகுதி ஒன்றைக்காட்டிலும் சுயாதீன முடையதாகும். தத்துவங்களை நிச்சயிக்கும் அதிகாரம் அரசுரிமையில் நிகழும் பொழுது, தொழில்களைப் பரிபாலிக்கும் சுயாதீனம் சில வரையறைகளுக்குள் கூட்டுறவுக் குண்டு. இவ்வண்ணமாக, முயற்சிப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதில் வேட்கை, ஆண்மை, ஆராய்ச்சி, முதலியன தனி விவசாயத்தினல் கிடைக்கும் இலாபங்களைக் கூட்டுறவுக்குக் கொடுக்க எத்தனிக்கலாம். பொதுக் கூட்டுறவாக எதையாவது பரிபாலிப்பதின் நோக்கமாவது, அதற்கு நட்டமேற்படா வண்ணம் நன்ருகச் சேவை செய்வதேயொழிய இலாபங்களைத் திரட்டுவதன்று. இவ் வண்ணமாக, முதலாண்மைக்குரிய விவசாயத்தின் தளர்ச்சிகளை நீக்குதற்கு எத்தனிக்கப்படும். பல நாடுகளில் பொதுக் கூட்டுறவுகள் பெரிதும் பயனுள்ளன வாக இருக்கின்றன. ஆனல், இவற்றின் காரணமாகத் தோன்றிய சிக்கல்கள் பல இன்னும் தீர்க்கவேண்டியவையாக உள.

கலப்புத்தொழில்முறை என்றபெயரால் குறிக்கப்படும் இன்னுமோரொழுங்கு உண்டு. இங்கு, பலவிதமான தொழில்களைப் பரிபாலிக்கும் பொருட்டு அரசாங் கம் ஆட்களோடு இணங்குகின்றது. பிராஞ்சு இராச்சியம் நாற்பதுக்கு மேலான தனிச் சங்கங்களோடு கூடி, பேசும்படங்களை அமைத்தல், மண்ணெண்ணெய் வடித்தல், வானொலிபெருக்கல், முதலியவற்றைப் பரிபாலிக்கின்றது. இம்முறை சேர்மனி—பெல்சியம் போன்ற நாடுகளிலும் இருக்கின்றது. இந்தியாவில் உருக்கு வெடிமருந்து என்பன ஆக்கும் தொழிற்சாலையொன்று இம்முறையில் பரிபாலிக் கப்படுகின்றது. பிரித்தானியாவில் இம்முறையின் கீழ் ஒழுங்காகியதொழிலென. **ஆங்கில இரானிய எண்ணெய்க் கம்பனியைக்கூறலாம்.**

பொதுத் தாபனங்கள் மூலம் பொதுசனநலத்துக்கோ, மனிதரின் தனி இலாபப் பொருட்டோ பரிபாலிக்கப்படாத, இன்னுமொரு தொழிலேற்பாட்டு முறையுள்ளது. இது சமுதாயவாதத்துக்குரிய தொழில் முறையாகும். இது

கூட்டுறவுச் சங்கமுறையுமாகும். கூட்டுறவுச் சங்கங்களை முக்கியமாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, நுகர்ச்சிக்குரிய சங்கங்களும் உற்பத்திச் சங்கங்களுமாகும். முதற்பிரிவில், நுகருமொரு கூட்டம்சேர்ந்து அக்கால நிகழ்ச்சி விலைக்கு நல்லபண்டங்களையும் சேவைகளையும் பெறும் பொருட்டு, முதற்பணத்தைத் திரட்டி, ஒருசங்கத்தைத் தாபித்துக் கொள்ளும். சங்கத்துக் கோர் இலாபம் உண்டானால் அங்கத்தினர் பண்டங்களை வாங்கிய அளவின்படி இலாபமும் பிரித்துக் கொள்வர். முதற் பணத்துக்களித்த ஆதரவு எவ்வளவானாலும், ஓரங்கத்தினருக்கு ஒரு வாக்குரிமையே இருக்கிறபடியால், இச்சங்கங்கள் குடியரசு முறைப்படி ஒழுங்காக்கப்பட்டிருக்கும். உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களாக கூட்டங்கள் இணங்குவது, தங்கள் பண அளவை ஒன்று சேர்த்து, பரும்படிறயாக்கத்தின் இலாபங்களைப் பெறும்பொருட்டேயாம். இன்றேல், அனுபவிக்கிறவர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்குமிடையில் **"நடுவர்கள்"** வருதல் காரணமாகத் தங்கள் ஆதாயத்துக்கு ஏற்படும் நட்டங்களை நீக்கும் பொருட்டேயாம்.

இந்தப்பொருளியல் ஏற்பாடுகளுள், அரசாங்கப்பகுதிகளையும் கூட்டுறவுச் சங்கங்களையும் பற்றி வேறோரிடத்தில் விரிவாகக் கூறப்பட்டுளது. (இலங்கையும் நாட்டுமக்களும் என்ற நூலைப்பார்க்க). முதற்கண். பொதுக் கூட்டுறவுகளை விவரமாக ஆராய்ந்துபார்ப்போம். பொதுக்கூட்டுறவுகளும் பலவிதத்தில் கூட்டுப்பங்குத்தொகுதிக் கம்பனிக்கு நிகராகும். ஆனால், அரசாங்கத்துக்கேனும், ஒரு நகர சபைக்கேனும் அன்றி, தனிப்பங்காளர்களுக்கு அது சொந்தமாகாது. பொதுசன நலத்துக்காக வேலைகளைச் செய்வதைத்தவிர, இலாபங்களைத் திரட்டுதல் அதன் நோக்கமாகாது. கூட்டுறவுச்சங்கமாதலால், பொதுக் கூட்டுறவுச்சங்கங்களும் ஒரு கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனியைப் போல், சட்டத்தின் முன்னிலையில், தனி ஒருவனுகவே கருதப்படும். ஆதலால், அதற்கு வழக்குச் சாற்றவோ, பிறரால் வழக்குத் தொடரவோ இயலும். சாதாரண வர்த்தக சங்கத்தைப் போல, அதற்கு வழக்கிடமுடியும். ஆகையால், அரசாங்கப்பகுதியைப் போல அது அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதியாகாது.

பொதுக்கூட்டுறவுச்சங்கங்கள் மாதிரியிற் பலவிதமாகும். ஆனால். ஒவ்வொன்றும் மாதிரிச் சட்டத்துக்குள்ளாகி இருக்க வேண்டும். கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனியைப் போல ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இயக்குநர் கூட்டமூலம் பரிபாலிக்கப்படும். இயக்குநர் கூட்டத்தின் அங்கத்துவம் சட்டத்தினால் வரையறுக்கப்பட்டுள்ளது. சில சமயங்களில் அங்கத்துவத்துக்கு, **மேலென்றும் கீழென்றும்** வரையறைகள் ஏற்றப்படும். அப்பொழுது, அரசாங்கமூலம் பரிபாலிக்கப்படும் ஒரு கூட்டுறவுச் சங்கத்தில், மந்திரியானவர், இவ்வரையறைகளிடையில் அங்கத்தினர் எத்தனை பேர் இருக்கவேண்டுமென்று நிச்சயிப்பார். பொதுக்கூட்டுறவுச்சங்கங்களிற் பரிபாலனக் கூட்டத்தின் அங்கத்தினர்குறித்த சில ஆண்டுகளுக்கு மந்திரியினால் நியமிக்கப்படுவர். சட்டத்துக்குட்பட்ட சில ஏதுக்களைக்கொண்டு மந்திரிக்குச் சில அங்கத்தினர்களை உத்தியோகத்திலி

ருந்து அகற்றிவிடவுமியலும். இறைசேர்சாலேயின் அனுமதியோடு அங்கத்தினர் களின் வேதனம் மந்திரியினுல் அவர்களை நியமிக்கப்படும்பொழுதே நிச்சயிக்கப் படும். மேலும், அப்படி நியமிக்கப்பட்டவர்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுற் பரிபாலிக்கப்படும் தொழில்களைப் பற்றிய அறிவும் அனுபவமும் இருக்க வேண்டு மென்றும் பொதுவாகக் கூறப்படும்.

பொதுக் கூட்டுறவுச் சங்கத்தின் தத்துவங்களை நிச்சயித்தலும், அவற்றை இயக்குதலும் வகுக்கப்படும். தத்துவ நிச்சயம் அரசுமூலம் நடைபெறும். அதன் படி, மந்திரிக்குப்பொதுவாகக் கட்டளையிடுவதில் அதிகாரமுண்டு. அப்பொழுது, கூட்டுறவுச் சங்கமூலம் அவற்றைச் செயலாக்க வேண்டிநேரும். தொழிலின் அன் ருடைப் பரிபாலனம் கூட்டுறவுச்சங்கம்போல் இருக்கும். பிரித்தானியாவிலென் ருல் பொதுக் கூட்டுறவுச்சங்கங்கள் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தொழிற் சங்க அபிப்பிராயங்களை விசாரித்து, பொதுத்தீர்மானங்களை நிறுவும். பிரித்தானியாவில் பொதுக்கூட்டுறவுச்சங்கங்களின் செலவுகளைப் பற்றியும் சேவைகளைப் பற்றியும் வாழ்க்கை அமைப்புக்கள் பற்றியும் கூட்டங்கள் மூலம் மந்திரிக்கு ஆலோசனை கூற வழிவகைகள் உண்டு.

வேறு ஏற்பாடுகளுக்குப் போலவே பொதுக் கூட்டுறவுச் சங்கங்களின் தொழில் களுக்கும் முதற்பணம் தேவை. சில சமயங்களில், அரசாங்கம், இந்தக்கூட்டுற வுச் சங்கங்களுக்குத் தேவையான முதற்பணத்தைக் கொடுக்கின்றது. ஆனுல், அதைப்பின்னர் அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டியிருக்கும். வாக்குறுதிப் பத்திரங்களைப் பொதுசனங்களுக்கு விற்பதினுலும் இந்தக் கூட்டுறவுச்சங்கங் கள் மூலம் முதற்பணம் தேடிக் கொள்ளக்கூடும். பொதுவாக, இறைசேர்க்கும் சாலே வாக்குறுதிப்பத்திரவட்டிக்குப் பிணையாகி, அதை மறுபடி செலுத்தும் பொறுப்பைத் தாங்கும். ஆகையால், பொதுக் கூட்டுறவுச்சங்கங்கள் வெளியிடும் வாக்குறுதிப்பத்திரங்கள் பொதுசனங்களின் மனதைக்கவரும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தினுற் கடனெடுக்கக் கூடிய பண அளவு மந்திரியினுலும் இறைசேர்க்கும் சாலேயினுலும் நியமிக்கப்படும். பொதுக்கூட்டுறவுச்சங்கத்திற் கணக்குப் புத்த கங்களும் ஒரு நல்ல தனித்தாபனத்திற் போல் கிரமமாக இருக்கவேண்டும். இதற்காக, மந்திரியானவர் கணக்குப் பரீட்சகரை நியமிப்பர். பொதுக்கூட்டுற வுச் சங்கத்தின் வரவுசெலவுத் திட்டத்தையும் கணக்குப்பரீட்சகரின் அறிக்கை யையும் மந்திரியானவர் பாராளுமன்றச் சபையின் முன் வருடந்தோறும் சமர்ப் பிக்கவேண்டும். மேலும், ஒவ்வொரு பொதுக்கூட்டுறவுச்சங்கமும் ஒரு வருடாந்த அறிக்கையை ஒழுங்கு பண்ணி, மந்திரிகள் சபையின் முன் சமர்ப்பிக்க வேண் டியதாயிருக்கும். இது மந்திரிகள் சபையிலே யோசிக்கப்படும்.

இவ்வண்ணமாக, பொதுக்கூட்டுறவுச்சங்கம் அமைக்கப்பட்டிருப்பது, பெரிய பரிமாண உற்பத்தியின் இலாபங்கள் இளகுதன்மை, முயற்சி, போன்றவாகிய தனித்தாபனங்களால் அமையும் இலாபங்களைப் பெறுதற் பொருட்டும் ஆக்கத் தேவைகளைச் சம்பாதித்தற்பொருட்டும் தனி இலாபங்களைத் திரட்டுதற் பொருட்டுமன்று. மூலத் தொழில்களைத் தேசியமாக்கவும் பரிபாலிக்கவும் இத

னால் முடியும். இதனால் சமுதாயத்திற்கு யாதாயினுமொரு பொறுப் பில்லாத ஆட்களின் கைக்கு மிகப்பெரிய பொருளியல் அதிகாரம் கிடைப்பதுநீங்கிவிடும். ஒரு பொதுக் கூட்டுறவுச்சங்கம் சில வழிகளில் மந்திரியின் பொறுப்பில் அமைதல் வேண்டும். மந்திரி மூலம் கூட்டுறவுச் சங்கமும் பொது சனங்களுக்கு உதவுதல் வேண்டும்.

மேலும், பொதுக்கூட்டுறவுச் சங்கங்கள் சில சிக்கல்களை அவிழ்க்க அவை காரணமாக வேறு பிரச்சினைகள் தோன்றும். தனித் தாபனங்களைப் போல, இலாபங்களைப் பெறும்பொருட்டு இயன்ற அளவு சுவாதீனமாக இருப்பதுடன், தேசியபரிபாலனத்துக்கு எங்ஙனம் இந்தக்கூட்டுறவுச் சங்கங்களை அடக்கவேண்டும் என்பது, ஒரு சிக்கலான பிரச்சினையாகும். இவ்வண்ணம் பொதுக் கூட்டுறவுச்சங்கங்கள் இன்னும் பரீட்சிக்கும் நிலையிலேயே இருக்கின்றன. காலம் செல்லச் செல்ல பரீட்சையின் பலன் கிடைக்கவே, சிக்கல்களை அவிழ்க்கும் வழிகளும் அமையும். இலாபம் பெறுதலை அளவு கோலாக வெடுக்காமல், கூட்டுறவுச் சங்கத்தின் ஆற்றலை, அல்லது நிபுணநிலையை அளக்க மாற்றுமுறைகளைத் தேடிக் கொள்ளல்வேண்டும். ஒரு பொதுக்கூட்டுறவுச் சங்கம் ஒரு தொழிலை நடாத்தும் அமிசத்துக்குரிய ஒருதனித் தொழிலுக்கும் இடம் கொடுத்தல் வேண்டுமா என்பதைத் தீர்மானிப்போம். மேலும், அனுபவிப்பவர்களின் உண்மையான தேவைகளைப் பொதுசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவிக்கும் வழிகளையும் தேடிக் கொள்ளல்வேண்டும். பொதுக்கூட்டுறவுச் சங்கங்கள் நுகருபவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தாபிக்கப்பட்டனவாகும்.

## 4 ஆம் அத்தியாயம்

# கலைச்சொல் வரிசை

1. சிறக்குமியல்பு ... ... Specialization
2. தொழிற்பிரிப்பு ... ... Division of Labour
3. நியமமாக்கல் ... ... Standardize
4. சிற்றளவு ... ... Small-scale
5. பரும்படி ... ... Large-scale
6. தொழின்முறைக்குரிய ... Technical
7. ஆளுகைக்குரிய, நிருவாகத்துக்குரிய ... ... Managerial
8. கழிவு, சாட்டுதல் ... ... Discount
9. முயற்சியாளன் ... ... Entrepreneur
10. தனியுரிமை ... ... Monopoly
11. தாழ்வெல்லை ... ... Minimum
12. நம்பிக்கை-ஒப்படைப்பு ... Trust
13. உடைமைக்கம்பனி ... Holding-Company
14. கிடைச்சேர்க்கை ... ... Horizontal Combination
15. நிலைக்குத்துச்சேர்க்கை ... Vertical Combination
16. பக்கமான சேர்க்கை ... Lateral Combination
17. பிரதேசச்சேர்க்கை ... Territorial Combination
18. தனியுரிமையாளன் தன்மை ... Individual Proprietorship
19. பங்குடைமை ... ... Partnership
20. கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனி ... ... Joint-stock company
21. வரையறுக்கப்படாத பொறுப்பு ... Unlimited liability
22. கூட்டுறவு ... ... Corporation
23. காப்பு, ஒதுக்கம், காப்பொதுக்கல் Reserve
24. பங்கிலாபம் ... ... Dividend
25. உடன்படிக்கை ... ... Bond
26. முன்னுரிமைப் பங்குகள் ... Preference Share
27. திரட்டிய முன்னுரிமைப் பங்குகள் Cumulative Preference Shares
28. நடுவன் ... ... Middleman

## 5 ஆம் அத்தியாயம்

# மனிதனுடைய தேவைகளும் அவற்றைத் தணித்தலும்

*இரண்டு மூலகாரணங்களைக் கொண்டு பொருளியல் விமரிசனம் தோன்றும். மனிதனுக்குத் தேவைகள் பலவுள. மனிதனுடைய முயற்சியினுலேயே இத் தேவைகள் நிறைவேறவியலும்.*

அடிப்படைப்பிரிவில் மனிதனும் ஒரு பிராணி வகையினனுவான். நடாத்துதற்காகவும் இனத்தைப் பெருக்குவதற்காகவும் மூல தேவைகள் எவையேனும் மனிதனுக்கு அவசியமாகும். உணவும் உவந்த உடையும், புகலிடமும், தேவையாகும். இவையெல்லாவற்றையும் மூலதேவைகள் என்று சொல்லலாம். மற்றைய பிராணிகளுக்கும் இந்த மூலதேவதைகள் உண்டு. அவை கிடைக்கும்பொழுது மற்றைய பிராணிகள் திருத்தியடைகின்றன.

ஆனுல், ஏனைய பிராணிகளைப்போல நடத்தற்பொருட்டும் பரம்பற் பொருட்டும் இன்றியமையாத மூலதேவைகள் கிடைப்பதால் மட்டும் மனிதன் திருத்தியடையமாட்டான். மனிதன் இனிமையான-நல்ல-உணவுகளை அருந்துதலால் திருத்தியடைவான். அவன் உட்டணத்தைப்பெறும் பொருட்டு மட்டும் உடைகளை அணிவதில்லை. நன்குக அமைக்கப்பட்ட அழகான உடைகளைச் சுகத்தை நுகரும் பொருட்டே அணிவான். அவன் தேடுவது புகலிடமட்டுமல்ல, சுகமும் வசதியும் அழகும் அமைந்த வீடுகளைத் தேடுவான். ஆகையால், மனிதன் ஏனைய பிராணிகளைப் போல மூலத்தேவைகளை நிறைவேற்றுதலை மட்டுமன்றிச் சுகத்தையும் வசதியையும் நல்ல நுகர்ச்சியையும் தேடுவான். சில தேவைகள் தணிந்ததும் மனிதன் இன்னும் தேவைகளைத் தணிக்க எத்தனிப்பான். இவ்வண்ணம் அவன் தேடும் திருத்திகளுக்கு வரையறையென்றல் இல்லை. இனிமையான போசனத்தைப் போன்ற சில திரவியங்களை உடன் திருத்திக்காக அவன் தேடுவான். இன்னும், சில திரவியங்களை அவன் தேடுவது தன் உடன் திருத்திக்காகவன்றி, ஒருகால வரையறைக்குள் தான் அடையும் திருத்தி கருதியேயாம். உதாரணமாக, ஒருவனுக்குத் தைக்கும் எந்திரமாவது மண்ணெண்ணெயடுப்பாவது தேவையாயிருக்கும். முன் குறிப்பிட்ட உடன் திருத்தியையளிக்கும் போசனத்தை நேரான திருதிப் பொருளாக விரித்துரைக்கலாம். இரண்டாவதாக, குறித்த பண்டங்களை நெடுநாட்பயன்தரு பொருளாக விரித்துரைக்கலாம். திருத்தியடையும் பொருட்டு மனிதர்களுக்குத் தேவையான நேர்திருத்திப் பொருள்களினதும் இடையாய பொருள்களினதும் சேவைகள் அளவற்றவை. மனிதனுக்கு அனேகவிதமான உணவுகளும் உடைகளும் இருப்பிடங்களும் தேவையாகும். அவனுடைய பாதுகாப்புக்காக ஊர்க்காவலர் சேவைகளும் பாதுகாப்புச் சேவைகளும் தேவையாகும். அவனுடைய சுகாதாரத்துக்காக

வைத்தியசாலைகளும் மருந்துவகைகளும் தேவையாகும். அவனுக்கு ஓய்வும் அதையனுபவிப்பதற்கு நேரமும் தேவையாகும். ஆகையால், அவனுக்குப் போசனசாலைகளும் குளிக்கும் பொய்கைகளும் படமாளிகை முதலியவைகளும் தேவையாகும். அவன் அறிவு வளர்ச்சியைத் தேடுவதால் புத்தகங்கள், நூல் நிலையங்கள் பாடசாலைகள் முதலியனவும் தேவையாகும். அவன் பிரயாணத்தை விரும்புவதால் அதற்கு வழிவகைகள் புகையிரதப் பாதைகள் கப்பல்கள் முதலியன தேவையாகும். அவன் விளையாடுவதற்கு விரும்புவதால் அதற்கு விளையாட்டு மைதானங்களும் பந்து முதலியன போன்ற விளையாட்டுச் சாமான்களும் தேவையாகும்.

இவ்வளவு தேவைகளையும் மனிதன் தணித்துக் கொள்வது அவன் அவற்றின் பொருட்டு முயலும் அளவின் படியும் இயற்கையின் பேறுகளின்படியுமாம். ஓரிடத்தில் இயற்கையின்பேருனது வளத்தை யாவது தளர்ச்சியையாவது அடையலாம். அதெப்படியெனினும், உண்மையாகவே மனிதன் பெறும் திருத்தியும் இயற்கையினுலே நிச்சயிக்கப்படும். ஆனல், மனிதனுடைய சிரமமும் முயற்சியுமில்லாமல் இயற்கையன்னை தானகச் சிறிதளவையே சம்பாதித்துக் கொடுக்கும். சூரியவெளிச்சமும் காற்றும், சில விடங்களில் நீரும் இயற்கையினல் மனிதனுடைய உழைப்பில்லாமலே பெறப்படும். இவ் உதவியைத் தவிர, ஏனைய பொருள்கள் எல்லாவற்றையும் மனிதனுடைய உழைப்பினுலேயே பெற்றுக் கொள்ளல்வேண்டும்.

அங்ஙனமாயின், சுயதேவைகளைத் தணிக்கச் சிரமப்படல் வேண்டும். யாதாவதொரு தேவையை நிறைவேற்ற, யாதாவதொரு பொருள் திறமையுள்ளதாயின், அப்பொருள் பயனுள்ளதென்று சொல்லப்படும். பொருளியல் வித்தையானது, ஒரு மனிதனுடைய சில தேவைகள் சாத்தியமோ அசாத்தியமோ, நல்லனவோ கூடாதனவோ வென்று கவனியாது. ஒரு மனிதனுக்கு அபின் தேவையாயிருக்கலாம். அபின் அத்தேவையை நிறைவேற்றுகின்றது. அபின் ஒரு மனிதனுக்கு இதமாகாதென்று பொருளியலறிஞனுக்குப் புலப்படலாம். ஆனல், அபினல் ஒரு தேவை நிறைவேறும் போது, அதில் ஒரு பயன் இருப்பதாகப் பொருளியலறிஞன் கருதுவான்.

மனிதருக்குச் சொந்தமாகவிருக்கும் பயனைத்தரும் எல்லாப் பொருள்களும் பொருளியற்கலையின்படி, “ **தனமே** ” **ன்று குறிக்கப்படும்.** ஆகையால், தனமாக எடுக்கப்படுவது பயனுள்ள திரவியங்களாலாய எல்லாப் பொருள்களுமேயாம். ஒரு நேரத்தில், மனிதர்களுக்குச் சொந்தமாயிருக்கும் பயனுள்ள திரவியங்களாலாய பொருள்களின் முழுவளவு **தனமாக** மதிக்கப்படும். தனத்தில் மனிதர்களுடைய தேவைகளை நிறைவேற்றவியலுமாதலால், அவர்கள் தனத்தையுரிமையாக்கிக் கொள்ள விரும்புவர். ஒருவன் ஒரு வீட்டையுரிமையாக்கிக் கொள்ள எத்தனிப்பது அவனுக்குச் சுகமும் புகலிடமும் கிடைப்பதாலேயாம். வைரமோதிரம் அழகிலிருக்கும் ஆசையைத் தணிப்பதால் அதன் உரிமையை ஒருவன் விரும்புகின்றுன். தனத்தினுல் மட்டுமல்ல, அன்னியர் சேவைகள் மூலமும் தங்கள் தேவை

களைத் தணிப்பதனுல் மனிதர் திருத்தியடைகிருர்கள். இன்பத்துக்காகச் செய்யப் படும் விண்ணப்பம், நடிகர்களாலும் நாடகக் கணிகையர்களாலும் பெறப்படும். வைத்தியத்தைப்பற்றிய விண்ணப்பம் வைத்தியர்களால் பெறப்படும். ஆகையால், தனத்திலுைம் சுவாதீனமனிதர்களின் சேவையினுலும் நிரந்தரமாக விரைந்து வரும் பல பயன்கள் உள. இவ்விரைந்த வரவிற்கு ஆதாயம் என்று சொல்லப் படும். ஆனுல், ஆதாயத்தைப் பெற்றுக்கொடுக்கும் தனம் தளர்ச்சியுறவோ, விலை மதிப்புக் குறையவோ இடமுண்டு. உதாரணமாக, ஒரு வீடானது காலஞ்செல்லச் செல்லச் சிதைந்து போவதைக் காட்டலாம். தைக்கும் எந்திரம் ஒன்று காலஞ் செல்லச் செல்லத்தகர்ந்து போகும்; அல்லது தளர்ச்சியுறும். சேதம் நேரிடா வண்ணம் அதனை வைத்துக் கொள்ள வேண்டுமென்ருலும், அதன் பொருட்டு யாதாவதொரு முயற்சியைச் செய்தல் வேண்டும். இம்முயற்சியானது அதனை உபயோகிக்க அமைக்கச் செலவாகும் பொருளாலும் சுயாதீன மனிதரின் சேவை யினுலும் கிடைக்கும் இலாபத்தினின்று பொருள் தரும் தொழிலை நடாத்துதற் காக அழியும் செலவைக் கழிக்கும் பொழுது, தேறிய இலாபம் தோன்றும்.

புதிய சமுதாயங்களில், சமுதாயப் பொருளும் அதன் இலாபமும் சமுதாயத் திற்கு உள்ள பணத்தின்படி மதிக்கப்படும். மதிக்கும் பணத்தினுல் விளங்கும் பெறுமதிக்கு "விலை" என்று சொல்வோம். ஆகையால், புதிய சமுதாயத்தில் சகல பொருளும் ஆதாயமும் விலைமுறை மூலமாகவே மதிக்கப்படும்.

தேவைகளை நிறைவேற்றும் பொருள்களே எல்லாவற்றிலும் பயனுள்ளன வென்று நாம் முன் படித்தோம். மனிதனுடைய உழைப்பில்லாமல் அவனுடைய தேவைகளை நிறைவேற்ற இயற்கை கொடுப்பது மிகவும் சிறிதளவேயாம். ஆகை யால், ஏனைய பயன்களும் மனிதனுலேயே செம்மை செய்யப்படல் வேண்டும். உற்பத்தி யாக்கமும் மனிதனே செய்தல் வேண்டும். இவ்வண்ணம் பயன்பாடுகளை உற்பத்தி செய்வதை **ஆக்கம்** என்று சொல்வோம். பயன் பாடுகளை உற்பத்தி செய்வதன் வழிகள் நான்கு வகைப்படும். ஒருவன் மரங்களால் ஒரு நாற்காலியை அமைத்தால், அல்லது உருக்கினுல் ஒரு கத்தியை அமைத்தால், அல்லது விதை களை விதைத்துத் தானியங்களைப் பெற்ருல், அவன்தன் ஆக்கவேலையைச் செய் பவனென்பது வெளிப்படை. அப்பயனை, அல்லது உபயோகப் பொருளை உற்பத்தி செய்பவன் ஓருற்பத்தியாளனுவான். உருக்குக் கத்தியை அமைத்த கொல்லன் உலகத்தில் இல்லாத புதிய பொருளைப் படைக்கவில்லை. அவன் உருக்கினைக் கத்தியாக மாற்றினுன் என்பதே. ஆகையால், இக்காரியம் உருவப்பயனை அமைத்த ஆக்கமாகக் குறிக்கப்படும். உருவப்பயனை உற்பத்தி செய்வதனுல் பெறப்படும் ஆக்கம், நம் சூழ்நிலையில் எப்பொழுதும் காணக்கூடும். இவ்வண்ண மாக, பலவிதமான உழவர்களும் சிற்பிகளும் உருவப்பயனை ஆக்குவோராவர். ஆகையால், இலங்கையில் வயல்களில் வேலை செய்வோரும், கம்மியத்திலும் பயிர்ச் செய்கையிலும் ஈடுபடுவோரும் உருவாக்கற் பயனை அமைத்தற்கு உதவி புரிவோ ராவர்; அதாவது ஆக்குவோர் ஆவர். மேலும், உற்பத்தி செய்யும் தேயிலை போன்ற திரவியம் உற்பத்தி செய்த தொழிற்சாலையிலேயே இருக்கும் வரை அத

ஞல் ஒரு பயன் அனுபவிப்பவருக்குக் கிடைக்காது. புகையிரதப்பாதைகள் முதலிய பிரயாணச் சாதனங்களில் வேலை செய்கிறவர்கள் அதனைத் தேயிலைப் பானம் அருந்துபவர்களிடம் கொண்டுபோவதனுல் அதன் பயன்பாட்டை அதிகரிக்கிருர்கள். தேயிலையை, ஓரிடத்திலிருந்து அது பயன்படவிருக்கும் வேருேரிடத்துக்குக் கொண்டுபோவதனுலே இப்பயன்பாடு அமையும். இது இடப்பயனைத் தருதலால் இதனைச் செய்யப்படும் ஆக்கமாகக் குறிக்கலாம். இவ்வண்ணம், நமக்குத் தேவையான பல பொருள்களை அடக்கிச் சேமித்து, அனுபவிப்பவனுக்கு உரிய நேரத்தில் அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் வியாபாரியும் ஆக்கியோனுகவே கருதப்படுவான். ஒரு பொருளின் பயன்பாடு சிறப்பது, அனுபவிப்பவனுக்குத் தேவையான நேரம் அது கிடைத்தால் மட்டுமேயாம். அதற்கு முன்னுவது பின்னுவது அது கிடைத்தால், அது அப்படியாகாது. ஆகையால், பல திரவியங்களைச் சேமித்து வைத்து, அனுபவிப்பவனுக்குத் தேவையான நேரம், அவற்றைக் கொடுக்கும் வியாபாரியும் நேரப்பயனை அமைப்பதனுல், ஆக்கியோனுகின்ருன். மேலும், இலங்கையில் ஒருவனுக்குப் பிறநாட்டிலிருந்து பலவிதமான திரவியங்களைப் பெற வேண்டுமாயின், ஒரு செய்கைமுகவர் அப்பண்டங்களைச் சிறிது காலத்துக்குள் பிறநாட்டிலிருந்து வருவித்து இலங்கையில் விற்பார். இவ்வண்ணம் செய்கைமுகவர் பிறநாட்டுப் பண்டங்களை இலங்கையில் அனுபவிப்பவர்களுக்குக் கிடைக்கச் செய்துகொண்டும் அப்பண்டங்களின் உரிமையைச்சிறிது காலத்துக்குத் தன்கையில் ஒப்புக்கொண்டும் பயன் பாட்டை ஆக்குவார். அவரால் உரிமையாளருக்குப் பயன் ஆக்கப்படுவதால் அவர் ஆக்கியோராக எண்ணப்படுவர். ஆகையால், உரிமையாளர் பயனை ஆக்கும் நடுவர்கள் ஒருவிதத்தில் ஆக்கியோராவர். இதனுல், ஆக்கத்தை, அல்லது பயன்பாட்டை ஆக்குதல் நான்கு விதங்களில் செய்யக்கூடும் என்பதை நாம் அறிவோம். ஆனபடியால், ஒருவன்தன் தேவையைத் தணிக்கும் பொருட்டு ஒரு பொருளை ஓர் ஆவணத்திலிருந்து வாங்கும் பொழுது, அங்ஙனம் கூறிய நான்கு விதமான ஆக்கவழிகள் நேரே நிறைவேறியிருக்கலாம்.

பயன்பாடுகளை, உற்பத்தி செய்வதற்கு, அல்லது ஆக்குவதற்குப் பெருமுயற்சியாவது உழைப்பாவது தேவையென்று நாம் முன்னமே அறிந்தோம். ஆகையால், ஆக்கத்துக்கு உழைப்பானது இன்றியமையாததாகும். தேவைகளை நிறைவேற்றுவதென்ருல், மனிதன் பாடுபடல்வேண்டும். ஆனுல், இயற்கையினுல் சம்பாதிக்கப்படும் ஆக்கங்களின்படி, மனிதன் முயற்சி செய்யவேண்டுமென்பது உண்மையே. ஆக்கப்பயனை உற்பத்தி செய்யும் உழவன் இயற்கையன்னை கொடுத்த பூமியில் விதைகளை நாட்டல்வேண்டும். உருேபின்சன் குருசோ என்பவன் தன் தீவில் இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்டியே தன்னுடைய ஓடத்தையமைத்துக் கொண்டான். ஆகையால், இயற்கையானது ஆக்கத்துக்கு இன்றியமையாதது. மேலும், இயற்கையன்னை சம்பாதித்துத் தந்த பொருள்களைச் சேர்த்து மனிதன் வேலைகளைச் செய்வது, முன்னர் அவன் அமைத்துக் கொண்ட கருவிகளினதும் எந்திரங்களினதும் மூலதனங்களினதும் உதவியினுலேயாம். இவை ஆக்கத் தொழிலின் மூன்று மூல கருவிகளாகும். இவை தொழில், நிலையம்,

மூலதனம்,[1] என்று வழங்கும். தொழில் என்பது தேகத்தால், அல்லது மனதால் ஒரு மனிதன் செய்யும் உழைப்பாகும். ஒரு சமுதாயத்துக்குரியனவாக விருக்கும் இயற்கையான பொருள்கள் எல்லாம் **நிலம்** என்ற பெயரால் குறிக்கப்படும். நிலங்கள், இயற்கையான சூழ்நிலை, வெப்பம், மழைவீழ்ச்சி, நிலப்பொருள்கள், நீர்ச்சத்தி முதலிய இயற்கையான சம்பத்துக்கள் எல்லாம் **நிலம்** என்ற சொல்லில் அடங்கியுளவெனக் கருதுதல் வேண்டும். இது மிகவும் முக்கியமானது. இதனால், ஒருநாட்டு மனிதருக்குரிய உத்தியோகங்களும் அவர்கள் செய்யும் பொருளியற்றொழில்களும் தீர்மானிக்கப்படும். இவற்றால் ஒரு நாட்டின் மனிதருடைய தேவைகளைத் துணித்தற்கும், தொழிலையும் மூலதனத்தையும் உபயோகித்தற்கும், உயர்ந்த வாழ்க்கை நிலையொன்று வரையறுக்கப்படும்.

மூலதனத்தை மனிதன் ஆக்கியதனமாக அமைக்கலாம். அதாவது, மனிதனால் ஆக்கப்பட்ட பயனுள்ள திரவியங்களாலாயது, அன்றேல் பூமிக்குரிய பண்டத் தொகையாலாயது, மூலதனமாகும். இந்தப் பயனுள்ள பூமிக்குரிய பொருள்களுட் சிலபகுதிகள் உணவு, உடை இருப்பிடம் முதலியவைகளாக நுகர்ச்சிக்கேற்றனவாக இருக்கின்றன. இப்பகுதிக்கு நுகர்வோரின் மூலதனம் என்ற பெயர் வழங்கப்படும். மனிதர்கையினால் ஆக்கப்பட்ட பயனுள்ள, பூமிக்குரிய பண்டத்தொகை இடைப் பொருள்களாலேயே அமைந்திருக்கின்றன. அதாவது, இவை பின்னர் நுகர்ச்சிக்குரிய பண்டங்களையாவது சேவைகளையாவது பெற்றுக் கொள்ளஉபயோகமாகும். இதற்கு உதாரணமாக, தொழில்களுக்காக உபயோகிக்கும் கருவிகள் எந்திரங்கள், பண்படுத்தாப் பொருள்கள் முதலியவற்றைக் கூறலாம். இப்பகுதிக்கு **ஆக்குவோர் மூலதனம்** என்ற பெயர் வழங்கப்படும். **நுகர்வோரின் மூலதனம்,** ஆக்குவோரின் மூலதனம் என நாம் ஒரு வித்தியாசம் காட்டினும், சில பண்டங்களிலிருந்து எடுக்கும் பிரயோசனத்தின்படி, அவற்றை இவ்விரண்டினுள் ஒன்றின்பால் அமைக்கலாம். உதாரணமாக ஒரு கப்பலை எடுப்போம். உரிமையாளர்களால் அது இன்பநுகர்ச்சிப் பொருளாக உபயோகிக்கப் படக்கூடும். மேலும், ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்கு வாணிபப் பண்டங்களை அனுப்புவதற்காகவும் அதை உபயோகிக்கலாம். முதற்கண் அது நுகர்வோரின் மூலதனமாக எண்ணப்படும். இரண்டாவது நிலையில் அது ஆக்கியோரின் மூலதனமாக எண்ணப்படும்.

மூலதனமில்லாமலும் பண்டங்களையாக்கவியலும். உதாரணமாக, மீன் பிடித்தலைக் கூறலாம். ஆனால், ஒரு வலையை உபயோகித்தால் சிறிது நேரத்துக்குள் மீன்கள் பலவற்றைப் பிடிக்கவியலும். ஒரு வலையைப் பின்னவெனின், முயற்சியை, அல்லது சிரமத்தையுபயோகிக்க வேண்டும். ஆனால், வலையைக் கொண்டு பிடிப்பதனாற் கிடைக்கும் மீனின் தொகை, வலையைப் பின்னும் பொருட்டுக் கழிக்கும் நேரத்தில், வலையின்றியே மீன்பிடித்துப் பெறும் தொகையைக் காட்டிலும் பெரும்பாலும் அதிகமாகும். மூலதனத்தையுபயோகித்து ஆக்கந்தேடல் இலாபத்தைத் தோற்றுவிப்பது இதனாற்காணலாம். மூலதனத்தையுபயோகிக்காமற்

[1] மூலதனம் என்பது முதற்பொருள் என்று விரித்துரைக்கலாம்.

சிரமத்தை மட்டும் உபயோகித்துச் செய்யும் ஆக்கத்துக்கு "நேராக்கம்" என்று சொல்லலாம். மூலதனத்தையுபயோகித்துச் செய்யும் ஆக்கத்துக்கு "நேரில் ஆக்கம்" என்று சொல்லலாம். இப்படி ஏன் பெயர்கள் இடப்படுகின்றன என்று உணர்ந்து கொள்ளல் இலேசாகும். மீன்பிடித்தற் பொருட்டுச் சிரமத்தை ஒருங்கே உபயோகிக்காமல் நம் சிரமத்தை முதலில் ஒரு வலையைப் பின்னவும், அதன் பின் வலையைக் கொண்டு மீன்பிடிக்கவும் உபயோகித்தலாவது, சிரமத்தை நேரில்லாவழியில் ஆக்கம்பெற உபயோகித்தலாகும்.

ஆக்கத்திற்கு மூலதனத்தையுபயோகிப்பதனால் ஆக்கும் அளவு பெரிதும் அதிகரிக்கும். அதற்காகவுபயோகிக்க வேண்டிய சிரமத்தின் அளவும் குறையக்கூடும். நாம் மீன்பிடித்தலையே ஒரு உதாரணமாக எடுத்துப் பார்ப்போம். ஒரு மனிதன் ஒரு நாளிற் பத்து மணிநேரம் பாடுபட்டுத் தன் கையால் பத்து இருத்தல் மீனைப் பிடிக்க இயலும். இம்மனிதனுக்குப் பத்து நாள்களிற் பாடுபட்டு ஒரு நாளுக்குப் பத்து மணிநேரம் வேலை செய்து நூறு இருத்தல் மீனையாவது, மீன்பிடிக்கும் ஒரு வலையையாவது பெறவியலும். வலையைப் பின்னிய பின் அவன் ஒரு நாளில் ஐம்பது இருத்தல் மீனைப் பிடிப்பதாகக் கருதுவோம். ஒரு நாளில் பத்து மணி நேரத்துக்கு வேலை செய்யும் மனிதன் ஒரு வலை இல்லாமல் இருபது நாட்களுக்கு இருநூறு இருத்தல் மீனையே பிடிப்பான். அவ்விருபது நாட்களுள் வலையைப் பின்னப்பத்து நாட்களைக் கழித்து எஞ்சிய பத்து நாட்களில் அம்மனிதன் ஐந்நூறு இருத்தல் மீனைப் பிடிக்கவியலும். இவ்வண்ணம், விளக்கமாக மீன்பிடித்தலின் பரிமாணம் இருநூறு இருத்தலிலிருந்து ஐஞ்நூறு இருத்தல் வரை ஏறியுளது. தேவையாயிருப்பது இருநூறு இருத்தல் மீன் என்றால், மனிதன் வலையைப் பின்னவும் தேவையான மீனைப் பிடிக்கவும் செலவிடவேண்டியது பதினான்கு நாட்கள் மட்டுமே. ஆனால், வலையில்லாமலெனின், அவன் இருபது நாட்களுமே பாடுபடல் வேண்டும்.

மூலதனத்தோடு செய்யும் ஆக்கம் மூலதனமில்லாமல் செய்யும் ஆக்கத்தைக் காட்டிலும் பெரும்பாலும் பயனையளிப்பது என்பது இதனால் விளங்குகின்றது. ஆனால், வலையைப் போன்ற ஒரு கருவியையமைக்கக் காலமும் சிரமமும் தேவையாகும். கருவி இதைக்காட்டிலும் இலேசானால் (மீன்பிடிக்கும் ஒரு கப்பல் எனின்) அதையமைக்க முன்னையதிலும் பார்க்க அதிகமாகக் காலமும் சிரமமும் செலவாகும். இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் ஆக்கியோரின் மூலதனம் அதிகமாயின், அது இப்பொழுதிலும் தன்மையில் உயர்ந்ததெனின், நம் ஆக்கப் பரிமாணம் அதிகரிக்கும். அப்படியாயின், ஆக்குவோரின் மூலதனத்தைப்பெறும் பொருட்டு மேன்மேலும் காலத்தையும், சிரமத்தையும் செலவிட வேண்டும்.

இதுநாம் எண்ணுவது போற் சுலபமான காரியமன்று. நாம் முதலில் எடுத்த உதாரணத்தின்படி வலையைப் பின்னியமனிதன் வலையைப் பின்னும் பொருட்டு எடுத்த பத்துநாட்களிலுமே மீனின் பரிமாணம் அதிகரிப்பது உண்மை. அவனு

டைய உணவுகளைச் சம்பாதிக்கும் ஒரேயொரு வழி மீன் பிடித்தலென்றால், பத்து நாட்களுக்கு வலையைப் பின்னுதல் அவனால் இயலாது. வலையைப் பின்னி முடிக்குமுன், அவன் பசியால் இறக்கவுங்கூடும். ஆனால், அவன் எட்டுமணி நேரம் மீன்பிடிக்கவும் இரண்டுமணிநேரம் வலையைப் பின்னவும் கூடும். ஆகையால், ஒரு வலையை அமைத்தே பிடிக்கும் மீன்பரிமாணத்தை அதிகரிக்க வேண்டுமானால், அவன் குறைந்த அளவு மீன் பிடிப்பதனாலும் குறைந்த அளவு உணவை உண்பதனாலும் இக்கால எல்லையில் திருத்தியை அடைவான். இவனுடைய ஆக்கும் பரிமாணம் அதிகரிப்பதால் எங்ஙனமாயினும் ஒரு வலையைப் பின்னுதல் பெரும்பாலுமே பிரயோசன மாகும். எட்டு மணி நேரத்தில் மீன்பிடிக்கும் பொழுது, வலையைப் பின்ன அவன் இரண்டு மணி நேரங் கழிப்பான். ஆகையால், அதை அமைத்து முடிக்க அவனுக்கு ஐம்பது நாட்கள் தேவைப்படும். அவன் வலையை அமைக்க ஒரு நாளில் எட்டு மணி நேரத்தை உபயோகித்தால், விரைவில் வலையை அமைக்க இயலும். எதிர் காலத்தில் பெருமளவு உணவைப் பெற அவன் விரும்புவான்.

இவ்வுதாரண மூலம், நாம் முக்கியமான பலபாடங்களைப் படித்துக்கொள்ள இயலும். மூலதனத்தைச் சம்பாதிப்பதனால் ஈற்றில் ஆக்கும் அளவு பெரும்பாலும் அதிகரிக்கும். மூலதனத்தைச் சம்பாதிக்கும்பொழுது அதற்காக நுகர்ச்சிக்குரிய பண்டங்களின் ஓரளவைச்செலவிடவேண்டும். இம் மூலதனம் சம்பாதிக்கும் வேகம், அல்லது எந்திரக்கருவிகளையமைக்கக் கழியும் காலம், இச்செலவிட்டின் அளவிலே தங்கியிருக்கும். நுகர்ச்சிக்குரிய பண்டங்களுள் மனிதர் செலவிட விரும்பும் அளவும் செலவிடக் கூடிய அளவும், புதிய மூலதனத்தைச் சம்பாதிப்பதற்கு முன்னிருந்த ஆக்கப் பரிமாணத்தில் தங்கியுள்ளன. நன்றாகச் சீவிப்பதற்கு முன்கூறிய மீன்பிடிகாரனுக்கு ஒரு நாளுக்கு எட்டு இருத்தல் மீன் தேவையென்று வைப்போம். அவன் ஒரு நாளுக்குப் பத்து மணிநேரத்திற்குள் வேலைகளைச் செய்வானானால், அவனுக்கு வலையை அமைக்கும் பொருட்டு ஒரு நாளில், இரண்டு மணி நேரம் உபயோகிக்கவியலும். ஆகையால், பிற்காலத்தில், அதாவது சில நாட்கள் கழிந்த பின், அவன் இதனிலும் நன்றாகச் சீவிக்கக்கூடியதாகவிருக்கும். இதனிலும் விரைவில் அதிக சுகத்துடன் அவன் சீவிக்க வேண்டுமானால், மீன்பிடிக்கும் மணி நேரத்தின் அளவைக்குறைத்து, வலையைப் பின்ன உபயோகிக்கும் மணி நேர அளவை அதிகரிக்கவேண்டும். இன்றேல், மீன்பிடிக்கும் நேர அளவு அப்படியே இருக்க, வலையைப் பின்ன எடுக்கும் நேரத்தை ஒரு நாளுக்குப் பத்து மணிக்கு மேலாவது அதிகரிக்கவேண்டும்; அல்லாவிடின், இவ்விரண்டு முறைகளும் அவனால் உபயோகிக்கப்படலாம்.

நாம் வாழும் ஒப்பிலாச் சமுதாயத்திலோ, சில மனிதர் நிலைமை இதற்கு மாறாக இருக்கக்கூடும். சில மனிதருக்கு ஏனையோரைக் காட்டிலும் அதிகமான தனமுண்டு. ஆகையால், தங்கள் தனத்தை ஆக்கியோரின் மூலதனத்தைச் சம்

பாதிக்கவும் ஆக்குமுறைகளை அதிகரிக்கவும், அதிகமான தனிச்செலவு இல்லாமல் உபயோகிக்கவும் இயலும். ஆனால், பலருக்கு அப்படிச் செய்யவியலாது. சன சமுதாயமாகவெடுக்கும்பொழுது, இம்மூலதனத்தை அதிகரிக்க, நுகர்ச்சிக்குரிய பண்டங்களையும் சேவைகளையும் அதற்கு ஒப்புவிக்கவேண்டும். மூலதனத்தை அதிகரிப்பதனால் உண்டாக்கும் அளவையும் அதிகரித்துக் கொள்ளவியலும். ஆனால், அதிகமாக மூலதனத்தைச் சம்பாதிப்பது, முழுச்சனத் தொகையையும் மட்டுப்படுத்த விரும்பினாலேயாம்.

புதிய உலகத்தின் பலபாகங்களில் தனியிலாபங்களைத்தேடும் மனிதராலேயே ஆக்கத் தொழில்கள் செய்யப்படுகின்றன. நிலத்தையும் சிரமத்தையும் மூல தனத்தையும் ஆக்கத்துக்காக ஒழுங்கு செய்து, தொழில்களில் ஈடுபடுவோருக்கு முயற்சியாளர் என்ற பெயர் வழங்கும். அவர்கள் ஆக்கத்தை ஒழுங்கு பண்ணுவது மட்டுமன்றித் தாம் ஒப்புக்கொண்ட தொழிலின் பயன்களுக்கேற்ற இலாபத்தையாவது நட்டத்தையாவது எற்பர். இத்தொழில் எவ்வளவு முக்கியமாக எண்ணப்படுமெனின், சில பொருளியலறிஞர்களால் ஆக்கக்காரணியாக எண்ணப்படும். இவ்வண்ணம் நிலம், சிரமம், மூலதனம் விவசாயம் என்று நான்கு ஆக்கக் காரணிகள் உளவெனச் சில பொருளியலறிஞர்கள் கருதுவர்.

இதுவும் பரும்படி செய்யும் பிரித்தலாகும். இவ்வண்ணம் பிரிப்பதால், நிலைமையானது முன் இருப்பதைக் காட்டிலும் கலக்கமுற்றதாகக் காணப்படும். உதாரணமாக, சிரமவகைகள் எல்லாமே—அதாவது மனச்சிரமம் உடற்சிரமம் பயிற்றப்பட்டோர் மேதைச் சிரமம், பயிற்சியற்றோர் சிரமம் ஆகிய எல்லாமே—வித்தியாசங்காட்டாமல் ஓரினமாகக் கருதலாம். சிரமத்துக்குரிய பண்பைக் கல்வி மூலமும் பயிற்சிமூலமும் உயர்த்த வியலும், மேலும், நிலம் (இயற்கையான சொத்துக்கள்) மூலதனம் (மனிதனால் அமைக்கப்படும் பூமிக்குரியதனம்) ஆகிய இருவகைகளிடையில் ஒரு வித்தியாசம் காட்டப்படுவதால், மனிதனால் பொருளியல் மூலம் விருத்தியாக்கப்படாத நிலங்கள் சிறிதளவே உள வென்று சிலர் உரையாடுவர். எங்ஙனமாயினும், முன் குறித்த வகுப்புவரையறையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் நன்றாகும்.

ஒரு நாட்டு ஆக்கத்தின் மேல் முகாமை செலுத்தும் காரணங்கள் பலவுள. முதலில், மனிதனுக்குத் தடுக்க முடியாத காரணங்கள் உள. இவ்வண்ணம் பூமியதிர்ச்சி, புயற்காற்று முதலியவை ஆக்கத்தையழிக்கும் பொழுது, காலத்துக்கேற்ப ஆக்கத்துக்குரிய சூரியவெப்பம் முதலியவை காரணமாக, விருத்தியானது முன்னேற்ற மடையக்கூடும். இரண்டாவதாக, சமுதாய ஏற்பாடுகள், தாபனங்கள் முதலியவை ஆக்கத்தின் அளவையும் குணத்தையும் நிச்சயிக்கவுதவுகின்றன. முதலாண்மையுடைய நாடுகளிலும் சமுதாயவாதத்தையுடைய நாடுகளிலும் ஆக்கத்தொழில்களில் ஒரு வித்தியாசம் இருப்பது தெளிவாகக் காணப்

படும். ஒரு முதலாண்மைச் சமுதாயம், சமுதாயவாதங்களிலிருந்து, மாறுபடும் விதத்தை நாம் முன்னைய அதிகாரமொன்றில் படித்தோம். மூன்றாவதாக, ஆக்கு மளவு ஒரு நாட்டிலுள்ள சிற்ப அறிவின்படி மாறும். நான்காவதாக, ஒரு நாட்டி லுள்ள ஆக்கக்காரணிகளின் அளவின்படியும் ஆக்கப் பரிமாணம் மாறும்.

எச்சமயத்திலே ஒரு நாட்டில் ஆக்கக்காரணிகள் நியமிக்கப்பட்ட அளவில் இருக்கின்றனவோ, அச்சமயத்திலே நிலம், சிரமம், மூலதனம், முயற்சி (தொழில்) ஆகிய காரணிகள் வரையறுக்கப்பட்டிருக்கும். போதியகாலத்துக் குள்ளெனின், சில ஆக்கக்காரணிகளின் அளவை அதிகரித்துக் கொள்ளவியலும். நிலம், அல்லது இயற்கையான சம்பத்துக்களின் அளவாயின், அது நிச்சய மாகவே மாறுத் தன்மையையுடையது. ஆனல், காலஞ் செல்லச் செல்ல, கனிப் பொருள்களைப் போன்ற இயற்கையான சொத்துக்கள் புதிதாகச் சம்பவிக்க வியலும், அப்படியில்லாவிடின், தெளிவான சில இயற்கைச் சொத்துக்களின் விலைமதிப்புப் புதிய உற்பத்திகளின் காரணமாக அதிகரிக்கவும் மறுமலர்ச்சி பெறவும் கூடும். இயற்கையான சொத்து, அல்லது நிலம் அசையாத தன்மை யுடையது என்று எண்ணிக்கொள்ளுதல் நன்று. சனத்தொகை அதிகரிப்பதன் காரணமாக, அன்றேல் புத்திசாதுரியமும் கல்வியும் கலைத்திறனும் வளர்வதினல் சிரமமும் அதிகரிக்கவிடமுண்டு. ஆக்கியோரின் மூலதனத்தை அதிகரிக்க மேலும் மேலும் நிலத்தையும் சிரமத்தையும் உபயோகிப்பதனல் அதை வளர்த் துக் கொள்ளவியலும். கடைசியாக, முயற்சியையும் பலவிதமாக வளர்த்துக் கொள்ளவியலும். நிபுண நிலை, கல்வி கலைத்திறன் முதலியவை மூலம் தொழிற் சத்தியை வளர்க்கவும் மூலதனத்தைச் சம்பாதிக்கவும் முயற்சியை அதிகரிக்க வும் உடன் நுகர்ச்சியை ஓரளவு பலியிடல் வேண்டும். எக்கால வரையறைக் குள்ளே சில ஆக்கக் காரணிகளின் அளவைக் குறைக்கவும் வளர்க்கவும் இயலு மாயினும், குறித்த நேரம் இவ்வாக்கக் காரணிகளின் நியமித்த அளவு ஒன்று இருக்கிறபடியால் அதனை நன்றாகவுபயோகிக்க வேண்டியமுறை சமுதாயத்தி னல் நிச்சயிக்கப்படல்வேண்டும்.

ஒரு நாட்டின் ஆக்கும் பரிமாணமானது அதன் ஆக்கக் காரணிகளில் மட்டு மன்றி, அவ்வாக்கக் காரணிகளின் பயனைப் பெறும் முறையிலும் தங்கியிருக்கின் றது. பயனைப்பெறும் முறைகள் பலவுருவங்களைக் கொள்ளுகின்றன. ஒரு பொரு ளியல் முறையில் சிறக்கும் இயல்புக்கேற்ற, காரியங்களைச் செய்தலை மிக்க ஆழ மாகக் கொண்டு செல்ல இயலும். தொழிற் பிரிப்பையும் மேலான நிலைக்குக் கொண்டு செல்லவியலும். சில காரணிகளைப் பெரிய பரிமாண ஏற்பாடுகளில் உபயோகிக்கவும் இன்னும் சில காரணிகளை அற்ப பரிமாணத்தின்படி உபயோ கிக்கவும் இயலும். சரியான முறையில் செய்யப்படுமாயின், இம்முறைகள் யாவற் றிலிருந்தும் இலாபங்கள் கிடைக்கும். இவ்விலாபங்கள் எவ்விதமாகுமோ என் பதை நாம் முன்னர் ஆராய்ந்து பார்த்தோம்.

ஆக்கக்காரணிகள் வரையறுக்கப்பட்டன. நாம் முன்னமே படித்தோம். நாம் பெற விரும்பும் அளவுக்கு ஆக்கக்காரணிகள் நமக்குக் கிடைக்கமாட்டா. அவை அருமையானவையாதலினுலே அவற்ருல் உரிய பயனை அனுபவிக்க வழி தேடிக் கொள்ளல் வேண்டும். எவ்வகை ஆக்கத்துக்கும் இரண்டு ஆக்கக்காரணிகளாவது தேவையென்று நாம் அறிவோம். பழம் பிடுங்குவதை மட்டுமே செய்த மிகப் பழங்கால மனிதனுக்கு ஆக்கக்காரணிகள் இரண்டு தேவையாயின. அவை, நிலமும் உழைப்புமாம். அவனுக்குக் காட்டுப்பழங்கள் இயற்கையான தனம், அல்லது நிலமாயின. ஆனுல், அவற்றைச் சேர்க்க, உழைப்பு, அல்லது சிரமம் தேவையாகும். புதிய பொருளியல் முறையின் ஆக்கத்தொழில்களுக்கு ஆக்கக் காரணிகள் எல்லாமே தேவையாகும். உணர்ச்சியை இலேசாக்கும் பொருட்டு நாம் இரண்டு ஆக்கக்காரணிகளை, அதாவது நிலத்தையும் சிரமத்தையும் எடுத்து நெல் விளைவித்தலிலே நல்ல பயன்களைப் பெற எவ்விதம் உபயோகிக்க வேண்டுமென்று ஆலோசிப்போம். உணர்ச்சியை இன்னும் இலேசாக்கும் பொருட்டு வேளாண்மை செய்ய விருக்கும் நிலங்கள் எல்லாமே செழிப்பினுல் ஒரேதன்மையுடையன வென்றும் நெற்பயிரிடுதலில் ஈடுபடும் மனிதரின் சிரமமும் ஒரே தன்மையான குணத்தோடமைந்ததென்றும் கொள்வோம். இம்மனிதர் எல்லோரும் உபயோகிக்கும் கருவிகளும் ஒரே தன்மையன வென்றும் கொள்வோம். மிகவும் நல்ல பயனைப் பெறும் பொருட்டு நிலத்தையும் (பூமி) உழைப்பையும் எவ்வளவுக்கு உபயோகிக்க வேண்டுமென்று ஆய்ந்துபார்ப்போம். கமத்தொழில் செய்ய விருப்பது பத்து எக்கர் வயலெனக் கருதி, அங்குவேலை செய்யும் மனிதரின் கணக்கைக் குறைப்பதனுலோ, கூட்டுவதனுலோ உண்டாகும் நற்பயனை வேறு முறையிற் கூறின், ஓராக்கக்காரணியின் அசையாத பரிமாணமொன்ருேடு (பத்து ஏக்கர்கொண்ட ஒருவயல்) இணைக்கும் வேருெரு ஆக்கக் காரணியின் (சிரமம்) அளவைக் குறைப்பதனுலும் வளர்ப்பதனுலும் உண்டாகும் பயன் யாதென்றும் ஆய்ந்துபார்ப்போம். கீழ்வரும் அட்டவணையில் அப்பயன் இலக்கங்களாற் காட்டப்பட்டிருக்கின்றது. இவ்வட்டவணை ஒரு கற்பனையாகும். வேற்றிலக்கங்களையுமே இப்படி அமைக்கக்கூடும். ஆனுல், அதன் மூலக்கொள்கை மாருது. இவ்விடாப்பினுல் காட்டப்படுவது, பத்து ஏக்கரைக் கொண்ட ஒரு நிலம், தனி மனிதனெருவனுல் பயிரிடப்படு மாயின், அதாவது, வேலிகளைக் கட்டி, உழுது பயிர்நட்டு, விளைவுகளை வெட்டி, தன் உழைப்பினுற் பெறக்கூடிய நற்பயன்களையும், இரண்டு மனிதர் பயிரிடுவதனுல் உண்டாகும் நற்பயன்கள், முதலியவைகளாக, பதினைந்து மனிதர் வரை பயிரிடுவதனுல் உண்டாகும் நற்பலன்களையும் காட்டும். ஒரு தனி மனிதன் பத்து ஏக்கர்களை சாமர்த்தியத்துடன் பயிரிட முடியாது. பத்து ஏக்கர்களை முழுதும் பயிரிடுவதனுல் அவனுக்குக் கிடைக்கும் நற்பலன்கள் மிகவும் அற்பமானவை. மனிதரின் கணக்கு அதிகரிக்

கும் பொழுது நற்பலன்களும் அதிகரிக்கும். ஆனல், மனிதரின் கணக்கு மிகவும் கூடுமாயின், நற்பலன் குறையவும் இடமுண்டு. இப்பொருளியல் தத்துவத்தை நாம் கீழ்க் காணும் அட்டவணையாற் காட்டுவோம்.

*முதலாவது **அட்டவணை**, நிலத்தின் அளவு பத்து ஏக்கர் : நெற்பயிரிடுதலின் பலன் :—*

நெல்லு புசலிற் காட்டப்பட்டுள்ளது.

| 1<br>மனிதரின் என் | 2<br>முழு ஆக்கம் | 3<br>ஒரு மனிதனுடைய பொதுவான ஆக்கம் | 3<br>கடைசியான ஆக்கம் |
|---|---|---|---|
| 1 | 5 | 5 | 5 |
| 2 | 12 | 6 | 7 |
| 3 | 24 | 8 | 12 |
| 4 | 40 | 10 | 16 |
| 5 | 60 | 12 | 20 |
| 6 | 90 | 15 | 30 |
| 7 | 126 | 18 | 36 |
| 8 | 168 | 21 | 42 |
| 9 | 189 | 21 | 21 |
| 10 | 200 | 20 | 11 |
| 11 | 209 | 19 | 90 |
| 12 | 216 | 18 | 7 |
| 13 | 221 | 17 | 5 |
| 14 | 210 | 15 | –11 |
| 15 | 195 | 13 | — 15 |

இப்பொழுது இவ்வட்டவணையின் முதலாம், இரண்டாம் மூன்றும் வரிசைகளுக்கு மட்டும் கருத்தைக் கொடுக்கும்படி நாம் கேட்கின்றோம்.

இவ்வட்டவணையின்படி, ஒருமனிதன் பத்து ஏக்கர்களையே பயிரிடும் பொழுது அவன் அதனல் ஆக்குவது ஐந்து புசல் நெல் மட்டுமே. இரண்டு மனிதர் வயல் வேலைகளைச் செய்யும்பொழுது முழுக் கணக்கு பன்னிரண்டு புசல் நெல் வரை ஏறுவதால் ஒரு மனிதனுடைய சாதாரண ஆக்கம் ஆறு புசலாகும். ஒவ்வொரு மனிதனுடைய சாதாரண ஆக்கம் எட்டாவது மனிதன் வயலில் வேலைகளைத் தொடங்கும்வரை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். ஒன்பதாவது மனிதன் வயலில் வேலைகளைத் தொடங்கும்வரை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். ஒன்பதாவது மனிதல் வேலைகளைத் தொடங்கும் பொழுதும் சாதாரண உற்பத்தி இருபத்தொரு புசல் நெல்லும் மாறுமல் இருக்கும். இவ்விடத்திலிருந்து மனிதர்களின் கணக்கு அதிகரிக்கும் பொழுது, ஒவ்வொரு மனிதனுடைய சாதாரண ஆக்கமும் கீழிறங்கும். இவ்வுதாரணத்தால், எட்டு மனிதராவது ஒன்பதின்

மாராவது ஒன்று சேர்ந்து வேலைகளைச் செய்வதனால் ஒரு மனிதனுடைய சாதாரண உற்பத்தி பெரும்பாலும் அதிகரிப்பதாகக் காணப்படுவது, பத்து ஏக்கரை இதனினும் குறைந்த தொகையினர் பயிரிடுவதனால் ஏற்றபலனை, அல்லது உற்பத்திப் பொருளைப் பெற இயலாததனாலேயாம். பத்தாவது மனிதனுக்குப் பின், ஒரு மனிதனுடைய சாதாரண உற்பத்திப் பொருள் குறைவது, பத்து ஏக்கரைப் பயிரிட மனிதரின் தொகை இதற்குப்பின் அதிகரிப்பதனாலேயாம். இவ் வட்டவணையாற் காட்டப்பட்ட தத்துவம் உண்மையானால், அதிக அளவான நிலம் இருக்கும் பொழுது, மனிதரின் கணக்கு வரையறுக்கப்படுமாயின், பத்து ஏக்கரில் வேலை செய்ய எட்டு மனிதரையோ, ஒன்பது மனிதரையோ அன்றி, அதற்குக் குறைந்த தொகையினரை உபயோகிக்கக்கூடாது. நாம் அட்டவணையில் விரித்துரைத்த தத்துவத்தையுடைய யாதாவதொரு தீவில் தொண்ணூறு மனிதரும் அளவற்ற நிலமும் உண்டென்று கொள்வோம். அவர்கள் நூறு ஏக்கரைப் பயிரிட்டால், ஆயிரத்தெண்ணூறு புசல் நெல்லை உற்பத்தியாக்கலாம். (முதலாவது அட்டவணை பார்க்க). இப்படியல்லாமல் இத்தொண்ணூறு மனிதர், ஒரு மனிதன் பத்து ஏக்கராக தொளாயிரம் ஏக்கர்களையே, பயிரிடுவதில் ஈடுபட்டால், அவர்களால் உற்பத்தி செய்யக்கூடிய முழு நெல் அளவு நானூற்றைம்பது புசல்வரை குறையும். இரண்டு மனிதர் பத்து ஏக்கரில் வேலை செய்து கொண்டு, தொண்ணூறு பேரும் நானூற்றைம்பது ஏக்கரில் வேலை செய்தால் முழுஉற்பத்தி ஐந்நூற்று நாற்பது புசல் நெல் ஆகும். ஆகையால், தொன்ணூறு மனிதர் செய்யவேண்டிய மிகவும் நல்ல செயல் யாதெனின், முறைக்கு நூறு ஏக்கர் மட்டுமே வேலை செய்து, ஏனை ஏக்கர்ப் பரிமாணத்தைத் தரிசாகும்படி விடுதலேயாம்.

நிலவளவு நிலையாகவிருக்க, அதாவது தீவில் பயிரிடக்கூடிய நிலவளவுநூறு ஏக்கராக வரையறுக்கப்பட்டிருக்க, மனிதரின் கணக்கு வரையறுக்கப்படவில்லையெனக் கொள்வோம். அப்படியாயின், சிரமத்தைவரையறுக்க நெல்லின் அளவு குறையும். நிலப்பரிமாணத்தைப் பயிரிட நூற்று முப்பது மனிதர் ஈடுபட்டால், அது அதிக பயனையளிக்கும். நூறு ஏக்கரைப் பயிரிட, நூற்றுமுப்பது மனிதரை ஈடுபடச் செய்தால், முழு ஆக்கம் ஈராயிரத்து இருநூற்றுப்பத்துப் புசல் நெல்லாகும். (முதலாவது அட்டவணை பார்க்க). நூற்றிருபது மனிதர் மட்டும் ஈடுபட்டால் முழு ஆக்கம் ஈராயிரத்து நூற்றறுபது புசல் நெல்வரை குறையும். ஆகையால், நூற்றுமுப்பது பேருக்குக் குறைந்த தொகையினரை ஈடுபடச் செய்தால், முழு ஆக்கமும் குறைவதைக் காணலாம். ஆனால், நூற்று முப்பது பேருக்கு மேலானதொகையினரை ஈடுபடச்செய்தல் கூடாது. அப்படிச் செய்யின் முழு ஆக்கமும் குறையும். நூற்று நாற்பது மனிதரை ஈடுபடச் செய்தால், முழு ஆக்கம் ஈராயிரத்து நூறு புசலாகக் குறையும். நூற்று முப்பது மனிதர்களுக்கு மேல் ஈடுபடச் செய்ய முழு ஆக்கமும் குறைந்து கொண்டேயிருக்கும். நாம் இப்


பொழுது ஆராய்ந்து கண்ட பொருளியல்தத்துவத்தை வேறுமுறையிலும் உரைக்கவியலும். முழு நிலப்பரிமாணத்தைப் பத்து ஏக்கருக்கு வரையறுத்து, மனிதரின் கணக்கை அதிகரித்தால், சாதாரண உற்பத்தி எட்டாவது மனிதன் வரை அதிகரிக்கும். ஆனால், பத்தாவது மனிதனுக்குப் பின் அது குறையும். அவ் வண்ணமே மனிதரின் எண்ணிக்கை நிலையாக இருக்க. பயிரிடும் ஏக்கரின் அளவை அதிகரித்தால், ஒரு பிரமாணம் வரை ஓர் ஏக்கரில் சாதாரண உற்பத்தி வளர்ந்து, அதற்குப்பின் குறைந்துகொண்டு போகும்.

பூமியும் உழைப்புமாகிய இரண்டு காரணிகளின் வெவ்வேறான ஒப்பீட்டின்படி, முழு உற்பத்தியும் சாதாரண உற்பத்தியும் வேறுபடும் வண்ணம் இந்த உதா ரணத்தால் உண்மையான நிலைவெளியாகும். எனவே, எந்தக்காரணி சிறந்த தென்று நிச்சயித்து. மிகப் பெரிய உற்பத்தியையே பெற்றுக்கொள்ளும் பொருட்டு, நிலத்தையும் சிரமத்தையும் எப்படி இணைக்கவேண்டுமென்று அறி வோம். நிலங்கள் அருகாமையானல், அவற்றை நெல்விதைக்க மட்டும் உப யோகித்து, ஒவ்வொரு பத்து ஏக்கரைப் பயிரிடப் பதின்மூன்று மனிதரை ஈடு படச் செய்தல் அதிகம் பயன்படும். அப்பொழுது, ஓரேக்கரிலிருந்து 22.1 புசல் நெல்லைப் பெறலாகும். ஆனல், அப்படிப்பட்ட பத்து ஏக்கருக்குப் பதின் மூன்று மனிதருக்கு மேற்பட்ட தொகையினரையோ, குறைந்த தொகையினரையோ, ஈடுபடச் செய்தால், இந்த நற்பலன்களின் பயிரீட்டை மட்டும் உபயோகிக்கவிய லும். நிலங்கள் ஏராளமாக விருந்தாலும் பத்து ஏக்கரைப்பயிரிட எட்டு மனி தரையோ ஒன்பது மனிதரையோ, ஈடுபடச் செய்தல் பெரிதும் நன்மைபயக்கும். அதனல், ஒரு மனிதனுடைய சாதாரண உற்பத்தி இருபத்தொரு புசல் நெல் வரை ஏறும்.

நம் உதாரணத்தை மறுபடியும் நோக்கின், ஒருமனிதன் பத்து ஏக்கரில் வேலை செய்து, ஐந்து புசலை உற்பத்தி செய்யக் காணலாம். அவன் அவ்வண்ணம் வேலை களைச் செய்யுமுன், அங்குயாதாயினுமொரு ஆக்கமும் இல்லை. ஆகையால், ஒரு மனிதன் வேலை செய்தபொழுது முழு உற்பத்தியில் ஐந்து புசல் அதிகரித்தது. இரண்டு மனிதர் வேலை செய்தபொழுது, அது பன்னிரண்டுவரை ஏறியது. இரண்டாவது மனிதனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டதனல் முழு உற்பத்தி யும் ஏழு புசல் அதிகரித்தது. ஆகையால், இந்த ஏழும் இரண்டாவது மனிதனின் **எல்லைவிளைவு** என்று சொல்லப்படும். இந்த எல்லைவிளைவு எட்டாவது மனிதன் வேலை தொடங்கும்வரை வளர்ந்து கொண்டே இருந்தமையும் (நாற்பத்திரண்டு வரை ஏறியமையும்) அதற்குப்பின் குறைந்தமையும் காணலாம். (முதலாவது அட்டவணை பார்க்க). பதின்நான்காவது மனிதன் வேலை தொடங்கியபொழுது முழு விளைவு உண்மையாகவே குறைந்து, பதின் நான்காவது மனிதனுடைய எல்லை விளைவு குறைந்த அளவாயிற்று. பதின்நான்காவது மனிதன் முழு விளைவு அதிகரித்தற்கு ப்பதிலாக, உண்மையாகவே அதைக் குறைத்தது இதனல் காணப்

படும். ஒவ்வொரு மனிதனுடைய எல்லைவிளைவைக் கூட்டும்பொழுது முழு உற்பத்தியைக் கண்டு கொள்ளலாம். இப்படிப் பத்து மனிதர் வேலை செய்யும் பொழுது, முழுவிளைவாகிய இருநூறு புசல் நெல்லைப் பத்துப் பேருடைய எல்லை விளைவையும் கூட்டிக் கண்டுகொள்ளலாம்.

எல்லை விளைவின் மாறுபாடுகளைச் சாதாரண உற்பத்தியின் மாறுபாடுகளோடு பொருத்த முயன்றால், நாம் இன்னுமொரு முக்கியமான அங்கத்தைக் காணவியலும். சாதாரண உற்பத்தி வளரும் பொழுது எல்லைவிளைவு அதிலும் வேகமாய் வளரும். அது, எட்டாவது மனிதன் வேலைகளைத் தொடங்கு மட்டுமேயாம். ஒன்பதாவது மனிதன் வேலைகளைத் தொடங்கும்பொழுது. சாதாரண எல்லைவிளைவும் ஒப்பாகும். பத்தாவது மனிதனுப்குப்பின் ஒரு மனிதனுடைய சாதாரண உற்பத்தி குறையும் பொழுது எல்லைவிளைவு அதைக்காட்டிலும் வேகமாகக் குறையும். முறையாகவரைந்த ஒரு இரேகையில் நம் இலக்கங்களைக் குறித்து இந்த நிலையை விளக்கலாம்.




மனிதர்களின் கணக்கு

இவ்வுதாரணத்தால் நாம் கண்ட நியாயத்தை இப்பொழுது விளக்கலாம். ஏனைக் காரணங்கள் மாறாமல் இருக்குமானால், ஆக்கக்காரணிகளை ஒன்றுகூட்டும் பொழுது, ஓராக்கக்காரணி நிலையாக இருக்கையில், வேறொருகாரணியின் பிரமாணத்தை மட்டும் கூட்டும் பொழுது, ஓரெல்லைக்குப் பின், கூட்டும் காரணியின் **சாதாரண உற்பத்தியும் எல்லை உற்பத்தியும்** குறைந்து போகும். இந்த விதி **குறையும்பயன்விதி** என்று சொல்லப்படும். முன்னிருந்த பொருளியலறிஞர்கள் இவ்விதி வேளாண்மையில் தெளிவாகத் தொழிற்படுவதைக் கண்டார்கள். இதைக் கண்ட பொருளியலறிஞரான **யோன்ஸ்துவட்டுமில்** என்பவர் இதனை இப்படி எழுதியமைத்தார். வேளாண்மை பயிரிடுதலில் மனிதனுடைய சாமர் தியமும் கலைத்திறனும் மாறாமல் இருக்குமாயின், ஒரு நிலப்பரிமாணத்துக்கா

உபயோகிக்கும் சிரமத்தை அதிகரிக்க, அவ்வதிகரிக்கும் அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்க இயலாது. இது வேளாண்மையின் ஒரு தத்துவமாகும். சிரமத்தை இருமடியாக்கினால், உற்பத்தியையும் இருமடியாக்க வியலாது. இதனை வேறு முறையிற் கூறுவோம். வேளாண்மைக்குரிய உற்பத்தியின் சகல அபிவிருத்திகளும் வற்றினாலும் பயன் தருவது கூடிய பரிமாண நிலம் பயிரிடுவதற்காக உபயோகிப்பதனாலேயாம். தொன்று தொட்டு நாம் இதைப் பொதுவாக அறிவோம். அப்படியில்லாவிடின், வேலைகளைச் செய்யும் மனிதர்களுடைய தொகையை அதிகரித்து ஒரு நிலப்பகுதியில் நமக்கு வேண்டிய எல்லாவற்றையுமே பயிரிடவியலும். ஆனால், உண்மையாகவே இதைச் செய்யவியலாது. மேலும், குறையும் பயன் விதியானது நிலத்துக்கு மட்டுமன்று. ஏனைய ஆக்கக் காரணிகள் எல்லாவற்றிற்குமே இது பொதுவாகும்.

இந்நியாயம், நிபுணத்துவம், அறிவு, கலைத்திறன் முதலியவை மாறாமல் இருப்பதால் நிறைவடையும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இவையெல்லாம் மாறாமல் இல்லை. நிபுணத்துவம், கலைத்திறன் முதலியவை வளர்வதன் பயனாக, வேளாண்மையிற் குறையும்பயன்விதியின் தொழிற்பாடு தாமதித்திருக்கின்றது. இது, போகமாற்றம் என்னும் புதிய ஆராய்ச்சிகளும் செயற்கையான பசளையைப் போன்ற புதிய ஆக்கங்களும் வேளாண்மையுடன் இணைக்கப்படுவதாலேயாம். இவ்வண்ணம் பழங்காலத்திலும் பார்க்க. பெருமளவு உற்பத்திப் பொருளைப் புதிய காலத்தில் நிலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். அதுஎங்ஙனமாயினும், குறையும் பயன் விதியானது. எப்பொழுதும் தொழிற்படவே முயலும். நிபுணத்துவம், அறிவு முதலியவற்றின் மாறுபாடுகள் காரணமாக, இந்த நிலைமையிலுள்ள இன்றியமையாத விதியானது, தொழிற்படத் தாமதமடையும். கடைசியாக, ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது யாதெனில் இவ்விதி நிலத்துக்கு மட்டுமன்றி, ஆக்கச்சாதனங்கள் எல்லாவற்றுக்குமே பொதுவாகும்.

எங்ஙனமாயினும், நம் உதாரணத்திலே குறையும் பயன்விதி தொழிற்பட்டது ஒருவிதமான வரையறைக்குப் பின்பே என்பதை மறக்கக்கூடாது. நம் உதாரணத்தின்படி, ஒருமனிதனுடைய எல்லை உற்பத்தி குறையத் தொடங்கியது ஒன்பதாவது மனிதன் வேலை தொடங்கிய பின்பேயாம். எட்டாவது மனிதன் வரை எல்லைஉற்பத்தி வளர்ந்து கொண்டே இருந்தது. எட்டாவது மனிதன் வரை கூடும் பயன் விதியே தொழிற்பட்டது. வேறு முறையிற்கூறின், ஆக்கக் காரணிகளைப் பொருத்துகையில் ஓர் அசையாத காரணிக்கு வேறொரு காரணியை மேலும்மேலும் பிரயோகிக்கும் பொழுது, சிறிது காலம் கழியும் வரை. **கூடும்பயன்விதி** தொழிற் படும். நாம் நோக்கின், இவ்விதி தொழிற்படும் இடங்களை நன்கு காணலாம். உதாரணமாக, ஒரு மனிதனுக்குப் பாரமான ஒரு பெரிய உருளையை அசைக்க இயலாதிருக்கும். இரண்டு மனிதராயின், சிரமத்

துடன் உருளையைத் தள்ள இயலும். நான்கு மனிதர் இவ்வேலையில் ஈடுபட்டால் உருளையைத்தள்ளி வேலை நன்ருகச் செய்வது சுலபமாகும். உண்மையாகவே நான்கு மனிதர் ஓர் உருளையைக் கொண்டு செய்யும் வேலை இரண்டு மனிதர் செய்யும் வேலையைக் காட்டிலும் இரு மடங்கு அதிகமாகலாம்.

ஓராக்கக்காரணியை மேலான அளவுக்கு நிலையாக வைத்துக் கொள்ளும் இன்னெரு காரணியோடு உபயோகித்த பொழுது, சிலகாலம் கழியும் வரை அந்த மாறும் தன்மையுடைய காரணிக்கு மாறிலாநிலை கிடைக்கும் மாதிரியை இவ்வாறு காட்டலாம். இவ்வண்ணம் நாம் மூன்று விதிகளைக் குறிக்கலாம். அவை யாவன குறையும் பயன் விதி, மாருப்பயன் விதி, வளரும்பயன்விதி என்பன.

நம் உதாரணம் மூலம், வரையறுக்கப்பட்ட மனிதனின் கணிப்பு இருக்கும் பொழுது, வரையறுக்கப்படாத ஒரு நிலப்பரிமாணம் இருந்த போதிலும் நெற்பயிரிடுவதில் எட்டுமனிதர்களாலாவது ஒன்பது மனிதர்களாலாவது பத்து ஏக்காகப் பயிரிடுதல் அதிகம் பயனளிக்கக்கூடிய தென்று முன் கூறினேம். இவர்களுள் ஒவ்வொரு மனிதரும் உச்சப் பொது உற்பத்தியாகிய 21 புசல் நெல்லைப் பெற்றுக் கொள்ளவியலும். (முதலாவது அட்டவணையைப் பார்க்க). வரையறுக்கப்படாத அந்த நிலங்களை நெற்பயிரிடுவதற்காக மட்டும் உபயோகிக்கமுயன்று, வரையறுக்கப்பட்ட மனிதர்களின் தொகையும் நெற்பயிரிடுவதில் மட்டும் இணைக்க முடியுமாயின், இந்நியாயம் சாத்தியமாகும். யாதேனும் ஒரு காரணியைப் பலவித காரியங்களுடன் இணைக்கமுடியுமென்பதை அறிவோம். நெற்பயிரிடுவதற்கேற்ற நிலங்களை மரக்கறி பயிரிடல், வத்தாளங்கிழங்கு பயிரிடல் முதலிய உபயோகங்களிற் பயன்படுத்தவியலும். இவ்வண்ணம் சிரமத்தையும் மூலதனத்தையும் முயற்சியையும் பலவித காரியங்களுக்காகவோ, பலபிரயோசனங்களுக்காகவோ ஈடுபடுத்தலாம். ஆனல், எவ்வித ஆக்கக்காரணியாவது ஒரு சமயத்தில் வரையறுக்கப்பட்ட ஒரு பிரமாணமாகலாம். அது அப்படியிருந்தால், அதனல் நல்ல பலன் பெறக்கூடிய காரணிகளின் சாதாரண உற்பத்தியை மட்டும் தேடுதல் போதாது. எல்லையுற்பத்தியையும் தேடல் வேண்டும். ஆகையால், நாம் இதனை விரிவாக ஆலோசித்துப் பார்ப்போம்.

வரையறுக்கப்பட்ட நிலப்பிரமாணம்—அதாவது இருநூறு ஏக்கர் வரையறுக்கப்பட்ட மனிதர்த் தொகை (அதாவது நூற்றறுபது) மாத்திரம் வசிக்கும் ஒரு தீவு இருக்கிறதென்று கொள்வோம். இங்கு நூறு ஏக்கரில் நெல்லைப் பயிரிட்டு, 100 ஏக்கரில் மரக்கறியைப் பயிரிடக்கூடுமென்றும், இம் மனிதரை நெற் பயிரிடவோ, மரக்கறி பயிரிடவோ அமைக்கக்கூடுமென்றும் கொள்வோம். முதலாவது அட்டவணையிற் குறிப்பிட்டது மனிதர்களையும் நிலங்களையும் பலவிதமான கலப்பினல் இணைத்த பொழுது உண்டான நெல்லு உற்பத்தியென்றும், இரண்டாவது

இடாப்பிற் காட்டப்படுவது மனிதர்களையும் நிலங்களையும் பலவிதமான கலப்பினால் இணைத்தபொழுது உண்டான மரக்கறி உற்பத்தியளவென்றும் கொள்வோம்.

**இரண்டாவது அட்டவணை**

நிலப்பிரமாணம் பத்து ஏக்கர். மரக்கறிப் பிரமாணம் அந்தரில் காட்டப்படும் :—

| மனிதர் தொகை | | முழு உற்பத்தி | | சாதாரண உற்பத்தி | | எல்லை உற்பத்தி |
|---|---|---|---|---|---|---|
| 1 | .. | 5 | .. | 5 | .. | 5 |
| 2 | .. | 12 | .. | 6 | .. | 7 |
| 3 | .. | 24 | .. | 8 | .. | 12 |
| 3 | .. | 14 | .. | 8 | .. | 12 |
| 4 | .. | 48 | .. | 12 | .. | 24 |
| 5 | .. | 85 | .. | 17 | .. | 37 |
| 6 | .. | 138 | .. | 23 | .. | 53 |
| 7 | .. | 183 | .. | 26 | .. | 44 |
| 8 | .. | 200 | .. | 25 | .. | 18 |
| 9 | .. | 216 | .. | 24 | .. | 16 |
| 10 | .. | 230 | .. | 23 | .. | 14 |
| 11 | .. | 142 | .. | 22 | .. | 12 |
| 12 | .. | 152 | .. | 21 | .. | 10 |
| 13 | .. | 260 | .. | 20 | .. | 8 |
| 14 | .. | 253 | .. | 18 | .. | — |

ஒரு புசல் நெல் 10 ரூபா விலைமதிப்புள்ளதாகவும், ஒரு அந்தர் மரக்கறி 10 ரூபா விலைமதிப்புள்ளதாகவும் கொள்வோம். ஒரு சமயத்திலே நூற்று முப்பது மனிதர்களை நூறு ஏக்கரில் நெற்பயிரிட ஈடுபட்டபொழுது, முப்பது மனிதர் நூறு ஏக்கரில் மரக்கறி பயிரிடுவதில் ஈடுபட்டனர் என்று கருதுவோம். இம்மாதிரி அவர்கள் ஈராயிரத்து இருநூற்றுப் பத்துப் புசல் நெல்லையும் இருநூற்றுநாற்பது அந்தர் மரக்கறியையும் ஆக்குவார்கள். ஒரு புசல் நெல்லினதும் ஓரந்தர் மரக்கறியினதும் விலைமதிப்பு ஒரே தன்மையானதால் முழு உற்பத்திப் பொருளையும் பணத்தில் விலைமதிக்காமல், அவ்விலைமதிப்பே கிடைக்கும்வண்ணம் அலகுகளில் மதிக்கவியலும். இப்படி நோக்கின், முழு உற்பத்திப்பொருளும் 2450 அலகுகளாகும். இவற்றுள் ஓர் அலகின் பெறுமானம் ரூபா 10 ஆகும். முதலாவது அட்டவணையின்படி, நெற்பயிரிடுவதில் ஈடுபட்ட கடைசிப் பத்து மனிதரின் எல்லை உற்பத்திப்பொருள் ஐம்பது அலகுகளாகும். ஆனால், இரண்டாவது அட்டவணையின்படி மரக்கறிகளைப் பயிரிடுவதற்கு இன்னும் பத்து மனிதரைச் சேர்த்தால், அதாவது முப்பது மனிதருக்குப் பதிலாக நாற்பதுபேரைச் சேர்த்

தால் அவர்கள் அதிகப் படியாக இருநூற்றுநாற்பது அலகுகள் ஆக்குவார்கள். அதாவது, மரக்கறிகளைப் பயிரிடுவதற்கு அதிகப்படி பத்து மனிதர் சேர்ந்தால், அவர்களுடைய எல்லை உற்பத்திப் பொருள் இருநூற்று நாற்பது அலகுகளாகும். ஆகையால், தெளிவுறும் வண்ணம் கூறின், பத்து மனிதரை நெற்பயிரிடுவதிலிருந்து வெளியேற்றி, மரக்கறி பயிரிடுவதற்கு இணைத்தல் கூடிய பயனளிக்கும். அப்படி நிகழின், நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் நூற்றிருபது மனிதர்களின் உற்பத்திப் பொருள் ஈராயிரத்து நூற்றறுபது அலகுகளாகும்பொழுது, மரக்கறி பயிரிடுகையில் அமையும் நாற்பது பேரின் முழு உற்பத்திப் பொருள் நானூற்றெண்பது அலகுகளாகும். ஆதாவது, முழு உற்பத்திப் பொருள் 2640 அலகுகளாகும். நாம் இப்படிச் செய்து நெற்பயிரிடுகையில் ஈடுபட்ட கடைசிப் பத்து மனிதர்களின் எல்லை உற்பத்திப் பொருளையெடுத்து, மரக்கறிகளின் செய்கையில் அதிகப்படியாகப் பத்து மனிதரை ஈடுபடச் செய்வதனால் உண்டாகும் எல்லை உற்பத்திப் பொருளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நெற்பயிர்ச்செய்கைக்குத் தொண்ணூறு மனிதரையும் மரக்கறிச் செய்கைக்கு எழுபது மனிதரையும் ஈடுபடச் செய்வது மிகவும் நன்மையளிக்குமென்று அறிவோம். அப்பொழுது, நூறேக்கரின் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் தொண்ணூறு மனிதர் 1890 அலகுகளை ஆக்கும் பொழுது, மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் எழுபது மனிதர் 1820 அலகுகளை ஆக்குதலால், அவர்களின் முழு உற்பத்திப்பொருள் 3710 அலகுகளாகும். இதை நாம் நன்றாகப் பரிசோதித்துப்பார்த்தால், உரிய காரணம் புலனாகும். நெற்பயிர்ச்செய்கையில் தொண்ணூறு மனிதர் ஈடுபடும் பொழுது, ஆங்கு ஈடுபட்ட கடைசிப் பத்து மனிதரின் எல்லை உற்பத்திப் பொருள் 210 அலகுகளாகும். மரக்கறிப் பயிர்ச்செய்கையில் எழுபது மனிதர் ஈடுபடும் பொழுது, இன்னும் பத்து மனிதர் ஈடுபடுவதால் பெறக்கூடிய எல்லை உற்பத்திப் பொருள் 180 அலகுகளாகும். ஆகையால், நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் தொண்ணூறு மனிதரில் இன்னும் பத்துப் பேரை எடுத்து, மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடச்செய்தல் பயனளிக்காததன் காரணம், முழு உற்பத்திப் பொருள் முப்பது அலகுகளால் குறைவதாலேயாம். மரக்கறி பயிரிடுவதில் ஈடுபடும் எழுபது மனிதர்களிற் பத்துப்பேரை எடுத்து நெற்பயிரிடுவதில் ஈடுபடச் செய்தல் நன்மைபயக்காது. மரக்கறி பயிரிடுவதில் ஈடு பட்டிருக்கும் கடைசிப் பத்து மனிதரின் எல்லை உற்பத்திப்பொருள் 440 அலகுகளாகும். அப்பொழுது நெற்பயிர்ச்செய்கைக்கு இன்னும் பத்து மனிதரைக் கூட்டினால், அவர்களுடைய எல்லை உற்பத்திப்பொருள் 110 அலகுகள் மட்டுமாயின், முழு உற்பத்திப்பொருளிலிருந்து 330 அலகுகள்குறையும். அவர்களை நெற்பயிர்ச் செய்கைக்காவது மரக்கறிப் பயிர்ச்செய்கைக்காவது இணைக்கவியலுமானால், மிகவும் நல்ல பயன் உண்டாகும். நெற்பயிர்ச் செய்கையின் உற்பத்திப் பொருள் மரக்கறிப் பயிர்ச் செய்கையின் எல் லைஉற்பத்திப் பொருளுக்கும் பெரும் பாலும் சமமாகும். நூறேக்கர் நெற்பயிர்ச் செய்கையில் தொண்ணூறு மனிதர் ஈடுபடும்பொழுது நூறேக்கர் மரக்கறிப் பயிர்ச் செய்கையில் எழுபது மனிதர் ஈடுபடுவர். அப்பொழுதே இவ்வொருப்பாடு நிகழும். இதனாற்புலப்படுவது யாதெனில், ஏதாவதோராக்கக்

காரணி அரிதாயிருப்பின், அதனால் முழுப்பிரயோசனத்தையெடுக்க வேண்டுமானால், அதை ஏனைய காரணிகளோடு ஒன்று சேர்க்க வேண்டும். ஓராக்க வழியில் அவ்வரிதான் காரணியின் எல்லை உற்பத்திப் பொருளானது, ஏனை ஆக்க வழிகளில் அக்காரணியின் எல்லை உற்பத்திப் பொருளோடு நிகராகும். ஆனால், முயற்சி மட்டுமன்றி, ஏனை ஆக்கக்காரணிகளுமே அரிதாகலாம். ஆக்கக் காரணிகள் எல்லாம் அரிதானால், அவைகள் எல்லாவற்றையும் உபயோகிக்க வேண்டியது, ஓராக்க வழியில் ஒவ்வொரு காரணியின் எல்லை உற்பத்திப்பொருளும். ஏனை ஆக்கவழிகளில் அந்தந்தக் காரணிகளின் எல்லை உற்பத்திப் பொருளோடு நிகராகும் வண்ணமே என்று முன்காட்டிய நியாயத்தினால் வெளியாகும். இஃது இப்படி இராவிடின், அப்படிப்பட்ட காரணியொன்றின் ஒரு பகுதியை அக் காரணியின் எல்லை உற்பத்திப் பொருள், மிகவும் அதிகமான வேறொரு ஆக்க வழிக்கு மாற்றுதல், அல்லது இணைத்தல் பயனளிக்கும்.

ஒருகாரணியின் எல்லை உற்பத்திப்பொருள் ஒவ்வோராக்க வழியின் நிகரான எல்லைவரும் வரையில், அக்காரணி எப்பொழுதும் ஓராக்கத்திலிருந்து வேறோராக்கத்திற்கு மாறிக்கொண்டிருக்கலாம். மாறாவரையறை, அல்லது சமநிலைவரையறை, அதாவது, காரணிகள் எப்பொழுதும் மாறாத சமயம் வருவது, ஒரு காரணியின் எல்லை உற்பத்திப் பொருளானது உபயோகிக்கப்படும் ஒவ்வோராக்க வழியில் சமமாகும் பொழுதேயாம்.

ஒருநாட்டின் செல்வத்தினதும் ஆதாயத்தினதும் அளவை நிச்சயிக்கும் மாதிரியை இன்று நாம் அறிவோம். நாம் முன் அறிந்தபடி மனிதனுடைய பரிபாலனத்துக்கு அகப்படாத சில வலுவேகங்கள் ஒழிந்தபின், ஒரு நாட்டின் ஆதாயமும் செல்வமும் தங்கியிருப்பது, ஆக்கக்காரணிகளின் அளவு, அவற்றை உபயோகிக்கும்முறை, உற்பத்திக் கலைத்திறன் ஆகியவற்றிலேயாம். ஒரு கட்டில்லா முயற்சிகொண்டு பொருளாதாரமுறையின் ஆக்கம் நடைபெறும் மாதிரியையும், அதனால் கிடைக்கும் முழு ஆதாயத்தை மக்களிடையில் பிரித்துவிடும் முறையையும், புதியபொருளியல்திட்டம் பணப்பொருளியல்திட்டமாக ஒழுங்குபடும் முறையையும், பின்வரும் அத்தியாயங்களில் ஆராய்ந்து பார்ப்போம். இவைபொருளியற் கலையில் எடுத்தாளப்படும் முக்கியமான அமிசங்களாகும். இவற்றை விரித்துரைக்குமுன், பொருளியற்கலை பற்றிய தத்துவ அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் மிகவும் ஏற்றதாகும்.

பொருளியற்கலை ஒரு சமுதாயவித்தையாகும். அதாவது, அது சமுதாயத்திற் பிறந்த மனிதனுடைய நடையை ஆராய்கின்றது. பொருளியற் கலையை விட வேறு சமுதாயக்கலைகளுமுண்டு. இவையெல்லாம், சமுதாயத்தைப் பற்றிய ஒழுக்கத்தின் ஒருவித அமிசத்தைப்பற்றி உரைக்கின்றன. பொருளியற்கலையும் இதனையே செய்கின்றது. பொருளியற் கலை சமுதாயத்தைப் பற்றிய ஒழுக்கத்தை எப்பகுதி மூலம் ஆராய்கின்றது என்பதைக்கண்டால் அதை ஏனைச் சமுதாய வித்தைகளிலிருந்து பிரித்து அறிந்து கொள்ள இயலும். இப்படிப் பொருளியற்

கலை படிப்பிப்பது, சிக்கனத்தோடு வேலைகளைச் செய்தலின் இன்றியமையாமை; அதாவது, எமது பொருளின் மேலான பலத்தைப் பெறுவதிலுள்ள ஆர்வம் காரணமாகத் தோன்றும் முறையென எண்ணலாம்.

சிக்கனத்தோடு வேலை செய்தலின் இன்றியமையாமை தோன்றுவதேன் என்று நாம் இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். மனிதனுடைய பலவித தேவைகள் இதற்கு மூலகாரணமாகும். இயலுமானால், இத்தேவைகள் எல்லாவற்றையும் பூரணமாகத் தணிக்க மனிதன் விரும்புவான். இத்தேவைகளைத் தணித்துக் கொள்வதற்குள்ள சம்பத்துக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மனிதனுடைய தேவைகளை நோக்கங்களாகவும் இத்தேவைகளைத் தணித்துக்கொள்வதற்குள்ள சம்பத்துக்களைச் சாதனங்களாகவும் பொருளியலறிஞர் கொள்வர். ஆகையால், தம் திருத்திக்காக நிறைவேற்றிக்கொள்ள விரும்பும் பலவிதமான நோக்கங்கள் இருக்கும்பொழுது, மனிதனுக்கு அதற்காகவுள்ள சாதனங்கள் வரையறுக்கப் பட்டுள்ளதைக் காணலாம். ஒரு நாளில் பலவேலைகளைச் செய்யவிரும்பினும் அதற்காகவுள்ள காலம் இருபத்துநான்கு மணிக்கு வரையறுக்கப்பட்டுவிடும். இப்படியே நிலமும் மூலதனமும் முயற்சியும் ஆகிய பலவிதமான சம்பத்துக் களும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆகையால், இந்த அருமையான சம்பத்துக் களின் மேலான பயனைப் பெற்றுக் கொள்வதெனில், நாம் சிக்கனத்துடன் காரி யங்களைச் செய்ய வேண்டும். வேலைகள் தொகையாகவிருந்தால், நாளின் இரு பத்து நான்கு மணிகளைப் பிரித்துக் கொள்வதெப்படி யென்பதை நிச்சயித்தல் வேண்டும். அவ்வண்ணமே, நம்முடைய அருமையான ஆக்கக்காரணிகளால் மேலான பயனையெடுப்ப தெப்படியென்பதையும் நாம் நிச்சயிக்க வேண்டும்.

சாதனங்கள் அபூர்வமானவை. அவற்றைப் பலவிதமான முறைகளில் உப யோகிக்க இயலும். ஒரு நிலத்துண்டை நெற்பயிர்ச் செய்கைக்காவது மரக் கறிப் பயிர்ச் செய்கைக்காவது உபயோகிக்கவியலும். புல் வளர்க்கவும் இதை யுபயோகிக்கலாம். இதை வத்தாளங் கிழங்குகளையோ, மரவள்ளிக் கிழங்கு களையோ, பயிர்செய்ய உபயோகிக்கலாம். தொழிற்சாலைகளையும் படமாளிகை களையும், வீடுகளையும், இன்ப நுகர்ச்சிக்காக வேறு கட்டடங்களையுமமைத்தல் முதலிய வேலைகட்கும் இதை உபயோகிக்கலாம். அப்படியின்றேல், காடுகளாக வோ, காப்பாற்றிய இடங்களாகவோ வைத்துக் கொள்ளலாம். இங்ஙனம் ஏனைய சாதனங்களையும் பல உபயோகங்களுக்கு அமைக்கவியலும்.

சிக்கனத்துடன் காரியங்களைச் செய்வதில் வசதி தோன்றுவது சாதனங்களின் அருமையினால் மட்டுமன்று, அவற்றைப் பலவிதமான உபயோகங்களுக்கு இணைக்கவியலுவதனாலேயாம். உதாரணமாக, நெற்பயிர்ச் செய்கைக்கு மட்டும் அமைக்கக்கூடிய ஒரு நிலத்துண்டும் அதற்கு மாத்திரம் இணைக்கக்கூடிய சில தொழிலாளர்களும் சிலகருவிகளும் உண்டென்று நாம் கருதுவோம். இங்கே சிக்கனத்தைப்பற்றிய ஒரு கேள்வி தோன்றுது. இவ்வாக்கக்காரணிகள் நெற் பயிர்ச்செய்கைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருப்பதனால், இவற்றைச் சிக்கன

மாகப் பியோகியாவிடின், வேலைக்கு அமைக்கவில்லையெனக் கருதுதல் வேண்டும். இச்சாதனங்களை, அறிந்தநாம் கலைத்திறன்படி உபயோகத்திற்கு அமைப்பதன் றிப் பெரும்பயன் வேறொன்றுமில்லை.

சிக்கனமாகக் காரியங்களைச் செய்வதற்கு இடங்கிடைப்பது எங்ஙன மெனின், நம்முடைய ஒவ்வொரு தேவையையும் தணிப்பதற்குப் பெருமளவில் திருத்தி யடைய முடிவதனாலேயே. நமக்கு எப்பொழுதுமே நெல் தேவையான அளவுக்கு மரக்கறிகளும் தேவையாயிருந்தால், நம் அருமையான பொருள்களை நெற் பயிர்ச் செய்கைக்கு உபயோகிப்பதா, மரக்கறிவகைக்கு உபயோகிப்பதா என்பது பற்றி நாம் நடுநிலைநின்று முடிவு செய்யவேண்டும். உண்மையாகவே, நம் தேவைகளைத் **தேர்வினளவுத்திட்டத்தின்படி** ஆக்கவியலும். இத்தேர்வினளவுத் திட்டம் ஆளிலிருந்து ஆளுக்கும், காலத்திலிருந்து காலத்துக்கும், இடத்தி லிருந்து இடத்துக்கும் மாறும். ஆகையால், ஒவ்வொருவருடைய தேர்வினளவுத் திட்டத்தின்படி, அவர் எந்தத் தேவையை முதலில் தணித்துக்கொள்ள வேண்டு மென்பதை நிச்சயிக்க முடியும்.

ஆகையால், இந்நான்கு காரணங்களுக்கும் அமையச் சிக்கனத்துடன் வேலை செய்வதில் இன்றியமையாமையும் அவகாசமும் தோன்றும். மனிதருடைய தேவைகள் பலவிதமாதலாலும், அத்தேவைகளைத் தணிக்கவிருக்கும் சாதனங் கள் அருமையாதலாலும், இச்சாதனங்களைப் பலவிதமான உபயோகங்களுக்கு இணைக்கக்கூடுமாதலாலும் இத்தேவைகள் அளவிற் பலவிதமாகையாலும், சிக் கனத்துடன் வேலைகளைச் செய்யவிருக்கும் இன்றியமையாமையையும் இடத்தை யும் ஆராய்ந்து தீர்மானம் செய்யப்பொருளியற் கலை எத்தனிக்கும்.

பொருளியற் கலை ஒருவித்தையாகும். வித்தையென்பது சில விடயங்களைப் பற்றிக் காரணத்துக்கும் பலனுக்குமிடையில் தொடர்பு தெரியும் வண்ணம் ஒழுங்காக்கிய பண்பாட்டு உணர்ச்சித்தொகுப்பாகும். கலையினது, காரணத் தையும் அதன் நற்பலன்களையும் ஆராயும் தன்னைப் பற்றிய சட்டங்களை நியமித் தல், கலையின் ஒருபொறுப்பன்று. ஆகையால், எந்தத் தேவையைத் தணிக்க வேண்டு மென்பது பற்றி தன்னைக்குறித்த சட்டங்களை நிரூபித்தல் பொருளியற் கலைத்தொழிலன்று. எந்தத் தேவை நல்லது, எந்தத்தேவை தீயது என்பதைப் பற்றி அது கவனியாது. இக்காரணங்களைப்பற்றிப் பொருளியலறிஞருக்கு அபிப்பிராயபேதம் புலப்படாது. ஒரு பரமாணு வறிஞன் பரமாணு ஆயுதங்க ளைத் தவிர்க்கவேண்டியதை உபந்நியாசிக்கும் மாதிரியே, ஒரு பொருளியலறிஞ னும் அபினியருந்துதலை முற்றுகத்தவிர்க்க வேண்டுமென்று வற்புறுத்துவான். பரமாணு ஆயுதங்களைத் தவிர்க்கவேண்டுமோ, வேண்டாமோ என்பது பௌதிக வியல் மூலம் தீர்க்க முடியாத வண்ணமே, அபினியருந்துதல் நல்லதோ கூடா தோ என்ற பிரச்சினை பொருளியற் கலைமூலம் தீர்க்கமுடியாது. இக்கருத்துக் களிடையில் பொருளியற் கலை நடுநிலைமையில் நின்றுலும், பொருளியலறிஞர்கள் அப்படி ஆகாமைக்கு இடமுண்டென்பதை இதனுல் அறியலாம்.

5 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

| | | |
|---|---|---|
| 1. தேவை | ... | Want |
| 2. உடனுளை | ... | Immediate |
| 3. நேரான பண்டங்கள் | ... | Direct goods |
| 4. இடைப்பண்டங்கள் | ... | Intermediate goods |
| 5. பயன் | ... | Utility |
| 6. தேறியவருமானம் | ... | Net Income |
| 7. ஆக்கம் | ... | Production |
| 8. உருப்பயன் | ... | Form Utility |
| 9. இடப்பயன் | ... | Place Utility |
| 10. நேரப்பயன் | ... | Time Utility |
| 11. உரிமையாளர் பயன் | ... | Ownership Utility |
| 12. நடுவன் | ... | Middleman |
| 13. சிரமம், தொழில் | ... | Labour |
| 14. நிலம் | ... | Land |
| 15. மூலதனம் | ... | Capital |
| 16. நுகர்வோரின் மூலதனம் | ... | Consumer's Capital |
| 17. ஆக்குவோரின் மூலதனம் | ... | Producer's Capital |
| 18. நேர் ஆக்கம் | ... | Direct Production |
| 19. நேரில் ஆக்கமும் | ... | Indirect Production |
| 20. முயற்சியாளன் | ... | Enterpreneur |
| 21. முயற்சி | ... | Enterprise |
| 22. ஆக்கக்காரணிகள் | ... | Factors of Production |
| 23. கலைத்திறன் | ... | Technique |
| 24. எல்லை | ... | Marginal |
| 25. இரேகைச் சித்திரம் | ... | Graph |
| 26. குறையும் பயன் விதி | ... | Law of diminishing returns |
| 27. கூடும் பயன் விதி | ... | Law of Increasing returns |
| 28. மாற்றுந்தன்மையுடைய | ... | Variable |
| 29. மாறுப்பயன் | ... | Constant returns |
| 30. சமநிலைப்புள்ளி | ... | Point of Equilibrium |
| 31. கட்டில்லா முயற்சிப் பொருளியல் முறை | ... | Free enterprise economy |
| 32. நோக்கங்கள் | ... | Ends |
| 33. சாதனங்கள் | ... | Means |
| 34. தேர்வினளவுத்திட்டம் | ... | Scale of Preference |

# 6 ஆம் அத்தியாயம்

## உறுதிக் கேள்வி

ஒரு சமுதாயத்தின் தனமும் ஆதாயமும் அதற்குரிய ஆக்கச்சாதனங்களிலும் அவற்றையுபயோகிக்கும் முறையிலும் பொதுவாகத் தங்கியிருப்பது பற்றி நாம் முன்னைய அத்தியாயத்திற் படித்தோம். நாட்டில் ஆக்கச் சாதனங்களாற் பெறும் பிரயோசனம், ஆக்கமுறைகளின்படியும் நாட்டுச் சமுதாயதாபனங்க ளின்படியும் மாறும். புது உலகத்தில் சமுதாய ஒழுங்கு பலமாற்றங்களுக் குள் ளாகியிருப்பதை நாம் இந்நூலின் முன்னைய அத்தியாயங்கள் மூலம் படித்தோம். பலநாடுகள் மானிய ஒழுங்கிலிருந்து முதலாண்மை ஒழுங்குக்கு மாறியபொழுது, மேலுஞ் சில நாடுகள் ஒரு சமுதாயவாத ஒழுங்கிற்கு அடிகோலின. தனி முத லாண்மையாவது சமுதாய வாதத்தையாவது மானியமுறையையாவது கைக் கொண்ட ஒருநாடு தற்போதைய உலகத்தில் இல்லை என்பதை அறிவோம். அமெரிக்க ஐக்கியநாட்டைப்போன்ற ஒரு நாடு, பெரும்பான்மையும் முத லாண்மையுடையதாகும். சோவியத்திரசியாவானது பெரும்பான்மையும் சமு தாயத்தையுடையதாகும். இலங்கையில் மானிய அமிசங்களும் சமுதாயவாத அமிசங்களும் முதலாண்மை அமிசங்களும் உள. இலங்கையில் முதலாண்மை யின் அமிசங்கள் சிறப்பாக விருக்கின்றன. இலங்கையில் பொருளியல் முறையின் உண்மையான தத்துவத்தை உணர்ந்துகொள்வதாயின், நாம் இவையெல்லாவற் றையும் நன்குக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

முதலாண்மை அங்கங்கள் புது இலங்கையில் பெரும்பாலும் முக்கியமுடையன வாதலால், முழுதுமே முதலாண்மையுடைய பொருளியல் முறையை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பின் அப்படிப்பட்ட ஒரு பொருளியல் முறைக்கு மானிய அங்கங்களாலும் சமுதாயவாத அங்கங்களாலும் அமையும் மூகாமையை ஆராய்ந்து பார்த்தல் நன்று. முதலாண்மை முறையுமே மாறியது என்பதை நாம் கற்றேம். ஆகையால், தூய முதலாண்மை இயங்குங் கலையை ஆராய்ந்து பார்த்தல் மிகவும் நல்லது. அதற்குப்பின், முதலாண்மைக்கு அடுத்து உட்புகுந்த சில அங்கங்களும் அதன்மேல் மூகாமை செலுத்திய விதத்தையும் முதலாண்மை முறையிலிருந்து எழுந்த சமுதாயவாதத்தின் சில அங்கங்களும் முழுப் பொரு ளியல் முறையில் மூகாமை செலுத்தும் விதத்தையும் பார்ப்போம். இப்படிக் கூறிய சகல அங்கங்களாற் கலங்கிய இலங்கைப் பொருளியற் சீவியமானது, விரி வாக "இலங்கைப் பொருளியல் முறை" என்ற நூலில் விரித்துரைக்கப்படும். இங்கு, எவ்விதமான பொருளியல் முறை மேலும் சிறப்பாக, முதலாண்மை தலைமையாகவுள்ள பொருளியல்முறை மேல், மூகாமை செலுத்தும் பொருளியல் நியாயத்தை விரித்துரைக்க முயல்வோம்.

பொருளியல் ஒழுங்கின் சிறப்பான சுதந்திர முயற்சியும் போட்டியும் விலை முறையுமே அங்கங்களாவன. புதுப் பொருளியல் முறைகள், சிறக்கும் இயல்புக் கேற்ற காரியங்களைச் செய்வதனுலும், அவற்றிற்குத் தொழிற்பிரிப்பு அடிப் படையாக விருக்கிறதனுலும், அவை பண்டமாற்றின் காரணமாக நிகழும். பணத்தின் காரணமாக பண்டமாற்று இலேசாகியிருக்கின்றது. புதுப்பொருளி யல் முறையில் எல்லோருமே உழைப்பது, தத்தமக்கு உபயோகத்தையோ, திருத் தியையோ கொடுக்கும் பண்டங்களையும் சேவைகளையும் வாங்கவுதவும் பணத் தைப் பெறும் பொருட்டேயாம். இவ்வெண்ணத்துடனேயே கமக்காரனும் சிற்பி யும் வைத்தியனும் உழைப்பார்கள். புதுப்பொருளியல் முறைக்குப் பணம் எவ் வளவோ தேவைப்படுகின்றது. பலர், முன்குறித்த காரியத்துக்கே பணம் தேவை என்பதை மறந்து, பணஆதாயத்தை இயன்ற அளவு அதிகரித்தலையே தங்கள் கடைசி இலட்சியமாக்கிக்கொண்டுளர். ஆனுல், சிலருக்கு விளக்கத்தோடும், சில ருக்கு விளக்கமின்றியும், பணமே தங்கள் தேவைகளைத் தணித்து உபயோகங் களைப் பெற்றுத்தரும் வழி என்பது தெரியும். ஆகையால், கமக்காரன் தன் னுடைய ஆக்கத்தை மேலான விலைக்கு விற்கவே முயல்வான். சிற்பியும் அப் படியே முயல்வான். தொழிலாளன் தன் பண ஆதாயத்தை அதிகரித்துக்கொள் ளும் பொருட்டு, கூலிக்கோ இன்றேல், தன் மூல சம்பளத்துக்கோ அதிகப்படி யான தொகையினருக்குச் சேவை செய்வான். அல்லாவிடின், இவ்இரண்டு வழி களையும் கைக்கொள்ளுவான். அப்படியெனின், நாம் எல்லோருமே ஒருமுறை யில் பண்டங்களையோ, சேவைகளையோ ஆக்குவோராவோம். வேறுமுறையில், பண்டங்களையோ, சேவைகளையோ நுகர்வோராவோம். பொதுவாகச் சொன் னுல், ஒருவன் தேவையான உபயோகங்களைப் பெறுதற்குப் பணத்தைச் சம் பாதித்தல், வேறு மனிதர் விலைகொடுத்து வாங்க விரும்பும் பயன்பாட்டுப் பொருள்களைத் தானும் பெறலேயாம். ஒருவன் ஒரு பண்டத்தையோ, பண்டத் தொகுதியையோ, ஒரு சேவையையோ, சேவைத்தொகுதியையோ விலைக்கு வாங்க வேண்டுமானுல், அவனுல் அவைகள் "**கேட்கப்படு**" வனவென்று சொல் லப்படும். ஆகையால், ஒருவனுக்கு ஒரு பண்டத்தை வாங்கவிருக்கும் விருப்ப மும், அதற்கு ஒரு விலையைச் செலுத்தவிருக்கும் விருப்பமும், ஒன்றுகூடும் பொழுதே "**கேள்வி**" தோன்றும். **கேள்வி** யாவது விலைக்கு வாங்க விருக்கும் தேவையென்க. விலைக்கு வாங்கவிருக்கும் விருப்பமும் ஆற்றலும் கூடும்பொழுது **கேள்வி** அமைந்துவிடும். ஆகையால், கேள்வி, தேவையினும் வேறுனது. கேள்வி யாவது வேண்டுவதற்குக் கூடிய விலைகொடுத்து வாங்கும் ஆற்றலாகும்.

ஒருவன் ஒரு பண்டத்தின் ஓர் அளவை ஒருவிலைக்கு வாங்க விரும்புவது, அம் மாதிரியானது. அவனுடைய தேவைகளைத் திருத்தி செய்யக்கூடுமென்பதனுலே யாம். அவன் ஒரு பண்டத்தின் ஒரு பிரமாணத்தைக் கேட்பது, அதை விலை கொடுத்து வாங்கினுல் அவனுக்கு ஏதாவது உபயோகம் கிடைக்குமென்பதனுலே யாம். வியாபாரத்துக்காக அமைக்கப்பட்டுள்ள பலவிதமான உபயோகங்களுள் ஒரு பகுதியை விலைகொடுத்து வாங்க எவனிடமாவது வரையறுக்கப்பட்ட ஒரு பண அளவு உண்டு; அவனுடைய பண அளவு வரையறுக்கப்பட்டிருக்கிறபடி

யால் அவன் பெற்றுக்கொள்ள விரும்பும் எல்லாவற்றையும் பெறமுடியாது. அவனெதிரே இருக்கும் பலவிதமான பண்டங்களுள்ளும் சேவைகளுள்ளும் வாங்க விரும்பும் பொருள்களையும் வாங்கும் அளவையும் அறிந்து, மட்டுப்படுத்தல் வேண்டும். அவன் நன்ருக, நியாயமான முறை வேலை செய்பவஞனல், அவனுடைய பண அளவைக் கொண்டு அவன் வாங்குவது; அவனுக்கு மேலான திருத்தியையாவது உபயோகத்தையாவது கொடுக்கும் ஆற்றலுடைய பண்டங்களினதோ சேவைகளினதோ தொகுதியாகும்.

வரையறுக்கப்பட்ட பண அளவையுடைய பகுத்தறிவுள்ளவன் தன் திருத்தியை முன்னேறும் விதம் எப்படிப் பெற்றுக்கொள்ளுவான் என்று பார்ப்போம். ஒரேமாதிரியான பண்டங்களையாவது சேவைகளையாவது மேலும் நுகர்வதனுல் ஒருவனுக்குக் கிடைக்கும் திருத்தி, படிப்படி குறைவது அனுபவம். எப்பொழுதும் புகை பிடிப்பவன் இருபத்துநான்கு மணிநேரத்திற்கு அதனை மறந்து பின்பு சிகரெட்டு ஒன்றைப் பற்றினுல், அவனுக்குப் பெரியவொரு திருத்தி உண்டாவதைக் காணலாம். ஒன்றுக்குப்பின் ஒன்ருகக் கொளுத்திப் புகைப்பதினுல் அவனுக்குக் கிடைக்கும் திருத்தி குறைவது திண்ணம். முதலாவது சிகரெட்டினுல் கிடைத்த திருத்தியையும் அதற்குப் பின் ஒவ்வொன்ருகப் பற்றிய சிகரெட்டுக்களினுற் கிடைத்த திருத்தியையும் நிச்சயமாக அளக்கவியலாது. ஆனுல், ஏனைய தன்மைகள் மாருமல் இருப்பின், அவன் குடிக்கும் சிகரெட்டுக்கள் ஒன்றிலிருந்து மற்றையதற்கு அவனுடைய திருத்தி குறைந்துகொண்டே போகும். திருத்திக்காகப் பண்டங்களையும் சேவைகளையும் விலைகொடுத்து வாங்கும் நுகர்வோர் எல்லோரையும் கவனிக்கும்பொழுது, இம்மூலதருமம் உண்மையேயாகும். இது, **குறையும் பயன் விதி** என்று வழங்கப்படும். இரண்டு காரணங்களைக் கொண்டே பயனற்றதை நிச்சயமாக அளத்தல் கடுமையாகும். ஒரு பண்டத்தை மேலும் மேலும் நுகர்வதனுல் ஒருவனுக்குக் கிடைக்கும் பயன் எவ்வளவென்று நிச்சயித்தலாவது சுய நிச்சயமாகும். இது, ஒருவனிலிருந்து மற்ருெருவனுக்கும் ஒரு நேரத்திலிருந்து வேருெரு நேரத்துக்கும் மாறும் தன்மையுடையது. மேலும், ஒருவனுக்கு ஒரு பண்டத்தினுல் எவ்வளவு பயன் கிடைக்குமென நிச்சயிப்பது, வேருெருபொருளின் பயன்களோடு ஒப்பிடுவதனுலேயாம். ஒருவன் ஒரு கிண்ணத்தேனீரையோ சிகரெட்டு ஒன்றையோ நுகரவேண்டுமெனின் அவன் தேனீரையே நுகருவான். அதனுற் புலப்படுவது, அவனுக்குத் தேனீர் சிகரெட்டைக்காட்டிலும் பயனுள்ளது என்பதே. முதலாவது, ஒரு கிண்ணத்தேனீருக்குப் பிறகு அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைச் செய்ய நேர்ந்து, சிகரெட்டு ஒன்றையும் நுகர நிச்சயித்தால், அதனுல் புலப்படுவது இரண்டாவது கிண்ணத்தேனீரைக் காட்டிலும் முதலாவது சிகரெட்டு அவனுக்குப் பயனைக் கொடுக்குமென்பதே. இரண்டாவது தேனீர்க்கிண்ணம் முதலாவது தேனீர்க் கிண்ணத்தைப் போலப் பயனைக்கொடுக்க மாட்டாது என்பதுமாகும். இவ்வண்ணம், தேனீரை மேலும் மேலும் நுகர்தலில், உண்டாகும் பயனை நிச்சயமாக மதித்தல் கடுமையானுலும், அப்பயன் முறையாகக் குறைவது

உண்மை. அப்படியே பயனை நிச்சயமாக விலைமதித்தல் கடுமையானாலும் தேனீர்க் கிண்ணத்தினால் கிடைக்கும் பயன் கூடியதென்பது உண்மை.

பலவித அளவான பண்டங்களையும் சேவைகளையும் நுகர்வதனால் உண்டாகும் திருத்தியை நிச்சயமாக அளத்தல் கடுமையானாலும், எடுத்துக்காட்டால் விரித்துரைக்கும் பொருட்டு அதைச் செய்யக்கூடுமென்று நாம் கருதுவோம். ஒரே விதமான குணத்தையுடைய வெண்காயத்தை, பலவிதமான அளவில், ஒரு வாரத்துக்குள் விலை கொடுத்து வாங்குவதனால் ஒருத்திக்குக் கிடைக்கும் திருத்தியை நிச்சயமாக அளக்கவியலும். கீழ்க்காணும் அட்டவணையில் அத்திருத்தி, அல்லது பயன் காட்டப்படும். இக்கணக்கிலே உள்ள திருத்தியாவது, ஒரு பய

மூன்றாவது அட்டவணை

முழுத்திருத்தி அலகுக

| வெங்காய் இருத்தல் அளவு | | அகளாவன. பயன்களின் அலகுகள் அளவு | | எல்லைப்பயன் |
|---|---|---|---|---|
| 1 | .. | 40 | .. | 40 |
| 2 | .. | 75 | .. | 35 |
| 3 | .. | 105 | .. | 30 |
| 4 | .. | 132 | .. | 27 |
| 5 | .. | 157 | .. | 25 |
| 6 | .. | 177 | .. | 20 |
| 7 | .. | 192 | .. | 15 |
| 7 | .. | 192 | .. | 15 |
| 8 | .. | 206 | .. | 14 |
| 9 | .. | 218 | .. | 12 |
| 10 | .. | 228 | .. | 10 |

னலகு ஒரு நூற்றின் விலைமதிப்புக்கு ஒப்பானதெனக் கொள்வதே. இவ்விடாப் பின்படி ஒரு இருத்தல் வெண்காயத்தை வாங்கும் பொழுது, ஒருத்திக்குக் கிடைக்கும் முழுத்திருத்தி, நாற்பது அலகுகளாகும். இரண்டு இருத்தல் வாங்கியபொழுது திருத்திகளோ, பயன்களோ எழுபத்தைந்து அலகுகளாகும். ஓரிருத்தலை மட்டும் வாங்காமல் இரண்டு இருத்தல்களை வாங்கும்பொழுது முழுத்திருத்தியளவு முப்பத்தைந்து அலகுகளாகப் பெருகும். அதாவது, $75-40 = 35$ என்க. ஆகையால், இரண்டாவது வெண்காய இருத்தலை வாங்கியதனால் உண்டாகிய எல்லைப்பயன் இதுவே. இவ்வண்ணம், சில இருத்தல் வெண்காயத்தை வாங்கிய பொழுது கடைசி இருத்தல் வெண்காயத்தால் உண்டாகும் எல்லைப் பயன் இவ்வட்டவணையின் கடைசி வரிசையில் காட்டப்படும். ஓரிருத்தல் வெண்காயத்தின் விலை இருபத்தைந்து சதம் என்று கருதுவோம். அப்படியானால், முன்கூறிய இல்லாள் ஐந்து இருத்தலைத் தவிர அதிகப்படியாக வாங்காள். அவள் ஆறு இருத்தலை வாங்கினால், ஐந்து இருத்தல் வாங்காமல் ஆறு இருத்தலை வாங்குவதனால் முழுப்பயனுக்கு இருபது சதம் விலை மதிப்புள்ள இருபது

பயனலகுகளைப் பெறமுடியும். ஆனல், அவ்வாருவது இருத்தல் வாங்க அவள் இருபத்தைந்து சதம் செலவழிக்க வேண்டும். வேறு முறையாகக் கூறின், ஆருவது இருத்தலின் எல்லைப்பயன் இருபது சதம் மாத்திரமாகும்பொழுது, அதை விலைகொடுத்து வாங்குவதற்கு இருபத்தைந்து சதத்தைச் செலவுசெய்ய வேண்டும். அவள் அப்படிச் செய்யாளென்பது தெளிவு. ஆருவது இருத்தலும் குணத்திஞல் ஏனைய இருத்தல் வெண்காயமும் வேறுபடாமையை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஓரிருத்தல் வெண்காயத்தின் விலை இருபது சதமெனின், இல்லாள் ஆறு இருத்தலைத் தவிர அதற்கு மேலாக ஒன்றை வாங்காள். இம்மூல விதியை நாம் பின்வருமாறு கூறமுடியும். ஒருவன் ஒரு பண்டத்தை விலை கொடுத்து வாங்குவது, அப்பண்டத்தின் கடைசியான அலகின் எல்லைப் பயன், அப்பண்டத்தை வாங்கச் செலவிடும் பணத்துக்கு ஒப்பாகு மட்டுமே. அதன் எல்லையைக் கடந்து அவன் மேலும் அப்பண்டங்களை வாங்கான்.

ஒருவருடைய எல்லைப்பயன் அட்டவணையாவது, உண்மையில் அவருடைய கேள்வி அட்டவணையாகும். அவருடைய எல்லைப்பயன் அட்டவணையில், அவ பண்டங்களைப் பலவித விலைக்கு வாங்கும் அளவை நாம் கண்டு கொள்ள முடியும். இவ்வண்ணம் மூன்ருவது அட்டவணையை மறுபடியும் நோக்கின், இல்லாள் பலவித விலைக்கு எவ்வளவு இருத்தல் வெண்காயத்தை வாங்குவாள் என்பதை நம்மாள் அறியவியலும். ஓரிருத்தல் வெண்காயம் 30 சதமாயின், அவள் 3 இருத்தலையும், 20 சதமாயின் 5 இருத்தலையும், 15 சதமாயின் 7 இருத்தலையும் வாங்கக்கூடும்.


எல்லைப்பயன் இடாப்பை, அல்லது கேள்வி இடாப்பை அமைப்பதில் நாம் சில காரணங்களை மனதில் கொண்டோம். அவ்விடாப்பாவது ஏனைய பொருள்கள் மாருமல் இருக்க, விலைமட்டும் மாறிஞல், இல்லாள் கேட்கும் வெண்காயம் பலவிதமான அவவுகளைக் காட்டும் என்பதே. இவ்வண்ணம், இல்லாளுடைய பண அளவும் விருப்பமும் அவளுடைய குடும்பத்தேவைகளும் மாருமல் இருக்கின்றனவென்று நாம் கருதிஞேம். அவ்வெல்லைப்பயன் இடாப்பிஞல் காட்டப்பட்டது யாதெனில், ஏனைய எல்லாப் பொருள்களும் மாருமல் இருக்க, விலை மட்டும் மாறியபொழுது. வெண்காயத்துக்கு அவளுடைய கேள்வியேயாகும். இவ்விடத்தில் தெளிவாகத் தெரிகிறவண்ணம், அவளுடைய பண அளவு பெருகிஞல், இன்றேல் விருப்பம் மாறிஞல், அவளுடைய எல்லைப்பயன் இடாப்பும், அதஞல் கேள்வியும் மாறும். அவள் அதனைப் பெருமளவு பொருட்படுத்த மாட்டாள். செலவழிக்க ஆயிரம் ரூபா வைத்திருக்கும் இல்லாள் இருபத்தைந்து சதத்தை மதிக்கமாட்டாள். அப்படியே அவளுடைய விருப்பம் மாறும்பொழுதும் அவளுடைய எல்லைப்பயன் அட்டவணையும் அதஞல் கேள்வியும் மாறும். ஆனல், நியமித்த ஒரு காலத்துக்குள் இது மாருமலிருப்பதை நாம் கணிக்க இயலும். இதை மறுபடியும் கூறின், ஒருவனுடைய எல்லைப்பயன் அட்டவணை, அல்லது கேள்வி இடாப்பானது, ஏனைய பொருள்கள் எல்லாம் மாருமல் இருக்க, விலையானது மாறும்பொழுது. அது அவன் கேட்கும் பிரமாணத்திற்கேற்றதாகும்.

இவ்வண்ணம் நியமித்த ஒரு காலத்துக்குள், ஒரு நாட்டில் சகல கேள்வி களையும் நாம் தேடிக்கொள்ள வியலுமானுல், எல்லோருடைய கேள்வி அட்ட வணைகளையும் திரட்டும்பொழுது, நியமித்த ஒரு நேரத்திலே பலவிதமான விலை களுக்கு, எல்லோருடைய வெண்காயக் கேள்வி அட்டவணையையும் அமைத்துக் கொள்ளலாம். நான்காவது அட்டவணையிற் காட்டப்படுவது, நியமித்த ஒரு காலத்துக்குள் ஒரு நாட்டில் வசிப்பவர்கள் ஒரே விதமான குணத்தையுடைய வெண்காயத்துக்குக் காட்டும் கேள்வி யாகும்.

**நான்காவது அட்டவணை**

| விலை சதம் | வெண்காயம் கேட்கும் அளவு இருத்தலில் |
|---|---|
| 10 | 30,,000 |
| 15 | 25,000 |
| 20 | 20,000 |
| 25 | 15,000 |
| 30 | 10,000 |
| 35 | 5,000 |

இங்கு கேள்வி அட்டவணை வரைப்படமூலம் காட்டப்படும்.




இப்படிப்பட்ட ஒரு இரேகையை வரையும் பொழுது OX என்னும் கிடைக் கோட்டால் அளவைக்காட்டுதலும், OY என்னும் குத்துக் கோட்டினுல் விலை யைக் காட்டுதலும் சாதாரண வழக்கமாகும். இவ்வண்ணம் ஓரிருத்தல் 10 சத

மாக 30,000 இருத்தல் வெண்காயத்தைக் கேட்கும்போது, அதை நாம் அட்ட வணையிற் காண்பிப்பதாயின், நாம் செய்யவேண்டியது. O என்பதற்கு மேலாக, குத்து இரேகைக்கு நேரே பத்தும், A என்பதற்கு நேரே கிடை இரேகையில் முப்பதும் காட்டும் இடத்தில் B இனைக் குறித்தல் வேண்டும். இவ்வண்ணம், நாம் O ஐக் குறிக்கும்பொழுது, அதனால் காட்டப்படுவது, இருத்தல் 15 சத மாக 25,000 இருத்தல் வெண்காயக் கேள்விக்கு அது அமையுமென அறிவோம். இப்புள்ளிகளைத் தொடுக்கும் இரேகைக்குக் **கேள்வி வளைகோடு**, என்று பெயர்.[3] ஒரு கேள்வி வளைகோட்டை அமைக்கும்பொழுது ஏ.தாவதொரு விலைக்குக் கேட்டும் பிரமாணத்தையும், அதற்கேற்ற ஏதாவதொரு அளவைக் கேட்கும் விலையையும் கண்டு கொள்ளலாம்.

கேள்வி வளைகோட்டை அமைக்க ஏதுக்களாகிய பொருள்களை மறுபடியும் கருதுவோம். விலைகொடுத்து வாங்குபவன் நியாயமாக இயற்றுவான் என்றும், விலை கொடுத்து வாங்குமுன், அப்படி வாங்கும் கடைசி இருத்தலின் எல்லைப் பயனை, அதை வாங்க உபயோகிக்கும் பணத்தோடு, கணித்துப் பார்ப்பான் என் றும் கருதுவோம். உண்மையாகவே, எப்பொழுதும் மனிதர் இப்படித் தருக்க ரீதியாக எண்ணமாட்டார்கள். சிலவேளைகளில், அப்படிக் கருதாமலே செயலில் இறங்குவார்கள். ஆனால், மனிதருடைய பொதுச் செயல் முறையை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, அறியாமலே அவர்கள் எல்லைப் பயனையும் கவனித்தே தத்தம் வேலைகளைச் செய்கிறார்கள். இதுவே நம் கொள்கை.

கேள்விவளைகோட்டை அமைக்கும்பொழுது நாம் கருதியது, ஏனைய பொருள் கள் எல்லாம் மாறாமல் இருக்க, விலைமாறலின்படி, கேட்கப்படும் அளவும் மாறும் என்பதாம். சிறிது காலத்துக்குப்பின், ஏனைய பொருள்கள் எல்லாம் மாறுத லடையும். மேலும், பலர் தத்தமுடைய பயனளவைப் பூரணமாக அறிவதில்லை. விலை ஐந்து சதம் வரை குறைந்தால், எவ்வளவு வெண்காயம் வாங்க வேண்டு மென்று இல்லாள் யோசியாள். ஆகையால், பிழையில்லாத ஒரு கேள்விவளை கோட்டை அமைத்தல் உண்மையாகவே இலேசான காரியமன்று. அது எங்ஙன மாயினும் அப்படிப்பட்ட ஒரு கோட்டை அமைக்கும் விதத்தை அறிந்து கொள் ளல் முக்கியமானது. அதனால் சிலபேர் பலவிதமான பண்டங்களுக்குரிய கேள்வி யைக் கணக்கிடுவர். உதாரணமாக, ஆக்கும் அளவை அதிகரிக்கவோ குறைக் கவோ நிச்சயிக்குமுன், ஆக்குவோர் அப்படிக் கேள்வியைக் கணக்கிடல் வேண் டும். சுங்கத்தீர்வைகளைத் திரட்டுமுன், பெறக்கூடிய ஆதாயத்தை விலைமதிக்க அரசாங்கம் முன்கூட்டியே முயற்சி செய்யவேண்டும். சுங்கத்தீர்வையை அதி கரிப்பதனால் நுகர்வோனுக்குப் பண்டத்தின் விலை கூடும். நம் உதாரணப்படி

[3] இவ்விலக்கங்களைப் பொருத்த இயலுவது ஓரிருத்தல் 10 சதமாக 30,000 இருத்தலைக்கேட்கும் பொழுதும் 15 சதமாக 25,000 இருத்தலைக் கேட்கும்பொழுதும் 25.000 இருத்தலுக்கும் 30,000 இருத்தலுக்கு மிடையேயுள்ள ஒரு பிரமாணம் 10 சதத்துக்கும் 15 சதத்துக்கு மிடையில் கேட் கப்படுமென்று எண்ணுவது புத்தியாகும். இம்மூல விதியையே 35 சதமாகும்வரை கேட்கும் எத்தகைய அளவிற்கும் பயன்படுத்தலாம்.

ஓரிருத்தல் வெண்காய விலை இருபது சதமானபொழுது, ஒரு வாரத்துக்கு 20,000 இருத்தல் வெண்காயம் கேட்கப்பட்டது. ஓரிருத்தலுக்கு ஐந்து சத வரி திரட்டப்பட்டால், நுகர்வோனுக்கு ஓரிருத்தல் வெண்காயம் 25 சதமாவதற்கு இடமுண்டு. ஆனபடியால், கேட்கப்படும் முழு அளவு 15,000 இருத்தல் வரை குறையக் கூடும். நாம் பெறக்கூடிய ஆதாயத்தை மதிக்கும்பொழுது, அரசாங்கம் இக்காரணத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பிழையில்லாத கேள்வி வளைகோட்டை அமைத்தால் அதைப்பற்றிய அறிவுடையோர் ஓரளவு பிழையில்லாமற் கேள்வியைக் கணக்கிட்டுக் கொள்ளுவார்கள். நுகர்ச்சியை இலேசாக்கும் பொருட்டு, பிழையில்லாத கேள்விவளைகோட்டை அமைக்க இயலுமென நாம் கருதுகின்றோம்.

பல கேள்விவளைகோடுகளின் ஒரு முக்கிய அங்கம் கவனிக்கவேண்டியுளது அது, குறைந்த விலைக்கு அதிகமான அளவும், கூடியவிலைக்குக் குறைந்த அளவும் கேட்கப்படும் என்பதே. ஒரு பண்டத்தை மேலும் மேலும் வாங்கும் பொழுது, அதன் எல்லைப்பயன் கிரமமாகக் குறைந்து விடும். ஓரிருத்தல் கயிறு 25 சதமாகும் பொழுது, இல்லாள் ஐந்து இருத்தலை மாத்திரம் வாங்குவாள். ஆறுவது இருத்தல் 20 சதமானல் மட்டும் அவள் அதை வாங்குவாள். இவ்வளவு, கேள்வி வளைகோட்டில் நன்றுகக் காணமுடியும். இவ்வளைவுகளைக் காட்டவே பல கேள்வி வளைகோடுகள் கீழ்ச் சரிந்திருக்கின்றன. இவ்வண்ணம் நம் கேள்விவளைகோட்டில் விலைகூடும்பொழுது கேட்கப்படும் அளவு குறையும். விலை குன்றும் பொழுது கேள்வியளவு கூடும். குறைந்த விலையின் காரணமாக கூடிய அளவு கேட்கப்படும் பொழுது அது **"கேள்விநீட்டம்"** என்று சொல்லப்படும். அளவு குறையும் பொழுது, அது **கேள்வியொடுக்கம்** என்று சொல்லப்படும். ஆனல், சில சமயங்களில் கேள்வி வளைகோடுகள் அற்பதூரம் மேலாகச் சாய்ந்து, கூடிய விலைக்குக் கூடிய அளவு கேட்கப்படும் விதத்தைக் காட்டும். ஏனெனில், சில பணக்காரர் வைரமணிகளைப் போன்ற சில பண்டங்களின் விலைகூட, அவற்றையும் கூடிய விலை கொடுத்து வாங்குவதாலேயாம். நுகர்வோரின் அறியாமையினல், கூடிய விலையுள்ள பண்டங்களின் தன்மை மேலானதென்று கருதி, கூடிய விலை கொடுத்து அதிக அளவைப் பெறுவர். ஆனல், இது இங்ஙனமாதலால் சில சமயங்களில் மட்டுமே.


மேலும், பல ஏதுக்கள் காரணமாக, ஓரளவான விலையை முன்னைக்காட்டிலும் கூடிய அளவு கேட்கவியலும். உதாரணமாக, மாறுபடும் விருப்பினதும் ஆதாயங்களின் அதிகரிப்பினதும் காரணமாக, ஓரளவான விலையை முன்னைக் காட்டிலும் கூடிய அளவிற் கேட்கலாம். இதற்குக் **கேள்விப் பெருக்கம்** என்று பெயர். ஒரு நேரத்திலே, ஓரிருத்தல் 25 சதமாக 15,000 இருத்தலைக் கேட்டு, அதற்குப்பின், இன்னெரு சமயம் அவ் விலைக்கே 18,000 இருத்தல் கேட்கப்பட்டதென்று கொள்வோம். இது கேள்வியின் மிகையாகும். இதைக் கேள்வி நீட்டத்தோடு பிழையாக மாறிக்கருதுதல் கூடாது. இவ்வண்ணமாக ஒரு விலையானது முன்னைக் காட்டிலும், குறைவாகக் கேட்கப்படுமாயின், அது **கேள்வித்தணிப்பு** என்று சொல்லப்படும்.

ஐந்தாவது அட்டவணை மூலம் கேள்வி அதிகரிக்கும் நிலையும், நான்காவது அட்டவணை மூலம் கேள்வி அதிகரிக்க முன்னிருந்த நிலையும் காட்டப்பட்டுள.

**ஐந்தாவது அட்டவணை**

| விலை சதம் | | | வெண்காயம் கேட்கும் அளவு. இருத்தலில் |
|---|---|---|---|
| 10 | .. | .. | 33,000 |
| 15 | .. | .. | 2–,000 |
| 20 | .. | .. | 23,000 |
| 25 | .. | .. | 18,000 |
| 30 | .. | .. | 13,000 |
| 35 | .. | .. | 8,000 |

கீழ்க்காணும் சித்திரவரிகளால் நான்காம் ஐந்தாம் அட்டவணைகளை விளக்கலாம்.




இ இ கேள்வி வளைகோடு, கேள்வியை அதிகரிக்கு முன்னிருந்த கேள்வியைக் காட்டும். இ, இ, கேள்விவளைகோட்டினுல் கேள்வி அதிகரித்தற்குப் பின் உண்டாகும் கேள்வி காட்டப்படும். இந்த நிலையில் கேள்விவளைகோடு வலப்பக்கத்துக்கு நகர்வதைக் காணலாம். அப்படியே கேள்வியின் குறைவு உண்டாகும்பொழுது, கேள்வி வளைகோடு இடப்பக்கத்துக்கு நகரும்.

ஆக்கியோர், கேள்வி அதிகரித்தல், குறைதல், கேள்வி நீட்சி, கேள்வியொடுக்கம் ஆகிய இந்தக் காரணங்களை அறிந்து கொள்ள விரும்புவார்கள். ஏனைய எல்லாப் பொருள்களும் மாறுமல் இருக்க, விலையைச் சிறிது குறைக்கும்பொழுதும் கூட்டும் பொழுதும் காசு கொடுத்து வாங்குவோரின் மனோ நிலையை அறிந்து கொள்ளப் பண்டங்களை விற்போனொருவன் விரும்புவான். கேள்வி நெகிழ்ச்சியின் மேலேயே இந்த மனோநிலை தங்கியிருக்கும். ஆறுவது அட்டவணையாற் காட்டப்படுவது, ஒரு கால எல்லையில் வேண்டிய தேனீர்க்கிண்ணங்களின் கேள்வியென நாம் கருதுவோம்.

### ஆறுவது அட்டவணை

| விலை தரம் | கேட்கப்படும் அளவு | செலவீடு ரூபாவில் |
|---|---|---|
| 1 | 10,000 | 500 – |
| 6 | 9,000 | 540 – |
| 7 | 8,000 | 560 – |
| 8 | 7,000 | 560 – |
| 9 | 6,000 | 540 – |
| 10 | 5,000 | 500 – |

ஒரு கிண்ணம் தேனீர் ஐந்து சதமாகும்பொழுது பதினாயிரம் கிண்ணம் தேனீர் தேவைப்படின், தேனீருக்கு 500 ரூபா செலவு வரும். இவ்வண்ணமாக, பலவித விலைக்குக் கேட்கப்படும் தேயிலைப் பரிமாணங்களும் அவற்றுக்குச் செலவிடும் முழுப்பணமும் ஆறுவது அட்டவணையிற் காணப்படும். நாம் இவ்விடாப்பை ஆய்ந்து பார்க்கும்பொழுது, விலை ஏழுசதத்திலிருந்து எட்டுச் சதமாக ஏறும் பொழுது, தேயிலைக்குச் செலவிடும் முழுத் தொகையில் ஒரு மாற்றம் உண்டாகாமை தோன்றும். இவ்விடண்டு விலைகளிலிருந்தும் 560 ரூபா தேயிலைக்குச் செலவிடப்படுவதைக் காணலாம். ஏதாவதொரு காலத்தில் ஒன்றுக்கொன்று கிட்டிய இரண்டு விலைகளால் ஒரேதன்மையான முழுச் செலவீட்டையும் தாங்க நுகர்வோனுக்கு ஆதரவு கிடைக்கும். எனின், அவ்விரண்டு விலைகளிடையே கேள்வியினெகிழ்ச்சி, ஒற்றுமை நிகர்த்ததென்று சொல்லப்படும். விலை சிறிது குறைத்தலின் காரணமாக முழுச் செலவீடு அதிகரித்தால், அவ்விரண்' விலைகளினிடையே நெகிழ்ச்சியானது ஒற்றுமையிற் கூடுமென்று சொல்லப்படும். இவ்வண்ணம் விலை ஒன்பது சதத்திலிருந்து எட்டுச்சதத்துக்குக் குறையும்பொழுது, நெகிழ்ச்சியானது ஒற்றுமையைக் காட்டிலும் கூடும். விலைசிறிது கூடும்பொழுது முழுச் செலவீடு அதிகரித்தால், அவ்விரண்டு விலைகளிடையே நெகிழ்ச்சியானது ஒற்றுமைப்பாட்டிற்குக் குறையுமென்று சொல்லப்படும். இவ்வண்ணம், விலை ஐந்து சதத்திலிருந்து ஆறுசதமாக அதிகரிக்கும்பொழுது, நெகிழ்ச்சி ஒற்றுமையைக் காட்டிலும் குறைவது, விலைகூடும்பொழுது செலவீடு கூடுவதனாலேயாம்.

கேள்வியினெகிழ்ச்சியை வேறு விதத்திலும் அளக்கலாம். ஏதாவதொரு விலையின் கேள்வி நெகிழ்ச்சியை, அவ்விலையிலிருந்து நூற்றுக் கொன்றாகக் குறைக்கும்பொழுது, கேள்வியானது நூற்றுக்குக் குறைந்தோ கூடியோ தோன்றும் பிரமாணத்தைக் கொண்டு அறிந்துகொள்ளலாம். உதாரணமாக, விலையில் நூற்றுக்கு ஒன்று குறையும்போது, கேள்வியின் அளவு 100 முதல் 102 வரை, அல்லது 200 முதல் 204 வரை கூடினால், அவ்விலைக்கு இரண்டு கேள்விநெகிழ்ச்சிகள் உள என்பதாம். கேள்வி நெகிழ்ச்சி ஒரு போட்டியிற் கூடும்பொழுது, அது கேள்வியின் மீள் தன்மை என்று சொல்லப்படும். கேள்வியின் மீள்தன்மை ஐக்கியத்திற் குறையும்பொழுது **கேள்வியின் மீள்தன்மையிலாவியல்பு** என்று சொல்லப்படும். ஒரு பண்டத்துக்கெனவிருக்கும் கேள்வியின் மீள் தன்மையானது அப்பண்டத்துக்குப் பதிலாகவுள்ள **பிரதியீட்டுவீழ்ச்சியில்** தங்கியுளது. ஒரு பண்டத்துக்குப் பதிலாகவுள்ள பிரதியீடுகள் நன்றாகவுள்ள அளவுக்கே கேள்வியும் மீளும். கார் வண்டிகளின் விலை சிறிது கூடினாலும் அக்கார் வண்டி விற்பனை அத்துணை குறையாமலிருப்பது, கார் வண்டிகளுக்குப் பிரதியீடுகள் இல்லாமையினாலேயாம். அப்படியெனின், கார்வண்டிகளின் கேள்வி அத்துணை மீளாது. அன்றி, ஓரினத்துக்குரிய வண்டிகளின் (போட்டுக்காரினம்) விலை கூடும் பொழுது அதற்கொப்பான வேறு காரினத்தின் விலை அதிகரியாமல் இருப்பின், சிலர் போட்டுக்கார் வண்டிகளை வாங்காமல் மொரிசுக்காரினத்தையே வாங்குவர். அப்படியெனின் மொறிசுக்கார் வண்டிகளின் கேள்வி நெகிழும். அவ்வண்ணமே, ஒரு கோப்பி வருக்கம் இன்னொரு வருக்கத்துக்குக் கிட்டிய பிரதியீடாகுமாயின், ஒரு வருக்கத்துக்குள்ள கேள்வியானது, பெரும்பாலும் மீளுகையில், சகல கோப்பிக்குமுள்ள கேள்வியும் அவ்வளவு நெகிழாமல் இருக்கும்.

ஒரு பொருளை உபயோகிக்கும் விதம் பலவாறு அதிகரிக்கும்பொழுது, அதற்குள்ள பிரதியீடுகளும் அதிகரிக்கும். மின்சக்திக்குப் பரந்த உபயோகமுண்டு. மெழுகுதிரி, வாயு, நிலவெண்ணெய் முதலியவற்றிற்குப் பதிலாக அதை உபயோகிக்கலாம். மின்சத்தியின் விலை குறைந்தால், பலர் அதை, வாயு, மண்ணெண்ணெய், மெழுகுதிரி முதலியவற்றிற்குப் பதிலாகப் பெரும்பாலும் உபயோகிப்பர். அதனால் மின்சக்தியின் கேள்வி மலியக்கூடும். அரிசியின் கேள்வி மீளாதிருப்பது, அது ஓர் உணவுப் பொருளாக அமைதலாலேயாம். அரிசியின் விலை குறைந்தால், மக்கள் அதனை அதிகமாக வாங்குவர். ஆனால், பொதுவாக அரிசியின் விலை சிறிது குறைந்தாலும் மதிக்கத்தக்க ஒரு கேள்வி நீட்சி உண்டாகாது.

தேவைகளுக்குள்ள கேள்வியானது, பெரும்போகங்களாக எண்ணப்படும் பொருள்களுக்குள்ள கேள்வியைக் காட்டிலும் பொதுவாக நெகிழ்வு கொள்ளாது. இவ்வண்ணம் அரிசிக்குள்ள கேள்வி தோடம்பழங்களுக்கோ திராட்சைப்பழங்களுக்கோ உள்ள கேள்வியைக் காட்டிலும் மீள்தன்மையில் மிகவும் குறையும். சில தேவைகளுக்கு நாம் செலவிடும் அளவு, நம் ஆதாயத்தின் மிகச்சிறிய பங்காயின், அவற்றிற்குள்ள கேள்வியின் மீள் தன்மை இதனைக் காட்டிலும் குறையும். உதாரணமாக, நாம் உப்புக்கோ, தைக்கும் நூலுக்கோ செலவழிக்கும் அளவு

மிகக் குறைவானதால், அதற்குள்ள கேள்வி மீளாமல் இருக்கும். உப்பின் விலை நூற்றுக்கு ஐம்பது விதம் கூடினாலும் சனத்தொகை முதல் வாங்கிய அளவையே வாங்கும். விலையை ஓரளவு குறைத்தாலும் முதலில் வாங்கிய அளவையே சனத்தொகை வாங்கும். ஏழை மனிதரைக் காட்டிலும் பணக்காரர்களுடைய கேள்வி மீள்தன்மையினுற் குறைவாகும். ஏழை மனிதன் தன் வரையறுக்கப்பட்ட ஆதாயத்தினுல் இயன்ற அளவு பிரயோசனத்தைப் பெறக்கூடும். ஆகையால், ஒரு பண்டத்தின் விலைகூடும் பொழுது, அவன் அதற்குப் பிரதியீடுகளைத் தேடுவான். ஆனுல், சிறிது விலை அதிகரித்தால் பணக்காரன் பிரதியீடுகளைத் தேட எத்தனிக்கமாட்டான்.


மீள் தன்மை இருவிதத்தில் அமையும். ஒன்றின் விலை குறையும் பொழுது முதலிலிருந்து அதை விலைகொடுத்து வாங்கி அனுபவிப்பவர்கள் குறைந்த விலையின் காரணமாக அதை வாங்க மிகவும் அதிகமாக ஆசைப்படுவார்கள். முன் வாங்காதவரும் அதனைச் சிறிதளவு வாங்குவர். ஆனுல், உப்புவாங்குவதிலென்றல், குறைந்த விலையின் காரணமாக இதை வாங்க ஆசைப்படும் புதியவர்கள் இருக்கவியலாது. ஏனெனில், எவருமே எப்பொழுதும் உப்பு வாங்குவர். புத்தகமெனின் விலைகுறைந்த பொழுதும் முதல் தொடங்கியே வாங்கி உபயோகிப்பவர்கள், ஒரு புத்தகத்தைக் காட்டிலும் கூடவாங்க ஆசைப்படார். ஆகையால், புதிதாக உபயோகிப்பவர்களுக்கு ஆசையூட்டுதல் வேண்டும். முதலிலிருந்து வாங்கும் உபயோகிப்பவர்களை மேலும் மேலும் வாங்க ஆசைப்படுத்துவதைக் காட்டிலும் புதிய உபயோகிப்பவர்களை ஆசைப்படுத்துவதனுல் மீள்தன்மை உண்டாகும்.

தருக்கரீதியாகக் கூறின், மீள்தன்மையிலாக் கேள்வியின் பூரணவரையறை தோன்றுவது, விலை கூடினும் குறையினும் வாங்கப்படும் அளவு எப்பொழுதுமே ஒரேதன்மையாக மாருமல் நிகழும்பொழுதே என்க. மீள் தன்மையுள்ள கேள்வியின் பூரணவரையறை தோன்றுவது, ஏதாவதொரு விலைக்குக் காசு கொடுத்து வாங்குபவர்கள் எப்பரிமாணத்தையாவது வாங்க ஆயத்தமாவர். விலை அதைக் காட்டிலும் சிறிது கூடும்பொழுது ஒன்றையும் வாங்காது விடுவர். இன்றேல், அளவைப்பற்றி மதிக்காமலிருப்பின், மனிதர் செலுத்தவிரும்பும் விலை ஒரேதன்மையில் இருக்கும். இப்படிப்பட்ட சமயங்கள் சீவியத்தில் மிகவும் அரிதாகவே தோன்றும்[1].

கேள்வி அட்டவணையாவது கேள்விவளை கோட்டையாவது அமைக்கும் பொழுது நாம் தேடுவது, ஏனைய எல்லாப் பொருள்களும் மாருமல் இருக்க, விலைமாத்திரம் மாறும்பொழுது, கேட்கப்படும் ஒரு பிரமாணத்தையே, விலை குறையும்பொழுதும் கேள்விநீட்சியும் கேள்வி யொடுக்கமும் உண்டாகும் விதத்தை இப்படிப்பட்ட கேள்விகளை கோடுமூலம் காணலாம். நாம் தேடுவது கேள்விநிலைமை மாருத தன்மையாம். கேள்விகூடினுலோ குறைந்தாலோ, அதாவது ஒரு விதமானவிலைக்கு முன்னைக்காட்டிலும் குறைவாகவோ கூடியோ கேட்கப்படுமாயின், கேள்வி நிலைமை வேறுபடுந் தன்மையைத் தெளிவாகக் காண

[1] கேள்வி பூரணமாக நெகிழ்ச்சியற்ற பண்டங்களின் அட்டவணை இ. இ. கோட்டினுல் காட்டப்படுகிறது.

லாம். நாம் மாருமல் இருக்குமென்று யோசித்த விலைப் பொருள்கள் எல்லாம் உண்மையாகவே மாறியுள்ளன. இவ்வண்ணம் கேள்வியின் ஏற்றத்தாழ்வு உண்டாவது கேள்விநிலை மாறும்பொழுதேயாம்.





கேள்விநிலைமை வேறுபடுவதற்குப் பல நியாயங்கள் உண்டு. பண அளவினுல அப்படி ஒரு மாற்றம் உண்டாகவியலும். பண அளவின் மாற்றத்தினுல் பல பயன்கள் தோன்றும். இவற்றுள் ஒன்று, கேள்வி நிலைமை வேறுபடுதலாகும். பண அளவின் ஒரு மாற்றங் காரணமாக பண ஆதாயங்களும் மாறும். இதன் பயனுகப் பல பண்டங்களுக்குள்ள கேள்வி நிலைமையும் மாறும்.

| அ. அட்டவணை<br>அலகு விலை<br>சதம் | கேட்கப்படும்<br>அலகுகளின்<br>எண் |
|---|---|
| 0 | 1000 |
| 10 | 1000 |
| 20 | 1000 |
| 30 | 1000 |
| 40 | 1000 |
| 50 | 1000 |

ஆ. கீழ்க்காணும் அட்டவணை மூலமும் "இஇ" கேள்விவளைகோடு மூலமும் விரித்துரைக்கப்படுவது பெரும்பாலுமே கேள்வியின் மீள்தன்மையாகும்.

| ஆ. அட்டவணை அலகு விலை சதம் | | | கேட்கப்படும் அலகுகளின் எண் |
|---|---|---|---|
| 0 | .. | .. | 2100 |
| 10 | .. | .. | 1750 |
| 20 | .. | .. | 1400 |
| 30 | .. | .. | 1050 |
| 40 | .. | .. | 700 |
| 50 | .. | .. | 350 |
| 60 | .. | .. | 0 |
| 70 | .. | .. | 0 |




நூற்றுக்கணக்கிற் காட்டப்படும் பரிமாணம்.

மெய்வருமானங்களின் வேறுபாட்டினாலும் அதற்கொப்பான பயன்கள் உண்டாகும். மெய்வருமானத்தில் ஓர் அதிகரிப்பு உண்டாவது. பண்டங்களினதும் சேவைகளினதும் சம்பாதிப்பில் ஓர் அதிகரிப்பு உண்டாவதனாலோ ஆக்கக் கலைத் திறனில் ஒரு முன்னேற்றம் தோன்றும்பொழுதே இப்படி நிலை உண்டாகும். ஒருவனுடைய உண்மைவருமானம் நூற்றுக்கு இருபது வீதம் அதிகரித்தால், அவன் விலைகொடுத்து வாங்கும் எல்லாவற்றையும் நூற்றுக்கு இருபது வீதம் அதிகரிக்கச் செய்கின்றானென்று கருதக்கூடாது. அவன் முதலில் வாங்கிய

பொருள்களுள் சிலவற்றை வாங்குதல், நூற்றுக்கு இருபது வீதத்தைக் காட்டிலும் அதிகரிக்கும். வேறு சிலவற்றை வாங்குதல் நூற்றுக்கு இருபது வீத அளவுக்கும் அதிகரிக்காது. அவன் முன் வாங்கிய சில பொருள்களை வாங்குதலை விட்டுவிட்டு, அவற்றிற்குப் பதிலாக முழுவதுமே புதிய பொருள்களை வாங்கலாம். இங்கிலாந்தில் இல்லாள் ஒருத்தியுடைய மெய்யான வருமானம் கூடும்பொழுது, அவள் மாகரினை வாங்காமல் அதற்குப் பதிலாக வெண்ணெயை வாங்குவாள். இலங்கையில் ஒருவனுடைய மெய்யான வருமானம் கூடினால், அவனுடைய வருமானத்திலிருந்து அவன் அரிசிக்குச் செலவிட எதிர்பார்க்கும் அளவு, முன்னைக்காட்டிலும் குறையும். இடைவகுப்பினரின் மெய்யான வருமானம் கூடினால், அவர்கள் வீட்டுச்சாமான்கள், கல்வி, இன்பநுகர்ச்சி முதலியவற்றிற்குச் செலவழிக்கும் பணத்தை அதிகரிப்பர். கீழான, மலிவான பண்டங்களுக்குப் பதிலாக, அவர்கள் மேலான சாமான்களை வாங்குவார்கள். அவர்கள் வானொலி எந்திரங்கள், குளிரேற்றி எந்திரங்கள் முதலியவற்றை வாங்குவார்கள்.

சனத்தொகை மாறுபடுதலாலும் கேள்விநிலைமை வேறுபடவியலும். சனத்தொகை வேகமாக வளர்ந்து செல்லும் நம் நாட்டில், வயோதிபர் தொகையோடு ஒப்பிடும்போது, பிள்ளைகளின் தொகையானது பிரித்தானியாவைக் காட்டிலும் பெரும்பாலும் அதிகமாகும். ஆகையால், இலங்கையில் பாலுக்கும், பாலூட்டும் போத்தலுக்கும் மிகுந்த தேவையுண்டு. சனத்தொகையானது உண்மையாகவே குறையத்தொடங்கினால், வயோதிபரோடு ஒப்பிடும்பொழுது, பிள்ளைகளின் அளவு குறையும், அதனால் முன் குறித்த பண்டங்களுக்குள்ள கேள்வி குறையும். இக்காலத்திலே இறப்போரின் அளவு குறைந்தால், முழுச் சனத்தொகையோடு ஒப்பிடும்பொழுது வயோதிபருடைய பிரமாணம் கூடும். அதனால், அவர்களுக்குத் தேவையான பண்டங்களின் கேள்வி அதிகரிக்கும்.

பொருளினத்தின் பரம்பல் மாறுவதனாலும் கேள்வி நிலைமை மாறுபடக் கூடும். நம் நாட்டில் சிறுதொகை மக்களே செல்வர்களாவர். இன்றுஞ் சிலர் யாது குறையுமின்றி வசிப்பவர்களாவர். சனத்தொகையிற் பெரும்பாலானவர் ஏழைகளாவர். இனி, செல்வர்கள் மேலும் செல்வராகும் பொழுது, ஏழைகள் மேலும் ஏழைகளாயின், சில சமயங்களில் செல்வர்கள் போகப்பொருள்களை மேலும்மேலும் வேண்டும்பொழுது ஏழைகளின் தேவைகளுக்காகவுள்ள கேள்வியையுமே, குறைக்க நேரிடும். அரசாங்கம் தலையிட்டு செல்வர்களிடமிருந்து வரிகளை அறவிட்டு ஏழைகளுக்குப் பங்கிடுவதனால் பொருளானது மறுபாம்பலில் ஈடுபட, கேள்விநிலைமை மாறும். போகப் பொருள்களுக்குள்ள கேள்வி குறைய, சனத்தொகையின் பெரிய பங்கினரின் கேள்விகள் அதிகரிக்கும்.

இலங்கை, ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கியநாடு போன்ற நாடுகளில் வர்த்தகநிலைமை மாறுந்தன்மையை நாம் அறிவோம். சில காலங்களில் அது மிகவும் நன்றாகவிருந்து வளத்தைத் தரும். வேறு சில காலங்களில் அது மிகவும் பழுதடைவதனால் தளர்ச்சியையும் தரும். வர்த்தகத் தொழில் மிகவும் உன்னத நிலையில் இருக்கும் சமயங்களில் இலாபங்கள் நன்றாகக் கிடைப்பதனால், ஆக்கு

வோர் சுய ஆக்கங்களை அதிகரிக்க முயல்வர். ஆகையால் அவர்கள் மூலதனப் பொருள்களை அதிகமாக வாங்குவார்கள். பலரையும் தொழிலில் சேர்த்துக் கொள்வார்கள். இதனால் ஆக்குவோருடைய பண்டங்களின் கேள்வி அதிகரிக்கும். தளர்ச்சியுற்ற சமயங்களில் நிலைமை முற்றும் மாறும். நுகர்வோரின் வருமானங்கள் குறைவதனால் குளிரேற்றி எந்திரங்களைப்போன்ற நீண்ட கால நுகர்ச்சிக்குரிய பண்டங்களை விலைகொடுத்து வாங்குதலைக் காலதாமதஞ் செய்வார்கள்.

நுகர்வோரின் விருப்பினாலும், பொருளியல் வித்தையில் குறிக்கப்படும் பொருளினாலும், கேள்விநிலைமையானது ஒரு செல்வாக்கினைப் பெறும். பொருளியலறிஞர்கள் இச்சொல்லினால் அதன் சாதாரண பொருளையும் வேறு சிலவற்றையும் கருதுகிறார்கள். உருவங்களின் வேறுபாடு, விருப்பிலும் வேறுபாடு தரும் ஐரோப்பிய உடையைத் தரிக்கும் பலர் தேசிய உடையை உபயோகித்தால், அது விருப்பின் மாறுபாடாகக் கொள்ளப்படும். கால சுபாவத்தின் மாற்றங்கள் காரணமாக, கேள்வியில் உண்டாகும் மாறுபாடுகள் விருப்பின் ஒரு மாறுபாடெனப் பொருளியலறிஞர்களால் கருதப்படும். மழைக்காலத்திலே மனிதர் பெரும்பாலும் குடைகளை வாங்குவார்கள். நுவரெலியாவில் ஒரு விடுதலைக் காலத்தைக் கழிக்கிறவர்கள் கம்பளியுடைகளைப் பெரும்பாலும் வாங்குவார்கள். இப்படிப்பட்ட சத்திகள் மூலமும் விளம்பரங்கள் மூலமும் விருப்பின் வேறுபாடுகளை உண்டாக்கிக்கொள்ளின், சில பண்டங்களுக்குக் கேள்விகள் வளரவும் மற்றைப் பண்டங்களுக்குக் கேள்விகள் தளரும்.

இன்னும், பண்டங்களின் விலை வேறுபடுதலாலும், கேள்வி நிலைமை மாறுபடும். கோப்பியின் விலை பெருமளவு குறைந்தால், பலர் தேய்நீர் குடிப்பதைக் குறைத்து, கோப்பி குடிப்பதைக் கூட்டுவர். ஆதலால், கோப்பியின் கேள்வியில் ஒரு ஏற்றம் தோன்ற, தேயிலைக் கேள்வி குறையும். இவ்வண்ணம், ஒழுங்கான பண்டங்களின் விலை வேறுபாட்டினால், சில பண்டங்களுக்குள்ள கேள்வியும் மாறுபடும். சில பண்டங்களுக்குக் கூட்டுக் கேள்வியுமொன்றுண்டு. ஒரு சுங்கானை உபயோகிக்கிறவன் புகையிலையையும் உபயோகிக்க வேண்டும். இவ்வண்ணம் சுங்கானுக்கும் புகையிலைக்கும் ஒரு கூட்டுக்கேள்வியுண்டு. தேயிலையும் சீனியும், விசுக்கியும் சோடாவும், பேனவும் மையும் ஆகியவற்றிற்கு ஒரு கூட்டுக் கேள்வியுண்டு. சுங்கானின் விலை குறைந்து, அதன் கேள்வியில் ஒரு ஏற்றம் தோன்றினால், புகையிலைகளுக்குள்ள கேள்வியும் ஏறும். சுங்கானின் விலை அதிகரித்தால், புகையிலையின் கேள்வி குறையும்.

ஒருசத்தியின் நற்பயனால் வேறொருசத்தியின் நற்பயனை நிறுத்தலாம். ஒரு சத்தி, கேள்வியை அதிகரிக்க ஒருவனை வற்புறுத்தும் பொழுது, வேறொருசத்தி இவ்வற்புறுத்தலுக்கு எதிராக மேலோங்கி நிற்கலாம். ஆனபடியால், ஒன்றின் கேள்வி நிலைமையை விரித்துரைக்கும் பொழுது இச்சத்திகள் தம்முள் முகாமை செலுத்துதல் அறிதல் வேண்டும்.

## 6 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

1. நாணயமாற்று ... ... Exchange
2. திருத்தி ... ... Satisfaction
3. கேள்வி ... ... Demand
4. நியாயமான ... ... Rational
5. சார்பு ... ... Tendency
6. குறையும் பயன்பாட்டுவிதி ... Law of diminishing utility
7. கேள்விவளைகோடு ... Demand Curve
8. ஆக்கவளவு-ஆக்கப்பரிமாணம் ... Volume of Production
9. கேள்வி வளைகோடு கீழாகச் சாயும் ... ... The demand curve slopes downwards
10. கேள்வி நீட்டம் ... ... Extension of demand
11. சுருங்கல் ... ... Contraction
12. கேள்விப்பெருக்கம் ... Increase of demand
13. மீள்தன்மை ... Elasticity
14. செலவீடு ... ... Outlay
15. ஐக்கியம் .. ... Unity
16. நெகிழுகின்ற ... ... Elastic
17. மீள்தன்மையிலாவியல்பு ... Inelastic
18. பிரதியீட்டின் வீச்சு ... Range of substitutes
19. பிரதியீடு ... ... Substitute
20. மெய்வருமானம் ... ... Real income
21. பங்கீடு ... ... Distribution
22. மறுபடி பங்கீடு ... Re-distribution
23. மூதனப் பொருள்கள் ... Capital goods
24. சுவைகள் ... ... Tastes
25. கூட்டுக்கேள்வி ... ... Joint-Demand

## 7 ஆம் அத்தியாயம்

## போட்டியுற்பத்தியாளன்

கேள்வியின் தன்மையை நாம் கடந்த அத்தியாயத்திலே ஆராய்ந்தோம். நுகர்வோன் எல்லைப்பயனைப் பற்றி மிகவும் கவனமாக யோசித்துப்பார்க்க வேண்டும். சுயதிருத்திக்காகப் பண்டங்களைக் கேட்பவனைப் பற்றியெனின், இது உண்மையாகும். ஆனால், பிரதியீடான பண்டங்களைக் கேட்கும் உற்பத்தியாளன் அப்பண்டங்களைக் கேட்பது அவைகள் மூலம் பெறக்கூடிய திருத்தியின் காரணமாகவன்று. நுகர்வோன் அனுபவித்தற்காக எடுக்கும் பண்டங்களையோ, சேவைகளையோ அவனால் ஆக்கவியலுமாதலால் அவன் அவற்றை விலைகொடுத்து வாங்குவான். ஆகையால், ஆக்குவோனின், பிரதியீடான பண்டங்களின் கேள்வியானது, வழிவந்த தேவையாகக் குறிக்கப்படும். ஒருவன் ஒருங்கே ஆக்குவோனும் நுகர்வோனுமாவான். நுகர்வோனால் கேட்கப்படும் சப்பாத்துக்களை அமைக்க எண்ணும் செம்மான் அதற்குத் தேவையான கருவிகளைக் கேட்பான். ஆகையால், அவன் கருவிகளுக்குக் கேட்கும் கேள்வியானது, வழிவந்த தேவையாகும். அவனுடைய தேவைகளை நிறைவேற்ற அவன் உணவு, உடை முதலியவற்றையும் கேட்பான். அவன் ஒரு சாதாரண நுகர்வோனாதலால், அவனுடைய இக்கேள்வி நேரான கேள்வியாகும். மேலும், அவன் இங்கு கடைசி நுகர்வோனுமாவான். ஒவ்வொரு கடைசி நுகர்வோனும் எல்லைப்பயனைக்கருதிக் கொண்டே பண்டங்களையும் சேவைகளையும் கேட்பான்.

கேள்விகளை நிறைவேற்றும் விற்பனையாளர், அல்லது ஆக்குவோர் இதற்கு எதிரான பயன்களைக் கருதியே வேலைகளைச் செய்வர். பொதுவாகக் கூறின், ஒரு விற்பனையாளன் விற்பனை இலாபத்தைப் பெறும் பொருட்டேயாம். அப்பண்டங்களை அமைக்க அவன் விட்ட செலவைக் காட்டிலும் அதிகமான விலைக்கு அவற்றை விற்றாலே அவன் இலாபம் பெறலாம். கமக்காரர்களாவது சிற்பிகளாவது ஆக்குவோராவது வியாபாரிகளாவது ஆகட்டும், ஒவ்வொரு வியாபாரியைப் பற்றியுமே இது உண்மையாகும். அவன் கமக்காரர்களைப்போல, நுகரும் பொருள்களை விற்றாலும் வங்கித் தொழிலாளர்களைப் போலோ, பசு வண்டியுரிமையாளர்களைப் போலோ தன் சேவைகளை விற்றாலும், இது உண்மையாகும். பொதுவாகக் கூறின், விற்கிறவன் ஒவ்வொருவனும், அன்றேல் ஆக்குவோன் ஒவ்வொருவனுமே இலாபத்தைத் தேடுகிறான். விலைகொடுத்து வாங்குவோனின் முக்கியமான கவனம், எல்லைப்பயனவது கிடைக்கவேண்டுமென்பதே. விற்கிறவனுடைய முக்கிய கவனமாவது தன் ஆக்கச் செலவேயாகும். அவன் ஆக்

[1] ஒவ்வொரு ஆக்குவோனும், ஆக்கத்தைச் செய்வது இலாபத்துடன் அவற்றை விற்பவன் பொருட்டே. ஆகையால் ஒவ்வொரு ஆக்குவோனையும் விற்பனையாளனாகக் கருதலாம்.

கத்தைத் தொடர்ச்சியாகச் செய்து கொண்டு இலாபத்தைப் பெறவெண்ணுவான். நல்லதும் கெட்டதுமான காலங்களைப் பொதுவாக எடுத்து ஆக்கச்செலவுக்குக்கூடிய விலைக்குத் தன் பண்டங்களையோ சேவைகளையோ விற்கவேண்டும்.

ஆதி இடைக்காலத்திலுள்ள நகரங்களில் கைத்தொழிற் சிற்பிகள் முறைமையின்படி, அல்லது கட்டளையின்படி பண்டங்களை ஆக்கினர். ஒருவன் சப்பாத்துச் சோடி தேவையானபொழுது செம்மானுக்கு ஒரு கட்டளையை விடுப்பான். சப்பாத்துச் சோடியை ஆக்கிய செம்மான், ஆக்கச்செலவுக்கு அற்பமான இலாபம் தரும் ஒரு விலைக்கு அதை விற்பான். முன்னேற்றமடைந்த புதிய நாடுகளில் இந்நிலைமை பெருமளவில் மாறியிருக்கின்றது. இன்று பல ஆக்கங்கள் விருத்தி செய்யப்படுவது கட்டளைகளின்படியன்று. அறியப்படாத நுகர்வோருக்கு விலைப்படுத்தவேயாம். ஆனால், இன்றும், சில ஆக்கங்கள் கட்டளைகளின்படி விருத்தி செய்யப்படுவது உண்மையே. பொருளியல் வழியாக முன்னேற்றமடைந்த நாடுகளிலும் இன்றும் கட்டளைப் படியே பெரிய கப்பல்கள் கட்டப்படுகின்றன. மேலும், பொருளியல் வழியாக அவ்வளவு முன்னேற்றத்தையடையாத இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சில ஆக்கங்கள் இன்னும் கட்டளைகளின்படியே விருத்திசெய்யப்படுகின்றன. ஆனால், தற்போதைய நிலைமை இதற்கு முற்றும் மாறானது. அறியப்படாத நுகர்வோருக்கு விற்பதற்கே பல பொருள்கள் ஆக்கப்படுகின்றன. ஆகையால், ஆக்கமானது, பொதுச் சந்தைக்காக[2] நிகழ்வதென்று கூறலாம். ஆக்குவோனே, விற்போனே கவனத்தைச் செலுத்த வேண்டிய முக்கியமான இரு காரியங்களுள. அவையாவன, தன் பண்டங்களை விற்கக்கூடிய விலையும் அப்பண்டங்களை ஆக்குதற்குச் செலவிடும் செலவும் என்க. ஆக்குவோனுக்குத்தன் ஆக்கப்பொருளை விற்கக்கூடிய விலையைப்பற்றி நாம் முன்னர் ஆலோசித்தோம். பல பண்டங்கள் பொதுச்சந்தைக்காகவே ஆக்கப்படும். ஆகையால், ஆக்குவோனுக்குத் தன் பண்டங்களைப் பலவிதமான அளவில் விற்கக்கூடிய விலையானது, பொதுச்சந்தையின் நிலைமைகளைத் தெளிவாகப் பிரித்துக் காட்டும். அவை நிறை போட்டியும் நிறைவில் போட்டியும் தனியுரிமையும் என்க. நிறைவில் போட்டியினதும், தனியுரிமையினதும் நிலைமையை அடுத்த அத்தியாயத்திலே கவனிப்போம். ஒரு நிறைபோட்டியிலே ஓர் ஆக்கியோனின் காரியங்களைச் செய்யும் விதத்தை இவ்வத்தியாயத்திற் கவனிப்போம்.

ஒரு பண்டத்தின் சந்தைப்படுத்துகை நிறைபோட்டியிலே எப்படி நிகழ்கின்றது? பண்டம் கிரயமாகும் விலைகளைப்பற்றி, விலைகொடுத்து வாங்குவோர் எல்

[1] இங்கு சந்தை எனக்கருதப்படுவது, பொது வழக்கில் கருதப்படுவதைப்போல ஓரிடத்துக்கல்ல. ஒரு பண்டமாவது ஒரு சேவையாவது பண்டமாற்று நிகழும் கைம்மாற்றுத் தொகைக்கேயாம். இவ்வண்ணம், கோதுமையாவது தேயிலையாவது விலைப்படும் சந்தைக்கு முழு உலகமே உரிமையாகும்.

ஒரு சிற்றூரில் கடைக்காரனுடைய ஆவணம் அவ்வூருக்கே வரையறுக்கப்படும். ஒரு வைத்தியனுடைய சந்தையானது அவன்றன் சேவையைத் தேடிவர வசதியுள்ள நோயாளர் கூட்டத்தின் தொகையில் தங்கியுள்ளது.

லோரும், விற்பனைகாரர் எல்லோரும் தாமதமின்றி அறிபவரும் விளங்கிக்கொள்பவருமாகவிருக்க வேண்டும். விலைகொடுத்து வாங்குவோர் எல்லோரும் விற்பனைகாரர்கள் எல்லோருடைய கொள்கைகளைப்பற்றியும் அவரவர் அறிந்திருக்க வேண்டும். நிறைபோட்டியிலே யாராவதொரு விற்பனைகாரனிடமிருந்து விலை கொடுத்து வாங்க வாங்குவோருக்கு அனுமதியும், மறுபக்கமாக, யாராவதொரு விற்பனைகாரனுக்கு யாராவதொரு வாங்குவோனுக்கு விற்க அனுமதியும் இருக்கின்றது. எல்லா வாங்குவோரும் விற்போரும் ஏற்றபடி, காரியங்களைச் செய்வார்கள் என்று கருதலாம். ஆகையால், இப்படிப்பட்ட ஒரு சந்தைக்குப் பொருளைக்காவுஞ் செலவைத் தவிர, ஒவ்வோரிடத்திலுமே பண்டத்தின் விலை, (அறிமுறையில்) ஒரே தன்மையாக இருக்க வேண்டும்.

ஒருநிறை போட்டியிலே ஒரு வியாபாரி தன்னுடைய விலையைச் சந்தை விலையைக் காட்டிலும், கூட்டினால் ஒருவரும் அவனிடமிருந்து பொருள் வாங்கார். அவன் மறுபடியும் விலையைக் குறைக்க நேரிடும். ஒரு பண்டம்பற்றி நிறை போட்டி நிகழும் ஒரு சந்தையில் இன்னும் மிக முக்கியமான அங்கமொன்றுளது. அதாவது, அப்பண்டத்தை ஆக்குவோரும் விற்போரும் பலர் உளர் என்பது. எப்படிப்பட்ட ஆக்குவோனாயினும் ஆகட்டும், அவன் அப்பண்டத்தின் முழு அளவின் மிகச்சிறிய ஒரு பாகத்தை மட்டுமே ஆக்குவான். ஒவ்வொரு ஆக்குவோனும் முழு ஆக்கப் பொருளின் மிகச்சிறிய பாகத்தையே ஆக்குவான். ஆதலால், ஒரு தனிப்பட்ட ஆக்குவோன் அப்பண்டத்தின் குறைந்த அளவையாவது கூடிய அளவையாவது ஆக்குவதனால் விலையைப் பற்றிய மதிப்பைத் தானே அமைக்கவியலாது. ஆதலின், நிறைபோட்டியிலே நிகழும் விலையைக் காட்டிலும் சிறிது குறைக்க, விற்போனுக்கு அனுமதியில்லை; ஏனெனில், சொந்தப் பண்டங்கள் எல்லாவற்றையுமே அவன் சந்தை விலைக்கு விற்றுக் கொள்ளலாம். வியாபாரியினுடைய பண்டங்களின் விலை, சந்தை விலையைக் காட்டிலும் குறைந்தால், அவனுடைய பண்டங்கள் மிகச் சீக்கிரத்தில் விற்பனையாகும். ஆனால், ஆக்குவோர் எல்லோரும் கூடி அதிகம் உற்பத்திசெய்தாலோ, குறைவாக உற்பத்திசெய்தாலோ உண்மை விலையின் மேல் செல்வாக்குத் தோன்றும். இப் பிரச்சினையைப் பின்னர் ஆய்ந்து பார்ப்போம்.

நிறைபோட்டியாக விரித்துரைக்கக்கூடிய ஒரு தத்துவம் தோன்றுவதில்லையென்று சில பொருளியலறிஞர்கள் கூறுகின்றனர். இது உண்மையே. யாதாவதொரு பண்டத்துக்கு நிறைபோட்டியின் உறுப்புக்களுள்ள ஒரு சந்தையைத் தேடிக்கொள்வது பெரிதும் கடினமாகும். ஆனால், கோதுமை, பருத்தியைப் போன்ற பண்டங்களுக்குள்ள சந்தைகளிலும் ஆவணங்களை மாற்றஞ் செய்யும் பங்கு முதற் சந்தைகளிலும் ஒரு நிறைபோட்டி இல்லாவிடினும், அதற்குப் பெரும்பாலும் நிகரான ஒரு போட்டி உண்டென்று அவர்கள் கருதுகிறார்கள். சந்தையில் இந்நிலைமைக்கு (அதாவது நிறைபோட்டியைக் காட்டிலும் நிறைவினால் குறைந்த நிலைமைக்கு) தூயபோட்டி என்ற பெயரை அவர்கள் வழங்குவர். தூயபோட்டியிருக்கும் ஒரு நிலைமையிலும் நிறைபோட்டிக்குத் தேவை

யான அங்கங்கள் இருக்கவேண்டும். ஆனல், அவைகள் நிரம்ப வேண்டியது அவசியமில்லை. விளக்கிக் கொள்வதன் பொருட்டு, சில பொருளியலறிஞர், விற்போனுவது ஆக்குவோனுவது நிறைபோட்டியொன்றிலே இயங்கும் முறையை ஆராய்ந்து பார்க்க விரும்புவர். மேலும் சில பொருளியலறிஞர் தூயபோட்டியிலே இவர்கள் இயங்கும் முறையை ஆராய்ந்து பார்க்க விரும்புவர். இதனல் பொருளியலின் மூலதருமங்களை மிக நன்ருக அறிந்துகொள்ளலாம். ஆதலால், நாம் நிறைபோட்டியுள்ள ஒரு சந்தையில் ஆக்குவோன் இயங்கும் விதத்தை ஆராய்ந்து பார்ப்போம்.


நிறைபோட்டியுள்ள சந்தைக்கு ஒரு பண்டத்தையாக்கும் விற்பனையாளன் தன் பண்டங்கள் எல்லாவற்றையுமே சந்தையில் வலுவேகங்களாகத் தீர்வை செய்யப்படும் ஒரு விலைக்கு விற்கக்கூடுமென அறிகிருன். சந்தையில் வலுவேகங்களாக விலையைத் தீர்மானிக்கும் முறையை நாம் பின்னர்க் கவனிப்போம். ஆனல், இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விடயமொன்றிருக்கின்றது. அதாவது, அவனுடைய பண்டங்களுள் ஓர் அலகையாவது சந்தை விலைக்குச் சிறிது அதிகப்படியாக விற்க முடியாமையேயாம். அவன் சிறிதளவேனும் விலையைக் கூட்டினல், வாங்குவோர் எல்லோரும் அவனைக் கைவிட்டு ஏனைய விற்போரிடம் போவார்கள். அவன் சந்தை விலைக்குத் தன் பண்டங்கள் எல்லாவற்றையும் விற்கக்கூடுமாதலால் சந்தை விலையைக்காட்டிலும் அவனுடைய விலையைக் குறைத்தல் தகாது.

கற்பனைக்கு ஓர் உதாரணத்தையெடுத்து நாம் ஒரு நிறைபோட்டியிலே ஓர் ஆக்குவோனுடைய, அல்லது ஒரு விற்போனுடைய நிலைமையை ஆராய்ந்து பார்ப்போம். ஒரே வகையான நாற்காலிகள் சந்தையில் நிறைபோட்டியிலே இருக்கின்றனவென்று கருதுவோம். கீழ்க்காணும் அட்டவணை, ஒரு வாரத்தில் நாற்காலிகளுக்கு இருந்த முழுக்கேள்வி விவரமெனக் கருதுவோம்.

ஏழாவது அட்டவணை

| நாற்காலிகளின் விலை (ரூபாவிற் காட்டப்படும்) | | | கேட்கப்படும் நாற்காலிகளின் அளவு |
|---|---|---|---|
| 60 | .. | .. | 30,000 |
| 55 | .. | .. | 53,000 |
| 50 | .. | .. | 40,000 |
| 45 | .. | .. | 45,000 |
| 40 | .. | .. | 50,000 |
| 35 | .. | .. | 55,000 |
| 30 | .. | .. | 60,000 |
| 25 | .. | .. | 85,000 |


ஏனைய காரணங்கள் மாறுமல் இருக்குமாயின், பலவிதமான விலைகளுக்கு நாற்காலிகளைக் கேட்கும் அளவு, இவ்வட்டவணையில் காணப்படும். குறைந்த




விலைக்கு அதிகமாகவும் கூடிய விலைக்குக் குறைவாகவும் நாற்காலிகள் கேட்கப் படுவதை இவ்வட்டவணையிற் காணலாம். இக்கேள்வி அட்டவணையைக் கீழ்க் காணும் வண்ணம் ஒரு கேள்வி வரைப்படமாக மாற்றலாம்.

இஇ. கோட்டினுல் காணப்படுவது, பலவித விலைகளில் நாற்காலிகளுக்குள்ள கேள்வியாகும்; ஆக்குவோரெல்லோரிடமிருந்தும் வாங்குவோரெல்லோருடைய முழுக்கேள்வியாகும். இதனுல் காட்டப்படுவது, ஆக்குவோரெல்லோருக்கும் குறைந்த விலைக்கு நாற்காலிகளை அதிகமாகவோ, கூடிய விலைக்குக் குறை வாகவோ, விற்கலாமென்பதேயாம். இந்த நாற்காலியானது, சந்தையிலே சகல தத்துவத்துளடங்குமென்றுலும், நிறைபோட்டியிலே தனியுற்பத்தியாளன் தன் னுடைய சகல உற்பத்திப் பொருள்களையும் சந்தையிலே வலுவேகங்களால் தீர்மானிக்கப்பட்ட விலைக்கு விற்கலாமென்பதைக் காட்டும். இவ்வண்ணம் சந்தையில் வலுவேகங்கள் மூலம் ஒரு நாற்காலியின் சந்தை விலை ஐம்பது ரூபாவுக்குத் தீர்மானிக்கப்பட்டதென்று நாம் கருதுகிறேம். அப்பொழுது அவ் விலைக்கு (அதாவது 50 ரூபாவுக்கு) தன்னுடைய நாற்காலிகள் எல்லாவற்றை யும் விற்க இயலுவதைத் தனியுற்பத்தியாளன் கருதுவான். இதனுல் நாம் கருது வது, விலையை விளக்கும்பொழுது தனியுற்பத்தியாளனுடைய கேள்விவளைகோடு

குறுக்கு ஆள்கோட்டுக்குச் சமாந்தர இரேகை யொன்றைப்போல, சந்தை விலை குறிக்கும் இலக்கத்தில் மேலான ஆள்கோட்டிற் சந்திக்கும். விலை ஐம்பது ரூபா, அல்லது நாற்பது ரூபா ஆகும்பொழுது நிறைபோட்டியுள்ள ஒரு சந்தையிலே நாற்காலிகளையாக்கும் தனியுற்பத்தியாளனுடைய கேள்விவளைகோடு இவ்வண்ணம் காணப்படும்.




அளவு

சந்தையில் ஒரு நாற்காலியின் விலை ஐம்பது ரூபாவெனத் தீர்மானித்தால், தனியுற்பத்தியாளனுடைய கேள்வி வளைகோடு இ இ என்பதாம். விலை நாற்பது உரூபாவாகும்பொழுது கேள்விவளைகோடு இ " இ" என்பதாம். தனியுற்பத்தியாளன் தன்பண்டங்கள் எல்லாவற்றையும் சந்தை விலைக்கு விற்றுக் கொள்ளலாமாதலால், அச்சந்தைவிலை அவனுடைய சாதாரண விலை, அன்றேல் அவனுடைய பண்டத்து அலகுச் சராசரி வருமானமாகும். அவன் எவ்வளவு ஆக்கினாலும் அவனுடைய பண்டத்து அலகின் **சராசரி வருமானம்** மாறுத படியால் அவனுடைய சராசரி வருமான வளைகோடும் தலையான ஆள்கூற்றுக்கு இணையான குறுக்காள்கூற்றுக்குச் சமாந்தரமாக, சந்தைவிலையிலே பொருந்தும் இரேகையாகக் காணப்படும். ஆகையால், அவனுடைய சராசரி வருமான வளைகோடும் தனிக்கேள்வி வளைகோடும் ஒன்றுக்குமேல் ஒன்ருகப் பொருந்தி அமையும், விற்கப்படும் எல்லாப்பரிமாணங்களிற் சராசரி வருமான வளைகோடு மாரு மல் அப்படியே இருக்கும் பொழுது, அவனுடைய எல்லை வருமானமும், ஆக்கப்படும் எல்லாப்பரிமாணங்களிலே மாருமல் இருக்கும். அவனுடைய சராசரி வருமானம் ஒரு நாற்காலிக்கு 50 ரூபாவானல், இன்னெரு நாற்காலியை மேலதிகமாய் அமைத்து, அவன் இன்னும் 50 ரூபாவைப் பெற்றுக் கொள்ளலாம். இவ்வண்ணம் ஒரு நாற்காலியை மிகுதியாய் அமைத்தலால் முழு வருமானத்துக்குச் சேரும் 50 ரூபா ஒரு நாற்காலியின் எல்லை வருமானமாகும். ஆகையால், அவன் எவ்வளவு நாற்காலிகளை ஆக்கினாலும் ஒரு நாற்காலியின் எல்லை வருமா

னம் 50 உரூபாவேயாகும். ஆகையால், அவனுடைய எல்லை வருமானவளைகோடும் அவனுடைய சராசரி வருமானவளைகோடும் ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பொருந்தி அமையும். சுருங்கச்சொல்லின், ஒரு நாற்காலியின் சந்தைவிலை 50 ரூபாவாகும் பொழுது தனியுற்பத்தியாளன் தான் ஆக்கும் நாற்காலிகள் எல்லாவற்றையும் ஒருநிறை போட்டியிலே 50 ரூபாவாக விற்கவியலுமென்று கருதுவான். அவனுடைய சராசரி வருமானமும் எல்லை வருமானமும் 50 ரூபாவாகும். விலை நாற்பது ரூபா (40) வரை இறங்கினால், அவனும் நாற்காலிகள் எல்லாவற்றையும் 40 ரூபாவாக விற்கவியலுமென்று கருதுவான். அவனுடைய சராசரி வருமானமும் எல்லைவருமானமும் நாற்பது ரூபாவாகும். ஆகையால், விலையாதெனினும் அவனுடைய கேள்விவளைகோடும் சராசரி வருமானவளைகோடும் எல்லைவருமான வளைகோடும் அவ்விலையிலே ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பொருந்தி அமையும்.

இவ்வண்ணம் நிறைபோட்டியுள்ள சந்தையொன்றில் ஓராக்குவோன் தன் வருமான அட்டவணைகளை, அல்லது வருமானவளைகோடுகளை விரித்துரைக்க வேண்டும். இவ்வருமானவளைகோடுகளையாவது வருமான அட்டவணைகளையாவது தன் ஆக்கச் செலவோடு ஒப்பிட்டுப்பார்க்கவேண்டும். அப்பொழுது அவன் ஆக்கவேண்டுமோ, அப்படியெனின் எவ்வளவு ஆக்கவேண்டும், என்பதைத் தீர்மானிக்கவியலும். ஆகையால் நாம் இப்பொழுது ஓராக்குவோனுடைய ஆக்கச்செலவைப்பற்றிக் கவனிப்போம்.

ஒருவன் கடைக்காரனாக ஒரு முயற்சியை ஆரம்பித்திருக்கிறான் என்று கருதுவோம். அவனுடைய செலவு எவ்வளவாகும்? வருடந்தோறும் அவன் கணக்கு வைத்தால், அவனுடைய உதவியாளர்களுக்குச் சம்பளமாகச் செலுத்தும் பணமும் வாங்கிய பண்டங்களுக்கும் ஏனைய சேவைகளுக்குச் செலுத்தும் பணமும் அவன் இறுக்க வேண்டுமென்பது புலனாகும். அவனுடைய செலவுகளுக்கு இப்படிச் செலுத்தும் செலவெல்லாம் தன் தொழிலுக்காக முதலீடு செய்த அவனுடைய பணத்துக்கு வட்டியும், முகாமைக்காரனாக வேலை செய்த அவனுக்குச் சம்பளமுமாக அடங்கும். அவனுடைய மூலபணம் சார்பாக வட்டியையும் செலவிற் சேர்க்க வேண்டும். அவன் தனக்குரிய ஒரு தொழிலைத் தொடங்காமல் இம் மூலதனத்தை வேறு காரணத்திற்கு முதலீடு செய்தானானால், அதிலிருந்து அவனுக்கு வட்டி பெறவியலும். அப்படியன்றி, மூலதனத்தை அவன் வேறொருவரிடமிருந்து பெற்றானானால், வட்டி செலுத்த வேண்டும். ஆதலால், அவ்வட்டியையும் அவனுடைய செலவுகளுடன் கூட்டுவான். அப்படியே அவன் ஒரு தொழிலைத் தொடங்க யோசியாமல் வேறோரிடத்தில் ஓருத்தியோகத்தில் ஈடுபட்டானால் அவனுக்குச் சம்பளம் கிடைக்கும். இல்லாவிடின், முற்கூறிய தொழிலுக்கு முகாமைக்காரனொருவனை நியமித்து, அவனுக்குச் சம்பளம் செலுத்த வேண்டி நேரும். இரண்டினுள் எதுவாயினும் முகாமை வேலைக்குச் சம்பளம் அவனுடைய செலவுகளுட் சேர்க்க வேண்டும். நீண்டகாலத்துக்குள் ஓருற்பத்தியாளனுக்கு இச்செலவுகள் எல்லாவற்றையும் தீர்க்கவியலாவிடின், அவன் தனியுற்பத்தியாளனாகத் தன் தொழிலை நிலை நிறுத்திவிடுவான்.

ஓருற்பத்தியாளன் பொறுக்கும் செலவுகள் எல்லாவற்றையும் பரும்படியாக இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன :—மாறாச் செலவும் மாறுஞ் செலவுமாம். உதாரணமூலம் இப்பிரிவை நன்றாக விளக்கவியலும். ஓராக்குவோன் சவர்க்காரவுற்பத்தியை ஆரம்பித்திருக்கின்றான் என்று கருதுவோம். இதற்கு அவன் ஆக்கும் கருவிகளை விலைகொடுத்து வாங்குவான். இவை ரூபா 100,000 விலைமதிப்புள்ள நிலங்களும் தொழிற்சாலைகளும், எந்திரக்கருவிகளுமென்று கருதுவோம். இப்பொழுது இச்செலவிட்டுப் பணத்தின் வட்டியை ஆக்குவோனுடைய ஒரு செலவாகக் கருதவேண்டும். அவன் ஆக்கும் சவர்க்காரக்கட்டியின் தொகை எவ்வளவெனினும் அவன் இவ்வட்டியைச் செலுத்த வேண்டும். இச் செலவிட்டைச் செய்தபின், தொழிற்சாலையில் சவர்க்காரம் உற்பத்தியாகாவிடினும் இவ்வட்டியைச் செலுத்த வேண்டும். அவன் இவ்வாக்கக்கருவிகள் முதலியவற்றை வேறொருவனுக்கு விற்றானால், வாங்கியவன் சவர்க்காரவுற்பத்தியைச் செய்யாவிடினும் இவ்வட்டியைச் செலுத்தல்வேண்டும். ஓர் ஆக்குவோனுக்குச் செலவிடு செய்த மூலபணத்துக்கு வட்டியைச் செலுத்தாமல் விடும் சந்தர்ப்பம், அவன் முறிவுற்றால் மட்டுமேயாகும். இது இப்படியானால், கடன்காரர்களுக்குத் தாம் பெறக்கூடிய வட்டியின் அளவுக்கு அவர்களுக்கே நட்டம் உண்டாகும். ஆகையால், எந்திரங்கள் முதலியவற்றிற்குச் செலவிடு செய்த மூலபணம் மாறாச் செலவாக எடுக்கப்படும். ஆக்கிய சவர்க்காரக்கட்டிகளின் அளவுக்குமேல் மிகவும் அற்பமான இன்னுமொரு செலவுக் கூட்டம் இருக்கின்றது. இச்செலவுகளுள் தொழிற்சாலையில் முக்கியமான உத்தியோகத்தர்களின் சம்பளம், **நட்ட வீட்டுச் செலவுகள்,** வெளிச்ச மேற்றற் செலவுகள் முதலியவையடங்கும். தொழிற்சாலையைப் பூட்டி விடுதலால் இச்செலவுகளை அழிக்கவியலும். தொழிற்சாலை முழுவதையுமே பயன்படுத்தினாலோ, பயன்படுத்தாவிட்டாலோ இச்செலவுகளைப் பொறுக்க வேண்டும். ஆகையால், இச்செலவுகளும் மாறாச் செலவுகளாகக் கொள்ளப்படும்.

மற்றைப்படி, ஆக்கும் சவர்க்காரப் பிரமாணத்தின்படி நேராக, மாற்றுஞ் செலவுவகையொன்றிருக்கின்றது. உதாரணம்; திசுத்தாள்கள், தொழிலாளர்களின் சம்பளம் முதலியவைகளாம். இச்செலவுகள் ஆக்கமாகும் சவர்க்கார அளவின்படியே மாறுமாதலால், இவை **மாறுஞ்செலவுகள்** என்று வழங்கும். ஆனால், மாறாச் செலவுகள், மாறுஞ் செலவுகளாக, இப்பிரிவைக் கருதுவது, ஏதாவதொரு ஆக்க வீச்சினுள்ளேயாம். ஆக்கத்தை ஆயிரமடங்கு அதிகரிப்பதெனின், புதிய கருவிகள் முதலியவை தேவையாகும். ஆகையால், ஏதாவதொரு வரையறைக்குப்பின், 'மாறாச்செலவுகள்' என்று கூறியவைகளும் மாறுஞ் செலவுகளின் தன்மையிற் சேரும். அதாவது, ஆக்கப்படும் பிரமாணத்தின்படி மாறும்.

நிறைபோட்டியுள்ள நாற்காலியாக்குவோனுடைய செலவை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். இவ்வாராய்ச்சியிலே நாம் மாறாச் செலவுக்கும் மாறுஞ் செலவுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒரு நிமிடம் மறந்துவிட்டு, முழுச்செலவைப்

பற்றி ஆராய்வோம். கீழ்க்காணும் இவ்வட்டவணை நிறைபோட்டியுள்ள நாற்காலியாக்குவோனுடைய செலவு அட்டவணையெனக் கருதுவோம்.

எட்டாவது அட்டவணை

| ஆக்கும் நாற்காலிகளின் அளவு | முழுச்செலவு | சாதாரண செலவு | எல்லைச் செலவு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 100 | 4,600 00 | 46 00 | — |
| 110 | 4,840 00 | 44 00 | 24 00 |
| 120 | 5,040 00 | 42 00 | 20 00 |
| 125 | 5,125 00 | 41 00 | 17 00 |
| 130 | 5,200 00 | 40 00 | 15 00 |
| 135 | 5,400 00 | 40 00 | 40 00 |
| 140 | 5,654 60 | 40 00 | 46 60 |
| 145 | 5.929 60 | 40 89 | 55 00 |
| 150 | 6,300 00 | 42 00 | 74 80 |

இவ்வட்டவணையில் நூற்றுக்குக் குறைந்த கணக்குக்கள் கவனிக்காமல் விடப்பட்டுள. இவ்வட்டவணையின்படி ஆக்கம் 100 நாற்காலிகள் முதல் 130 வரை அதிகரிக்கும் பொழுது, ஒரு நாற்காலியின் சாதாரண செலவு, அம்முறைப்படி குறையும். 130 முதல் 135 வரை அது மாருமலிருந்து. அவன் 135 இற்கு மேலாக ஆக்கத்தை அதிகரிக்கும் பொழுது. அது வளரத்தொடங்கும். அவன் வட்டி செலுத்த வேண்டிய மூலதனத்தின் உதவியினுல் சம்பாதித்துக் கொண்ட ஒரு சாலையோடும் கருவிகளோடும் ஆக்கத்தைத் தொடங்குகிறுன் எனக் கொள்வோம். இச்சாலையும் கருவிகளும் 130 நாற்காலிகளைச் சாமர்த்தியத்தோடு உற்பத்தி செய்யப்போதியனவாகும் என்றும் கருதுவோம். இச்சாலையையும் கருவிகளையும் வாங்கும் பொருட்டுச் செலுத்த வேண்டிய வட்டியானது, 100, அல்லது 130 நாற்காலிகளை ஆக்கினுலும் மாருது. ஆனுல், அவனுடைய ஆக்கத்தை நூற்றுக்கு மேல் அதிகரிக்குமிடத்து அவ்வட்டியானது அதிக தொகையான நாற்காலிகளிடை பிரிபட்டுப்போகும். வேறு முறையிற் கூறின், மாருவட்டியைச் செலுத்துதல், பலவிதமான அலகுகளிடையில் பிரிபட்டிருக்கும். இக்காரணத்தைக்கொண்டே யாதோ ஒரு எல்லைவரையில் (130) ஒரு நாற்காலியின் சாதாரண செலவு குறையும். ஒரு வரையறுப்பின் பின்பு இவ்வுதாரணத்தில் 135 ஐக்கொண்டே யாதோ ஒரு எல்லைவரையில் (130) இவ்விலைக்கு அவன் 135 நாற்காலிகளையொழிய, அதற்கு மேல் ஆக்கமாட்டான். 135 நாற்காலிகளை ஆக்கும்பொழுது, அவனுடைய எல்லைச் செலவு, எல்லைவருமானத்துக்கு ஒப்பாஉக்கு அப்பால் ஏன் ஒரு நாற்காலியின் சாதாரண செலவு அதிகரிக்கின்றது? சாலையானது தொழிலாளர்களாலாவது நாற்காலிகளாலாவது நிறைந்து பெருகும் பொழுது ஆற்றல் குறைவதனுலும், 135 உக்குக் கூடிய ஆக்கத்திற்குக் கருவி

கள் போதாமையாலும் மேன்மேலும் மூலதன முதலீடு செய்ய நேரிடும். அதனல், மேன்மேலும் வட்டி செலுத்த நேரிடும். சில வரையறைகளுக்கு மேலாக ஆக்கும் பொழுது, அதைப் பரிபாலிக்க அவனுடைய சாமர்த்தியம் குறைதலும் கூடும். இது இவ்வேதுக்களின் காரணத்தாலென எண்ண இடமுண்டு. யாதொரு வரையறையில் கூடும்பயன் விதியும், அடுத்தபடியாக மாறுப்பயன் விதியும், கடைசியாகக் குறையும் பயன் விதியும் ஏன் உண்டாகுமென்பது இப்பொழுது விளங்கும்.

நாம் இந்தச் செலவு அட்டவணையை மறுபடியும் ஆராய்ந்து பார்த்தால், நூறு நாற்காலிகளை உற்பத்தி செய்யும் பொழுது அவனுடைய முழுச்செலவு ரூபா 4,600 ஆகுமென்பது தெரியும். அவன் 110 நாற்காலிகளை ஆக்கும்பொழுது முழுச்செலவு ரூபா 4,840 ஆகும். நூற்றுக்கு மேலாகப் பத்து நாற்காலிகளை ஆக்குவதனல் முழுச்செலவுக்குச் சேரும் பண அளவு, அப்பத்து நாற்காலிகளின் எல்லைச்செலவு ஆகும் என்று சொல்லப்படும்.[1] ஓர் ஆக்க அலகின் (இங்கு ஒரு நாற்காலியின்) செலவாக எல்லைச் செலவை விலைமதிப்பது சாதாரண வழக்கமாகும். இவ்வண்ணம் 110 ஆவது நாற்காலியின் எல்லைச்செலவு ரூபா $\frac{240}{10}$ ரூபா 24 என நாம் கூறலாம். இவ்வண்ணம் நாற்காலிகளைப் பலவிதமான அளவில் ஆக்கும்பொழுது, விளையும் எல்லைச் செலவு எட்டாவது அட்டவணையின் கடைசியில் காணப்படும். ஒரு நாற்காலியின் எல்லைச்செலவு ஒரு வரையறை மட்டும் குறைந்து, அதற்குப் பின்னர் மறுபடியும் கூடுவதை நாம் காணலாம். இவ்வட்டவணைமூலம் சாதாரண செலவுக்கும் எல்லைச்செலவுக்குமிடையிலுள்ள முக்கியமான தொடர்பையும் நாம் அறியலாம். சாதாரண செலவு குறையும்பொழுது, எல்லைச்செலவு அதனைக்காட்டிலும் மிக்க சீக்கிரத்திற் குறையும். இப்படி ஆக்கம் 110 முதல் 120 வரை கூடும்பொழுது, சாதாரண செலவு ரூபா 44 முதல் ரூபா 42 வரை குறைவதுடன், எல்லைச்செலவு ரூபா 24 முதல் ரூபா 20 வரை கூடும். சாதாரண செலவுகூடும் பொழுது, எல்லைச்செலவு அதிலும் மிகவேகமாய்க் குறையும். இவ்வண்ணம் ஆக்கம் 135 முதல் 140 வரை கூடும்பொழுது, சாதாரண செலவு ரூபா 40 முதல் ரூபா 46.39 வரை கூடும். எல்லைச்செலவும் ரூபா 40 முதல் ரூபா 46.06 வரை கூடும். இதற்கேற்ற சாதாரண செலவு மிகவும் குறையும் நேரத்தில், அதாவது ரூபா 40 ஆகும் நேரத்தில், சாதாரண செலவு எல்லைச்செலவுக்கு நிகராகும்.

எட்டாவது அட்டவணையானது, நிறைபோட்டியின்கீழ், ஒரு நாற்காலியுற்பத்தியாளனுடைய செலவு அட்டவணையெனின், அவன் எத்தனை நாற்காலிகளை ஆக்குகின்முன்? இது உண்மையாகவே அவனுடைய செலவின்மேல் மட்டும் தங்கியிருப்பதன்று; அவனுக்கு அவற்றை விற்கக்கூடிய விலையின் மேலும் தங்கியுள்ளது. ஒரு சமயம் ஒரு நாற்காலியின் சந்தைவிலை ரூபா 55 என்று கொள்வோம். நாற்காலி, சந்தை நிறைபோட்டியில் இருக்குமாதலால் ஆக்கக்கூடிய நாற்காலிகளை ஒன்று ரூபா 55 ஆக எவ்வளவேனும் விற்கக்கூடுமென்று தனி

[1] எல்லை வருமானமும் இப்படிப்பட்ட ஒரு மூலதருமத்தின்படி கண்டு கொள்ளப்படும்.

யுற்பத்தியாளன் எண்ணுகிறான். ஒரு நாற்காலியின் விலை ரூபா 55 ஆயின் நாற்காலிகளை 145 வரை ஆக்குதல் தனக்கு இலாபமென்பதை அவன் தன் செலவு அட்டவணைமூலம் காண்கிறான். ஒரு நாற்காலியின் விலை ரூபா 55 ஆக இருக்கையில், அவன் 140 நாற்காலிகளை ஆக்கினால், அவனுடைய முழு வருமானம் (ரூபா 140.55 ஆக) ரூபா 7,700 ஆகும். அவனுடைய முழுச் செலவு ரூபா 5,654.60 ஆகும். ஆகையால், அவனுடைய முழு இலாபம் ரூபா 2,045.40 ஆகும். அவன் 145 நாற்காலிகளைச் செய்தால், முழு இலாபம் அப்பொழுதும் ரூபா 2,045.40 ஆகும். அவன் 145 நாற்காலிகளுக்குக்கூடச் செய்தால் (150 எனின்) அவனுடைய முழுச்செலவு ரூபா 6,300 ஆகும். முழுவருமானமும் ரூபா 8,250 ஆகும். ஆகையால், அவனுடைய முழு இலாபமும் ரூபா 1950 ஆகும். இப்படியே அவன் 140 உக்குக்குறைவாக ஆக்கினால் (நாற்காலிகள் 130 எனின்) அவனுடைய முழுச் செலவு ரூபா 5,200 ஆகும். முழு வருமானமும் ரூபா 7,150 ஆகும். அப்பொழுது அவனுடைய இலாபம் ரூபா 1950 ஆகும். இவ்விரண்டினாலும் அவனுடைய இலாபம் குறைந்துபோதலைக் காணலாம்.

இது ஏன் இப்படியாகுமென்று அறிய முயல்வோம். அவன் 130 நாற்காலிகளைச் செய்யும்பொழுது, கடைசி நாற்காலியின் எல்லைச் செலவு ரூபா 15 ஆகும். அவன் 130 நாற்காலிகளைச் செய்து ஒரு நாற்காலியை ரூபா 55 ஆக விற்கும் பொழுது அவனுடைய எல்லை வருமானம் ரூபா 55 ஆகும். ஒரு நாற்காலியின் விலை ரூபா 55 ஆக இருக்கும்பொழுது, இன்னொரு நாற்காலியை விற்பதனால் முழு வருமானத்துக்குச் சேரும் மிகுதி வருமானம், (அதாவது எல்லைவருமானம்) இன்னொரு நாற்காலியை ஆக்குவதனால் முழுச் செலவுக்குண்டாகும் மீதிக்கு, (அதாவது எல்லைச்செலவுக்கு) கூடுவதனால், 130 நாற்காலிகளுக்கு மேல் ஆக்குதல் அவனுக்கு இலாபத்தையளிக்கும். அவன் 150 நாற்காலிகளை ஆக்கும்பொழுது, கடைசி அலகினை ஆக்குவதனால் முழுச் செலவுக்குண்டாகும் அதிகூடிய செலவு, (அதாவது எல்லைச்செலவு) அவ்வலகினை ஆக்குவதனால், முழுவருமானத்துக்குண்டாகும் மீதிக்கு (அதாவது எல்லை வருமானத்திற்கு) கூடியது. ஆகையால் இவ்வளவிற்குக் குறைவாக ஆக்குதல் அவனுக்கு இலாபத்தைத்தரும். அவன் 140 அலகுகளை ஆக்க வேண்டுமா? 145 அலகுகளை ஆக்க வேண்டுமா? என்பதைப் பற்றிக் கருதுவோம். 140 ஆவது, அல்லது 145 ஆவது அலகினை ஆக்குதலால் முழுவருமானத்துக்குண்டாகும் மீதி அவ்வலகினை ஆக்குதலால் முழுச்செலவுக்குண்டாகும் மீதிக்கு நிகரும். ஆனால், அவன் 145 அலகுகளை ஆக்கும்பொழுது அவனுக்குக் கிடைக்கக்கூடிய உச்ச இலாபத்தை அவன் பெறுதல் கூடும். 145 உக்குக் கூடவோ, குறையவோ ஆக்குவதனால், அவனுக்குத் தன்னுடைய இலாபத்தை அதிகரிக்க இயலாதுபோகும். ஓராக்குவோன் உயர்ந்த இலாபத்தைப் பெறுவது, ஆக்கத்தின் கடைசி அலகின் எல்லைச் செலவானது எல்லை வருமானத்தை நிகரும் பொழுதே என்பதை நாம் இதனால் றிவோம். ஓராக்குவோன் உயர்ந்த இலாபத்தைப் பெறுவது, எல்லைச்செலவு எல்லை வருமானத்துக்கு நிகராகும் பொழுதேயாதலால், எல்லைச் செலவு எல்லைவருமானத்துக்கு நிகராகும் வண்ணம் ஒரு குறித்த தொகையை ஆக்க முயலுவான்.

ஆகையினுல், இவ்வுதாரணத்தின்படி ஒரு நாற்காலியின் சந்தை விலை ரூபா 55 ஆக இருப்பின், தனியுற்பத்தியாளன் 145 நாற்காலிகளையன்றி அதற்கு மேலாக ஆக்கான். இவ்வண்ணம் ஒரு நாற்காலியின் விலை ரூபா 40 ஆயின், இவ் வாக்குவோன் 135 நாற்காலிகளுக்கு மேலும் ஒரு நாற்காலி ரூபா 75 ஆயின், 150 நாற்காலிகளுக்கு மேலும் உற்பத்திசெய்ய மாட்டான்.

இவ்வுதாரணத்தால் நாம் அறிவது, இவ்வாக்குவோன் தன் ஆக்க அளவை அலகு ஐவைந்தாக அதிகரிக்கக் கூடுமென்பதாம். ஆனுல், சில விடயங்களில் இப்படிச் செய்யவியலாது. எந்திரங்கள்மூலம் நடைபெறும் சவர்க்கார ஆக்கத் திலே ஒரு முறை ஆக்கம் குறைதலும் பின் கூடுதலும் 1,000 அலகுகளாலோ 10,000 அலகுகளாலோ ஆகும். இது இவ்வாருயின், ஓராக்குவோன் தன் எல்லைச் செலவு எல்லைவருமானத்துக்கு மிகுதியாகும் வண்ணம் ஆக்குவான். எனின் அவ்வெல்லைச்செலவு எல்லைவருமானத்துக்குக் குறைவாக இருக்க வேண்டும்.

ஒரு நிறைபோட்டியிலே ஒவ்வோருற்பத்தியாளனும் தான் ஆக்கும் அளவைத் தீர்மானித்துக் கொள்வது, தன்னுடைய செலவு வருமானத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பதனுலேயாம். இவ்வண்ணம் ஏதாவதொரு சந்தை விலையிலே ஒவ்வோ ராக்குவோனும் ஆக்கவேண்டுமோ, இல்லையோ என்பதைத் தீர்மானிப்பானுயின், இவ்விலையைத் தன்னுடைய ஆக்கச் செலவோடு ஒப்பிட்டுப் பார்ப்பான்.

ஒருவிலைக்கு உற்பத்தியாளர்கள் எல்லோரும் உற்பத்தி செய்யும் பரிமாணம், அவ்விலைக்கு அப்பண்டத்தின் முழு நிரம்பலாகும். இவ்வண்ணம், பலவிதமான விலைகளுக்குற்பத்திசெய்யின், நிரம்பலும் மாறக்கூடும். விலைகூடும் பொழுது, அக் கூடிய விலைக்கு அதிக அளவு சம்பாதிக்கக்படும். உதாரணமாக, நாம் முற்கூறிய நாற்காலியாக்குவேன், ஒரு நாற்காலியின் விலை 75 ரூபா ஆகும்பொழுது 145 நாற்காலிகளுக்கு மேல் உற்பத்திசெய்ய எத்தனிப்பான். மேலும், ஒரு நாற்காலி யின் விலை 55 ரூபாவாக இருக்கையில், முதலில் நாற்காலிகளை ஆக்காத சிலர், விலை 75 ரூபாவாகும் பொழுது அதனை ஆக்கத் தொடங்குவர். இவ்வண்ணம், குறைந்த விலையிலே நிரம்பல் சுருங்கும். ஆகையால், நாம் ஒரு கேள்வி அட்ட வணையை அமைக்கும் விதத்திலேயே நம் நாற்காலி நிரம்பலட்டவணையையும் அமைக்கலாம்.

ஒரு நாற்காலியின் விலை 55 ரூபாவெனில், 145 நாற்காலி வரை முற்கூறிய உற்பத்தியாளன் ஆக்குவதைப்பற்றி நாம் கூறினேம். இவ்விலையின்படி முற் கூறிய உற்பத்தியாளன் ரூபா 2,045/40 இலாபம் பெறுவான். ஒரு முகாமைக் காரனைத் தன் சம்பளமுட்பட, எல்லாச் செலவுகளையும் செலுத்திய பிறகே அவனுக்கு இவ்விலாபம் தோன்றும். இப்படிப்பட்ட ஓரிலாபம் தூயவிலாபம் என்று சொல்லப்படும். அதனுல், முகாமைக்காரனெருவனுக, அவனுக்குக் கிடைக்க வேண்டிய வேதனம் உட்பட, எல்லாச் செலவுகளையும் தீர்த்த பின்னர், மிஞ்சும் பணம் இதுவாகும். ஒரு நிறை போட்டியிலே உற்பத்தியாளர்களுக்குத் தூயவிலாபம் உண்டாகும் பொழுது, இதுவரை ஆக்கத் தொழில்களைச் செய் யாதவர்களும் அதனைத் தொடங்குவர். இப்படிப்பட்ட புதிய உற்பத்தியாளர்கள்,

மதிக்கத்தக்க பெரிய அளவில் ஆக்கத்தொழில்களைத் தொடங்கும் பொழுது, ஆக்கப்படும் நாற்காலிகளின் தொகை சீக்கிரம் அதிகரிக்கும். இப்படிப்பட்ட பெரியவொரு நிரம்பல் உண்டாக, அவற்றை விற்பதற்குச் செய்யவேண்டிய ஒரேயொரு செயல் யாதெனின், விலையைக் குறைத்தலேயாம். அது ஏன் இப்படி ஆகவேண்டுமென்பது பின்னர் விரித்துரைக்கப்படும். நிறைபோட்டியின் கீழ் உற்பத்தியாளர் தூய விலாபங்களைப் பெறும்பொழுது, புதிய உற்பத்தியாளர் ஆக்கத்தொழில்களைத் தொடங்குவர். அப்பொழுது, விலைகுறையும். இவ்வண்ணம் உற்பத்தியாளர்களுக்குத் தூய இலாபம் கிடைக்காதவரை, விலை குறையும். இவ்விலை எறும்பொழுது, புதிய உற்பத்தியாளர் தொழிலில் ஈடுபடார். ஏனெனில், தூய விலாபங்களைப் பெற இன்னும் இடமில்லாமையினாலேயாம். அதனால், இவ்விலை (தூயவிலாபங்கள் இல்லாத விலை) சமநிலைவிலை என்று சொல்லலாம். நாற்காலியாக்குவோனைப் பற்றி நம் உதாரணத்தில் காட்டப்பட்டவனை வகைக்குறி உற்பத்தியாளன் என்று கொள்வோம். இப்படியாயின், ஒரு நாற்காலியின் விலை 40 ரூபாவரை குறையும். இவ்விலைக்கு அவன் 135 நாற்காலிகளையொழிய, அதற்குமேல் ஆக்கமாட்டான். 135 நாற்காலிகளை ஆக்கும்பொழுது, அவனுடைய எல்லைச் செலவு, எல்லைவருமானத்துக்கு ஒப்பாகும். ஆனால், அவனுக்கு யாதாவதொரு தூயவிலாபமும் கைப்படாது. அவனுடைய வருமானமேனும் முகாமைக்காரனைப் பணியாற்றின், வேதனம் உட்பட, முழுச்செலவுக்கு நிகழும்.

நம் ஆக்குவோன் ஒரு வகைக்குறி ஆக்குவோனாயின், ஒரு நாற்காலியின் விலை 40 ரூபாவாகும் பொழுது, அவனுடைய தொழில்தாபனம் சமநிலையில் இருப்பது, அவன் 135 நாற்காலிகளை உற்பத்தி செய்யும் பொழுதேயாம். இவ்விலையிலே (அதாவது 40 ரூபாவில்) அவனுடைய எல்லைச்செலவு அவனுடைய எல்லை வருமானத்துக்கு நிகரும். இப்பொழுது, அவன் யாதும் தூயவிலாபத்தைப் பெறான். அவன் (135) அலகுகளை ஆக்கும் பொழுது அவனுடைய சாதாரண செலவு (அதாவது 40 ரூபா) அவனுடைய சாதாரண வருமானத்துக்கு (அதாவது 40 ரூபா) நிகரும். மேலும், ரூபா 40 அவனுடைய மிகக் குறைந்த சாதாரண செலவாகையால், அவன் சிறந்த சாமர்த்தியத்தோடு நாற்காலிகளை ஆக்குவான். அவ்விலைக்கு, வகைக்குறி உற்பத்தியாளர்களுக்குத் தூய விலாபங்கள் கிடையாதபடியால், புதிய உற்பத்தியாளர் அத்தொழிலிற் சேரமாட்டார்கள். தொழிலிலிருக்கும் உற்பத்தியாளர்களுள் எவனாவது ஆக்கத்தை வளர்க்கவும் குறைக்கவும் கூடாது. ஏனெனில், அவர்கள் சமநிலையில் இருப்பதாலேயாம். ஆகையால், நாற்காலியாக்கத் தொழிலும் சமநிலையில் இருக்கும்.


அது எப்படியாயினும், ஒரு நிறைபோட்டியிற் கூட ஒரு வியாபாரம் சமநிலைப் பக்கத்துக்குச் சாய்ந்து போவது, நீண்டகாலத்துக்குரிய ஒரு சார்பு போலவேயாம். சமநிலை வரும்வரை விலையானது எப்பொழுதும் குறைந்தும் வளர்ந்தும் தோன்றும். உதாரணமாக, ஒரு நாற்காலியின் விலை 40 ரூபாவுக்குக் கூடும்பொழுது, வழமையான உற்பத்தியாளர்களும் தொழிலிற் சேர்வர். இக்காரணத்

தினுல் விலே கீழிறங்கும். ஒரு நாற்காலியின் விலே 40 ரூபாவுக்குக் குறையும் பொழுது பல உற்பத்தியாளர்கள் ஆக்கத்தைக் கைவிடுகிறபடியால், நிரம்பல் சுருங்க விலே அதிகரிக்கும்.

ஒரு நாற்காலியின் விலே 38 ரூபா வரை குறைந்ததென்று கருதுவோம். நாம் எடுத்த உதாரணத்தில், ஒரு நிறைபோட்டியில் வேலே செய்யும் உற்பத்தியாளர், இக்குறைந்தவிலே நிலேயில்லாத விலே என்றும், அதுபின்னர் ஏறுமென்றும் யோசிப்பாஞயினும், இவ்விலே அவனுடைய ஒரு நாற்காலியின் மாறுஞ் செலவைக் காட்டிலும் கூடுமெனினும், அவன் ஆக்கத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டு போவான். உண்மையாகவே இவ்விலே அவனுடைய முழுச்செலவைத் தீர்த்துவிடப் போதியதன்று. இவ்விலே அவனுடைய மாறுஞ் செலவைக் காட்டிலும் கூடுமாஞல், விலேக்கும் மாறுஞ் செலவுக்கு மிடையிலுள்ள வித்தியாசம் அவனுடைய மாருச்செலவைத் தீர்த்துவிட உபயோகித்துக் கொள்ளலாம். இக் காரணத்திஞற்ருன் ஒருற்பத்தியாளன் தன்னுடைய செலவுகளே மாருச்செலவு களாகவும் மாறுஞ் செலவுகளாகவும் விரித்துரைப்பது முக்கியமாகும். அது எப் படியென்ருலும், விலே நீண்டகாலத்துக்குள் 38 ரூபாவாக இருந்தால் அவன் உற் பத்தி செய்தாலும் இவ்விலே அவனுடைய வழமைச் செலவுக்குக் குறைவான தால் நம் உற்பத்தியாளன் தன் சுய ஆக்கத்தை நிறுத்திவிடுவான்.

ஒரு நிறைபோட்டியிலே ஒருற்பத்தியாளனேப் பற்றி நாம் இதுவரை செய்த ஆலோசனேயின் சாராமிசத்தைப் பின்வருமாறு குறிப்பிடலாம். ஒவ்வோருற் பத்தியாளனும் தன் இலாபத்தை உயர்த்திக்கொள்ளவே எத்தனிப்பான். அவ னுடைய எல்லேச் செலவு எல்லே வருமானத்துக்கு உடன்பாடாயின், அவன் இலா பத்தை உயர்த்துவான். ஒரு நிறைபோட்டியிலே தொழில் தாபனங்களும் முழுத் தொழிலும் நீண்டகாலமாக ஒரு சார்பாக விருந்தாலும், சமநிலே எல்லேயை யுடைய, அணுகுசமநிலேயிலே உற்பத்தியாளனுக்குத் தூய இலாபம் கிடைப்ப தில்லே. இந்தச் சகல விதிகளேயும் நாம் ஓர் இரேகைச் சித்திரமூலம் விளக்கு வோம்.

ஒரு நிறைபோட்டியிலே ஓர் உற்பத்தியாளனுடைய சாதாரண செலவுகள், கோடு **சா. செ.** என்பதனுல் காட்டப்படுமென்றும், அவனுடைய எல்லேச் செலவு வனேகோடு எ. செ. என்பதனுற் காட்டப்படுமென்றும், கருதுவோம். விலே, **ஓ. வி.** என்ருல், சா. வ. என்பதனுல் சாதாரண வருமானமும் **எ. வ.** என்பதனுல் எல்லே வருமானமும் காட்டப்படும். அது அப்படியாஞல், **ஓ. பி.** ஒரு பிரமாணத்தை உற்பத்தி செய்கிறவன், அப்பிரமாணத்திலே தன்னுடைய எல்லேச்செலவும் எல்லே வருமானத்துக்கு ஒப்பாகும் என்க. இப்பிரமாணத்தை உற்பத்தி செய்யும் பொழுது, அவனுக்கு ஒரு தூயவிலாபம் கைகூடும். சாதாரண செலவினதும் சாதாரண வருமானத்தினதும் வித்தியாசம், ஆக்கிய அலகுகளால் கூடும் பொழுது வரும் விடை தூயவிலாபத்துக்கு ஒப்பாகும். இவ்விரேகைச் சித்திரத் திற் காணப்படும் வரிகளே வரைந்த பாகத்தைச் சித்திர மூலமாகக் காட்டும் போது இவ்விலாபப் பிரமாணம் தோன்றும். ஒருநிறை போட்டியிலே விலே சம




நிலை எல்லைக்குப் புகுவது, ஓ. வி. என்பதிலேயாம். ஓ. வி. என்பதனுற காட்டப் படும் விலைக்கு ஒரு குறைந்த விலையிற் சமநிலை செல்லின், இவ்வுற்பத்தியாளன் ஆக்கத்தை நிறுத்துவான். ஓ. வி. விலையில் இவ்வுற்பத்தியாளன் ஓ. பி. அலகு களின் ஒரு பிரமாணத்தை ஆக்கித் தூயலாபத்தைப் பெறமாட்டான். ஏனெனில், அவனுடைய சாதாரண செலவு சாதாரண வருமானத்துக்கு ஒப்பாகும்.

எந்தக் காரணத்தினுலாவது தன் ஆக்கச் செலவுக்குக் குறைவாக ஒரு உற்பத்தியாளனுவது, விற்போனுவது தன் பண்டங்களை விற்றல், விரைவிலாவது தாமதித்தாவது ஆக்கத்தை நிறுத்த நேரிடும். செலவுக்குக் குறைந்த விலைக்கு விற்பதனுல் அவன் எப்பொழுதும் நட்டத்தையே தாங்க நேரிடும். ஆனுல், உற்பத்தியாளன் செலவைக் காட்டிலும் குறைவாக விற்கநேரிடும் சமயங்களுமுண்டு. நாம் முன்னர்க் கண்டதுபோல, விலையானது மாறுஞ் செலவுக்குக் கூடினுலும், முழுச் சாதாரண செலவுக்குக் குறைந்தாலும், அக்குறைந்த விலை நிலையற்றதென்றல், ஆக்கத்தைக் கொண்டுசெல்வதில் தவறில்லை.

விலைகொடுத்து வாங்குவதிலும் விற்பதிலும் பலவிதமான செயல்கள், மறுபடியும் ஆக்கக்கூடிய பண்டங்களோடும் சேவைகளோடும் தொடர்புபட்டிருக்கின்றன. ஆனுல், ஆக்கத்துக்காகச் செலவிட்டிருக்கும் பண அளவை மாற்றியலாது. ஆக்கப்பட்டிருக்கும் ஒரு பண்டத்தின் அளவு எந்தச் சமயத்திலும் இருக்கும். ஏலவே ஆக்கப்பட்டிருக்கும், ஆனுல் மறுபடியும் ஆக்கவியலாத பண்டங்களைப் பற்றி நல்லவுதாரணமொன்றை இப்பொழுது பார்ப்போம்:—அது இறந்துபோன ஒரு சித்திரக்காரனுடைய சித்திரம். அதை மறுபடியும் அமைக்கவியலாது. மறுபடியும் அமைக்கவியலுமானுலும், பழைய மாதிரியாதலால் ஆக்கப்படாத பண்டத்தைப் பற்றி இதற்கொப்பான ஒரு வேலையும் தோன்றலாம்.

அதாவது, ஒரு காலத்தில் இலங்கையில் ஆண்கள் தலையில் அணிந்த சீப்பு உதாரணமாகும். இப்படிப்பட்டவொரு சமயத்தில், செலவைப் பற்றிக் கருதாமல், தான் பெறக்கூடிய பணத்தைப் பெற்றுக்கொள்ள வியாபாரி ஒருவன் எத்தனிப்பான்.

மறுபடியும், உற்பத்தியாக்கக்கூடிய பண்டத்தின் தொகுதியையுள்ள ஒரு விற்பனையாளன், சில சமயங்களில் தனக்குச் செலவாகிய தொகையைப் பற்றிக் கருதாமல், பண்டங்களை விற்க முயல்வான். உதாரணமாக, சில காலவரையறைக்கு மேல் வைத்துக்கொள்ளவியலாத, இலேசிற் கெட்டுப்போகும் காய்கறிகளையும் மீன்வகைகளையும் கூறலாம். குளிரேற்று எந்திரமொன்றில்லாத மீன் வியாபாரி, மாலையில் மீன் கெட்டுப்போக விடாமல், விலையை மிகவும் குறைத்து மீன் எல்லாவற்றையும் விற்க முயல்வான்.

அவனுக்குச் செலவாகிய தொகையினும் குறைய, மீனை விற்பான். ஒரு தொகை பண்டமுள்ள ஒரு வியாபாரிக்குப் பணம் விரைவில் தேவையாயின், அதைப் பெற்றுக்கொள்ள வேறொரு சுலபமான முறை இல்லாவிடின், அவன் தன் செலவுக்குக் குறைவாகவாவது அப்பண்டங்களை விற்க எத்தனிப்பான்.

மற்றைப்படி, ஒரு வியாபாரியிடம் கெட்டுப் போகாதபடி ஆக்கக்கூடிய, புதிய பண்டத்தொகுதியிருந்தால், அவன் அதைத் தனக்குச் செலவாகிய தொகைக்கு மிகக் குறைந்த விலையில் விற்க மாட்டான். விலை ஏறும் காலத்திலே விற்க எண்ணி, ஒரு குறித்த விலைக்குறைய விற்கமாட்டான். அது அவனுடைய இலாபத்துக்கு உதவியாகும். விலை அதிகரிக்கும்வரை, பண்டங்களை வைத்துக் கொள்வதற்குரிய செலவும், அவன் விற்கக்கூடிய விலையும், இக்கால வரையறைக்குள் அப்பணத்துக்குச் சேரக்கூடிய வட்டி முதலியவெல்லாம், அவன் எதிர் காலத்தில் விற்கக்கூடுமென்று கருதும் விலைக்குக் குறைந்தால், அப்பண்டத்தொகுதியை அக்காலம்வரை வைத்துக் கொள்வான். ஆகையால், அதற்குக் குறைவாக விற்கும் ஒரு விலையானது, அவனுடைய செலவுக்குக் குறைவாகவேனும் போகலாம். இவ்விலையை அவனுடைய **ஒதுக்கவிலை** என்று கூறுவோம்.

ஓர் உற்பத்தியாளனுக்கு ஆக்கச் செலவைக் காட்டிலும் குறைவாக விற்குஞ் சமயங்களில், அப்படி விற்கக் காரணங்களும் உளவென இதனால் விளங்கும். ஆனால், ஒருவரையறையின்றி அவனுக்கு அப்படிச் செய்யவியலாது. அப்படிச் செய்யின், அவனுக்கு நட்டம் ஏற்படக்கூடும். ஒருவன் ஆக்கத்தொழில்களில் ஈடுபட்டிருப்பது, கெட்ட காலங்களை நல்ல காலங்களோடு ஒப்பிடும்பொழுது அவனுடைய ஆக்கச் செலவுக்குக் கூடிய அளவு விற்கக்கூடுமானால் மட்டுமே. இல்லாவிடின், ஒரு நிறை போட்டியில் (முகாமைக்காரனின் வேதனம் உட்பட) ஆக்கச் செலவுக்கு ஒப்பான விலைக்கு விற்கக்கூடுமானால் அவன் அப்படி விற்கலாம்.

7 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

| | | |
|---|---|---|
| 1. வழிவந்த தேவை | ... | Derived demand |
| 2. நேர் கேள்வி | ... | Direct Demand |
| 3. கடைசி நுகர்வோன் | ... | Ultimate Consumer |
| 4. பரிசிக்கக்கூடிய | ... | Tangible |
| 5. பொதுச்சந்தை | ... | General Market |
| 6. நிறைவோட்டி | ... | Perfect Competition |
| 7. நிறைவில் போட்டி | ... | Imperfect Competition |
| 8. தனியுரிமை | ... | Monopoly |
| 9. சந்தைவிலை | ... | Market Price |
| 10. அறியக்கூடிய முகாமை செலுத்துதல் | ... | Perceptible influence |
| 11. ஆவணங்கள் | ... | Securities |
| 12. பங்கு முதற் சந்தை | ... | Stock Exchange |
| 13. தூய போட்டி | ... | Pure Competition |
| 14. தனியுற்பத்தியாளன் | ... | Individual Producer |
| 15. சராசரி வருமானம் | ... | Reserve Price |
| 16. சம்பளங்கள் | ... | Representative, Typical |
| 17. முதலீடு | ... | Equilibrium Price |
| 18. நாளடைவில் | ... | Pure Profits |
| 19. மாறாச் செலவுகள் | ... | Supply |
| 20. மாறுஞ் செலவுகள் | ... | Maximum |
| 21. நட்டவீட்டுச் செலவுகள் | ... | Indifference |
| 22. ஆக்கத்தின் வீச்சு | ... | Marginal Cost |
| 23. எல்லைச்செலவு | ... | Range of Production |
| 24. உபேட்சை | ... | Insurance Charges |
| 25. உயர்வு | ... | Variable Costs |
| 26. நிரம்பல் | ... | Fixed Costs |
| 27. தூயவிலாபம் | ... | In the long run |
| 28. சமநிலை விலை | ... | Investment |
| 29. வகைக்குறி | ... | Wages |
| 30. ஒதுக்கவிலை | ... | Average revenue |

# 8 ஆம் அத்தியாயம்

## தனியுரிமை

கடந்த அத்தியாயத்திலே ஒருநிறை போட்டியில், விற்கிறவனுக்குரிய அட்டவணையை நாம் விரித்துரைத்தோம். தனியுரிமை, சிலகாரணங்களைக் கொண்டு, நிறைபோட்டியின் மாறுபாடு என்று சொல்லலாம். ஆகையால், தனியுரிமையின் உண்மையான தத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள நிறைபோட்டி என்பதன் கருத்தை அறிதல்வேண்டும். ஒரு நிறை போட்டியிலே ஒவ்வொரு தனியுற்பத்தியாளனும் சகல உற்பத்திப் பொருள்களுள் மிகச்சிறிய பாகத்தை ஆக்குவதனால் அவனுடைய ஆக்கத்தை அதிகரிப்பதனாலாவது குறைப்பதனாலாவது விலையின் மேல் குறிப்பிடத்தக்க முகாமை செலுத்த இயலாது. சந்தையினால் தீர்மானிக்கப்படும் விலையை அவன் தனியே மாற்ற வியலாதென உணர்வான். ஒரு தனியுற்பத்தியாளனுக்குக் கணிக்கத்தக்க அளவு விலையின் மேல் அதிகாரஞ் செலுத்த வியலாதாயினும், ஆக்குவோரெல்லோருமே அப்படிச் செய்யலாம். உற்பத்தியாளர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஆக்கத்தைக் கூட்டினால், விலை குறையவும், ஆக்கத்தைக் குறைத்தால் விலை கூடவும் இடமுண்டு. ஒரு நிறைபோட்டியிலே ஒரு பண்டத்தின் முழு ஆக்கத்தில் மிகச்சிறிய பாகத்தை மட்டும் உற்பத்தி செய்யும் ஒரு தொகை உற்பத்தியாளர்கள் இருந்தாலும் தனியுரிமை[1] என்பதனால் கருதப்படும் முழு ஆக்கமும் ஓர் ஆக்குவோன் மூலம் நடைபெறும் என்பதேயாம்.

தனியுரிமையாளனொருவன் சாதாரண சந்தைக்காக ஆக்கத்தொழில்களைச் செய்யும் விதத்தை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். தனியுரிமையாளனொருவன் ஒரு நிறைபோட்டியில் ஆக்குவோனைப் போலவே தன் இலாபத்தை உயர்த்திக்கொள்ள விரும்புவான். ஒரு தனியுரிமையாளனுக்காவது தன் இலாபத்தை உயர்த்த எவ்வளவு ஆக்க வேண்டுமென்பதை அறிய இயலுவது, தன்னுடைய ஆக்கச் செலவையும் தன் பண்டங்களை விற்கக்கூடிய விலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதனாலேயாம்.

அப்படிப்பட்ட பண்டங்களை யாக்கும் ஒரேயொரு உற்பத்தியாளன் அவனாயின், அவனுடைய பண்டங்களைப் பலவிதமான அளவில் விற்கக்கூடிய விலையைத் தீர்மானிப்பது, அவனுடைய பண்டத்துக்காகவுள்ள கேள்வியட்டவணையின் படியேயாம். அதாவது, முழுக்கேள்வி அட்டவணையின் படியேயாம். ஓருற்பத்தியாளன் ஒரு வகையான மூன்று சில்லுகளையுடைய பிள்ளைக் கைவண்டி

[1] இன்னும், தனியுரிமை யென்ற பெயர் வழங்கப்படுகையில், ஒரு பண்டத்தின் உபேட்சையோடு மிகச்சிறிய பாகத்தை ஓர் உற்பத்தியாளனாவது ஒரு தொகை உற்பத்தியாளர்களாவது ஆக்கும் பொழுது, அப்பண்டத்தின் மிகப்பெரிய பாக மொன்றை ஆக்கும் உரிமை உற்பத்தியாளனுக்கேயாம்.

களை ஆக்கும் தனியுரிமையாளன் என்று வைத்துக்கொண்டு, அவன் தன் இலா பத்தை உயர்த்திக்கொள்ள முயலும் விதத்தை ஆராய்ந்துபார்ப்போம். கீழ்க் காணும் அட்டவணையில் தரப்படுவதுபோன்று, அப்பிள்ளைக் கைவண்டிகளுக் கான முழுக்கேள்வி அட்டவணையொன்றை நாம் செய்துகொள்வோம்.

ஒன்பதாவது அட்டவணை

| விலை ரூபாவில் | வண்டிகள் கேட்கப்படும் கணக்கு |
|---|---|
| 50 | 1000 |
| 48 | 2000 |
| 46 | 3000 |
| 44 | 4000 |
| 42 | 5000 |
| 40 | 6000 |
| 38 | 7000 |
| 36 | 8000 |
| 34 | 9000 |
| 32 | 10000 |
| 30 | 11000 |
| 28 | 12000 |
| 26 | 13000 |
| 24 | 14000 |

இவ்வுற்பத்தியாளன் ஒரு தனியுரிமையாளனுதலால், அதாவது ஒரேயொரு உற்பத்தியாளனுதலால், 10,000 பிள்ளைக் கைவண்டிகளை விற்க அவன் எண்ணின், ஒன்றை 32 உரூபாவாக விற்கக்கூடுமென இக்கேள்வியட்டவணையினுற் புலப்படும். அவன் இதனினும் குறைந்த தொகையை விற்கத் தீர்மானித்தால், அவனுல் கூடிய விலைக்கு விற்கவும் இயலும். அவன் வண்டிகளைக் கூடுதலாக விற் கத்தீர்மானித்தால் விலையைக் குறைக்க வேண்டும். இவ்வண்ணம் அவன் 8,000 வட்டிகளை விற்கத் தீர்மானித்தால், ஒவ்வொன்றையும் 36 உரூபாவாக முழுவ தையும் விற்கலாம். அவன் 12,000 வண்டிகளை விற்கத் தீர்மானித்தால், ஒன் றின் விலையை 28 ரூபா வரை குறைக்க நேரும். ஆகையால், அவன் விற்க எண் ணும் தொகையை அவன் எண்ணும் விலைக்கு விற்க வியலாது. அவன் ஒரு தொகையை விற்க எண்ணினுல், அதை விற்கக்கூடிய விலையைக் கேள்வியட்ட வணை காட்டும். அவன் ஒரு விலைக்கு விற்கத் தீர்மானித்தால், கேள்வியட்ட வணையானது, அவ்விலைக்கு அவனுல் விற்கக்கூடிய தொகையையும், காட்டும்.

இவ்வண்ணம், முழுக் கேள்வியட்டவணை ஒரு தனியுரிமையாளனுடைய தனிக்கேள்வியட்டவணையுமாகும். இது ஒரு நிறைபோட்டியிலே ஆக்குவோனுடைய நிலைமைக்கு முற்றும் மாறானதென்று விளங்கும். முழுக் கேள்வியட்டவணை தனியுரிமையாளன் பலவிதமான அளவில் விற்கக்கூடிய சாதாரண விலைகளைக் காட்டுகின்றது. ஒன்றை 32 உரூபாவாக 10,000 பிள்ளைக்கைவண்டிகள் வாங்குவதைக் கேள்வியட்டவணை காட்டினால், இவ்விலை 10,000 வண்டிகளை விற்கக்கூடிய சாதாரண விலையாகும். இவ்வண்ணம் முழுக்கேள்வியட்டவணையும் தனியுரிமையாளனுக்குத் தெரிப்பது, அவனுடைய தனிக்கேள்வியட்டவணையைப்போலன்றி அவனுடைய சாதாரண வருமான அட்டவணையையுமேயாம். ஆகையால், ஒரு பண்டத்தின் முழுக் கேள்வியட்டவணைமூலம் ஒரு தனியுரிமையாளன் தன்னுடைய வருமான அட்டவணையை அமைக்க இயலும். கீழ்க்காணும் அட்டவணையானது, பிள்ளைக்கைவண்டிகளையாக்கும் ஒரு தனியுரிமையாளனுடைய வருமான அட்டவணையாகும். பிள்ளைக் கைவண்டிகளுக்காகக் காட்டப்பட்ட கேள்வியட்டவணைமூலம் இது அமைக்கப்படுகின்றது.

பத்தாவது அட்டவணை

| விற்கப்படும் வண்டிகளின் கணக்கு | சாதாரண விலை, அல்லது ஒரு வண்டியின் வருமானம் | முழு வருமானம் | ஒரு வண்டியின் எல்லை வருமானம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 1000 | 50 | 50,000 | — |
| 2000 | 48 | ७6,000 | 46 |
| 3000 | 46 | 138,000 | 42 |
| 4000 | 44 | 176,000 | 38 |
| 5000 | 42 | 210,000 | 4 |
| 6000 | 40 | 240,000 | 30 |
| 7000 | 38 | 266,000 | 26 |
| 8000 | 36 | 288,000 | 22 |
| 9000 | 34 | 306,000 | 18 |
| 10000 | 32 | 320,000 | 14 |
| 11000 | 30 | 330,000 | 10 |
| 12000 | 28 | 336,000 | 6 |
| 13000 | 26 | 338,000 | 2 |
| 14000 | 24 | 336,000 | 2 |

தனியுரிமையாளன் ஆக்கத்தை அதிகரிக்கும்பொழுது ஒவ்வொரு அலகாக, அவன் பெறக்கூடிய சாதாரண வருமானத்தையும் எல்லை வருமானத்தையும்

இவ்வட்டவணை காட்டும். அவன் ஆக்கத்தை அதிகரிக்க இயலுவது 1000 அலகு களாகவன்றி அதற்குக் குறையாது என்பதை நாம் காண்கிறோம். அவன் 9,000 வண்டிகளிலிருந்து 10,000 வரை ஆக்கத்தை அதிகரிக்கும்பொழுது அவனு டைய சாதாரண வருமானம் 32 உரூபாவாகும். அப்பொழுது, அவனுடைய எல்லை வருமானம் 14 உரூபாவாகும். அதாவது ஒன்பதாயிரம் அலகன்றிப் பத் தாயிரம் ஆக்கும்பொழுது, முழு வருமானத்துக்குண்டாகும் மொத்தத்தை அதிகமாக ஆக்கப்பட்ட அலகின் அளவினல் பிரிக்க உண்டாகும் கணக்கு $\frac{320,000-306,000}{1,000}$ ஆகும். இவ்வண்ணம் பலவிதமான பிரமாணங்களை ஆக்கு வதிலே ஒவ்வோர் அலகின் எல்லை வருமானம் இவ்வட்டவணைக் கடைப்பந்தி யில் காட்டப்பட்டிருக்கின்றது.

தனியுரிமையாளன் வருமான அட்டவணையைக் கணக்கிட்டு முடிக்கும் பொழுது, அவனுடைய செலவட்டவணையை ஆராய்ந்து அதிகப்படியாக இலா பங் கிடைக்கும் வண்ணம் ஆக்கத் தொழில் அளவைக் கணக்கிட்டுக்கொள்ள லாம். கீழ்க்காணும் அட்டவணையில் தரப்படுவது அவனுடைய செலவட்டவணை யென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

**பதினோராவது அட்டவணை**

பிள்ளை வண்டிகளை ஆக்குவதன் செலவட்டவணை

| கணக்கு | முழுச் செலவு | ஓரலகின் சாதாரண செலவு | ஓரலகின் எல்லைச் செலவு |
|---|---|---|---|
| 100 | 48,000 | 48 | — |
| 2000 | 92,000 | 46 | 44 |
| 3000 | 132,000 | 44 | 40 |
| 4000 | 168,000 | 42 | 36 |
| 5000 | 200,000 | 40 | 32 |
| 6000 | 228,000 | 38 | 28 |
| 7000 | 252,000 | 36 | 24 |
| 8000 | 273,000 | 34 | 21 |
| 9000 | 315,000 | 35 | 42 |
| 10000 | 380,000 | 38 | 65 |
| 11000 | 484,000 | 44 | 104 |

முன்குறித்த இவ்வட்டவணை தனியுரிமையாளனுடைய செலவட்டவணையின் பாகமென நாம் கருதுவோம். இங்கு பலவிதமான அளவுகளில் ஆக்கும்பொழுது உண்டாகும் சாதாரண செலவும் எல்லைச் செலவும் காட்டப்பட்டுள்ளன. அவ

வருவாய்ப் பங்கீட்டை விவரத்தோடு ஆராய்வோம். முதலில் வேதனங்கள் தீர்மானமாகும் மாதிரியை ஆலோசிப்போம். வேதனமென்பது சிரமமாகிய ஆக்கச் சாதனத்துக்குக் கிடைக்கும் ஆதாயமே. வேதனம், சம்பளம் தாவு முதலிய சிரமத்துக்குக் கிடைக்கும் ஆதாயங்களெல்லாம் பொருளியற் கலையிற் "சம்பளம்" என்ற விசாலமான சொல்லாற் குறிக்கப்படும். ஒருவன் சேவையை விற்றுச் சம்பளத்தைப் பெறுவான். எனவே, சம்பளம் சிரமத்தின் விலையாகக் கொள்ளப்படும்.

போட்டியுள்ள பொருளியல் முறையிலே கிரமத்தின்விலை ஏனைய எல்லாவற்றின் விலையைப்போல, கேள்வியும் நிரம்பலுமாகிய இரண்டு வலுவேகங்களால் தீர்மானிக்கப்படும். சம்பளம் எப்படித் தீர்மானிக்கப்படும் என்று தெரிந்து கொள்ள, கிரமக் கேள்வியும் சிரம நிரம்பலும் எப்படித் தீர்மானிக்கப்படும் என்று அறிதல்வேண்டும்.


சம்பளமானது சிரமத்தின் விலை என்று நிச்சயிக்கும் பொழுது, பல விதமான வகைகளுக்குரிய கிரமங்களை ஒன்றுக்குமேல் ஒன்றாக அமைத்து ஞாபகத்தில் இருத்தலாம். சிரமங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துக்கூறல், உண்மை நிலையை வெளிப்படையாக உரைத்தலாகாது. ஆகையால், சிரமத்தை ஐவகையாகப் பிரிக்க இயலுமென்று சில பொருளியலறிஞர்கள் எண்ணுகிறார்கள். முதலாவதாகப் பயிற்சியில்லாத தொழிலாளர் சிரமம்; இரண்டாவதாக, அரைப் பயிற்சித் தொழிலாளர் சிரமம்; மூன்றாவதாக, பயின்ற தொழிலாளர் சிரமம்; நான்காவதாகக் கணக்கறிஞர் சிரமம்; ஐந்தாவதாகப் பாலர்களின் சிரம். ஆகச் சிரமத்தை ஐந்துவகையாக விரித்துரைக்கலாம். இவ்வொவ்வொரு கூட்டத்துள்ளும் சம்பள வீதத்திற் பெரும்பாலும் சமத்துவமிருக்கின்றது. ஆனால், தனி வேற்றுமைகளும் உள. உதாரணமாக, கிராமத்துக் கடையொன்றில் ஒரு விற்பனையாளனுக்குக் கொழும்பில் உள்ள ஒரு பெரிய கடையின் விற்பனையாளனைக் காட்டிலும் மிகவும் குறைந்த சம்பளம் கிடைக்கும். சுதேச மொழிப்பள்ளிக் கூடத்து ஆசிரியருக்குக் கிடைக்கும் சம்பளம், ஆங்கிலம் மூலம்படிப்பிக்கும் ஆசிரியருக்குக் கிடைக்கும் சம்பளத்தை நியமிக்கும் முறையை ஆராய்ந்து பார்த்தால் விளங்கும். இவ்விடத்தில் உழைப்பு என்பதனால் கருதப்படுவது :— அதில் ஈடுபட்ட எல்லாத் தொழிலாளர் சார்பாக ஒரேதன்மையுள்ள நடைபெறுதலாம். போட்டியுள்ள ஒரு முறையிலே ஏதாவதோர் உழைப்பைப்பற்றிச் சம்பளப் பிரமாணம் நியமிக்கப்படுவது, அவ்வுழைப்பின் சிரமக் கேள்வியின் படியும் சிரம நிரம்பலின் படியுமேயாம்.

முதலில் நாம் சிரமக்கேள்வியை ஆராய்ந்து பார்த்தோம். வேறொரு ஆக்கச் சாதனத்தின் கேள்வியைப் போலவே சிரமக்கேள்வியும் வழிவந்த தேவையாகும். யாதாவதொரு பண்டத்தை நுகர்வதனால், திருத்தியைப் பெறும் பொருட்டு விலை கொடுத்து வாங்கும் நுகர்வோன் கடைசி நுகர்வோனாவான். உதாரணமாக, தன் திருத்திக்காக ஒரு கிண்ணம் தேனீரை விலைகொடுத்து வாங்குகிறவன் கடைசி நுகர்வோனென்பதைக் காணலாம். நேர்மையுள்ள தனிச்

சேவையைத் தவிர, ஆக்கத்துக்குச் சிரமத்தை விலைகொடுத்து வாங்குகிறவன் அதைச் சிரமப்பொருட்டே வாங்குகிறனின் அல்லன். அவனுக்குத் தொழிலாளர் தேவை. அவர்களிலிருந்து ஆக்கத் தொழில்களைப் பெறக்கூடும். அவன் இவ்வாக்கத் தொழில்களை அளப்பது, அவை வழியாகத் தான் அதிகமாக உற்பத்தி செய்யும் பண்டப் பரிமாணத்தையும் விற்பதனுல் தன் வருமானத்துக்கு உண்டாகும் ஏற்றத்தையும் சிந்தித்தேயாம். ஆகையால், அவனுடைய தொழிலாளர் கேள்வி நிச்சயிப்பதும், அவன் சிரமத்தை விலைகொடுத்து வாங்குவதும், சிரமத்தைப் பயன்படுத்தி அவனுடைய ஆக்கப் பொருளை விற்கவியலுமாதலாலேயாம். நாம் முன் குறித்த விசேடத்தைத் தவிர, ஓர் ஆக்கச் சாதனமாகச் சிரமத்தின் மேலுள்ள கேள்வியை வழிவந்த தேவை என்று சொல்வது இக்காரணத்தினுலேயாம்.

ஒருவிதமான உழைப்பில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைத் தொழில்கள் சிலவற்றின் சேவையில் ஈடுபடுத்தலாம். உதாரணமாக, தச்சரை வீட்டுத் தளவாடத் தொழிலிலும் கப்பல்கட்டும் தொழிலிலும் வேறு தொழில்களிலும் ஈடுபடுத்தலாம். எளிதில் விளங்கும் பொருட்டு, ஒரு தொழிலில் முயற்சியாளர் மட்டும் கேட்கும் ஒரு சிரமவிசேடத்தைப் பற்றி யோசித்துப் பார்ப்போம். சேர்மனியைப் போன்ற ஒரு நாட்டில், நிலக்கரிச் சுரங்கம் அறுக்கிறவர்கட்கு நிலக்கரித் தொழிலில் முயற்சியாளர்கள் தேவைப்படுவார்கள். ஆதலால், நிலக்கரிச் சுரங்கமறுக்கிறவர்களின் கேள்வி, நிலக்கரிப் பொருட்டுள்ள கேள்வி வழிவந்த தேவையாகும். முதலில், நாம் நிறைபோட்டியுள்ள ஒரு சந்தையிற் சிரமக் கேள்வியை அவதானிப்போம். நிலக்கரிச் சந்தை ஒரு நிறை போட்டியில் நிகழுமென்று கருதுவோம். அப்பொழுது, ஒவ்வொரு தனிமுயற்சியாளனும் தான் உற்பத்தி செய்யும் முழு நிலக்கரிப் பிரமாணத்தையும் சந்தை விலைக்கு விற்றுக்கொள்ளலாம். மேலும், அவனுடைய ஆக்கவளவு குறையும்பொழுதும் கூடும்பொழுதும் விலை அதிகம் மாறுவதில்லை. தொழிலாளர் அதிகமான தொகையைச் சேவைக்கு இணைத்துக் கொள்வதனுல் ஆக்கச் செலவுக்கு அவர்களுடைய சம்பளம் கூடுமன்றி வேறுயாதும் கூடுவதில்லை. சம்பளங்கள், வகையினுலேயே (அதாவது நிலக்கரியாலேயே) செலுத்தப்படுமென்பதையும் நாம் கருதுவோம். இப்படிப்பட்டவொரு தத்துவத்திலே, முயற்சியாளன் இன்னுமொரு சுரங்கமறுக்கிறவனைச் சேவைக்கு இணைத்துக்கொள்ளின், அவனுடைய எல்லைச் செலவானது, முன் கூறிய சுரங்கமறுப்போன் பொருட்டுச் சம்பளமாகச் செலுத்தவேண்டிய நிலக்கரியின் தொன் நிறை கணக்காகும். கடைசிச் சுரங்கமறுப்போனைச் சேவைக்கு இணைத்துக் கொள்வதன் காரணமாக, அதிகமாகக் கிடைத்த நிலக்கரியின் தொன் கணக்கு அச்சுரங்க மறுப்போனின் எல்லை வினைவாகக் கொள்ளப்படும். ஆகையால், எல்லை வினைவு என்பதனுற் புலப்படுவது, முழு ஆக்கத்துக்குண்டாகும் கூட்டுத்தொகையாகும். இப்பொழுது, கடைசிச் சுரங்க மறுப்போனைச் சேவைக்கு அமர்த்திக் கொள்வதனுற்றுன் அது உண்டானது. (ஒருவன் மேலும் மேலும் தொழிலாளர்களைச் சேவைக்கு இணைத்துக்கொள்ள வேண்டிய

சமயங்களிலும் இம்மூலதருமத்தை இப்படி வெளியிடலாம். எல்லை விளைவானது அற்ப தொகையான தொழிலாளர்களை அதிகரிக்கும்பொழுது, ஒவ்வொரு தொழிலாளன் சார்பாக, முழு ஆக்கமானது மாறுபாட்டின் அளவாகும்). நம் உதாரணத்தில் சுரங்கமறுக்கிறவர்களுக்குச் செலுத்துவது பொருள் வகையினாலாதலால், உற்பத்தியாளன் இலாபத்தை உயர்த்திக்கொள்வது கடைச் சுரங்கமறுப்போனின் எல்லை விளைவு, எல்லைச் செலவுக்கு, அதாவது அச்சுரங்கமறுக்கிறவனுடைய சம்பளத்துக்கு (இந்நிலையிற் செலுத்தப்படுவது நிலக்கரியே) நிகராகும். சுரங்கமறுக்கிறவர்களின் தொகை, சேவைக்கு அமைத்துக் கொள்வதனால் ஆகும். அவன் சேவைக்காக அமைத்துக்கொண்ட மனிதர்களின் தொகை




சுரங்கமறுப்போர் தொகை

இதற்குக் குறைந்தால், மேலும் மனிதரை அமைத்தல் அவன் இலாபம்பெற உதவியாகும். இப்புதிய மனிதர்களின் ஆக்கப் பெறுமானம், அவர்களுடைய சம்பளங்களிலும் கூடும். அவ்வண்ணமே, அவன் மேலதிகமாகச் சுரங்கமறுக்கிறவர்களைச் சேவைக்கு அமைத்தால், அவர்களுட் சிலரைப் பின்னர் நீக்குதல் அவனுடைய இலாபத்துக்கு ஏதுவாகும். அவர்களுக்குச் செலுத்த வேண்டிய சம்பளம் அவர்களுடைய ஆக்கத்தைக் காட்டிலும் அதிகரிக்கக்கூடும். இதை ஒரு அட்டவணை (ரேகை) மூலமும் விரித்துரைக்கலாம்.

எ. வி. வளைகோட்டினால் காட்டப்படுவது, மேலும் மேலும் சுரங்க மறுப்போரை அமைக்கும்பொழுது, சிரம அலகுகளின் எல்லைவிளைவு மாறுபடும் என்பதும், ஏனைய ஆக்கச் சாதனங்கள் மாறாமல் இருக்க, மேலும் மேலும் சுரங்கமறுப்போரைச் சேவைக்கு எடுக்கும் பொழுது, அவர்களுடைய சம்பளங்கள் மாத்திரம் முழுச்செலவுக்கு உட்படும் என்பதுமே. ஆகையால், குறையும் பயன் விதியின்படி மேலும் மேலும் சுரங்கமறுப்போரைச் சேவைக்கு எடுக்கும் பொழுது, ஒரு வரையறைக்குப்பின், சிரமத்துக்குண்டாகும் பயன் குறைந்து போகும். இவ்வண்ணம் ஒ. தொழிலாளர்களை இணைக்கும்பொழுது எல்லைவிளைவு, "வி" ஆகும். ஒரு சுரங்கமறுப்போனின் சம்பளப் பிரமாணம் ஒருவாரத்துக்கு மூன்று தொன் நிலக்கரி என்று கருதுவோம். அப்படியானால், சுரங்கமறுப்போ

ரின் ஓ. நி, **கணக்கைச்** சேவையில் இணைத்துக்கொள்ளுதல் **உற்பத்தி**யாளனுடைய இலாபத்துக்கு ஏதுவாகும். அவன் சுரங்கமறுக்கிறவர்களின் ஓ, நி, தொகையைச் சேவையில் கொள்ளும் பொழுது, அவனுடைய முழு ஆக்கம் நிலக்கரித் தொன் ஓ, ஆ, ஏ, நி, பிரமாணமாகும். அவனுடைய சம்பளச்சீட்டு ஓ, ப, ப, நி, ஆகும். அப்பொழுது எஞ்சும் அளவு ஆ, ப, ப, ஆகும். ஒரு சுரங்கமறுக்கிறவனுக்கு மூன்று தொன் நிலக்கரி சம்பளம் கிடைக்கும்பொழுது, இதற்குக்கூடவோ, குறையவோ சுரங்கமறுக்கிறவர்களைச் சேவைக்கெடுத்தல் உற்பத்தியாளனுக்கு நட்டத்துக்கேதுவாகும். ஒரு மனிதனுக்கு மூன்று தொன் சம்பளத்தோடு, அவன் சுரங்கமறுக்கிறவர்களின் ஓ, நி, தொகையைச் சேவைக் கெடுத்தால் சம்பளங்களைச் செலுத்திய பின், அவனுக்கு எஞ்சும் பிரமாணம் ஆபப, ஐக் காட்டிலும் குறைவாகும். உண்மையாகவே, இலாபம் இதைக்காட்டிலும் "வி" பிரமாணம் குறையும். சம்பளம் மூன்று தொன் ஆனால், தொழிலாளர்களை ஓ, நி, கணக்கில் இணைத்துக் கொள்ள அவனுடைய இலாபம் ஆ. ப ப, உக்குக் குறைவாகும். ஆகையால், ஓ, நி, கணக்கை அவன் ஈடுபடுத்துவான். அதிக மனிதர்களைச் சேவைக்கு எடுப்பதில் உற்பத்தியாளன் செலவிடும் அளவு அவர்களுடைய சம்பளமானால், ஒரு மனிதனுக்கு மூன்று தொன் நிலக்கரியின் சம்பளத்தோடு உற்பத்தியாளன், ஓ, நி, ஆட் கணக்கைச் சேவைக்கு இணைத்துக் கொள்வான். அவ்விலக்கத்திலே கடைசியான சுரங்கமறுப்போனின் எல்லை விளைவு அவனுடைய சம்பளத்துக்கு, அதாவது எல்லைச்செலவுக்குச் சமமாகும். அவ்வண்ணமே சம்பளம் நான்கு தொன்னானால் உற்பத்தியாளன் சுரங்கமறுப்போரின் ஓ, நி, கணக்கை வேலைக்கு அமைத்துக் கொள்வான். அவ்விலக்கத்திலே அவனுடைய எல்லைச்செலவு கடைசித் தொழிலாளியின் எல்லை விளைவுக்கு நிகராகும்.

சுரங்கமறுப்போருக்குக் கரியினாலேயே சம்பளஞ் செலுத்துவதை இது வரை கண்டோம். அப்படியல்லாமல், சுரங்க மறுப்போரின் சம்பளங்கள் பணத்தினாற் செலுத்தப்படுமாயினும் நம் கொள்கையில் மாற்றமுண்டாகாது. நிலக்கரித் தொன் ஒன்றின் விலை ஒன்பது தொயிச்சு மாக்கு என்று கருதுவோம். அப்படியெனில், ஒரு வாரத்துக்கு ஒரு சுரங்கமறுக்கிறவனுடைய சம்பளம் இருபத்தேழு மாக்குக்கள் என, உற்பத்தியாளன் சுரங்கமறுக்கிறவர்களின் 'ஓநி.' கணக்கை வேலைக்கு அமைத்துக் கொள்வான். சம்பள அளவு 36 தொயிச்சு மாக்கு என்றால், உற்பத்தியாளன் சுரங்கமறுக்கிறவர்களின் ஓ. நி, தொகையை வேலைக்கு அமைத்துக்கொள்வான். வேறுமுறையிற் கூறின், கடைசிச் சுரங்க மறுப்போனுடைய எல்லைவிளைவின் விலை மதிப்பு, உற்பத்தியாளனுடைய எல்லைச் செலவுக்கு (அதாவது கடைசிச் சுரங்கமறுப்போனைச் சேவைக்கு அமைப்பதனால் அவனுடைய சம்பளச் சீட்டுக்குண்டாகும் முழுத்தொகைக்கு) சமமாகும் அளவுக்கு மாத்திரமே உற்பத்தியாளன் சுரங்கமறுப்போரைச் சேவைக்கு அமைத்துக் கொள்வான். மேலும், நாம் அறிந்து கொள்ளவேண்டிய காரணமுள்ளது. அதாவது, முன்கூறிய சமயத்தில் நிலக்கரியின் விலை ஏறினால், முன்னைக்

காட்டிலும் மேலாகச் சுரங்கமறுப்போரின் தொகையை அமைத்துக் கொள்ள லாம். ஒரு தொன் நிலக்கரி ஒன்பது தொயிச்சுமாக்குக்கள் முதல் பன்னிரண்டு வரை கூடிற்றெனக் கருதுவோம். சம்பளவளவு 27 தொயிச்சுமாக்கு என்றால், ஒரு தொழிலாளி ஒரு தொன் நிறை நிலக்கரியை 2¼ ஆகச் சேர்க்கும்பொழுது அவனுடைய சம்பளவளவுக்கு நிகரான ஆக்கத்தைச் சம்பாதிப்பான். ஆகையால் முயற்சியாளன் ஒரு தொழிலாளனுடைய எல்லை ஆக்கம் 2¼ தொன் ஆகும் வரை உயர் எல்லை ஆள் தொகையை அமைப்பான். விலை அதிகரிக்கு முன், அதாவது தொன் ஒன்றின் விலை 9 தொயிச்சுமாக்குக்களாக இருக்கையில், ஒரு தொழிலாளனுடைய எல்லை ஆக்கம் 3 தொன் ஆகும்பொழுது, அவன் ஆள் அமைத்தலை நிறுத்துவான். ஆனால், விலை 12 தொயிச்சுமாக்குக்களுக்கு ஏறும் பொழுது, அதற்கு மேலாகத் தொழிலாளர்களை அமைத்தல் அவனுக்கு இலாப மாகாது. இவ்வண்ணம் நிலக்கரி விலை குறையும்பொழுது சுரங்கமறுப்போரின் இணைக்கும் தொகை குறைதலைக் காணலாம். நாம் இதுவரை விரித்துரைத்த வற்றைப் பின்வருமாறு சுருக்கலாம். ஒரு நிறை போட்டியில் தனியுற்பத்தி யாளன் கடைசிச் சுரங்கமறுப்போனின் எல்லை விளைவு தன்னுடைய சம்பள வளவுக்குச் சமமாகும்வரையே சுரங்கமறுப்போரை இணைப்பான். ஆகையால், போட்டியுள்ள ஒரு தொழிலில் முயற்சியாளன் சுரங்கமறுப்போரின் சம்பள அளவின்படி சுரங்கமறுப்போரின் ஒரு தொகையைக் கேட்பான். சம்பளவளவு அதற்குக் கூடினால், முன்னைக்காட்டிலும் அத்தொழிலாளர் ஒரு குறைந்த விதத்தையே கேட்பர்.

ஒரு நிறைபோட்டியின் கீழ் தனி நிலக்கரியுற்பத்தியாளனொருவனுடைய சிர மக் கேள்வியையே இதுவரை ஆராய்ந்து பார்த்தோம். தனியுற்பத்தியாள ருடைய சிரமக்கேள்வியின் மொத்தமானது, நிலக்கரித் தொழிலிற் சுரங்கமறுப் போருக்குள்ள முழுக்கேள்வியாகும். இவ்வண்ணம், பலவிதமான சம்பள அள வுகளுக்கு நிலக்கரித் தொழிலில் சுரங்கமறுக்கிறவர்களின் கேள்வி வெவ்வேறா கும் மாதிரியைக் காட்டும் ஒரு கேள்வி வளைகோட்டை அமைக்கலாம். இவ்விடத் திலே, ஒரு குறைந்த சம்பள அளவுக்குச் சுரங்கமறுப்போரின் அதிகமான தொகையை அமைப்பதும், அதிகச் சம்பளவளவுக்குச் சுரங்கமறுப்பேரின் குறைந்த தொகையை அமைப்பதும் காணலாம். ஆகையால். அதிகமான சம்பள வளவைக் காட்டிலும் குறைந்த சம்பள வளவுக்குக்கூடிய தொழிலாளர்களை வேலைக்கு அமைத்துக் கொள்ளலாம்.

சுரங்கமறுப்போரைப்பற்றிய நம் உதாரணத்தில், மேலும் மேலும் மனிதரை வேலைக்கு அமைத்தபொழுது, ஆக்கச் செலவுக்கு அவர்களுடைய சம்பளம் மாத் திரம் சேர்ந்ததென கருதினோம். உண்மையாக, சுரங்கமறுக்கிறவனுக்குத் தன் கையால் மட்டும் வேலை செய்யவியலாது. அவனுக்கு ஓர் உபகரணத் தொகுதி யும் அளிக்கவேண்டும். அப்படியானால். சுரங்கமறுக்கிறவனும் அவனுடைய உப காரணங்களும் ஓர் அலகாக உற்பத்தியாளனால் மதிக்கப்படும். அப்பொழுது, அவன் அவ்வலகின் எல்லை ஆக்கத்தின் மதிப்பு, எல்லைச் செலவுக்குச் சமமாகும்

வரை அதிகமான அலகுகளை வேலைக்கு அமைத்துக்கொள்வான். உபகரணங் களுக்கு உற்பத்தியாளன் பணத்தைச் செலுத்தவேண்டும். ஆகையால் சுரங்க மறுப்போனுக்குக் கிடைப்பது, கடைசியான அலகு எல்லை ஆக்கத்தின் விலைமதிப் பிலிருந்து, அவன் உபயோகிக்கும் கருவிகளின் செலவைக் குறைக்கும் பொழுது மிஞ்சும் பிரமாணமே. இது, தேறிய எல்லை விளைவு என்று சொல்லப்படும். ஆகை யால், ஒரு உற்பத்தியாளன் மனிதரைச் சேவைக்கு எடுப்பது, கடைசி மனித னுடைய தேறிய எல்லை விளைவு அவனுடைய சம்பளங்களுக்குச் சமமாகு மட்டுமே என்க.

தொழிலாளர்களுக்குச் சம்பளங்கள் செலுத்துதற்கும் ஆக்கத்தை விற்றற்கு மிடையில் சிலகாலம் கழியும். உற்பத்தியாளர்கள் நிலக்கரி விற்றுப் பணத்தை எடுக்கு முன்னர், சுரங்கமறுப்போர் தாங்கள் செய்த வேலைகளுக்குச் சம்பளங் கேட்பர். சாதாரணமாக, முயற்சியாளர் தங்கள் நிலக்கரிக்குரிய பணமெல்லா வற்றையும் பெறமுன், சுரங்கமறுப்போர்க்குச் சம்பளம் செலுத்துகிறபடியால். அவர்களுக்கு அதன் பொருட்டு வட்டி கிடைக்க வேண்டும். ஆகையால், ஒரு தொழிலாளியின் தேறிய எல்லை விளைவு மூலம், தொழிலாளனுடைய சம்பளமும், அது முதலிற் கொடுக்க வேண்டிய ஒரு கொடையானதால், அதன் பொருட்டு, அக்காலவரையறையின்படி, வட்டியின் ஒரு அளவும் செலுத்திவிட முடியு மாலன்றி முயற்சியாளன் தொழிலாளர்களைச் சேவைக்கு அமைக்கமாட்டான். ஆகையால், சம்பளஞ் செலுத்துவதிலே, எசமானன் சுரங்கமறுப்போரின் தேறிய எல்லை விளைவைக் கழிப்பது சொல்லப்படும். கடைசியான மனிதனுடைய கழித்த தூயவாக்கத்தின் விலைமதிப்பு அவனுக்குச் செலுத்த வேண்டிய சம்பளவளவுக் குச் சமமாகும்வரை, முயற்சியாளன் மேலும் மேலும் சுரங்கமறுப்போரைச் சேவைக்கு எடுப்பதைக் கருதலாம். கடைசிச் சுரங்கமறுக்கிறவனுடைய கழித்த எல்லைத் தூய ஆக்கத்தின் விலைமதிப்பு அவனைச் சேவைக்கு எடுப்பதால் உற் பத்தியாளனுக்குக் கிடைக்கும் எல்லைவருவாயாகும். ஒரு நிறை போட்டியின் கீழ் உற்பத்தியாளன் செலுத்தவேண்டிய சம்பளங்கள் சேவைக்கேற்ற மனிதர் களின் தொகை எவ்வளவாயினும், அதனால் அத்துணை அதிகம் மாறுமையினாலே யாம். ஆகையால், ஒரு நிறை போட்டியிலே தொழிலாளரை அமைக்கும் கேள்வி. இரண்டுகாரணங்களின் மேல் தீர்மானிக்கப்படும். அவற்றுள் ஒன்று தொழிலா ளர் கூட்டத்தில் சம்பளமாகும். மற்றையது, ஒவ்வொரு வியாபார தாபனத் தின் ஈறுன தொழிலாளனுடைய கழித்த தேறிய எல்லை விளைவாகும். ஒவ்வொரு உற்பத்தியாளனும் தன் தொழிலில் ஈற்றுத் தொழிலாளனுடைய கழித்த தேறிய எல்லை விளைவு, அவர்களின் சம்பளவளவுக்குச் சமமாகும்வரை அவர்களை அமைப் பான்.

ஒரு தனியுரிமையின் கீழ் எனின், தீர்மானிக்க வேண்டிய இன்னொரு சிக்க லுண்டு. ஒரு நிறைபோட்டியின் கீழ் தனியுற்பத்தியாளனொருவன் ஆக்கும் அளவை மாறுவதனால் விலையானது தோற்றக்கூடியவளவு மாறுபடாதென அறி வோம். ஆகையால், தனியுற்பத்தியாளனொருவன் ஆக்கும் எல்லாவற்றையும்

சந்தை விலைக்கு விற்கக் காத்திருப்பான். எனவே, கூடுதலான மனிதனுடைய எல்லை ஆக்கத்தின் விலை மதிப்பை ஒத்துப் பார்க்கும்பொழுது, அவன் அத்தாய வெல்லை ஆக்கத்தின் விலையை மதிப்பது, நடைமுறைச் சந்தை விலையை ஒப்பிட்டே யாம். உற்பத்தியாளன் ஒரு தனியுரிமையாளனுயின், அவன் ஆக்கும் எல்லாவற்றையும் நிகழும் சந்தை விலைக்கு விற்கமாட்டான். விலையைக் குறைப்பதனுலே அவன் அதிகமாக விற்றுக் கொள்வான். ஒரு தனியுரிமையாளன் இன்னும் 1,000 மனிதரை நிலக்கரித் தொழிலுக்கு அமைத்தல் இலாபத்துக்கு ஏதுவாகுமோ என்று கருதும் பொழுது, அதனுல் ஆக்கம் அதிகரிப்பதையும், இவையெல்லாம் வற்றையும் விற்பின், தொன் ஒவ்வொன்றும் குறைந்த விலைக்கு விற்க வேண்டுமென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்வான். தனியுரிமையுடைய ஒரு முயற்சியாளன் 50,000 தொன் நிலக்கரி சேர்த்து ஒரு தொன்னை 10 தொயிச்சு மாக்குகளாக எல்லாவற்றையுமே 50,000 தொயிச்சு மாக்குகளுக்கு விற்பதாகக் கருதுவோம். இன்னும் 1,000 மனிதரை வேலைக் குஅமைத்துக் கொண்டால், முழு ஆக்கம் 60,000 தொன்னுகும்வரை அதிகரிப்பதையும் ஒரு தொன் ஒன்பது தொச்சு மாக்குக்களாக எல்லாவற்றையுமே விற்க இயலுமென்பதையும் அறிக. 50,000 தொன் ஆக்கும் பொழுது அவனுடைய முழுவருமானம் 500,000 தொயிச்சுமாக்குக்களாகும். 60,000 தொன் உற்பத்தி செய்யும் பொழுது, முழுவருமானம் 540,000 தொயிச்சுமாக்குக்களாகும். ஆகையால், ஈருன 10,000 தொன்னின் எல்லை வருமானம் 40,000 தொயிச்சு மாக்குக்களாகும். இவ்வாயிரம் மனிதர்களைச் சேவைக்கு எடுப்பதனுல் சம்பளந் தவிர வேறு செலவுகள் உண்டாகாவிடின், முயற்சியாளன் இவ்வாயிரம் மனிதர்களையும் சேவைக்கமைப்பது அவர்களுடைய கழித்த சம்பளச் சிட்டு 40,000 தொயிச்சுமாக்குக்களுக்குக் குறைந்தால் மட்டுமே.

கேள்வியைப் பற்றிய காரணங்களைஇப்பொழுது நாம் சுருக்கமாகக் கூறுவோம். இது ஓர் உழைப்பின் சிரமக்கேள்வி வழிவந்த தேவையாகும். முயற்சியாளர் எத்தனிப்பது, சிரமத்தை வேலைகளுக்கு அமைத்துக் கொண்டு, அதன் உதவியினுல் ஆக்கும் பொருள்களை விற்று, இலாபத்தைப் பெறுவதற்கேயாம். எவ்விதமான நிலைமையின் கீழ் அவன் ஆக்கினுலும், அவன் அதிக வேலைக்காரர்களை அமைப்பது. அப்படிச்செய்வதனுல் வருமானம், செலவிலும் கூடினுல் மட்டுமே. மேலும், அவன் கூடியவளவு மனிதர்களை வேலைக்கு அமைப்பது, மொத்தச் செலவு மொத்தவருமானத்துக்குச் சமமாகும் வரையுமே. ஒரு நிறைபோட்டியிலே, இவ்வரையறைக்கு அவன் வருவது, அவன் அதிகமாகச் சேவைக்கு அமைக்கும் மனிதரின் சம்பளம் அவர்களுடைய கழித்த தாய எல்லை ஆக்கத்தின் விலைமதிப்பிற்கு நேர் சமமாகும் பொழுதேயாம். தனியுரிமையில் அவன் பெரும்பாலும் மனிதரைச் சேவைக்கெடுப்பது, சுரங்கமறுப்போரின் கழித்த வேதனச்சீட்டு, அவர்களுடைய ஆக்கத்தை விற்கக் கிடைக்கும் வருமானத்தினுல், (முதலில் விற்ற ஆக்கத்தின் விலையைக்குறைக்கவேண்டியதனுல்) ஆதாயம் குறைதல், குறைந்தபின் எஞ்சும் ஆதாயத்துக்குச் சமமாகும் எல்லைவரையுமே முன்னர்க்கூறிய முறையே சிரமக் கேள்விநிர்மானிக்கப்படும்.

பலவிதமான உழைப்புக்களைப்பற்றிய சிரமநிரம்பலை இப்பொழுது ஆராய்வோம். நிரம்பலென்பதனுற் கருதப்படுவது ஒரு குறித்தல விலைக்கு முன்வரும் நிரம்பலாகும். ஆகையாற் சில உழப்புக்களின் சிரமநிரம்பல் என்சதனுற் கருதப்படுவது, பல விதமான சம்பளப்பிரமாணங்களுக்கு ஒப்படைக்கப்படும் பலவிதமான சிரம அளவாகும். அதாவது பலவிதமான சம்பளப்பிரமாணங்களுக்கு முன்வரும் தொழிலாளர்களின் தொகையாகும்.

ஒரு பொருளின் விலையானது கூடும்பொழுது, அதன் நிரம்பலில் ஒரு விரிவு தோன்றுவது சாதாரண நிகழ்ச்சியாகும். ஆனதினுல், சம்பளவளவு கூடும்பொழுது சிரமநிரம்பலின் ஒரு விரிவை எதிர்பார்க்கவேண்டும். ஏதாவதோர் உழைப்பின் சம்பளப்பிரமாணம் குறையும்பொழுது, சிரமநிரம்பலின் ஓர் ஒடுக்கத்தையும் எதிர்பார்க்க வேண்டும். நெடுங்காலம் இந்தச் சாயுந்தன்மைகள் ஆட்சி செலுத்தும். ஆனுல், சிரமநிரம்பலில் இதைத் தடைசெய்யும் அதிகாரங்களுமுள.

சில விடயங்களில் உழைப்பின் சம்பளப் பிரமாணம் மிகவும் அதிகமாதலால் பலர் விரும்புவர். அத்தொழில்களில் ஈடுபடச் சில ஏதுக்கள் காரணமாக அவ்வுழைப்பில் ஈடுபட்டிருக்கிறவர்களின் தொகை குறைவாகவே இருக்கும். ஓர் உழைப்பிற் கலந்துகொளல் சட்டமூலம் பரிபாலிக்கப்படுமாயின், இது இப்படி இருக்கலாம். கணக்குப் பரீட்சகர்களின் தொழிலைப் போன்ற உழைப்புக்களுக்கு உட்புகுதலை வரையறுக்கும் ஓர் அதிகாரத்தைச் சில தாபனங்களுக்குச் சமர்ப்பிப்பதனுல் இப்படி நிகழுமென்பதை உதாரணமாகக்காட்டலாம். இப்படிப்பட்ட தாபனங்கள் நீண்டகாலப் பயிற்சி தேவையென்று நியமிக்கின்றனர். இக் காரணத்தைக் கொண்டு பலர் இதனுட் புகுதலைவிட்டு விடுகின்றனர்.

சில உழைப்புக்களின் கேள்விக்குக் காத்திருக்கிற வண்ணம் சிரமநிரம்பல் குறைவாக இருப்பது அதற்குத்தேவையான ஆற்றல்களின் அருமையினுலேயாம். ஆகையால், அதன் சம்பளவளவு மிகவும் உயர்ந்தாலும் நிரம்பல் விரிவு அற்பமாகும். அது எப்படியென்றுலும் சம்பளவளவு பெரிதும் உயர்ந்திருக்கும் போது, நிரம்பல் அற்பமாகவிருக்க மிகவும் முக்கியமானவொரு காரணமுளது. அதாவது, சில உழைப்புக்களுக்குத் தேவையான அப்பியாசத்தைப் பெற்றுக் கொள்ள ஏதாவதொரு மூலதன முதலீடு தேவையாயிருத்தலே. ஆகையால், இம் முதலீட்டைச் செய்ய முடியாதவர் உழைப்பையடையமாட்டார். உயர்நிலைப் பொதுத் தகுதித்தேர்வுக்குப் பின் மேலைநாட்டு முறையில் ஒரு வைத்தியனுகப் பயிற்சி பெறுவதாயின், ஒருவாலிபனுக்கு ஆறேழு வருடங்கள் கழியும். அதற்கு முதலீட்டைச் செய்ய வேண்டிய மூலதனம் அற்பமானதன்று. இக்காலத்துக்குள் எதிர்பார்த்த பிரகாரம் குறைந்த சம்பளத்தையுடைய ஓர் உழைப்பில் ஈடுபடுவதனுல் கிடைக்கும் ஆதாயமும் இதனுடன் சேர்க்கவேண்டிய இன்னெரு செலவாகும். இலங்கையிற் பல பெற்றோரால் இது செய்யமுடியாத முதலீடாகும். ஆகையால், இலங்கையில் வைத்தியத்தொழிலில் ஈடுபடுவோரின் தொகை குறையும். இக்காரணங்களால் நிரம்பல் வரையறையாகும் விதத்தைக் கண்டுகொள்ளலாம்.

மற்றைப்படி. வேறுசில உழைப்புக்களில் ஈடுபடுவோரின் தொகை மிகவும் பெரிதாகும். அவற்றிடை உட்புகுதற்கு வரையறுக்கப்படாத, குறைந்த இன்றியமையா ஆற்றல் தேவையாகும். அற்பமான இன்றியமையா வாற்றலும் அதற்காகச் செய்ய வேண்டிய முதலீடும், அற்பமாகும் உழைப்புக்களிற்முன் இப்படிச் சிறியனவாகும். அது எப்படியெனினும், நாம் முன்கூறிய வண்ணம் (வழங்கல்) நிரம்பலென்பதனுற் கருதுவது ஒருவிலையிலேயுள்ள நிரம்பலாகும். பயிற்சியில்லா வேலைக்கு ஒரு மணிநேரத்துக்கு 40 சத வீதம் ஒரு தொழிலாளனுக்குச் செலுத்தவேண்டுமெனக் கருதுவோம். அச்சம்பளப் பிரமாணத்தின்படி, ஒரு தொழிலாளன் 8 மணி நேரம் வேலை செய்து நாளின் எஞ்சிய நேரத்தை ஓய்விற் கழிப்பான் என்று கருதுவோம். அவன் சம்பளவளவு இதற்குக் கூடினுல், அவன் என்ன செய்வான் என்று சொல்லமுடியாது. சில சமயங்களில் அவன் ஒரு மணிநேரம் குறைவாகவோ, அதிகமாகவோ வேலை செய்ய இடமுண்டு. உண்மையாகவோ, மனிதர் பலவிதமான முறையில் நடப்பர். மேலும், சம்பளப் பிரமாணம் மிகவும் குறைந்தால், ஓர் உழைப்புக்கு முன்வரக்கூடிய முழுச்சிரமப் பிரமாணம் (உதாரணமாக, பாகம் பயின்ற வேலையாளர் என்று கருதின்) அச்சம்பளப் பிரமாணத்துக்கு முன்வராமல் இருக்கவும் கூடும். சில உழைப்புக்களின் சம்பளவளவு பிழைப்புமட்டத்துக்கும் குறைந்திருக்கும். ஆனுல், அதைக் காட்டிலும் சம்பளம் குறைந்ததென்ருல், மேலும் தொழிலாளர்களை அமைத்துக் கொள்ளுவார்கள். இப்படிப்பட்ட ஓர் உழைப்புடன் முன்னேற்றமின்றி இருத்தலைக்காட்டிலும் உழைப்பில்லாமல் இருக்கப் பல தொழிலாளர் விரும்புவர். இக்காரணத்தின்படி, சம்பளம் பிழைப்பு மட்டத்துக்குக் குறையும் பொழுது, தொழிலாளர்-கேள்வி-விரிவு உண்டாகுமானுலும், அச்சம்பளச் பிரமாணத்திலே அதிகமான வேலையில்லாமையும், கீழுழைப்பும் அமைய இடமுண்டு.

சிரமநிரம்பல், முன்கூறிய தடைகளாலும் சம்பளப் பிரமாணத்திலுைம் மாத்திரமன்று, உழைப்பினசையுந்தன்மையின் பிரமாணத்திலுைம் பாதிக்கப்படும். ஓர் உழைப்புக்காகப் பயின்ற ஒருவன் அவ்வினத்திலேயே வேருெருழைப்புக்கு மாறுதல் கடுமையாகிவிடும். பயிற்சியில்லாத உழைப்புக்களில் இச்சங்கடம் அவ்வளவு இல்லை. பயிற்சியுள்ள உழைப்புக்களிலென்ருல் பெரும்பான்மையும் சலிகை இருக்கும். பயிற்சி பெற்ற ஒரு திட்டமிடுவோன் இலேசாக ஓர் அச்செழுத்தடுக்குவோனுக இருக்க வியலாது. ஆகையால், சிறக்குமியல்பிற் பல இலாபங்களைப் பெறக்கூடுமானுலும், அதனுல் அவ்வுழைப்புக்களில் சிரமத்தின் நிரம்பல் எதிர் பார்க்கும் பிரகாரம் மீள்தன்மையிலாவியல்புடையதாகும். ஆனுல், இக்காரணத்தை அவ்வளவு பெரிதென மதிக்கவேண்டியதில்லை. சில உழைப்புக்களிடையில் மதிக்கத்தக்க அளவு அசையுந் தன்மை உள்ளது. ஒரு வகைக்குரிய எந்திரத்தைச் செலுத்த அறிந்தவன் வேறுவகையான ஓரியந்திரத்தைச் செலுத்தவும் படித்துக்கொள்வான். அது எப்படியென்ருல், சிறக்கும்

இயல்பின் காரணமாக ஓரளவுக்குச் சிரம அசையாத்தன்மை அமையும். அவ் வசையாத் தன்மையின் காரணமாக ஓர் உழைப்பின் கேள்வி குறையும் பொழு தும் வளரும் பொழுதும் நிரம்பலை மாற்றுதல் இலேசானதன்று.

ஒருழைப்பிலிருந்து மற்றேருழைப்புக்கு மாறுவதில் பணச் செலவுண்டாகும். பயிற்சியும் உழைப்பும் கிடைக்கும்வரை 'காத்திருத்தல்' முதலியவற்றிற்குப் பணம் செலவாகும். ஒருழைப்பு இருப்பது வேறு மாகாணத்திலென்றால், அவ் விடத்துக்குச் செல்லுவதற்கு வேண்டிய செலவு அற்பமாயிருந்தாலும் அத் தொழிலாளனே அதைத் தாங்க வேண்டும். மாறுதலைப்பற்றித் தொழிற் சங்கங் களினால் ஏற்படும் செயற்கைத்தடைகளும் இருக்கும். சில தொழில்கள் சில குலங்களுக்கு என வகுக்கும்பொழுது மாறுதலைத் தடுக்கும் சமுதாயத்தடை களும் இருக்கும்.

அது எப்படியென்றாலும் ரெலஞ்செல்லச் செல்ல, இத்தடைகளைத் தவிர்க்கலாம். முதியோர் இளைப்பாறும்பொழுது அன்றேல் இறக்கும் பொழுது, வாலிபர் அவர் களுடைய இடத்தை நிரப்புவர். ஓர் உழைப்பின் சம்பளப் பிரமாணம் ஏறும் பொழுது கல்விப் பயிற்சியை முடித்த வாலிபர் அத்தொழிலை ஏற்பர். ஆகையால், காலஞ்செல்லச்செல்ல சிரம நிரம்பல் மீள்தன்மையடையும். சிரம அசையுந் தன்மை கூடும்.

பல தொழில்களின் சிரமநிரம்பலைத் தீர்மானிக்கும் சில சாதனங்கள் இவை யாகும். நெடுங்காலத்தைக் காட்டிலும் குறுகிய காலத்திலே சிரம நிரம்பல் மீள் தன்மையிலா வியல்புடையதென்பது தெளிவாகக் காணப்படும். ஆனால், சிரமநிரம்பலை விரித்துரைக்கும்பொழுது, இவ்விரண்டையும், அதாவது நெடுங் காலத்தையும் குறுங்காலத்தையும் அவதானித்தல் வேண்டும்.

சிரமக்கேள்வியிலும் சிரமநிரம்பலிலும் அதிகாரஞ் செலுத்தும் சாதனங்களைப் பற்றி விரித்துரைத்தோம். இதிலிருந்து, சம்பளம் தீர்மானமாகும் முறையை நாம் ஆராயலாம். எதிர்பார்க்கும் பிரகாரம் கருதும் பொழுது, ஓர் உழைப்பின் சிரமக்கேள்வியானது (வழங்கல்) நிரம்பலுக்கு அதிகமானால், சம்பளப் பிர மாணமும் ஏறும். சிரமக்கேள்வியானது எதிர்பார்த்தவளவு நிரம்பலுக்குக் குறைந்தால், சம்பளப் பிரமாணமும் குறையும். தேவைக்கு எதிர்பார்க்குமளவு சில தொழிலில் சிரமநிரம்பல் கூடினால், அத்தொழிலின் சம்பளம் குறையும். பொருளியல் துறையில் முன்னேற்றமடைந்த நாடுகளிலெனின், செயற்கையான ஒரு வரையறையில்லாமல் கேள்வியினதும் நிரம்பலினதும் நியாயங்கள் செயற் பட இடமுண்டேல், சம்பளப் பிரமாணம் தீர்மானமாவது, அவ்வுழைப்புக்குள்ள சிரமவளவைக்கொண்ட எண்ணிலே தங்கும். இலங்கையைப் போன்ற நாடுகளி லெனில் **அறிமுறையான** தீர்மானமாகவேனும் இதனை நிலைநாட்டல் கடுமை யாகும். இது இப்படி நேரிடுவது, சில உழைப்புக்களில் சம்பளப் பிரமாணம் பிழைப்பு மட்டத்துக்கும் குறைவாகப் போவதனாலேயாம். அதனால், ஏனைய ஆக் கச்சாதனங்களும் எதிர்பார்க்கும் வண்ணம் சிரமமும் இலங்கையில் மிகவும் நிறைவானதால், குறயும் பயன்விதியின்படி சிரமத்தின் தூய எல்லை விளைவு,

வேகமாகக் குறைந்துபோக இடமுண்டு. எப்படியெனினும், ஓர் உழைப்பின் சம்பளப்பிரமாணம் கேள்வி—நிரம்பல் நியாயங்களின்படி தீர்மானமாகுமெனில், இந்நாடுகளிலும் இது உண்மையாகும். ஆகையால், பலவிதமான உழைப்புக்களின் சம்பளவளவு பலவிதமாக விருக்கும். அவ்வுழைப்புக்களில் சிரமத்தின் கேள்வியும் நிரம்பலும் மாறுதலாலே இது நேருகின்றது.

அதற்கு ஏற்ற சமயம் இருந்தாலும், ஒரு தொழிலாளன் குறைந்த சம்பள விதமுள்ள ஓர் உழைப்பைக் கைவிட்டு, கூடிய சம்பளவீதமுள்ள ஓர் உழைப்பைத் தேடிச் செல்லான். ஏனெனில், முதலுழைப்பில் வேறும் இலாபங்கள் இருப்பதனுலேயாம். ஒரே விதமான உழைப்பிற் குறைந்த சம்பளத்தைப் பெற்றுக் கொண்டாவது ஒரு பிரதேசத்தில் தங்கியிருக்க ஒரு தொழிலாளன் விரும்புவான். இது, வேறு உழைப்பில் செல்லாதவண்ணம் முதலுழைப்பிற்றுனே தங்கியிருப்பதால், அத்தொழிலாளனுடைய குடும்பத்தினருக்கு வேறு உழைப்புக்களைத் தேடிக்கொள்ள முடியுமாயின், நிகழும், ஓருழைப்பில் மேன்மையடையச் சமயம் இருப்பதை ஒரு தொழிலாளன் அறியும்பொழுது, அவ்வுழைப்பின் முன்னைய சம்பள அளவு குறைந்தாலும், அதனையே அத்தொழிலாளன் விரும்புவான். இவ்வண்ணம், குறைந்த சம்பளத்துக்குப் பதிலாக வேறும் வசதிகள் இருக்கலாம். ஓர் உழைப்பின் காப்புப்பற்றி ஒரு தொழிலாளன் திருத்தியடைய இடமுண்டு. பணத்தைப் பற்றிய இலாபங்கள் ஆகாவிடினும், நல்ல சூழ்நிலை, உழைப்பின் வசதி, ஓய்வு நேரம் உழைப்பின் சார்பாகவுள்ள பலம், மரியாதை, சிறப்பான ஆற்றல்களின் காப்பு என்பன தொழிலாளர்கள் சில உழைப்புக்களை விரும்புவதற்குக் காரணங்களாகும். இவ்வண்ணம், உழைப்பின் சங்கம், அதன் அபாய நிலை, அதனுலுண்டாகும் பிணிகள், அதன் சுவையின்மை முதலிய காரணங்களால் தொழிலாளர் சில மேலான சம்பளமுடைய உழைப்புக்களைக் கைவிடுவார்கள். வேறு முறையிற் கூறின், தொழிலாளரின் மனத்தைக் கவர்ந்து தொழிலின் சம்பளத்தால் மாத்திரமன்று; அதிலுள்ள தேறிய நயங்களாலும் வசதிகளாலும் என்க. அவ்வுழைப்புக்களின் சிரமநிரம்பல் கேள்வி என்பன மாறுபடுதலாலும், பலவிதமான சம்பளப் பிரமாணங்களின் காரணமாகத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் தேறிய நயங்கள், வசதிகள் என்பன சமானமாதலாலும் இவ்வண்ணம் உழைப்புக்களிடை, சம்பளங்களின் வேற்றுமை உண்டாகின்றது.

மேலும், ஓர் உழைப்பிலேயே தொழிலாளர்களின் சம்பள வேறுபாடுகள் இருக்கலாம். பல ஏதுக்களின் காரணமாக இது உண்டாகும். ஒரு தொழிலில் ஒரு தொழிலாளன் ஏனையோரைக் காட்டிலும் கூடிய மணி நேரம் வேலை செய்து அதிக சம்பளம் பெறமுடியும். மேலும், அவன் மேலதிக நேரத்துக்குரிய வேலையைச் செய்தால், அவனுடைய சம்பளம் கூடும். அத்தொழிலுக்கு நியமிக்கப்பட்ட மணிநேரத்தில் தான் வேலைசெய்யும்பொழுது, ஏனைத்தொழிலாளர் குறுகிய காலம் மட்டும் வேலைசெய்வாராளுல் அவர்களுடைய சம்பளம் ஏனையோரின் சம்பளத்தைக்காட்டிலும் கூடும். தொழிலுக்கேற்றபடி சம்பள வளவும் செலுத்

தப்படுமாயின், இது முழுமையும் உண்மையாகலாம். மேலும், அத்தொழிலி லேயே ஒரு தொழிலாளன் ஏனையோரைக் காட்டிலும் ஆற்றலுடையவனாக இருப் பின், முற்கூறிய தொழிலாளன் ஏனையோரைக் காட்டிலும் ஆதாயம்பெறுவான். உதாரணமாக, தேயிலை பிடுங்குகிறவன் ஒருவன் ஏனையோரைக் காட்டிலும் தேயிலையைப் பிடுங்கலாம். எப்படியெனினும் பலவேலைகளுக்குப் பொதுவான கூலி செலுத்தப்படுவதில்லை. அப்படி ஆகும்பொழுது ஒரு தொழிலாளன் ஏனை யோரைக்காட்டிலும் ஆற்றலுடையவனானாலும் தொழில் தாபனத்தில் தொழிலா ளர் எல்லோருக்குமே சமமான சம்பளம் செலுத்தப்படுகின்றது.

மேலும், ஒரு பிரதேசத்தில் தொழிலாளர் வேறு பிரதேசத்துத் தொழிலாள ரைக் காட்டிலும் கூடச் சம்பளம் பெறலாம். முதல் பிரதேசத்தில் வாழ்க்கைச் செலவு இரண்டாவது பிரதேசத்தைக் காட்டிலும் கூடினாலே இது இப்படி நிக ழும். அப்பொழுது, நாணயச் சம்பளத்தின் மாற்றம் உண்மைச் சம்பளப் பிரமா ணத்தைச் சமமாக்க உதவும். இவ்வண்ணம், நகரங்களில் வீட்டு வாடகை அதிக மானதால் கிராமத்துத் தொழிலாளர்களைக் காட்டிலும் நகரத்துத் தொழிலாளர் களுக்குச் சம்பளம் அதிகமாகும். மற்றைப்படி, போக்குவரவுத் தடைகள் கார ணமாக இரு பிரதேசங்களிடையில் ஒரே தொழிலில் உண்மை வருவாய்களிலும் வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வண்ணம் உயர்ந்த சம்பளத்தையளித்தாலும் தொழிலாளர்கள் ஒரு பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசத்துக்குச் செல்ல விரும்பார்கள். அண்மையிலுள்ள பிரதேசங்களில், வேலை செய்யும் தொழிலாளர் களைக் காட்டிலும், கல்லோயாவில் சரி நிகரான வேலை செய்யும் தொழிலாளர் களுக்குக் கூடுதலான சம்பளம் கிடைக்கும். கருத்தில்லாத ஆசைகளின் காரண மாகவும் சிரம அசைவில்தன்மை உண்டாகலாம். மனவெழுச்சியுண்டாக்கும் காரணமிருப்பின், ஒருவன் அதிகமாகச் சம்பளம் கொடுக்கும் ஒரு பிரதேசத் தைக் காட்டிலும் வேறு பிரதேசத்துக்குப் போக விரும்பான். இன்னும், வேறு தொழிலிலோ, ஒரு தாபனத்திலோ உயர்ந்த சம்பளம் கொடுப்பதை அறியாமை யினால், ஒரே தொழிலின் உண்மைச் சம்பளம் மாற இடமுண்டு. ஆகையால், ஒரே தொழிலினுள்ளும் பலவிதமான தொழில்களினுள்ளும் சம்பள மாறுபாடு கள் இருப்பதை அறிதல் வேண்டும்.

கேள்வி நிரம்பல் நியாயங்கள் காரணமாகச் சம்பளம் தீர்மானமாக இடமிருப் பதை நாம் இதுவரை கண்டோம். அது எப்படியெனினும், ஒரு தொழிலாவது நாட்டிலுள்ள முழுத் தொழிலாளர்களுக்கும் தாழ்வெல்லைக் கூலியையேனும் பெற்றுக்கொடுக்க, அரசாங்கமாவது தொழிற் சங்கமாவது முயலுதல் சாதா ரண வழக்கமாகும். அரசாங்கம் தாழ்வெல்லைக் கூலிப்பிரமாணமொன்றை நிய மிக்கும்பொழுது, அதை அப்படிச் செய்வது ஒரு தாழ்வெல்லைக்குக் குறைவாகச் சம்பளம் இறங்கச் சமுதாயம் இடங்கொடுக்க வேண்டியதில்லை என்ற இரக்க மான எண்ணத்தினாலேயாம். இப்படிச் செய்வது, ஒவ்வொரு நாட்டினருக்கும், வேலை செய்வதனாற் பெறும் சம்பளத்தைக் கொண்டு நல்ல வாழ்க்கையை நடாத்த இடமிருக்கவேண்டுமென்ற நியாயத்தினாலேயாம்.

முதற்கண், முதலாண்மை முறையின்படி ஒழுகும் ஒரு நாட்டில் சில தொழில்களில் இப்படிப்பட்ட தாழ்வெல்லைக் கூலிப் பிரமாணத்தினால் உண்டாகும் ஆதிக்கத்தைக் கவனிப்போம். இத்தாழ்வெல்லைக் கூலிப்பிரமாணம், நிகழும் சாதாரண சம்பள அளவைக் காட்டிலும் குறைந்தால், அதற்குப் பொருளியல் முறையில் மதிப்பில்லை. அது தொழிலுக்குரிய சம்பளப் பிரமாணத்தைக் காட்டிலும் கூடினால், அதனாற் சில பயன் உண்டு. ஒரு காலத்தில் ஒருவிதமான சம்பளப் பிரமாணத்திற்குச் சில தொழிலாளர்களின் தொகை சேவைக்கு எடுக்கப்படுகிறதெனக் கருதுவோம். ஒரு நிறைபோட்டியிலெனில், அத்தொழிலின் கழிவோடு மாற்றிய தூய எல்லைச் சிரம ஆக்கத்தின் விலைமதிப்பு, அச்சம்பளத்துக்குச் சரிநிகராகலாம். தொழிலுக்குரிய சம்பளப் பிரமாணத்திற்கு ஓரளவு கூடிய தாழ்வெல்லைக் கூலிப் பிரமாணம் நியமிக்கப்படுமாயின், கழிவோடுமாற்றிய தூய எல்லைச் சிரம ஆக்கத்தின் விலைமதிப்பு இப்புதிய சம்பளப் பிரமாணத்தோடு சமமாகும் வரை சில தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டும். இத்தனிப்பட்ட தொழிலாளர் வேறு தொழில்களைத் தேடல் வேண்டும். இவர்கள் தேடும் புதிய தொழில்களில் சம்பளங்களாவது, வேறு தூயவிலாபங்களாவது, வசதிகளாவது முன்னைய தொழிலிலும் குறைவதைக் காணலாம். எல்லாத் தொழில்களிலும் தொழிலுக்குரிய சம்பளப் பிரமாணத்தைக் காட்டிலும் கூடிய தாழ்வெல்லைக் கூலிப் பிரமாணம் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுமாயின், உழைப்பிலிருந்து தள்ளப்பட்ட முன்கூறிய தொழிலாளர்களுக்கு உழைப்பில்லாமற்போக நேரிடும். அது எப்படியெனினும், தாழ்வெல்லைக்கூலி நியமிக்கப்பட்டது ஒரு தொழிலிலாயின், வேறொரு நற்பயன் தோன்ற இடமுண்டு. அத்தொழிலின் உயர்ந்த சம்பளப் பிரமாணத்தின் காரணமாகச் சிறந்த தேர்ச்சியுள்ள தொழிலாளர்கள் அத்தொழிலின்பால் வேகமாகச் செல்வர். இதனால், தொழிற்பரம்பலில் ஒரு மாறுபாடு உண்டாகும். சிறப்பாற்றலிற் கூடிய தொழிலாளிகள் உயர்ந்த சம்பளமுள்ள தொழில்களுக்கும், தேர்ச்சியில்லாத தொழிலாளிகள் குறைந்த சம்பளமுள்ள தொழில்களுக்கும் பிரிந்து செல்வர். ஏனைய ஆக்கச்சாதனங்களின் விலையைக் காட்டிலும் விரும்பிய வண்ணம் சம்பளம் கூடின், சிரமத்தைத் குறைக்கக்கூடிய சூழ்ச்சிகளைக் கையால் முயற்சியாளர்களுக்குப் பயனளிக்கும். அப்பொழுது, அத்தொழிலில் சிரமத்தையுபயோகித்தல் குறையும். ஆகையால், பொதுவாக, ஒரு நிறைபோட்டியிலே நிரம்பல், கேள்வி என்பவைகளால் தீர்மானமாகும் பிரமாணத்திற்கு ஓரளவு கூடிய தாழ்வெல்லைக் கூலிப்பிரமாணத்தை நியமிப்பதனால் நேரிடுவது யாதெனில், அத்தொழிலில் ஈடுபாடு குறைதலேயாம். குறையும் இப்பிரமாணம் தீர்மானமாதல், அச்சிரம வகைக்குள் கேள்வியின் மீள்தன்மையின் மேலே தங்கும். சிரமத்தைப்பற்றிய இந்தக் கேள்வியின் மீள்தன்மையானது, சிரமத்தினால் அமைக்கப்பட்ட, அல்லது அமைக்கப்படும் ஆக்கத்துக்குள்ள கேள்வியின் மீள்தன்மையிற் தங்கியுளது. இது, மேலும் அவ்வாக்கத்துக்குள்ள பிரதியீடுகளின் பண்பிலும் பிரமாணத்திலும் தங்கியுளது.

இதனுல், தாழ்வெல்லைக் கூலிபிரமாணத்தை நியமித்தல், உண்மையாக நன்றென்று தீர்மானிக்கவேண்டும். உண்மையாகச் சமயத்துக்கேற்றபடி தாழ்வெல்லைச் சம்பளமொன்றினுல் நன்மையும் உண்டு, பயனும் உண்டு. புது உலகில் நிறைபோட்டியுள்ள ஒரு நிலைமையைக் கண்டுகொள்ளல் கடுமையாகும். ஒரு பிரதேசத்துத் தொழிலாளர்கள் வேறு பிரதேசத்திற்குப் போக விரும்பார்களாயின், அவர்களுக்குக் கழிவோடுமாற்றிய தூய வருவாய்க்குக் குறைவாகச் சம்பளங் கிடைக்கும். அவர்களுடைய கழிவோடு மாற்றிய தூய எல்லை வருவாய்க்கு நிகரான தாழ்வெல்லைப் பிரமாணத்தினுல் அவர்களை முயற்சியாளர் சுயநலத்துக்காகச் சேர்த்துக் கொள்வதை விலக்கலாம்.

திருத்தியான தாழ்வெல்லைக் கூலிப்பிரமாணத்தின் காரணமாக தொழிலாளர்களின் தேர்ச்சி அதிகரிக்கவும் இடமுண்டு. நல்ல உணவு, நல்ல சுகம், பணமிடியிலிருந்து விடுதலை பெறுதல் முதலியவைகளின் காரணமாக, தேர்ச்சி அதிகரிப்பதனுல் தொழிலாளர்களின் தூய எல்லை ஆக்கம் அவர்கள் பெறும் உயர்ந்த சம்பளத்தின் அளவுக்கே வரும்.

ஆக்கக் கலைத்திறன்களை இலேசாக மாற்றவியலாதாயின், தாழ்வெல்லைக் கூலியின் காரணமாக அத்தொழிலில் ஈடுபடுதல் அத்துணை குறைவடையாது. ஆகையால், தொழில் உரிமையாளர்களின் இலாபங்களைப் பிழிந்து தொழிலாளர்களுக்கு உயர்ந்த சம்பளங்களைக் கொடுக்கலாம். இம்முறை, ஆதாயத்தைச் சாதாரணமாகப் பிரித்துவிடும் நல்லமுறையானது என்று ஒரு சமுதாயவாத அரசாங்கத்துக்குத் தெளிவாகும்.

மேலும், தாழெல்லைக் கூலிகளின் காரணமாகச் சேவையில் ஈடுபடாமல் இருப்பினும், செல்வர்களிடமிருந்து பெற்ற வரிகளால், உழைப்புக்கள் இல்லாதவர்களுக்கு போதியவளவில் பொதுசன ஆதரவளிக்கலாம். எனின், அப்படிப்பட்ட முறை ஏற்றதென்று சமுதாயவாதமுள்ள ஓர் அரசாங்கம் கருத இடமுண்டு. நாடு முழுவதிலுமே தாழ்வெல்லைக் கூலிகள் நியமிக்கப்படினும். முன்குறித்த நியாயங்கள் அதன் மூலம் உண்மையாகலாம். கடைசியாகச் சொல்லக்கூடியது, தாழ்வெல்லைக் கூலிகளை நியமிப்பதன் நாட்டுநிலைமை, அந்நாட்டு அரசாங்கத்தினதும் குடிகளினதும் தத்துவம், மதம் என்பவற்றிலே தங்கியிருக்கின்றது என்பதேயாம்.

நாம் இதுவரை விரித்துரைத்தவற்றைப் பின்வருமாறு சுருக்கலாம். சிரமத்தின்பறுமதியை சம்பளமாகப் பெயரிடலாம். தொழிலின் பெறுமதி, அதாவது சம்பளம், ஒரு தொழிலின் சிரமக்கேள்வியும் சிரம நிரம்பலுமாகிய ஆற்றல்களால் தீர்மானிக்கப்படும். சிரமக்கேள்வியாவது வழிவந்த கேள்வியாகும். அச்சிரமவுதவியினுல் உற்பத்தியாகும் பண்டத்துக்காவது, சேவைக்காவது உள்ள கேள்வியின்படியும் அத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளிகளின் கழிவோடுமாற்

றிய எல்லைவருவாயின்படியும், அவர்களுக்குச் செலுத்தவேண்டிய சம்பளத்தின் படியும், சிரமக்கேள்வி தீர்மானமாகும். சிரமநிரம்பலும் சம்பளப் பிரமாணமும் ஏனைய சமுதாய பலன்களால் தீர்மானமாகும். சிரமநிரம்பல் எங்ஙனம் தீர்மானமானாலும், சம்பளம் பொதுவாகத் தீர்மானமாவது சிரமக்கேள்வி, சிரமநிரம்பல்களின் படியேயாம். ஆகையால், சிரமக் கேள்வியினதும் நிரம்பலினதும் வேறுபாடுகளின் காரணமாகத் தொழிலுக்குத் தொழில் சம்பளம் மாறும். சில ஏதுக்களால் ஒரே தொழிலில்ஈடுபடும் தொழிலாளர்களின் சம்பளம் மாறுபடவும் இடமுண்டு. சிலவிடத்தில், பணமுறையான சம்பளத்தின் வேறுபாடு, உண்மைக் கூலியின் சமான நிலைக்கு உதவியாகும். சிலவிடயங்களில் குறைந்த சம்பளத்துக்காவது தொழிலாளிகள் வேலை செய்வது அவர்களுக்கு அதில் தாயவிலாபங்கள் இருப்பதனாலேயே. தாழ்வெல்லைக் கூலிகளை நியமித்தால் ஒரே நேரத்தில் சேவைகளில் ஈடுபடாமல் இருத்தற்காய வழி பகிரங்கமாகிவிடும். வேறொரு பொழுதிலே அது தொழிலாளிகளுக்கு ஆதரவாவது தஞ்சமாவது அளிக்கலாம்.

10 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

| | |
|---|---|
| 1. வாடகை | Rent |
| 2. வருவாய்ப் பங்கீடு | Distribution of Income |
| 3. சம்பள வீதம் | Wage rate |
| 4. தொழில்-பிழைப்பு | Occupation |
| 5. சந்தை விலை | Market Price |
| 6. வழிவந்த | Derived |
| 7. எல்லைவிளைவு | Marginal Productivity |
| 8. தேறிய எல்லை விளைவு | Marginal net productivity |
| 9. கழித்த | Discounted |
| 10. வேலையின்மை | Unemployment |
| 11. கீழுழைப்பு | Under-employment |
| 12. அசையுந்தன்மை | Mobility |
| 13. அறிமுறையான | Theoretical |
| 14. தேறிய நயம் | Net advantage |
| 15. மேலதிக நேரம் | Overtime |
| 16. விலையளவு | Price rate |
| 17. மெய்க் கூலிகள் | Real wages |
| 18. பகுத்தறிவில்லாத | Irrational |
| 19. தாழ்வெல்லை | Minimum |

# 11 ஆம் அத்தியாயம்

## வாடகை

"சிரம" மென்னும் ஆக்கச்சாதனத்தின் விலை சம்பளமாவது போலவே, பூமி யென்னும் ஆக்கச்சாதனத்தின் விலை வாடகையாகும். அது எவ்வண்ணமாயினும், பொருளியல் வித்தையிலே பூமி என்ற சொல்லை வழங்குவது சாதாரண வழக்கத்திலுள்ள பொருளைக்காட்டிலும் விசாலமான பொருளில் என்பதை முதலில் அறிந்து கொள்ளல் வேண்டும். பொருளியற் கலையில் பூமியென்பதனால் கருதப்படுவது மண்மட்டுமன்று, இயற்கையின் ஏனைய சம்பத்துக்களுமே அதில் அடங்கும். மனிதனுடைய இலௌகிக சூழ்நிலை, கனிப்பொருள்கள், நீர்விழ்ச்சிகள், காடுகள், மீன்பிடிச் சம்பத்துக்கள் முதலிய எல்லாமே அதிலடங்கும்.

இரண்டாவது, வாடகை என்பதன் சாதாரண பொருளானது பொருளியற் கலையில் அதற்குக் கிடைக்கும் பொருளைக்காட்டிலும் அகன்றதாகும். உதாரணமாக, ஒருவன் ஒரு சிறிய தேயிலைத் தோட்டத்தைக் குத்தகையாகக் கொடுத்தால், வருடமுடிவிலோ, வேறு முறையிலோ அதற்குச் செலுத்தும் பணம் 'வாடகை' என்று சொல்லப்படும். பூமியைப் பயன்படுத்துதற்கும் காடு வெட்டித் தேயிலை பயிரிடுவதற்கும் முதலீடு செய்துள்ள மூலதனம் ஆகிய எல்லாவற்றிற்குமே செலுத்தப்படுவது முற்கூறிய வாடகை மட்டுமே. ஆகையால், இதன் மூலதனத்துக்குரிய வட்டியும் இவ்வாடகையுள் அடங்கும். ஆனால், பொருளியற் கலையில் வாடகை என்ற சொல்லைச் சாதாரணமாக உபயோகிப்பது பூமி என்ற ஆக்கச்சாதனத்துக்குச் செலுத்துவதன்றி வேறொரு ஆக்கச்சாதனத்துக்குச் செலுத்துவதன்று. நியாயமான வாடகையானது ஏனைய ஆக்கச் சாதனங்களை வழங்குவதனால் கிடைக்கும் ஆதாயங்களிலிருந்து பகிரங்கமாகிய பூமியை உபயோகிப்பதனால் கிடைக்கும் தூய வருவாயாகும்.

புதிய பொருளியல் முறையொன்றிலே வாடகை தோன்றும் விதத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போம். சில நாடுகளில் ஒரே நிகரான பண்புகளாலமைந்த நிலங்கள் எல்லையற்று இருக்கின்றன. இந்நிலங்களை நெற்பயிரிடுவதற்கு மாத்திரம் அமைக்கவியலுமென்று எண்ணுவோம். (உண்மை வாழ்க்கையில் இது நிகழாது) எங்ஙனமாயினும், இக்கற்பனை உதாரணத்தை அலசி, மூலதருமத்தை விளக்கி நாம் பின்னர் நம் விவரத்தை உண்மை வாழ்க்கையோடு சமநிலைக்குக் கொண்டுவருவோம். இந்நிலங்களைச் சமபண்போடமைந்த ஒரு ஏக்கர் துண்டுகளாகப் பிரித்திருப்பதையும் கருதுவோம். சிரமத்தையும் மூலதனத்தையும் முயற்சியையும்போன்ற ஆக்கச் சாதனங்களையும் உபயோகத்துக்கெடுத்தாலே இந்நிலங்களை நெற்பயிர் செய்வதற்கு இணைக்கவியலும். தொழிலாளர்களுக்குச் சம்பளத்தாலும் மூலதன வட்டியினாலும் முயற்சிக்குப்பின் இலாபத்தினாலும்

ஈலிகை செய்யவேண்டும். நெல்லை உற்பத்தி செய்யக் காத்திருக்கும் ஒரு கமக்காரன், ஓர் ஏக்கர் நிலத்திற்குச் சிரமத்தையும் மூலதனத்தையும் முயற்சியையும் செலவிடுவதால் செலுத்த வேண்டிய சம்பளத்தையும் வட்டியையும் எதிர் எதிர்பார்க்கும் இலாபத்தையும் கணக்கிடுவான். அக்காலத்தில் நிகழும் வேளாண்மைக்குரிய கலைத்திறன்களுக்கேற்ற சாதனங்களைச் சேர்ப்பின், ஏதாவதொரு சம்நிலையின்படி சேர்க்க வேண்டும். இந்தத் தொகுப்பின்படி சேரும் சாதனப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் ஒன்றாகவெடுத்து, அவற்றிற்குச் "சாதன அலகு" என்று பெயரிடுவோம். அங்ஙனமாயின், ஒரு ஏக்கர் நிலத்திற்கு வேண்டிய எல்லா ஆக்கச் சாதன அலகு, சம்பளம், வட்டி, இலாபம் என்பன உட்பட, 360 ரூபா ஆகுமெனக் கருதுவோம். நிறைபோட்டியுள்ள ஒரு நிலையிலே, ஓர் ஏக்கர் நிலத்துக்கு ஏனைய ஆக்கச் சாதன அலகுகளை மேலும் மேலும் சேர்ப்பின், உண்டாகும் செலவும் வரவும் கீழுள்ள அட்டவணையிற் காணப்படும்.

பதினான்காம் அட்டவணை :

ஓர் ஏக்கர் நிலத்தில் செலவும் பயனும்

| அலகுகளின் தொகை | முழுச் செலவு உரூபா | முழு ஆக்கம் புசல் | ஒரு புசலின் சாதாரண செலவு | ஒரு அலகின் எல்லை ஆக்கம் | ஒரு புசல்நெல்லின் எல்லைச் செலவு |
|---|---|---|---|---|---|
| 1 | 360 | 60 | 6 | 60 | 6 |
| 2 | 720 | 120 | 3 | 60 | 6 |
| 3 | 1,080 | 160 | 6 75 | 40 | 9 |
| 4 | 1,440 | 190 | 7 58 | 30 | 12 |

இவ்வட்டவணையில் காணப்படுவது, ஓர் ஏக்கருக்கு, ஏனைச் சாதன அலகுகளை மேலும் மேலும் அமைக்கும்பொழுதுண்டாகும் பயனாகும். ஓர் ஏக்கருக்கு ஓர் அலகை அமைக்கும்பொழுது முழு ஆக்கம் 60 புசல் நெல் ஆகும். ஒரு புசலின் சாதாரண செலவு 6 உரூபாவாகும். இச்செலவுக்குள் உற்பத்தியாளன் எதிர் பார்க்கும் இலாபமுமடங்கும். ஆகையால், ஒரு நிறைபோட்டியிலே, ஓர் அலகை ஓர் ஏக்கருடன் சேர்த்து நெல்லுற்பத்தி செய்யும் நிலங்களையுடைய ஒரு கமக்காரன், ஒரு புசல் நெல்லை 6 உரூபாவுக்கு விற்க இயலுமானால் திருத்தியடைவான். ஓர் ஏக்கருக்கு ஏனைச்சாதன அலகுகள், இரண்டைச் சேர்த்தாலும், நிலைமை இப்படியேயாகும். உண்மையாக, சம இயல்பினலமைந்த நிலங்கள் மிகுதியாகவிருந்தால், அல்லது வரையறையாகாமல் இருந்தால், யாராவது ஓர் உற்பத்தியாளன் ஓர் ஏக்கருக்கு ஏனை மூன்று சாதன அலகுகளையோ அதற்குக்கூடிய தொகையையோ சேர்க்க முடியாது. ஏனெனில், மூன்றாவது அலகை வேறோர் ஏக்கருக்குச் சேர்த்தால் அதிக பயன் பெறக்கூடும். மூன்றாவது அலகை முன்னைப் பயிரிட்ட ஓர் ஏக்கருக்கே இடுவதனால் 40 புசல் நெல்லைப் பெறவியலுமென்பது இவ்வட்டவணையாற் காணப்படும். அதை வேறு புதிய ஏக்கரில் சேர்த்தால் 60 புசல் நெல்லைப் பெறவியலும்.

ஒத்த தன்மையுடைய நிலங்கள் ஏராளமாக இருக்க, ஏனைய காரணங்கள் மாருமல் இருப்பதால் (அதாவது சம்பளமும் வட்டியும் எதிர்பார்க்கும் இலாபமும் மாருமல் இருப்பதால்) போட்டியுள்ள ஒரு சந்தையிலே ஒரு புசல் நெல்லின் விலையும் 6 உரூபாவுக்குக் கூடாது. ஏனைய காரணங்கள் மாருமல் இருப்பதனுலும் நிலங்கள் மிகுதியாயிருப்பதனுலும் ஆக்கச் செலவின் ஓர் அதிகரிப்பு இல்லாமல் வேண்டிய பிரமாணத்தில் நெல்லின் தேவையைச் சிக்கனஞ் செய்ய வியலும். நெற்கேள்வி அதிகரித்தால், ஒத்ததன்மையுடைய வயல்கள் மேலும் மேலும் பண்படுத்த எடுக்கப்படும். ஆகையால், கேள்வி அதிகரிப்பதனுல் தற்காலிகமாகவன்றி விலை மேலெழாது. கேள்வி அதிகரிப்பதனுல், அவ்விலைக்கே மேலும் மேலும் நெல் உற்பத்தியாகும். மேலும், ஒவ்வொரு கமக்காரனும் ஏனை ஆக்கச் சாதனங்களுள் இரண்டு அலகுகளை ஓர் ஏக்கர் நிலத்துக்கு அமைப்பான். இவ்வாக்கமட்டத்திலே ஒவ்வோரேக்கரையும் மேலான பரிமாணத்திற்கு உற்பத்தி செய்வது, அவ்விலக்கத்திலே சாதாரண ஆக்கச் செலவு மிகவும் குறைவதாலேயாம். யாராவது ஒரு கமக்காரன் ஓர் ஏக்கர் நிலத்துக்கு இரண்டு அலகுகளுக்கு மேலாக இணைப்பதில்லை. மூன்ருவது அலகை இணைக்கும்பொழுது அவ்வலகின் எல்லையாக்கம் நாற்பதுமட்டும் கூடும். அப்படியில்லாமல் அவ்வலகையே புதியதொரு நிலத்துக்கு அமைத்தால் அதன் ஆக்கம் அறுபது புசல்களாகும். விளக்கமாகக் கூறின், ஒரு புசலின் விலை ஆறு ரூபாவைக்காட்டிலும் கீழிறங்காது என்போம். அப்படியாயின், இவ்விலை, சாதாரண விலைக்கும் குறைவானதால் ஓர் ஏக்கரிலுமே கமம் செய்தல் இலாபத்துக்கமையாது. ஆகையால், இவ்வட்டவணை காட்டும் தன்மைகள் உண்மையானுல், நிலங்கள் ஏராளமாயின் ஒரு நிறை போட்டியின் கீழ் ஒரு புசல் நெல்லின் விலை ஆறு ரூபாவுக்குத் தீர்மானமாகும். இப்பொழுது நெல்லுக்கு அதிகமான ஒரு கேள்வியமைந்து, ஒரு புசலின் விலை சொற்ப காலத்துக்கு 8 ரூபாவரை அதிகரித்ததென்று கருதுவோம். அப்பொழுதிருக்கும் கமக்காரருக்குத் தங்கள் செலவுக்கு மிகுதியாக ஒவ்வொரு புசலுக்குமே 2 ரூபா இலாபம் கிடைக்கும். இது அவர்கள் எதிர்பார்த்த இலாபத்துக்குப் பெரும்பான்மையில் கூடும். இது வெளிவரும்பொழுது புதிய கமக்காரர்களும் வேறு புது நிலங்களில் கமத்தொழிலைத் தொடங்குவார்கள். விலை மறுபடியும் 6 உரூபாவாகும் வரையில் இப்புதிய நெற்பயிர்ச் செய்கை அதிகரிக்கும். ஆகையால், சமபண்பிஞலியைந்த நிலங்கள் ஏராளமாகவும், ஏனைய காரணங்கள் மாருமலும் இருக்க, ஒரு புசலின் மிகக் கீழான சாதாரண செலவு (சாதாரண இலாபம் உட்பட) தீரும் வண்ணம் நெல்லின் விலை தீர்க்கப்படும். இப்படியாயின், பூமியென்ற ஆக்கச் சாதனத்துக்குச் செலுத்தற்பணம் இல்லை. ஒத்ததன்மையிலமைந்த நிலங்கள் ஏராளமாக இருக்கும்வரை, நெல் விலையில் ஏனை ஆக்கச் சாதனங்களுக்கும் செலுத்த இயலும். நிலங்கள் ஏராளமாக இருக்கும்வரை உற்பத்தியாளர்களுக்கு நிலம் என்ற ஆக்கச்சாதனத்துக்கு எதையும் செலுத்தவியலாது. வேறு முறையிற் கூறின், நிலங்களுக்கு ஓர் ஆதாயம் இருக்காது. பொருளியற் கொள்கையில் வயல்களுக்கு வாடகை இல்லை என்க.

நாம் இப்பொழுது முன்கூறிய இவ்வுதாரணத்தை நடைமுறையில் கொண்டு வர முயல்வோம். நிலங்கள் ஒத்த இயல்பினவாகவே வரையறுக்கப்பட்டுள வெனக் கருதுவோம். ஒரு காலத்திலே இவ்வரையறுக்கப்பட்ட நிலங்களெல்லாம் ஓர் ஏக்கருக்கு ஏனைச் சாதன அலகுகள் இரண்டாக இணைத்துக் கமஞ் செய்யப்பட்டனவென்றும் கொள்வோம். ஒரு புசல் நெல்லு கமஞ்செய்துவந்த ஆக்கக் கேள்விக்குச் சரியாகப் போதுமானதால் விலை 6 உரூபாவாகும். நிலங்களுக்கு யாதாவதொரு வாடகையும் இல்லை. ஆனால், இதற்குப்பின் சனத்தொகையின் பெருக்கங் காரணமாக நெற்கேள்வி அதிகரித்துளதெனக் கொள்வோம். அப்பொழுது, நெல்லின் விலை ஏறும். பண்படுத்தப்படாத நிலங்கள் வேறு இல்லாதபடியால் இவ்வதிகரிக்குங் கேள்வியைச் சிக்கனமாக்கவியலாது. இயலின், இருக்கும் நிலங்களில் செறிவான பயிர்ச்செய்கை செய்தல் வேண்டும். ஒரு புசல் நெல்லின் விலை 9 உரூபாவரை கூடுகிறதெனக் கொள்வோம். அப்படியாயின் பதினொன்காவது அட்டவணையின்படி ஒவ்வோரேக்கருக்கும் ஏனைய ஆக்கச் சாதனங்களை அதிகமான அலகினால் ஒன்றாக இணைத்தல் ஏற்றதாகும். அப்பொழுது ஒரு புசல் நெல்லின் எல்லைச் செலவு, எல்லை வருவாய்க்கு அதாவது 9 உரூபாவுக்குச் சமமாகும். ஒரு புசல் நெல்லின் விலை 9 உரூபாவாகும்பொழுது ஒவ்வோரேக்கரிலும் ஏனைய சாதன அலகுகளை மூன்றாக அமைத்து வேலை செய்யப்படும். ஆக்கம் ஏக்கர்தோறும் நூற்றறுபது புசலாகும். முழுவருவாய் ஓர் ஏக்கருக்கு 1,330 உரூபாவாகும். தங்கள் சாதாரண இலாபத்தையும் அடக்கிச் செலவுக்குமேலாக ஓர் ஏக்கருக்கு 360 உரூபாவாகக் கமக்காரனுக்குக் கிடைக்கும் இப்பணமானது, எல்லா ஆக்கச் சாதனங்களுக்கும் செலுத்த வேண்டிய செலவுகளைச் செலுத்தியபின் உண்டாகும் மீதியாகும். சுருங்கச்சொல்லின், இது நிலங்களுக்குக் கிடைக்கும் வாடகையாகும். நிலங்களில்லாத ஒரு கமக்காரன் நெற்பயிர்செய்ய எண்ணினான் என்று கொள்வோம். அப்பொழுது, நிலமுள்ள ஒருவனிடமிருந்து அவன் ஓர் ஏக்கர் நிலத்தைப் பெற நேரிடும். இவ்வேக்கரை உபயோகிப்பதற்குச் சொந்தக்காரன் 360 உரூபாவைப் பெறுவான். நிலமில்லாத கமக்காரன் அதைச் செலுத்த விரும்புவான். ஒரு புசலின் விலை 9 உரூபாவாக, அவனுக்கு இந்த வாடகையைச் செலுத்திய பின், சாதாரண இலாபங்களைப் பெற வியலும். ஆகையால், வாடகையுண்டாவது, கேள்வியை எதிர்பார்க்கும்படி நிலங்கள் அரிதானால் அந்நிலங்கள் குறையும் பயனுள்ள நிலைமையில் உபயோகமாகும்பொழுதே. நிலங்கள் மிகும்பொழுது, ஒவ்வொரு நிலத்துண்டும் உபயோகிக்கப்படுவது, குறையும் பயன் உண்டாகும் புள்ளி வரையன்றிக் குறையும் பயன்களின் கீழன்று. அப்பொழுது வாடகையும் இருக்காது. நம் உதாரணத்தில் நிலங்கள் அரிதானதால், கேள்வி அதிகரித்து விலை 9 உரூபாவாகத் தீர்மானிக்க, ஒவ்வொரு ஏக்கர் நிலத்துக்கும் 360 உரூபா வாடகை ஆகும். ஒவ்வோரேக்கரும் ஒத்ததன்மையுடையன வென்பது நம்கருத்து.

உண்மையாகவே, பலவிதமான நிலத்துண்டுகள் பலவிதமான குணங்களிலமைந்துள. ஒரு நிலத்துண்டு ஏனைத்துண்டைக்காட்டிலும் செழிப்பிற் குறையக்கூடும். ஒரு நிலத்துண்டு ஏனைத்துண்டிலும் சேய்மையில் அமைந்திருக்கக்

கூடும். இன்னொரு நிலத்துண்டு ஏனைத்துண்டிலும் சந்தைக்கு அண்மையில் இருக்கக்கூடும். ஆகையால், பலவிதமான நிலங்கள் பலவிதமான தன்மையுள்ள பொழுதும் வாடகை அமையவியலும். பல குணங்களமைந்த, மூன்று ஏக்கர் கொண்ட ஒரு நிலம் இருப்பதாகக் கருதுவோம். மறு ஆக்கச்சாதன அலகு ஒன்றின் விலை (பொது இலாபமுட்பட) அப்படி ஆகும். அதாவது, ஓர் அலகு 360 உரூபா ஆலகாம். பதினைந்தாவது அட்டவணையின்படி மாறிய மூன்று ஏக்கரின் ஆக்கச் செலவு காட்டப்படுவதைக் கருதுக.

"அ" நிலத்துண்டு

பதினைந்தாம் அட்டவணை :

| அலகுத் தொகை | முழு ஆக்கம் புசல் | முழுச் செலவு ரூபா | சாதாரண செலவு ரூபா | எல்லை ஆக்கம் | ஒரு புசல் பொருட்டு எல்லைச் செல ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | 60 | 360 | 6 0 | 60 | 6 |
| 2 | 120 | 720 | 6 0 | 60 | 6 |
| 3 | 160 | 1,080 | 6 75 | 40 | 9 |
| 4 | 190 | 1,440 | 7 58 | 38 | 12 |

"ஆ" நிலத்துண்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 40 | 360 | 9 0 | 40 | 9 |
| 2 | 70 | 720 | 10 28 | 30 | 12 |
| 3 | 90 | 1,080 | 12 0 | 20 | 18 |

"இ" நிலத்துண்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 30 | 360 | 12 0 | 30 | 12 |
| 2 | 50 | 720 | 14 50 | 20 | 18 |

இவ்வுதாரணத்தில் அ. ஆ. இ. ஆகிய நிலத்துண்டுகள் பலகுணங்கள் அமைந்தனவென்று நாம் கருதியது அவை பலவிதமான செழிப்புக்களமைந்தபடியாலேயாம். "அ" நிலத்துண்டு மிகவும் வளமற்றது. "இ" நிலத்துண்டுடன் ஏனைச் சாதன அலகில் ஒன்றை இணைத்து வேலை செய்தபொழுது,( மிகக் குறைந்த தொகை நெல் கிடைத்தது. ஏனைச் சாதன அலகில் ஒன்றை இணைத்து வேலை செய்ய "அ" நிலத்துண்டுமூலம் "ஆ" நிலத்துண்டைக் காட்டிலும் ஆக்கம் பெற வியலும். நாம் முன்னைக்கண்டதுபோல சில நிலத்துண்டுகள் சந்தைக்குச் சேய்மையில் அமைந்திருக்கிறபடியால், தன்மை மாறுபாடுகள் உண்டாகவியலும். அப்படியாகும் பொழுது ஒவ்வொரு நிலத்துண்டும் ஏனைச் சாதனங்களோடு சேர்க்கும்போது, உரிய அளவை உற்பத்தி செய்தாலும் அவற்றைச் சந்தைக்குக் கொண்டுபோகும் பொழுது செலவழிக்க வேண்டிய பணம் அதிகமாகையால், ஒவ்வொரு நிலத்துண்டிலும் எல்லைச்செலவு இத்தன்மையின் மாறு

பாட்டைக்காட்டும். அது எங்ஙனமாயினும், தொழிலை இலேசாக்கும் பொருட்டு, இந்நிலத்துண்டுகள் குணத்தில் மாறுபடுவது, செழிப்பின் வேற்றுமையினு லென்று கொள்வோம்.

ஒரு கமக்காரன் "அ" நிலத்துண்டின் உரிமையாளன் என்று எண்ணுவோம். ஒரு புசல் நெல்லின் விலை 6 ரூபாவென்றால், "அ" நிலத்துண்டுடன் ஏனைச் சாதன அலகுகள் இரண்டையும் இணைத்துக் கமஞ்செய்தல் ஏற்றதென்று அவ னுக்குப் புலனாகும். அப்பொழுது ஒரு புசல் நெல்லின் எல்லை வருவாய் அவ னுடைய சாதாரண இலாபங்கள் உட்பட, எல்லைச் செலவைச் செலுத்திவிடச் சரியாகப் போதியதாகும். இப்பொழுது "அ" நிலத்துண்டுக்கு ஒரு வாடகை யும் இல்லை. "அ" நிலத்துண்டின் உரிமையாளன் அதை வேறொரு கமக்காரனுக் குக் கமஞ்செய்தற் பொருட்டு அளிக்க எண்ணுவான். ஆனால், அவனுக்கு யாதொரு வாடகையும் கிடைக்காது. ஒரு புசலின் விலை 6 உரூபாவாகும் பொழுது, வாடகை செலுத்த நேரிட்டால், அது பயிரிடுதற்கு ஏற்றதன்று என்று கமக்காரனுக்குப் புலனாகும். கேள்வியின் அதிகரிப்புக்காரணமாக ஒரு புசல் நெல்லின் விலை 9 உரூபாவரை கூடிற்றென்று கொள்க. ஒரு புசலின் விலை 9 உரூபாவாகியபொழுது "அ" நிலத்துண்டுக்கு, ஏனைச்சாதனங்களுள் இன்னொரு அலகினை இடுவது ஏற்றதாகும். அம்மூன்றாவது அலகின் எல்லைச்செலவு அதன் எல்லை வருவாய்க்கு நேரே நிகரானதாகும். அப்பொழுது "அ" நிலத்துண்டின் உரிமையாளனுக்குச் செலவுக்கு மேலான 360 உரூபாவின் மீதி ஒன்று கிடைக் கும். இம்மீதி "அ" நிலத்துண்டுக்குக் கிடைக்கும் குடிக்கூலியாகும். இந்த "அ" நிலத்துண்டின் உரிமையாளன் அதைப் பயிர்செய்ய விரும்பானாயின், அவனுக்கு அதை 360 உரூபா வாடகை கிடைக்கும் வண்ணம் வேறு கமக்கார னுக்குக் கொடுக்கமுடியும். அப்பொழுது "அ" நிலத்துண்டிற் கமஞ்செய்து 360 உரூபா குடிக்கூலி செலுத்துதல் நியாயமாகுமென்று வாடகை பெறுவோன் கருதுவான். அதைக் கமஞ்செய்து வாடகையைச் செலுத்தித் தான் எதிர்பார்க் கும் இலாபம் உட்பட, எல்லாச் செலவுகளையும் செலுத்தி விடமுடியும்.

ஒரு புசல் 9 உரூபாவாயின், "அ" நிலத்துண்டைக் கமஞ் செய்தலும் ஏற்ற தாகும். ஒரு கமக்காரனுக்கு "ஆ" நிலத்துண்டு உரிமையாளன், அமைக் கமஞ் செய்து தான் எதிர்பார்க்கும் இலாபம் உட்பட, எல்லாச் செலவுகளையும் செலுத்திவிட இயலும். அவனுக்கு இந்த "ஆ" நிலத்துண்டால் யாதொரு வாட கையும் கிடைப்பதில்லை. இவ்விலையிலே அவனுடைய செலவுக்கு மேலாக ஒரு மீதி இல்லை. வேறு முறையிற் கூறின், ஒரு புசல் நெல்லின் விலை 9 உரூபாவாகும் பொழுது, "ஆ" நிலததுண்டு எல்லை நிலமாகும்.

இவ்வண்ணமே ஒரு புசல் நெல்லின் விலை 12 உரூபாவாயின், "அ" நிலத் துண்டின் உரிமையாளனுக்கு மிகுதியான ஒரு வாடகை கிடைக்கும். அப்பொ ழுது, மேலதிகமான ஒரு மீதியுண்டாகும். அது 840 உரூபாவாகும். "ஆ" நிலத்

துண்டு உரிமையாளனுக்கு 120 உரூபாவுக்கு ஒரு வாடகை கிடைக்கும். ஒரு புசல் நெல்லின் விலை 12 உரூபா ஆகும்பொழுது "இ" நிலத்துண்டு எல்லை நிலமொன்றாகும். இங்ஙனம், முதலில் நிலங்கள் அரிதாவதாலும் இரண்டாவதாக நிலங்கள் பலவிதமான குணங்களுடன் அமைவதாலும் வாடகை ஏறும். இந் நிலத்துண்டுகளில் நெல்லைமட்டும் பயிரிடவியலுமென்பதை நாம் முன் அறிந்தோம். ஆனால், வேறு பயிர்களை வளர்த்தாலும் இக்கருத்தில் ஒரு மாற்றமுண்டாகாது. சில ஆக்கச் செலவுகளினதும் விலையினதும்படி, ஒரு நிலத்துண்டுக்கு மிக்க இலாபமளிக்கும் ஒரு பயிருண்டு. ஒவ்வொரு கமக்காரனும் இப்பயிரை, எல்லைச் செலவு எல்லை வருவாய்க்குச் சமமாகும்வரை உற்பத்தி செய்வான். மேலும், ஒவ்வொரு கமக்காரனும் அந்நிலத்துண்டு சார்பாகத் தன் மிகைவருவாயை உயர்த்திக் கொள்ளவும் முயல்வான். இவ்வண்ணம், சொந்தக்காரர்களுக்கு மிகப்பெரிய வாடகை கிடைக்கும்வகை, பயிரிடக்கூடிய நிலப்பிரமாணம் பலவிதமான பயிர்களைச் செய்ய இணைக்கப்படும்.

இதுவரை நாம் சீர்தூக்கிப் பார்த்தவை வேளாண்மைக்குரிய நிலங்கள் பற்றி என்றாலும் பட்டினஞ்சார்ந்த நிலங்களின் வாடகையைத் தீர்மானிக்கும் விதிகளும் இதற் கொப்பானவையே. பட்டின நிலங்கள் பலவிதமான காரியங்களுக்குப் பயன்படும். இந்நிலங்கள் பலவிதமான தன்மைகள் அமைந்துள்ளன. நகரத்தில் யாதாயினுமொரு (சில்லறை வியாபாரம்) தொழில் தாபனத்தை ஓர் அமைப்பிலிருந்து வேறொரு அமைப்புக்கு மாற்றும்பொழுது, முன்னைய அமைப்பிற்போல ஆக்கச் சாதனங்கள் அமைந்தாலும், ஆதாயம் இறங்கும். அப்படிப் பட்ட ஒரு தாபனத்தை நாம் கண்டு கொள்ளல் இயலும். ஆகையால், தெளிவாகக் காணப்படுவதுபோல நல்ல அமைப்பின் காரணமாகத் தொழிலுக்கு ஆதாயம் கிடைக்கும். இப்படி நிகழ்வது, இது அமைந்துள்ள நிலப்பாங்கின் காரணமாகவேயாம். ஆகையால், உண்மையில் இது நிலத்துக்குக் கிடைக்கும் வாடகையேயாகும்.

பட்டினஞ்சார்ந்த நிலங்களிலும் ஒரு துண்டினை யாதேனும் உபயோகத்துக்கு அமைத்தாலும் ஓர் எல்லைக்குப்பின் குறையும் பயன்விதி இயங்கும். கொழும்பு நகரத்தில் சில்லறை வியாபாரத்துக்கு மிகவும் தகுதியுள்ள ஒரு நிலத்துண்டு இருக்கிறதென்று கொள்வோம். மேலும் மேலும் கட்டடங்களையும் ஆவணங்களையும் அமைக்கும்பொழுது, ஓர் எல்லைக்குப்பின் மேலும் கட்டடம் கட்டுதல் தகுதியற்றதென்று தெரியும். வேறு முறையிற் கூறின், ஒரு வரையறைக்குப்பின், குறையும் பயன்விதியின் காரணமாக, நிலத்துண்டுக்கு வேறு சாதனங்களை அதிகமாக அமைக்கும்பொழுது உண்டாகும் எல்லைச் செலவு, எல்லை வருவாய்க்குச் சரி சமமாகும் ஒரு சமயம் எய்தும். இவ்விலக்கம் வரும்பொழுது ஆக்கச் சாதனங்களை அதிகமாக வேறு நிலத்துண்டுக்கு அமைத்தல் ஏற்றதாகும்.

வேளாண்மை சார்பாக அமைத்த நம் உதாரணத்தைப் போலல்லாது, வாடகை யைப் பெறுதிருக்கும் நிலங்கள் ஒரு நகரத்திலில்லை. இது ஒரு நகரத்திலே நிலங் களிலிருந்து பெறக்கூடிய பல பிரயோசனங்கள் இருப்பதனுலேயாகும். இங் ஙனம், ஒரு தொழில் நகரத்தின் பல பாகங்களில் நடக்குமாயின், அத்தொழி லுக்குரிய நிலப்பாகங்களை வாங்குவோர் அதனுல் இலாபமடையும் வரையுமே அதனை வாங்குவர். ஒரு தொழிலின் ஏனைவேலைகளுக்காக நகரத்தின் பலபாகங் களில் நிலத்துண்டுகளை வாங்குகின்றேம். அத்தொழிலுக்காக அவற்றைப் பயன் படுத்துவதில்லை. அத்தொழிலுக்காக வாங்கினுல் அந்தந்த நிலப்பாகங்கள் மூலம் நட்டமே ஏற்படும். அதனுல், அத்தொழிலுக்கென நிலப்பாகங்களை வாங்கு வதைக் கைவிடுகின்றேம். முன்கூறிய தொழிலைக் காட்டிலும் வேறு தொழில் வகைகளிலிருந்து இந்நிலங்கள் அதிகமாக வாடகையைத் தருதல் கூடும். இத் தொழில் நடைபெறும் இடங்களில் இதை நுட்பமாக அதிகரித்தலும், வேறு உப யோகங்களுக்கு அமைத்திருக்கும் நிலங்களை இதற்காக எடுத்தலும் ஏற்றதாகும்.

தொழில் தாபனத்துக்குச் சொந்தக்காரனுக்கே தொழில் நடக்கும் இடம் சொந்தமாயிருந்தால் அவ்விடத்துக்குக் கிடைக்கும் வாடகையை மதிப்பது இலேசான காரியமன்று. அது எங்ஙனமாயினும் ஏனைத் தொழில் தாபனங்கள், அவ்விடத்துக்கு வருடந்தோறும் செலுத்த விரும்பும் பணவளவுமூலம், அவ் விடத்துக்குக் கிடைக்கும் வாடகையின் உண்மையான நிலைமையை அறிந்து கொள்ளவியலும். கடைசியாக, வாடகையானது பூமி என்னும் ஆக்கச் சாதனத் துக்குக் கிடைக்கும் ஆதாயம் என்பதை நாம் சொல்லவியலும். நிலம் அரிதான தாலேயே வாடகை அமைகின்றது. இதனுல் நாம் கருதுவது, நுகர்வோர்களாற் கேட்கப்படும் வேறு சில ஆக்க வழிகளுக்கு இணைக்கக்கூடிய பூமியையேயாகும். மேலும், பலவிதமான நிலப்பாகங்களுக்குப் பலவிதமான அளவில் வாடகை கிடைப்பது அவை பலவிதமான குணங்களில் அமைந்திருக்கிறபடியாலேயாம்.

வாடகையைத் தீர்மானிக்கும் மூலதருமங்களை நாம் நன்ருக ஆராய்ந்து பார்த் தால், நமக்குப் புலப்படுவது, சிலநிலத்துண்டுக்கு வாடகை கிடைக்குமோ, கிடைக்காதோ எனபது அந்நிலத்தில் உற்பத்தியாகும். ஆக்கத்தின் விலைப்படி என்பதாம். வேளாண்மை பற்றிய நம் உதாரணத்தில் ஒரு புசல்நெல்லின் விலை 6 உரூபாவாகும்பொழுது "அ" நிலப்பாகத்துக்கு வாடகை கிடைக்கவில்லை என்பதை நாம் கண்டோம். ஒரு புசல்நெல்லின் விலை 9 உரூபாவாயபொழுது மட்டுமே 'அ" நிலப்பாகத்துக்கு வாடகை கிடைக்கும். நெல்லின் விலை குறை யும்பொழுதுதான் "அ" நிலப்பாகத்துக்கு வாடகை கிடைக்கும். இவ்வண்ணமே ஒரு புசல்நெல் விலை 12 உரூபாவாகும்பொழுது "ஆ" நிலப்பாகத்துக்கும் வாடகை கிடைக்கும். "அ" நிலப்பாகத்தின் வாடகையும் அதிகரிக்கும். ஆகை யால், நிலங்களில் சிக்கன வாடகைமேல் முகாமை செலுத்துவது ஆக்கத்தின்

விலையைத் தவிர வேறொன்றில்லை என்று கருதலாம். நகரத்துக்குரிய, அல்லது கிராமத்துக்குரிய எல்லா நிலங்களுக்கும் இம்மூலதருமம் உண்மையாகும்.

நாம் இதுவரை கூறியவற்றால், வாடகை தோன்றுவது பூமி அரிதானதாலும், அது குறையும் பயன்கள் கிடைக்கும் புள்ளியைக் கடந்து உபயோகமாகுமாதலாலும் என்று கண்டோம். பூமி மாத்திரமன்று, ஏனைய ஆக்கச் சாதனங்களையும் குறையும் பயன்கள் கிடைக்கும் புள்ளிக்கு மேலாக உபயோகிக்கவியலும். ஓர் ஆக்கச் சாதனத்தின் (மூலதனமென்று கொள்வோம்) அருமையின் காரணமாகக் குறையும் பயன்கள் கிடைக்கும் இலக்கத்துக்கும் மேலாக உபயோகித்தால், ஒரு பகுதி வேதனமாகவும் இன்னுமொரு பகுதி ஒருவகையான வாடகையாகவும் அதற்கு ஓர் ஆதாயம் கிடைக்கும். அது எங்ஙனமாயினும் பூமியைத்தவிர ஏனை ஆக்கச் சாதனங்கள் எல்லாவற்றையும் நாம் அதிகரிக்கவியலும். ஆகையால், பூமியைத் தவிர ஏனை ஆக்கச் சாதனங்களின் சொந்தக் காரர்களுக்கு, வாடகை வகையாக மிகையான ஆதாயம் பெறவியல்வது சிறப்பான சமயங்களிலேயாம். அது எங்ஙனமாயினும், இலங்கையைப்போன்ற நாடுகளிலென்றால் மூலதனத்தின் அருமையினால், அதன் உரிமையாளர் ஓரளவு நெடுங்காலம் மீதி ஆதாயம் நுகரக் கூடும். பூமியைத் தவிர ஏனைய ஆக்கச் சாதனங்களுக்குக் கிடைக்கும் மீதியான ஆதாயம் **வாடகைப்போலி என்று சொல்லப்படும்.**

ஆகையால், வாடகையானது, எல்லாச் சேவைகளுக்கும் செலுத்தியபின் உள்ள மீதியாகும். "அ" நிலப்பாகத்தின் சொந்தக்காரனுக்கு ஒரு புசலின் விலை 9 ரூபாவாவது அதற்குக்கூடவாவது இருப்பின், ஒரு வாடகை கிடைக்கும். இவ் வாடகை, சிரமத்தின் சேவைக்குச் சம்பளம் மூலதனத்தின் சேவைக்கு வட்டி, முயற்சியாகிய சேவைக்கு இலாபம் முதலியவற்றைச் செலுத்தியபின், எஞ்சியிருக்கும் மிகையாகும். ஒருபுசல் நெல்லின் விலை 6 ரூபா முதல் 9 ரூபாவரை ஆகும் பொழுது, அதற்காக "அ" நிலப்பாகத்தின் உரிமையாளன் அதிகமான ஒரு சேவையைச் செய்வதில்லை. ஆனால், அவனுடைய சேவைப்பொருட்டுச் செலுத்துதலைக் காட்டிலும் மேலாகப் பெரியதோர் ஆதாயம் கிடைக்கும். இக் காரணத்தினால், வாடகை உற்பத்தி செய்யாத ஆதாயமாக மதிக்கப்படும். புதிய முதலாண்மையுடைய ஒரு பொருளியல் முறையில் தனிநிலச்சொந்தக்காரர்களுக்கு ஒரு வாடகை கிடைக்கும். ஆனால், நிலங்கள்மூலம் உண்டாகும் ஆக்கத்தின் விலை, சனத்தொகையின் அதிகரிப்பைப் போன்ற சமுதாய ஏதுக்களின் காரணமாக அதிகரிக்கும். இச்சமுதாய வலுவேகங்கள் மூலம் ஒருவன் பயன்களைப் பெறவேண்டுமென்றால் அவற்றைப் பெறவேண்டியது முழுச்சமுதாயமே. அதைத்தவிர, சமுதாய வலுவேகங்களுள் மிகவும் அற்பம் மாத்திர மன்றி, அதிகாரம் செலுத்துவது ஒரு தனி மனிதன் அல்லன்.

அது எங்ஙனமாயினும், செய்த சேவைக்கு மேலாக மீதியான ஓர் ஆதாயத்தைப் பெறுகிறவன் எவன் என்று நிச்சயித்தல், ஓர் இலேசான காரியமன்று. ஒரு புசல் நெல்லின் விலை 9 ரூபாவென்றால், "அ" நிலப்பாகத்தின் உரிமையாளன் ஒரு வருடத்துக்கு 360 ரூபா ஆதாயம் பெறுவதை நாம் கண்டு கொண்டோம். வேறொருவர் 6000 ரூபாவைச் செலுத்தி இந்நிலப் பாகத்தை வாங்கினால் அவருக்கு வருடந்தோறும் கிடைக்கும் 360 ரூபா ஆதாயம் அவர் இணைத்த மூலதனத்துக்குக் கிடைக்கும் வட்டியாகும். அவர் 6,000 ரூபாவைக் கொடுத்து நிலப்பாகத்தை வாங்கிய பின் "அ" நிலப்பாகத்தின் "மிகை" அதிகரித்தால், 360 ரூபாவுக்குக் கூடிய "மிகையானது" இப்புதிய சொந்தக்காரனுக்குக் கிடைக்கும் வாடகையாகும்.

## 11 ஆம் அத்தியாயம்

## கலைச்சொல் வரிசை

1. செறிவான ... Intensive
2. மிகை—மீதி ... Surplus
3. வாடகைப்போலி ... Quasi-rent
4. உண்டாகாத ... Unaccrued

## 12 ஆம் அத்தியாயம்

# வட்டியும் இலாபமும்

வட்டியானது மூலதனத்துக்குக் கிடைக்கும் ஆதாயமாகும். வட்டி தீர்மான மாகும் மாதிரியை விரித்துரைக்க முயலும் முக்கியமான கொள்கைகள் இரண் டுள்ளன. கடன் கேள்வியின்படியும் கடன் நிரம்பலின்படியும் வட்டி தீர்மான மாகுமென்று ஒரு கொள்கை உலவுகின்றது. வட்டி தீர்மானமாவது பணவலு வேகங்கள் மூலம் என்று, அதாவது பணத்தைச் சம்பாதித்தலாலும் திரவத் தேர்விஞலும் என்று சொல்லப்படும். இது, பணத்தைத் தாங்கும் மனிதருக் குள்ள விருப்பத்தின்படியே என்று ஏனைய கொள்கைகள் கூறு நிற்கும். நாம் முதலில் "கடன்கேள்வியும் கடன்நிரம்பலும்" என்ற கொள்கையை ஆராய்ந்து பார்ப்போம்.

நிகரான பண்புகளுள்ளனவும் பிரமாணங்களுள்ளனவும் ஆன எதிர்கால பண்டங்களைக்காட்டிலும் நிகழ்கால பண்டங்களை விரும்புதல் மனித இயற்கை யாகும். வேறு முறையிற் கூறின், காலவரையறைகளிலிருந்து பிரியும்பொழுது, சுயமான பண்டங்களுக்குச் சுயமான தேவைகள் இல்லை. இவ்வண்ணம், ஒரு வன் எதிர்காலத்தின் சுயமான பண்டங்களிலும், நிகழ்கால பண்டங்ளை மேலாக மதிப்பதைக் காணலாம்.

புது உலகத்தில், நிகழ்காலப் பண்டங்களுக்குள்ள ஒருவனுடைய உரிமை, அல் லது நிகழ்காலப் பண்டங்களையனுபவிக்கவுள்ள திறமை என்பது தீர்மானிக்கப் படுவது அவனுக்குச் சொந்தமாகவிருக்கும் பணத்தின் அளவாலேயே. ஒருவ னுக்கு ஒரு வருடத்துக்கு 6,000 ரூபா ஆதாயத்தைத் தவிர வேறோராதாய மும் இல்லை என்று கொள்வோம். அப்படியென்ருல், அவன் ஒரு வருடத்துக் குள்ளே 6,000 ரூபா விலைமதிப்புள்ள பண்டங்களையும் சேவைகளையும் அனுப விக்கவியலும். அவனை (ஒரு வருடம்) 1,000 ரூபாவைக் கடன் கொடுக்கச் செய்த, 1,000 ரூபா விலை மதிப்புள்ள பண்டங்களையும் சேவைகளையும் அவன் ஒரு வருடத்துக்குப் பின்போட வேண்டும். அவன் யாதேனும் ஒரு விலை கொடுப் பதனுல்தான் இப்படிச் செய்யவியலும். இவ்விலை, அல்லது செலுத்தும் பண மானது வட்டியாகும். இச்செலுத்து பணம் அவனுக்குக் கொடுப்பது 1,000 ரூபா விலைமதிப்புள்ள பண்டங்களையும் சேவைகளையும் நுகருதலை ஒரு வரு டத்துக்கு அவனைப் பின்போடச் செய்வதற்கேயாம். ஆகையால், வட்டியானது ஒறுப்புக் காரணமாகச் செய்யும் ஒரு செலுத்துதலாகும்

சாதாரணமாக, வட்டி விலைமதிப்பது ஒரு வருடத்துக்கு நூற்றுக்கு ஒரு வீத மாகவேயாம். ஒரு வருடத்துக்குப்பின் ஐந்து ரூபாவைக் கொண்ட ஒரு வட்டி யோடு செலுத்தும் வாக்குத்தத்தத்தோடு 1,000 ரூபாவைக் கடனளிக்க முன்

கூறியவரை விரும்பச் செய்ய இயலுமானால் ஒரு வருடத்துக்கு வட்டியினளவு நூற்றுக்கு ஐந்து விதம் (5%) ஆக்கலாம். இவ்வண்ணம் வட்டியின் அளவைக் கருதிக்கொண்டு நிகழ்கால நுகர்தலை எதிர்கால நுகர்த்லுக்காகப் பின்போட்டு நிகழ்கால நுகர்தலை வாக்குறுதியோடு அன்னியருக்கு ஒப்புவித்து நியமிக்கப் பட்ட காலத்திலே அப்பணத்தையும் வட்டியையும் பெற மனிதர் விரும்புவர். இங்ஙனம், ஒரு சமயம் ஒருவன் வட்டியளவைக் கருதி, ஓரளவு பணத்தைக் கடன்கொடுக்க விரும்புவான். சிலரின் ஆதாயம் மிகவும் அற்பமானதால், அவர் களுக்குக் கடன்கொடுக்க மட்டும் பணத்தைச் சேமிக்க இயலுவதில்லை. வேறு சிலருக்கு ஆதாயம் பெரிதாதலால் அவர்களுக்குக் கடனளிக்கவியலும். இங்ஙன மாக, ஒரு நாட்டில் ஆதாயம் பெறும் எல்லோரையுமே ஒருங்கு கருதும் பொழுது, ஒரு நேரத்திலே ஒரு வட்டியளவுக்குக் கடன்கொடுக்க விரும்புதலைத் தீர்மானிக்கவியலும். இது இலாப நிரம்பற் பக்கமாகும்.

ஒருவன் வட்டி செலுத்திக்கொண்டு வேறொருவனுடைய நிகழ்கால நுகர் தலைப் பின்போட விரும்புவது, அவனுக்கு நிகழ்கால நுகர்தல் இட்டமாதலால் என்பது தெளிவாகும். ஒருவன் ஒரு வருடத்துக்கு 5% வட்டிக்கு 1,000 உரூபா வைக் கடனெடுப்பான். ஒரு வருடத்துக்குப் பின் 1,050 உரூபாவைக் கொண்டு பெறக்கூடிய பண்டங்களிலும் சேவைகளிலும் பார்க்க, அவன் நிகழ்காலத்தில் 1,000 உரூபாவைக்கொண்டு வாங்கக்கூடிய பண்டங்களையும் சேவைகளையும் அதிகமாக விரும்புவான். ஆகையால், பல காரணங்களைக்கொண்டு இலாபப் பணத்தையே கருதுகிறவர்கள் இருப்பார்கள். ஏனைப் பணத்தைப் போலவே இலாபப்பணத்தின் விலை. அல்லது வட்டியளவு தீர்மானமாவது அவ்விலாபப் பணத்தின் கேள்வியினதும் நிரம்பலினதும்படியாம்.

கடன் பணத்தின் நிரம்பலைத் தீர்மானிக்கும் வலுவேகங்களை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்போம். பொதுவாகக் கூறின், வட்டியளவு மேலோங்கும் பிர மாணத்திற்குக் கடன் பணத்தின் நிரம்பலில் ஒரு விரிவு உண்டாகும். வேறு வகையிற் கூறின், வட்டியளவு உயரும்பொழுது மனிதர் அதிக தொகையைக் கடன் கொடுக்க விரும்புவார்கள். 1,000 உரூபாவை ஐந்து வீத வட்டிக்குக் கொடுப்பவன், அப்படிச் செய்வது, 1,000 உரூபாவுக்கு வாங்கக்கூடிய நிகழ் கால பண்டங்களிலும் சேவைகளிலும் பார்க்க ஒரு வருடத்துக்குப்பின் 1,050 உரூபாவுக்குப் பெறக்கூடிய பண்டங்களையும் சேவைகளையும் கூட மதிக்கின்ற படியாலேயாம். ஆனால், நம் உதாரணத்தில், முன்கூறியவன் 6,000 உரூபாவின் ஆதாயத்தினுல் நூற்றுக்கு ஐந்து வீத வட்டிக்கு 1,000 உரூபாவுக்கு மேல் ஏன் கடன் கொடுக்கவில்லை? 5,000 உரூபாவைக் கடன் கொடாமல் ஏன் வைத்திருக் கிறான்? இதற்குக் காரணமென்ன வென்றால் 5,000 உரூபாவினுல் பெறக்கூடிய நிகழ்காலப் பண்டங்களையும் சேவைகளையும் ஒரு வருடத்துக்குப்பின் 5,250 உரூபாவைக்கொண்டு பெற்றுக் கொள்ளக்கூடிய பண்டங்களிலும் சேவைகளி லும் பார்க்க அவன் கூட மதிக்கிறபடியாலேயாம். ஆனால், வட்டி நூற்றுக்குப் பத்து வீதமானல் அவன் இன்னும் 500 உரூபாவைக் கடனுக்குக் கொடுக்க

விரும்ப இடமுண்டு. அவ்வண்ணமே 5,000 உரூபா ஆதாயமுள்ள வேறொருவன் வட்டி நூற்றுக்குப் பத்து விதமென்றால் 250 உரூபாவைக் கடன் கொடுக்க இடமிருந்தாலும் நூற்றுக்கு ஐந்து விதவட்டிக்கு அற்ப பணத்தை கொடான். மேலும், மிகவும் அற்பமான ஆதாயத்தையுடையவன், வட்டி நூற்றுக்குப் பத்து விதமானாலும் அற்ப பணத்தையுமே கொடான். இவ்வண்ணம், வட்டியின் அளவு அதிகரிக்கும்போது, முன்னே கடன் கொடுத்தவர்களைக்கொண்டு அதிகமாகக் கடன் கொடுக்கவும், முன்னே கடன் கொடாதவர்களைக்கொண்டு ஓரளவு கடன் கொடுப்பிக்கவும் இயலும். ஆகையால், ஒவ்வொருவருடைய ஆதாயப் பிரமாணமும், ஒவ்வொருவருடைய நிகழ்காலப் பண்டங்களும் சேவைகளும் தாமதித்த பண்டங்களும் சேவைகளும் ஆகிய இவற்றின் மூலம் மதிக்கும் அன்னியோன்னிய அளவும், வட்டியளவின்படியே கடன் நிரம்பல் தீர்மானமாகும். ஏனைக் காரணங்கள் மாறாமல் இருக்குமாயின், வட்டியளவு குறையும்பொழுது கடன் நிரம்பல் ஒடுங்கும். வட்டியளவு அதிகரிக்கும் பொழுது கடன் நிரம்பலில் ஒரு விரிவு உண்டாகும்.

இந்நியாயத்துக்குப் புறனடைகளுமுள்ளன. கடனுக்குக் கொடுத்தால் வட்டியைப் பெறவியலாவிடினும், நிகழ்கால நுகர்ச்சியை அது பின்போடும். அதாவது, சேமிக்கும் சனங்கள் இருப்பார்கள். உதாரணமாக, கிழப்பருவம், நோய், அகாலமரணம், வேறு ஆபத்துக்கள் போன்றன பொருட்டு மனிதர் சேமிப்பதைக் காண்கிறோம். இப்படிப்பட்ட சேமித்தல்களுக்குத் தபாற்கந்தோர்ச் சேமிப்பு வங்கியிலாவது வியாபார வங்கிவைப்புக் கணக்கிலாவது வட்டி பெறவியலும். அப்படிப்பட்ட வட்டி இல்லாவிடினும் ஆபத்துக்களுக்காக மனிதர் சேமிப்பார்கள். மேலும், அன்னியருக்குக் கடன் பணத்தைக்கொடுத்து வட்டி பெறவியலுமானாலும் சில செல்வர்கள் அப்படிச் செய்யாமல் தங்கள் வசதி, பாதுகாப்பு என்பன பொருட்டுப் பெரிய பண நிலுவைகளைத் தங்களுடைய அசையும் கணக்குக்களில் வைத்துக் கொள்வார்கள்.

மேலும், புதிய விசாலமான **கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள்,** அவர்களுடைய ஆயவாதாயங்களுள் மதிக்கத்தக்க அளவைச் சேமிக்கும். பங்காளர்களுக்குப் **பங்கிலாபங்களாகத்** தொழிலின் இலாபங்களுள் செலுத்தப்படுவது ஒரு பங்கு மாத்திரமே. ஒரு பங்கு ஒரு **காப்பொதுக்கலாக** வைத்துக் கொள்ளப்படும். ஒரு நாட்டிற் பெரிய பாதுகாப்புச் சங்கங்களும் மதிக்கத்தக்க ஒரு பணவளவைச் சேமிக்கும். இவ்வழிகளாற் செய்யும் சேமிப்பும் கடன் பணமாகக் கொடுக்கப்படும். தேவையான ஒரு நேரத்திலே கடன் கொடுக்கக்கூடிய இப்பணம், ஆட்களின் விருப்பப்படி சேமிக்கப்பட்ட பணத்துக்குச் சேர்க்கப்படும். ஆகையால், பலவிதமான வட்டியளவுகளுக்குக் கொடுக்கப்படும் பணவளவு, இச்சேர்க்கையினால் கூடும். இதுவரை காட்டிய சிறப்புக்களால் விளங்குவது, வட்டியினளவு மிகவும் குறைந்தாலும், ஒரு வட்டியைச் செலுத்தாவிடின், ஓரளவு பணத்தைச் சனத்தொகையானது சேமித்துத்தரும். சேமிக்கும் இவ்

வளவானது வட்டியளவின்படி குறையாது, கூடவும் மாட்டாது. சேமிக்கும் பிரமாணத்தை, நூற்றுக்கு நான்கு வீத வட்டி தீர்மானமாகியிருக்கும் சமயத்திலே கடனுகப் பெற்றுக் கொள்ளவியலும். வட்டி நூற்றுக்கு மூன்று வீதம் தீர்மானமாகியிருக்கும் சமயத்திலும் பெற்றுக் கொள்ளவியலும்.

ஆனல், இப்படிச் சேமமாகும் அளவு முழுக்கடன் நிரம்பலுள் ஒரு பங்கு மாத்திரமே. இப்பங்கு வட்டியின்படி குறையாவிடினும் வளராவிடினும், முழுக் கடன் நிரம்பல் வரியொன்றையுண்டாக்குமெனில், ஒரு வட்டியும் அமையவேண்டும். ஓர் உதாரணத்தினுல் இதை விளக்கலாம். ஒரு நாட்டில் வட்டியளவு எவ்வளவென்ருலும் எப்பொழுதுமே 1,00,000 உரூபா கடனுக்குக் கொடுக்கக்கூடிய சேமிப்பு நடைபெறுமென்று கொள்வோம். நூற்றுக்கு 3 வீத வட்டிக்கு 50,000 உரூபாவையாவது நூற்றுக்கு 4 வீத வட்டிக்கு 80,000 உரூபாவையாவது நூற்றுக்கு 5 வீத வட்டிக்கு 150,000 உரூபாவையாவது கடனுக்குக் கொடுக்கச் சிலர் விரும்புவர் என்று கொள்வோம். அங்ஙனமாயின், கடன்நிரம்பல் அட்டவணை கீழ்க்காணும் வண்ணமிருக்கும்.

| வட்டியளவு நூற்றுக்கு | கடன் நிரம்பல் உரூபா |
|---|---|
| 3 .. | .. 150,000 |
| 4 .. | .. 180,000 |
| 5 .. | .. 250,000 |

இதனுற் கடன் நிரம்பல் வட்டியளவுக்கு நேர் தொடர்கொள்வது தெளிவாகும். இவ்வண்ணம், கடனுக்குக் கொடுக்கக்கூடிய சில பணம், வட்டியளவு எதுவென்ருலும் கடனுக்குக் கொடுக்கப்படின், பொதுவாகக் கடன் பணத்தின் நிரம்பல் வட்டியளவுடன் நேராகத் தொடர்புபட்டிருக்கும். வட்டியளவு அதிகரிக்கும் அளவுக்கே, கடன் பண நிரம்பலினது விரிவு உண்டாகும். இதன் மறுதலையும் இப்படியேயாகும்.

கடன் பணக் கேள்விக்கு அடங்கும் மூன்று விதமான கடன் எடுத்தல்கள் உள்ளன. ஒரு மருங்கில் நுகர்தலுக்காகக் கடன்படுபவர்கள் இருப்பார்கள். வருடத்துக்கு 5 வட்டிக்கு ஒருவன் 1,000 உரூபாவைக் கடனுக எடுப்பான். ஏனெனில், அவன், இற்றைக்கு நிகழும் நுகர்தற் சத்திக்கு மேலாக 1,000 உரூபாவின் நிகழ்கால நுகர்தல், எதிர்காலத்தில் 1,050 உரூபாவின் நுகர்தலைக் காட்டிலும் மதிக்கிறபடியாலேயாம். இதற்குச் சில ஏதுக்கள் உள. வருங்காலத்தில் பெரிய ஆதாயங்களைக் காத்திருக்கும் சில செல்வர்கள் நிகழ்கால நுகர்தலுக்காகக் கடன் எடுப்பார்கள். காலத்துக்குக் காலம் குறையும், கூடும் ஆதாயங்களைப் பெறுகிறவன் ஒருவன் நுகர்தலுக்காகக் குறுங்காலத்துக்கு மட்டும் கடன் எடுப்பான். நுகர்தலுக்காகக் கடன் எடுப்பது என்பதனுல் புலப்படுவது யாதெனில், ஒருவன் அப்படிக் கடன் எடுத்துக்கொண்டு நிகழ்காலத் திருத்தியைப் பெறும் பொழுது, அவனுடைய எதிர்காலத் திருத்தி குறையும். குறையும் எல்லைப் பயன் விதியின்படி ஒருவன் கடனுக்கெடுக்கும் அளவு கூடும்பொழுது, மேலும் மேலும்

கடனுக்கு எடுப்பதனால் அவனுடைய திருத்திக்குண்டாகும் அலகு, முறை முறையாகக் குறையும். மற்றைப்படி, அவன் கடனுக்கெடுக்கும் பணம் அதிகரிக்கு மளவுக்கே அவனுடைய எதிர்காலச் செலவு கூடும். ஆகையால், நிகழ்கால நுகர்தலின் எல்லைப் பயன் குறையும்பொழுது, எதிர்கால நுகர்தலின் எல்லைப் பயன்கூடும். இவ்வண்ணம் அவன் செலுத்தவேண்டிய சில வட்டிப் பிரமாணங்களிலே எதிர்கால நுகர்தலைக்காட்டிலும் நிகழ்கால நுகர்தலின் பயன் வட்டியளவுக்கு நேரே சமமாகும் ஒரு வரையறையை அடையும். இவ்வரையறைக்கு மேலாகக் கடன் எடுத்தால் அவனுக்கு நட்டமேற்படும். இவ்வண்ணம் வட்டியளவை மதித்துக்கொண்டு ஆட்கள் நிகழ்கால நுகர்தற் பொருட்டு, ஒரு தொகையைக் கடனுக்கெடுப்பார்கள். வட்டியளவு குறைந்தால் அதிகமாகவும், வட்டியளவு கூடினாற் குறைவாகவும் அவர்கள் கடன் எடுப்பார்கள்.

இரண்டாவதாக, அரசாங்கம் கடனுக்கெடுப்பதனால் உண்டாகும் கடன் கேள்வியும் உள்ளது. அரசாங்கம் கடனுக்கெடுக்கும் அளவு நிர்மானமாவது எல்லைப் பயனைக் கருதியன்று; நேரத்துக்கேற்றபடி ஏனைக் காரணங்களைக் கருதியேயாம். போர்க் காலத்திலே அரசாங்கம் அதற்கு வேண்டியவளவு கடன் எடுக்கப் பலவிதமான உபாயங்களைச் செய்கின்றது. போர் அலுவல்களுக்காகத் தேவையான கடன்களை யெடுக்கப் போதிய வட்டியளவைக் கொடுத்துக் கடன் பெற்றுக் கொள்கின்றது. நெடுங்காலக் கடனுக்காக வட்டிப் பிரமாணம் அதிகமானால், குறுங்காலக் கடனெடுக்கின்றது. இதற்கு மாறான சமயத்திலென்றால், காரணங்களும் மாறிவிடும். பொருளியல் அபிவிருத்திக்காகக் கடன் கேட்கும் ஓர் அரசாங்கம், வட்டியளவை யோசித்துப் பார்க்கும். வட்டியளவு குறையும் சமயங்களில் கடனெடுத்தலைத் தாமதஞ் செய்யவும் அரசாங்கம் விரும்பும். ஆகையால், ஒரு சமயம் வட்டியளவை மதிக்காமல் கடனெடுக்க விரும்பும் பொழுது, வேறு சமயங்களிலே அரசாங்கம் கூடிய வட்டிக்கும் கடன் கேட்கும்.

உற்பத்தித் தொழில்களுக்காகக் கடனெடுக்கிறவர்கள் அக்கடன் எடுப்பதனால் இலாபங்களை அமைத்துக் கொள்ள எதிர்பார்ப்பர். **திட்டமற்ற செய்கைகள் மூலம்,** அதாவது எந்திரக் கருவிகளைப்போன்ற **மூலதனப் பொருள்கள்** கொண்டு உற்பத்தி செய்தல் மிகவும் பயன்படுவதை நாம் முன்னொரு அத்தியாயத்திலே படித்தோம். தன்னுடைய சிரமத்தின் ஒரு பகுதியைச் செலுத்தி, ஒரு வலையைப் பின்னி மீன்பிடிக்கும்பொழுது, (நேரான முறையில்) தன் இரண்டு கைகளைக் கொண்டு மீன் பிடித்தலைக் காட்டிலும் பெருந் தொகையான மீனைப் பிடிக்க இயலுவதை நாம் படித்தோம். திட்டமற்ற செய்கைகள் மூலம் உற்பத்தி செய்தற் பொருட்டு பணத்தைக் கடனுக்கெடுக்கும் முயற்சியாளன், அப்படிச் செய்வதனால் ஆக்கத்தை அதிகரிக்க இயலுமென்பதை அறிவான். அவன் ஆக்கத்தைச் செய்வது நிறைபோட்டியிலென்றால் உற்பத்தியாகும் அதிகமான அலகுகளின் தொகையைச் சந்தை விலைக்கு விற்க இயலுமென்பதையும் அறிவான். அவன் ஆக்கத்தைச் செய்வது நிறையிலாப் போட்டியிலென்றால், அதிகமான அலகுகளின் தொகையை விற்க இயலுவது குறைந்த விலைக்கென்பதையும் அவன்

அறிவான். இரண்டாவதாக, முயற்சியாளன் மூலதனத்தை மேலும் மேலும் உப யோகிக்கும் பொழுது, குறையும் பயன் விதியின்படி மேலும் மேலும் கிரமமாக இணைக்கும் மூலதனத்துக்குக் கிடைக்கும் பயன், முறையாகக் குறையும். இவ் விரண்டு காரணங்களினுல் ஒருவரையறைக்குப்பின் அதிகமாய் மூலதனத்தை உபயோகிக்க எதிர்பார்க்கக்கூடிய எல்லை வருவாய் குறைதலை அவன் அறிவான். அவன் ஓரளவு வட்டிக்குக் கடன் எடுக்க வேண்டியதனுல், இவ்வட்டி அவனு டைய எல்லைச் செலவாகும். ஆகையால், அவன் காத்திருக்கும் எல்லை வருவாய் எல்லைச் செலவுக்கு நிகரும்வரை கடனெடுத்தல் அவனுடைய இலாபத்துக்கேது வாகும். வட்டியளவு குறைந்தால், அவனுடைய எல்லைச் செலவு குறையும். ஆகை யால், அவனுடைய எல்லை மேலும் மேலும் பெறுதல் அவனுக்கு இலாபந்தரும். இவ்வண்ணம் வட்டியளவு கூடினுல், அவனுடைய கடனெடுத்தலின் எல்லைச்செல வும் கூடும். ஆகையால், இக்கூடிய செலவுக்கு அவனுடைய எல்லை வருவாய் நிக ரும்வரை கடனெடுத்தலைக் குறைத்தல் அவனுக்கு இலாபமாகும்.

இதுவரை விரித்துரைத்த காரணங்களால் கடன் கேள்வியையும் கடன் நிரம் பலையும் கண்டுகொண்டோம். ஏனைவிலையைப்போல, வட்டியளவும், கடன் கேள் வியும் கடன் நிரம்பலுக்கு நிகரும் எல்லையிலேயே நிர்மானமாகும். ஏனைக் கார ணங்கள் மாருமல் இருக்க, (அதாவது கேள்வி மாருமல் இருக்க) நிரம்பல் கூடி னுல், வட்டியளவு குறையும். நிரம்பல் குறைந்தால் வட்டியளவு கூடும். ஏனைக் காரணங்கள் மாருமல் இருக்க (அதாவது நிரம்பல் மாருமல் இருக்க) கேள்வி கூடினுல், வட்டியளவுகூடும். கேள்வி குறைந்தால் வட்டியளவு குறையும்.

அங்ஙனமாயின், இவ்விளக்கத்தின்படி, வேண்டிய நேரத்திலே ஒரேமாதிரி யான ஒரு வட்டியளவு இருத்தல் வேண்டும். உண்மையாகவே, அப்படியன்று. அதற்கு ஒரு காரணமுமிருக்கின்றது. கடனெடுக்கும் ஒவ்வொருவனுடைய திரும் பிச் செலுத்துதலின் நம்பிக்கை, சுயமான அசையாத தன்மையினுல் அமைந் திருந்தால் ஒரு காலத்திலே வட்டியளவு ஒரே மாதிரியாகும். உண்மை வாழ்க்கை யிலெனின், கடனெடுப்பவர்களுக்கு இப்படிச் செய்யவியலாது. அவர்களுடைய கடனைப் பற்றிய **கொடுகடன் தகுதி** பலவித அளவாக அமையும். ஐக்கிய இராச் சியத்தைப் போன்ற ஒரு நாட்டிலெனின், கடன் கொடுப்பவனுடைய தாத்தைக் கருதும்பொழுது மிக நம்பிக்கையுள்ள கடனெடுக்குந் தாபனம் அரசாங்க மாகும். ஏனைக் கடனெடுப்பவர்கள் சகலரும் அவ்வளவு நம்பிக்கையுள்ளவர்கள் அல்லர். அவர்களுள் சிலரின் கடனைப்பற்றிய நம்பிக்கை ஏனையோரைக் காட்டி லும் குறைவாகும். ஒரு நாட்டில் கடனெடுப்பவர்கள் பலவிதமான அளவில் கடனைப்பற்றிய நம்பிக்கையை வகிப்பவர் ஆவர். நம்பிக்கை குறைந்த மாத்தி ரத்தில், கடன் பணம் திரும்பக் கிடைக்காது என்ற ஐயம் அதிகரிக்கும்.

ஆகையால், கடன் கொடுப்பவர்கள் தங்கள் நுகர்தலைத் தாமதஞ் செய்வர், வட்டியென்ற ஒரு செலவையும், தங்கள் கடன் பணம் திரும்பிக் கிடையாதிருப்ப தன் அபாயத்தை ஒப்புக்கொள்ளுகிறபடியால் இன்னெரு பொறுப்பையும் ஏற்க வேண்டியதாகும். கடனெடுப்பவரின் நம்பிக்கை குறைந்த மாத்திரம், பின்னைக்

குறித்த விலை கூடும். ஆகையால், வட்டி என்று சாதாரண வழக்கில் இவையும் சொல்லால் கருதப்படும் சம்பளம், பொருளியல்மூலம் இரண்டு விலைகளால் நிறை யும். அவை, நுகர்தலைத் தாமதஞ் செய்கிறபடியால், பெறும்விலையும் (வட்டி) கடன் பணம் திரும்பக்கிடையாதிருந்தலின் அபாயத்தை ஒப்புக்கொள்ளும் விலை யுமாம். இக்காரணத்தின்படி "வட்டி" யென்று சாதாரண வழக்கில் இவையும் சொல்லலாற் குறிக்கப்படும் வேதனம் ஒரேமாதிரியாவதில்லை. பொன்-வெள்ளி முதலிய பண்டங்களையும் காணிபூமிகளையும் அடகுவைத்து எடுக்கும் கடன் களுக்கு வட்டியளவு பெருமலிருத்தலினால் அபாயமானது குறைந்து போகும்.

கடன் எடுப்பவர்கள் நம்பிக்கை ஒரேமாதிரியானாலும், கடன்கொடுக்கும் வரையறையின்படி வட்டியினளவு மாறும். நெடுங்காலக் கடன்களின் வட்டி யளவு கூடும் பொழுது குறுங்காலக் கடன்களின் வட்டியளவு குறையும். இதன் காரணத்தைக் கண்டு கொள்ளும்பொருட்டு, நம்பிக்கை பற்றிய யாதுமோர் அபாயமில்லாத அரசாங்கமானது நெடுங்காலத்துக்குரியனவும் குறுங்காலத்துக் குரியனவுமான கடன்களை எடுப்பதிலே செலுத்தவேண்டிய வட்டியளவு ஏன் மாறுமென்று ஆராய்ந்து பார்ப்போம். ஓர் அரசாங்கம் 3% வட்டிக்கு நெடுங் காலக் கடனைத் தொடங்கிற்றென்று கொள்வோம். இக்காலத்தில் வியாபார வட்டியளவும் நூற்றுக்கு மூன்றென்று நாம் கொள்வோம். இங்ஙனம் கூறிய கடனைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அரசாங்கம் உடன்படிக்கைகளை விற் கின்றது. ஒருவன் 100 ரூபாவின் 3 விதம் வட்டிதரும் அரசாங்கத்தின் உடன் படிக்கையைப் பெற்றால், அவனுக்கு ஒரு வருடத்துக்கு 3 ரூபாவைச் செலுத்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கும். அதை விலைகொடுத்து வாங்கும் நாளுக்கு அடுத்த நாளில் அவனுக்குப் பணம் தேவைப்பட்டால், ஏனைக் காரணங்கள் மாறுமல் இருக்குமாயின், அவன் அந்த உடன்படிக்கைகளை வேறொருவனுக்கு அவ்விலைக்கே (100 ரூபாவுக்கு) விற்க இயலும். சிறிது காலத்துக்குப்பின், பல காரணங்களால் வட்டியினளவு 6 % ரூபாவின் ஓர் ஆதாயத்தைப் பெறமுடி யும். ஒருவனுக்கு 100 ரூபாவின் 3% ஆதாயம் கிடைக்கும், உடன்படிக்கை இருந்தால் அவனுக்கு இப்போது அதைவிற்க இயலுவது அவன்பெற்ற விலையின் பாதிக்கு மட்டுமே; அதாவது 50 ரூபாவுக்கு மட்டுமே. இதற்குக் காரணம் கண்டுகொள்ளல் கடினமானதன்று. 100 ரூபாவைக் கடனுக்குக் கொடுத்து, ஒரு வருடத்துக்கு 6 ரூபா ஆதாயம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமயத் திலே ஒரு வருடத்துக்கு 3 ரூபாவின் ஆதாயம் கொடுக்கும் உடன்படிக்கை 50 ரூபாவே விலைமதிப்பாகும். ஆகையால், அரசாங்கதுக்காவது நெடுங்கால (20 வருடம்) கடனைக்கொடுப்பவன் ஏதேனும் அபாயத்தை எதிர்பார்க்க வேண்டியதாகும். தான் பணத்தை அடைத்து (கடனுக்குக் கொடுத்து) வாங்கிய உடன்படிக்கைகளை விற்க நேர்ந்தால், அவற்றை விற்கும் நேரத்தில் நிகழும் வட்டியாளவின்படி, அவற்றைப் பணத்துக்கு மாற்றவியலும். தான் உடன் படிக்கைகளை வாங்கிய காலத்தைக்காட்டிலும் வட்டியளவு கூடிய் காலத்திலே அவற்றைவிற்றால், அதற்காக அடைத்துவைத்த பணம் கூடக் கிடைக்காது.

9—CP 1397 (7/67)

ஆகையால், நெடுங்காலக்கடன் கொடுத்தபொழுது தனக்குப் பணம் தேவை யான நோத்திலே வியாபாரவட்டி அதிகரிப்பதை அவன் ஒப்புக்கொள்வான். கடன் கொடுக்கும் காலம் நீளும் அளவுக்கு அபாயமும் பெருகும். ஆகையால், கடன்கொடுக்கும் காலம் நீளும் அளவுக்கு வட்டி அளவும் அதிகரிப்பது, முன் கூறிய அபாயத்தை ஏற்பதற்கு ஒரு சலிகையாகும். பொதுவாக, தன் நம்பிக் கையின் மேல் யாதொரு சந்தேகமுமில்லாத ஓர் அரசாங்கமே நெடுங்காலக் கடன் எடுக்க, நூற்றுக்கு மூன்று வீத மட்டுமுடைய ஒரு வட்டியைச் செலுத்த வேண்டும். குறுங்காலக் கடனெடுப்பதில் செலுத்தவேண்டிய வட்டியளவு இதற் குப் பெரும்பான்மையும் குறையும்.

**இறைசேரியுண்டியல்கள்**[12] மூலம் (இதன் விவரத்தை அடுத்த அத்தியாயத் திற் பார்க்க) அரசாங்கம் கடன் எடுப்பது பொதுவாக மூன்று மாதங்களுக்கே யாம். ஆகையால், இந்தக் குறுகிய காலத்துக்குள் வியாபாரவட்டியளவு வேறு படச் சிறிதளவே இடமுண்டு. இறைசேரியுண்டியல்களாவன, ½% மட்டும் மிகக் குறைந்த வட்டியளவுக்குக் கடன்பெறும் முறையுடையன. இறைசேரி உண்டியல் களாக, குறுங்காலக்கடன் மிகக் குறைந்த ஒரு வட்டியளவுக்கு எடுக்கக்கூடு வது, அவை குறுங்காலத்துக்குரியனவாதலால் மாத்திரமன்று. குறுங்காலக் கடன் கொடுக்க விரும்பும் கடன் நிதி விசேடமுளது. நாம் அதைப்பற்றிப் பின்னர் விரித்துரைப்போம். வியாபார வங்கிகள் இக்கடனைக் கொடுக்கின்றன. குறுங்காலக் கடன் பண நிரம்பல் அதிகமானலும் வட்டியளவு குறையும். கடை சியாக, செல்வமுற்ற சமயங்களிலும் வறுமையுற்ற சமயங்களிலும் வட்டியளவு வேறுபடும்.

நாம் இதுவரை விரித்துரைத்த, வட்டி தீர்மானமாகும் மாதிரியை விளக்க முன்னிடும் மதத்தை இவ்வண்ணம் சுருக்கவியலும். வட்டியானது நுகர்தலைத் தாமதஞ் செய்யச் செலுத்தும் விலையாகும். பலவிதமான வட்டியளவுகளுக்குப் பலவிதமான பணப்பிரமாணங்களைக் கடனுக்குக் கொடுக்க மனிதர் விரும்புவார் கள். கடன் எடுப்பவர்களின் நம்பிக்கை ஒரேமாதிரியானல் ஒரு காலவரையறைக் குக் கொடுக்கும் கடன்களின் வட்டியளவும் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும். ஆனல், பலவிதமான கடனெடுப்பவர்களின் நம்பிக்கை பலவிதமானதாதலால், பொது வழக்கத்தில் வட்டியென்ற சொல்லால் குறிக்கப்படும் செலுத்து பணத் திற்குப் பொருளியற் கலையில் குறிக்கப்படும் வட்டியென்ற பெயருள்ள செலுத்து தலும், கடன்பணம் திரும்பிக் கிடையாமையின் அபாயத்தைத் தாங்கும் பொருட்டுச் செலுத்தும் ஒரு பணமும் அடங்கியுள்ளன. ஆகையால், ஒரு கால வரையறைக்குப் பலருக்குக் கொடுக்கும் கடனின் பெறுமானம் மாறும். இதற் குப் பொது வழக்கில் அமையும் வட்டி என்ற சொல், பொது வழக்கில் அமை யும் விதம் இணைப்பதால், பலருக்குக் கொடுக்கும் கடன்களின் வட்டியும் மாறும்.

வட்டி மாறுவதற்கு இன்னொரு காரணமென்னவெனில், கடன்கொடுக்கும் கால வரையறையின் மாறுதலாம். ஏனைக் காரணங்கள் மாறாமல் இருக்க, குறுங்காலக் கடனைக்காட்டிலும் நெடுங் காலக் கடனுக்கு அதிகமான வட்டி செலுத்தல் வேண்டும்.

ஏனைய மதம் முழுவதுமே பணவலுவேகங்களை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. ஆகையால், இப்பகுதியின் கீழ்க்காணும் வாக்கியங்களை, பணத்தையும் வங்கியையும் பற்றிய அத்தியாயத்தை வாசித்த பின்பு வாசித்தால் மிகவும் ஏற்றதாகும். இவ்விடத்திலே, இரண்டாவது மதம் ஆராயப்படுவது. வாசிப்போனுல் பணத்தையும் வங்கிகளையும் பற்றிய அறிவு உண்டு என்று எண்ணிக்கொண்டேயாம். எந்நேரத்திலும் பணத்துக்கு ஒரு கேள்வியுண்டு. மனிதர் பணத்தைக் கேட்பது அதைப் பொறுப்பேற்பதற்கேயாம். இவ்வெண்ணத்துடன் எல்லோரும் பணம் கேட்பது பரிமாற்றத்துக்காக அதனை உபயோகிப்பதற்கேயாம். பலவிதமான செலவுகளுக்கு ஒருவன் ஓரளவு பணத்தைத் தன்கையில் வைத்துக் கொள்வான். ஒருவன் நுகர்வோனுயினும் ஆக்குவோனுயினும் இது உண்மையாகும். சனத்தொகையின் பொதுவான பணவுபயோகத்தை அறிந்தபின், மனிதர் இவ்வண்ணம் கேட்கும் அளவைக் கணக்கிடுதல் சுலபமாகும். சிலர் தங்கள் அசையும் பரிமாற்றங்களுக்குத் தேவையான அளவைக் காட்டிலும் பெரிய அளவு பணத்தை ஏற்கவிரும்புவர். சிலர் பணத்தைக் கடனுக்குக் கொடுப்பதிலும் அதைத் தம் கையில் வைத்துக்கொள்ள விரும்புவதனுலே இப்படியாகும். இவர்கள் இப்படிச் செய்வது எதிர்காலத்திலே வட்டியளவு அதிகரித்துத் தங்கள் முதலீடுகளின் விலைமதிப்புக் குறைந்துவிடுமென்ற அச்சத்தினுலேயாம். அசையும் பரிமாற்றங்களுக்கு மேலாக இவர்கள் வைத்துக் கொள்ளும் பணப்பிரமாணம் தீர்மானிக்கப்படுவது நிகழும் வட்டியளவினுலேயாம். இவ்வண்ணம், ஒரு பாதி **கொடுக்கல்வாங்கல்** நோக்கத்தின்படி தீர்மானிக்கப்படுவதும், ஒரு பாதி உத்தேச வியாபார நோக்கத்தின்படி தீர்மானிக்கப்படுவதுமான திரவத்தேர்வு,[1] அல்லது பணக்கேள்வி உண்டு.

அரசாங்கத்தினதும் வங்கி முறையினதும் மூலமே பணத்தின் நிரம்பல் தீர்மானிக்கப்படும். வட்டியளவைப்பற்றிக் கவனமில்லாமலே பண நிரம்பல் தீர்மானிக்கப்படும். இவ்வண்ணம் பணத்தின் நிரம்பல் மீள்தன்மையில்லாதபொழுது, அதாவது, வட்டியாதாயினும், பணநிரம்பல் மாறாமல் இருக்குமாயின் பணத்தின் விலை, அல்லது வட்டியளவு கேள்வியினுல் தீர்மானிக்கப்படும். கேள்வி மாறாமல் இருக்கையில், நிரம்பல் அதிகரித்தால் வட்டியளவு குறையும்.

கடைசியாக, சொல்லுவது, வட்டியைப்பற்றிய பண வலுவேகக் கொள்கை பொருளியல் முறையில் மிகவும் முன்னேற்றமடைந்த ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கியநாடு போன்ற நாடுகளைப்பற்றியெனின் உண்மையாகலாம்.

ஆனால், இலங்கை, இந்தியாவைப் போன்ற நாடுகளைப் பற்றியெனின், வட்டியளவு தீர்மானமாகும் வலுவேகங்களை நன்றாக விரித்துரைப்பது, இதற்கு முன் கூறிய கொள்கையே.

இப்பொழுது நாம் நான்காவது ஆக்கச்சாதனத்துக்கு, அதாவது முயற்சிக்குக் கிடைக்கும் ஆதாயம் தீர்மானமாகும் விதத்தை ஆராயலாம். முயற்சியாற் கிடைக்கும் ஆதாயம் இலாபமாகும். இலாபமென்றால், ஏனை ஆக்கச்சாதனங்களுக்குச் செலுத்தியபின், எஞ்சும் மீதியாகும். சம்பளம், வாடகை, வட்டி முதலியவற்றைச் செலுத்தியபின், முயற்சியாளருக்கு ஒரு மீதி தேறுமாயின், அது பொருளியல் மூலம் இலாபமாகும். வேறு முறையிற் கூறின், இலாபங்களாவன தொழிலுக்குக் கிடைக்கும் ஆதாயத்துக்கும் அதன் செலவுகளுக்குமிடையிலுள்ள வேற்றுமைகளாம். இச்செலவுகளுக்குள் சம்பளமும், வாடகையும், வட்டியும் அடங்கும். பொதுவழக்கத்தின்படியெனின், நிச்சயிக்கப்பட்ட மீதிக்கு இலாபமென்ற பெயருண்டு. ஒரு குறைவு நிகழ்ந்தால், அதற்கு நட்டமென்ற பெயருண்டு. அது எங்ஙனமாயினும் பொருளியலிலெனில் முதலாவதற்கு இலாபமென்று சொல்லவும் இரண்டாவதற்கு எதிரான இலாபமென்று சொல்லவும் இயலும். முயற்சியாளனே தொழிலாளனும் என்றாலும், தொழிலின் எசமானே தன் தொழிலின் முதலீட்டைச் செய்பவனென்றாலும், ஒரு தொடர் உண்டாகவியலும். அப்படிப்பட்ட முயற்சியாளன் தன் ஆதாயத்துக்கும் செலவுக்குமிடையிலுள்ள வேற்றுமையை **இலாபமாகக்** கொள்வான்.

அது எங்ஙனமாயினும், பொருளியல் முறையில், அவனுக்கு ஒரு தொழிலாளனாகவும் முகாமைக்காரனாகவும் வந்துசேரும் சம்பளமும், தொழில்தாபித்திருக்கும் நிலத்துக்கு வாடகையாகச் செலுத்தும் பணமும், அவன் முதலீட்டைச் செய்த மூலதனத்துக்கு வரும் வட்டியும் ஆகிய இவை எல்லாவற்றையும் கொண்டு **அனுமதிகளைச்** செலுத்தியபின், மிஞ்சினால்தான் அவனுக்கு இலாபம் கிடைக்கும். இதை விளக்க நாம் ஓர் உதாரணத்தை எடுப்போம். 1,000 ரூபாவின் ஒரு மூலதனத்தை முதலீடுசெய்து கருவி முதலியவற்றை வாங்கித் தனக்குச் சொந்தமாயிருக்கும் ஒரு சின்ன ஆவண அறையில், ஒருவன் ஓர் அற்ப வியாபாரத்தை ஆரம்பித்திருக்கிறான் என்று கொள்வோம். இவ்வியாபாரத்துக்காகத் தானே முகாமைப் பதவியையும் சேவக பதவியையும் வகிப்பான் என்றும் கொள்வோம். ஒரு வருட முடிவிலே கணக்குக்களைப் பார்த்துத் தன்னுடைய வியாபாரத்துக்கு 16,000 ரூபா விலைமதிப்புள்ள சாமான்களை வாங்கி 20,000 ரூபாவுக்கு விற்கின்றான். பொதுவாக அவனுக்கு 4,000 ரூபா இலாபம் கிடைத்ததென்று எண்ணக்கூடும். பொருளியற்கலை சார்பாகப் பார்க்கும்பொழுது நிலைமை அப்படியன்று.

இக்காலத்தில் நிகழும் வட்டியளவு நூற்றுக்கு ஐந்தெனின், தன் முதலீட்டின் வட்டிக்காக 50 ரூபாவைப் புறம்பாக்க வேண்டும். தனக்குச் சொந்தமான கடையறையின் கூலிக்காகச் சிறிது பணத்தைப் புறம்பாக்க வேண்டும். இது 240 ரூபாவென்று கொள்வோம். தன் சிரமத்துக்காக இன்னொரு தொகை

பணத்தை ஒதுக்க வேண்டும்; (அது) 2,400 உரூபாவெனக் கொள்வோம். இச் செலவுகளுக்குப்பின், மிஞ்சிய பணம் மட்டும், அதாவது 1,310 உரூபா மட்டும் இலாபமாகக் கொள்ளலாம். ஆகையால், முற்கூறிய அற்ப வியாபாரியினது ஆதாயங்களைக் கீழ்க்காணும் முறையாகப் பிரிக்கவியலும்:

| | | ரூ |
|---|---|---|
| வட்டி | .. .. | 50 |
| கூலி | .. .. | 240 |
| சம்பளம் | .. .. | 2,400 |
| இலாபங்கள் | .. | 1,310 |
| | முழு ஆதாயம் .. | 4,000 |

முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் இலாபம் அமைப்பது தொழில்களுக்கு நட்டமேற்படுவதன் அபாயத்தை முயற்சியாளர் வகிக்க வேண்டியதனுலேயாம். புதிய பொருளியல் முறையின் ஆக்கம் சாதாரண சந்தைக்காகச் செய்யப்படும் ஆக்கமென்பதை நாம் முன்னர்ப் படித்தோம். யாதர்வதொரு தொழிலைத் தொடங்கும் ஒரு முயற்சியாளன் உற்பத்தி செய்வது, தன்னுடைய ஆக்கச் செலவுக்கு மேலான ஒரு விலைக்கு விற்க எதிர்ப்பார்ப்பதனுலேயாம். ஆகையால், ஒரு விலையை எதிர்பார்ப்பதனுல் உற்பத்தியாளன் ஆக்கத்தைச் செய்கிறுன். ஆனுல், இவ்விலை சிறுபான்மையில் தீர்மானமாவது கேள்வியின்படியாம். எதிர் காலக் கேள்வியைப் பற்றிய அவனுடைய விலைமதிப்பு உண்மையானுல், அவனுக்கு இலாபம் கிடைக்கும். அப்படி இராவிடின், அவன் நட்டம் அனுபவிக்க நேரிடும். சந்தேகத்தைப்பற்றிய அபாயத்தை ஏற்றுக்கொள்வதால், அவனுடைய விலைமதிப்புக்கு அவனுக்கு ஓர் இலாபம் கிடைக்கும். இலாபமானது அபாயத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக வரும் ஆதாயம் என்று கொள்வது இதனுலேயாம்.

வாடகையைப் போலவே இலாபமும் பெறுமானத்தின் நற்பயனென்பது தெளிவாகப்புலப்படும். ஒரு பண்டத்தின் எதிர்காலக் கேள்வி அதிகரிக்குமென்பதை விலைமதித்து ஒரு முயற்சியாளன் அதன்படி உற்பத்தி செய்வான். அப்பொழுது அவனுடைய தீர்மானம் திருத்தமானுல், எதிர்காலக் கேள்வியைப்பற்றிய தீர்மானமும் திருத்தமாக, அவன் இலாபம் அடைவான். அப்பண்டக் கேள்வியும் அதன் விலையும் அவன் பெறும் இலாபத்தின்படி தீர்மானமாகாது. அப்படியின் றேல், அவனுடைய இலாபம் தீர்மானமாவது பண்டங்களுக்குக் கிடைக்கும் விலையின்படியாகும்.

ஒவ்வொரு முயற்சியாளனுக்கும் கிடைக்கும் இலாபம் குறுங்காலத்துக்கு மட்டும் வரையறையாதல் காணப்படும். ஒரு தொழிலில் முயற்சியாளர்களுக்கு அதிகமான இலாபம் கிடைக்குமென்பது வெளிவரும்பொழுது ஏனையோரும் அத் தொழிலிற்சேர்ந்து வழங்கலை அதிகரிப்பர். அப்பொழுது விலையானது குறையத் தொடங்கும். இப்படி, ஆதாயத்துக்கும் செலவுக்குமிடையில் வேற்றுமை மறை

யத்தொடங்கும். போட்டியின் பலததை நீக்கவியலுமாயின், தொழில்களின் முயற்சியாளர்களுக்குக் கலப்பில்லாத ஓர் இலாபம் பெறமுடியும். ஆகையால், நிறையில்லாப்போட்டியிலும் தனியுரிமையிலும் முயற்சியாளர்களுக்கு நெடுங் காலத்திலேயாவது சுத்தவிலாபங்கள் பெறவியலும்.

இலாபங்களாவன, பெரும்பான்மையில் மாறிவிடும் சொற்ப ஆதாயங்களாம். ஆனதால், வேண்டிய ஒரு வருடத்திலே சில தொழில்களுக்கு இலாபங்கள் கிடைக்கும் பொழுது, வேறு சில தொழில்களுக்கு நட்டங்களேற்படும். இதன் காரணங்கள் எல்லாவற்றையும் யோசித்துப்பார்க்கையில், ஒருவன் கருதும் அளவு, முயற்சியாளர், வகுப்புக்குக் கிடைக்கும் இலாபங்கள் அதிகமானவை யல்ல. மேலும், ஒரு பொருளியல் முறையிற் போட்டித் தன்மையுள்ள அளவுக்கே அதன் இலாபங்கள் குறையும். பெரும் பான்மையும், முன்னேறிய சமுதாயங் களில் தேர்ச்சிபெற்ற முயசியாளர்கள் சில பேருக்கு அதிக இலாபங்கிடைப்ப தால், இன்னும் சிலரை அதனிடை ஈடுபடவற்புறுத்துகின்றது. முன்னேறாத நாடுகளில் இவ்வற்புறுத்தல் அத்துணை அதிகமாக இராதபடியால், முயற்சியாள ரின் வகுப்பு சிறுகும்.

ஆதாயப் பரப்பைப்பற்றிய இப்பகுதியிலே, பலவிதமான ஆக்கச்சாதனங் களிடையே சமுதாய ஆதாயம் பரவும் விதத்தை ஆராய்ந்தோம். ஆட்களிடையி லாவது குடும்பங்களிடையிலாவது இவ்வாதாயத்தைப் பங்கிடுதல், ஆக்கச் சாதனங்களின் உரிமையில் தங்கியுளது. ஒருவனுடைய முழு ஆதாயம் இவ்வாக் கச்சாதனங்கள் எல்லாவற்றினதோ, அவற்றுட் சிலவற்றினதோ, உரிமை காரண மாக அவனுக்குக் கிடைக்கும் ஆதாயமாகலாம். ஒருவன் தன் சம்பளமாக ஆதா யத்தைப்பெறவியலும். தனக்குரிய பூமிக்கு வாடகையாகவோ தன்னுடைய மூல தனத்துக்கு வட்டியாகவோ, முயற்சியாளனுயின் இலாபமாகவோ ஒருவனுக்கு ஆதாயம் கிடைக்கும். ஆனல், முதலாண்மையுடைய சமுதாயங்களில் அதிகமான ஆதாயங்களைப் பெறுவது சம்பளமாகவோ இலாபமாகவோ அல்ல, வட்டியும் கூலியுமாகவேயாம்.

ஆகையால், முதலாண்மையுடைய ஒரு சமுதாயத்தில் ஆதாயங்களிற் பெரிய வொரு வேற்றுமையுளது. ஏனெனில், ஆக்கச்சாதனங்களின் உரிமை பெரும் பான்மையில், பூமியும் மூலதனமும் ஆகிய ஆக்கச்சாதனங்களின் உரிமையை நிகாாதபடியாலேயாம்.

## 12 ஆம் அத்தியாயம்

| | | |
|---|---|---|
| 1. திரவத்தேர்வு | ... | Liquidity preference |
| 2. சுயமான | ... | Identical |
| 3. ஒறுப்பு | ... | Abstinence |
| 4. வைப்புக்கணக்கு | ... | Deposit account |
| 5. நிலுவை | ... | Balance |
| 6. ஒதுக்கம் | ... | Reserve |
| 7. நேரில்வழிகள் | ... | Round about processes |
| 8. மூலதனப் பொருள்கள் | ... | Capital goods |
| 9. நம்பிக்கை | ... | Credit worthiness |
| 10. அபாயம் | ... | Risk |
| 11. உடன்படிக்கைகள் | ... | Bonds |
| 12. இறைசேரியுண்டியல் | ... | Treasury bills |
| 13. பணத்தைத்தாங்க | ... | To hold money |
| 14. கொடுக்கல்வாங்கல் நோக்கம் | ... | Transactions motive |
| 15. உத்தேச நோக்கம் | ... | Speculative motive |
| 16. இன்மையிலாபம் | ... | Negative profit |

# 13 ஆம் அத்தியாயம்

## பணமும் வங்கிகளும்

புது உலகத்தில் பொருளியல் சீவியம், மானிய யுகத்துக்குப் பெரும்பான்மையில் வேறுபட்டிருப்பதை நாம் முதலாம் பகுதியிலே காண்போம். மானிய யுகத்தில் மனிதர் ஏறத்தாழ தமக்குத் தேவையான பண்டங்கள் சேவைகளாகிய எல்லாவற்றையுமே அமைத்துக் கொண்டதை நாம் கண்டோம். ஆனால், புது உலகத்தில், தமக்குத் தேவையான மூலத்தேவைகளை ஆக்கிக் கொள்பவர்கள் சிலர் மட்டுமே இருக்கிறார்கள். பலர் ஒரு பண்டத்தையே ஆக்குவார்கள். இன்றேல், அற்பமான பண்ட வகைகளை ஆக்குவார்கள். இல்லாவிட்டால் சிலர் ஒரு பண்டத்தைத் தொகையாக உற்பத்தி செய்வதில் ஈடுபட்டு உதவி புரிவார்கள். இல்லாவிடின், ஏனையோருக்கு ஒரு சேவை செய்வார்கள். இவ்விதத்தில் புது உலகில் மனிதர் சிறக்கும் இயல்புக்கேற்ற ஆக்கத்தில் ஈடுபடுவார்கள். சிறக்கும் இயல்புக்கேற்ற காரியங்களைச் செய்வதனால் பல இலாபங்கள் அமையும். ஆதலால், புதுப்பொருளியல் முறையொன்றில் சிறக்கும் இயல்புக்கேற்ற தொழில் பெரும்பான்மையும் செய்யப்படும்.

ஒருவன் சிறக்கும் முறையில் ஒரு பொருளை உற்பத்திசெய்வது, தனக்குரிய மறுதேவைகளை மாற்றிப் பெற்றுக்கொள்ள இயலும் என்பதை அறிகிறபடியாலேயாம். மேலும், எல்லாத் தேவைகளையும் தானாகவே ஆக்கிக் கொள்ள முயற்சி செய்வதைக் காட்டிலும், இம்முறைமூலம் தான் தேவைகளைத் தணித்துக்கொள்ள இயலுவதையும் அவன் அறிவான். ஆகையால், இப்படிப்பட்ட பொருளியல் முறை நிகழ்வது, ஏனையோரும் சிறக்கும் இயல்பின்படி உற்பத்தி செய்த பண்டங்களையும் சேவைகளையும் மாற்றிப் பெறுவதற்கு எண்ணுவதாலேயாம். ஆகையால், புதுப்பொருளியல் முறையின் இன்னொரு முக்கியமான அங்கம் பண்டமாற்றமாகும்.

பண்டமாற்றத்தை அமைக்கும் இரண்டு வழிகளுள. இவற்றுள் ஒன்று பண்டமாற்றுமுறை என்று சொல்லப்படும். இம்முறையை அவதானித்துப் பார்ப்போம். பண்டமாற்றுமுறை நிகழும் ஒரு சமுதாயத்தில் அரிசியை மாத்திரம் உற்பத்தி செய்யும் ஒரு கமக்காரனுக்கு உடுப்புக்கள் சில தேவையாயிருந்தால், அவன் உடுப்புக்காகச் சிறிது அரிசியைப் பண்டமாற்றுச் செய்வான். இதனால், பண்டமாற்று முறையின்படி "மாற்றம்" நிகழ்கின்றது. இம்மாற்றத்தை நடாத்தவெனின், கமக்காரனுக்கு உடை தேவையாகும்பொழுது நெசவுகாரனுக்கு அரிசியும் தேவைப்படும். கமக்காரனுடைய சீலைத் தேவையும் நெசவுக்காரனுடைய அரிசித் தேவையும் ஒருங்கே உண்டாதல் வேண்டும்; இவை இரண்டும் ஒன்றுபடல் வேண்டும். ஆனால், உண்மை வாழ்க்கையில் இத்தேவைகள் இரண்டும் அரிதாகவே ஒருங்கு நிகழும். கமக்காரனுக்குத் தன் அரிசிக்காக மாற்றுவதற்குச் சீலை தேவையாகலாம். ஆனால், நெசவுக்கார)க்குத் தன் சீலைகளுக்கு மாற்றாக அரிசியன்றிப் பானைகள் தேவையாகலாம். அப்பொழுது, ஒரு

குயவனுக்குத் தன் பானைகள் பொருட்டு மாற்றாக அரிசி தேவையாகலாம். நிலைமை இப்படியெனின், குயவன் தன் பானைகளைச் சீலைகளுக்காக மாற்றுவதனும் அதற்குப்பின் அச்சீலைகளைக் கமக்காரனுடைய அரிசிக்கு மாற்றுவதனு லும், மூவருடைய தேவைகளும் நிறைவேறும் வண்ணம் பண்டமாற்றினை நடாத்த இயலும். இப்படிப்பட்ட கலப்பில்லாத தேவைகளை நிறைவேற்றுவதற் காக வெவ்வேறான தேவைகளுள்ள, வெவ்வேறு மனிதரைக் கண்டுகொள்ளுத லும், அவரவருக்குத் தேவையான பண்டங்களைக் கண்டுகொள்ளுதலும் பரி மாற்றத்திற்குத் திருத்தியாகும். இவ்விதத்தில் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் மிகவும் சங்கடமான காரியமென்பது ஐயமின்றி விளங்கும். சீலை கள் தேவையான கமக்காரன், முதலில் சீலைகளுக்குப் பதிலாகக் குயவனைத் தேடிச் சென்று, அதன் பின் பானைகளுக்குப் பதிலாக அரிசியைத் தேடும் குய வனைக் காணவேண்டும். அதனால், கமக்காரனுக்குப் பல தொந்தரவுகள் நிக ழும். அது மாத்திரமன்று ; அவனுடைய நேரமும் பெரும்பாகம் வீணே கழியும். இப்படிப்பட்ட வருத்தங்களை அனுபவிப்பதிலும் பார்க்க, சிறக்கும் இயல்பின் படி ஆக்கத்தைக் கைவிட்டு அந்தந்தத் தேவைகளை நிறைவேற்றக்கூடியவற் றைச் சிறிது சிறிதாகத் தானே உற்பத்தி செய்தல் அதிகம் சுலபமாதல் சிலருக் குப் புலப்படக்கூடும். இதனால், சிறக்கும் இயல்பின்படி உற்பத்தி செய்தலின் இலாபங்கள் முழுச்சனத்தொகைக்குமே கிடைக்கும்.

ஆனபடியால், மாற்றமடையும் புதுப் பொருளியல் முறையொன்றை நடாத்துவ தெனில், இலேசான தெளிவான மாற்றமுறையொன்று இருத்தல் வேண்டும். தன் பண்டங்களுக்கு ஒரு மாற்றாக எல்லோராலுமே பொதுவாக ஏற்றுக்கொள் ளப்படும் எதையேனும் காணமுடிந்தால், முற்கூறிய இடுக்கண்களை மேற் கொள்ளவியலுமென்பது பழங்காலத்தில் கண்டது. எல்லோராலும் பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு பொருளுக்குக் கமக்காரன் தன் அரிசியை மாற்றா கக் கொடுத்தால், அவனுடைய மாற்றுத்தொழில் ஐயமின்றி இலேசாகும். பழைய மனிதர் இக்காரணத்தைக் கண்டுகொண்டு, சமுதாயம் பொதுவில் ஏற் றுக்கொள்ளும் "மாற்றுந்" திரவியமாகிய புகையிலை, உப்பு, யானைத்தந்தம் முத லியவற்றை உபயோகித்தனர். இத்திரவியங்களுள் ஒன்று, அதாவது புகையிலை போன்ற ஒன்று பண்டமாற்றை இலேசாக்கும் பொருட்டு இணைக்கப்பட்டது. இவ்வண்ணம் தனக்குத் தேவையான அளவுக்கு மேலாக அரிசி உடைய ஒரு வன், அக்கூடிய அரிசியைப் புகையிலைக்கு மாற்றிக் கொண்டு, அதிலிருந்து சிறி தைக் கொடுத்துத் தேவையான உடைகளைப் பெற்றுக்கொள்வான். அப்படிப் பட்ட சன சமுதாயத்தில் எல்லோராலுமே புகையிலை ஏற்றுக்கொள்ளப்படுவத னால் புகையிலை **பண்டமாற்றூடகமாயது.** இவ்விதம், பொதுவில் ஏற்றுக்கொள் ளப்படும் பண்டமாற்றூடகமாகவியங்கும் ஒன்றுக்கு "பணம்" என்ற பெயரை இடலாம்.

புகையிலையைப் போன்ற ஒன்றைப் பணமாக உபயோகிப்பதனால் சில இலா பங்கள் அமைந்தாலும், சில தடைகளும் அமையும். ஒருவன் ஒரு புசல் நெல்லைப் புகையிலைக்கு மாற்றிக் கொண்டான் என்று கொள்வோம். ஒரு பக்கத்தில் இப்

பணம் (அதாவது அவன் வாங்கிய புகையிலை) அளவில் பெரிதாகும். அளவில் பெரிய பொருளை மாற்றுக் கொண்டுபோதல் சங்கடமாகும். ஒருவன் முந்நூறு புசல் நெல்லை விற்றால் அவனுக்கு முந்நூறு இருத்தல் புகையிலையைக் கொண்டு போக நேரிடும். இரண்டாவதாக, புகையிலையைச் சீலைகளோடு மாற்றுச் செய்து கொள்ளக் காலந்தாமதித்தால் புகையிலை பழுதடைந்து போகும். அது வினைத லால், கமக்காரன் நல்லது என்று ஏற்றுக்கொண்ட புகையிலையானது நெசவுக் காரனுக்கு வெறுப்பூட்டவும் கூடும். இக்காரணங்களால் முன்குறித்த திரவியங் கள் புதிய உலகிலே பணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆனால், இப்படிப் பட்ட தளர்ச்சிகளில்லாத ஆனைத்தந்தம் முதலிய வகைகளுமே பணமாக ஏற் கப்படமாட்டா. ஏனெனில், பண்டமாற்றுக்குப் போதிய அளவு ஆனைத்தந்தங் கள் பெறுவது அருமை.

மிகப் பழைய காலத்திலுமே வெள்ளியையும் பொன்னையும் பண்டமாற்றாடக மாக இலேசாக வழங்கச் சிலர் கண்டுகொண்டனர். ஆகையால், வெள்ளி நாண யங்களும் தங்க நாணயங்களும் பண்டமாற்றாடகமாகப் பொதுவில் உபயோ கிக்கப்பட்டன. புதிய பொருளியல் முறையில் பணத்தினாலாகும் பல சேவை கள் வெள்ளி மூலமும் பொன் மூலமும் நிறைவேறின. இச்சேவைகள் யாவை யென்று பார்ப்போம்.

பணமூலம் நடைபெறும் பண்டமாற்றினால் பல இலாபங்கள் உண்டாகும். பணமில்லாத பண்டமாற்றுமுறையில் ஒரு கமக்காரன் நூறு புசல் நெல்லைக் கொடுத்துச் சீலை, நாற்காலி, பானை முதலியவற்றைப் பெற எண்ணினால், ஒரு யார் சீலைக்கு அவன் நெல் எவ்வளவு கொடுக்க வேண்டும், ஒரு பிரமாணமுள்ள பானைக்கு எவ்வளவு நெல் கொடுக்க வேண்டும்? ஒரு பிரமாணமுள்ள நாற்கா லிக்கு எவ்வளவு நெல் கொடுக்க வேண்டும்? இவை எல்லாவற்றையும் அக்கமக் காரன் தீர்மானிக்க வேண்டும். இப்படி ஒரு நோத்திலே அவனுடைய நூறு புசல் நெல் முந்நூறு யார் சீலையாவது, மூவாயிரம் பானைகளாவது எழுபத்தையாயிரம் நாற்காலிகளாவது வாங்க மதிப்புப் பெறுமென்பதை அவன் நிச்சயிப்பான். இவ் வண்ணம், மற்றவர்களால் ஆக்கப்படும் பண்டங்கள் சேவைகளின் சார்பாக, நெல்லின் பெறுமானத்தை மதிக்கக் கமக்காரனுக்கு நேரிடும். ஆனால், தன்னு டைய நெல்லின் பெறுமானத்தைப் பணமூலம் விலைமதித்தால், இத்தொந்தரவு கள் பெரும்பாலும் நீங்கிவிடும். தன்னுடைய நெல்லு 1,500 ரூபா பெறுமதி யுடையதாக விலைமதித்து மற்றைத் திரவியங்களை வாங்க எண்ணும்பொழுது, அவ்வொவ்வொரு பண்டத்தின் விலையையும் அவன் அறிந்துகொள்வான். பணத்தை மூலாதாரமாகக் கொண்டு ஒரு பொருளியல் முறையில் நெசவுக் காரனும் தன் சீலைகளின் பெறுமதியைப் பணத்தினால் மதிப்பான். இப்படிச் செய்யும்பொழுது அவனிடம் முந்நூறு யார் சீலை இருந்தால், அதன் பெறுமதி 1,500 ரூபாவாகுமென அறிவான். எல்லாத் திரவியங்களும் பணத்தினால் விலை மதிக்கப்படுமாயின், சமுதாயத்தில் பலவிதமான திரவியங்களின் பெறுமதியை ஒன்றோடொன்று பொருத்தவியலும். அதனால் விலையை ஒப்ப நோக்குதல் இலே சாகும். இவ்வண்ணம், பெறுமானத்தின் அளவு கோலாகப் பணமியங்கும்.

புதுப்பொருளியல் முறையொன்றில் பணமூலம் நடைபெறும் இன்னொரு சேவையுமுளது. இதை உதாரணத்தினற் காட்டலாம். ஒரு கமக்காரனிடம் அதிகமாக நூறு புசல் நெல் உண்டென்று கொள்வோம். இதன் பெறுமானம் 1,500 உரூபாவென அவன் விலைமதித்தான் என்றும் கொள்வோம். நாட்டிலிருக்கும் ஏனைய சேவைகளும் பண்டங்களும் இப்படிப் பணத்தினுல் விலைமதிக்கப்படும். முன்கூறிய கமக்காரனுக்குத் தன் நெல்லைச் சேமித்துவைத்து மூன்று யார் சீலை தேவையாயிருந்தபொழுது ஒரு புசல் நெல்லை 15 உரூபாவுக்கு விற்று அப்பணத்தைக் கொடுத்து மூன்று யார் சீலையைப் பெறவியலும். அவனுக்கு நாற்காலி தேவையாயிருக்கும்பொழுது அப்படியே செய்யவியலும். இவ்வண்ணம் அவனுடைய நெல்லெல்லாம் முடியும்வரை அவனுக்கு எடுத்தலும் கொடுத்தலும் செய்யவியலும். ஆனல், இதைக்காட்டிலும் இலேசான முறையுமுள்ளது. நெல்லெல்லாவற்றையும் ஒருங்கே விற்று, அப்பணத்தைச் சேர்த்துவைத்து அவனுக்குத் தேவையான பலவிதமான பண்டங்களையும் சேவைகளையும் வாங்க அதனையுபயோகிக்கவியலும். இவ்விதம் அவனுடைய நெல்லின் முழுவருமானத்தைப் பணமாகச் சேமிக்கவியலும். இப்படிச் செய்தல், அவனுடைய நன்மைக்கும் இலாபத்துக்கும் சாதகமாகும். 100 புசல் நெல்லை வைத்துக்கொள்ள மிகவும் விசாலமான இடம் தேவை. மழைக்கும் பனிக்கும் நெல்லு பழுதடையாத ஒரு பண ஊடகம் முன்கூறிய இரண்டு தடைகளிலிருந்தும் கமக்காரனைக் காப்பாற்றிவிடும். இப் பணமானது ஒரு **பெறுமதித்திரட்டெனக்** கூறவியலும்.

மேலும், ஒருவன் வாங்கும் பண்டங்களினதும் சேவைகளினதும் பெறுமானத்தைப் பிற்காத்திற் செலுத்திவிடப் பணம் உதவும். முன்குறித்த கமக்காரன் தன்னுடைய ஒரு சினேகிதனுக்கு இரண்டு புசல் நெல்லைக் கடனுக்குக் கொடுத்தானெனக் கொள்வோம். இத்தோழன் இரண்டுமாதங்கள் கழிந்தபின், கடன் தீர்க்கத் திரும்பி இரண்டு புசல் நெல்லையும் கொடுக்கவியலும். தானெடுத்த கடனைத் தீர்க்கும் பொருட்டு ஒருவனிடமிருந்து இரண்டு புசல் நெல்லை எடுத்துத் தன் தோழனுக்குத் திருப்பிக் கொடுத்தலினும் பார்க்க 30 உரூபாவைக் கொடுத்தல் கடனெடுத்தவனுக்கு இலேசாகும். இங்கு **தாமதச் செலுத்துதல் சாதனமாகவே** பணம் உபயோகிக்கப்பட்டது. இவ்விதம் புதுப் பொருளியல் முறையொன்றில் பணமூலம் நடைபெறும் சேவைகள் பலவுள. ஆகையால், இன்று பணம் மிகவும் தேவையானது.

பணத்தின் மிகப்பெரிய உபயோகத்தின் காரணமாக, முன்னையிலிருந்தே பல மனிதர் அதை உபயோகத்துக்கெடுத்தனர். பலநாடுகளில் பலவிதமான திரவியங்கள் பணமாகவுபயோகிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டு ஆகும் வரை உலகத்தில் மிகவும் முன்னேறிய பிரதேசங்களில் வெள்ளியும் பொன்னும் பணமாக உபயோகிக்கப்பட்டன. அரசாங்கங்களின் பரிபாலனத்தின் கீழ், வெள்ளி நாணயங்ககளும் தங்க நாணயங்களும் அச்சிடப்பட்டதனுல், இந்நாணயங்கள் பணமாகவே உபயோகிக்கப்பட்டன. இவ்வுலோக நாணயங்களில் ஒரு முக்கியமான அமிசமிருந்தது. இந்நாணயங்களின் உலோகம், அதாவது, வெள்

ளியோ பொன்னே அவற்றிலுள்ள இயற்கையான விலைமதிப்புக் காரணமாக நகைகளை அமைக்கவும் மனிதர்களால் விரும்பப்பட்டன. நாணயங்கள் அச்சிடப் பட்டபொழுது, நாணயத்தின் மேற் குறித்த பெறுமானம், அதை அச்சிடச் செல வாகும் உலோகப் பிரமாணத்தின் பெறுமானத்திற்கு நிகராயது. இவ்வண்ணம் இங்கிலாந்தில் தங்கப் பவுண் அச்சிடப்பட்டபொழுது, அந்நாணயத்திலிருந்த பொன்னளவின் பெறுமானம் அந்நாணயத்தில் குறித்த பெறுமானத்திற்கு நிக ராயிற்று. இப்படிப்பட்ட பணத்துக்கு நியமப்பணமென்று பெயர். மேன்மை யான நியமப்பணமாக இருப்பதனுல் அது ஒரு திரவியத்தின் இன்றியமையாத பண்புகளைப்பற்றிய சில உறுப்புக்களுடையதாயிருத்தல் வேண்டும். அத்திரவி யங்கள் பொதுவில் பிரார்த்திக்கப்படவேண்டும். அதன் முத்திரை மாத்திரத்தி லாவது பெரியதொரு பெறுமானமிருத்தல் வேண்டும். மேலும், அது, காலதாம தத்தினுலும் காப்பற்றிருப்பதினுலும் அழிந்து போகாதவொன்ருக இருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் அதை ஒரு **“பெறுமானத் திரட்டாக”** உப யோகிக்கவியலாது. பண்டமாற்று நடைபெறும் ஒவ்வொரு நோத்திலும் ஒரு நாணயத்தை நன்ருக ஆராய்தல் தேவையாகாதபடி இத்திரவியம் குணத்தில் ஒரேவிதமாக இருத்தல் வேண்டும். இது சிறிய பாகங்களாக இலேசாகப் பிரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். வெள்ளியிலும் பொன்னிலும் இக்குணங்க ளெல்லாம் நன்ருக அமைந்திருக்கின்றன. ஆகையால், வெள்ளியும் பொன்னும் நியமவுலோகமென உபயோகமாகத் தொடங்கின.

ஆனுல், காலஞ் செல்லச் செல்ல வேறுவிதமான பணமும் பொது வழக்கில் வந்தது. இவற்றின் உருவம் எவ்விதம் இருத்தல் வேண்டும்? பண அலகு எவ் விதம் இருத்தல் வேண்டும்? என்னுமிவற்றைத் தீர்மானிப்பதன் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இம்மாதிரியே பென்சு, சிலின், பவுண் என்பன பிரித்தானியாவில் பணவலகாகி வழங்கின. இலங்கையில் உரூபாவும் சதமுமே பணவலகுகளாகும். நியமப் பணத்தோடு பணத்தாள்களே பெரும்பான்மையும் பொது வழக்கிற்கு வந்தன. பணத்தாள்கள், பணவலகின் பெருக்கமாகவாவது பிரதிகளாகவாவது அரசாங்கங்கள் மூலமோ அரசாங்கத்திலிருந்து அதிகாரத் தைப் பெற்ற தாபனங்கள் மூலமோ அச்சிடப்பட்டன. அச்சிடும்பொழுதே அப் பணத்தாள்களில், உரியவனுக்குத் தேவைப்படும்போது, தாளிற் குறித்திருக்கும் பெறுமானத்துக்கு நியமப்பணம் செலுத்துவதாகக் குறிக்கப்பட்டிருக்கும். நியமப்பணத்துக்குப் புரளும் தன்மையிருக்கிறபடியால் அப்பணத்தாள்கள் **வகைகுறிபணம்**[9] என்று சொல்லப்படும். பிற்காலத்திலே பணத்தாள்களைக் கொடுத்து நியமப்பணத்தைக் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் நிறுத்தப்பட்டது. ஆனுலும், அதிகாரத்தைப்பெற்ற தாபனங்கள் மூலம் வெளியிடப்பட்ட தாள் களைப் பணமாக மனிதர் இடைவிடாமல் உபயோகித்தனர். இத்தாள்களைச் **சட்ட முறைப்பணத்திற்குப்**[10] பதிலாக நியமித்ததே இதற்கு ஆதாரமாகிவிட்டது. ஒரு நாட்டிற் பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் செலுத்துவதிலாவது, கடன் பணத்தைத் திரும்பிச் செலுத்துவதிலாவது விற்பனையாளர்களாலும் கடனுரிமை யாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒரு பணவகை அரசாங்கமூலம்

நியமிக்கப்படுவதாயின், அது **சட்டமுறைப்பணமென்று** சொல்லப்படும். இவ் விதம் இலங்கை அரசாங்கம் சார்பாக வெளியிடப்படும் பணத்தாள்களும், நாணயங்களும் இலங்கையின் சட்ட முறைப்பணமாகும். இந் நாணயங்களின் மேற் புறத்திற் பெறுமானத்துக்கு நிகரான உலோகப் பிரமாணமில்லாதபடியாலும், அதன் உலோகத்துக்கு ஒரு பெறுமானமில்லாதபடியாலும் இலங்கையில் நாணயங்கள் **அடையாள நாணயங்களாகக்**" கொள்ளப்படும். வங்கிப்பணமாகக் குறிக்கப்படும் வேறொரு பண வகையுமுள்ளது. சட்டப்பணத்தை வங்கிப்பணத்தி வழங்கப்படும். வங்கிப்பணம் காசுகளைக் காட்டிலும் வேறுபடுவதனாலும் பண விருந்து பிரித்து அறிவதற்காகச் சட்டப்பணத்துக்குக் "**காசு**" என்ற சொல் மூலம் நடைபெறும் காரியங்கள் இதனால் நடைபெறுகிறபடியால் இதுவும் நாட்டில் சகல பணத்தொகையின் ஒரு பாகமாகக் கொள்ளப்படும். வங்கிப்பணம் எது? அஃது எங்ஙனம் தோன்றும் என்பதை நாம் பின்னர் ஆராய்ந்து பார்ப்போம். இதுவரை கூறிய காரணங்களாலே சிலபணவகைகள் ஒரு நாட்டில் வழங்கவியலுமென்பது காணப்படும். தங்க நாணயங்களைப் போன்ற நியமப் பணம் அவற்றிலுள்ள இயற்கையான பெறுமானத்தின் காரணமாகவே வழங்கு மென்று கருதவியலும். வகைக்குறிப்பணத்தை நியமப்பணத்துக்கு மாற்றவியலு மாதலால், அது வழங்குமென்று எண்ணலாம். ஆனால், நியமப்பணத்துக்கு மாற்றவியலாத பணத்தாள்களும் அடையாள நாணயங்களும் ஏன் வழங்குகின்றன? இது உண்மையாக ஒரேயொரு காரணத்தைக் கொண்டேயாகும். இவை பணமாகப் பொதுவில் ஏற்கப்படுமாதலாலேயாம். ஆகையால், புது உலகத்தில் பணமாக எடுக்கப்படுவது, பொதுவாக அங்கீகரிக்கப்படும் பண்புள்ள ஒரு பொருளேயாம்.

இச்சகல பணவகைகளும் பண்டமாற்று உபாயமாக இயங்கும். ஆனால், பெறுமானத்தின் அளவுகோலாக இயங்குவது காசு மாத்திரமே. வங்கிப் பணம் கூட, "கேட்ட பொழுது" காசு கிடைக்க அமைந்த பணவகையென நாம் பின்னர்ப் படித்துக் கொள்வோம். 19 ஆம் நூற்றாண்டு முழுவதிலும் இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியிலும் உலகத்தில் முன்னேற்றமடைந்த நாடுகள் எல்லாம் நியமப் பணத்தையே உபயோகித்தன.இன்றேல், நியமப்பணத்துக்கு மாற்றக் கூடிய வகைக்குறிப்பணமும் வங்கிப் பணமுமே உபயோகிக்கப்பட்டன. இப்பண வகைகள் எல்லாம் பண்டமாற்று உபாயமாக இணைக்கப்பட்டமை, இதனால் அறியமுடியும். இங்ஙனம், நியமப்பணம் (தங்க நாணயங்கள்), வகைக்குறிப் பணம் (பெறுமானத்தை நியமப்பணத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பணத் தாள்கள்), அடையாளப்பணம் (மேற்புறத்தில் குறித்த பெறுமானத்துக்கு நிகரான ஒரு பெறுமானம் உலோகப் பிரமாணத்திலில்லாத நாணய வகைகள்), வங்கிப் பணம் (பின்னர் ஆலோசிக்க விருப்பது) ஆகிய இவையெல்லாமே பண்டமாற்று உபாயங்களாக உபயோகிக்கப்பட்டன. இங்ஙனம் கூறிய கால வரையறைக்குள்ளே ஏனைய பணவகைகள் எல்லாவற்றையுமே, கேட்ட பொழுது நியமப் பணத்தினால் பெற்றுக் கொடுக்க உபாயங்கள் அமைக்கப் பட்டிருந்தன.

இதன்பொருட்டு நான்கு முக்கியமான உபாயங்கள் இருந்தன. இவற்றிற்குப் பலவிதமான .பெயர்கள் கொடுக்கப்பட்டன. இவற்றுள் முதல்வழிக்குப் **பொன்னியமம்.**[13] என்று பெயர். பொன்னியமமென்பதனால் சில உண்மைகள் அறியப்படும். முதலில் தூய பொன்னளவையுள்ள நாட்டில், பண வலருகள் நாணயத்துககு அடங்கும்வண்ணம் பொன்னியமம் அந்நாட்டின் சட்டத்துக்குள் அடங்கியிருக்க வேண்டும். பிரித்தானியாவைப் பார்த்து இதை அறிந்து கொள்ளலாம். "பவுண்டு" பிரித்தானியாவில் பணவலகாகும். 1931 ஆம் ஆண்டு செத்தெம்பர் (புரட்டாதி) மாதத்துக்கு முன், அதாவது பிரித்தானியா பொன்னியமத்திலிருந்த காலத்திலே அந்நாட்டில் தங்கம், பவுண் ஒன்றின் தூய பொன் 113.001 (கிரெயின்) மஞ்சாடிகளும், கலப்புலோகத்தில் 10.273 மஞ்சாடிகளும் அடங்கியிருந்தன. இரண்டாவதாக, பொன்னியமத்திலிருக்கும் எந்த நாட்டிலாவது ஒருவன் அரசாங்கத்தில் நாணயங்களை அமைக்கும் தாபனத்துக்கு, அல்லது கம்பட்டசாலைக்கு[14] ஒரு பொன்னளவைக் கொணர்ந்து கொடுத்தால், அப்பொன்னின் பெறுமானத்துக்குச் சரிசமனான பொன் நாணயங்களைக் கொடுக்க வேண்டியிருக்கும். வேதனம் முழுவதும் எடுக்காமல் அச்சிடுவதற்குச் செலவாகும் அளவிற் சொற்ப வேதனத்தையடுத்து அரசாங்க கம்பட்டசாலை இக்காரியத்தை நிறைவேற்றியது. மூன்றாவதாக, பொன்னியத்திலிருந்த நாடுகளில் பணமாகப் பொன் நாணயங்கள் யாதொருகாகக் கொண்டு செல்வதற்கும் ஒரு கட்டுப்பாடில்லை.

முற்கூறிய காரணங்களினால் பொன்றுயமத்தின் கீழ் நிகழும் ஒரு நாட்டில் நியமப்பணவலகின் பெறுமானம் (ஒரு தங்கப்பவுண் என்று கொள்வோம்) 113.001 (கிரெயின்) மஞ்சாடி கனமுள்ள பொற்கட்டிகளின், அதாவது, நாணயத் தன்மைக்கு மாற்றாத பொன்னின் பெறுமானத்துக்குக் குறையவியலாது. அப்படியாயின், அந்நாட்டு மனிதர் பொன்நாணயங்களை உருக்கி இலாபத்தை விரும்பிப் பொற்கட்டிகளாக விற்க எத்தனித்தல் கூடும். அங்ஙனமே, தங்கநாணயத்தின் பெறுமானம் பொற்கட்டிகளுக்குக் கூடினால், மனிதர் பொற்கட்டிகளைத் தங்க நாணயங்களாக மாற்ற எத்தனிப்பர். மேலும், ஏனைப் பணமெல்லாவற்றையுமே நியமப்பணத்துக்கு மாற்றவும் அதிகாரமுள்ளபடியால், அந்நாட்டில் மற்றைய பணவளவின் பெறுமானம் அப்பிரமாணமுள்ள நியமப்பணத்தின் பெறுமானத்துக்குச் சமமாகவிருக்கும். இங்ஙனம் அந்நாட்டில் பணத்தின் பெறுமானம் பொன்னின் பெறுமானத்தின் மேல் தங்கி, நிலையாகவிருக்கும். கீழ்க்காணும் ஏனைய மூன்று மார்க்கங்கள் மூலம் இக்காரியம் நிறைவேறும்.

இரண்டாவது மார்க்கம் **ஈருலோகநாணய** நியம[15] மாகக் குறிக்கப்படும். நியமப்பணமாக வெள்ளி நாணயங்களும் பொன் நாணயங்களும் வழங்கும். பொன்னியமத்தின் கீழ் அனுசரிக்கவேண்டிய தத்துவங்களெல்லாம் ஈருலோக நாணய நியமத்தின் கீழும் அனுசரிக்கப்படவேண்டும். மேலும், வெள்ளி நாயணயங்களினதும், பொன் நாணயங்களினதும் வழக்கத்திலும் மாற்றத்திலும் ஒரு வரையறையில்லை.

மூன்ருவதாக, **பொற்கட்டிநியமமென்று**[16] ஒரு அளவுகோலுமுண்டு. பொன்னியமத்தின் கீழ் ஒருவனுக்குப் பொற்கட்டிகளைப் கம்பட்டசாலைக்குக் கொண்டு போய் அதற்குப் பதிலாகப் பொன் நாணயங்களைப் பெறவிருந்த அதிகாரம் பொற்கட்டிநியமத்தின் கீழ் இராதபடியால், இது முதல்முறையைக்காட்டிலும் வரையறுக்கப்பட்ட ஒரு முறையாகும். ஆனால், யாராவது வகைக்குறிப்பணத் தாள்களை அவற்றினதிகாரம் பெற்றவிடத்துக்குக் கொண்டுபோய் அவற்றின் பெறுமான அளவுக்குப் பொற்கட்டிகளைப் பெறவியலும். 1925 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் வரை இம்முறை பிரித்தானியாவில் நிகழ்ந்தது. இம்முறையின் கீழ், யாருகாவது பணத்தாள்களை இங்கிலாந்து வங்கிக்குக் கொண்டுபோய்க் கொடுத்து அதற்குப் பதிலாகப் பொற்கட்டிகளைப் பெற அதிகாரமிருந்தது. இங்ஙனம் 3 பவுணுக்கும் 17 சிலினுக்கும் 10½ பென்சுக்கும் பதிலாக ஒரு பொன் மாகாணியை (அவுன்சு) இருபகுதிக்குமே மாற்றிக்கொள்ளவியன்றது. ஆனால், ஒருவன் நானூறு பொன் மாகாணிகளுக்குக் குறையாத பெறுமதியுள்ள தாள்களைக் கொண்டு போனல் மட்டுமே அப்படி எடுக்கக்கூடும். இவ் வித்தியாசத்தைத் தவிர, பொற் கட்டி நியமத்தின் கீழ் தத்துவங்கள் பொன்னியமத்தின் கீழ் தத்துவங்களுக்கு நிகர்த்தன.

நான்காவது மார்க்கமாவது, பொன்மாற்று நியமம்; இதுவும் பொன்னியமத்தைப் பற்றிய ஒரு முறையாகவிருந்ததென்று சொல்லலாம். இதற்கு முன் குறிக்கப்பட்ட முறைகளைப் போல வகைக்குறிப்பணத்துக்குத் தங்க நாணயங்களையோ பொற்கட்டிகளையோ கொடாமல், இப்படிப்பட்ட ஒரு முறையின் கீழ் இது அதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது. பொன்னியமத்திலிருந்த வேருெரு நாட்டில் பணத்தாள்கள் நியமமாகலாம். இங்ஙனம் ஒரு பொன்மாற்று நியமத்தின் கீழ் நியமப்பணமாகப் பிறநாட்டுப்பணமுமாகலாம்.

ஆனால், பொன்மாற்று நியமத்தையும் அதன் வெவ்வேறு முறைகளையும் புது உலகத்தின் நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இற்றையநாடுகள் நியமப்பணத்தை உபயோகிப்பதில்லை. புது உலகத்தின் பல நாடுகளில் பணத்தாள்களை மாற்றிக் கொள்ளவியலாது; இன்றேல் ஈடாக்கவுமியலாது. இங்ஙனம், பொன், வெள்ளிகளுக்கு மாற்றிக்கொள்ள வியலாத பணமுறையுள்ள ஒரு நாட்டில், அரசாங்கத்தினுலாவது அரசாங்கத்தின் தாபனங்களினுலாவது வெளியிடப்படும் தாள்கள், நாட்டில் முக்கியமான பணவகையாகும். இது இலங்கை அரசாங்கஞ் சார்பாக இலங்கைப் பெரிய வங்கியினுல் வெளியிடப்படும் பணத்தாளாகும். இம்முறையே பிரித்தானியாவிலும் நிகழும். இங்கிலாந்தில் தலைமையான வங்கிமூலம் வெளியிடப்படும் பணம், நாட்டில் முக்கியமான பணவகையாகும். இவ்விரு நாடுகளிலுமே வங்கிப்பணமும் முக்கியமாகும். நாம் இதற்குப் பின் படிக்கவிருப்பது, இவ்வங்கிப் பணமும் ஈடாக்கிக் கொள்ளவியலாத பணத்தாள்கள் மூலம் வங்கியிற் சேமிப்பதற்கு நிகரானவொன்ருகும் என்பதே.

நாம் இதுவரை கூறியவற்றைப் பின்வருமாறு சுருக்கவியலும், பண்டமாற்றை இலேசாக்கும் பொருட்டு ஒரு பண்டமாற்று வழி தேவையாகும். இது பணத்தினுல் நிறைவேறும். பணம் பண்டமாற்றுபாயம் மாத்திரமன்றி, பெறுமானத்தின்

அளவுகோலும் பெறுமானத்திரட்டும் தாமதப்படுத்திய செலுத்தற் சாதனமு மாக அமையும். பணம் சாதாரண வழக்கிற் புகுந்து பொருளியல் ஒழுங்குக்கு மூலாதாரமாயிருந்த காலத்திலே பொன்-வெள்ளி நாணயங்கள் பணமாக வழங் கப்பட்டன. பொன்-வெள்ளி நாணயங்கள் பணம் மாத்திரமன்றி, நியமப்பணமு மாயின. பணமாகிவிடுவதற்கு முக்கியமான பண்பு பொது அங்கீகாரம் என் பதை உணர்ந்து கொள்ள முன், மனிதர் நியமப்பணத்தையே பணமாக ஏற்றுக் கொண்டனர். வேறு பணத்தாள் முதலியவை வழக்கிற் புகுந்த யுகத்திலேயும் இவை வகைக் குறிப்பணமாகுதல்; இன்றேல் நியமப்பணத்துக்கு மாற்றிக் கொள்ள இயலுதல், அண்ணளவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகையால், பொன்-வெள்ளி நாணயங்கள் நியமப்பணமாக வழங்கிய சமயங்களில் முன் கூறிய தத்துவத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பொன் நியமமும், ஈருலோக நாணய நியமமும், பொன்கட்டி நியமமும், பொன்மாற்று நியமமுமாகிய வழி கள் அமைத்துக்கொள்ளப்பட்டன. ஆனல், இன்றேவெனின், பணத்தின் தலையங் கம் பொது அங்கீகாரமென்பதை உணர்ந்து கொண்டால் போதும். சருவதேச பண்டமாற்றுக்கு மூலாதாரமாயிருக்கும் பொருளியல் ஒழுங்கில், பணத்தை முன்கூறிய நியமங்களில் தொங்கச் செய்தல் பாதுகாப்புக்குறைவென்று நம்பப் படும். ஆகையால், ஒரு நாட்டின் பணம், இன்று சட்டமுறைப்பணமும். அடை யாள நாணயமுமாக வங்கிப்பணத்துக்குப் பெரும்பான்மையில் வரையறை யாகும். பொன்னியமமெனில், அதன் ஏனைய வேறுபாடுள்ள முறைகள் சார்பாக வன்றி, ஒரு நாட்டின் பணமுறை அந்நாட்டு அரசாங்கத்தினலேயே பரிபாலிக் கப்படும். ஆனல், புதிய பணமுறைகளை நிருவகித்த பணமுறைகளாக விரித் துரைக்கலியலும்.

தெளிவாக நோக்குமிடத்து, வங்கிப்பணமானது வங்கிகளோடு தொடர்ந்த ஒரு பணமுறையாகும். ஆகையால், வங்கிகள் என்பவை யாவை? அவை எங் ஙனம் வேலை செய்கின்றன? என்பதை ஆராய்ந்து பார்த்தால் வங்கிப்பணம் யாது என்பது விளங்கும். ஐக்கிய இராச்சியத்தை போன்ற ஒரு நாட்டை யெடுத்து அதில் வங்கித் தொழிலின் தொடக்கத்தை ஆராய்ந்து பார்த்தால், மிக நன்ருக விளங்கும்.

இங்கிலாந்தில், ஆதி முதலாண்மை யுகத்திலே வர்த்தகத் தொழில்களில் ஈடு பட்ட ஆங்கிலேய வியாபாரிகள் பரிமாறுதற்குத் தங்கமே உபயோகிக்கப்பட் டது. தங்கம் மிகவும் விலை உயர்ந்த ஒரு பொருளாதலால், வியாபாரிகளால் அதைப் பாதுகாப்போடு வைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. அபாயங்க ளுள்ள வழிகளில் மெதுவாகப் பிரயாணஞ் செய்த வண்டிகளில் சென்ற நெடுந் தூர வியாபாரிகள் பொன்னைக் கொண்டுபோனல் அவர்கள் கள்வர்களுக்கும் எதிரிகளுக்கும் பகைவர்களுக்கும் ஆளாக இடமிருந்தது. ஆகையால், அவர்கள் உரிமையில் இருந்த பொன்னை நம்பிக்கையுள்ள ஒருவன்பால் வைத்து, உத்தர வுச்சீட்டு ஒன்றை எடுத்து வேறு வியாபாரிக்குப் பொன்னுக்குப் பதிலாகக் கொடுப்பர். இரண்டாவது, வியாபாரியினல் அனுமதிச்சீட்டை வெளியிட்ட மற் றையவன் நம்பத்தக்க ஒருவனுகை ஏற்றுக்கொண்டால் மட்டுமே இது நிகழும்.

விலையுயர்ந்த சொத்துக்களை வைத்துக் கொள்ளப் பாதுகாப்புள்ள ஓரறையுடைய தட்டானே அக்காலத்து இங்கிலாந்தின் வியாபாரிகளுக்குரிய பொன்னை வைத்துக்கொள்ள மிகவும் தகுதியுள்ளவன் என்று நம்பப்பட்டது. ஆகையால், தட்டாரிடம் பொன்னை வைத்து உறுதிப்பத்திரங்களைப் பெறும் வழக்கம் அக்காலத்தில் நாட்டில் பரவத்தொடங்கிற்று. வியாபாரிகளின் பொன்னைப் பாதுகாப்போடு வைத்துக்கொண்டபடியால் சிறிது கூலியும் தட்டார் பெற்றனர்.

காலம் செல்லச்செல்ல, தட்டார் மிகவும் முக்கியமான ஒரு காரணத்தை அறிந்துகொண்டனர். அவர்கள் பொன்னுக்காக வெளியிட்ட உறுதிப் பத்திரங்கள் ஒப்புக்கொண்டதும் பண்டமாற்றாக அவற்றை அங்கீகரித்த வியாபாரிமார் அவற்றைக் கொடுத்துப் பொன் எல்லாவற்றையுமோ, அதில் பெரியதொரு பிரமாணத்தையோ திரும்பிப் பெற்றுக்கொள்ள எத்தனிக்கவில்லை. தங்கள் உறுதிப் பத்திரங்களை மாற்றுவதினால் ஒரு பொன்னியமம் திரும்பப் பெறப்பட்ட போதிலும், அதன் அதிகப் பங்கு தட்டார் கையிலே எஞ்சி யிருந்தது. இப்பொன்னில் ஒரு பங்கைக் கடனுக்குக் கொடுப்பதனால் ஆதாயம் பெறக் கூடுமென்பதைத் தட்டார் உணர்ந்தனர். வியாபாரிகளுடைய பொன்னை அன்னியருக்குக் கொடுத்து ஆதாயத்தைப் பெற்ற தட்டார் காலஞ்செல்லச்செல்ல ஒரு சம்பளமும் பெறாமலே வியாபாரிகளுடைய பொன்னைப் பாதுகாப்போடு வைத்திருக்க விரும்பினர். இவ்வபிவிருத்திகளில் கவனிக்க வேண்டிய சில முக்கியமான உறுப்புக்கள் உள. தட்டாரின் உறுதிப் பத்திரங்கள் வியாபாரிகளிடையில் தடையின்றிப் பரவின. அவை பொதுவில் அங்கீகரிக்கப்பட்டபடியால் பணவளவிற்கே உபயோகமாயின. தட்டாரால் அவர்களிடம் பாதுகாப்புக்காக வைக்கப்பட்ட பொன்னுக்குப் பதிலாக இவ்வுறுதிப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. முதலாவதாக, நிச்சயப் பத்திரங்களில் பணமாகக் குறிக்கப்பட்ட பெறுமானம் தட்டார் பாதுகாக்கப்பட்ட அறைகளிலிருந்த பொன்னினளவிற்கு நிகராயிற்று. பின்னர், தட்டார் தங்களிடமிருந்து பொன்னின் ஒரு பாகத்தை வட்டியுடன் ஆதாயங் கிடைக்கும் வண்ணம் கடனுக்குக் கொடுக்கத் தொடங்கியபொழுது, இப்படி நிகழவில்லை.

எனவே, பொன்னைச் சேமித்து வைத்தவனுடைய பெயருக்கே உறுதிப் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. அவனாலேயே பணத்தைத் திரும்பவும் செலுத்த வேண்டியதாயிற்று. இன்றேல், அது அவனுடைய கட்டளையின்படியேயாம். அதாவது, அவன் அதில் கையொப்பம் இட்டிருந்தாலேயாகும். பிறகு, பொன்னைச் சேமித்து வைத்தவனுடைய பெயருடன் நிச்சயப் பத்திரங்கள் வெளியிடப்படவில்லை. அது பொன்னை வைத்துக்கொண்ட தட்டானுடைய உடன்படிக்கையாக இருக்கும். ஆகையால், நிச்சயப்பத்திரங்களை வகிப்பவர்களுக்குத் தங்கள் கையொப்பங்களை வைத்துப் பொன்னைத் திரும்பிப் பெற்றுக்கொள்ள வியன்றது. இவ்வசதியின் காரணமாக, உறுதிப் பத்திரங்கள் வியாபாரியிடமிருந்து வியாபாரிக்கு மாறின.

அபிவிருத்தி இவ்வெல்லையடைந்தபொழுது, பொன் வினைஞரிடமிருந்து கடனெடுப்பவர்களுக்குப் பொன்னினாலேயே கடனெடுக்க வேண்டிய அவசியமெழவில்லை. ஒரு கடனைக் கொடுக்கக் குறிக்கப்பட்ட ஒரு உறுதிப் பத்திரத்தைக் கொடுத்தால் போதும். ஏன்? பொன்வினைஞருடைய உறுதிப் பத்திரம் பொன்னைப் போலவே வியாபாரிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகையால், தம்மிடமிருந்து பொன்னளவின் பெறுமானத்தைக் காட்டிலும் கூடிய விலைமதிப்பொன்றுக்கு உறுதிப் பத்திரங்களை வெளியிடப் பொன்வினைஞருக்கு இயன்றது. இந்நிச்சயப் பத்திரங்களும் பணமாகப் பொதுவில் கணிபடத் தொடங்கின. ஆகையால், தட்டார் தங்கள்பால் இருந்த உண்மையான பொன்னள்வைக் காட்டிலும் கூடிய தொகை பணத்தைப் படைத்தனர். விதற்கு வரையறைகளுமிருந்தன. இவ்விடத்திலே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டிய முக்கியமான காரியமுண்டு. அதாவது, ஆங்கில வங்கித் தொழிலாளர் தங்களிடமிருந்த பொன்னளவைக் காட்டிலும், கூடிய ஒரு பணப் பிரமாணத்தைப் படைக்கத் தொடங்கியதே.

ஒரு புது நாட்டின் வங்கித் தொழிலை ஆராய்ந்து பார்த்தால், மேலே கூறிய மூலாதாரங்களெல்லாம் நமக்குத் தெரியும். எளிதாகும் பொருட்டு நாம் அதவானிக்கும் நாட்டில் ஒரேயொரு வங்கியே இருக்கின்றதென்று கொள்வோம். வங்கியைத் தம் வியாபாரத் தொழில்களுக்காகத் தொடங்கியபொழுது பலர் அவ்வங்கியில் பணத்தைச் சேமித்து அதில் கணக்குக்களை அமைத்துக் கொண்டனரென்று கருதுவோம். வங்கிக் கணக்குக்கள் இருவகைப்படும். அவையாவன, நடைமுறைக்கணக்கும், வைப்புக்கணக்குமாம். நடைமுறைக் கணக்குப் பொருட்டு சேமிக்கும் பணத்தை நேரத்தோடு அறிவிக்காமல் தாம் விரும்பும் நேரத்திலே திரும்ப எடுக்கவியலும். அதாவது, வங்கிக்குப் போய் மறுபடியும் எடுத்தல் என்பதாகும். ஆனால், வைப்புக்கணக்குக்களின் பணத்தையெடுப்பதாயின், எடுக்கச் சில நாட்களுக்கு முன் அவைப்பற்றி அறிவிக்க வேண்டும். நடைமுறைக்கணக்கிலிருந்து பணம் மறுபடி எடுக்கவியலுவது, பணத்தின் சார்பாகவோ, வேறொருவன் சார்பாகவோ ஒரு காசோலையை நிரப்பிக் கணக்குரிமையாளனுடைய கையொப்பமிடுவதனாலேயாம். ஒரு காசோலையானது அதிற் கையொப்பம் வைப்பவனுடைய கணக்கிலிருந்து ஒரு பணவளவைக் கொடுக்கும்படி வங்கியைக் கட்டளையிடும். பொதுவாக, வங்கியினால், வழங்கப்படும் ஓர் அச்சிடப்பட்ட பத்திரத்தில் குறிக்கப்படும் கட்டளையாக இது இருக்கும். "அ" என்பவனுக்கு வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கிலிருந்து, ஒரு பணத்தொகையைத் திரும்பி எடுக்க அவன் எண்ணினால், அவன் செய்ய வேண்டியது ஒரு காசோலையை எடுத்து அதில் அச்சிடப்பட்டிருக்கும் "கொடு" என்ற சொல்லுக்குப்பின் "பணம்" என்ற சொல்லும் அதற்குப் பின் அச்சிடப்பட்டிருக்கும் "பணவளவு" என்ற சொற்களின் முன்னே செலுத்தவேண்டிய அளவையும் (இலக்கத்திலும் எழுத்திலும்) எழுதி, கீழே காட்டப்பட்டிருக்குமிடத்தில் தன் பெயரைக் குறித்தல் வேண்டும். இங்ஙனம் நிரப்பிய ஒரு காசோலை கணக்குரிமையாளனின் வங்கியிலிருந்து பணத்தைக் கொடுக்கும்படி செய்யும் ஒரு கட்டளையாகும். "செலுத்து" என்ற சொல்லுக்குப்பின் எழுதப்பட்டிருப்பது

வேறொருவனுடைய பெயரெனின், கையொப்பம் வைத்தவனால், பெயரை எழுதி யிருப்பவனுக்குப் பணத்தைச் செலுத்தும்படி வங்கிக்குச் செய்யப்படும் ஒரு கட்டளையாகும். அக்கையொப்பம் வைத்தவனுடைய கணக்கில், அதில் குறித்த பணவளவாவது அதற்கு மேலான பணமாவது வங்கியிலிருப்பின், வங்கி அவனுடைய கட்டளையை அங்கீகரித்துப் பணத்தைச் செலுத்திவிடும்.

சனசமூகத்தில் எல்லோருமே தங்கள் பணத்தை ஒரு வங்கியில் சேமிப்பதில்லை என்பது தெளிவு. ஒரு கணக்கை ஆரம்பிப்பதெனின், வங்கியில் சேமிக்க வேண்டிய ஒரு தாழ்வெல்லைப் பணவளவு வங்கிமூலம் பொதுவாக நியமிக்கப்படும். ஆனால், பலருக்குச் சிறிதளவே ஆதாயங்கள் இருக்கிறபடியால், வங்கிக் கணக்குக்களைத் தொடங்க அவர்களாலியலாது. அப்படிப்பட்டவர்கள் தங்கள் எல்லாப் பணத்தையும் தம் கையிலேயே வைத்துக்கொள்வர். வங்கிக் கணக்குக்களுள்ளவர்களும், தம் பணமெல்லாவற்றையுமே வங்கியில் சேமிக்காமல் தங்கள் வசதிக்காக அவர்கள் சிறிதளவு பணத்தைத் தம் கையில் வைத்துக் கொள்வர். உதாரணமாக, ஒருவன் ஒரு சிகரெட்டுப்பெட்டியை வாங்கும்பொழுது அதற்காகப் பணம் செலுத்துதற்பொருட்டு அதனைக் கையில் வைத்துக் கொள்வதைக் காட்டலாம். நடைமுறைக் கணக்கினதும் வைப்புக்கணக்கினதும் வித்தியாசத்தை நாம் காணலாம். ஆனால், வங்கிப்பணம் தோன்றும் முறையை உணர்வதில் இவ்வித்தியாசம் முக்கியமானதன்று. ஆகையால், இவ்விடத்திலே எல்லாக் கணக்குக்களும் ஒருங்கே எடுக்கப்பட்டிருக்கின்றன.

அங்ஙனமாயின், எங்களுடைய இந்தக் கற்பனைநாட்டிலே ஒரு வங்கியே இருக்கிறதென்று கொள்வோம். இந்நாட்டிற் சிலர் தங்கள் பணத்திலிருந்து கூடிய பாகத்தை வங்கியிற் சேமித்துக்கொள்வர். எல்லோருமே தம் கையில் சிறிது பணத்தையாவது வைத்துக்கொள்வர். வங்கியிற் பணத்தைச் சேமிக்கிறவனுடைய கையில் மிஞ்சிய பணமெல்லாமே செலவானால், அவன் தன் கணக்குக்களிலிருந்து பணத்தின் பாகத்தைத் திரும்ப எடுப்பான்.

தொழிலுக்காக வங்கி திறக்கும்பொழுது, பலர் அதிற் சேமித்து முழுப் பணவளவு 10,000 உரூபாவெனக் கொள்வோம். அப்படியெனில், இவர்கள் எல்லோருக்கும் வங்கிக் கணக்குக்ளில், முழுப்பணம் 10,000 உரூபாவாகும். வங்கியிற் கணக்குக்கள் இருக்கும் இவர்கள் தம் கையிலிருக்கும் பணத்தைப் பரிமாறற் பொருட்டு இணைப்பார்கள். அ, ஈ, ஓ என்பவர்களுக்கு இங்ஙனம் வங்கிக் கணக்குக்கள் இருக்கின்றனவென்று கொள்வோம். ஒரு பரிமாறல் தீரும்பொருட்டு "அ" என்பவன் 1,000 உரூபாவுக்கு ஒரு காசோலையை "ஈ" என்பவனுடைய பெயருக்கு எழுதிக் கொடுத்தால் "ஈ" என்பவன் சாதாரணமாக அதை அங்கீகரித்துத் தன்னுடைய கணக்குக்கு அதில் குறித்திருக்கும் பணத்தையும் சேர்க்கும்படி காசோலையில் தன் கையொப்பம் இட்டு வங்கிக்கு அனுப்புவான். அப்பொழுது வங்கி "அ" என்பவனுடைய கணக்கிலிருந்து 1,000 உரூபாவைக் குறைத்து, ஈ என்பவனுடைய கணக்குக்கு 1,000 உரூபாவைக் கூட்டும். நிலைமை

இப்படியெனின், இந் நேரத்தில் வங்கியிலிருந்து பணம் எடுபடாது. "அ" என்பவனுடைய கணக்குச் சுருங்கி "ஈ" என்பவனுடைய கணக்கு அதிகரிப்பது மட்டுமே நடக்கும்.

"அ" என்பவன் "ஈ" என்பவனுடைய பெயருக்கு எழுதியது "ஈ" என்பவனால் "அ" என்பவனுக்கு விற்கப்பட்ட பொருள்களுக்குச் செலுத்து தொகையென்று கொள்வோம். "ஈ" என்பவனுடைய தொழிற் சாலையில் நான்கு தொழிலாளர்களால் இப்பொருள்கள் செய்யப்பட்டனவென்றும் கொள்வோம். அப்படியாயின், "அ" என்பவனிடமிருந்து கிடைத்த பணத்தை 'ஈ' என்பவன் தன் வங்கிக்கணக்கிற் கூட்டித் தொழிலாளர்களுக்கு இரு விதத்தில் சம்பளஞ் செலுத்தவியலும். இந் நால்வருக்கு 200 உரூபா செலுத்தவேண்டுமெனின், ஒவ்வொரு தொழிலாளன் பெயருக்கு 50 உரூபாவாகக் காசோலைகளை எழுதி அவர்களுக்குக் கொடுக்கவியலும்.

இப்படி நடந்தால் தொழிலாளர் தமக்குக்கிடைத்த காசோலைகளை வங்கிக்குக் கொண்டுபோய்ப் பணத்தைப் பெற்றுக்கொள்வர். அற்பமான ஆதாயங்கள் கிடைக்கிறபடியால் இவர்களுக்கு வங்கிக்கணக்குக்கள் இல்லை என்று எண்ணுவதில் தவறில்லை. ஆகையால், வங்கியிலிருந்து 200 உரூபா திருப்பி எடுக்கப்படுகிறது. அப்படி இல்லாவிட்டால் "ஈ" என்பவன் 200 உரூபா பணத்தை வங்கியிலிருந்து எடுத்துத் தொழிலாளருக்குச் சம்பளஞ் செலுத்துவான். முதலாம் முறையின் கீழ் தொழிலாளர் "ஈ" என்பவருடைய காசோலைகளை எடுத்து, அவற்றிற்குப் பதிலாக வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்வர். எவ்வழியிலாவது வங்கியில் "ஈ" என்பவருடைய கணக்கு 200 உரூபாவால் குறையும். பணத்தையெடுத்த தொழிலாளர்களும் பலவிதமான தேவைகளைத் தணிப்பதிலே இப்பணத்தைச் செலவழிப்பர். இத்தேவைகளை நிறைவேற்றச் சில பண்டங்கள் "ஓ" என்பவனுடைய ஆவணத்திலிருந்து வாங்கப்படும். இவ்வியாபாரத்தினால் "ஓ" என்பவனுக்கும் நூறு உரூபா கிடைத்ததென்று கருதுவோம். "ஓ" என்பவனுக்கும் வங்கியில் ஒரு கணக்கு இருக்கிறபடியால் அவன் அந்நூறு உரூபாவைக் கொண்டு சென்று சுயகணக்கில் இடுவான்.

இவ்வண்ணம் கணக்குரிமையாளர்கள் அவரவருடைய பெயருக்குக் காசோலைகளை எழுதிக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பார்கள். அவர்களுடைய பெயருக்குப் பணமிருப்பது தங்கள் வங்கிக் கணக்குக்களால் தெரிகிறபடியால் அவர்கள் அப்படிக் காசோலைகளை எழுதுவார்கள். இப்பணமானது அவர்களால் பணமாகவோ, காசோலைகளாகவோ வங்கியில் இடப்பட்டிருக்கும் **வைப்புக்களாகும்.** இவர்களுடைய **வைப்புக்களில்** காணப்படும் முழுப்பணவளவுக்கே இவர்கள் காசோலைகளை எழுதவியலும். மனிதர் தம் விருப்பத்திற்கே காசோலைகளை அங்கீகரிப்பதனால், வங்கியில் காசோலைகளையோ, பணத்தையோ இடுவது பணம் உடையவனுக்கு அப்பணம் தன்கையில் இருப்பதுபோலக் காணப்படும். இங்ஙனம், தம் பணத்தை வங்கியில் சேமித்திருந்தாலும், உரிமையாளர்களால் தம் கையிலிருக்கும் பணத்தைப் போலவே வைப்புக்களெல்லாம் கருதப்படும். ஆகையால், தேவையானபொழுது அவர்கள் வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக்

கொள்வர். காசோலைகள் பொதுவில் அங்கீகரிக்கப்படுவதனால், வங்கியிலிருக்கும் முழுவைப்பளவுமே கையிலிருக்கும் பணத்துக்கு நிகராகும். எனவே, வங்கி வைப்புக்களும் நாட்டுப் பணத்தின் ஒரு பாகமாக எண்ணவியலும், நாம் அதை அப்படி அங்கீகரித்துப் பணத்தைப் போல அதை உபயோகிக்கிறபடியாலே இது சாத்தியமாகின்றது.

வங்கிகளிற் சேமித்து வைத்த முழுவளவு வங்கிக் கணக்குக்களை வகிப்பவர்கள் சேமித்த பணத்துக்கும் (வேறொருவனாற் சேமிக்கப்பட்ட பணத்துக்குப் பதிலாக எழுதிய) காசோலையளவுக்கும் நிகருமாதலால், இதுவரை ஒரு வித்தியாசமும் தோன்றவில்லை. அது எப்படியாயினும் பழைய பொன்வினைஞர்களைப் போல, புதிய வங்கிகளும் வங்கிக் கணக்குக்களுள்ளவர்கள் எல்லோருமே பணத்தைத் திருப்பியெடுக்க ஒருங்கே வரமாட்டார்கள். வேறொருவனுடைய பெயருக்கு ஒருவன் ஒரு காசோலையை எழுதுவானெனின், அதன் முழுப்பெறுமானமும் பணமாக வங்கியிலிருந்து எடுக்கப்படாது. எடுத்தாலும், அவன் காசோலை மூலம் திறந்த கணக்கில் அமையும் சேமிப்பு அளவிலிருந்து எடுப்பது, முவ்வளவில் நூற்றுக்கு பத்துவிதம் (10%) மாத்திரமென்பதை இங்கிலாந்தில் வங்கிகள் அறியும். ஆகையால், பணத்தில் நூற்றுக்குத் தொண்ணூறே (90%) வங்கியில் மிஞ்சும். முழுச்சேமிப்புக் கணக்கும் உரிமையாளர்களால் பணமாகக் கருதப்படும். ஆகையால், இப்பணத்தின் ஒரு பாகத்தை வட்டியோடு கடனுக்குக் கொடுத்து வங்கிகள் ஓராதாயத்தைப் பெறமுடியும்.

இவ்வுதாரணத்திற் காணப்படும் கற்பனை நாட்டில், கற்பனை வங்கிக்கும் இங்கிலாந்து வங்கிக்குப் போல அனுபவமுண்டென்று கொள்வோம். இவ்வங்கித் தொழில் 10,000 ரூபா பெறுமானமுள்ள வைப்புக்களுடையதென்றும் கொள்வோம். இந்த 10,000 ரூபாவுள் 1,000 ரூபாவைப் பணமாகச் சேமித்துக் கொண்டால், பணத்தைக் கேட்டுவரும் கட்டளைகள் எல்லாவற்றையும் தணிக்கவியலுமென்பதை வங்கி அறியும். ஆகையால், இவ்வங்கியில் மிஞ்சிய பணத்தில் ஒரு பாகத்தைக் கடனுக்குக் கொடுக்கவியலும். வங்கி "ஏ" என்பவனுக்கு 5,000 ரூபாவைக் கடனுக்குக் கொடுத்ததென்று கொள்வோம். வங்கி இப்படிச் செய்வது, "ஏ" என்பவன் சார்பாக ஒரு கணக்கைத் தொடங்கி 5,000 ரூபா வரை அவன் காசோலைகளை எழுதிக்கொள்ள இடங்கொடுப்பதனாலேயாம். வேறு முறையிற் கூறின், "ஏ" என்பவனுடைய கணக்கில் 5,000 ரூபா இருப்பதாகக் குறிக்கப்படும். ஆகையால் 5,000 ரூபாவரை அவன் காசோலைகளை எழுதிய பணம் பெற்றுக் கொள்ளவியலும். இன்றேல், காசோலைகளை எழுதிக் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்க்கவியலும். "ஏ" என்பவன் தான் உண்மையாகவே 5,000 ரூபாவை வங்கியிற் சேமித்தபடியே தன் கணக்குக்களை மதிப்பான். ஆகையால், அவனுக்குத் தன் கணக்கும் பணமாகவே தெரியும். ஏனையோரும் "ஏ" என்பவனுடைய காசோலைகளை ஒப்புக்கொள்வர். ஒரு வங்கிக் கணக்குக்களிற் காணப்படும் முழுவளவு பணத்தைச் சேமித்து வைப்பதனால் திறந்த கணக்குக்களும் வங்கியிலிருந்து கடனுக்கு எடுப்பதனால் அமைந்த கணக்குக்களும், எல்

லாமே முழுவைப்புப் பரிமாணமாகக் கருதப்படும். "ஏ" என்பவனுக்கு 5,000 உரூபாவைக் கடனுக்குக் கொடுத்தபின் வேண்டிய நேரத்தில் மனிதருக்கு 15,000 உரூபா விலைமதிப்பைக் காட்டி, காசோலையை எழுதிக் கொள்ளவியலு மென்பது வங்கிக்குப் புலனாகும். (அதாவது, 10,000 உரூபாவின் வைப்பும் "ஏ" என்பவனுடைய 5,000 உரூபாவின் கணக்கும்) அது எங்ஙனமாயினும் நிலைமை இப்படியாகும்பொழுது பணக்கேள்விகள் எல்லாவற்றையுமே நிறைவேற்றும் பொருட்டு எந்நேரத்திலும் தேவையாயிருப்பது 1,500 உரூபா (அதாவது 15,000 உரூபாவின் நூற்றுக்குப் பத்துவீதம்) பணமென்பதை வங்கியானது அனுபவத் தினால் அறியும். 15,000 உரூபா வெனின், வங்கி வைத்துக்கொள்ளவேண்டிய பணம் 1,500 உரூபா மட்டுமே. ஆகையால், மேலும் மேலும் கடன் கொடுக்க வங்கிக்கு இயலும். உண்மையாகவே வங்கிக்கு 90,000 உரூபா விலைமதிப்புள்ள கடன் கொடுக்கவியலும். இப்படியாகும்பொழுது பணத்தைச் சேமித்து வைப் பதனால் உண்டாகும் வைப்பு 10,000 உரூபாவும் கடன் கொடுப்பதனால் உண்டா கும் வைப்பு 90,000 உரூபாவும் சேர்ந்து முழுவைப்புப் பரிமாணம் 100,000 உரூ பாவாகும். கணக்குரிமையாளர்கள் தங்கள் வைப்புக்களைப் பணமாகக் கருது வது வைப்புப் பிரமாணத்துக்குக் காசோலைகளை எழுதித் தங்கள் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கவியலுமென்பதை அறிவதனாலேயாம். இங்ஙனம், 10,000 உரூபா பணமாகக் கருதப்படும் 100,000 உரூபாவின் ஒரு வைப்புப் பரிமாணத் தைக் கடன் கொடுத்து வங்கிகள் ஆக்கவியலும். ஆனால், வரையறை இதுவே. 10,000 உரூபா பணமுள்ள வங்கிக்கு 90,000 உரூபாவுக்கு மேலான அளவை ஆக்கவியலாது. அப்படிச் செய்தால் அது வங்கிக்கு ஆபத்தான காரியமாகும்.

கடன் கொடுப்பதனால் முன்கூறிய வங்கி 150,000 உரூபா விலைமதிப்புள்ள கணக்குக்களைத் தொடங்கிற்றென்று கொள்வோம். அப்பொழுது, கடனெடுத்த வர்கள் இவையெல்லாவற்றையுமே பணமாக மதிப்பர். ஆகையால், எந்நேரத்தி லாவது முதல் 10,000 உரூபாவின் ஒரு வைப்பு உட்பட முழுவைப்புப் பரிமா ணம் 100,000 உரூபாவரை காசோலைகளை எழுதுதல் கூடும். கடனெடுத்தவர் களும் தங்கள் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும்பொருட்டு, மற்றையோரின் பெயருக்குக் காசோலைகளை எழுதுவர். இவர்களுட் சிலர், பணத்தைச் சேமித் துக் கணக்குக்களைத் தொடங்கியவர்களாகும். இவர்களுக்குக் கிடைக்கும் காசோலைகளும், இவர்களுடைய கணக்குக்களுட் சேர்க்கும்பொருட்டு வங்கிக்கு அனுப்பப்படும். இங்ஙனம், வங்கியிலிருந்து கடனெடுக்காதவர்களின் வைப்புப் பரிமாணம் விசாலிக்கும். கடனெடுத்தவர்கள் தம் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்க்கும் பொருட்டு வங்கிக் கணக்குக்கள் இல்லாதவர்களின் பெயருக்கும் காசோலைகளை எழுதுவார்கள். இவர்கள் இக்காசோலைகளை வங்கிக்குக் கொணர்ந்து பணத்தைத் திருப்பியெடுக்க விரும்புவார்கள். இக்காரணத்தினா லும், வங்கிக் கணக்குக்களுள்ளவர்களின் மிச்சமான பணக்கேள்வியின் காரண மாகவும் பணக்கேள்விகளை நிறைவேற்ற இப்பொழுது வங்கிக்கு 16,000 உரூபா தேவையாகும். ஆனால், பணம் 10,000 மாத்திரமே வங்கியில் இருக்கின்றது. அப் பொழுது, பணத்தைத் தேடி வருகிறவனுக்கு, மறுநாள் வருக! என்று கூற

வேண்டிய நாளும் வரும். பணமாயிருந்த 10,000 உரூபா முடிந்த பின்னரே இப்படிப்பட்டசெயல் நடைபெறும். இப்படிப்பட்டவொன்று நேரந்தால், வங்கியிடம் மனிதர்களின் நம்பிக்கை அழிந்துபோகும், அல்லது குறைந்துபோகும். வங்கியிற் பணத்தையும் காசோலையையும் சேமித்து வைப்பதனால் கணக்குள்ளவர்கள், காலம் தாமதித்தால் வங்கிக்குத் தம் காசோலைகளுக்குப் பணத்தைக் கொடுக்கவியலாதென்றபயத்தினால் தமக்குரிய வைப்புக்களெல்லாவற்றையும் பணத்தினால் திருப்பியெடுக்க விரும்பி, வங்கியிலிருந்து பணத்தைப்பெற ஆவல் கொள்வர். வங்கி மற்றையவர்களுக்குக் கொடுத்த கடனைத் திரும்பிப் பெற்றுக் கொண்டாலன்றிக் கணக்குரிமையாளர்களின் பணக்கேள்வியைத் தீர்க்குமளவு பணம் வங்கியிலிருக்காது. வங்கிக்குப் பணத்தைச் செலுத்தவியலாதென்ற எண்ணத்தினால் மனிதர் கேட்கும் பணத்தைச் செலுத்திவிடப் போதியவளவு கொடுத்த கடன்களை விரைவில் திரும்பித் தருவித்துக்கொள்ளச் சில சமயங்களில் இயலும். அப்படி நடந்தால், சடுதியான பயம் நீங்கும். அப்பொழுது பணத்தையும் காசோலைகளையும் சேமிக்கிறவர்கள் மறுபடியும் தங்கள் பணத்தை வங்கியிற் சேமிக்கவும் தமக்குக் கிடைக்கும் பணத்தை வங்கியில் இடவும் விரும்புவார்கள். ஆனால், வங்கி கொடுத்த கடன்களின் மிகுதியான அளவை மறுபடியும் கேட்பின், அதனால் பயம் மேலும் அதிகரிக்கும். மிகச் சொற்பகாலத்துக்குக் கொடுத்த கடனென்றுன், ஒரு வங்கி விரைவில் அதனைப் பெற்றுக்கொள்ளவியலும். ஆனால், மூன்று மாதங்களோ, ஆறு மாதங்களோ, ஒரு கடனையெடுத்தவர்களுக்கு அதைச் சடுதியாய் திரும்பிச் செலுத்துவது சங்கடமான காரியமாகும். இவ்விதமான சமயங்களிலே பலர் பணத்தைக் கடனுக்கெடுப்பது, ஆக்கத்தொழில்களுக்குச் செலவழிக்கும் பொருட்டு (பண்படுத்தாப் பொருள்களை வாங்கவாவது சம்பளங்கள் முதலியவற்றைச் செலுத்தவாவது) இல்லாவிடின் பிறநாடுகளிலிருந்து பொருள்களை விலைகொடுத்து வாங்கும் பொருட்டாகும். இப்பொருள்களை விற்றபின் அவர்களுக்குப் பணம் கிடைப்பது திண்ணம். ஆனால், அப்படிப் பணம் கிடைக்கக் காலம் செல்லும். இக்காரணத்தினாலேதான் அவர்கள் வங்கிகளிலிருந்து பணத்தைக் கடனுக்கு எடுக்கிறார்கள். ஆகையால், ஆக்கத்தொழில்கள் முடிவடையுமுன்னர் தாம் எடுத்த கடன் பணத்தைச் செலுத்திவிட இம்வர்களுக்கு இயலாது. ஆகையால், வேறொருவனிடமிருந்து கடனுக்கெடுத்து வங்கிக்குத் திரும்பிச் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால், இவ்விதமான அச்சமுள்ள ஒரு காலத்திலே யாரும் பணத்தைக் கடனுக்குக் கொடுக்க விரும்பார்.

கடனுக்குக் கொடுத்த பணத்தைச் சடுதியாய் வருவித்து உரிமையாளர்கள் கேட்குமளவுக்குக் கொடுக்கவியலுமென வங்கி காட்டுமானால், பணத்தைச் சேமித்தவர்கள் தம் வைப்புக்களைப் பணமாகத் திருப்பியெடுக்க முயலார். அது எங்ஙனமாயினும், தமக்குரிய பணம் 10,000 உரூபாவுக்கு வரையறுக்கப்பட்டிருக்கையில் வங்கி கடனுக்குக் கொடுக்கும் பிரமாணத்தை 90,000 உரூபா வரை குறைக்காதாயின் (அங்ஙனமாயின் 60,000 உரூபாவைக் குறைக்கவேண்டும்) இப்

பயன் என்றும் இருக்கும். 10,000 உரூபா பணமுள்ள ஒரு வங்கி அளவுக்கு மேல் 60,000 உரூபாவைக் கடன் கொடுத்திருந்தால், சிற்றறிவித்தலின்றிப் பின் எந்நாளிலாவது, மிச்சமாகக் கொடுத்த இக்கடனை திரும்ப வருவித்துக்கொள்ளவியலாது. ஆனால், பிரமாணத்தைச் சொற்பவளவில் மீறிக் கடன் கொடுத்திருந்தால், ஓர் அச்சகத்தையுண்டாக்காமல் பணவளவைக் கேள்விகளுக்குச் சரியாகும் வண்ணம் கடனை மறுபடியும் வருவித்துக்கொள்ள வங்கிக்கு இயலும். அது எங்ஙனமாயினும், அளவை மீறிக்கொடுத்த கடன் சிறிதெனினும், ஒருவனுடைய பணக் கேள்வியை ஒருங்கே நிறைவேற்ற வங்கிக்கு இயலாதாயின், அச்சம் காரணமாகப் பலர் வங்கியிலிருக்கும் தம் வைப்புக்களைப் பணமாகத் திரும்பவும் பெற்றுக்கொள்வர்.

ஒரு வங்கி அளவு கடந்து கடனைத் கொடுத்திராவிடினும் பயங்கள் உண்டாவதனால் ஒரு வங்கியின் காரியங்கள் பயமின்றிப் போக இடமுண்டு. வங்கியிலிருக்கும் பணத்தை ஆதாரமாகக் கொண்டு, வங்கி பணத்தைப் படைப்பதனால் இது இப்படி நிகழும். வைப்புக்களுள் நூற்றுக்குப் பத்து விதம் பணமாக வைத்துக் கொள்ளல் புத்தியானதென்று நாம் கொள்வோம். அதாவது, வங்கி 10,000 உரூபாவைச் சேமித்திருக்கும் பொழுது, 90,000 உரூபாவரை கடன் கொடுத்தல் புத்திசாலித்தனமென்று நாம் கொள்வோம். சாதாரண பணக்கேள்விகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற வங்கிக்குப் பணமிருந்தாலும் "வங்கிக்குப் பணத்தைச் செலுத்தச் செல்வமில்லை" என்ற வதந்தி பரம்பினால், வைப்புக்களின் உரிமையாளர் தம் வைப்புக்களை வங்கியிலிருந்து எடுக்கும்பொழுது சாதாரணமாக வங்கியில் பணத்தைச் சேமிக்கிறவர்களும் அதை நிறுத்தி விடுவது திண்ணம். வங்கிக்குரிய பணம் 10,000 உரூபாவைத் தீர்த்து முடிய, யாராவது பணத்தை மேலும் சேமிக்காவிடின், அதற்குப் பின் உண்டாகும் கேள்வியை நிறைவேற்ற வங்கிக்குப் பணம் குறையும். அப்பொழுது, பணத்தைச் சேமித்தவனொருவன் வந்து பணத்தைக் கேட்கும்பொழுது, வங்கிக்கு அதைச் செலுத்தப் பணம் இல்லாவிடின், வங்கி முறிவடைவது திண்ணம். ஆகையால், வங்கிக்குக் கடன் கணக்குக்களை அமைக்கவியலுவது, பணத்தைக் கேட்கும்பொழுது அதைச் செலுத்தவியலுமென்ற எண்ணத்தோடு சேமிப்பவர்கள் வங்கியில் வைக்கும் நம்பிக்கையினாலேயாம். மேலும், தனி வாடிக்கைக்காரர் ஒருங்கே தம் பணத்தைக் கேட்காதபடியால் இது இப்படி நிகழும். வங்கிக்குப் பணம் செலுத்தவியலாதென்ற ஐயம் பரம்பினால், பலர் தம்பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொள்ள முயல்வர். ஆகையால், ஒரு வங்கி தொழிற்படுவது, தன் வாடிக்கைக்காரர்களின் நம்பிக்கையைக் காப்பதனாலேயே.

ஆகையால், கேட்டபொழுது தாம் சேமித்த பணத்தை வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளவியலுமென்ற நம்பிக்கையை வங்கி வாடிக்கைக்காரர் வைத்துக் கொள்ளுமட்டுமே; வங்கிக்குப் பணம் படைத்தல், கணக்குக்களைத் திறத்தல், அபாயமின்றி நிகழ்த்தலாகிய எல்லாவற்றையும் செய்யமுடியும். இவையெல்லாம் வங்கியிலிருக்கும் பணவளவின்படி வரையறையாகும். நம் உதாரணத்தில்

குறித்த வங்கிக்கெனின், அதிலுள்ள பணவரவின்படி ஒன்பது மடங்கு கடன் கணக்குக்களை உண்டாக்கவியலும். வேறு முறையிற் கூறின். வங்கியில் முழுச் சேமிப்பினளவில் நூற்றுக்குப் பத்து விதமாவது பணமாக வைத்துக்கொள்ள வேண்டும். (அண்மையில் இங்கிலாந்து வங்கிகள் நூற்றுக்கு எட்டுவீதம் பணம் வைத்துக்கொள்ள தீர்மானித்தன.)

இதுவரை செய்த விளக்கத்தினுல், சில உண்மைகள் தெளிவாக வேண்டும். பணத்தைச் சேமிப்பதனுலோ, கடனையெடுப்பதனுலோ தொடங்கிய வைப்புக்களின் பரிமாணத்தின் ஒரு பகுதி பணமாக வங்கியுரிமையில் இருக்கவேண்டும். வங்கிக்குரிய பணவளவு குறைந்தால், வைப்புப் பரிமாணத்தைக் குறைக்க வேண்டும். கடனைத் திரும்பத் தீர்க்கும்பொழுது புதிய கடன்களைக் கொடாமலே இதைச் செய்யக்கூடும். பணப்பிரமாணம் அதிகரித்தால், வைப்புப் பரிமாணத்தை அதிகரிக்கவியலும். மேலும் மேலும் கடன்கொடுப்பதனுல்தான் இதைச் செய்யக் கூடும்.

கடன்கொடுத்து வைப்புக்களைத் தொடக்கல் அபாயகரமானதென்பதை நாம் முன்னர்க் கண்டோம். அங்ஙனமாயின், ஒரு வங்கி கடன் கொடுத்து இவ்வபாயத்தை ஏன் ஒப்புக்கொள்ளுகிறது? தற்போதைய வங்கிகள் நடைமுறைக் கணக்குக்களின் வைப்புக்களுக்கு ஒரு வட்டியைச் செலுத்துவதில்லை. ஆனுல், வைப்புக் கணக்குக்களுக்கு ஒரு வட்டி செலுத்தப்படும். ஆகையால், வங்கியில் சேமிக்கப்படும் பணத்தின் ஒரு பங்குக்காவது வட்டியைச் செலுத்தல் வேண்டும். இது ஒரு வங்கி தாங்கவேண்டிய செலவாகும். மேலும், வங்கிக் கட்டடத்துக்கு வாடகையும், வங்கிச் சேவகர்களுக்குச் சம்பளமும், வங்கித் தொழிலைத் தொடங்கிய பங்காளர்களுக்கு இலாபங்களாகப் பங்கிலாபங்களும் செலுத்தல் வேண்டும். இப்படிக் கூறிய எல்லாவற்றையும் செலுத்த, வங்கி ஓராதாயத்தை அமைத்துக் கொண்டால் மட்டுமே, ஆகும். ஆதாயத்தைச் சம்பாதிக்கும் எண்ணத்தினுல் தான் வங்கிகள் கடனைக் கொடுக்கின்றன. ஆகையால், அபாயத்தோடேனும் கடன் கொடுக்காமல் வங்கித் தொழிலை நடாத்தவியலாது. எனவே, வங்கியானது வட்டியோடு கடன் கொடுத்தல் இன்றியமையாதது.

முன்கூறிய கற்பனை, நாட்டில் ஒரு வங்கி மாத்திரம் இருக்கிறதென்று எண்ணிக்கொண்டே இதுவரை நாம் விரித்துரைத்தோம். நாட்டில் வங்கிகள் ஒன்றுக்கு மேல் இருந்தால் முன்னே விரித்துரைத்த தத்துவங்களும் முறைகளும் மாறு. ஒரு வங்கிக்குப் பதிலாக "அ" உம், "ஏ" உமாக இருக்கின்றனவென்று கருதுவோம். இவ்விரண்டுமே 5,000 ரூபா பண வைப்புக்களுடன் தொழில்களைத் தொடங்கினவென்றும் கொள்வோம். ஒவ்வொரு வங்கியும் 45,000 ரூபா வாகும் வண்ணம் இவ்வங்கிகள் பணத்தைப் படைக்குமென்றும் கொள்வோம். அப்பொழுது, பணக்கேள்வியை நிறைவேற்ற 5,000 ரூபா போதுமென்று இவ் வங்கிகள் கருதும். இப்பணம் கேட்கப்படுவது, வங்கியிற் கணக்குள்ளவர்கள் பணத்தைத் திரும்பி எடுக்க வரும்போது வங்கி வைப்புக்களினுரிமையாளர்களால் எழுதப்பட்ட காசோலைகளைக் கொண்டுவருகிறவர்களாலேயேயாம்.

இரண்டு வங்கிகள் இருக்கிறபடியால், ஒரு வங்கியின் கணக்குக்கு உரியவர்கள் மற்றை வங்கியின் கணக்குக்கு உரியவர் பொருட்டுக் காசோலைகளை எழுதுவார்கள். "அ" வங்கியின் கணக்குக் குரியவர்கள் "ஏ" வங்கியில் சில கணக்குக் குரியவர்கள் பொருட்டு 5,000 உரூபா விலை மதிப்புள்ள காசோலைகளை எதுழு வதையும் "ஏ" வங்கியில் கணக்குக்குரியவர்கள் "அ" வங்கியில் சில கணக்குக் குரியவர்கள் பொருட்டு 5,000 உரூபா விலை மதிப்புள்ள காசோலைகளை எழுதுவ தையும் கருதுவோம். அப்படியெனின், "ஏ" வங்கியின் கணக்குக்குரியவர்கள் தமக்குக் கிடைத்த 5,000 உரூபா விலை மதிப்புள்ள காசோலைகளைத் தங்கள் கணக்குக்களிற் சேர்க்கும் வண்ணம் "ஏ" வங்கிக்கு அனுப்புவார்கள். அவ்வண்ணமே "அ" வங்கியில் கணக்குள்ளவர்கள் தமக்குக் கிடைத்த காசோலைகளை "அ" வங்கிக்கு அனுப்புவார்கள். ஆகையால் "ஏ" வங்கி "அ", வங்கியிலிருந்து 5,000 உரூபாவைக் கேட்டல் வேண்டும். "அ" வங்கியும் தன் கணக்குக்குரியவர்கள் பொருட்டு "ஏ" வங்கியிலிருந்து 5,000 உரூபாவைக் கேட்டல் வேண்டும். இப்படியான நேரத்திலே "அ" வங்கியிலிருந்து 5,000 உரூபாவை "ஏ" வங்கிக்கும், "ஏ" வங்கியிலிருந்து 5,000 உரூபாவை "அ", வங்கிக்கும் மாற்றுதல் பயனற்ற செயலெனத் தெரியும். இரு வங்கிகளும் தம் கொடுக்கம் வாங்கல்களைத் தீர்த்து விடுதல் இதைக் காட்டிலும் நன்றாகும். உண்மையில், அவ்வண்ணமாகவே விடயங்கள் நிகழும். நாம் முன் கூறிய உதாரணத்தில், இரு வங்கிகளின் பிரதிநிதிகள் ஓரிடத்திற் கூடி, தங்கள் கொடுக்கல் வாங்கல்களைச் சமமாக்கிக் காட்ட முயல்வர். புது உலகத்தில் இவ்வண்ணம் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைச் சமமாக்கக் கூடிய தாபனத்துக்குத் தீர்க்கும் விடு. என்று பெயர், நாம் முன் கூறியதுபோல இருவங்கிகளிடையில் பணமாற்றம் நேரிடாது.

ஆனல் "அ", வங்கிக்கு 6,000 உரூபா செல்ல வேண்டியிருக்க, "ஏ" வங்கிக்கு 5,000 உரூபா கிடைக்க வேண்டுமென்று கொள்வோம். அப்பொழுது 5,000 உரூபா வரை கடன் சேர்ந்தபின், "ஏ", வங்கியினல் "அ" வங்கிக்கு 1,000 உரூபா செலுத்த வேண்டியதாகும். இதற்குப் பின் "அ" வங்கியுரிமையிலிருக்கும் பணம் 6,000 உரூபாவரை ஏறும் பொழுது "ஏ" வங்கியில் பணம் 4,000 உரூபாவரை குறையும். (பணமாக ஒன்றுக்கு 5,000 உரூபாவாக விருந்தது.) தம் கொடுக்கல் வாங்கல்களின் ஈற்றில் "ஏ" வங்கியினல் "அ" வங்கிக்குக் கடன் தீர்ப்பதாகப் பணம் செலுத்த வேண்டியிருந்தால் "ஏ" வங்கியிற் பணம் குறையும் பொழுது "அ" வங்கியில் பணம் அதிகரிக்கும். ஆகையால், "அ" வங்கிக்குக் கூடும் பணவளவின் பெருக்கத்துக்கு வைப்புப் பரிமாணத்தை அதிகரிக்கும் பொழுது "ஏ" வங்கியில் குறையும் பணவளவின் தொகைக்குக் கடன் கொடுத்தலைக் குறைக்க வேண்டி நிகழும். அது எங்ஙனமாயினும், இரு வங்கிகளும் பணத்துக்கும் வைப்புப் பரிமாணத்துக்குமிடையில் இருக்க வேண்டிய அன்னியோன்னியமான பிரமாணத்தைக் காத்துக்கொள்ள எத்தனித்தால், இரு வங்கிகளினதும் முழுவைப்புப் பரிமாணம் 100,000 உரூபாவுக்கு மேல் ஏருது. ஆகையால், ஒரு வங்கியாவது பல வங்கிகளாவது ஆகட்டும், வங்கித் தொழிலுக்காக அனுசரிக்க வேண்டிய சட்டப் பிரமாணங்களில் மாறுபடா.

சாதாரண வழக்கிலொன்றால் கொடுக்கல வாங்கல்களைத் தீர்க்கும் பொருட்டு முன்கூறிய வங்கிகள் பண மாற்றத்தைச் செய்துகொள்வதில்லை. இவ்வங்கிகளிலும் கணக்குக்களை வைத்துக்கொள்ளும் "**பெரிய வங்கி**" என்ற பெயரால் குறிக்கப்படும் விசேடமானவொரு வங்கியிருக்கின்றது. பெரிய வங்கி சாதாரண ஆட்களின் கணக்குக்களை வைத்துக்கொள்ளாது. அது சாதாரணமாக வைத்துக் கொள்வது, அரசாங்கத்தினதும் **வணிக வங்கி** என்ற பெயரால் குறிக்கப்படும் ஏனைய வங்கிகளினதும் கணக்குக்களே, "ஏ" வங்கியினால் "அ" வங்கிக்கு 1,000 ரூபாவைச் செலுத்த வேண்டியிருந்தால் "ஏ" வங்கி தன் பெரியவங்கிக் கணக்கில் "அ" வங்கிக்காக 1,000 ரூபாவுக்கு ஒரு காசோலையை எழுதிக் கொடுக்கின்றது. அப்பொழுது "அ" வங்கிக்குரிய பெரியவங்கி வைப்பு 1,000 ரூபா கூடும். ஒரு வணிக வங்கிக்குரிய பெரியவங்கி வைப்புப் பரிமாணத்தைப் பணமாக வணிக வங்கிகள் மதிக்கின்றன.

ஒரு நாட்டின் முழுப்பணப் பரிமாணம், மனிதர் கையிலுள்ள பணப் பிரமாணமும் (நாணயங்கள், பணத்தாள்கள்) கணக்குக்களிற் காணப்படும் முழுவங்கி வைப்புப் பரிமாணமுமாகிய இவ்விரண்டிற்கும் நிகராகும். நாட்டில் இருக்க வேண்டிய பணப்பிரமாணத்தைத் தீர்மானிப்பது அந்நாட்டின் அரசாங்கமே. ஓரரசாங்கத்துக்குத் தான் விரும்புமளவுக்கு அந்நாட்டின் பணப் பிரமாணத்தைத் தீர்மானிக்கவியலும். ஆனால், மாறாத பணமுறையை எதிர்பார்க்கும் ஓர் அரசாங்கம், ஒரு காலத்திலும் தன்னிட்டப்படி பணப் பிரமாணத்தைக் குறைக்கவோ, வளர்க்கவோ, மாட்டாது. ஆகையால், பொதுவாக ஒரு நாட்டில் பணப் பிரமாணம் மாறாமல் இருக்கும். நாணயங்களும் பணத்தாள்களும் அச்சிடப்படுவது இலங்கையில் பெரிய வங்கியையும் பிரித்தானியாவில் பெரிய வங்கியையும் போன்ற அரசாங்கத்திலிருந்து அதிகாரத்தைப் பெற்ற தாபனங்கள் மூலமே. ஆனால், வங்கிப் பணவளவெனின், குறுங்காலத்திலாவது மாறக்கூடும். வங்கியில் முழு வைப்புப் பரிமாணத்தைப்பற்றி மேலானவொரு வரையறையுள்ளது. அதாவது, வங்கியிலிருக்கும் பணப்பிரமாணத்தில் ஒருவிதமான பெருக்கம் ஆகும் வரையும் வைப்புக்களைப் படைக்கலாம். இரண்டாவதாக, கடனுக்குக் கொடுப்பதனாலே வங்கிகள் வைப்புக்களைப் படைக்கின்றன. அவ்விதமான கடன்களைக் கொடுப்பது திரும்பத் தீர்க்கச் செல்வமுள்ளவர்களுக்கு மட்டுமே ஆகும். ஆனால், பொதுவாகத் தணிக்க வியலாத விதம் கடன்கேள்வி, வங்கிகளுக்கு உண்டென்பது ஞாபகத்தில் இருக்கவேண்டும்.

வங்கிகளில் இருக்கும் பணவளவு சிலகாரணங்களில் தங்கியுளது. நாட்டிலுள்ள பணப் பிரமாணத்தில் எவ்வளவு, வங்கிகளில் சேமிக்காமல் கையில் வைத்துக்கொள்ளப்படுகிறது என்பது ஒன்றாகும். சாதாரணமாக, மனிதர் தம் கையில் வைத்திருக்க விரும்பும் முழுப்பிரமாணத்தைக் காணவியலும். அது பெரும்பான்மையும் மாறாமல் இருக்கும். எஞ்சியது வங்கியில் சேமிக்கப்படும். இப் பிரமாணத்தின்படி வங்கிகள் பணம் படைக்கவியலும். நாட்டுக்கு மேலும் பணம் தேவையாயிருந்தால் நாட்டின் முழுப்பணப் பிரமாணத்தை அரசாங்கமே கூட்டுதல் வேண்டும். இதன் ஒரு பங்கு வங்கியிற் சேரும். அப்பொழுது, வங்கியில்

அதிகரித்த பிரமாணத்தின் ஒரு பகுதி பணமாகத் தோன்றும். ஆகையால், பணப்பிரமாணத்தின் பூரணமான அதிகரிப்பு நாணயப்பிரமாணத்தின் முழு வளர்ச்சிப் பிரமாணத்திற் கூடும். அரசாங்கம் நாட்டிற் பணப்பிரமாணத்தைக் குறைத்தால், இதற்கு மூரணை பயன் தோன்றும்.

பல நாடுகளில் அரசாங்கஞ் சார்பாகப் பணத்தைப் பரிபாலிக்கும் தாபனம் மத்திய வங்கியாகும். பொதுவாக, மத்திய வங்கி அரசாங்கத்துக்கே சொந்த மாகும். அரசாங்கம் நாட்டின் பொருளியல் தத்துவத்தைப் பற்றிப் போதனை களை மத்திய வங்கியிலிருந்தே பெற்றுக்கொள்ளுகின்றது. "இங்கிலாந்து வங்கி" என்ற பெயரால் வழங்கப்படும் இங்கிலாந்து மத்திய வங்கியின் காரியங்களை ஆராய்ந்தால், ஒரு நாட்டின் பொருளியல் முறையைப்பற்றி மத்திய வங்கி வகிக் கும் மிகவும் மேலானவிடம் நன்ருகப் புலப்படுவது திண்ணம்.

பொதுசனங்களின் சாதாரண தேவைகளையும் தொழில்களுக்கேற்றவண்ணம் நாட்டிற் பணப்பரிமாணத்தைப் பரிபாலிப்பதன் முழுப் பொறுப்பையும் இங்கி லாந்தில் மத்திய வங்கியே ஒப்புக்கொண்டிருக்கின்றது. இதற்காகப் பணத்தாள் களை வெளியிடும் அதிகாரத்தையும் இதுவே தாங்குகின்றது. அரசாங்கத்தின் பணத் தத்துவங்களையும் தொழில்களின் தேவைகளுக்கேற்றவண்ணம் இவ்வங்கி பணம் படைத்தலையும் பரிபாலிக்கின்றது. அதுவே வணிக வங்கிகளின் வங்கி யாகும். வணிக வங்கிகளும் வேறு சில பணத் தாபனங்களும் இங்கிலாந்து வங்கி யின் கணக்குக்களை வைத்துக் கொள்கின்றன. வங்கிகளிடையில் கடனைத் தீர்ப் பது இம்மத்திய வங்கிக் கணக்குக்கள் மூலமேயாம். ஆபத்துள்ள சமயங்களில் மத்தியவங்கி, ஏனைய வணிக வங்கிகளுக்கும் வேறு பணத் தாபனங்களுக்கும் கடனுக்குப் பணங் கொடுக்கும். பணத்தாபனங்கள் முக்கியமான தேவைக ளுள்ள சமயங்களிலே மாத்திரமே இவ்வசதிகளைப் பெற முன்வரும் வண்ணம், மத்திய வங்கி எப்பொழுதும் சாதாரண வட்டிக்குக் கூடிய ஒரு வட்டியை எடுக் கும். சென்ற காலத்திலே ஏதாவதொரு பணத்தாபனம் தன்னுடைய இந்த அநி யாயமான செய்கைகளின் காரணமாக பெரியவொரு சங்கடத்துள் அகப்படும் பொழுது, இங்கிலாந்து வங்கியும் அதற்கு யாதொரு உதவியும் புரியாமல், அத் தாபனம் அழிவதைப் பார்த்துக்கொண்டிருந்தது. அப்படியே; ஏதாவதொரு தாபனம் தன் பிழையில்லாமல் ஒரு தொந்தாவில் அகப்படும்பொழுது இங்கி லாந்து வங்கி அதற்கு உதவியளித்துச் சங்கடங்களிலிருந்து விடுவித்துக் கொள்ள எத்தனிக்கும். அநியாயமான தத்துவங்களை அனுசரிப்பதைக் காணும் பொழுது அந்தந்த வங்கிகளுக்கும் பணத்தாபனங்களுக்கும் ங்கிலாந்து வங்கி பொழுது அந்தந்த வங்கிகளுக்கும் பணத்தாபனங்களுக்கும் இங்கிலாந்து வங்கி உபதேசிக்கும். நாட்டில் பணத்தைப் பற்றிய காரியங்களைப் பரிபாலித்தலாகிய மிகமுக்கியமான காரியத்தை அது எற்றிருக்கிறபடியால், இங்கிலாந்து வங்கி சாதாரண சனங்களோடு கொடுத்து மாறுதலில்லை. இன்த அப்படிச் செய்வது, நாட்டு நலத்துக்கு முன்பே பொது வாட்களினதும் ஏனைத் தொழில்களினதும் நன்மை வங்கியினுல் அமைக்கப்படுமென்ற சந்தேகம் தோன்றுதலுக்கு இடம்

கொடா திருப்பதற்கேயாம். இங்கிலாந்து வங்கி அரசாங்க வங்கியாகவும் காரியங்களைப் புரிகின்றது. சாதி சம்பந்தமான, சருவதேச தொழில்பற்றிய பணவொதுக்கத்தைக் காத்தலும் இங்கிலாந்து வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை, வங்கிகள் பணமாக அங்கீகரிக்கப்படும் வைப்புக்களைப் படைக்கும் தாபனங்களாகவே நம்மால் மதிக்கப்பட்டன. வங்கிகள் நாட்டுக்கு இன்னும் முக்கியமான சேவைகளையும் நிறைவேற்றுகின்றன. பொதுவாட்கள் வங்கிக் கணக்குத் தொடங்குவது அதனுற் பல வசதிகளை அமைப்பதற்கேயாம். ஒரு வங்கிக் கணக்குள்ளவனுடைய கையில் பெரிய பணம் இருத்தல் தேவையன்று. ஆகையால், அவனுடைய மற்றையோர் நம்பிக்கை வைத்திருந்தால் அவர்கள் அவனுடைய காசோலைகளை அங்கீகரிப்பர். ஆகையால், சந்தைக்குப் போகும் பொழுது பெரியதொரு பணத்தொகையைக் கொண்டு போதலுக்குப் பதிலாக, இவனுக்குச் சிறிய காசோலைப் புத்தகமொன்றைக் கொண்டுபோக வியலும். ஏனையோர் பணத்துக்குப் பதிலாக இவனுக்குக் காசுக்கட்டளைகளையும், அஞ்சற்கட்டளைகளையும், பணநிச்சயப் பத்திரங்களையும் (உறுதிச் சீட்டுக்களையும்) கொடுத்தால், அவையெல்லாவற்றையும் தன் பொருட்டு வங்கியில் பணமாக்குவான். சாதாரணமாக, வங்கி சுயவைப்புரி'மயாளர்களின் பாதுகாப்புப் பணத்தையும் அவர்கள் சார்பாய்ச் செலுத்தி அவர்களுடைய விலையுயர்ந்த நகைகளையும் முக்கியமான கடிதங்களையும் பேணுகின்றது. தன் கணக்குரிமையாளர்கள் பொருட்டுச் சில காரியங்களுக்காகப் பணத்தைப் பிறநாடுகளுக்கு அனுப்புதலும் வங்கிகளாற் செய்யப்படும். இவையெல்லாவற்றையும் நிறைவேற்றும் பொருட்டு வங்கி சொற்பமான ஒரு தரகுப் பிரமாணம் கேட்கும். ஆனால், இச்சங்கடமான சேவைகளைச் சொற்பமான ஒரு தரகுப் பிரமாணத்தைக் கொடுத்து வங்கி மூலம் செய்து கொள்ளவியலும். ஆயிரக்கணக்கான மக்களுக்கு வங்கிக் கணக்குக்கள் இருக்கும்பொழுது, அவர்கள், ஒரு கூட்டமாக, வருடம் முழுவதுமே வங்கிக் கணக்குக்களாக மாற்ருத நிலுவைகளைச் சேமிப்பார்கள். அநேகரின் அற்பத்தைத் திரட்டி, வங்கிகள் மற்றவர்களுக்கு வியாபாரம், வேளாண்மை, தொழில் என்பன பொருட்டுப் பணத்தைக் கடனுக்குக் கொடுக்கின்றன. இது மிகவும் முக்கியமான சேவையாகும். தொழிற்படுமுதல் திடீரென்று தேவையாகும் தொழில் தாபனங்கள் அளவற்றவை. விசாலமான நெற்பயிர் செய்யும் ஒரு கமக்காரனுக்குத் தன் நெல்லை அரிந்து மிதித்து விற்கும் பொருட்டு, அவசியமான செலவுகளைத் தாங்கப் பணம் இல்லாதுபோனுல், ஒரு குறுங்காலக் கடன் தேவைப்பட, வங்கி அவ்வித கடனைக் கொடுக்கும். இரண்டு மாதங்களுள் பணம் கிடைக்கும் காரியத்தை முடித்துக்கொள்ளப் பணக்குறைவுள்ள ஒருவன், வங்கியிலிருந்து கடனைப்பெற்றுக் கொள்வான். இவ்விதமான கடன்கள், தொழில் தலைவர்களுக்கு மிகவும் தேவையாகும். ஒரு தொழில் தாபனத்துக்குத் திரட்டக்கூடிய மூலதனத்தை மாருத மூலதனமாக அமைத்துத் தொழிற்படுமுதலை ஒரு வங்கியிலிருந்து கடனுக்கெடுத்தல் பயன்படுவதாகும். ஆகையால், வங்கிகளிலிருந்து கடன் கொடுத்தல், பொருளியல் சார்ந்த

தொழில்களை இடைவிடாமல் நடத்த உதவியாகும். பொருளியல் நிமித்தம் முன்னேற்றமடையும் நாடுகளில் வங்கிகள் பொருளியற் சீவியத்தின் முக்கியவிடத்தைப் பெறுகின்றன.

கணக்குள்ளவர்களுக்கும், நாட்டின் பொருளியல் வாழ்க்கைக்கும் வங்கிகள் மூலம் முக்கியமான இரு சேவை நிறைவேறுவதை நாம் அறிவோம். அவ்வண்ணமே ஒரு வங்கி நடாத்தற்பொருட்டு—கட்டடங்கள், கருவிகள், தொழில் முதலியவற்றிற்கு மிகவும் பணம் தேவையாகும். வங்கிக்கு வேண்டிய ஆதாயத்தின் ஒரு பாகம் கிடைப்பது வங்கிமூலம் நிறைவேறுஞ் சேவைகளுக்குக் கிடைக்கும் அற்ப தரகுகளாலேயாம். ஆனால், இவ்வாதாயம் செலவுக்குப் போதாது. ஆகையால், வட்டிக்குப் பணத்தைக் கொடுப்பதனால்தான் ஆதாயத்தைக் காணமுடியும். அது எங்ஙனமாயினும், இந்தப் பணத்தைக் கடனுக்குக் கொடுத்தலை மிகவும் கவனமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடின், நாம் முன்னர்க் கண்டவண்ணம் முறையிலாக் கடன் கொடுப்பதனால் வங்கி முறிவுறவும் இடமுண்டு. ஒரு வங்கியின் கடன் கொடுப்பதன் தத்துவம், அதன் வைப்பாளர்களின் நம்பிக்கைக்குத் தொல்லையுருதவாறு ஒழுங்காக வேண்டும். மனிதர் வங்கியின் மேல் நம்பிக்கை வைத்துக்கொள்வது, கணக்குரிமையாளர்களால் எழுதப்பட்ட காசோலைகளுக்கு எந்நோத்திலாவது வங்கியிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால் மட்டுமேயாம். சாதாரண சமயங்களிலே பிரித்தானியாவில் ஒரு வங்கிக்கு முழு வைப்புப் பரிமாணத்தின் நூற்றுக்கு எட்டு வீதம் பணமாகவிருந்தால், அது இதன் பொருட்டுப் போதியதாகும். அது எங்ஙனமாயினும், ஒரு வங்கிக்குரிய பணப் பிரமாணம் நாடோறும் குறைந்தும் வளர்ந்தும்வரும். ஆகையால், ஒரு வங்கி முழு வைப்புக்களின், நூற்றுக்கு எட்டு வீதமான பணப் பிரமாணத்தை வைத்துக்கொள்ள எண்ணுகிறதெனின், பணம் குறையும் பொழுது வைப்புப் பரிமாணம் குறைதலையும் பணம் கூடும்பொழுது வைப்புப் பரிமாணம் அதிகரித்தலையும் காணலாம்.

வைப்புக்களுக்கும் பணத்திற்குமிடையில் எதிர்பார்க்கும் வீதத்தைக் கிரமப்படி செய்யவேண்டும். கடனெடுப்பவர்கள் குறைந்தாலும், அதிகமான பணத்தை முதலீடு செய்யக்கூடிய இடங்கள் பலவாதலால், வைப்புக்களை அதிகரித்தல் இலேசாகும். ஒரு குறித்த காலத்துக்குள் வைப்புக்களைக் குறைத்தலும் அவ்வளவு சங்கடமான காரியமன்று. சிலர் கடன்களைத்திருப்பித் தீர்த்து முடிக்கும் பொழுது புதிதாகக் கடன் பணத்தைக் கொடுக்காமல் இருக்கலாம். அது எங்ஙனமெனினும், சங்கடமான சமயங்களிலல்லாது, காலத்துக்குள்ளே தெரியும் வாடிக்கைக்காரர்களுக்குக் கடன் கொடுக்காமல் இருக்க வங்கிகள் விரும்பா. இதற்கொரு காரணமென்னவெனில், கடன் கொடுக்காமலிருந்தால், வட்டியாகக் கிடைக்கும் ஆதாயமும் தொலைந்துபோகும். மேலும், கடன் கொடுக்காமல் இருக்கையில் வாடிக்கைக்காரர்கள் சுயகணக்குக்களை வேறொரு வங்கிக்கு மாற்றிக் கொள்ளவும் இடமுண்டு.

வங்கியில் காசு நிலுவையில் தினந்தோறும் உண்டாகும் இறக்க ஏற்றங்களைச் சிக்கனஞ் செய்ய, ஆறு மாதங்களுக்காவது மூன்று மாதங்களுக்காவது கொடுத்த கடனை விரைவாகத் தருவித்துக் கொள்வதனால், வாடிக்கைக்காரர்களுள் வங்கியைப்பற்றிய புகழ்மொழி குறைந்துபோகலாம். ஆபத்தானவொரு நேரத்திலன்றி, நெடுங்காலத்திற்குச் செய்துகொண்ட உடன்படிக்கையை மதிக்காமல், ஒரு வங்கி கடன் திரும்பக் கேட்பதனால் தோன்றும் அசையும் தன்மையைப்பற்றி வாடிக்கைக்காரர் வெறுப்படையவியலும். வாடிக்கைக்காரர்களின் காரியங்களுக்கு ஓர் ஆபத்தைச் செய்யாமல், தன் பணப்பிரமாணத்தை வங்கி ஒழுங்கு பண்ணிக்கொள்ளுமென்பது அவர்களின் எண்ணமாகும். மேலும், நெடுங்காலத்துக்காகக் கொடுத்த கடன்பணத்தை விரைவாக வருவித்துக் கொள்ள வங்கி விரும்பாது. இது, கடனெடுத்தவனுக்கு நியமித்த நாளுக்குமுன் அதைத் திரும்பச் செலுத்த முடியுமோ என்ற சந்தேகத்தினலேயாம்.

முன்கூறிய காரணங்களால் வைப்புக்களைப் படைக்கும் விதத்தைப்பற்றி வங்கிகள் மிகவும் கவனமாயிருக்கின்றன. ஆகையால், உண்மையில் எப்படிப்பட்டவருக்குக் கடன் கொடுப்பது? என்ன காரணத்துக்காக? என்பதைப் பற்றியும் அறிய வங்கி மிகவும் கவனமாயிருக்கும். கடன் பணம் கேட்பவனுடைய நம்பிக்கையைப் பற்றி வங்கி நன்றாக ஆராய்ந்து பார்க்கின்றது. அது, அவன் கடன் பணத்தைத் திரும்பச் செலுத்த நேர்மையுள்ளவனோ என்பதை அறிந்துகொள்வதற்கேயாம். கடனெடுப்பவர்கள் ஆற்றிவரும் தொழில் பயன்படுமோ என்பதும் வங்கி யோசித்துப் பார்க்கவேண்டிய காரியம். வாடிக்கைக்காரன் காத்திருக்கும் முழு ஆதாயத்தையுமே அவன் யோசிக்கும் காலத்துக்குள்ளே பெற்றுக் கொள்ள வியலுமோ? தான் பணத்தைச் செலவழிக்கப்போகும் தொழிலைப் பயன்படச் செய்யுமளவுக்கு வாடிக்கைக்காரன் கெட்டிக்காரனே? நேர்மையுள்ளவனே? என்னும் இக்கேள்விகளை நன்றாக ஆலோசிக்காமல் கடன் கொடுக்கப்படாது. மனிதருக்குக் கொடுக்கும் கடனைப் பிழையான மதிப்போடு கொடுத்தால், பெறக்கூடிய இலாபங்களெல்லாம் வங்கிக்குக் கிடையாது போகவியலும். ஆகையால், ஒரு வங்கி கடன் கொடுக்குமுன், வழக்கப்படி இவையெல்லாவற்றையும் கவனிக்கவேண்டும்.

ஒரு வங்கித்தொழில் பயன்படத்தக்கதாகக் கொள்ளவியலுவது அதற்குரியவர்களின் நம்பிக்கை வங்கியிடம் இருக்கும்வரை என்று முன்னர்க் கூறினேம். இதற்குக் காரணமென்னவென்றால், வைப்புப் பரிமாணத்தை வைப்புரிமையாளர்கள் பணமூலம் கொடுக்க வங்கி பொறுப்பாக இருப்பதேயாம். ஆகையால், வங்கி வைப்புப் பரிமாணத்தை **வங்கிப் பொறுப்பாகக்** குறிக்கலாம்.

வங்கிப் பொறுப்புப் பரிமாணத்துக்குச் சரியாகுமளவுக்கே **வங்கிச் சொத்துக்களும்** இருக்கவேண்டும். சொத்துக்களாவன வங்கிப் பொறுப்புக்களைத் தீர்க்கும் பொருட்டுக் காசாக்கக்கூடியவைகளே. வங்கியில் வைத்துக்கொள்ளும் காசு, (வைப்புப் பரிமாணத்தில் நூற்றுக்குப் பத்துவீதம்) உண்மையாகவே வங்கிப் பொறுப்புக்களைத் தீர்க்கும் பொருட்டு மிகவும் நல்ல வங்கிச் சொத்தாகும். ஆனல், எஞ்சிய சொத்துக்களாவன, வங்கியினற் பலவிதம் கொடுத்த கடன்

களும் பலவிதஞ் செய்த முதலீடுகளுமாம். கடன் திரும்பிக் கிடைப்பதனல் அவற்றைக் காசாக்கிக்கொள்ளலாம். முதலீட்டைச் செய்த பணத்தை ஒப்பந் தங்களை விற்றுக் காசாக்கிக் கொள்ளவியலும். ஆகையால், வங்கிப் பொறுப்புக் களைத் தீர்க்கும் பொருட்டுள்ளன, வங்கிச் சொத்துக்களும், காசும் கடனும் முத லீடுமாக அகலவிரித்துரைக்கவியலும்.

ஒரு சொத்தை இலேசில் காசாக மாற்றக்கூடுமானல், அது மிகவும் **திரவத் தன்மையுள்ளதாகக்** கருதப்படும். ஆகையால், காசு நிறைதிரவத் தன்மை யுள்ளது. மிஞ்சிய சொத்துக்களின் பெரும்பாகத்தை இலேசாகவே காசாக்க வியலுமெனின், வங்கி திரவத்தன்மையுள்ளதென்று சொல்லாம், இதனல் புலப் படுவது, அவற்றின் அதிகபாகம் காசாகவோ, இலேசாகக் காசாக மாற்றக் கூடிய திரவியமாகவோ இருப்பதேயாம். "இலேசிற் காசாக மாற்றக்கூடிய" என்ற சொல்லில் இரண்டு பொருள்களுள. இவற்றுள் முதலாவது "சடிதியாய்" என்பதாம். இரண்டாவது நட்டங்களை அனுபவிக்காமல் காசாக மாற்றக்கூடும் என்பதாம். இப்படிக் கூறிய இருவிதத்தில் வாங்கிச் சொத்துக்களின் திரவத் தன்மை குறையக்கூடும். ஒரு சொத்தை நட்டமனுபவிக்காமல் காசாக மாற்றலா மானலும் அதற்குக் காலம் கழியக்கூடும். இன்னுமொரு சொத்தை விரைவில் காசாக்கக் கூடுமானலும், அதனல் நட்டங்கள் ஏற்படுவதில் ஓர் அபாயம் உண்டு. அப்படி இருக்க, ஒரு வங்கியின் நிலைமை மேலும் மேலும் திடமாவது, அதில் சொத்துக்கள் மேலும் மேலும் திரவத்தன்மையடைதலாலேயாம். ஆனல், பின் னர் நன்ருகத் தெளிவாகும் விதம் சொத்துக்களின் திரவத்தன்மை அதிகரிக்க, அதனல் பெறக்கூடிய ஆதாயமும் குறையும். ஆகையால், ஒரு வங்கி இக்காரணங் கள் இரண்டையும் ஆலோசிக்க வேண்டும். வங்கியின் பாதுகாப்புக்காகத் திரவத் தன்மையை அதிகரிக்க வேண்டும். வங்கியில் ஆதாயத்தின் பொருட்டுத் திரவத் தன்மை குறையவும் வேண்டும்.

இவ்விடுக்கண்ணைத் தீர்மானிக்கும் பொருட்டு வங்கி மேற்கொள்ளும் வழியுள் ளது. அனுபவத்தில், தன் சொத்துக்கள் கிரமமாகத் திரவத்தன்மையடையும் விதம் வங்கிகள் அவற்றை ஏற்படுத்திக்கொள்ளும். ஆகையால், ஒரு வங்கியில் சொத்துக்களின் பரிமாணத்தினுள் ஒரு பாகம் நிறைந்த திரவத்தன்மையைப் பெற்ற காசாகவும், இன்னுமொரு பாகம் அதற்குக்குறைந்த திரவத்தன்மை யைப் பெற்ற சொத்துக்களாகவும், ஒழுங்கு செய்யப்படும்.

திரவத்தன்மையின்படி சொத்துக்களைப் பலவிதமான கணக்குக்களில் இடமுடி யும். முதலாவதாக, காசுக்கே நிறைந்த திரவத்தன்மையுள்ளது. அடுத்த படியாக, மிகவும் திரவத்தன்மையுள்ளது குறுங்காலத்துக்கு (சில சம யங்களில் ஒரு தினத்துக்கு மாத்திரம்) கொடுக்கப்படும் கடனகும். இது அழைப்புப்பணம் என்று சொல்லப்படும். அழைப்புப் பணத்தோடு மிகவும் குறுகிய காலத்துக்குக் கொடுக்கப்படும் கடன், பதினன்கு நாட்கள் வரை கொடுக்கப்படும். வங்கியில் காசுப் பிரமாணத்தை வைப்புப் பிரமாணத்

தில் நியமித்துக் கொள்ளும் இவ்வகைச் சொத்துக்கள் இன்றியமையாதன. ஏனெனில், இவை விரைவில் காசாக மாறும். ஆனல், இவ்வகையில் கடனுக்குக் கொடுக்கக்கூடிய வட்டி மிகக் குறைவாகும்.

இதைக்காட்டிலும் திரவத்தன்மையிற் சிறிது குறைந்த சொத்துக்களின் உண்டியல்; பின்வரும் **மாற்றுண்டியல்**[30] களும் **இறைசேரி யுண்டியல்**[31] களும் என்க. சருவதேச வியாபாரத்தின் வசதிக்காகவே மாற்றுண்டியல்கள் உபயோகிக்கப்படும். இறைசேரியுண்டியலாவது அரசாங்கம் சார்பாய் வெளியிடப்படும் யாதாவதொரு குறுங்காலத்துக்கு அரசாங்கத்தினல் கடனெடுக்கப்படும் ஒரு வழியாகும். சாதாரணமாக, மூன்று மாத இறைசேரியுண்டியலை விலைகொடுத்து வாங்குதல், அரசாங்கத்துக்கு மூன்றுமாதக் கடனைக் கொடுப்பதற்கு நிகரும். இதற்கு மிகவும் அற்ப வட்டியையும் பெற்றுக்கொள்ளவியலும். 1957 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதலாம் திகதி, இலங்கை வங்கி 100,000 உரூபா விலைமதிப்புள்ள மூன்று மாத இறைசேரியுண்டியல்களை வாங்கிற்றென்று கருதுவோம். சாதாரணமாக, இறைசேரியுண்டியல்களை வாங்குவதனல் பெறும் வட்டி ½%. ஆகும். ஆகையால், 100,000 உரூபா கடனுக்கு ஒரு வருட வட்டி 500 உரூபாவாகும். மூன்று மாதத்துக்கு வட்டி 125 உரூபாவாகும். ஆகையால், இலங்கை வங்கி 100,000 உரூபா விலைமதிப்புள்ள மூன்று மாத இறைசேரியுண்டியல்களை விலைகொடுத்து வாங்குமாயின், அதற்குச் செலுத்தவேண்டியது 99,875 உரூபாவாகும். இறைசேரியுண்டியல்களை வாங்கினது பங்குனி மாதம் முதலாம் தேதியெனின் (மூன்று மாதங்களுக்குப் பின்) ஆனி மாதம் முதலாம் திகதி இறைசேரியுண்டியல்களுக்குப் பதிலாக இறைசேரியிலிருந்து 100,000 உரூபா வங்கிக்குக் கிடைக்கும். பங்குனி மாதம் முதலாம் திகதி முதல் ஆனி மாதம் முதலாம் திகதி வரை உண்டியல் முதிர்ந்திருக்கின்றதென்று வழங்கப்படுவது அந்நாளிலே அதைக் காசாக்கவியலுமென்பதாலேயாம். ஆகையால், ஒரு வங்கி மூன்றுமாத உண்டியலை விலைகொடுத்து வாங்கி, அது முதிரும்வரை வைத்துக்கொள்ளுமென்பதனல் கருதப்படுவது, வங்கி மூன்று மாதக் கடனைக்கொடுக்குமென்பதாம். இதனல், சிறிய ஒரு வட்டியையும் பெறவியலும்.

தன் திரவத்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு, ஒரு வங்கி உண்டியல்களை விலைகொடுத்து வாங்க அமைக்கும் பணத்தை ஒருங்கே அமைக்காது. பங்குனி மாதம் முதலாம் திகதி ஒருவிதமான விலைமதிப்புள்ள உண்டியல்களை வாங்குமாயின், பங்குனி மாதம் 8 ஆம் திகதி இன்னுமொரு விலைமதிப்புள்ள உண்டியல்களை வாங்கும். வங்கி உண்டியல்களை விலைக்கு வாங்குதலை வருடம் முழுவதும் செய்கின்றது. இக்காரணத்தினல், எப்பொழுதும் தான் வாங்கிய உண்டியல்களுள் சில முதிரும்; அவற்றைக் காசாக்கிக்கொள்ளவியலும். இதன் பயன் இப்பொழுது தெளிவாகும். யாதொரு காரணத்தினல் வங்கிக்குப் பணம் அதிகம் தேவையானல், முதிரும் உண்டியல்களைக் காசாக்கி, அக்காசைப் புதிய உண்டியல்களை வாங்க இணைக்காமல் தன்கையில் வைத்துக்கொள்ளும். இக்காரணங்களைக் கொண்டு உண்டியல்கள் ஓரளவுக்குத் திரவத் தன்மையுள்ள

சொத்துக்களாகக் கொள்ளப்படும். உண்டியல்களை விலைகொடுத்து வாங்கல், சாதாரணமாக மூன்று மாதக் கடனைக் கொடுப்பதற்கு நிகரும். அதனால் கிடைக்கும் வட்டி, முன்கூறிய சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வட்டிக்கு மேலானது.

ஏனை உண்டியல் விசேடங்கள், மாற்றுண்டியல்களாம். இது சருவதேச வியாபாரத்திலே தோன்றும் செலுத்தல் விசேடமாகும். இதை ஒரு உதாரணத்தினால் விரித்துரைப்போம். பிரவுனும்—பிரவுனும் என்ற, பிரித்தானியாவில் நிறுவியுள பொறியியல் தொழில் தாபனத்திலிருந்து இலங்கையில் நிறுவிய பெரோராவும்—சில்வாவும் என்ற தொழில் தாபனம் 30,000 உரூபா விலைமதிப்புள்ள சாமான்களை வாங்குகிறதெனக் கருதுவோம். இவ்விரண்டு தொழில் தாபனங்களும் விலை முதலியவற்றைப்பற்றிக் கடிதமூலம் நிர்மானித்துக்கொண்டன. பிரவுனும்—பிரவுனும் என்ற கம்பனி, சாமான்களை இலங்கைக்கு அனுப்புகின்றது. இலங்கைக்கு அச்சாமான்கள் வந்தபொழுது, இலண்டன் நகரத்தில் ஒரு வங்கியில் பெரோராவும் சில்வாவும் என்ற கம்பனிக்கு ஒரு கணக்கு இருந்தால், அவர்கள் அக் கணக்குச்சார்பாக ஒரு காசோலையையாவது ஓர் ஓடரையாவது எழுதி அனுப்பிப் பிரவுனும்—பிரவுனும் கம்பனிக்குப் பணத்தைச் செலுத்துவார்கள். அப்படி இல்லாவிடின், பிரவுனும்—பிரவுனும் கம்பனி மாற்றுண்டியலைத் தொடங்கும். இது மாற்றுண்டியலை எழுதியுள்ள நாள் தொடக்கம் மூன்று மாதங்கள் (அல்லது ஆறு மாதங்கள்) கழிந்த பின்னர், பெரோராவும்—சில்வாவும் கம்பனி 2,250 பவுணை (அதாவது 30,000 உரூபாவை) செலுத்த வேண்டுமென்று குறித்த ஒரு கட்டளையாகும். செலுத்தவேண்டிய நாள் இரு தொழில் தாபனங்களால் நிர்மானிக்கப்படும். பெரோராவும் சில்வாவும் கம்பெனிக்கு உண்டியல் அனுப்பப்பட்ட பொழுது அதை நியமித்த தினத்திற் செலுத்தி விடுவதற்கு ஒப்புக்கொள்ளும் சாட்சியாகக் கம்பனியார் அதற்குக் கையொப்பம் இடவேண்டும். அப்பொழுது, பிரவுனும்—பிரவுனும் கம்பனி, நியமிக்கப்பட்ட தினம் வரும்வரை காத்திருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளும். அப்படியில்லாவிடின், இத்தொழில் தாபனம் இவ்வுண்டியலைத் தன் வங்கிக்கு ஒப்படைத்து உடனே பணத்தைக் கேட்கும். பொதுவாக, வங்கி இவ்வுண்டியலை இப்படித் தொழில்களில் ஈடுபடும் ஒப்புக்கொள்ளு நிலையம் என்ற பெயரால் குறிக்கப்படும் தொழில் தாபனத்துக்கு அனுப்புகின்றது. இவ்வொப்புக்கொள்ளு நிலையம் பெரோராவும்—சில்வாவும் நம்பத்தக்க தாபனமென்று அறிந்திருந்தால், பெரோராவும்—சில்வாவும் கம்பனி பணத்தைச் செலுத்தாது போனாலும் அதைச் செலுத்திவிடக் கையொப்பமிடும். இவ்வபாயத்தை ஒப்புக்கொள்ளும் பொருட்டு **ஒப்புக்கொள்ளுநிலையம்**[33] ஒரு தரகு பெற்றுக்கொள்ளும். அப்பொழுது, வங்கியும் இவ்வுண்டியலைக் கழிவோடு மாற்றும். அதாவது, நியமிக்கப்பட்டதினம் முடியுமுன், கொடுக்கப்படும் பணத்துக்கு வட்டியாக ஒரு பண அளவை வைத்துக்கொண்டு மிஞ்சிய பணத்தைப் பிரவுனும்—பிரவுனும் கம்பனிக்குக் கொடுக்கும். இப்பொழுது இம்மாதிரிக் கொள்ளல் கொடுத்தல்கள் வழக்கற்று இருக்கின்றன. ஏனெனின், முயற்சியாளர் பெரும்பான்மையும் வங்கிகளிலிருந்து கடனெடுப்பதாலேயாம்.

முதலீடுகளாற்றுன் அடுத்த பகுதி அமைந்திருக்கின்றது. நட்டங்களை யனுப விக்க வியலாதபடியால், வங்கிகள் எப்பொழுதும் **ஆவணங்களையே**[34] வாங்குகின் றன. இவை பத்திரமாகவே வாங்கப்படும். பல நாடுகளில் மிகவும் காப்புள்ள ஆவணங்களாகக் கருதப்படுவன, பணம் பெறும் பொருட்டு நாட்டில் அரசாங்கம் வெளியிடும் உடன்படிக்கைகளாம். புரட்சிகளுக்கும் புகும் நாடுகளில் அரசாங்க உடன்படிக்கைகள் காப்புள்ளவையென்று கருதப்படமாட்டா. அங்ஙனமே, எந்தக் காரணத்தின் பொருட்டாவது உடன்படிக்கைக்குச் செலுத்தவேண்டிய வட்டியைச் செலுத்தாத ஆண்டுகளில் உடன்படிக்கைகளும் காப்புள்ளவைகளா கக் கருதப்படா. ஆனுல், சாதாரணமாக அரசாங்க உடன்படிக்கைகள் காப் புடையன எனக் கருதப்படும். ஆவணங்களென்று பெயரிடப்படும் அரசாங்க உடன்படிக்கைகளாவன, ஓர் அரசாங்கத்தினுல் நெடுங்காலக் கடனெடுக்கும் ஒரு வழியாகும். நெடுங்கால உடன்படிக்கைகள் மார்க்கமாக ஓர் அரசாங்கம் வருடக் கணக்காகவோ, என்றும் நிலையாகவோ ஒரு கடனையெடுக்க எத்தனிக்கும்.

என்றும் நிலையானவொரு கடனையெடுக்கும் ஓர் உடன்படிக்கையைப் பற்றி ஆலோசிப்போம். நூற்றுக்கு ஐந்து வீத வட்டியோடு ஓர் அரசாங்கம் என்றும் நிலையான கடனைக் கேட்டால், கடனைக் கொடுக்க விரும்புகிறவர்கள் இருப்பார்கள் என்று சொல்லலாம். வட்டி நூற்றுக்கு ஐந்து வீதமெனின், நூறு உரூபா கடனைக் கொடுப்பதால் (அதாவது நூறு உரூபாவுக்கு ஓர் உடன்படிக்கையை வாங்கு வதனுல்) ஒரு வருடத்துக்கு 5 உரூபா நித்திய ஆதாயம் பெறவியலும். பொது வாக, இவ்விதமான கடன்களின் கேள்வியைக் காட்டிலும் ஒரு வழங்கல் இருக் கிறபடியால் கடன் கொடுக்க விரும்பும் எல்லோருக்குமே கடனைக் கொடுக்க வியலாதுபோகும். ஆகையால், வேண்டிய நேரத்தில் அரசாங்க உடன்படிக்கை களை வாங்குவதனுல் அரசாங்கத்துக்குக் கடன் கொடுத்தவனுக்கு, அக்கடனை அரசாங்கத்திலிருந்து திரும்பிப் பெற்றுக்கொள்ள இயலாது போனுலும் அக் கடனை வேறொருவனிடம் ஒப்படைக்கவியலும். யான் 1,000 உரூபா விலைமதிப் புள்ள உடன்படிக்கைகளை வாங்கியபின், எனக்குப் பணம்வேண்டுமானுல், அவ் வுடன்படிக்கைகளை வேறொருவனுக்கு விற்க முடிவது இக்காரணத்தினுலேயாம். ஆகையால், ஆவணங்களை வாங்குவதனுல், ஒருவனுக்கு முதலீடு செய்த பணம் அழிந்துபோகும் என்ற பயமில்லை. ஆனுல், நாம் முன்னர் விரித்துரைத்ததுபோல நிகழும் வட்டியளவின்படி, உடன்படிக்கைகளை விற்கக்கூடிய விலை குறையவும் வளரவும் கூடும். ஆகையால், கடிதில் பணம் தேவையாயிருந்தால், உடன்படிக் கைகளை விற்றுப் பணத்தைப் பெற்றுக்கொள்வதில் ஓரபாயமுளது. இக்காரணத் தினுல் ஆவணங்கள் அவ்வளவு திரவத்தன்மையுடையவையாகா. பொதுவாக, வங்கிகள், அரசாங்க உடன்படிக்கைகள் ஆவணங்களாக வாங்கினுலும், வேறு தாபனங்களில் உடன்படிக்கைகளையும் ஆவணங்களாக வாங்க இடமுண்டு. வங்கி களால் அரசாங்கவுடன்படிக்கைகள் பத்திரமானவையென்று ஏற்றுக் கொள்ளப் படுவதனுலேயே ஏனைய ஆவணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது,

அரசாங்க உடன்படிக்கைகளுக்குக் கிடைக்கும் வட்டி சிறிதென்பது புலனுகும். ஆனல், சாதாரண உண்டியல்களைக் காட்டிலும், உடன்படிக்கைகள் மூலம் அதிக மான வட்டி கிடைப்பது அவை நெடுங்காலக் கடனுதலாலேயாம்.

பெரும்பான்மையும் திரவத்தன்மையில்லாத சொத்துக்களாவன. வாடிக்கைக் காரர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களும் முற்பணமுமாம். சில சமயங்களிலே ஓராண்டு ஆகும்வரை கடன் கொடுத்தாலும், பொதுவாக ஆறு மாதங்களைக் கடந்து கடன் கொடுக்க வங்கிகள் விரும்பா. வாடிக்கைக்காரனிடம் நம்பிக்கை யிருப்பதால் வங்கி ஆறு மாதங்களுக்குள் புதுப்பிக்கும். கொடுத்த கடனை ஆறு மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ள வங்கி விரும்பும். வாடிக்கைக்காரன் வங்கியி லிருந்து எடுத்த பணத்தை அப்படியெடுத்த காரியத்துக்கன்றி வேருென்றிற்கு அமைக்கலாகாது. உதாரணமாக, பொருள்களை விற்றபின் பணத்தை விரைவில் செலுத்தி விடவியலும். பிறநாட்டிலிருந்து பொருள்களை வருவிப்பவனுக் கெனின், ஆறு மாதங்களுக்கேனும் கடன்கொடுக்க ஒருவங்கி விரும்பும். ஆனல், அப்படிப்பட்டவன் வங்கியிலிருந்து எடுத்த பணத்தைத் திரும்பச் செலுத்தாமல் கொண்டுவந்த அப்பொருள்களை விற்கும் பொருட்டு ஒரு ஆவணத்தையும் கருவி களையும் விலைகொடுத்து வாங்குவான். அப்பொழுது, வங்கி திருத்தியடைய மாட்டாது. இது எடுத்த பணத்தைச் செலுத்தக் காலந்தாழ்த்துவதனுலேயாம். மேலும், இப்புதிய தொழிலின் பயன் பாட்டைப் பற்றி ஆராயக் கடன்கொடுக் குஞ் சமயம் வங்கிக்கு நேரமிருக்காது. கடனுனது ஒரு வாடிக்கைக் காரனுல் ஒருங்கே வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பணமாகும். இக்கன்பணத் தைப் பெற்றுக்கொள்ளும் காலத்துக்கேற்ற வட்டியும் நியமிக்கப்படும். ஒரு வாடிக்கைக்காரனுக்கு முற்பணம் கிடைப்பது, அவனுடைய கணக்கில் இட்ட பணத்தையும் (நியமிக்கப்பட்ட ஒருவரையறையில்) ஒரு **மேலதிகப்பற்றையும்** எடுக்க இடம் விடும் பொழுலேயாம். ஒருவட்டி. நியமிக்கப்படுவது, முழு முற் பணத்துக்குமன்று ; மேலதிகப்பற்ருக எடுக்கும் பணத்துக்கு மட்டுமே.

பொதுவாக, கடன்பணமும் முற்பணமும் கொடுக்கப்படுவது வியாபாரப் பங்குகளையும் விடுகளையும் காணிபூமிகளையும் ஈடுசெய்யும் பிணைகளோடேயாம். ஆனல், நேரத்துக்குக் கடனைச் செலுத்திவிட இயலாத வாடிக்கைக்காரர்களுக்கு இப்படிக் கூறியவற்றை விற்றுக் கடனைச் செலுத்திவிட வங்கியானது பொது வாக வற்புறுத்தாது. இதற்குக் காரணமென்னவென்ருல், இதனுல் வங்கி அவ தூறுக்குள்ளாகும் என்பதே. சில வாடிக்கைகாரர்கள் முன்கூறிய வங்கியைக் கைவிட்டு, மீள்தன்மையியல்புள்ள வங்கிகளைத் தேடிப்போகப் பார்ப்பார்கள். ஆகையால், சாதாரண காலத்திலென்ருல் கடன் பணத்தையோ முற்பணத் தையோ நியமிக்கப்பட்ட காலத்துக்கு முன் வங்கி திருப்பிப் பெற்றுக்கொள்ள எத்தனித்தல் பயனற்ற செயலாகும். ஒரு வாடிக்கைக் காரனுக்குக் கொடுக்கப் படும் கடன்பணத்தையோ முற்பணத்தையோ அரசாங்க உடன்படிக்கைகளைப் போல விற்க முடியாது. ஆகையால், அரசாங்க உடன்படிக்கைகள் முற்பணத் தைக் காட்டிலும் பெரும்பான்மையில் திரவத்தன்மையுடையன. ஆகையால்,

முற்பணம் குறைத்தலைக் காட்டிலும் அரசாங்க உடன்படிக்கைகளை விற்க வங்கிகள் மிகவும் விரும்பும். இதனால், யாரேனும் வெறுப்படையாதபடி வாடிக்கைக் காரர்களும் குறையாதபடி நடக்கலாம். கடன் கொடுக்கவோ, முற்பணத்தைக் கொடுக்கவோ தகுதியுள்ள வாடிக்கைக்காரர்கள் முன்வராவிடின், வங்கிகள் அதிகம் விரும்புவது. முன்குறித்தவற்றைக் காட்டிலும் திடமான உடன்படிக்கைகளை விலைகொடுத்து வாங்கவேயாம். தகுதியுள்ள வாடிக்கைக்காரர்கள் சிலர் கடன் பணத்தைக் கேட்கும்பொழுது, இம்முதலிடுகளை விற்று, அவர்களுக்குக் கடன் பணத்தையளித்தல் வங்கிகளுக்கு இலேசான காரியமாகும்.

திரவத்தன்மை சார்பாய் இங்கிலாந்தில் வங்கித் தொழில் புரியும் விதத்தை இப்பொழுது பார்ப்போம். பிரித்தானிய வங்கிகள், வைப்புப் பரிமாணத்தில் நூற்றுக்கு எட்டு வீத பணத்தை, மத்திய வங்கியில் நிலுவையாக வைத்துக் கொள்ளும். வணிக வங்கிகள் மத்திய வங்கியில் பணத்தை இட்டுக் கணக்குக்களை வைத்துக் கொள்வது நாடோறும் நிகழும் சருவதேச வங்கிக் கொடுக்கல் வாங்கல்களைத் தீர்க்கும் பொருட்டேயாம். அழைப்புப்பணமும் மிகவும் குறுங்காலக் கடனும் முழு வைப்புப் பிரமாணத்தில் நூற்றுக்கு ஏழு, அல்லது ஒன்பது மாத்திரமேயாகும். அழைப்புப் பணம் சாதாரணமாகக் கொடுக்கப்படுவது உண்டியற்றரகர்களுக்கேயாம். இது, மாற்றுண்டியல்களையும் இறைசேரியுண்டியல்களையும் விலைகொடுத்து வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபட்டிருக்கும் ஒரு பகுதியாகும். மிகவும் குறுங்காலக்கடன், பதினன்கு நாட்கள் காலவரையறையில் கொடுக்கப்படும். ஆனால், ஏழு நாட்களின் அறிக்கைக்குப்பின் இதை நேரத்தோடு திரும்பிப் பெற்றுக்கொள்ளவியலும். இக்கடன் கொடுக்கப்படுவது உண்டியற்றரகர்களுக்கும் தொழிற்றாபனத்துக்குமாம். தொழில்தாபனமானது சொத்துக்களையும் பங்குகளையும் விற்கக் கூடிய, அல்லது விலை கொடுத்து வாங்கக்கூடிய இடமாகும்.

உண்டியல்களிற்றான் அடுத்த கணக்கு அமைந்திருக்கின்றது. அரசாங்கத்தினுல் வெளியிடப்படும் இறைசேரியுண்டியல்களாவன வெளியிட்டு மூன்று மாதங்கள் கழிந்த பின்னர், உரிமையாளர்களுக்கு அவற்றில் குறித்திருக்கும் பணத்தைச் செலுத்தும்படி செய்யும் ஒரு வாக்குறுதி விசேடமாகும். அவை அரசாங்க மூலம் வெளியிடப்படுவதனால் நியமிக்கப்பட்ட காலத்திலே செலுத்துதலைப் பற்றிச் சிறிதும் ஐயமில்லை. ஒருவன் 5,000 பவுண் மதிப்புள்ள ஓர் இறைசேரியுண்டியலை வாங்கினால், மூன்று மாதம் கழிந்தபின் அவன் அவ்வுண்டியலை அதற்குக் குறைந்த விலைக்கு வாங்கவியலும். (4,993 பவுண் 15 சிலினுக்கு) அவன் இவ்விதமான கொடுக்கல் வாங்கல்மூலம் ஒரு வருடத்துக்கு நூற்றுக்கு அரை வீதம் (½%) வட்டி பெறுவானென்பது இதனால் புலப்படும். பல வங்கிகள் இறைசேரியுண்டியல்களை விலை கொடுத்து வாங்குகின்றன. இவ்விதமான பெரிதும் விலை மதிப்புள்ள உண்டியல்களை விலைகொடுத்து வாங்கப் பொதுமக்கள் முயல்வதில்லை யென்பது அனுபவமாகும். இறைசேரியுண்டியல்களை வாங்குவதனால் வங்கிகள்

½% வீத வட்டியைச் சம்பாதித்துக் கொண்டாலும், மாற்றுண்டியல்களை வாங்குவதனல் ½% வீதமிருந்து 2 வீதம் வங்கி வட்டி பெறும். இங்கிலாந்துவரை விலை கொடுத்து வாங்கும் உண்டியலளவு முழுவைப்புப் பரிமாணத்தின் நூற்றுக்கு 12 தொடக்கம் 20 வீதம் வரையாகும்.

தம் வைப்புப் பரிமாணத்தின் நூற்றுக்கு 14 வீதம் தொடங்கி 17 வீதம்வரை இங்கிலாந்து வங்கிகள் முதலீட்டின் பொருட்டு இணைக்கும். முதலீட்டின் பொருட்டு இணைக்கும் பணத்தின் அதிகப்பகுதியை அரசாங்க உடன்படிக்கைகள் ஏற்க விரும்பும். இதனல் கிடைக்கும் வட்டியளவு நூற்றுக்கு மூன்று வீதம் மாத்திரமே.

நாம் முன்னர்க்கண்டவாறு, கடனுட் முற்பணமும் ஆறுமாத, அல்லது ஒரு வருட காலவரையறைக்குக் கொடுக்கப்படுவது வாணிபத் தொழிற் பங்குகள், தனிப்பிணை முதலிய பிணைகள் அடிப்படையாகக் கொண்டேயாம். இப்படிக் கடன்கள் பணக்குறைவை நிறைவேற்றும் பொருட்டு வங்கியின் வாடிக்கைக்காரர்களுக்குக் கொடுக்கப்படும். தொழில் எசமான்கள், வியாபாரிகள், கமக்காரர்களைப் போன்றவர்களுக்கே மிகுந்த கடன்பணம் கொடுக்கப்படும். பெரும்படி கமத்தொழில் செய்கிறவனுக்கு விளைவைச்சேர்த்து விற்கும்வரை பல செலவுகள் இருக்கும். ஆகையால், அவனுக்குப் பணம் தேவையாகும். தொழில் உற்பத்தியாளன் உற்பத்திப் பொருள்களை விற்றுப் பணத்தைத் திருப்பித் தீர்த்து விடும்வரை பண்படுத்தாப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளக் கடனை வங்கியிலிருந்து எடுப்பான். பிரித்தானிய வங்கியிலிருந்து பணத்தைக் கடனுக்கு வாங்கும் பலர் வங்கி கருதும் விதம் கடனுக்கு எடுப்பது மிகச்சிறிதான பணவளவேயாம். ஏனைக் கடனும் முற்பணமும் எடுக்கப்படுவது, பெரிய பணப்பிரமாணங்களாலேயாம். சிலசமயம் பலகோடிக் கணக்கான முற்பணம் எடுப்பது பெரிய தொழில் தாபனங்களே. இப்படிக் கடன்மூலம் நூற்றுக்கு 4, அல்லது 5 வீத வட்டி சம்பாதிக்க வியலும். தங்கள் சொத்தில் ஒரு பகுதிமட்டும் இம்மாதிரியான கடனளிப்பதற்கு அமையும்.

பெறுமானத்தின் அளவுகோலாகவியங்குதல் சேவையாகும். பணத்தின் மிகவும் முக்கியமான செயல் சேவையாகுமென்பதை இவ்வத்தியாயத்தின் முன்னைப் பகுதிகளிலே படித்தோம். பணம் இல்லாவிடின், ஒரு திரவியத்தின் பெறுமானத்திற்கு வேண்டியது அதற்குப் பண்டமாற்றுகப் பெறக்கூடிய வேறு திரவியமாகும். பணத்தையுபயோகிப்பின் இச்சங்கடம் நீங்கும். ஆகையால், திரவியங்களின் பெறுமானம் பணத்திற் கூறப்படும். ஓரிருத்தல் தேயிலையின் விலை உரூபா 3.50 எனின், அதன் கருத்து, ஓரிருத்தல் தேயிலை உரூபா 3.50 உக்கு மாற்றவியலும் என்பதே. ஆனல், பணத்தின் பெறுமானத்தைப் பணத்தினலே கூறின், அதன் பொருள் இல்லாதுபோகும். பணத்தின் பெறுமானத்தைக்கருத வேண்டியது முன்னைத் திரவியங்களின் பெறுமானத்தைக் காணும்பொழுதே. அதாவது, யாதாயினுமொரு பணப்பிரமாணத்துக்கு வாங்கக்கூடிய திரவியப்பிரமாணம் எல்லாவற்றையுமே ஆய்ந்துபார்க்க வேண்டும். அப்பொழுது, பணத்தின் பெறுமானம் கூடினல், ஏனைத் திரவியங்களின் பிரமாணங்களையும் பணத்துக்குப்

பெற்றுக்கொள்ளலாம். ஒரு காலத்திலே 110 உரூபாவுக்கு மாற்றாகப் பத்துக் கொத்து அரிசியையோ, நூறு யார் சீலையையோ பெறவியலுமாயின், பணத்தின் பெறுமானம் அதிகரிக்கும்பொழுது இவ்வெல்லாவற்றினுள்ளும் கூடியவளவைப் பெறவியலும். அதாவது 1,500 கொத்து அரிசியோ 150 யார் சீலையோ பெறலாம் எனக் கொள்வோம். 100 உரூபா 1,000 கொத்து அரிசிக்கு மாற்றாயின், அரிசி ஒரு கொத்தின் விலை 10 சதமாகும். 100 உரூபா 1,500 கொத்து அரிசிக்கு மாற்றாயின், அரிசி ஒரு கொத்தின் விலை பத்துச் சதத்திற் குறையும். அதாவது, உண்மையாகவே 6 சதமாகும். ஆகையால், பணத்தின் பெறுமதி கூடினால், வேறு பொருள்களின் விலை குறைவாகும்.

பணத்தின் பெறுமானமும் வேறு திரவியங்களின் பெறுமானத்தைப் போலவே வேறுபடும். இதனால், பெரும் பயன் உண்டாகும். ஆகையால், பணப்பெறுமானத்தின் வேறுபடுதலை அளத்தல் முக்கியமாகும். ஆனால், இது கடுமையானது. ஏனெனில், குறித்தவொரு காலத்தில் பணத்தின் பெறுமானம், அதற்கு மாற்றாக எடுக்கும் முழுத்திரவியத்தின் அளவாகுமாதலாலேயாம். பணத்தின் பெறுமானத்தைக்காணும் பொருட்டுப் பணப்பிரமாணத்துக்கு மாற்றக் கூடிய திரவியங்கள் எல்லாவற்றையுமே ஓர் உண்டியலில் புகுத்தினால், அவ்வுண்டியல் தீர்க்கமாகுமாதலால், அது அவ்வளவு பயன்பட மாட்டாது. அது பணத்துக்கு மாற்றக் கூடிய திரவியங்கள் எல்லாவற்றின் விலைச் சீட்டாகும். ஏனை விலைகள் எல்லாவற்றையும் சாதாரண விலைமட்டமாகக் காட்டக்கூடுமானால் பணத்தின் பெறுமானத்தைக் கண்டுகொள்ளல் பிரயோசனமாகும். ஆனால், அப்படியாகக் காணல் ஒரு திரவியத்தின் விலையன்று. அது பொதுவாக, எல்லாப் பொருள்களின் விலையாகும். ஆகையால், 1939 இல் சாதாரண விலைமட்டம் 100 மாதிரிக்கும், 1957 இல் சாதாரண விலைமட்டம் 150 மாதிரிக்கும் காட்டினால், பணத்தின் பெறுமானம் குறைவதே இதனால் அறியக்கூடியது. இன்றேல், பொதுவாக, விலையானது நூற்றுக்கு 50 வீதமே கூடும். இம்மாதிரி விலைமட்டம் அதிகரித்தால், பணத்தின் பெறுமானம் குறையும். சாதாரண விலைமட்டம் காணல் சங்கடமானது. பலகாரணங்களினால் பலவிதமான திரவியங்களின் விலை ஒருங்கே மேலெழாது; கீழிறங்காது. சில விலைகள் மேலெழும்பொழுது வேறு சில விலைகள் கீழிறங்கும். சில திரவியங்களின் விலை ஏனைத்திரவியங்களைக் காட்டிலும் சடுதியாகக் குறையும்; கூடும். பொதுவாக, விலைமட்டத்தைக் கண்டு கொள்வதற்குச் சில முறைகள் கையாளப்படும். இது சாதாரணமாக முடிவது சுட்டெண்களைக் கண்டுகொள்வதனாலேயாம். எப்படி இது காணப்படுகிறதோ, அதன்படி விலையின் சுட்டெண்ணைத்தேடும் முறையும் மாறும். ஆனால், விலையின் ஒரு சுட்டெண்ணின் முக்கியமான அங்கமானது, ஒரு மூலவருடத்தின் விலைமட்டத்தைத் தேடி, ஏனைய வருடங்களினது விலைமட்டத்தையும் தேடி, மூலவருடத்தோடு ஒப்பிடுதலாம். மூலவருடத்தின் விலைமட்டம் 100 என, அடுத்த வருடத்தின் விலைமட்டம் நூற்றுக்குப் பத்து வீதம் அதிகரித்திருப்பின், அவ்வருடத்தின் விலைமட்டம் 110 என்று சொல்லப்படும்.

பணத்தின் பெறுமானம், அல்லது சாதாரண விலைமட்டம் மாறுபடுவதேன் என்பதைப்பற்றி சில ஐயங்கள் உள. இவற்றுள் பணத்தின் **கணியக்கொள்கையே**[40] மிகவும் பிரசித்தமானது. இதன் கருத்துப்படி குறிக்கப்படுவது, பணப் பிரமாணம் நூற்றுக்கு ஒரேவிதமான கணக்கில் அதிகரித்தால் அப்பிரமாணத் துக்கே விலைமட்டமும் அதிகரிக்கும். ஆனால், இக்கொள்கையின் பொருளை உள்ள படி புதிய பொருளியலறிஞர்கள் ஏற்றுக்கொள்ளார். பொதுவில், அங்கீகரிக்கப் படும் கொள்கையானது வேறு திரவியங்களைப் போலவே, பணத்தின் பெறுமான மும் பணநிரம்பலிலும் பணக்கேள்வியிலுமே தங்கியிருப்பதாகும். நாட்டிற் பண முறை வங்கித் தொழில், நாட்டுப்பணத் தத்துவம் முதலியவற்றின் மேலேயே பணநிரம்பல் தங்கியிருக்கின்றது. பணநிரம்பல் என்பதனால் கருதப்படுவது, பணத்தைச் செலவிடாமல், முதலீடுகளில் இடாமல், அதனைக் கையில் வைத்துக் கொள்ளும் பொருட்டுச் செய்யப்படும் கேள்வியாகும். பல காரணங்களினாலே மனிதர் பணத்தை வைத்திருக்க விரும்புவார்கள். ஆனால், இவ்விருப்பமும் மாறி விடும். ஏனைக் காரணங்கள் மாறாமல் இருக்க, மனிதர் பணத்துக்காகச் செய்யும் கேள்வி அதிகரிக்கும்பொழுது விலைமட்டம் கீழிறங்கும். ஆகையால், பணத்தின் பெறுமானம், அல்லது விலைமட்டம் பணநிரம்பலுக்கும் பணக்கேள்விக்கு மிடை யிலுள்ள தொடர்பின் மேல் தங்கியிருக்கின்றது.

சாதாரண விலைமட்டத்தில் உண்டாகும் மாறுபாடுகளைப் பிழையின்றி அளத் தல் அரிதாகும். ஆனால், மாற்றங்கள் உண்டாவது திண்ணம். சாதாரண விலை மாற்றத்தின் வேறுபாடுகள் காரணமாக, பெரும் பயன்கள் உண்டாகும். விலை மட்டம் ஏறும்போது பணத்தின் பெறுமானம் குறைந்துபோகும் ஒரு நிலையை அவதானிப்போம். ஒரு புசல் நெல்லின் விலை 6 உரூபாவாகவிருந்த காலத்திலே ஒரு கமக்காரன் 2,490 உரூபாவைக் கடனுக்கெடுத்தான் என்று கருதுவோம். ஒரு புசல் நெல்லின் விலை 12 உரூபாவரை ஏறினால், அவன் எடுத்த பணத்தைத் தீர்த்துவிட எதிர்பார்த்த நெற்புசல் கணக்கின் ஒரு பகுதி மாத்திரமே அவனால் விற்கவேண்டிவரும். அதனால், விலை ஏறும் நேரத்திலே பணத்தைக் கடனுக்குக் கொடுப்பவனுக்குப் பல நட்டங்கள் ஏற்படும். அவனுக்குக் கிடைக்க வேண்டிய பணவளவு நியமிக்கப்பட்டிருக்கும்பொழுது பணத்தின் பெறுமானம் குறைந்தி ருப்பதைக் காணலாம். நியமிக்கப்பட்ட பணவிலாபத்தைப் பெறுகிறவர்களுக் கும் விலைமட்டம் ஏறும்பொழுது பல நட்டங்களையும் துன்பங்களையும் அனுப விக்க நேரிடும். இவ்வண்ணம், சம்பளங்களைப் பெறுகிறவர்களும், அரசாங்கத்துக் குக் கொடுக்கும் கடன்களைப் போன்ற நெடுங்கால முதலீடுகளால் வட்டியை எதிர்பார்க்கிறவர்களும், தங்கள் ஆதாயங்களால் பெறக்கூடிய பண்டங்கள் முத லியவை முன்னைக் காட்டிலும் பெரும்பாலும் குறைவடைதலைக் காண்பர். விலை மட்டம் ஏறுங்காலத்திலே முயற்சியாளர்களின் ஆதாயம் மேலோங்கும். ஒன்று "மி" ஆக பண்டங்களை எடுத்த வியாபாரிக்கு இப்பொழுதைக் காட்டிலும் மேலான விலைக்கு விற்கவியலும். ஆகையால், அவனுக்குக் கிடைக்கும் இலாபம் பெரிதாகும். இதன் நிகழ்ச்சி, விலைமட்டம் கீழிறங்கும் சமயத்திலே நடை

பெறும். கடனையெடுத்தவன் இதனால் வேதனைப்படுவான். ஒரு புசல் நெல்லின் விலை 6 உரூபாவான காலத்திலே 2,400 உரூபாவைக் கடனுக்கெடுத்த கமக்காரன் 400 புசல் நெல்லின் விலை மதிப்புள்ள பணத்தைக் கடனுக்கெடுக்கிறான். ஆனால், கடனைத் தீர்த்து விடுவதில் காலம் கழியும்பொழுது, ஒரு புசலின் விலை 4 உரூபா வென இறங்க, கடனைத் தீர்த்துவிடுதற் பொருட்டு 600 புசல் நெல்லை விற்க வேண்டியிருக்கும். ஆகையால், கடன் கொடுத்தவன் இலாபத்தைப் பெறுவான். அப்படியே நியமிக்கப்பட்ட பணவாதாயத்தை (வட்டியாகவாவது, கூலியாக வாவது) பெறுகிறவர்களும், முன்னிருந்த சம்பளப் பிரமாணத்துக்கே சம்பளம் பெறுகிறவர்களும் இலாபங்களைப் பெறுவார்கள். ஆனால், விலை இறங்குவதனால் தொழில் எசமான்களின் இலாபங்களைக் குறைக்கும் வழியை மட்டம் காட்டும் குறிப்புக்கள் போய்விடும்.

விலைமட்டம் அளவுகடந்து மேலெழுதலும் கீழிறங்கலும் நேரிட்டால், அது பொருளியல் வாழ்க்கைக்கு இதமில்லையென்று தோன்றும். விலை மட்டத்தின் மாறுதலை நிறுத்த முடியாது. ஆனால், விலைமட்டத்தின் மாறுதல் அற்ப அளவி லேயே நடைபெறுதல் வேண்டும். இன்றேல், பொருளியல் திட்டம் சின்னபின்ன மாதல் கூடும்.

மனிதரின் பணக்கேள்வி மாறாமல் இருக்கப் பணநிரம்பல் அதிகரித்தால். விலை மட்டம் ஏறும். இதன் மறுதலையும், இப்படியே நிகழும். ஆனால், பணக்கேள்வி குறையும், அல்லது கூடும் சமயங்களுமுள்ளன. ஆகையால், விலைமட்டம் மாறாமல் இருக்கும் பொருட்டுப் பணநிரம்பலைக் குறைத்தலையும் வளர்த்தலையும் அரசாங் கம் ஒப்புக்கொள்ளும். எல்லை கடந்து பணத்தை அதிகரித்தால், நாட்டில் முழுப் பொருளியல் திட்டம் சின்னபின்னமாகி, பொருளியல் தளர்ச்சி தோன்ற நேரிடும்.

ஒரு நாட்டில் நாணயத்தின்[41] பெறுமானம் தீர்மானமாகும் விதத்தை இப் பொழுது நாம் வறிவோம். நாணயத்தின் புறநாட்டுப் பெறுமானம், அதாவது, ஒரு நாட்டு நாணயம் வேறொருநாட்டு நாணயத்துக்கு மாற்றமாகும் விதம்—எப் படித் தீர்மானமாவது என்பதை அறிவோம். நாணயத்தின் மாற்றுவீதம்[42] சிறப்பாக மதிக்கும் வல்லமை பிறநாடுகளோடு வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் நாடுகளுக்கு ஆகும். அதாவது, பிரித்தானியாவையும் இலங்கையையும் போன்ற நாடுகளுக்கு ஆகும். ஒரு சமயத்திலே ஒரு நாணயத்தின் மாற்றுவீதம் தீர்மான மாவது, பண்டமாற்றுக்கு முன்வரும் மேற்கூறிய நாணயவளவுக்கு (வழங்கல்) விரைந்துவரும் வேறு நாணயங்களின் (கேள்வி) அளவுப்படியேயாம். பண்ட மாற்றுக்காக முன்வரும் மேற்கூறிய நாணய நிரம்பலைக் கேள்விக்கு நிகராக்கும் விதம் மாற்றுவீதமாகும்.

சாதாரணமாக, மாற்ற விரைந்துவரும் பணம், வியாபாரமூலம் வரும் பண மாகும். இதை உதாரணத்தினால் காட்டலியலும். ஒரு சமயத்திலே, பிரித்தா னியாவில் விற்பனையாளனொருவன், இலங்கையில் வாங்குபவனுக்குக் கருவிகளை ஏற்றுமதி செய்வான் என்று கொள்வோம். பிறநாட்டு விற்பனையாளனுக்கு

இலங்கையில் வாங்குகிறவனால் இலங்கை நாணயமூலமே செலுத்தக்கூடும். பிரித்தானியாவில், நாணயம் பவுணாதலால் அவ்விற்பனையாளனுக்கு உரூபா மூலம் யாதும் செய்யமுடியாது. ஆகையால், அவ்விற்பனையாளன் தன் இலங்கை உரூபாவைப் பவுணாக மாற்றல்வேண்டும். இலங்கைப் பண்டங்களை இங்கிலாந்துக்கு விற்றுப் பவுணைப் பெறுகிற ஒருவன் அப்படிப்பட்டவனாவான். சாதாரண வழக்கில் தனக்குரிய பிறநாட்டுப் பணத்தை மாற்றப் பிறரைத் தேடச் சனங்கள் எத்தனித்தனர். இம்மாற்றத்துக்கு அவர்கள் வங்கிகளின் சேவையையே உபயோகித்துக்கொள்வர்.

ஒருதினம் 1,000 பவுணை உரூபாவாக மாற்ற எத்தனிப்பதைக் கருதுவோம். அன்று இலங்கை நாணயமாகிய 13,500 உரூபாவை பவுணுக்குப் பதிலாக மாற்ற முடிந்ததென எண்ணுக. அப்பொழுது, 1,000 பவுண் 13,500 உரூபாவுக்குப் பதிலாக மாறும். ஆகையால், மாற்றுவீதம் ஒரு பவுணுக்கு உரூபா 13-50 எனத் தீர்மானமாகும். பவுணும் இலங்கை உரூபாவும், இப்படிப்பட்ட அன்னியோன்னிய பிரமாணத்தினால் மாற்றம் எய்தினால், மாற்றுவீதம் ஒரு பவுணுக்கு உரூபா 13-50 ஆகும். பவுணாக மாற்றுவதற்குச் செல்லும் உரூபாவின் அளவு அதிகரித்தால், ஒரு பவுணுக்கு மாற்றக் கொடுக்கவேண்டிய உரூபாவின் கணக்கு அதிகரிக்கும். ஒரு காலத்துக்குள்ளே 1,000 பவுணுக்கு மாற்ற 14,500 உரூபா தேவைப்பட்டால், மாற்றுவீதம் ஒரு பவுணுக்கு உரூபா 14-50 ஆகும். ஒரு பவுணை வாங்க முன்னைக்காட்டிலும் கூடிய உரூபாவைக் கொடுக்க வேண்டுமாதலால், உரூபாவின் பிறநாட்டு விலைமதிப்புக் குறைந்துபோகும். மற்றைப்படி உரூபாவோடு மாற்ற விரைந்துவரும் பவுணின் கணக்கு அதிகரித்தால் (1,500 பவுண் 13,500 உரூபாவோடு மாறும் என்று கொள்வோம்) அப்பொழுது, மாற்றுவிதம் ஒரு பவுணுக்கு 9-00 உரூபாவாகும். இப்பொழுது பவுண் ஒன்றை வாங்கத் தேவையான உரூபாவின் கணக்குக் குறைவதால், பவுண் சார்பாக உரூபாவின் பிறநாட்டு விலைமதிப்புக் கூடும்.

மாற்றுவதற்கு ஓயாமல் வரும் உரூபாக்களினதும் பவுண்களினதும் பரிமாணம் முக்கியமாக இலங்கைக்கும் பிரித்தானியாவுக்குமிடையில் உள்ள வர்த்தகப் பரிமாணத்தில் தங்கியிருக்கின்றது. பண்டங்களை விற்கிறவர்கள் பிறநாட்டு நாணயங்களைச் சுயநாட்டுப் பணத்துக்கு மாற்ற எத்தனிப்பர். ஒரு நாணயம் பிறநாட்டு நாணயத்தோடு மாறுதற் பொருட்டு ஓயாமல், வரும் அளவு இன்னொரு காரணத்தில் தங்கியிருக்கின்றது. அதாவது, மூலதனத்தின் அசையும் தன்மையிலேயாம். உதாரணமாக, பிரித்தானியா இலங்கைக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்கின்றதென்று கொள்வோம். அங்ஙனம் செய்யும்பொழுது, பிரித்தானியாவினால் உரூபாவோடு மாற்றத்துக்கு மேலும் பவுண் வெளியிடப்படும். நாம் முன்னைக்கண்டதுபோல, மாற்றத்துக்கு ஒரு நாணயம் அதிக அளவில் வெளியிட்டால், அதிகமாய் வெளியிடப்படும் அந்நாணயம் முன்னைக்காட்டிலும் குறைந்த அளவு வெளிநாட்டுப் பெறுமானத்தைத் தாங்கும், மேலும், பெரும்பாலும், மூலதனம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது, முதலீட்டின் பொருட்டன்று ; மாற்று வீதம்

குறைவதனுலோ, கூடுவதனுலோ உண்டாகும் இலாபங்களைப் பெறுவதிலாவது நட்டங்களை நீக்குவதிலாவது என்க. மாற்றுவிதம் எப்பொழுதும் குறையும் பொழுதும் கூடும்பொழுதும் மதிக்கத்தக்க அளவு மூலதனத்தில் ஓர் அசையும் தன்மையுண்டாகும். நேர்வழியாகவோ சுற்றுவழியாகவோ ஓர் அரசாங்கம் முன்வந்து, தன் நாணயத்தின் வெளிநாட்டு மாற்றஞ் சார்பாக நிரம்பல் கேள்வி என்பன மேல் அதிகாரஞ் செலுத்தி, மாற்றுவிதம் அதிகம் குறையவும் வளரவும் இடம் கொடுக்காமல் நிலையாக விருக்கும்படி வைத்துக்கொண்டால், மூலதனத்தின் அசையும் தன்மை அதைக்காட்டிலும் குறையும். மாற்றுவிதம் அசையாம விருந்தாலும் அம்மாற்றுவிதத்தை முன்கூறிய மட்டத்திலேயே மேலும் வைத்துக்கொள்ளவியலாதென்று நாட்டில் பரம்பியபோதிலும் மூலதனத்தின் ஒரு அசையும் தன்மையுண்டாகும்.

மாற்றுவிதம் எப்பொழுதும் குறைதலும் வளர்தலும் வேற்று நாட்டு வர்த்தகத்துக்குப் பெரிய தடையாகும். இதற்குக் காரணங்கள் யாவையென்று நாம் ஆராய்ந்து பார்ப்போம். ஒரு வியாபாரி வெளிநாட்டுக்குப் பண்டங்களை விற்க எத்தனிக்கும்பொழுது அப்பண்டங்களின் விலையை அவன் அறிவித்து அனுப்ப வேண்டும். இங்கு பண்டங்களைக் கேட்கும் நாட்டில் விலையைக் காசில் நியமித்தல் சாதாரண வழக்கமாகும். ஆகையால், விற்கிறவன் தன் காசில் எதிர்பார்க்கும் விலையை வாங்குகிறவனுடைய காசின் சார்பாய் அறிவித்து அனுப்ப வேண்டும். அப்பொழுது, தன் நாட்டிலும் வேறு நாடுகளிலும் விற்கிறவர்களுடைய விலையோடு முன்கூறிய வியாபாரியின் விலையையும் ஒத்துப்பார்க்க வாங்குகிறவனுக்குச் சமயம் கிடைக்கும். அப்பண்டங்களைத் தன் நாட்டில் மறுபடியும் விற்கத் தனக்குள்ள வாய்ப்பையும் மதிக்கவியலும். மாற்றுவிதம் எப்பொழுதும் குறைந்தும் கூடியும் இருக்குமாயின், விற்கிறவன் தன் பண்டங்களை விற்றுப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுப் பணத்தைத் தன் நாட்டில் மாற்றும்பொழுது தன் மதிப்பைக் காட்டிலும் அப்பணம் தன் நாட்டின் நாணயஞ் சார்பாய் எப்பொழுதும் குறையும், அல்லது கூடும். பணத்தை அதிகமாகப் பெற்றுக்கொள்ள அவன் விரையினும், இதைப்பற்றியுள்ள அசையும் தன்மையும் பெரிய நட்டங்களையனுபவிப்பதன் அபாயமும் காரணமாக, முன்கூறிய விற்கிறவனுடைய வெளிநாட்டு வியாபாரம் அத்துணை நிலைக்காது. இப்படிச் சமயங்களிலே இச்சிக்கலை விடுவிக்கும் பொருட்டு, சில வேளை விலையானது வியாபாரியின் காசினுல் நியமிக்கப்படும். அப்படிச் செய்யும்பொழுது மாற்றுவிதம் யாதெனினும் விற்கிறவனுக்கு நிச்சயமாகத் தன் நாட்டில் பணம் பெறவியலும். இங்ஙனமாயின், அசையும் தன்மையின் முழுப் பாரமுமே வாங்குகிறவன்மேல் தங்கும். அப்பொழுது, எதிர்பார்த்த விலையைக் காட்டிலும் கூடிய ஒரு விலையை, வாங்குகிறவன் செலுத்த நேரிடும். இரண்டு நாணயங்களிடையிலும் மாற்று விதத்தில் குறைதலும் கூடலும் தோன்றும்பொழுது, அசையாமல் இருக்கும் மூன்ருவது நாணயத்தினுல் சில சமயங்களில் விலை நியமிக்கப்படும். இம்மூன்ருவது நாணயத்தினுல் விலையைச் செலுத்த எதிர்பாராதிருந்தா

னும் மாற்றுவீதத்தின் மாறுதல் காரணமாக, விற்கிறவனுக்கோ வாங்குகிற வனுக்கோ உண்டாக்கக்கூடிய சங்கடங்களை நீக்கிவிட இந்த நாணயம் உபயோ கிக்கப்படும்.

அரசாங்கம் கைக்கொள்ளும் பணத்தத்துவங்கள், நேர்முகமாகவோ, சுற்று வழியாகவோ அந்தந்த நாடுகளின் நாணய மாற்றுவீதத்தில் மிகவும் பிரபல மாக முகாமை செலுத்துகின்றன. இதற்குக் காரணமென்னெனின், அந்தந்த நாடுகளில் பண்டமாற்றுக்காக வரும் பணக் கேள்வி மேலும் நிரம்புதல், மேலும் முகாமை செலுத்துகிறபடியாலேயாம். இதை ஓர் உதாரணத்தினுல் காட்டலாம். எல்லா வெளிநாட்டுக் காசுகளையும் பவுண் என்று கொள்வோம். ஒவ்வொரு நாட்டிலும் பொருளியல் நிலைமை அசையாதிருக்கின்றதென்றும். மாற்றுவீதம் ஒரு பவுணுக்கு உரூபா 13-50 என்றும் கொள்வோம். இப்பொழுது, இலங்கை கையாளும் பணத்தத்துவத்தின் காரணமாக, இலங்கையில் விலை மட்டம் அதிகரித்ததெனக் கொள்க. அப்பொழுது, இலங்கையில் பண்டங்களை வாங்கும் வெளிநாட்டவனுக்கு, இதற்குமுன் உரூபா 13-50 ஆகிய இலங்கைப் பண்டத்தின் விலை இப்பொழுது அதிகரிக்கும். உண்மையாக, அது 15 உரூபா வாகுமெனக் கொள்க. முன்னிருந்த மாற்றுவீதம் அங்ஙனமேயிருந்தால், ஒரு பவுண் அன்றி, அப்பண்டத்துக்கு 1 பவுண் 2 சிலின் 15 பென்சையும் (15 உரூபாவை) அவன் தீர்க்க நேரிடும். இங்ஙனம் ஒவ்வொரு பண்ட அலகின் விலையும் அதிகரித்தால், வெளிநாட்டு வியாபாரி குறைவாகவே பண்டங்களை வாங்குவான். ஆனுல், அப்பண்டங்களுக்குச் செலவாகும் அவனுடைய பணம் அதிகரிக்கும். அவனுடைய முழுச்செலவு ஏறுமோ, இறங்குமோ, அப்படியே இருக்குமோ என்பது அவனுடைய கேள்வியின் மீள்தன்மைமேல் தங்கியிருக் கும்.

மாற்றுவீதம் ஒரு பவுணுக்கு உரூபா 13-50 ஆக இருக்கும் வரையில், ஓர் இலங்கைவாசி ஒரு பவுணைக் கொடுத்து வாங்கும் பண்டம் இலங்கை விலை மட்டம் அதிகரித்த பின்பும் அவ்விலையிலேயே இருக்கும். ஆகையால், இலங்கை யில் ஒரு பண்டம் உரூபா 13-50 தொடங்கி 15 உரூபாவரை கூடினுலும் இலங் கைக்கு இறக்குமதிசெய்த உரூபா 13-50 விலையான ஒரு பண்டத்தின் பெறுமதி உரூபா 13-50 ஆகும். இக்காரணத்தினுல். இலங்கைப் பண்டங்களைக் காட்டிலும் வெளிநாட்டுப் பண்டங்களை மதிப்பாக எண்ணும்பொழுது மலிவடையும். அப் பொழுது, வெளிநாட்டுப் பண்டங்களின் கேள்வி மீள்தன்மையிலாவியல்புடைய நோத்திலேயொழிய பிறநாட்டுப் பண்டங்களை வாங்கும் அளவும், அதற்குச் செலவாகும் பணமும் கூடும். கேள்வி முழுவதுமே மீள்தன்மையுடையதாக இருப்பின், வெளிநாட்டு வியாபாரிகள் முன்னைக்காட்டிலும் குறைந்த, அல்லது கூடிய அளவைப் பவுணைச் செலவழிக்கும்பொழுது வெளிநாட்டுப் பண்டங்களை வாங்கும் இலங்கையர் உரூபாக்களில் உண்மையாகவே அதிக பணஞ் செலவிடு வதைக் காணலாம். ஆகையால், இலங்கையைப்போன்ற நாடுகளில் உரூபாவின் செலவு பவுணின் செலவைக் காட்டிலும் ஒப்பீட்டளவில் ஏறுதல் புலப்படுவது திண்ணம். அப்பொழுது, இலங்கை அரசாங்கம் அதற்குப் பதிலாக ஏதாவது

செய்கை முறையைக் கையாளவிடின், இலங்கை உரூபாவின் மாற்றுவீதமானது இலங்கை உரூபாவின் நிரம்பலேயும் கேள்வியையும் சமமாக்கும் புதியவொரு மட்டத்திற்கு விழும். இக்காரணத்தினால், சில சமயங்களில் இரண்டு நாடுகளிடையில் பண்டமாற்றாகும் பெரும் புழக்கமான பண்டங்களின் அளவு, முன்னிருந்த மட்டத்துக்கே சென்றுவிடும்.

வெளிநாட்டுப் பண்டமாற்று மூலம் ஒரு நாட்டுக் காசுகளின் கேள்வியும் நிரம்பலும் தீர்மானமாகும் ஏதுக்களின்மேல் அதிகாரத்தைச் செலுத்தாமல், மாற்று வீதம் நிரம்பலும் கேள்வியுமாகிய வலுவேகங்களினால் மாற இடமுண்டானால், அம்மாற்றுவீதம் கட்டில்லாததென்று சொல்லப்படும். ஆனால், நாம் முன் கண்டதுபோல கட்டில்லாதவொரு மாற்றுவீதம் சில சமயங்களில் பெரும் பான்மையும் குறையும், அல்லது கூடும். அது வர்த்தகத்துக்கு இதமில்லாதபடியால் அரசாங்கங்கள் பல சமயங்களில் அக்குறைவுகளையும் வளர்ச்சிகளையும் நிறுத்திவிட எத்தனிக்கும். பொதுவாக, இக்காரியம் மத்திய வங்கிக்கு, இன்றேல் அதன் பிரதிநிதியாகிய ஒரு தாபனத்துக்கு ஒப்படைக்கப்படும். இக்காரியத்துக்காக இத்தாபனம் அந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு பணவளவைக் கைக்கொள்ளும்.

பிரித்தானியாவைப் போன்றவொரு நாடு இப்படியான காரியத்தைச் செய்யும் விதத்தை ஆராய்ந்து பார்த்தால், இதனை நன்றாக உணர்ந்துகொள்ள வியலும். தொலர் சார்பாகப் பவுணின் மாற்றுவீதம் குறையும் நேரத்திலே, அதாவது தொலர்களுக்குப் பதிலான ஒப்பீட்டு முறையில் அதிக அளவு பவுண் விரைந்து வரும்பொழுது, மத்திய வங்கியோ, மத்திய வங்கியின் பிரதிநிதியோ, மாற்றின் பொருட்டு, ஒப்பீட்டு முறையிற் குறைவாக ஓய்வின்றி வரும். அது தான் முன்னே கைக்கொண்ட வெளிநாட்டுப் பண (தொலர்) ஒதுக்கத்தின் ஓர் அளவை மாற்றப் பவுண் கேட்கும். இக்காரணத்தினால், பவுணோடு மாற்றாகும் பொருட்டு, ஓயாமல் வரும் தொலர் அளவு அதிகரிக்கும். தொலர் சார்பாக பவுணின் மாற்றுவீதம் ஏற்ற மாற்றத்துக்குப் போகும்வரை, இவ்வண்ணம் தொலர் முன்னிடப்படும். பவுணின் மாற்றுவீதம் ஏறும்பொழுது, அதாவது வெளிநாட்டு மாற்றத்துக்கு ஓயாமல் வரும் பவுண் ஒப்பீடாகக் குறையும் பொழுது, மாற்று வங்கியானது பவுணேமாற்றி, வெளிநாட்டுப் பணத்தைக் கேட்கும். அது எங்ஙனமாயினும், மாற்று வீதத்தின் குறைவு, சிறிது காலத்துக் கன்றி நெடுங்காலத்துக்காயின், இப்படியான செய்கை மூலம் அதன்மேல் அதிகாரஞ் செலுத்தவியலாது. அப்பொழுது, மாற்று வங்கியில் வெளிநாட்டுப் பணவொதுக்கங்கள் வெறுமையாகப்போகும்.

ஒருநாட்டில் மாற்றுவீதம் குறைய, அந்நாட்டில் விலைமட்டம் இன்றியமையாததாக அதிகரிக்க வேண்டியதில்லை. வேறு நாடுகளில் விலைமட்டம் குறையும் பொழுதும் இது நேரிடலாம். அப்பொழுது, முதலாவது நாட்டில் விலைமட்டம் ஒப்பீட்டளவிற் கூடும். மற்றைப்படி, வேறு நாடுகளுக்கு ஒப்பீட்டளவில் ஒரு நாட்டில் விலைமட்டம் குறைந்தால், அந்நாட்டில் மாற்றுவீதம் ஏறத் தொடங்கும்.

*கட்டில்லா மாற்றுவீதமுறை* யொன்றை அனுசரிக்கும் ஒரு நாட்டில் மாற்று வீதம் வேறு நாடுகளில் விலைமட்டங்கள் மூலம் மதிக்கத்தக்க அளவு அதிகாரம் பெறும். முன்கூறிய நாட்டில் மாற்றுவீதத்தின்மேல் வேறு நாடுகள் மூலம் உண்டாகும் அதிகாரத்தை நிறுத்தவியலுவது அந்நாட்டில் உள்ள விலை மட்டங்களை மாற்றுவதனுலேயாம். வேறு நாடுகளில் விலைமாற்றங்கள் பொதுவாக ஏறத் தொடங்கினுல், முன்கூறிய நாட்டிலும் விலைமட்டம் ஏறும் வண்ணம் காரியங்களைச் செய்யவியலும். வேறுநாடுகளில் விலைமட்டம் பொதுவாக இறங்கத் தொடங்கினுல், முன்கூறிய நாட்டுக்கும் அதன் விலைமட்டம் குறையும் வண்ணம் செய்யவியலும். ஆனுல், இக்காரியம் அவ்வளவு எளிதன்றுதலால், சில சமயங்களில் ஒரு நாட்டு விலைமட்டத்தின் ஏற்றமாவது இறக்கமாவது உவந்த அளவிற்குக் கூடவிருக்கவியலாது. மேலும், விலைமட்டம் குறையும்போது, செழிப்பும் குறைகிறபடியால் அரசுகள் விலைமட்டத்தைக் குறைக்க எத்தனிக்கா. ஆகையால். வெளிநாட்டு வியாபாரம் இன்றியும் அமையும் ஒரு நாட்டில், விலைமட்டத்தைக் குறைக்காமலும் கூட்டாமலும் மாற்றுவீதம் விருப்பப்படி மாறுபட இடம் இருக்கும்.

வெளிநாட்டு வியாபாரம், மிகவும் முக்கியமான நாடுகளிலெனின், ஓர் அசையாத மாற்றுவீதத்தை விரும்பும். அசையாத மாற்றுவீதமொன்றை வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறையாவது, பொன்னியமத்தைச் சேர்தலாகும். ஒரு நாடு பொன்னியமத்தைத் தொடரும்பொழுது அந்நாட்டில் ஒடுக்கமான இரண்டு வரையறைகளிடையில் தொங்கும் ஒரு மாற்றுவீதம் உண்டாகும். அண்மைக் காலத்தில் பொதுவழக்காகியிருப்பது பொன்சார்பாக மாற்றுவீதத்தைக் காப்பாற்றிக்கொள்ளுதலாகும்; இன்றேல், பலவிதமான மாற்றுப் பரிபாலன முறைகளால் பொன்னியமத்தில் நிகழும் ஒரு பணமாற்றுவீதத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். மாற்றத்துக்காக ஓயாமல் வரும் வெளிநாட்டுக் காசுப் பிரமாணத்தைப் பரிலாலிப்பதனுற்றுன் இப்படிச் செய்யப்படுகின்றது. நியமித்த மாற்றுவீதம், தற்செயலாக விருப்பப்படி நிர்மானமாயின், மாற்றுவிதத்துக்குக்கிட்டிய அளவுக்கே மாற்றுப்பரிபாலனமும் எளிதாகும்.

தம் பணத்தை நிச்சயமாக நியமிக்கப்பட்டவளவுக்குப் பொன்னுகை மாற்றிக் கொள்ளவியலுமாதலால் பொன்னியமத்தையாவது அதனைப் பேதப்படுத்தும் நியமனங்களையாவது வழங்கும் நாடுகளில், மாற்றுவீதம் அவ்வந் நாடுகளின் பண மூலம் மிக அண்ணளவாக மாறுபடும். ஒரு காலத்திலே ஒரு பவுனுலாவது 4.866 தொலராலாவது ஒரே பொன்னளவை வாங்கவியலும். அப்பொழுது, பவுண் மாற்றுவதன் அளவு 1 பவுனுக்கு 4.866 தொலராகவே இருந்தது. இக் காலத்தில் பவுனின் மாற்றுவீதம், நியூயோக்கு நகரத்திலிருந்து இலண்டன் நகரத்துக்கு, இல்லாவிட்டால் இலண்டன் நகரத்திலிருந்து நியூயோக்கு நகரத்துக்குப் பொன்னைத் தருவிக்கும் கப்பற் செலவைத் தவிர்த்து (பொன் பெறுமானத்தில் ½% மாத்திரம்) 4.866 தொலருக்குக் கூடினுலோ, குறைந்தாலோ அப்பொன் மாற்றமாவதனுல், மாற்றுவீதம் மறுபடியும் 1 பவுனுக்கு 4.866 தொலருக்கே சமமாகும். பவுனின் மாற்றுவீதம் 1 பவுண் 5,000 தொலர்வரை

ஏறினல், தொலர்களைப் பொன்னுகை மாற்றி அவற்றைப் பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்தல் இலண்டன் நகரத்திலே உண்டியல்களாக 1 பவுண் 5.000 தொலராக வாங்குவதைக்காட்டிலும், அமெரிக்கருக்கு இலாபத்தைக் கொடுத்தது. பவுணின் மாற்றுவீதம் 1 பவுண் 4.50 தொலர் வரை இறங்கிற்றென்ருல், இங்கிலாந்திலிருந்து பொன். நியூயோக்கு நகரத்துக்கு ஓயாமல் செல்லும். பொன்னியமத்திலாவது, அதன் பேதப்படுத்தும் நியமங்களிலாவது நிகழ்ந்த நாடுகளில் சனங்களுக்குத் தாம் பணத்தைச் செலுத்த வேண்டிய நாட்டுக்குப் பணத்தைச் செலுத்தாமல் அதற்குப் பதிலாகப் பொன்னை ஏற்றுமதி செய்தல், இலாபமாகும். இம்மாற்று வீதம் "**பொன் ஏற்றுமதி வரையறை**" என்று சொல்லப்படும். பொன்னியமத்திலிருக்கும் ஒரு நாட்டில் சனங்கள் தாம் பணத்தைப் பெறவேண்டிய நாடுகளிலிருந்து பணமன்றிப் பொன்னையனுப்புதல் அந்நாட்டுச் சனங்களுக்கு இலாபமாகும். மாற்றுவிதவரையறைக்கு "**பொன்னிறக்கு மதிவரையறை**" என்று பெயர்.

பிரித்தானியா பொன்னியமத்தை அனுசரிக்கிறதென்றும், பவுணின் மாற்றுவீதம் பொன் ஏற்றுமதி வரையறையைக் காட்டிலும் குறைந்ததென்றும் அறிவோம். ஆனல், பிரித்தானியாவிலிருந்து புறத்தே (அமெரிக்காவுக்கு) பொன் அனுப்பப்படுமென்று கொள்வோம். ஒரு பவுணின் மாற்றுவீதம் "பொன் ஏற்றுமதி வரையறைக்கு"க் குறையும்வரை, பிரித்தானியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும். இங்ஙனம் வெளிநாட்டுப் பணமூலம் (தொலர் எனின்) பவுணின் மாற்றுவீதம், மூலதனத்தின் அசையுந்தன்மைகாரணமாகவோ, வியாபாரத்தின் மாறுதல் காரணமாகவோ ஆகவியலும். மாற்றுவீதத்தின் சீர்கேடு முழுவதுமே சொற்பகாலத்துக்குரியது என்ற கருத்தினல் இங்கிலாந்து வங்கி பொன்னை ஏற்றுமதி செய்ய விரும்பினுலும், ஒரு வரையறைக்குப் பின், பொன் இல்லாமையினல் அப்படிச் செய்ய முடியாமலிருக்கும். அப்படியிருந்தால், பிரித்தானியாவுக்குப் பொன்னியமத்திலிருந்து விலக நேரிடும். உண்மையாக, தன் பொன் ஒதுக்கம் முடிந்து போகமுன், பொன் ஓயாமல் போகாதபடி மத்திய வங்கியானது பொறுப்பேற்றுக் கொள்ளும். இப்படிச் செய்யின், இங்கிலாந்து வங்கி தொலரோடு மாற்றத்துக்கு இடும் பவுண் கணக்கைக் குறைக்கும். இன்றேல், பவுணுக்குப்பதிலாக மாற்றும் பொருட்டு வரும் தொலர்க் கணக்கை அதிகரிக்க வேண்டும். அல்லாவிடின், இவ்விரண்டையும் செய்தல் வேண்டும்.

இப்படிச் செய்யக்கூடிய ஒரு வழியில் தன் நாட்டில் வட்டியளவை மேலோங்கச் செய்து வெளிநாட்டுப் பணம் நாட்டுக்கு வர ஏற்பாடு செய்ய வேண்டும். மாற்றுவீதம் முன்னிருந்த மட்டத்துக்கு வருமட்டும் வெளிநாட்டுப் பணத்தைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு வட்டியிற் சிறிதளவு கூட்டினல் போதும். ஆனல், வட்டி அதிகரிக்கு மளவு, சாதாரணமாகப் பொருளியல் அலுவல்கள் குறைவதனலோ, அவை கூடுதலை நிறுத்துவதனலோ வட்டியளவை அதிகரிப்பதனல் விலைமட்டம் குறையும். இக்காரணத்தினல், பிரித்தானியாவின் பண்டங்கள் அமெரிக்காவின் பண்டங்களைக் காட்டிலும் மலிவாகும். அப்பொழுது, கேள்வியின் ஒப்பீட்டு மீள்தன்மைகளின்படி அமெரிக்க பண்டங்களின் இறக்கு

மதிகுறைந்து, பிரித்தானிய பண்டங்களின் ஏற்றுமதி கூடும். விலைமட்டம் குறையும். பொழுது, பிரித்தானியாவிலே ஆதாயமும் குறைந்து போகும். இக்காரணத்தினால் இறக்குமதி பொருட்டுச் செலவாகும் பணம் மேலும் மேலும் குறையும். விலையை மதிக்கத்தக்க அளவு குறைக்கும்பொழுது, மாற்றுவீதம் முதன் மட்டத்துக்கேசெல்வதால், பொன் ஏற்றுமதியில்லாமல் போகும்.

சாதாரணமாக, பொன்னியமம் மாற்றுவீதத்தை நிலையாக வைத்துக்கொள்ளும் தன்னியக்க முறையாகும். வெளிநாட்டுக் காசுகளின் பெறுமானம் குறையும்பொழுது இம்முறையின்படி நாட்டில் உள்ள விலை மட்டத்தைக் குறைக்காவிட்டால் பொன் ஒதுக்கம் முடியும்வரை வெளிநாடுகளுக்குப் பொன் ஓயாமல் செல்லும். அப்பொழுது, அந்நாட்டுக்குப் பொன்னியமத்திலிருந்து நீங்கநேரிடும். பொன்னியமத்திலிருந்து பொன் ஓயாமல் போவதை நிறுத்திவிட விலைமட்டத்தைக் குறைக்க வேண்டும். ஆனால், விலைமட்டத்தைக் குறைத்தல் காரணமாக எல்லோருடைய ஆதாயமட்டம் ஒரே அளவில் குறையாது. சிறப்பாக, பிரபலமான தொழிற் சங்கங்களுள்ள நாடுகளிலெனின், தொழிற் சங்கங்கள் சம்பளத்தைக்காப்பாற்றிக் கொள்ளப் பொறுப்பாக இருக்கிறபடியால், விலைமட்டம் குறைதல் காரணமாக வேலையின்மை தோன்றும். மேலும், நாம் முன்னைக்கண்டதுபோல, விலைமட்டம் கீழிறங்கத் தொடங்கும்பொழுது, மாற்றுவீதம் எதிர்பார்க்கும் மட்டத்துக்கு விழுந்த பின்னுயினும். விலைமட்டத்தின் இறங்குதலை நிறுத்தல் மிகவும் சங்கடமாகும். மேலும், பொன் குறைந்துபோகும் நாடுகளே விலை மட்டத்தைக் குறைக்க வேண்டும். தன் நாட்டில் பொருளியல் முறை தளர்ச்சியுற்றிருக்கும் சமயத்திலாவது தன் நாட்டோடு வியாபாரம் செய்யும் ஏனை நாடுகளும் தம் விலை மட்டத்தைக் குறைத்தால் முன்கூறிய நாட்டுக்கும் அப்படிச் செய்யநேரிடும். இங்ஙனம், அமெரிக்க ஐக்கிய நாட்டில் விலைமட்டம் குறையும் பொழுது, அந்நாட்டோடு வியாபாரத்தில் ஈடுபடும் பொன்னியம நாடுகளும் தம் விலைமட்டத்தைக் குறைக்கவேண்டும். அங்ஙனமெனினும், வியாபாரம் செய்யும் ஏனை நாடுகளில் விலைமட்டவளவுக்கு அமெரிக்காவில் விலையை ஏற்ற யாதொரு காரணமுமில்லை. ஒரு நாட்டினுள் விலை மட்டத்தைக் குறைப்பதனுல் வேலையின்மையும், வேறு பல சங்கடங்களும் பொருளியல் தளர்ச்சியும் தோன்றும். எனினும், பொன்னியமத்திலிருக்கும் நாடுகளில் பொன் குறையும்பொழுது விலைமட்டத்தைக் குறைக்காதிருக்கவியலாது. அப்படியான நாட்டில் விலைமட்டம் ஏறத் தொடங்கும் அளவுக்கு மேலாகப் பொருளியல் அபிவிருத்தியை ஏற்றிவிடவியலாது. அதனுல் பொருளியற் சங்கடங்கள் தோன்றக்கூடும்.

1914-18 ஆண்டுகளில் யுத்தத்துக்கு முன் பல நாடுகள் பொன்னியமத்தில் அமைந்திருந்தன. அப்பொழுது பல நாடுகள் தொடர்ந்த தத்துவங்களின்படி, நாட்டுக்குப் பொன் இடைவிடாமல் வந்து விலைமட்டம் ஏறியது. நாட்டிலிருந்து பொன் வெளியேற, விலைமட்டம் குறைந்தது. அதனுல் சருவதேச வியாபாரத்தின் பலவிதமான மாறுதல்களுக்கேற்ற அந்நாடுகளில் பொருளியல் நிலைமை எப்பொழுதும் வேறுபடத்தொடங்கியது. பின்னர், (இரண்டாவது உலகமகா

யுத்தத்துக்கு முன், பிரித்தானியா மத்திய வங்கியைப் போல) நாட்டுக்குப் பொன் இடைவிடாது வருவது எல்லாம் சிறிது காலத்துக்குரியதென்று மத்திய வங்கி நம்பினது. அப்பொழுது, கூடிய பொன்னின்படி விலைமட்டம் கூடினுல், நாட்டிலிருந்து பொன் நீங்கும் நேரத்திலே விலைமட்டம் குறைக்க வேண்டுமாதலால், நாட்டுக்குப் பொன் இடைவிடாமல் வரும் பொழுது சில மத்திய வங்கிகள் விலைமட்டத்தை ஏற்றுமல் இருக்கும். மற்றைப்படி, 1925-1931 ஆண்டு வரையும் பிரித்தானியா பொற்கட்டி நியமத்தில் இருந்தபொழுது, பிரித்தானியா நியமித்த மாற்றுவீதத்தைக் காப்பாற்றிக் கொள்ளல் கடுமையாயிருந்தது. எனினும், விலைமட்டத்தைக் குறைத்து, பொருளியல் தளர்ச்சியை உண்டாக்க மத்திய வங்கி முயலவில்லை. ஆகையால், பிரித்தானியா மத்திய வங்கி பொன் ஓதுக்கம் சொற்பகாலத்துக்குக் குறைய இடங்கொடுத்தது. ஆனுல், எப்பொழுதும் இச்செய்கை வழியை அனுசரிக்கவியலவில்லை. சில சமயங்களில் இப்படியான நேரங்களில் இறக்குமதி செய்த பண்டங்களுக்குத் தீர்வைகளை ஒப்படைத்து, இறக்குமதிச் செலவுப் பிரமாணத்தைக் குறைக்க எத்தனிக்கும். உண்மையாகவே இத்தீர்வைகளை, ஓரளவுக்கு மீள்தன்மையுடைய பண்டங்களுக்கு மட்டும் எடுத்தால் நல்ல பயன்தரும். அப்பண்டங்களையனுப்பும் நாடுகளுக்கும், மறுபக்கத்தில் தீர்வைகளை எடுக்கும் நாடுகளுக்கும் நன்மையாதலின், பண்டங்களைத் தருவிக்க இடமுண்டு. இப்படியான நேரத்திலே, மாற்றுச் சங்கடங்கள் சிறிதளவாவது குறையாது போவதால், சருவதேச வியாபாரத்தில் ஒரு தளர்ச்சி தோன்றும்.

நாம் இதுவரை கட்டில்லா மாற்றுவீதமுறையையும் பொன்னியமத்திலிருக்கும் நாடுகளின் மாற்றுவீதமுறையையுமே விரித்துரைத்தோம். கட்டில்லா மாற்றுவீத முறையிருக்கும் நாட்டுக்கெனின், விருப்பப்படி பொருளியல் நிலைமையைப் பரிபாலித்துக் கொள்ளவியலும். ஆனுல், அதன் குற்றமாவது அந்நாட்டில் மாற்றுவீதம் எப்பொழுதும் குறைந்தும் வளர்ந்தும் இருக்கலாம். சில சமயங்களில் **உத்தேச வியாபாரமுள்ள** மூலதனத்தின் அசையுந்தன்மை காரணமாக, கட்டில்லா மாற்றுவீதம் பெரும்பான்மையும் மாற்றங்களுக்கு ஆளாகும். சருவதேச வியாபாரம் பொருளியல் நிலைமையின் முக்கியமான அங்கமாகும். நாடுகளெனின், இச்சங்கடம் மேலும் அதிகரிக்கும். மற்றைப்படியும் பொன்னியமத்திலிருக்கிறபடியால் அசையாத மாற்றுவீதமுண்டாகும். ஆனுல், பொருளியல் முறையைப் பரிபாலிப்பதன் முக்கியமான கட்டின்மை அதனுல் இல்லாதுபோகும். ஏனை நாடுகள் அப்படிச் செய்யாவிடின், ஒரு நாட்டுக்கு அபிவிருத்தியை அதிகரிக்கும் அருவ உழைப்பையுண்டாக்கவியலாது. பொன்னியமத்தின்படி உண்மையாகவே ஒரு நாட்டில் தளர்ச்சியுண்டானுல், அது ஏனை நாடுகளுக்கும் பரம்பும்.

இரண்டாவது உலகமகாயுத்தம் முடிந்தபின், இம் முறைகளின் மூலம் பெறும் நன்மையைக் காப்பாற்றிக் கொண்டு, அவற்றின் நட்டங்களை நீக்கிவிடப் பல நாடுகள் முயன்றிருக்கின்றன. 1939-1945 ஆண்டுகளின் யுத்தத்துக்குப்பின், பல

நாடுகளிடம் பொன்னியமத்தைத் தொடக்கூடியவளவு பொன் இல்லை. யுத்தத்தினுண்டாய பெரும் நட்டங்களின் காரணமாக விசாலமான அளவில் சீர்திருத்தமும் தேவையாயிற்று. யுத்தத்தில் சேர்ந்த நாடுகளில் நுகரும் பண்டங்களும் உற்பத்தியாளர்களுடைய பண்டங்களும் பெரும்பான்மையும் அரிதாயின. ஆகையால், அப்படிப்பட்ட பண்டங்களுள்ள நாடுகளிலிருந்து பெரும்பான்மையும் அவை கேட்கப்பட்டன. இப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடு அப்படியான பண்டங்களைச் சம்பாதிக்கும் முக்கியமான நாடாகும். ஆகையால், யுத்தத்தினுல் பீடிக்கப்பட்ட நாடுகள் இப்பண்டங்களை அதிகமாகவும் மீள்தன்மையில்லாத படியும், கேட்கும். பீடிக்கப்பட்ட நாடுகளில் ஆக்கத்தொழில்கள் அவ்வளவு முன்னேற்றத்தையடையாமல் இருந்தபடியால், இறக்குமதிக்குப் பதிலாக ஈடு கொடுக்க அவ்வளவு திரவியம் இல்லை. கட்டில்லாமாற்றுமுறையின் கிழாவது, பொன்னியமத்தின் கிழாவது இந்நாடுகளில் பண்டமாற்றுச் சங்கடங்கள் உண்டாதல் புலனுயிற்று.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்து வாங்கிய பண்டங்களுக்கு ஐரோப்பிய நாடுகளால் பலவருடங்களாகச் செலுத்தவியலாதது விளக்கமாகியபடியால், அந்நாடுகளில் அதிகப்படியான கேள்வியைத் தணிக்க அமெரிக்க ஐக்கிய நாடு உபுவியளிக்கத் தொடங்கிற்று. இவ்வுதவியளிப்பதன் காரணமாக ஐரோப்பிய பொருளியல் முறைகள் மறுபடியும் ஆக்கத் தொழில்களைத் தொடங்குவதில் மட்டும் முன்னேற்றமடையாவிடினும், அமெரிக்க பண்டங்களுக்கு இன்னும் அதிகப்படியான கேள்வியிருந்தபடியால், பண்டமாற்றுச் சங்கடங்கள் தோன்ற இடமிருந்தது. ஆனல், சருவதேச வர்த்தகத்தை மறுபடியும் அபிவிருத்தி செய்யப் போதிய வேட்கையிருந்தபடியால், அசையாத ஒரு மாற்றுவீதம் தேவையென்று எண்ணப்பட்டது. மற்றைப்படி, மாற்றுவீதத்தின் மாறுபாட்டைப்பற்றிக் கருதாமல், பொருளியல் முறையைப் பரிபாலிப்பதன் அதிகாரத்தைப் பெற, நாடுகள் தமக்குரிய விடுதலையைப்பெற வேண்டியதாயிற்று. ஆகையால், அந்நாடுகள் தமக்கு ஏற்றதெனவும் நடாத்தவியலுமெனவும் எண்ணிய அளவுக்கு மாற்றுவீதத்தை நியமித்துக் கொண்டன. சில நாடுகளுக்கு அம் மாற்றுவீதத்தை நடாத்த இறக்குமதியளவை இயலுமளவில் குறைத்து, ஏற்றுமதியளவை அதிகரித்தல் தேவையாயிற்று. ஆகையால், சில பண்டங்களுக்கு அதிகப்படியான தீர்வைகள் எடுக்கப்பட்டன. சில பண்டங்கள் இறக்குமதி செய்யுமளவு பெரும்பான்மையும் வரையறுக்கப்பட்டது. ஒரு பிரமாணத்துக்கு மேல் பணத்தை நாட்டிலிருந்து வெளியே கொண்டுபோதல் சட்டவிரோதமாயிற்று. சில நாடுகளிலிருந்து விருப்பப்படி பண்டங்களை இறக்குமதி செய்ய உத்தரவு அளிக்கப்பட்டதன்றி, இன்னும் சிலநாடுகளிலிருந்து பண்டங்களை அங்ஙனம் இறக்குமதி செய்ய அதிகாரம் அளிக்கப்படவில்லை. சில ஏற்றுமதிப் பண்டங்களுக்கு உதவி ஆதரவுகள் அளிக்கப்பட்டன. இவையெல்லாவற்றையும் செய்தபோதிலும் சில நாடுகளில் மாற்றுவீதத்தை எதிர்பார்க்கும் அளவு அமைத்துக் கொள்ளவியலவில்லை.

பல நாடுகளுக்குத் தம் மாற்றுவிதங்களை நித்தமும் நடப்பித்தல் சங்கடமாகு மென்ற அச்சத்தினால் **சருவதேசப் பண நிதி**[45] **தாபிக்கப்பட்டது.** இந்நிதியின் பங்காளிகளாகிய நாடுகள், பண்டமாற்றுச் சங்கடங்களுக்கு அகப்பட்டபொழுது அவைகளுடைய சங்டங்களை நீக்க ஆதாவளிக்குமெண்ணத்துடன் பலவிதமான பணங்களின் ஓரளவை அங்கு வைத்துக் கொண்டன. குறைந்த நிரம்பலில் இருந்த காசுகளை ஒவ்வொரு நாட்டிலும் தம் பணத்தினால் பெற்றுக் கொள்ளக் கூடுமெனினும், ஓராண்டுக்குள்ளே ஒரு பிரமாணத்துக்கு மேல், பணத்தையெடுத் தல் மறைமுகமாகத்தடை செய்யப்பட்டது. அப்படியெடுத்தலைத் தடைசெய்யும் பொருட்டு அந்தந்த நாடுகள் எடுத்த குறைந்த நிரம்பலிலிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் வரை ஒரு வட்டி செலுத்த வேண்டியதாயிற்று. ஒரு நாடு தன் காசுகளை வெளிநாட்டுப் பண்டமாற்றுச் சார்பாக **மிகைவிலைமதித்தலையா வது**[46] **தாழ்மதிப்பீடுசெய்தலையாவது**[47] ஆண்டமை புலப்பட்டபொழுது, அந் நாட்டுக்குத் தன் மாற்றுவிதத்தை 10% வரை மாற்றிக் கொள்ளவியன்றது. 10% உக்கு மேலாக மாற்றுவிதத்தை வேறுபடுத்திக் கொள்வதெனின், அப்படியான ஒரு நாடு சருவதேசப் பண நிதியிலிருந்து உத்தரவு பெற வேண்டியதாயிற்று. முன்கூறிய நாடு தன் பொருளியல் நிலைமையைப் பயனற்றுப் போகவிடாமல் மாற்றுவிதத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கடுமையாக எத்தனிக்கும் பொழுது, அதைச் செய்யவியலாதென்று உணர்ந்ததும் ச : ப : நி : (சருவதேசப்பணநிதி) அந்நாட்டில் மாற்றுவிதத்தை மாற்ற உடன்படவேண்டும். இவ்வண்ணமாக 1940 ஆம் ஆண்டிலே பிரித்தானியா தன் மாற்றுவிதத்தில் 1 பவுண் மாற்றை 2.80 தொலர்வரை குறைத்தது.

மேலும், ஒரு நாட்டுடன் மதிக்கத்தக்க அளவில் வர்த்தகஞ் செய்யும் சில நாடு கள் (இலங்கை சார்பாகவெனின் பிரித்தானியா) அந்நாட்டுக் காசுகள் சார்பாக அதனுடைய மாற்றுவிதத்தை நியமித்துக் கொண்டன. இங்ஙனம் இலங்கை தன்னுடைய மாற்றுவிதத்தை ஒரு பவுணுக்கு உரூபா 13/50 ஆக நியமித்துக் கொண்டது. தொலர் மூலமாகப் பிரித்தானியா தன்னுடைய மாற்றுவிதத்தைக் குறைத்த பொழுது, இலங்கை தன்னுடைய மாற்றுவிதத்தையும் அவ்வண்ணமே நிகழ்த்திக் கொண்டது. ஆகையால், தொலர்கள் சார்பாக இலங்கை உரூபாவின் மாற்றுவிதம் குறைந்தது. ஒவ்வொரு நாடும் தன் மாற்று விதங்களை நியமித்துக் கொள்வது அதனுடைய நன்மைக்கு ஏற்றபடியேயாகும். ஒரு நாடு தன் காசு களை வெளிநாட்டுப் பண்டமாற்று மூலம் மறுபடி பெறுமானமதிப்பிடும். அப் போது தன் காசுகளை மறுபடிபெறுமானமதிப்பிடல் வேறு நாட்டுக்குப் பயன் படலாம். தான் பெரிதாக வியாபாரஞ் செய்யும் ஒரு நாட்டில் மாற்றுவித மட்டத் திலேயே வேறொரு நாட்டில் மாற்றுவிதம் வைத்துக் கொள்ளாவிடின், முன்கூறிய நாடு மாற்றுவிதத்தைக் குறைக்கும் பொழுது அன்னிய நாட்டில் ஏற்றுமதிகள் குறைந்துபோக இடமுண்டு. இது இப்படியாதற்கு இரண்டாவதாகக் குறிக்கப் பட்ட நாட்டில் பண்டங்களின் விலையானது, முன்னைக் காட்டிலும் கூடுவதனாலே யாம். முன்கூறிய நாடு மாற்றுவிதத்தை ஏற்றும் பொழுது, அந்நாட்டின் பண் டங்கள் ஏனை நாட்டுக்குப் போக, விலைகூடும்.

இலங்கையையும் பிரித்தானியாவையும் போன்ற நாடுகளுக்கெனில், குறைந்த வொரு மாற்றுவிதம் ஒப்பாதிருக்கலாம். இவ்விரண்டு நாடுகளில் இறக்குமதிப் பண்டங்களின் கேள்வி மதிக்கத்தக்க அளவில் மீள்தன்மையுடையதாகும். ஆகையால், அவ்விறக்குமதிப் பண்டங்களின் விலை அவைகளுடைய காசுகள் மூலம் மேலோங்கினுலும் கீழிறங்கினுலும், வாங்கும் அளவு அவ்வளவு மாறுவதில்லை. மற்றைப்படி, ஏற்றுமதிப் பொருள்களின் விலை குறைந்தால், இறக்குமதிப் பண்டங்களுக்குச் செலவாகும் அதிகமான உண்டியலைத் தீர்க்குமளவு இறக்குமதிப் பண்ட வியாபாரத்தின் ஆதாயம் மதிக்கத்தக்க அளவு கூடுவதில்லை.

மூலதனத்தின் அசையும் தன்மையையும் வெளிநாட்டு வியாபார அளவு பரிபாலனத்தையும் போன்ற பண்டமாற்றுப் பரிபாலன முறைகள் மூலம் நடாத்திக் கொள்ளும், நியமமாற்றுவிதமுறை[49] மூலம் சில ஊதியங்களைப் பெறவியலும். அதாவது, அசையாதவொரு மாற்றுவிதமிருத்தலும், தம் பொளியல் முறையைத் தமக்கு வேண்டியபடி பரிபாலித்துக் கொள்வதன் சுயாதீனமுமாம். அதனுலுண்டாகும் நட்டங்களாவன, வெளிநாட்டு வியாபாரம் குறைந்துபோதலும் முதலீட்டுக் காரியங்களுக்காக மூலதனத்தின் அசையும் தன்மை குறைந்து போதலுமாம்.

ஒரு காலவரையறைக்குள்ளே, ஒரு நாட்டில் ஏற்றுமதிப் பெறுமானம் இறக்குமதிப் பெறுமானத்துக்குக் கூடினுல், அந்நாட்டில் **வியாபார நிலுவை**[50] நல்ல நிலையில் இருக்கின்றதென்று சொல்லப்படும். ஒரு நாட்டில் இறக்குமதிப் பெறுமானம் ஏற்றுமதிப் பெறுமானத்திற் கூடினுல், அந்நாட்டில் வியாபார நிலுவை நட்டமென்று சொல்லப்படும். ஏற்றுமதி இறக்குமதிகளின் பெறுமான அளவு மேல் அதிகாரத்தைச் செலுத்தும் ஒரு காரணமென்னெனின், ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் அடங்கும் பொள்களென்பது தெளிவாகும். உதாரணமாக, சிலநாடுகள் பொன்-வெள்ளி வியாபாரத்தை ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதிகளுக்கும் சேர்க்காவென்பதைக் காட்டலாம். ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் பெறுமானத்தை மதிக்கும் முறையும் முக்கியமாகும். சில நாடுகள் தம் இறக்குமதிப் பெறுமானத்தை மதிப்பது, அப்பண்டங்களையனுப்பும் நாட்டிலிருந்து வெளியேறும் பொழுது அவற்றின் பெறுமானமாகவேயாம். எனினும், இன்னும் சில நாடுகள் இறக்குமதிப் பெறுமானத்தை மதிப்பது, முதலிற் கூறிய மதிப்புக்குப் பாதுகாப்புச் செலவுகளும் பிரயாணச் செலவுகளுமாகிய எல்லாவற்றையும் அடக்கியேயாம். இதனுல், இரண்டு இறக்குமதி மதிப்புக்களிடையில் இடர்ப்பாடு உண்டாகக் கூடும்.

ஒரு நாடு ஏனை நாடுகளோடுள்ள தொடர்பைப் பற்றிய உண்மையான அறிவை வியாபார நிலுவை மூலமே பெற்றுக் கொள்ளவியலாது. **காணக்கூடிய**[51] வியாபாரப் பண்டங்களை மட்டும், அதாவது ஆக்கிய பண்டங்களையும் பண்படுத்தாப் பொருள்களையும் உணவுப் பொருள்களையும் மாத்திரம் எடுத்தால், 1939 ஆம் ஆண்டுக் முன் பிரித்தானியாவில் வியாபார நிலுவை மோசமானவொன்ருயிருந்தது. இவ்வியாபார நட்டம் பிரித்தானியாவிலே மாற்றுவிதம் குறைய ஏதுவாகாது. இது பிரித்தானியா இவ்விறக்குமதிகளுக்கு ஈடு செய்யக்கூடிய ஏற்றுமதி

களால் மாத்திரமன்று ; செய்ய முடியாத ஏற்றுமதிகளாகிய பலவிதமான சேவைகளினுலும் (அதாவது கப்பற் சேவைகளினுலும் பாதுகாப்புச் சேவைகளினுலும்) ஈடுசெலுத்திய படியாலேயாம். மேலும், முன்னர் இங்கிலாந்து வெளிநாடுகளில் முதலீட்டைச்செய்த மூலதனத்தினுல் பிரித்தானியாவுக்கு இலாபங்களும் வட்டியும் கிடைத்தன.

ஆகையால், வியாபார நிலுவையை மாத்திரம் எண்ணிப்பார்த்தால், வெளிநாட்டுப் பண்டமாற்றுச் சார்பாக ஒரு நாட்டின் உண்மையான நிலைமையை உணர்ந்து கொள்ளவியலாது. இதன் பொருட்டு ஒரு நாடு ஒரு குறித்த காலத்துக்குள்ளே வெளிநாடுகளில் குடியேறிய சனங்களுக்காக உதவும் செலுத்துதல்களையும் தன் சனங்களுக்கு வெளிநாட்டார் செய்யும் எல்லாச் செலுத்துதல்களையும் (பேறுகள்) கவனித்துப் பார்க்க வேண்டும். இவ்விரிவுரைக்குச் **சென்மதி நிலுவையைக்**[58] கவனித்தல் என்று சொல்லப்படும். தம் நாட்டில் குடியேறியவர்கள் வெளிநாடுகளுக்குச் செய்யும் கொடுத்தல்களை "செலுத்துதல்கள்" எனவும் வெளிநாடுகளில் குடியேறியவர்கள் தம் நாட்டில் குடியேறியவர்களுக்குச் செய்யும் செலுத்துதல்களைப் "பேறுகள்" எனவும் விரித்துரைப்போம்.

சென்மதி நிலுவைக்குள் அடங்கும் எல்லாவற்றையுமே நான்கு தலையங்கங்களின் கீழ் அமைக்கவியலும். காணக்கூடிய வியாபாரம், காண முடியாத வியாபாரம், ஒரு பக்கத்தில் மட்டும் செய்யும் செலுத்தற் கடன் மூலதனம் என இவைகளேயாம். காணக்கூடிய வியாபாரம், காணமுடியாத வியாபாரமாகப் பிரித்தல், சில நாடுகளில் நிகழும் வழக்கத்தின்படி நடைபெறும். வேறு சில நாடுகளிலெனின், பேசும்படங்கள் காணமுடியாவியாபாரப் பாகங்களை எடுத்துக்காட்டும். ஏற்றுமதி இறக்குமதி செய்யும் எல்லாப் பண்டங்களுமே காணக்கூடிய வியாபாரத்திலடங்கும். கப்பற் பிரயாணத்தையும் பாதுகாப்புச் சேவையையும் போன்ற சேவைகளும், பிரயாணச் செலவுகளும், வெளிநாடுகளில் அரசாங்கத்தின் செலவுகளும் காணமுடியாத வியாபாரத்தில் அடங்கும். இலங்கையிலென்ருல், காணக்கூடிய வியாபாரமும் காண முடியாத வியாபாரமுமாகிய இரண்டுமே ஒன்ருகக் கணிக்கப்படும். ஒரு பக்கத்தில் மாத்திரம் செலுத்தப்படும் செலவுகளாவன, முன் எடுத்த கடன் பணத்துக்குப் பதிலாகச் செலுத்தப்படும் வட்டியும், பிறநாட்டாருக்கு அனுப்பப்படும் நன்கொடைகளும், பிறநாட்டாருடைய முதலீடுகள் மூலம் கிடைக்கும் இலாபங்களும் வெளிநாடுகளிலுள்ள தொழில் மூலம் கிடைக்கும் இலாபங்களும் ஆம்.

கீழ்க்காணும் அட்டவணையில் 1954 ஆம் ஆண்டில் இலங்கையின் சென்மதி நிலுவை காணப்படும். "பேறுகள்" பந்தியின் கீழ் வெளிநாடுகளிலிருந்து பெற்ற பணப்பிரமாணம் காட்டப்படும். "செலுத்துதல்கள்" பந்தியின் கீழ் வெளிநாடுகளில் சனங்களுக்குக் கொடுக்க வேண்டிய பணவளவு காட்டப்படும். மூன்ருவது பந்தியில் பேறுகளுக்கும் செலுத்துதல்களுக்குமிடையிலுள்ள வித்தியாசம் காட்டப்படும். இலங்கையில் சென்மதி நிலுவையை ஒழுங்குபடுத்துதல் மூன்று தலையங்கங்களின் கீழ் நடைபெறும். 1. காணக்கூடிய வியாபாரமும் காண

முடியாத வியாபாரமும், அல்லது பண்டங்களும் சேவைகளும்; 2. நன்கொடைகள்; 3. மூலதனத்தினதும் வங்கிநிதிகளினதும் அசையுந் தன்மையைக் காட்டும் மூலதனமும் பொன்னும் என்க.

*முதலாவது அட்டவணே, 1954 ஆம் ஆண்டில் இலங்கைச் சென்மதிநிலுவை (உரூபாக்கள் கோடியில்)*

| 1. பண்டங்களும் சேவைகளும் : | பேறுகள் | செலுத்துதல்கள் | தூய பேறுகள் தூய செலுத்துதல்கள் |
|---|---|---|---|
| பண்டங்கள் .. .. | 1,79,41 .. | 1,36.31 .. | +43.10 |
| வெளிநாட்டுப் பிரயாணம் .. | 0.68 .. | 3.35 .. | − 2.67 |
| பிரயாணமும் பாதுகாப்பும் .. | 9.69 .. | 11.04 .. | − 1.35 |
| முதலீட்டு ஆதயாம் .. .. | 2.15 .. | 6.81 .. | − 4.66 |
| அரசாங்கத்தின் செலவு .. | 5.33 .. | 2.75 .. | + 2.58 |
| வேறு பொருள்கள் .. .. | 3.80 .. | 5.94 .. | − 2.14 |
| முழுப் பண்டங்களும் சேவைகளும் .. | 2,01.06 .. | 1,66,20 .. | +34.86 |
| 2. நன்கொடைகள் | | | |
| தனிச்செலுத்துதல்கள் .. | 0.46 .. | 7.14 .. | − 6.68 |
| வெளிநாடுகளுக்குப் போகும் வரவுகளே மாற்றுதல் .. .. | 2.36 .. | — .. | + 2.36 |
| அரசாங்கத்தின் நன்கொடைகள் முழு நன்கொடைகள் .. .. | 2.82 .. | 7.14 .. | − 4.32 |
| 1, 2. முழு (நடைமுறைக்கணக்கு) .. | 203.88 .. | 173.34 .. | +30.54 |

| 3. மூலதனமும் பணமும் : | பேறுகள் | செலுத்துதல்கள் | தூய பேறுகள் தூய செலுத்துதல்கள் |
|---|---|---|---|
| தனிமூலதனத்தின் அசையுந் தன்மை .. | 1.49 .. | 6.38 .. | — 4.89 |
| அரசாங்கத்தினதும் வங்கிகளினதும் தாபனங்கள் .. .. | 6.95 .. | 29.76 .. | −22.81 |
| முழு மூலதனமும் பணமும் .. | 8.44 .. | 36.14 .. | −27.70 |
| மொத்தம் .. | 212.32 .. | 209.48 .. | + 2.84 |
| மிச்சம் .. | .. | 28.40 .. | −28.40 |

பண்டங்களேயும் சேவைகளேயும் பற்றிய தலேயங்கத்தை ஆலோசித்துப் பார்க்கும்பொழுது, காணக்கூடியனவும் காணமுடியாதனவுமாக வியாபாரத்திலே இலங்கை நாணயம் 201.06 கோடி உரூபாச் சம்பாதித்து 166.2 கோடி உரூபா செலவழித்திருப்பது காணப்படுகின்றது. அப்பொழுது பேறுகள் நிலுவையாக 34.86 கோடி உரூபா மிஞ்சும். வெளிநாடுகளில் இருக்கிறவர்களுக்குக் கிடைக்கும் நன்கொடைகளேக் காட்டிலும் 4.32 கோடி உரூபாவால் கூடும். ஆகையால், இவ்விரண்டு தலேயங்கங்களின் கீழ் இலங்கையின் பேறுகள் அதன் செலுத்துதல்

களுக்குக்கூடின எனக்கண்டோம். மூன்றாவது தலையங்கத்தின் கீழ், அதாவது, மூலதனமும் பொன்னும் என்பதில் 27·7 கோடி உரூபா சென்மதி நிலுவையா யிற்று. இவற்றுள் ஒரு பாகத்துக்கு ஏதுவாயது, தனி மூலதனம் நாட்டிலிருந்து வெளியேறிச் செல்லுதலாம். ஆனால், அதிகமான பகுதிகளுக்கு ஏதுவாயிருப்பது அரசாங்கமும் வங்கிகளும் தம் நிதிகளின் ஓர் அளவை வெளிநாடுகளில் வைத் துக்கொள்ளுதலாம். நாம் முன்னைக் கண்டதுபோல நடைமுறை வியாபாரத் திலே இலங்கைக்கு ஒரு பேற்று நிலுவை மிஞ்சியுளது. இப்பேறுகள் இலங்கை அரசாங்கத்துக்கும் இலங்கையில் வங்கிகளுக்கும் போகவேண்டிய பணமாக வெளிநாடுகளில் இருக்கின்றன. பொதுவாக, அப்படிப் பணம் சும்மா வைக்கப் படுவதில்லை. அது குறுங்காலச் சொத்துக்களாக வெளிநாடுகளில் முதலீட்டைச் செய்கிறது. ஆகையால், அவை இலங்கையினால் வெளிநாடுகளுக்குக் கொடுக்கப் பட்ட கடன் பணத்தைப் போன்றவை. சில சமயங்களில் சில ஆண்டுகளில் இலங் கையில் ஏற்றுமதிகளைக் காட்டிலும் இறக்குமதிகள் கூடும். அதனால் உண்டாகும் குறைபாட்டை நிறைவேற்ற வெளிநாட்டு நிலுவைகளிலிருந்து பணத்தை யெடுக்கவியலும். ஆதலால், இலங்கைக்கு இவ்வெளிநாட்டு நிலுவைகள் இருப் பது முக்கியமானதாகும்.

சென்மதி நிலுவையை ஒழுங்குபடுத்துகையிலே எல்லாப் பிழைகளையும் திருத் தும்பொழுது, சென்மதியானது நிலுவைக்கு நிகராதல் காணப்படும். நடை முறையிலுள்ள கொடுக்கல் வாங்கல்களிலே ஒரு மீதியிருந்ததை நாம் கண் டோம். இம்மீதி, மூலதனத்தைப் பற்றிய கொடுக்கல் வாங்கல்களிலே வெளிநாட் டுக் கடன் பணமாகப் பிரதிவிம்பித்திருக்கின்றது. நடைமுறையிலுள்ள கொடுக் கல் வாங்கல்களிலே ஒரு குறையிருந்தால் அக்காரணத்தினால் வெளிநாடுகளி லுள்ள நம் சொத்துக்கள் குறையும். அப்பொழுது அது செலுத்துதல்களின் கீழ், வெளிநாடுகளில் சனங்களிடமிருந்து கிடைத்த செலுத்துதலாகக் காட்டப்படும்.

ஒரு நாட்டின் பண்டமாற்று நிலைமையைப் பற்றிச் சரியான அறிவைப் பெற அந்நாட்டின் பெறுதல் அளவும் செலுத்தல் அளவுமாகிய இரண்டினாலும் நமக் குக் கிடைப்பது மிகச் சிறிய உதவியென்பது தெளிவாகும். ஆகையால், நடை முறையிலுள்ள கொடுக்கல் வாங்கல்களில் மீதியாவது குறைபாடாவது இருக் கின்றதா? மூலதனக் கொடுக்கல் வாங்கல் மூலம் நடைபெறுகிறதென்ன என் பதை அறிவதாயின், நாம் இதைக்காட்டிலும் கவனமாக இருத்தல் வேண்டும். அப்படியெனின், இலங்கையில் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தபடியால், 1954 ஆம் ஆண்டில் இலங்கைச் சென்மதி நிலுவை இலாபகரமானது என்று கூறவியலும். நடைமுறையிலுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஒரு குறைவை நிறைவேற்ற இலங்கை தன்னுடைய வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைக்க வேண்டியிருக்கும்பொழுது சென்மதி நிலுவை நட்டமடையுமென்று கூற வியலும்.

ஓராண்டில் சென்மதி நிலுவையில் அடங்கியுள்ளவற்றை, அவ்வாண்டு அறிக்கை தரும்வாறு மனதில் வைத்துக்கொள்ளல் ஏற்றதாகும். செலவு அறிக் கையுட்படாமல் புறக்கணிக்கப்படும். அதற்கு முந்தின காலத்திலே நடந்த

கொடுக்கல் வாங்கல் ஒன்று, வேறொரு காலத்திலே வெளிப்படவியலும். சில சமயங்களில், சிறப்பாகவே மூலதனத்தின் அசையுந் தன்மையைப் பற்றிய உண்மையான செய்திகள் இல்லாத நேரங்களிலே, இவை சென்மதி நிலுவையில் அடங்காமல் இருக்க இடமுண்டு.

இலாபங்களில்லாத சென்மதி நிலுவையைப் பற்றி ஒருநாடு மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஓர் ஆண்டில் இலாபங்களில்லாத ஒரு சென்மதி நிலுவை, அதற்கு முன்னுவது பின்னுவது அவ்வருடத்திலே இலாபமான ஒரு சென்மதி நிலுவை மூலம் மாற்றுவீதத்தின் மேல் உண்டாகும் எதிர் முகாமை செலுத்துதல் காரணமாக, பல நாடுகள் விரைந்து விரைந்து அதை நீக்கிக்கொள்ளப் பல விதமான உபாயங்களை அமைக்கும். பொன்னியமத்திலுள்ள ஒரு நாட்டுக்கு இந்நட்டம் தெரிகின்றது. இது நாட்டிலிருந்து புறத்தே பொன்பொசிந்து போதலாலேயாம். நியமித்த மாற்றுவீதமுள்ள இலங்கையைப்போன்ற வொரு நாட்டுக்கு எனில், இது வெளிநாட்டுச் சொத்துக்களின் குறைவாகத் தோன்றும். நட்டமான சென்மதி நிலுவை ஒரு குறித்த காலத்துக்குள் இருந்தால், பொன்னியமத்திலிருந்த நாட்டில் பொன் ஒதுக்கம் முடிந்து போகும். நியமம் கொண்டவொரு மாற்றுவீதமுள்ள நாட்டிலெனின், அந்நாடுகளில் வெளிநாட்டுக் காசுகளின் ஒதுக்கம் முடிந்து போகும்.

மாற்றுவீதத்தைப்பற்றிய இச்சகல சிக்கல்களும் தோன்றுவது, நாடுகள் தத்தமோடு வியாபாரத்தில் ஈடுபடுவதனுலேயாம். பல நாடுகள் இச்சகல சங்கடங்களுக்கு எதிர்நிற்காவாயினும், இப்படி விரும்புவது, சருவதேச வியாபாரமூலம் பெரிய இலாபங்கள் கிடைப்பதனுலேயாம். சில பண்டங்கள், உதாரணமாக தங்கம், சில நாடுகளில் மட்டும் இருப்பதை எண்ணும்பொழுது இவையெல்லாம் தெளிவாகும். தங்கமில்லாத நாடுகளுக்குத் தங்கத்தைப் பெற்றுக் கொள்ளவியலுவது அவைகளுக்குச் சொந்தமான பண்டங்களைத் தங்கத்தோடு மாற்றுவதனுலேயாம். மேலும், ஒரு நாட்டுக்குத் தேவையான ஒரு பண்டத்தை அந்நாட்டிலேயே அமைத்துக் கொள்ளத் திறமையிருந்தால், அதற்குத் தன் ஆக்கச் சாதனங்கள் ஏற்றவையானுல், அந்நாடு முன்கூறிய பண்டத்தை ஆக்க ஒரு சிறக்குமியல்பில் ஈடுபடுதல் நாட்டின் நன்மைக்கு ஏதுவாகும். உதாரணமாக, பிரித்தானியாவிலுள்ள ஆக்கச் சாதனங்களைப் பற்றி யோசித்துப் பார்த்தால், உணவு உற்பத்தி செய்வதைக் காட்டிலும் தொழிற் பண்டங்களையுற்பத்தி செய்தல் அதற்குப் பயன்படுவதைக் காட்டலாம். ஆகையால், பிரித்தானியாவில் கைத்தொழிற் பண்டங்களைக் கோதுமைக்கும் இறைச்சி வகைகளுக்கும் பதிலாக மாற்றிக் கொள்ளலாம். இதனுல் அதற்கு இலாபங்கள் உண்டாவது அதனுடைய சிரமமும் மூலதனமும் முயற்சியுமாகிய இவை, வேளாண்மையைக் காட்டிலும் தொழில்களுக்கு ஏற்றவையாகும். இக்காரணத்தினுல் தொழிற் பண்டங்களையுற்பத்தி செய்தல் வேளாண்மைக்குரிய ஆக்கத்தைக் காட்டிலும் அதற்கு இலாபமானது. அதனேடு வியாபாரஞ் செய்யும் சிலநாடுகள் தம்முடைய ஆக்கச் சாதனங்களால் வேளாண்மை செய்து பிரித்தானியாவில் உற்பத்தி செய்த பொருள்க

ளோடு மாற்றிக்கொள்ளுதல் அவைகளுக்கு இலாபந்தரும் என்பதை ஏற்றுக் கொண்டன. ஆனல், ஆக்கச் சாதனங்களின் மாறுதல் காரணமாக—அதாவது பூமியின் சத்து (சாரம்) குறைவதனுலும்—சிரமத்தின் சாமர்த்தியம் அதிகரிப் பதனுலும்—புதிய பண்படுத்தாப் பொருள்களைக் கண்டுகொண்டதனுலும்—பெரும்பான்மையும் வேளாண்மையுள்ள நாடுகளுக்குத் தேவையான சில பண் டங்களை ஆக்கிக்கொள்ளல், பண்டமாற்று மூலம் அவற்றைப் பெற்றுக்கொள்ளு தலைக் காட்டிலும் இலாபமானதென்பது புலனுயிற்று.

வியாபாரத்தை இரண்டு நாடுகளுக்கிடையில் வரையறுத்து நேரான, பண்ட மாற்றை மாத்திரம் அமைத்தால், வியாபாரப் பரிமாணம் பெரும்பான்மையும் குறைந்துபோகும். உலகப்போருக்கு முன்னைய காலத்திலேயென்றல் சருவதேச வியாபாரத்தின் பெரும்பங்கு பல்பக்கமுள்ளதாயிற்று[33] ஆனுலும், 1939—45 ஈருன பெரிய போருக்குப் பின், பல நாடுகள் இருபக்க வியாபாரத்தைத் தொடங்கின.

இவ்வத்தியாயத்திலே பணத்தினல் உண்டாகும் பலன்களும் பலவிதமான பணவகைகளும் வங்கிகள் மூலம் நிறைவேற்றும் முக்கியமான சேவையும் வங் கிப்பணமும் ஒரு நாட்டின் காசுகளும் வெளிநாட்டுப் பெறுமானமும் பற்றி விரித்துரைக்க நாம் முயன்றேம். வங்கிப்பணத்தை அமைப்பதிலேயுள்ள வரை யறைகளையும் வங்கிகள் திரவத்தன்மை முறையில் சொத்துக்களை வைத்துக் கொள்ளும் விதத்தையும், எதற்காக அப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என் பனவற்றையும் படித்தோம். கடைசியாக, பணத்தின் விலைமதிப்பு மாறுபடும் விதத்தையும், அம்மாற்றத்தினல் உண்டாகும் பயன்களையும் ஒரு நாணயத்தின் மாற்றுவிதம் தீர்மானமாகும் விதத்தையும் கண்டோம். புதிய பொருளியல் முறைகள் மூலமாகவே பணப்பொருளியல் முறைகளாதலால்; பணத்தையும், வங்கிகளையும் சருவதேச பண்டமாற்றையும், அவற்றலுண்டாகும் பயன்களையும் உணர்ந்துகொள்ளல் பொருளியல் வித்தையைக் கற்பதன் முக்கியமான அங்க மாகும்.

## 13 ஆம் அத்தியாயம்

# கலைச்சொல் வரிசை

1. பண்டமற்று ... Barter
2. பண்டமாற்றூடகம் ... Medium of Exchange
3. நாணயங்கள் ... Coins
4. பெறுமானவளவு ... Measure of value
5. பெறுமானத்திரட்டு ... Store of value
6. தாமதச் செலுத்தல் சாதனம் ... Means of deferred payment
7. நியமம் ... Standard
8. பணத்தாள்கள் ... Notes
9. வகைகுறிபணம் ... Representative money
10. சட்டமுறைப்பணம் ... Legal tender
11. அடையாளநாணயம் ... Token money
12. காசு ... Cash
13. பொன்நியமம் ... Gold standard
14. அடிப்புலோகம் ... Mint
15. ஈருலோகநியமம் ... Bi-metalic standard
16. ஈருலோகக்கட்டி நியமம் ... Gold bullion standard
17. பொன்மாற்றுநியமம் ... Gold Exchange Standard
18. இயங்குமுதல்முறை ... Managed money system
19. கணக்குக்கள் ... Accounts
20. நடைமுறைக்கணக்கு ... Current account
21. வைப்புக்கணக்கு ... Deposit account
22. வைப்பு ... Deposit
23. தீர்க்கும்வீடு ... Clearing house
24. வணிகவங்கி ... Commercial Bank
25. தொழிற்படுமுதல் ... Working Capital
26. பொறுப்புகள் ... Liabilities
27. சொத்துக்கள் ... Assets
28. திரவ ... Liquid

| | | |
|---|---|---|
| 29. அழைப்புப்பணம் | ... | Money at call |
| 30. மாற்றுண்டியல் | ... | Bills of Exchange |
| 31. இறைசேரியுண்டியல் | ... | Treasury bills |
| 32. முதிர்தல் | ... | Mature |
| 33. ஒப்புக்கெள்ளுநிலையம் | ... | Accepting house |
| 34. ஆவணங்கள் | ... | Securities |
| 35. மேலதிகப்பற்று | ... | Overdraft |
| 36. உண்டியற்றரகர் | ... | Bill-broker |
| 37. பங்குமுதற்சந்தை | ... | Stock Exchange |
| 38. விலைமட்டம் | ... | Price-Level |
| 39. சுட்டெண் | ... | Index Number |
| 40. பணத்தின்கணியக்கொள்கை | ... | Quantity Theory of money |
| 41. நாணயம்-காசு | ... | Currency |
| 42. மாற்றுவிதம் | ... | Rate of Exchange |
| 43. கட்டில்லாமாற்றளவுமுறை | ... | System of free Exchange rate |
| 44. உத்தேசித்த | ... | Speculative |
| 45. சருவதேசப்பணநிதி | ... | International monetary Fund |
| 46. மிகைவிலைமதித்தல் | ... | Overvaluation |
| 47. தாழ்மதிப்பீடுசெய்தல் | ... | Under-Valuation |
| 48. மீளவிலைமதிப்பு | ... | Revaluation |
| 49. நியமித்துக்கொண்டமாற்றுவிதமுறை | ... | System of fixed exchange rate |
| 50. வியாபாரநிலுவை | ... | Balance of trade |
| 51. தோற்றவர்த்தகம் | ... | Visible of trade |
| 52. சென்மதிநிலுவை | ... | Balance of Payments |
| 53. பல்பக்கமுள்ள | ... | Multilateral |

# 14 ஆம் அத்தியாயம்

## அரசாங்க வரவு செலவுப் பரிபாலனம்

ஒரு நாட்டில் பொருளியல் சம்பந்தமான, சமுதாய சம்பந்தமான சீவியத்தை ஒழுங்குபடுத்துவதில் அரசாங்கம் செலுத்தக்கூடிய பலமும் அதிகாரமும் மிகப் பெரிதாகும். ஒரு நாட்டில் பொருளியல் சம்பந்தமான, சமுதாய சம்பந்தமான சீவியத்தை ஒழுங்குபடுத்துவதில் அரச பரம்பரைக்குள்ள வரையறைகளாவன நாட்டில் பொருளியல் ஒழுங்கும், பொருளியல் முன்னேற்றத்தின் மட்டமும் அந் நாட்டு மக்கள் தம் பொருளியல் சீவியம் அரசாங்கத்தினுல் பரிபாலிக்கப்பட இடம் விடுகின்ற பிரமாணமும் ஆகியவைகளாம்.

நேரான வழிகளிலோ, நேரில் வழிகளிலோ ஒரு நாட்டில் பொருளியற் சீவியத்தை எவ்வளவுக்கு அரசாங்கத்தினுல் பரிபாலிக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பலவிதமான கொள்கைகளுள. " தலையிடாமை " என்ற பெயரால் குறிக்கப்படும் (தன்னிச்சை) பதினெட்டாம் நூற்றுண்டில் இங்கிலாந்தில் தோன்றிய ஒரு கொள்கையின்படி அரசாங்கத்தின் எல்லாப் பொருளியற் செயல்களும் வீண்தலையிடுதலாகக் கருதப்பட்டன. நாட்டிற் பொருளியற் காரியங்களைப்பற்றி அரசாங்கம் செயலற்றிருக்கும் அளவுக்கே பொதுநன்மை மேலும் மேலும் அதிகரிக்குமென நம்பப்பட்டது. அது எங்ஙனமாயினும், " தலையிடாமை " க் கொள்கையினர்கூட, உட்சமாதானத்தை நிகழ்த்திக் கொள்ளுதல், வெளிநாட்டுப் படையெடுப்புக்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளல் முதலியவை அரசாங்கத்தின் கடமைகள் எனவும், இதற்குப் பணம் தேவையானபடியால், பொருளியற் சீவியத்தில் ஓரளவு தலையிடுதல் தேவையெனவும் ஏற்றுக் கொண்டனர். காலஞ் செல்லச் செல்ல, அரசாங்கத்தின் அளவான " தலையிடுதல் " பொது நன்மைக்குத் தேவையெனப் பிரித்தானியாவிலுமே ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆகையால் பிரித்தானியாவில் உண்டாய முறையில்லாத தொழில் முன்னேற்றத்தின் துர்ப்பாக்கியப் பயன்களை நீக்கிவிட அரசாங்கம் முயன்றது. மேலும், முறையாகச் சனங்களுக்குக் கல்வி, சுகாதாரம் போன்ற சில சேவைகள் அரசாங்கத்தினுல் கொடுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை உண்டாகத் தொடங்கிற்று.

இன்று பல நாடுகளில் அரசாங்கங்கள் புறத் தேசத்தவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளலும் உட் சமாதானத்தை நிறுவிக் கொள்ளலும் உட்பட, சில சேவைகளைச் செய்கின்றன. ஆனுல், ஓர் அரசாங்கத்தினுல் நிறைவேற்ற வேண்டிய இழிவுநிலைச் சேவைகள் யாவை? நாட்டின் பொருளியல் சீவியத்தை ஒழுங்குபடுத்துவதில் அரசங்கம் எவ்வழிகளை எவ்வளவு தூரத்துக்குச் சேர்க்க வேண்டும்? என்பதைப்பற்றி மதிக்கத்தக்க அளவில் மதபேதங்கள் இன்றுமிருக்கின்றன. இப்பக்கத்தில் " தலையிடாமை " வாதம் ஓரிற்றில் இருக்குமாயின்,

அதற்கு மாருவது **ஒருங்குசேரியலாகும்.** ஒருங்கு சேரியலின்படியென்ருல் பொருளியல் சீவியத்தை ஒழுங்குபடுத்துவதில் முழுவதும் பொறுப்பாக இருக்க வேண்டியது அரசாங்கமே. ஆகையால், பொருளியல் எற்பாட்டைப்பற்றிய எல்லாக் காரியங்களுக்கும் அரசாங்கம் பொறுப்பாக இருக்க வேண்டும். அப்பொழுது அரசாங்கம் சகல விதமான சேவைகளையும் செய்கின்றது. சகல தொழிற்சாலைகள் முதலியவற்றையும் பரிபாலிக்கின்றது. இவ்விதம், பொருளியல் முறை செல்லும் வழியையும் நாட்டில் செல்வங்களைக் கையாளுதலையும் நாட்டின் சகல ஆக்கச் செயல்களையும் அரசாங்கம் பரிபாலிக்கின்றது.

இவ்விரண்டு அந்தங்களிடையிலுள்ள முறையில் ஓரளவுக்கு அரசாங்கம் தலையிடவேண்டுமென்று சொல்லும் பலர் இருப்பார்கள். அரசாங்க வரவு செலவுப் பரிபாலன மூலம், பொருளியல் முறையில் அது தலையிடுவதை விரும்புகிறவர்களும் இருப்பார்கள். அரசாங்க வரவு செலவுப் பரிபாலனமென்பதனுல் கருதப்படுவது சகல பொதுத் தாபனங்களிற் சிறப்பாகவே மத்திய அரசாங்கத்தில் வரவு செலவு பரிபாலனமாகும். அரசாங்க வரவு செலவுப்பரிபாலன மூலம், **வருவாய்ப் பங்கீட்டை** வேறுபடுத்தவும், நாட்டில் செல்வங்களை ஒருவிதத்தில் உபயோகிக்க ஆதரவையளிக்கவும், நாட்டிற் பொருளியற் செயல்களை ஒரு மட்டத்தில் வைத்துக் கொள்ளவும் இயலும். ஆழ்ந்து கருதும்போது பொருளியல் சார்பாகத் தளர்ச்சியுற்ற நாடுகளில் இம்முறை மாத்திரமே போதுமானது. இப்படியான நாடுகளில் **நாட்டு வருமானம்** மிகவும் குறைய, வருவாய்ப்பங்கீட்டை வேறுபடுத்துவதனுல் பெரிய முகாமை செலுத்த இயலாது. மேலும், இலங்கையைப் போன்ற நாடுகளில் அரசாங்கத்துக்கு வரவு செலவுப் பரிபாலன வழியாக மாத்திரம் பொருளியல் நிலையை ஒரு மட்டத்தில் வைத்துக் கொள்ளுதல் வியாபாரச் செழிப்புக்களையும் இறக்கங்களையும் நீக்குதல் முதலியவை கடினமாயிருத்தல், நாட்டின் செழிப்பு பெரும்பான்மையும் வெளிநாட்டு முகாமை செலுத்துதலில் தங்கியிருப்பதாலேயாம்.

ஆகையால், பொருளியல் முறையை அரசாங்க வரவுசெலவுப் பாலனமூலம் பரிபாலித்தல் மிகவும் முக்கியமாயிருப்பினும், அது போதாது என்று யோசிக்கிறவர்களும் உளர். பொருளியல் முறையைப் பயன்படும் வழிகளில் அமைக்க, இதைக் காட்டிலும் சிறப்பான முறைகள் தேவையென்று அவர்கள் கொள்வர். மேலும், **வங்கித்தொழின் முறை** மேல் இதனுல் ஒரு முகாமை செலுத்துதல் உண்டாயினும் அரசாங்க வரவுசெலவுப் பரிபாலன மூலம் பொருளியல் அசையுந்தன்மை முதலியவற்றை நன்ருகப் பரிபாலிக்க வியலாமை சில அரசாங்கங்களுக்குத் தெரியும். நாட்டில் பொருளியல் இயக்கமட்டம், மூலத் தொழில்களின் செயல் மார்க்கங்களாற் பலமாக அதிகாரஞ் செலுத்துதலை முன்னேற்றமடைந்த பொருளியல் முறைகளுள்ள நாடுகள் கண்டுள. மூலத்தொழில்கள் என்ற பெயரால் குறிக்கப்படும் இத்தொழில்களுக்கு இரும்பும் உருக்கும் நிலக்கரியுமாகியன சம்பந்தமான தொழில்கள் அடங்கியுள்ளன. இப்பலவித தொழில் எசமான்களின் முறையில்லாத செயல்களால், பொருளியல் முறையிற் கூடாப் பயன்கள் உண்டாயின. இத

ஞல், பிரித்தானியாவிற் சில மூலத் தொழில்கள் தேசியமயமாக்கப்பட்டன. தேசியமயமாக்குவதில் பலவிதமான ஒழுங்குகளும் பரிபாலன முறைகளும் உண்டு. தொழில்களைத் தேசியமயமாக்குவதென்ருல், இத்தொழில்களின் செயல் மார்க்கங்களைப் பொது நன்மைக்காகப் பரிபாலிப்பதேயாம்.

பிரித்தானியாவிலெனின், தொழில்களைத் தேசியமயமாக்குவதனுல் உண்டாகிய விளைவு எதிர்பார்த்தவளவுக்குப் பயன்படவில்லை. ஆனல், பெரும்பான்மையும் கலக்கமுற்ற பொருளியல் முறைகளில், வற்பாடு முறைகள் தகுதியுள்ளவையென்று கொள்ளல் வேண்டும். வேலையின்மையையும் செல்வங்களின் அழிவையும் நீக்க அப்படிச் செய்தல் வேண்டும். இலங்கையைப் போன்ற நாடுகளில் மூலத்தொழில்களை நாட்டுரிமையாக்கல் என்பது, நாட்டிற் பொருளியற் சிவியத்தைப் பொது நலத்துக்காக ஒழுங்கு படுத்துவதன் முதற்படியாகும்.

நாட்டில் எல்லாத் தொழில்களையும் நேரே பரிபாலிப்பதனுலோ, அவற்றை ஒழுங்குபடுத்துவதனுலோ நாட்டிற் பொருளியற் சிவியத்தை ஒழுங்குபடுத்தும் அரசுகள் பொதுவாகக் கருதும்பொழுது, குறைந்த வளவிலேயே இருக்கின்றன. ஆனல், எல்லா அரசாங்கங்களும் தம் வரவுசெலவு மூலம் தங்களுடைய நாடுகளில் பொருளியல் முறைகள்மேல் ஓர் அளவிற்கு அதிகாரஞ் செலுத்துகின்றன. சில சேவைகளை மட்டும் சம்பாதிக்க முயலும் அரசுகளாலாயினும், சனத்தொகையின் மேல் ஓரளவு முகாமை செலுத்த முடியும்.

அரசாங்க வரவுசெலவுப் பரிபாலனமாவது, பொதுத் தாபனங்களில் ஆதாயம், செலவு ஆகிய இவ்விரண்டுக்குமிடையிலுள்ள தொடர்புகளை ஒழுங்குபடுத்தலாகும். தற்போதைய நாடுகளில் மிகவும் முக்கியமான பொதுத் தாபனமாவது மத்திய அரசாங்கமே. பிரதேசங்களிலுள்ள, அல்லது மாகாணங்களிலுள்ள பொதுத் தாபனங்களைக் கருதும்போது பணமே இல்லை. ஆகையால், பல சமயங்களில் அவை மத்திய அரசாங்கத்திலிருந்தே பணம் பெற வேண்டும். பல பிரதேசங்களிலுள்ள, அல்லது மாகாணங்களிலுள்ள தாபனங்களுக்குப் பணம் பெறல் கடினமான காரியம். ஏனெனில், அவைகளுடைய பரிபாலன விடயம் அற்பமாதலால் பலசேவைகளைப் பெறுவதன் பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்குரிதாகும். ஆகையால், பிரதேசங்களிலுள்ள தாபனங்களைக் காட்டிலும் பணத்தைப் பெறுவதில் ஓரதிகாரம் மத்திய அரசாங்கத்துக்குண்டு. பல சிற்றரசுகளாலமைந்துள்ள இந்தியாவையோ, அமெரிக்க ஐக்கிய நாட்டையோ போன்ற பெரிய நாடுகளிலெனின், அரசாங்கவரவு செலவுப் பரிபாலனத்தில் இதைக் காட்டிலும் அதிகமான அதிகாரம் செலுத்த இடம் உண்டு.

அரசாங்க வரவு செலவுப் பரிபானத்தைப் பற்றிய அடிப்படைச் சேவைகள் யாவை? உண்மையாகவே, சமூகத்துக்கு மேலான பொது நன்மையைக் கொடுக்கும் அரசாங்க வரவு செலவுத் தத்துவம் மிகச் சிறந்தது. அது விரும்பத்தக்க தொன்ருகும். சமூகப் பொது நன்மையை எப்படிக் கணிக்கவியலுமென்பதைப் பற்றி ஒரு வினு இங்கு தோன்றும். அது எங்ஙனமாயினும், ஓரரசு பொது நன்மைக்காகக் காரியங்களைச் செய்வது அக்காரியங்களுக்காகப் பணத்தைச் செல

வழிப்பதனுலேயாகும். செலவை நிறைவேற்ற அரசாங்கம் ஆதாயங்களைப் பெறல்வேண்டும். ஓரரசு ஆதாயங்களைப் பெறக் கூடிய இரண்டு வழிகளுள. அவற்றுள் ஒன்று நாட்டில் சனங்கள் தாம் தாம் சம்பாதிக்கும் ஆதாயத்தின் ஒரு பங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கும்படி சட்டங்களையமைத்தல்; வரிகளையிடல் இவ்வழியிற் செல்லுதலாகும். இரண்டாம் முறையாவது, அரசாங்கம் சனங்களின் தேவைகளைப் பூர்த்தியாக்கி அதனுல் இலாபங்களைச் சம்பாதித்துக் கொள்வதாகும். இக்காரணத்தினுலேயே அரசாங்கத்தின் ஆதாயம், பொது மக்களுடைய ஆதாயத்தின் ஒருபங்கைக் கொண்டுள்ளது. இதனைத்திரட்டச் செலவிடும் அளவிற்குக் குறைவாக ஆதாயம் கிடைக்குமாயின், வரவு செலவுத் தத்துவம் பொது சன நலத்துக்கு ஏற்காதென்பது தெளிவாகும். ஓர் அரசாங்கம் பணத்தைச் செலவழிக்கத் தீர்மானிக்கும்பொழுது, செலவிடுவதனுல் உண்டாகும் பொருளியற் பயனை அச்செலவுக்காகப் பணத்தைத் திரட்டும் பொழுது உண்டாகும் பொருளியற் பயன்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மேலும், சமுதாயத்துக்காகச் செலவிடும் பணம் ஏற்றதாகக் காணப்படினும், அதற்குரிய ஆதாயத்தைப் பெறும்போது உண்டாகும் நட்டங்களையும் ஆராய, அது அவ்வளவு பயனுடையதாகத் தோன்ருதிருக்கலாம்.

அரசாங்கத்தின் முதற் கடமையாவது வெளிநாட்டுப் படையெடுப்புக்களிலிருந்தும் உட்பிடைகளிலிருந்தும் நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளுதலாகும். சனங்களின் பொருளியலையும் ஏனைப் பொதுநலத்தையும் அதிகரிக்க அரசாங்கம் இயன்ற அளவு முயற்சிக்க வேண்டும். ஓர் அரசாங்கத்தின் வரவு செலவுத் தத்துவம் முக்கியமாக வழிவகுப்பது சனத் தொகையின் பொருளியல் நலத்தை அமைக்கும் பொருட்டேயாம். ஆனுல், அதனிடையில் வேறு நலங்களும் உண்டாகலாம். ஒரு நாட்டிற் பொருள் நலம் உண்டாவது அந்நாட்டின் பண்டங்களையும் சேவைகளையும் ஆக்குதலைத் தரத்தினுலும் பிரமாணத்தினுலும் உயர்த்தி அதைப் பிறவற்றிலிருந்து பிரித்துக் காட்டுவதனுலேயே.

ஆக்கப் பரிமாணத்தை அதிகரித்துக் கொள்ளவியலுவது பூரணமான உழைப்பையும் ஆக்கச் சாதனங்களால் மேலான பலன்களையும் கிடைக்கும் வண்ணம் பொருளியல் முறையை ஒழுங்குபடுத்தும்போதேயாம். மிகவும் நல்ல கருவி நல்ல திரவியம், கலைத்திறன் முறை முதலிய எல்லாவற்றுலும் ஆக்கத்தையுயர்த்திக் கொள்ளவியலும். நாட்டுச் செல்வங்களைப் பெரிதும் உபயோகிப்பதனுல் ஆக்கத்தை அதிகரித்துக்கொள்ளவியலும். மேலும், பலநாடுகளில் குடிகள் தங்கள் ஆதாயம் மூலம் சிறப்பாகச் சீவிக்கலாம். ஆதாய சமானமின்மையைக் குறைத்தல் அரசாங்கம் செய்யவேண்டிய காரியமென்பது விளங்கும். ஆதாய சமானமின்மையை எவ்வளவுக்குக் குறைத்து விடவேண்டுமென்பதைப்பற்றிக் கொள்கைப்பேதங்கள் இருக்கின்றன. ஆனுல், ஆதாய சமானமின்மையைப் பொதுவாகக் குறைக்க முடியாது. சமுதாயத்தில் செல்வர்களிடமிருந்து வரிகளைத் திரட்டி யாவருக்கும் பலவிதமான சேவைகளையோ அனுமதிகளையோ கொடுப்பதே முறை.

அரசாங்க வரவு செலவு முறையால் ஆக்கப் பரிமாணம் அதிகரித்து ஆக்கம் உயருமெனின், அதைச் சனங்கள் விரும்புவார்கள். நாட்டில் சம்பத்துக்கள் மிகவும் நன்முக உபயோகிக்கப்படுமாயின், ஆதாயங்களின் சமானமின்மையைக் குறைக்கக்கூடும். மேலும், அரசாங்க வரவு, செலவுப் பரிபாலனத்தால் பொருளியல் முறையின் **ஏற்றவிறக்கத்தை** நிகராக்கிவிட எத்தனிக்க வேண்டும். இத்தொண்டுகள் பொதுவில் அங்கிகரிக்கப்படுமாயினும் இவற்றைச் செயற்படுத்துதல் சங்கடமென்பதை இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

இவ்விடத்திலே தோன்றும் ஒரு மூலப் பிரச்சினையிருக்கிறது. அரசாங்க வரவு, செலவுப் பிரமாணத்தை எப்படித் தீர்மானிக்க வேண்டும்? இதனைப் பார்க்கும் பொழுது, முழுச் செலவையும் ஓர் அளவில் அதிகரிக்க, அவ்வதிகரிப்பால் உண்டாகும் பொதுநலமானது, ஆதாயத்தைத் திரட்டும்போது உண்டாகும் எல்லைத் தீமைகளைச் சமாளிக்குமாயின் பலவிதமான வழிகளில் செலவழிக்கும் அளவு, சனசமுதாயத்துக்கு உண்டாகும் எல்லைப்பயனை நிகா இருத்தல் வேண்டும். அரசாங்க ஆதாயத்தைத் திரட்டும்போது பலவிதமான வழிகளில் ஆதாயங்களைப் பெறுவதிலே விளையும் தீமைகளைச் சமன் செய்யும் வண்ணம் திரட்டல் வேண்டும். எப்படி ஆதாயத்தைச் சம்பாதிக்க வேண்டும்? எச்சேவைகளின் பொருட்டு; என்பதைத் தீர்மானிக்கும் பொழுது, அரசாங்கத்துக்கு வழிகாட்டியாக வேண்டியது இப்பொருளியல் தத்துவமே. இங்ஙனம் கூறிய மூலவிதிகள் பொதுவாக அங்கீகரிக்கப்படுமாயினும், அவற்றைச் செயற்படுத்துதல் கடினமாகும். ஏனெனில், நன்மைகள், தீமைகள், பொதுநலம், எனப் பெயரிட்டவற்றைப்பற்றிக் கருத்து வேறுபாடு உண்டாகும்.

ஆதாயத் திரட்டுதலையும் அதைச் செலவழித்தலையும் பல முறையில் அரசாங்கஞ் செய்யவியலும். இம்முறைகள் பொருளியலில் பலவிதத்தில் ஆதிக்கம் செலுத்தும். சாதாரணமாக, ஓர் அரசாங்கத்தில் முக்கியமான பொருள்தேடும் வழி, **வரி** முறையேயாகும். கடந்த ஆண்டுகளில் **சேமிப்புக்களை** உபயோகத்துக்கு எடுத்தோ, தன் சொத்துக்களை விற்ருே அரசாங்கம் பணம் பெற்றது. பொதுசனங்களுக்காகச் செய்யும் சில சேவைகள் மூலமும் ஆதாயம் பெற்றது. உதாரணமாக, புகைவண்டிப் பிரயாணம் முதலியவை தம் நாட்டுக்குரிய, அல்லது வெளிநாட்டுக்குரிய கடனைக் கொடுக்க அரசாங்கம் பணம் பெற்றுக்கொண்டது. மிகவும் ஆபத்தான நோத்திலே பணத்தாள்களை அச்சிடுவதனுல் (இது மிகவும் ஆபத்தான செலவாகும்) பணத்தை அதிகமாய் சம்பாதித்துக் கொள்ளவும் இயலும்.

ஓர் அரசாங்கத்திலாவது, வேறு பொதுத் தாபனத்திலாவது, ஆதாயத்தைப் பொது சனங்களுக்குச் சேவை புரியும் பொருட்டோ, சொத்துக்கள் கையாளும் பொருட்டோ கடன் தீர்த்துவிடும் பொருட்டோ செலவழிக்கவியலும். ஓர் அரசாங்கம் சம்பாதிக்கும் சேவைகளின் அதிகமான பங்கு இலவசமாகச் சம்பாதிக்கப்படும். இலங்கையிலெனில், சுகாதாரம், கல்வி, உட்பாதுகாப்பு முதலிய சேவைகள் இலவசமாகச் சம்பாதிக்கப்படும். தபாற் சேவையைப் போன்ற அரசாங்கம்


உதவும் சில சேவைகள் பணம் கொடுப்பன. அரசாங்கம் பொதுசனங்களுக்கு உதவும் சேவையில் பணம் சம்பாதிக்குமாயின், (புகையிரதப் போக்குவரத்துப் போன்ற ஒரு பொது சேவையென்று கொள்வோம்) பொதுசனங்கள் அதனால் பெறும் பிரயோசனத்தின்படி ஏதாவதொரு கூலி செலுத்தல் வேண்டும். இப்படியான கூலிகள் வரிகளன்று, விலை விசேடமாகும். விலையைச் செலுத்துபவனுக்கு நிச்சயமான ஒரு விசேட சேவை கிடைக்கும். ஆனால், வரிகளைச் செலுத்துபவனுக்கு விசேடமான சேவை நேரே கிடைப்பதில்லை. வரியென்பது சில ஆட்களின் ஆதாயத்திலிருந்து ஒரு பாகத்தை அரசாங்கம், அல்லது பொதுத் தாபனங்கள் பெறுவதாகும். அரசாங்கம், அல்லது ஏனைப் பொதுத்தாபனங்கள் பொதுச் செலவுகள் மூலம் இதனைச் சனங்களுக்குப் பயன்படுத்துகின்றன. இதற்கும் பணம் பெறும் ஊர்காவலர்களைப் போன்ற சிலர் சீமுதாயத்துக்குச் சேவை செய்கின்றனர். இளைப்பாற்றுச் சம்பளங்களைப் பெறுகிறவர்களைப் போன்ற வேறு சிலர், பொதுசனங்களுக்குச் சேவை செய்கின்றனர். இளைப்பாற்றுச் சம்பளங்களைப் பெறுகிறவர்களைப் போன்ற வேறு சிலர், பொதுசனங்களுக்குச் சேவை செய்யார். ஆயினும், பணம் பெறுவர்.

பெரிய சுரங்கங்களிலோ, வேறு இயற்கையான வருவாய்களிலோ உரிமையாளர்களிடம் பெரிய ஆதாயங்களைப் பெறும் அரசுகளைத் தவிர ஏனை அரசுகள் அவற்றின் ஆதாயத்திலிருந்து பெரிய பாகத்தை வரி வழியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். வரிகளை முக்கியமான இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை நேர்வரிகளும் நேரில்லாவரிகளும் என்பன. பண்டங்களையும் தனிச் சேவைகளையும் தவிர, ஏனைய சேவைகளை விற்பதிலோ, விலைகொடுத்து வாங்குவதிலோ பெறும் வரிகளை நேரில் வரிகளாகக் கருதலாம். ஏனை வரிகளெல்லாம் நேர்வரிகளாகும். ஒருவனுடைய ஆதாயத்திலிருந்து செலுத்தும் வருமானவரி ஒரு நேர்வரியாகும். சீனி வாங்குகிறவன் செலுத்தும் வரி நேரில்வரியாகும். ஒருவன் சீனி வாங்காமலிருந்தால் நேரில் வரியை நீக்கவியலும். ஆனால், நேரில் வரியை ஒரு பண்டத்தின் விலையோடு சேர்க்கவியலுமாதலால் ஒரு பண்டத்தை விலைகொடுத்து வாங்குகிறவன் தன்னை அறியாமலே அதற்கு ஒரு வரியைச் செலுத்துகிறான். நேரில் வரிகள் பொதுவாக, ஏனையோர் மேல் சுமத்தும் வரி விசேடங்களாகும். ஒரு பண்டத்தில் அரசாங்கம், ஒரு வரியை இட்டால் விற்கிறவன் அதை முழுவதுமே விற்கும் விலையினுட் சேர்க்க விரும்புவான். அவனுடைய ஊக்கத்தின் பயன்படு தன்மையானது, முன்கூறிய பண்டத்தின் கேள்வி நிரம்பல்களின் மீள்தன்மையிலே தங்கியிருக்கும்.

ஒரு பொருளில் இடும் நேரில் வரியைப் பூரணமாகவோ பாதியாகவோ, விற்கிறவனுக்கு மற்றையோர் மேல் சுமத்தவியலும். உதாரணமாக, பெற்றோலின் விலையை ஏற்றுவதைக் காட்டலாம். வரியின் முழுப் பிரமாணத்திலே விலை ஏறுகிறதோ, இல்லை என்பதைத் தீர்மானிப்பது பெற்றோலின் கேள்வியின் மீள்தன்மையிலேயாம். பெற்றோலின் கேள்வியின் மீள்தன்மையிலேயாம். பெற்றோலின் கேள்வி முழுவதுமே மீள்தன்மையிலாவியல்பு உடையதாயின், முழுவரியும் கடையியாகப் பெற்றோல் உபயோகிக்கிறவர்கள் மேல் சென்று சேரும். அது எங்ஙன


மாயினும் பெற்ரேல் உபயோகிக்கிறவன் கார் வண்டி ஓட்டுகிறவனுயினும், பசு வண்டி ஓட்டுகிறவனுயினும், இவ்வரியை (பூரணமாகவோ, பாதியாகவோ) அவ் வண்டிகளில் போக்குவரத்துச் செய்பவர்கள் மேல்செலுத்துவான். சில சமயங் களிலே நேரில் வரியைப் பிறர்மேல் சுமத்த முடியாது. அப்படிச் செய்தால் அது ஒரு நேர்வழியாகும்.

இறைபடுகை —மனிதர் செலுத்தவேண்டிய வரியளவு எப்படித் தீர்மான மாகும்? முன் கூறியதுபோல, நேர்வரியைப் பிறர் மேற் சுமத்தவியலாது. இவ் வகை இறைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு வருமான வரியாகும். அது, கிடைக் கும் வருமானஞ் சார்பாக நியமிக்கப்படும் ஒரு வரியாகும். தொழில் முதல்வர் களைப் போன்ற சிலர், இவ்வருமானவரிகளை மற்றையவர்களிடம் ஒப்படைக்க வியலுமென்று எண்ணுவார்கள். ஆனல், இது ஒரு மயக்கமே. ஏனெனில், கடைசி யாக விலை தீர்மானிக்கப்படுவது நிரம்பலின் வலுவேகத்தினல் மட்டும் இயலா தாதலால் என்க.




I

1 ஆம் படம்




2 ஆம் படம்

நேரில் வரிகள் மூலமாகவெனின், ஒ ருவரியைச் சுமக்கிறவர் யார் எனபது தீர்மானமாவது, வரியிலகப்பட்ட பண்டத்தின் கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மைப்படியேயாகும். ஏனைப் பொருள்கள் மாறுமல் இருக்குமாயின், ஒரு பண்டத்தின் கேள்வி மீள்தன்மையுள்ள அளவுக்கே விற்கிறவன்மேற் பொறுக்கும். இது இப்படியாவது, விலையின் சிறிய அதிகரிப்புக்காரணமாக ஒரு கேள்விச் சுருங்கல் உண்டாவதனுலேயாம். ஏனைப் பொருள்கள் மாறுமல் இருக்குமாயின், நிரம்பலின் மீள்தன்மை அதிகரிக்கும் அளவுக்கே இறைகளின் பொறுப்பு மேலும் மேலும் வாங்குகிறவனைச் சென்று சேரும். தொடக்கத்திலே, வாங்குகிறவன்மேலோ, விற்கிறவன்மேலோ நேரில் வரியை இட்டாலும், கடைசியில் விளைவு இப்படியே முடியும். அது எங்ஙனமாயினும், முதலில் வரி குறித்தவனுக்கு அதைச் சிறிது காலத்துக்கே பொறுக்க நேரிடும்.

கேள்வி மீள்தன்மையில் நிகழும் முதலாம் இரேகைச் சித்திரத்தில் காட்டப் படும் நேரத்திலே (விற்கப்படும் ஒவ்வொரு பண்ட அலகுக்கும் ஒரு வரி நிய மிப்பதனல்) விற்கிறவர்களிலே ஒரு நேரில் வரியை அறவிட்டால், அவ்வரியை எடுக்குமுன் இருந்த நிரம்பல் வளைகோடு (நி1 நி1) ஆனது, வரியிலிருந்து நி2 நி2 ஆகக் குறிக்கப்படும் புதிய நிரம்பல் வளைகோடுவரை வலது பக்கத்துக்கு மாறும். மீள்தன்மையுடைய கேள்வி வளைகோடு நி1 நி1 நிரம்பல் வளைகோட்டை வெட்டிப்போவது வி1 என்னுமிடத்திலேயாம். புதிய நிரம்பல் வளைகோட்டை வெட்டுவது வி2 என்னுமிடத்திலேயாம். வி2 எ, என்பதனல் காட்டப்படுவது, அறவிட்ட வரியின் அளவாகும். இவ்விரேகைச் சித்திரத்திற் காட்டப்படும் வண்ணம், வாங்குகிறவர்களின் விலை ஏறுவது வி2. வ ஆகவே. அல்லது முழு வரியின் அளவு குறையும். ஆகையால், அவ்வரியின் அதிகப்பங்கை (வ. எ) தாங்க நேரிடுவது விற்கிறவர்களாலேயாம். இரண்டாவது இரேகைச் சித்திரத் தில் காட்டப்படும் நிரம்பல் மீளும் நேரத்திலே வி2 எ, வரியை விற்கிறவர்களிட மிருந்து அறவிடும்பொழுது நிரம்பல் வளைகோடு நி2 நி2 வரை மாறும். வரிக்கு முன் வி1 பி1 என்ற விலை செலுத்தப்பட்டது. வரிக்குப்பின், வி2 பி2 என்ற விலை செலுத்தப்படும். வரியின் அதிகப்பங்கை (வி2 வ) வாங்குகிறவர்களே தாங்கும்பொழுது, சிற்றளவு (வ எ) விற்கிறவர்களால் தாங்கப்படும்.

சில பண்டங்களின் பொருட்டாவது சேவைகளின் பொருட்டாவது ஒரு நேரில்வரி எடுக்கப்பட்டபொழுது அப்பண்டத்துக்காவது சேவைக்காவது உள்ள கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மை விளக்கமாக இருந்தால், விற்கிறவர்களிடத்தில் கேள்வி நிரம்பலைக் காட்டிலும் விரும்பிய முறையான மீள்தன்மையிலாவியல்புடையதாயிருந்தால், வரியின் கூடிய அளவினைப் பொருள் வாங்குகிறவர்களே தாங்குவார்கள். இதன் மறுதலையும் இப்படியே நிக ழும். எங்ஙனமாயினும், ஒரு பண்டத்தின் நிரம்பல் முழுவதுமே மீள்தன்மை யிலாவியல்புடையதாகாவிடின். வரியின் காரணமாக உண்டாகும் வேறுபாடு களுக்குத் தம் காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள விற்கிறவர்களுக்கு இய லும். அப்பொழுது, வரியின் அதிகப்படியான பாகம் வாங்குகிறவர்களையே சென்றடையும்.

முழுவதுமே, மிகவும் அரிதாக மீள்தன்மையிலாவியல்புடைய ஒரு கேள்வி யுண்டாகலாம். ஆனல், அதிகமான மீள்தன்மையிலாவியல்புடைய கேள்வியுள்ள சமயங்கள் அவ்வளவு அரிதன்று. பொதுவாக, தேவைகளாகக் குறிக்கப்படும் பண்டங்களின் கேள்வி மீள்தன்மையிலாவியல்புடையதாகும். உதாரணமாக, அரிசியையும் சீனியையும் எடுக்கலாம். தேவைகளின் மேல் ஒரு நேரில் வரியை விசேடமாகச் சுமத்துவது, தேவைகளை வாங்குகிறவர்கள் மேலேயாம். ஆனல், போகப் பொருள்கள் சார்பாகவெனின், அவற்றின் கேள்வி இதனைக்காட்டிலும், மீள்தன்மையுடையதாகும். ஆதலால், ஒரு நேரில் வரியின் பாரம் பொரும் பான்மையும் பொறுப்பது போகப் பொருள்களை விற்கிறவர்கள் மேலே யாம்.

ஒரு பண்டத்தின் கேள்வியும் நிரம்பலுமாகிய இரண்டுமே பெரும்பான்மையும் மீள்தன்மையுடையனவாயின், ஒரு வரியை இடுவதன் காரணமாக முன்கூறிய பண்டத்தை விற்பது இல்லாமற்போக இடமுண்டு. கேள்வியின் நிரம்பலும் முழுவதுமே மீள்தன்மையிலாவியல்புடையனவாயிராவிடின், நேரில் வரியை இடுவதன் காரணமாக, இடப்படும் அளவு குறைந்துபோக இடமுண்டு. மீள்தன்மை அதிகரிக்க அதிகரிக்க, வரி இடும் அளவு குறைந்துபோகும்.

தேவையின் மேல் சுமத்தும் வரிகளால் மிகப்பெரிய வருமானத்தைப் பெறவியலும். வேண்டிய நேரத்திலே தேவைகள் பெருமளவில் எடுக்கப்படுகிறபடியாலும், கேள்வி மீள்தன்மையுடையதாதலாலுமே இப்படி நிகழுகின்றது. இப்படியான நேரங்களில் நேரில்வரி பெரும்பாலும் வாங்குகிறவர்மேல் பொறிய இடமுண்டு. போகப்பொருள்கள் சார்பாகவெனின், பலர் வரிகளை எடுத்துவிட விரும்பினும் போகப்பொருள்களின் கேள்வி சாதாரணமாகவே மீள்தன்மையுடையதாதலின், வரிகளைச் சுமத்துதல் காரணமாக எடுக்கப்படும் அளவு பெரும்பாலும் குறைய இடமுண்டு. ஒரு காலவரையறையினுள், போகப்பொருள்களை வாங்கும் அளவானது தேவைகளைக்காட்டிலும் கட்டின்றிக் குறையும். அப்பொழுது, ஓரளவு வருமானம் பெறுவதாயின், வரியை மதிக்கத்தக்க முறையில் அதிகரித்தல் வேண்டும். அது எங்ஙனமாயினும், வருமானத்தைப் பெறும்பொழுதே ஒரு பண்டத்தின் நுகர்தலைக் குறைத்தலும் அரசாங்கத்தின் கருத்தாயிருந்தால், கேள்வியின் மீள்தன்மை இலாபத்தோடு விளங்கும். கள்ளுவரி தேவையாக இருப்பது, அதனால் வருமானம் கிடைக்கிறபடியால் மாத்திரமன்று. அவ்வரி வழியாக சுகத்துக்கு இதமில்லாத கள்ளுண்ணுதலையும் குறைத்துவிட முடியுமாதலாலேயாம். இறக்குமதிப் பண்டங்கள் ஒரு நேரில்வரியைப் பெறும்பொழுது, அது வருமானம் மாத்திரம் தருவதன்று, இறக்குமதி செய்யும் பொருள்களின் அளவையும் குறைக்கும். இறக்குமதிகளைக் குறைப்பது இறக்குமதிப் பண்டங்களுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பணத்தைக் குறைக்கும் பொருட்டாவது, முன்கூறிய விதத்தில் பண்டங்களை நாட்டிலேயே உற்பத்தி செய்யும் பொருட்டாவது உதவியளிப்பது அரசாங்கக் கொள்கையாகும். இறக்குமதிப் பண்டங்களின் விலை கூடுவதனால் முன்கூறிய பண்டங்களின் நுகர்தலைக் குறைக்கும் வாங்குவோர், சுதேச பண்டங்களை நுகர்ச்சியின் பொருட்டு வாங்க விரும்புவர்.

சுதேச பண்டங்கள் சார்பாகவே கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மையின்படி எற்றுமதி இறக்குமதிகள் மேல் சுமத்தும் நேரில் வரிகள் வாங்குகிறவர்களிடையும் விற்கிறவர்களிடையும் பகிரப்படும். உலகத்தாருக்குத் தேவையான பண்டத்தின் பெருமளவை உலகின் ஒரு பகுதியில் வசிப்பவர்கள் உற்பத்தி செய்வாராயின், அவர்களுக்கு அந்த உலகத்து நுகர்வோரிடமிருந்து ஏற்றுமதித் தீர்வைகளாகப் பெருமளவு பணம் பெற்வியலும். முன்கூறிய பண்டத்துக் கேள்வி மீள்தன்மையிலாவியல்புடையதாயிருக்கக் கூடுமாதலால் இது இயலும்.

மற்றைப்படி, உலகத்தில் ஏனையோருக்குத் தேவையாகும் பண்டங்களை ஒரு நாடு உற்பத்தி செய்யாவிடின், அல்லது தேவையான பண்டங்கள் நிரம்பலின் மிகச்சிறிய பங்கை மட்டும் ஆக்கின், அந்நாட்டுக்கு ஏற்றுமதிப் பண்டங்கள் மூலம் வெளிநாட்டார்களிடமிருந்து பெரிய ஆதாயத்தைப் பெறவியலாது. அதிக மான தீர்வைகளைப் பெற்றால், முன்கூறிய நாட்டின் பண்டங்களுக்கு வெளி நாட்டுக் கேள்வி மீள்தன்மையடைய இடமுண்டு. ஆதலால், அப்படிச் செய்ய வியலாது. முழுப் பண்டங்களும் கேள்வியின் மீள்தன்மையைக் காட்டிலும், முற்கூறிய நாட்டுப் பண்டங்களுக்குள்ள கேள்வி, மீள்தன்மையடைய இட முண்டு. நாம் ஏற்றுமதி செய்யும் பண்டத்தொகை சார்பாக இலங்கையின் நிலைமை உண்மையாக இப்படியேயாகும். உலக நிரம்பலில் மதிக்கத்தக்க அளவை இலங்கைக்குச் சம்பாதிப்பது தேயிலை மட்டுமே. மேலும், அந்நிரம்ப லும் உலக-தேயிலை-நிரம்பலின் ஒரு பாதிக்குக் குறைவானதே. ஆகையால், இலங்கையில் ஏற்றுமதிகளுக்கு எடுக்கும் தீர்வைகள் பெரும்பான்மையும் இலங்கையிலேயே விற்கிறவர்களால் தாங்கப்படவேண்டியன.

ஓர் இறக்குமதித் தீர்வை சார்பாகவெனின், ஒரு நாடு இறக்குமதி செய்த பண்டத்தின் மதிக்கத்தக்க அளவை வாங்கினாலொழிய இறக்குமதித் தீர்வை யின் பெரிய பங்கு, இறக்குமதி செய்யும் நாட்டில் நுகர்வோராலேயே தாங்க வேண்டியதாகும். மேலும், பண்டத்தின் விலையும் தீர்வையின் முழு அளவினு லேயே மேலெழும். இது இங்ஙனமாவது, முழு உலகத்திலே சந்தைகளைக் காட் டிலும் மதிக்கத்தக்க அளவில் உலக சந்தையிலே சிறிய பாகத்துக்கு நிரம்பல் மீள்தன்மை கூடுவதனாலேயாம். வேறு முறையிற் கூறின், முழு நிரம்பலுமே மீள்தன்மையிலாவியல்புடையதாயினும், இறக்குமதித் தீர்வையையெடுத்த சந் தையிலே, பழைய விலையிலிருந்து இறக்குமதித் தீர்வையைக் குறைந்த விலைக்கு விற்பதைக் காட்டிலும், ஏனைச் சந்தைகளிலே சிறிது குறைந்த விலைக்காயினும் அதிக அளவை விற்பது, விற்கிறவர்களுக்கு இலாபங் கிடைப்பதாலேயாம். ஆகையால், இறக்குமதி செய்கிறவர்களே வரியைப் பெரும்பான்மையில் செலுத்த வேண்டும். இறக்குமதித் தீர்வையை இட்ட சந்தை விலை, இறக்கு மதித் தீர்வையைக் குறைக்கும்பொழுது ஏனைச் சந்தைகளின் விலையளவாகும் மட்டத்துக்கு மேல் ஏறினால், முன்கூறிய பண்டத்தைச் சம்பாதிக்கிறவர்கள் அப்பண்டத்தின் தீர்வையை இட்ட சந்தையிலும் அதை விற்க விரும்புவார்கள்.

இலங்கை இறக்குமதி செய்யும் பண்டங்கள் சார்பாக, உலக நிரம்பலின் மிக வும் சிறிய பாகத்தை மட்டும் இந்நாடு இறக்குமதி செய்கிறபடியால் இலங் கைக்கு அவ்விறக்குமதிப் பண்டங்களின் நிரம்பல் மீள்தன்மை மிகவும் அதிக மாகும். ஆகையால், ஓர் இறக்குமதிப் பண்டத்தின் விலை அதனிடை ஒப்படைக் கும் வரியின் அளவினாலேயே அதிகரிக்கும். ஒரு பண்டத்தின் உலக நிரம்பலின் பெரிய பாகத்தை இலங்கை இறக்குமதி செய்யும். மிகவும் அபூர்வமான சமயத்தி லொழிய, கேள்வியின் மீள்தன்மை விலையின்மேல் செல்வாக்குச் செலுத்துதலைக் காட்டிலும், வாங்கும் அளவின் மேற் செல்வாக்கைச் செலுத்தும். இறக்குமதி

செய்யும் ஒரு பண்டத்தின் (அரிசியெனின்) கேள்வி மீள்தன்மையிலாவியல் புடையதாயின், இறக்குமதித் தீர்வையை எடுப்பதனால் விலையில் உண்டாகும் அதிகரிப்பு, வாங்கும் அளவின்மேல் எப்படியாயினும் மதிப்புச் செலுத்தாது; வெளிநாட்டுப் பட்டுப் புடைவைகளுக்குப் போலக் கேள்வி மீள்தன்மையினால் இறக்குமதித் தீர்வை எடுப்பதன் காரணமாக விலை கூடுகிறபடியால், வாங்கும் அளவு ஒரு குறிப்பிடத்தக்க அளவு குறையும். இவ்வரையறை, ஒருவரியின் வீழ்ச்சியைத் தாங்குகிறவன் யாரென்று கூறவியலும். ஆனால், சில நேரில்வரிகள் சார்பாகவெனின், வரியை நேரில்வழிகளால் மற்றையோர் மேல் சுமத்தவியலும். ஆதலால், அதன் வீழ்ச்சியை அளத்தல் சங்கடமாகும். வருமானவரிகளையும் மரணவரிகளையும் போன்ற நேர்வரிகள் சார்பாகவெனின், வரி இன்னாருக்கெனக் குறித்தவர்களே அவ்வரிகளைச் செலுத்தி விடல் வேண்டும்.

ஆதாயங்களைத் திரட்ட மிகவும் நல்ல முறையாவது, வரிகளைச் செலுத்துந் திறமையுள்ளவர்களிடமிருந்து வருமானவரி, மரணவரி முதலிய நேர்வரிகளைத் திரட்டிக்கொண்டு, அன்னியர்களிடமிருந்து யாதும் வரியை இறுக்காமலிருக்கலாமென்று சிலர் எண்ணுவார்கள். ஆனால், செயலில் இம்முறை போதாதென நன்கு விளங்கும். மனிதர்களிடமிருந்து வரிகளை எடுக்கமுடிவது அவர்களுடைய வெளிப்படை ஆதாயத்திலிருந்தேயாம். ஆனால், சிலர் அவர்களுடைய உண்மையான ஆதாயங்களை மறைக்க முயலுவர். இக்கபடம் ஏனை வரிகளைச் செலுத்துபவரைக் கருதுகையில், அனியாயமாகும். அப்பொழுது அரசாங்கத்தின் வருமானம் பெருமளவு குறையும். இவ்விதமுண்டாகும் இன்னுமொரு துன்பமாவது, சமுதாயத்தினால் விரும்பப்படாத பண்டங்களை வாங்குபவர்களிடமிருந்தோ இம்முறையின்கீழ் வரிவாங்க இயலாமையாம். மேலும், வருமானவரிகளைச் செலுத்தக் கூடிய, ஆனால், தனியாகத் திரட்டப்போகும் செலவளவு செலுத்தவியலாதவர்கள் சனசமுதாயத்திற் பலர் இருப்பார்கள். இதற்குக் காரணம், பெறக்கூடிய வரி எவ்வளவாயினும் அதைத் திரட்ட ஆகுஞ் செலவு அவ்வரிக்கு நிகராதலேயாம். ஆகையால், நேரில்வரிமுறையானது ஒரு வரியைச் செலுத்த வழிவகை உள்ளவர்களிடமும், நேர்வரிகளைச் செலுத்த ஆக்கமில்லாதவர்களிடமும் வருமானஞ் சேர்த்துக் கொள்ளும் ஒரு முறையாகும். வருமானவரிமுறை மட்டும் தகுதியற்றதென்று காட்ட மேலும் காரணங்களை எடுத்துக் காட்டுகிறவர்கள் இருப்பார்கள். பலர் வருமானவரிகளைப் பெரிய பாரமாக எண்ணும் பொழுது, நேரில்வரிகளைச் சில பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் செலுத்த வேண்டிய விலைகளாகக் கருதி இருக்கின்றனர். மேலும், அதிகவருமான வரிகளை இறுக்க அவை பெலவீனப்படவும் கூடும். இக்காரணங்களைக்கொண்டு, அரசாங்க வருமானம், நேர்வரிகளும், நேரில்வரிகளுமாகிய இரண்டு வழிகள்மூலம் திரட்டப்படும்.

அதனால் உண்டாகும் நட்டங்களைக் கருதாமல், நேரில் வரிகளிலிருந்து மிகப் பெரிய வருமானத்தை எதிர்பார்ப்பின், நேரில்வரிகளை இட மிகவும் நல்ல பண்டங்களாவன, விற்கும் அளவு குறையாது நிலையான ஆதாயத்தைத் தரக்கூடிய

கேள்வி மீள்தன்மையிலா வியல்புடைய பண்டங்கள் என்று தெளிவாக விளங்கும். அது எங்ஙனமாயினும், கேள்வி மீள்தன்மையிலா வியல்புடைய பண்டங்களுள் அடங்குவன அரிசியும், அதன் பிரதியீடுகளும் சீனியுமாகிய திரவியங்களாம். இப்பண்டங்களுக்காக ஒரு வரியை நியமித்தால், அதனுல் பிடிக்கப்படுகிறவர்கள் அவ்வளவு செல்வமுள்ளவர்கள் அன்று. அவர்கள் வறுமையுற்ற சனங்களாகும். இது இப்படியாவது, ஒருவன் வறுமையுற்ற அளவுக்குத் தன்னுடைய முழுச் செலவின் பெரியபங்கு உணவுகள் பொருட்டுச் செல்வதனுலேயாம். ஆகையால், இப்படியான வரியின் காரணமாக ஏழைகளினுடைய வாழ்க்கைச்செலவுகளே பெரிதாகக் கூடும். சமுதாயம் சார்பாகக் கருதும்பொழுது இப்படியான ஒரு வரி ஏற்றதல்ல. வரிகள் எடுக்கப்பட்ட திரவியங்களையாவது வேறு தேவையான பண்டங்களையாவது சேவைகளையாவது கைவிட நேரும். சமுதாயத்தில் ஏழைகளின் சௌக்கிய நிலைமையும் ஆற்றலும் குறையும். அரசியல் சார்பாகச் சமுதாயத்தில் பெரிய தொகையினருடைய பணம் உணவுக்காகச் செலவாகும் ஒரு நாட்டிலே இப்படியான ஒரு வரியை விதித்தல் சங்கடமாகும்.

வரி குறைந்தாலும், கூடினுலும் ஒவ்வொரு பண்டமாக அதைத் திரட்டுவதன் செலவு ஒரேநிகராகும். ஆகையால், திரட்டுவதற்குச் செல்லும் செலவை, இயன்றவளவு குறைத்துக் கொள்வதாயின், குறைந்தவொரு பண்டத்தின் பொருட்டு அதிகமான வரியொன்றை விதித்தல் முறையாகும். அது எங்ஙனமாயினும், கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மையை ஆலோசித்துப் பார்க்கும் பொழுதும் சமுதாயம் அரசியலும் பொருளியலுமாகிய அமிசங்களை யோசித்துப் பார்க்கும் பொழுதும் இதைச் செயற்படுத்தல் சங்கடமாகும்.

நாம் முன்னைக்கூறியதுபோல நேர்வரிகளையோ நேரில்வரிகளையோ விதிப்பதன் முக்கியமான காரணம், உயர்ந்த வருமானத்தைப் பெற மாத்திரமன்று. அங்ஙனமெனின், எம்மூலத் தொழில்கள் சார்பாக வரிகளை எடுக்கவேண்டும்? இதைத் தீர்க்கும்பொழுது மூன்று வரிமுறைகள் இருப்பதை நாம் அறிவோம். அவையாவன :—**விகிதசமம், விருத்திமுறை, தேய்வுமுறை** என்பனவாம். விகிதசமவரி முறையின்படி ஒவ்வொரு வரிசெலுத்துபவனுமே தன் ஆதாயத்தில் ஒரே நிகரான விகிதசமத்தைச் செலுத்துவான். விருத்திபெறும் வரி முறையின்படி செலுத்தும் வரியின் விகிதசமமானது ஆதாயம் அதிகரிக்கும்பொழுது அதிகரிக்கும். தேய்வுமுறை வரியின்படி, வரிசெலுத்துபவனுடைய ஆதாயம் அதிகரிக்கும் அளவுக்கு, அவன் வரியாகச் செலுத்தும் விகிதசமம் குறையும். உண்மையாக, இம்முறைகள் இரண்டினுலும், சில நேரத்தில் மூன்றுவது முறையைக் காட்டிலும் பணக்காரனுக்கு எதிர்பாராத முறையில் அதிகப்படியாக வரிகள் செலுத்த நேரிடும்.

ஆனுல், வரிமுறையின் நியாயம்பற்றி இதனுல் திருத்தியடையவியலாது. ஒரு வரிமுறையிற் பொதுவாகச் செலுத்தப்படும் பணவளவில் மட்டுமன்றி வரிகளைச் செலுத்துபவன் அதனுல் தாங்கும் உண்மைப் பொறுப்பையும் கருதித் தீர்மானிக்கவேண்டும். இங்ஙனம் பணக்காரன் வரிகளாகச் செலுத்தும் பத்து

ரூபாவுக்கும் நூறு ரூபாவுக்கும் மேலாக ஏழைகள் வரிகளாகச் செலுத்தும் ஒரு ரூபாவின் பொறுப்பானது, பட்சபாதமின்றி யோசிக்கும்பொழுது அதிக மாகவேயிருக்கும். ஒருவனுடைய பணவிலாபம் அதிகரிக்கும்பொழுது, முறை யாக அதிகரிக்கும் ஆதாயத்தின் எல்லைப் பயன்முறையாகக் குறைவதாலேயே இது இப்படி நிகழும். ஆகையால், வரிமுறையானது பொதுப்பட்டதாயின், உண்மைப் பொறுப்பை உணர்ந்து வரிகளை விதிக்கவேண்டும்.

உண்மைப் பொறுப்பைச் சாதாரணமாகப் பிரிக்கக்கூடிய மூன்று வழங்கல் முறைகளுள. அவையாவன **சமத்தியாகம் , விகிதசமத்தியாகம் , இழிவுத்தியா கம்** என்பனவாம். சமத்தியாகமென்ற மூலதருமத்தினால் கூறப்படுவது வரிகளைச் செலுத்துபவர்களிடையில் வரிகளின் உண்மைப் பொறுப்புச் சமமாக வேண்டு மென்பதேயாம். விகிதசமத்தியாகத்தின்படி ஒவ்வொரு வரி செலுத்துபவனு டைய உண்மைப் பொறுப்பும் அவன் தன் ஆதாயத்தினாற் பெறும் பொருளியல் அபிவிருத்திக்கு விகிதசமமாக வேண்டும். இழிவுத்தியாகமென்பதனாற் கூறப்படு வது, வரிகளைச் செலுத்துபவர்கள் மேல் ஒருங்கே ஒப்படைக்கப்படும் உண் மைப் பொறுப்பு இயன்றவளவு சிறிதாக வேண்டுமென்பதாம். இவற்றுள் மெய்ப் பாரத்தைத் தாங்கும் எம்மூலதருமத்தைக் கருதினாலும், வரிமுறையானது கிரம வரிமுறையாகும். விகிதசமத்தியாக முறையினால் சமத்தியாக முறையைக் காட்டிலும் கிரமமான வரிமுறையும் பெறப்படும்.

வரிமுறையைத் தியாக மூலதருமங்கள் சார்பாகத் தாபிக்கவேண்டுமென்ப தற்குப் பலர் இயைந்தாலும், அக்கொள்கையை மறுக்கிறவர்களும் இருப்பார் கள். வரிகளை விதிக்கு முன், வருவாய்ப் பங்கீடு சாதாரண மன்று என்றும் அது முழுச்சனத்தொகையினது பொருளியல் அபிவிருத்தியை ஏற்படுத்தும் மாதிரி யாகவில்லை யென்றும் அவர்கள் கூறுவர். ஒரு சனக்கூட்டத்தினுடைய பொரு ளியல் முன்னேற்றம் வரிமுறையின்மேல் மட்டும் தங்கியிருப்பதில்லையென்பதும், சனத்தொகையின் பொருளியல் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட சொத்துக்கள் பற்றிய சட்டங்களைப் போன்ற சகல சட்டங்கள் மேல்தங்கும் என் றும் அவர்கள் கூறுவார்கள். ஆகையால், வரிமுறையிலே தியாக மூலதரு மத்தை உபயோகிப்பதனால் ஒரு பயனில்லை. நியாயதிருத்தியை நிகராக்க எத் தனிக்கும் ஒரு வரிமுறையை ஏற்படுத்துதல் ஏற்றதென்று இவர்களுட் சிலர் கூறுவர். எங்ஙனமாயினும், சனத்தொகையினுடைய பொருளியல் நிலையை ஏற்றிவிடும் வரிமுறை மிகவும் தகுதியுள்ளதென்றால், அதை உண்மையாகவே அங்கீகரிக்கவியலும்.

அங்ஙனமாயின், ஏதாவதொரு ஆக்கப்பரிமாணத்தினால் பொதுப் பொருளியல் அபிவிருத்தியின் மேலான பிரமாணத்தைப் பெறக் கூடியவண்ணம் வருவாய்ப் பங்கீட்டின்மேல் வரிமுறை முகாமை செலுத்தல்வேண்டும். ஆதாயங்கள் எதிர் பாராவண்ணம் சமப் பிரமாணத்துக்குப் பங்கிட வேண்டுமென்பதைச் சிலர் கருதார். சிலருக்கு ஏனையோரைக் காட்டிலும் தம் ஆதாயங்களால் பெரிய

வொரு பொருளியல் அபிவிருத்தியைப் பெறவியலுமென்று அவர்கள் கூறுவார்கள். பிரித்தானியாவைப் போன்ற நாடுகளில் வருவாய்ப் பங்கீட்டின் சமனில் தன்மை சாதாரணமென்று காட்ட, இருபதாம் நூற்றாண்டிலுமே எழுந்தது ஒரு தருக்கம். இது மிகவும் செல்வம் படைத்தவர்கள் சுய ஆதாயத்தைப் பூரணமாகவே நுகர்வதில்லையென்பதும், அதன் பெரிய பங்கைச் சேமித்து முதலீடு செய்கிறபடியால் ஆக்கம் அதிகரிக்குமென்பதும் உண்மையாதலால், வரிகள் மூலம் படியால் ஆக்கம் அதிகரிக்குமென்பதும், உண்மையாதலால், வரிகள் மூலம் பணக்காரர்களுடைய ஆதாயங்களிலிருந்து ஒரு பங்கையெடுத்து ஏழைகளிடையில் பங்கிட்டுவிடலாம். அப்போது, அவை எல்லாம் நுகர்ச்சியாகுமாதலின், நாட்டு ஆதாயத்தினுல் பொருளியல் அபிவிருத்தியின் பொருட்டு முதலீடாகும் அளவு போதாமலிருக்கும், என்பது இத்தருக்கத்தினுல் புலனுகும். ஆனுல், உற்பத்தியாகும் ஆக்கப் பொருள்கள் நுகர்ச்சிக்கு அமையாதுவிடின், அவ்வுற்பத்திக்குச் செலவிடும் முதலீட்டினுல் யாதொரு பயனுமில்லை. மேலும், பொருளியல் மூலம் மிகவும் நன்ருக முன்னேற்றமடைந்த சமுதாயங்களில் சேமிப்நக்களுள் பெரிய பங்கு மிச்சமாவது ஆட்கள் மூலமன்று; பொதுத் தாபனங்கள் மூலமேயாம். ஆகையால், சிலருடைய பெரிய ஆதாயங்கள் பொருளியல் அபிவிருத்திக்குத் தேவையில்லாதபடியால். சமானமின்மைக்கு ஆதாரவையளிக்கும் பெரிய ஆதாயங்கள் சாதாரணமென்று கூறல் ஏற்றுக்கொள்ளப்படாது.

பொருளியல் சார்பாகப் பெரிதும் முன்னேற்றமடைந்த நாடுகளில், இன்று நிகழும் வருவாய்ப் பங்கீட்டின் சமமின்மையினுல் சமுதாயத்துக்கு மேலான பொருளியல் முன்னேற்றம் கிடைக்குமென்று கூறலும் சரியன்று. ஆகையால், ஆதாயங்களின் சமமின்மையைக் குறைக்கும் ஒரு வரிமுறையே சாதாரணமானது. ஆனுல், ஆதாய சமமின்மையைக் குறைக்கும்பொழுது, தைரியவீனமடையாதபடி காத்துக்கொள்ளல் வேண்டும். தேய்வான, விகிதசமமுள்ள அற்பவிருத்திமுறைகளின் ஒரு வரிமுறை மூலம் ஆதாய சமமின்மை குறையலாம். வரிமுறை அதிகமாக, விருத்தி முறையாகும் அளவுக்கே ஆதாய சமானமின்மையும் குறையும். விருத்தி முறையாகக் கூடிய மிகவும் முக்கியமான வரிகளுட் சில :— வருமானவரிகளும், **சந்ததிப்பேற்று வரிகளும் , சொத்து வரிகளும் ,** பெரும் போகத்திரவியங்களில் விதிக்கும் நேரில்வரிகளுமாம்.

பலவிதமான வரிமுறைகள், ஆக்கத்தின்மேல் பலவாறு முகாமை செலுத்தும். வருமானவரிகள் கூடினும், அவர்கள் மேலும் மேலும் முயல்வது, முன்போலவே செலவழிக்க ஓர் ஆதாயத்தைச் சம்பாதித்துக் கொள்வதற்கேயாம். நுட்பமாக வேலை செய்வதனுலும், அதிக நேரம் வேலை செய்வதனுலும் சிலருக்கு ஆதாயம் பெறவியலும். அது எங்ஙனமாயினும், எவ்வளவு அதிகமாக வேலை செய்தாலும், உத்தியோகங்களை உயர்த்துதலினுலன்றி ஆதாயம் வளராத உத்தியோகங்களுமுள. ஆனுல், தோட்டங்களைப் பயிரிடுதல், தையல், பின்னல் முதலிய மற்றைய வேலைகளில் ஈடுபடுதல், என்பனவற்ருல் பலருக்கு ஆதாயங்களை அதிகரிக்க இட

முண்டு. இப்படியான காரியங்களினால் கிடைக்கும் ஆக்கத்தை உற்பத்தியாளனே நுகர்ந்தால், விட்டுச்செலவு குறையுமென்பதை அவன் அறிவான். அது உண்மையாகவே ஆதாயத்தை அதிகரிப்பதாகும்.

வருமானவரிகளை அதிகரிக்கும்பொழுது, சிலர் தம் ஆதாயத்தை அதிகரிக்க எத்தனிப்பதில்லை. அவர்கள் அதற்குப் பதிலாகத் தாம் வாழும் முறையை மாற்றிக் கொள்ளுகிறார்கள் ; இன்றேல், யாதேனும் பணத்தைச் சேமிப்பதில்லை. அப்படியில்லாவிடின் இவ்விரண்டையும் செய்வார்கள். சிலருக்குச் சில பண்டங்களின் நுகர்ச்சியைக் குறைக்கவியலும். அப்படியில்லாவிடின், பூரணமாகவே நிறுத்தி விடவியலும். இப்பண்டங்களின் பிரதியீடுகளும் உபயோகத்துக்கு எடுக்கப்படும். அதிகம் வரிகளை விதித்தபின், அரசாங்கத்தினால் வரிசெலுத்துபவனுக்குத் தேவையான வைத்தியசேவையையும் கல்விச் சேவையையும் இலவசமாகக் கொடுக்கவியலும். சில சமயங்களில் வரி செலுத்துபவர்களுக்கு இவ்விதமாக உண்டாகும் பயன் அவர்கள் வருமான வரிகளாகச் செலுத்தும் பணவளவிலும் கூடாது இருக்கலாம். முன்னைக்காட்டிலும் செலவழிக்கப் பணம் இல்லாது குறைதல், ஆதாயத்தை அதிகரித்துக்கொள்ள இடமில்லாதபடியாலேயாம். சிலர் சில சமயங்களில், ஆதாயத்தை அதிகரிக்க எத்தனிப்பதில்லை. வரி செலுத்துபவன் அதிகமாக வேலைசெய்து சம்பாதிக்கும் ஆதாயத்தினால் வரிகளைச் செலுத்திப் பெறும் மிச்சத்தைக்காட்டிலும், ஓய்வு நேரத்தை மதிக்கிறபடியால் இது ஆகும். இவ்விதமான சமயங்களிலே விதிக்கும் அதிக வரிகளின் காரணமாக, ஆக்கம் குறைவதில்லை. ஆனால், நுகர்ச்சியின் விதம் மாறுகிறபடியால், ஆக்கத்தின் விதம் மாறும். அது எங்ஙனமாயினும், ஆக்கம் குறையும், அல்லது கூடும் விதத்தில் அரசாங்கம் அவ்வரியை அமைக்கவியலுமென்பதை அறிதல் வேண்டும்.

தனிமுயற்சியுள்ள பொருளியல் முறையிலாவது, அது முக்கியமாகும் முறையிலாவது அதிக வருமானவரிகளையெடுத்தால் ஆக்கத்தின்மேல் **சோர்வாக,** அல்லது தடையாக முகாமை செலுத்தப்படும். வருமானவரிகளை எடுப்பதிலே பெரும்பாலும் நிகழும் முறை கீழ்க்காணப்படும். ஒருவனுயைய ஆதாயம் முதலில் விலைமதிக்கப்படும். இது விலைமதிக்கும் ஆதாயமென்று சொல்லப்படும். அதன்பின், வருமானவரிச் சட்டத்தில் குறித்தபடி ஆதாயத்தின் ஒரு பாகம் வரியிலிருந்து விடுவிக்கப்படும். எஞ்சிய ஆதாயம் வரிகள் செலுத்தவேண்டிய ஆதாயமென்று வழங்கப்படும். இலங்கையிலெனின், வரிகளைச் செலுத்த வேண்டிய ஆதாயத்தின் முதல் 6000 ரூபாவுக்கு நூற்றுக்கு இருபது விதமும், முறையாகப் பின் அதிகரிக்கும் தொகைக்கு ஒரு வரியளவும் எடுக்கப்படும். இலங்கையில் வருமானவரி நூற்றுக்கு எண்பத்தைந்து விதம் வரை ஏறும். இங்கிலாந்தில் அதிகப்படியான வரியளவு ஒரு பவுணுக்கு 19 சிலினும் 6 பென்சுமாம். வேறு முறையிற் கூறின், ஒரு மட்டத்துக்கு மேலாக வரிகளைச் செலுத்துபவனுக்குத்தான் வைத்துக்கொள்ள உத்தாவையளிப்பது, சுய ஆதாயத்தின் 2½% மட்டுமே. அப்படியெனினும், அவனுடைய ஆதாயத்தின் ஓரளவிலே அவன் அதற்குக் குறைவான வரிகளைச் செலுத்துவான்.

முன்னைக் காட்டியதுபோல ஒரு விருத்திவரிமுறையினால் சிலர் அதிகப்படியான ஆக்கத்துக்குத் தூண்டப்படுவர். ஆனால், ஆதாயத்தைப் பெறுவது சிரமப்பட்டெனின், அதிகமான வரிகளின் காரணமாக ஆக்கமும் முயற்சியும் பலன்குன்ற இடமுண்டு. அப்படியில்லாவிடின், இங்கிலாந்தில் நடந்ததுபோல ஆதாயங்களை ஒழித்துக்கொள்ளும் வழிகளைப் பலர் கண்டு கொள்வர். அதிகமான வரிகளைவிதிக்கும் சமயங்களிலே வரி செலுத்துபவர்கள் ஆதாயத்தைப் பெருக்குதலைக் காட்டிலும் ஓய்வை விரும்பத்தொடங்குவர். மேலும், முயற்சியைக் குறைப்பதனால் அவர்களுக்கு நன்மை அதிகரிக்குமென்றும் கூறக் கூடும்.

ஒரு மட்டத்துக்கு மேலாக, வருமான வரியை அதிகரிக்கும்பொழுது, பலருடைய காரியங்கள் பெலவீனமடைதல் கூடும். அது எங்ஙனமாயினும் ஒவ்வொரு மனிதன் சார்பாகவும் இம்மட்டம் மாறும். பொதுவாகப் பார்த்தால், இம்மட்டம் பலர் ஏற்பதைக் காட்டிலும் மேலாக நிகழ்கின்றது. வரிமுறையின் கீழ்மட்டங்களிலெனின், வரிகளை அதிகரிப்பதனால் ஆதரவு அதிகரிக்கவோ, திமையுண்டாகாதிருக்கவோ இயலும். ஆக்கத்தின் வலுக் குறைவும் உண்டாகாதிருக்கலாம். தடையில்லா முயற்சிகளிலே விருத்தியான வரிமுறை விகிதசமவரி முறையைக் காட்டிலும் வலுக்குறைவுபடும் தன்மையுடையது. அப்படியே விகிதசம வரிமுறை, இழிவு வரிமுறையைக் காட்டிலும் வலுக்குறைக்கும் தன்மையுடையது. மேலும், ஒரு நேரில்வரி விதிப்பதை வாங்குகிறவன் அறிவானாயின், பண்டங்களில் ஒப்படைக்கும் வரிகள் கேள்வியின் மேல் பலமற்றனவாகும். ஒருவரி விதிக்க ஒரு பண்டத்துக்கு ஒருவன் செலவழிப்பது, தன் எல்லை வருமானத்தின் சிறிய பாகமாயின், அப்பொழுது அவ்வரி சொற்பமாகவே பலமில்லாதாகும். வாங்குகிறவன் தன் எல்லை வருமானத்தின் பெரியவளவைச் செலவழித்து, வாங்கும் ஒரு பண்டத்துக்கு வரியை விதித்தால், அவ்வரி பெரிதும் பலமில்லாதாகும்.

பண்டங்களில் ஒப்படைக்கும் நேரில்வரிகள் செலவுகளைக் குறைகக ஆதரவளிக்கும்பொழுது, வருமானவரிகளைச் சேமித்தல் தடுக்கப்படும். ஆதாயம் மிஞ்சுகிறபடியாலாவது, செலவிடுவதனாலாவது வருமானவரிகளின் காரணமாகச் சில சமயங்களில் சேமித்தல் குறையும். இது பொதுவாகச் சனங்களின் எதிர்காலத்தைப் பலியிட்டாவது வாழ்க்கைத் தத்துவத்தைக் காப்பாற்றிக் கொள்ள முயலுவதாலேயாம். சேமிக்கும் பணத்தைக் குவிக்காமல், சாதாரணமாக முதலீடு செய்தால், சேமிப்புக் குறைவு காரணமாக முதலீடும் குறைந்து போகும். இக்காரணத்தினால் எதிர்கால ஆக்கமும் குறையும். ஆனால், இதற்குப் பதிலாக அதிகரிக்கும் வரிகள்மூலம் அரசாங்கத்தில் முதலீடும் குறையவியலும்.

வரிகளை அதிகரித்தல், ஆக்கப் பிரமாணத்தின்மேல் இரண்டு காரணங்களைக் கொண்டு முகாமை செலுத்துவதை நாம் காணலாம். அவை, வரிகளின் மாதிரியும், வரிகளைச் செலுத்துபவர்களின் நிலைமையுமாகிய இரண்டுமாம். வரி பெறுதலை அற்பமாக அதிகரித்தால், அதனால் அதிகமான முகாமை செலுத்துதல்

ஆகாது. பெரிதளவு அதிகரித்தால் பெரிதளவு முகாமை செலுத்துதல் ஆகும். சில சமயம் இதனால் யாதேனும் முகாமை செலுத்துதல் ஆகாதும் போகும். ஆனால், வரி செலுத்துபவர்களின் தன்மைப்படியே இது நடைபெறும்.

வரிகளின் அதிகரிப்புக் காரணமாக ஒரு முகாமை செலுத்துதல் உண்டாவது, சேமிக்கவும் வேலைகளைச் செய்யவுமுள்ள விருப்பத்தின்மேலும் ஆக்கப்பிரமாணத்தின் மேலும் மாத்திரமன்று; வேலைகளைச் செய்யவும் சேமிக்கவுமுள்ள திறமையின் மேலுமாகும். வரிகளை விதித்தபின், சுகத்தைக் காப்பாற்றிக் கொள்ளுமளவு போதாத ஓராதாயம் மிஞ்சின், அவர்களிடமிருந்தும் வரிகளையெடுத்தால், அவர்களுடைய தொழிலாற்றல் குறைய, ஆக்கமும் குறைந்து போகும். மற்றைப்படி, சேவைகளும் நன்கொடைகளுமாக, சனங்களுக்கு அரசாங்கத்தினால் வசதிகள் கொடுக்கப்படுமாயின், உழைப்புக்கள் குறையாதாயினும் நாட்டில் ஆக்கம் அதிகரிக்கும். வரிகளின் அதிகரிப்புக்குப்பின், மனிதருக்கு உடற் சௌக்கியத்தையும் காரியத்திறமையையும் காப்பாற்றிக் கொள்ள வியலுவது, சேமிக்கும் பணத்தைக் குறைத்து விடுவதனால் மாத்திரமெனின், அதனால் ஆக்கத் தொழில்களும், தளர்ச்சியுறும். வேலைகளைச் செய்யவும் சேமிக்கவுமுள்ள திறமையின்மேல் வரிமுறையானது தடையாயிருப்பின், அது பெலவீனப்படுத்தும் வரிமுறையாகும்.

ஆனால், பொருளியல் சார்பாக மிகவும் முன்னேற்றமடைந்த சமுதாயங்களில், சனங்களின் சேமிப்புக்களின் பெரியவொரு பங்கு காக்கப்படுவது, பாதுகாப்புக் கம்பனிகள், கட்டடக் கம்பனிகள், பொதுசனத்தாபனங்கள் முதலியவை மூலமேயாம். தம் இலாபங்கள் எல்லாவற்றையும் பிரிக்காதிருக்கும் சில கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பனிகளாலும் சேமிப்புக்கள் செய்யப்படும். பொருளியல் மூலம் அத்துணை முன்னேற்றமடையாத இலங்கையைப் போன்ற நாடுகளில், பொதுச் சேமிப்புச் சிறக்காது எனினும், பிரித்தானியா, அமெரிக்க ஐக்கிய நாடுகளைப்போன்ற நாடுகளில் அது சிறந்துளது. அதிகமாக வரிகளை விதித்தல் இவ்விதமான தாபனங்களில் சேமிப்புக்கள் மேல் முகாமை செலுத்துவதற்கில்லை. இது இவ்விதமான தாபனங்களில் சேமிப்புக்கள் தனி நுகர்ச்சியோடு போட்டியிடாததினாலேயோம். பாதுகாப்புக்காகச் சேமிக்கும் இப்பணத்தை மேலான பலன் அடையும் வண்ணம் மறுபடி முதலீடு செய்தலைத் தவிர நுகர்ச்சிக்காகச் செலவழிப்பதில்லை. இவ்விதமான சமயங்களிலே அதிக வரிகளை இடுவதனால் இத்தாபனங்கள் புதிய முதலீடுகளை வற்புறுத்த, ஆக்கம் அதிகரிக்க இடமுண்டு.

நாம் முன் கண்டதுபோல, நேர்வரிகள் மிகுதலினால் ஆக்கத் தொழில்களின் மேல் முகாமை செலுத்தப்படுவது நுகர்ச்சியின் தன்மை மாறுவதனாலேயாம். ஒரு பண்டத்தின்மேல் ஒரு வரி விதிக்கப்பட்டால், (நேரில்வரி) அப்பண்டத்தின் பிரதியீடுகளின் கேள்வி அதிகரிக்கலாம். அப்படியில்லாது, முன் கூறிய பண்டத்தின் நுகர்ச்சி அப்படியேயிருக்குமாயின், ஏனைப் பண்டங்களின் நுகர்ச்சி குறையும். அது எங்ஙனமாயினும், பல பண்டங்களுக்குள்ள கேள்வி முழுவதுமே மீள்தன்மையியல் புள்ளபடியால், ஒரு பண்டத்தின்மேல் ஒரு வரியை நியமிக்க

அப்பண்டத்தின் ஆக்கவளவும் வாங்குமளவும் குறையும். வரியின் அளவும் கேள்வி நிரம்பல்களின் மீள்தன்மையின்படியே ஆகும். ஆகையால், தகுதியில்லை யென்று கருதப்படும் பண்டங்களின் பொதுசன நுகர்ச்சியைக் குறைக்கவும் வேறு சில பண்டங்களின் நுகர்ச்சியை அதிகரிக்கவும் வரிகள் மூலம் இயலும். இவ்விதம் இறக்குமதிப் பண்டங்கள் நுகர்ச்சியைக் குறைத்து, நாட்டுப் பண்டங் களின் நுகர்ச்சியைக் கூட்டுதலை ஓர் அரசாங்கம் செய்யவியலும். இதை உதாரணத்தாற் காட்டலாம். இலங்கையில் பாற்கட்டி ஆக்கத்துக்கு ஆதரவளிப் பது அரசாங்கத்தின் ஒரு கருத்தென்று கொள்வோம். இலங்கையில் உற்பத்தி செய்த பாற்கட்டிகள் வெளிநாட்டுப் பாற்கட்டி வகைகளோடு பண்பில் நிகர்க்கி னும் அவ்வெளி நாட்டுப் பாற்கட்டிகளும் நாட்டுப் பாற்கட்டிகளுமாகிய இரண்டி னிடையிலுள்ள போட்டி காரணமாக, இலங்கைப் பாற்கட்டியாக்கத்துக்கு இலாபமில்லாதவளவுக்குப் பாற்கட்டிச் சந்தை சிறுக்க இடமுண்டு. இரண்டு அவுன்சு கொண்ட இறக்குமதி செய்த ஒருபாற்கட்டித் துண்டின் விலை 70 சத மாகுமென்று கொள்வோம். இலங்கைப் பாற்கட்டியும் அப்படியே நல்லதாயினும், போட்டிக்காக இதன் விலையை 70 சதத்துக்கு மேல் அதிகரிக்க முடியாது. இலங்கையிற் பாற்கட்டியின் விலை வெளிநாட்டுப் பாற்கட்டியின் விலைக்கு நிகரா னுலும், அப்படியின்றிச் சிறிது குறைந்தாலும் சிலர் வெளிநாட்டுப் பாற்கட்டி யையே வாங்க விரும்புவது, பாற்கட்டிகள் முழுவதுமே ஒரே மாதிரியான திர வியமாகாத படியாலும் இலங்கைப் பாற்கட்டி பிற பாற்கட்டியளவு தன்மையில் உயர்ச்சியடையாது போனல், அது பெரிதும் தாழ்நிலையை யடையும். அது எங்ஙனமாயினும், ஒரு காலத்துக்குள்ளே, ஆக்கத்தொழில்களை இலாபத்தோடு கொண்டு செல்வதற்கு இலங்கை உற்பத்தியாளர் எழுபது சதக் கணக்கில் 10,000 பாற் கட்டிகளை விற்க வேண்டும். அப்படி இருக்கையில், வெளி நாட்டுப் போட்டியின் காரணமாக, அவர்கள் உண்மையாகவே 5,000 பாட்பட்டி களை விற்பார்கள். அப்படியெனின், இலங்கையில் உற்பத்தியாளர்களுக்குப் பாற் கட்டி ஆக்கத்தைக் கொண்டு நடாத்தவியலாது என்பது வெளிப்படை. வெளி நாட்டுப் போட்டியைக் குறைக்கும்பொழுதோ, முழுவதுமே அழிக்கும் பொழுதோ, இலங்கையில் உற்பத்தி செய்த பாற்கட்டியின் விலை 10,000 துண்டு கள் வரை, அதற்குக் குறைந்து இருப்பின், வெளிநாட்டுப் பாற் கட்டியை இறக்குமதி செய்தல் முழுவதுமே நின்றுவிடும். இது நாட்டு நன்மையின் சார் பாக விரும்பப்படும். அப்பொழுது, இலங்கையில் இந்தப் புதிய தொழில், நிலை நாட்டப்படும். இதிலுள்ள ஒரோயொரு நட்டமென்ன எனின், இலங்கைப் பாற் கட்டியை நுகர்வோனுக்கு வேறு பாற்கட்டிகளை நுகரவியலாது. இப்படியான வொரு நேரத்தில், வெளிநாட்டுப் போட்டியைக் குறைப்பது, வெளிநாட்டுப் பாற் கட்டி இறக்குமதியில் மதிக்கத்தக்க அளவு அதிகமான தீர்வையை இடுவதனுலே யாம். அப்பொழுது, நுகர்வோர் நாட்டுப் பாற்கட்டியை உபயோகிக்கத் தொடங் குவர்.

அது எங்ஙனமாயினும், ஒரு நாட்டில் சருவதேச வியாபாரத்தை ஒழுங்கு படுத்தவுள்ள ஒரேயொருமுறை இந்த ஏற்றுமதி-இறக்மதித் தீர்வைமுறை மட்டு மன்று. ஒரு பிரமாணத்திற்கு மேல் ஒரு பண்டத்தை இறக்குமதி செய்ய உத்

தரவையளிக்காமலிருக்க ஓரசாங்கத்துக்கு இயலும். இதனுலுள்ள இலாபமென்னெனின், வரியளவை நியமிக்கும்பொழுது, அது கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மையைக் கருதி நேரிடாது. மேலும். அரசாங்கத்துக்கு ஒரு பண்டத்தை ஏற்றுமதியாவது இறக்குமதியாவது செய்வதற்கும் தனியதிகாரம் பெற்றுக் கொள்ளவியலும்.

ஒரு பண்டத்தின் உற்பத்தியாளருக்கோ நுகர்வோருக்கோ உதவிப்பணம் கொடுத்து அப்பண்டங்களையாக்குவதற்கு ஆதரவளிக்க அரசாங்கத்துக்கு இயலும். உதவிப் பணமூலம் ஆக்கப் பிரமாணத்தை அதிகரிக்கவும் நுகர்வோனுக்கு விலையைக் குறைத்துவிடவும் இயலும். இவ்விரண்டையும் செய்யக்கூடிய அளவானது, கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மைமேல் தங்கியிருக்கின்றது. கேள்வி, மீள்தன்மையிலா வியல்புடையதாயின், உதவிப் பணத்தின் முகாமை செலுத்துதல் பெரும்பான்மையும் உண்டாவது, வாங்கும் பிரமாணத்தைக் காட்டிலும் விலையின் மேலேயாகும். இச்சமயத்திலே உதவிப் பணம் அப்பண்டத்தின் ஆக்கத்தையதிகரிக்க அவ்வளவு ஆதரவளிப்பதில்லை. ஆனுல், கேள்வி மீள்தன்மையுடையதாயின், இதற்கு முரண்பாடான ப்பயன் கிடைக்கும். சில நாடுகள் தம் ஏற்றுமதி வியாபாரத்தைப் பெருக்குவதற்காகவே உதவிப் பணத்தைக் கொடுக்கின்றன.

மேலும், அரசாங்கமும் ஏனைப் பொதுத் தாபனங்களும் பொதுச் சொத்துக்கள், பொதுத் தொழில்கள் என்பவற்றிலிருந்து ஓராதாயத்தையும் பெறுகின்றன. இவற்றுள் சிலவற்றிலிருந்து கிடைக்கும் இலாபம் பொதுத் தாபனத்தின் ஓராதாயமெனவும். நட்டம் ஒரு செலவெனவும் எண்ணப்படும். வேறு பொதுச் சொத்துக்களும் தொழில்களும் அரசாங்க வரவு செலவு அட்டவணையில் இல்லை.

இப்பொதுத் தொழில்கள் அரசாங்க வரவு செலவு அட்டவணையோடு தொடர்ந்தாலும் தொடராவிட்டாலும், இவற்றின் விலைக் கொள்கைகள் ஆக்கத்தின் மேலும் வருவாய்ப் பங்கீட்டின் மேலும் முக்கியமாக முகாமை செலுத்தும், முன் கூறிய விலை, இலாபங் கிடைக்கும் வண்ணமாவது, செலவுகளைத் தீர்க்கும் வண்ணமாவது நியமிக்கப்படும் என்பதை அறிந்து கொண்டோம். பொதுத் தொழில் மூலம் உண்டாகும் நட்டங்கள் வரிகளால் தீர்க்கப்படுவதனுல், அத்தொழிலிலிருந்து உதவிப் பணத்தைப் பெறும் ஒரு பண்டமோ சேவையோ உற்பத்தி செய்யப்படும். அப்பொழுது இச்சேவையை, அல்லது பண்டத்தை வாங்குவோர்க்கு வருவாய்ப் பங்கீட்டு மாற்றத்தின் பயன் கிடைக்கும். பொதுத் தொழிலிலிருந்து ஓரிலாபத்தைப் பெறுதல் முன்கூறிய பண்டத்தையோ, சேவையையோ வாங்குகிறவர்களிடமிருந்து எடுக்கப்படும் வரிக்கு நிகராகும். இவ்வண்ணம், பொதுத் தாபனத்துக்கு அதன் பொதுச் சொத்துக்களிலிருந்தோ, தொழில்களிலிருந்தோ இலாபம் பெறல், வரிகளையெடுப்பதன் ஒரு வழியெனவும், அப்பண்டத்தின் நுகர்ச்சியைத் தைரியப்படுத்துவது, அல்லது தைரியவீனப்படுத்துவது ஒரு வழியெனவும், வருவாய்ப் பங்கீட்டை மாற்றி விடும் ஒரு வழியெனவும் விளங்கும்.

ஓர் அரசாங்கம சம்பாதிக்கும் சில சேவைகளுக்கோ, பண்டங்களுக்கோ வேதனங்களைத் திரட்டல் மிகவும் சங்கடமாகும். உதாரணமாக, பொதுப் பாதைகளில் போக்குவரத்துக்கு வேதனம் விதித்தல் சங்கடமென்று காட்டலாம். ஆகையால், அப்பாதைகளிற் பிரயாணஞ் செய்கிறவர்களிடமிருந்து வரிபெறுமல், பாதைகளை அமைத்தலினுல் வருஞ் செலவுகள் சாதாரணவரிகள் மூலம் சம்பாதிக்கப்படும். பொதுவில் சம்பாதிக்கப்படும் பண்டத்தினுலோ, சேவையினுலோ பெரியவொரு வருமானந் திரட்டக் கருதும் பொழுது; பல சமயங்களில் அரசுகள் அப்பொதுத் தொழில்களைத் தனியுரிமையாளனைப் போலத் தம் கையேற்கின்றன.

சில சேவைகள் இலவசமாகவோ, பெரும்பான்மையும் சிறு செலவிலோ அரசாங்கத்தினுல் செய்யப்படின், அதனுல் பிரயோசனத்தையெடுக்க அரசாங்கம் ஆக்கத்தை வேறுவழிப்படுத்த வியலும். செலவுக் குறைவாக அரசாங்கம் புகையிரத சேவையைச் செய்தால், ஆக்கத்தொழில்களிலிருந்து பெரும் ஆதாயத்தைப் புகையிரதப்பாதைகளுக்கு வழிப்படுத்தவியலும். கார் திருத்துந் தொழிலும், நிலவெண்ணெய்த் தொழிலும் குறையும் பொழுது, புகையிரத வழிகள் சார்பாகவுள்ள தொழில்கள் அதிகம் முன்னேற்றமடையும். மற்றைப்படி, அரசாங்கத்துக்குப் புகையிரத வழி மூலம் இலாபம் பெறுதற்குத் தேவையான புகையிரதப் போக்கு வரத்து அதிகரித்தால், தெருவால் பிரயாணஞ் செய்தல் இலாபமெனக் கருதித் தெருப் போக்குவரத்து அதிகரிக்கும். அப்பொழுது ஆக்கப் பொருள்கள் புகையிரத வழிகளிலிருந்து தெருவழிகளுக்கு மாறும்.

அரசாங்கம் ஆதாயங்களைப் பெறும் வழிகளையும் அவ்வாதாயங்களைப் பெறுவதில் ஆக்கம் வருவாய் பங்கீடு முதலியவற்றின்மேலுண்டாகும் முகாமையையும் நாம் இதுவரை ஆய்ந்து பார்த்தோம். இப்பொழுது, பொதுச் செலவின் மாதிரியையும், இச்செலவிடு, ஆக்கத்தின் மேலும், வருவாய்ப் பங்கீட்டின் மேலும் முகாமை செலுத்தும் வண்ணத்தையும் ஆய்ந்து பார்ப்போம்.

நாம் முன் கண்டதுபோல, சில இலட்சியங்களின் பொருட்டே பொதுச் செலவுகள் செய்யப்படும். உள்நாட்டுச் சமாதானத்தைக் காப்பாற்றுதலும் வெளிநாட்டு ஆபத்துக்களிலிருந்து நாட்டைக் காப்பாற்றுதலும் இவற்றுள் அடங்கும். ஓரளவான செலவுகளைத் தாங்குவது, பொது சனங்களின் உடனலத்தைப் போன்று, குடிகளின் அபிவிருத்திக்காகச் சேவைகளையும் நன்மைகளையும் வசதிகளையும் செய்வதற்கேயாம். இச்சேவைகளின் வழங்கல் ஆக்கத் தொழில்கள்மேல் முகாமை செலுத்தும். ஆனுல், எப்பொழுதும் பொதுசனங்கள் தனி முயற்சியினுல் இவற்றைப் பெற்றுக்கொள்ள இயலாது. புது நாடுகளில் பொதுச் சுகாதாரத்தைக் காப்பாற்றச் செய்யும் கடினமான முயற்சியினுல் இது நன்கு விளங்கும். தனிச் செலவினுல் பலருக்குக் கைகொடுக்கவியலாத விலைமதிப்புள்ள பொருள்களைப் பொதுச் செலவினுல் சகல குடிசனங்களின் உபயோகத்துக்கும் அமைக்கவியலும். உதாரணமாக, படமாளிகைகளையும், புத்தகசாலைகளையும், பூஞ்சோலைகளையும் குடிசனங்களின் விருத்திக்கு அமைக்கக்கூடிய வேறு

பொருள்களையும் காட்டலாம். சமுதாய சேவைகளைச் சம்பாதிக்கவும், தொழில் களினதும் வர்த்தகத்தினதும் வேறு பொருளியற் காரியங்களினதும் அபி விருத்தியை உண்டாக்குவதற்கு ஓரரசாங்கம் செலவுகளைத் தாங்குகின்றது. இச் சகல காரியங்களில் ஈடுபடுகிறவர்களுடைய (அரசாங்க அலுவலாளர்களுடைய) சம்பளங்களையும் அரசாங்கம் செலுத்தவேண்டும். இவ்வண்ணம், ஓரரசாங்கம் பல இலட்சியங்களைக் குறித்துப் பணஞ் செலவழிக்கும்.

ஓரரசாங்கஞ் செய்யும் பொதுச் செலவுகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கவிய லும். அவை மெய்ச் செலவுகளும் கைம்மாற்றமுறைச் செலவுகளுமாம். மெய்ச் செலவு உண்டாவது. வேறு தொழில்களுக்கு அமைக்கக் கூடிய பண்டங்களையும் சேவைகளையும் அரசாங்கத் தொழில்களில் அமைத்துக் கொள்வதனுலேயாம். இங்ஙனம், கல்விக்காகவும் ஊர்க்காவலர்ச் சேவைக்காகவும் செய்யும் செலவு மெய்ச்செலவாகும். கைம்மாற்ற முறைச் செலவெனின், ஒருவனிடமிருந்து வேருெருவனுக்குப் பண்டங்களையும் சேவைகளையும் நுகரும் அதிகாரத்தை ஒப் படைத்தலாகும். இளைப்பாறற் சம்பளத்தையளித்தல் கைம்மாற்றமுறைச் செல வுக்கு உதாரணமாகும்.

பொதுச் செலவுகளை, நன்கொடைகளாகவும் கொள்வனவு விலைகளாகவும் பிரிக் கலாம். அரசாங்கஞ் சார்பாகத் தன் அலுவலாளர்க்குக் கொடுக்கும் சம்பளத் தைப் போன்ற யாதாவதொரு செலவு கொள்வனவு விலையாகும். இது, அரசாங் கம் அவ்விலை மூலம் அவர்களுடைய சேவையைப் பெற்றுக் கொள்வதனுலேயாம். இளைப்பாற்றற் சம்பளம் பெறுதலும், இலவச வைத்தியச் சேவையையோ, இல வசக் கல்விச்சேவையையோ பெறுதலும் நன்கொடைகளாகும். அவற்றைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களிடமிருந்து மறுபடியும் வேதனத்தையோ, சேவை யையோ அரசாங்கம் எதிர்பாராது.

நேர் நன்கொடைகள் உண்டாவது, முழுப்பலனும் நன்கொடையை நேரே பெறுகிறவன் கையில் மிஞ்சியிருக்கும்பொழுதேயாம். நன்கொடையானது நேரில் நன்கொடையாவது, அதன் பலன் முழுதுமோ பாதியோ அதை நேரே பெறு கிறவனிடமிருந்து வேருெருவனுக்கு ஒப்படைக்கப்பட்டாலேயாம். இளைப்பாற் றற் சம்பளம் நேர் வேதனமாகும். ஒரு தனித் தொழிலுக்குக் கொடுக்கும் உத விப்பணம் நேர் நன்கொடையாவது. அதனுல் முயற்சியாளனுடைய இலாபம் அதிகரித்தாலேயாம். அதனுல் நுகர்வோருக்கு அத்தொழில், பண்டத்தின் விலை குறைந்தாலோ, அத்தொழிலின் வேலையாளர்களுக்குச் சம்பளம் கூடினுலோ, அது நேரில் நன்கொடையாகும். நன்கொடைப் படுகை இறைபடுகைக்கு நிகரா கும். நேர் நன்கொடையின் பலன் முழுதுமே நன்கொடையைப் பெறுகிறவனுக் குக் கிடைக்கும். நேரில் நன்கொடையாகிய தொழில் உதவிப்பணத்தின் அடைவு விற்கிறவனுக்கும் வாங்குகிறவனுக்குமிடையில் பிரிபடுவது, ஆக்கத்துக்குள்ள கேள்வியினதும் நிரம்பலினதும் மீள்தன்மைப்படியேயாம்.

நன்கொடைகளைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர் யார் என்பதைத் தீர் மானிக்கையில், மிகவும் நல்ல முறையில் மேலான பொருளியற் பலன் இடைக் கும் வண்ணம் நன்கொடைகளைப் பிரிக்கலாம். உண்மையாகவே, ஒரு பரிபாலக

னுடைய நிலையில் பார்க்கும்பொழுது தகுந்த நன்கொடைகளைப் பிரித்து விடுதல் சுலபமாகும். ஆனால், அவற்றிலிருந்து கிடைக்கும் பலன் தவறக்கூடும். ஒரு விதமான நன்கொடையானது பயன் பக்கத்தில் விகிதசமமாகவும் விருத்திமுறையாகவும் தேய்வாகவும் இயலும். **பொதுவான படுகடன்களின்** வட்டியைத் தீர்த்துவிடல் ஒரு தேய்வு நன்கொடையாகும். விகிதசமமும் விருத்திமுறையும் சொற்பமான தேய்வும் எனப்படும் நன்கொடை முறைகளினால், ஆதாயங்களின் சமமின்மை குறையும். அப்பொழுது, நன்கொடை முறை தேய்வாகும் அளவுக்கே ஆதாயங்களின் சமமின்மை அதிகரிக்கும். விருத்தி முறையான நன்கொடையளவு வரையறுக்கப்படுவதனால் ஆக்கம் குறைய இடமுண்டு.

வருவாய்ப் பங்கீட்டின்மேல் நன்கொடைகள் முகாமை செலுத்துவது இந்த நன்கொடைகள் ஆட்களினுடைய வேலை செய்தல், சேமிப்பு என்பனவற்றின் மேல் முகாமை செலுத்தும் அளவுக்கேயாம். கல்வி, சுகாதார சேவை முதலியன மூலம் சனங்களுக்கு முன்னைக் காட்டிலும் உழைப்புப் பெறக் கூடும். அதனால், இவ்வழியிலும் நன்கொடைபற்றிய வருவாய்ப் பங்கீடு மாற்றப்படும். நன்கொடைகளிலே ஆராயவேண்டியது, அவற்றால் மேலான பொருளியல் அபிவிருத்தி கிடைக்குமா, என்பதேயாம். ஒரு நன்கொடையை அதிகரிக்க வேண்டுமோ, குறைக்கவேண்டுமோ என்பதை ஆராய்ந்து பார்ப்பது. அந் நன்கொடையைச் சிறிது அதிகப்படுத்தினால் உண்டாகும் பொருளியற் பயனை அதன் செலவோடு ஒத்துப் பார்ப்பதனாலேயாம்.

பொதுச் செலவுகள் கருத்தோடு செய்யப்படின், நாட்டில் ஆக்கம் அதிகரிக்கும். கல்வியினாலும் சுகாதார சேவையினாலும் வேறு வழிகளினாலும் சனங்களினுடைய காரியக்கெட்டி அதிகரிப்பதனால் ஆக்கத்தை அதிகரிக்கவியலும். உதவிப் பணத்தினாலோ, அரசாங்க வருமானத்தைப் பலவிதமான தொழில்களில் முதலீடு செய்வதனாலோ, நாட்டில் முதலீடு பற்றிய செயல்களுக்கு ஆதரவு அளிக்கவியலும். இதனால், நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் ஆக்கத்தை அதிகரிக்கவியலும். சிறப்பாக, பிரயாணம் நீர்ப்பாய்ச்சல் தொழில்கள் மூலம் இது சாலும். இதற்காக இடும் செலவு மிகுதியானபடியாலும் இம்முதலீடுகளினால் முழுச் சனத்தொகைக்கு உண்டாகும் நன்மை பெரிதாயினும், இதனால் தனி முதலீட்டுக்குப் பயனுண்டாதல் சந்தேகப்படத்தக்கதாகும்.

அரசாங்க முதலீடுகள்மூலம் பொருளியல் இறக்கங்களையும் ஏற்றங்களையும் சமமாக்கவியலும். இறக்கமுள்ள ஆண்டுகளிலே, அரசாங்கத்துக்கு முதலீட்டுத் தொழில்களை ஆரம்பிக்கவுமியலும். செழிப்பான காலங்களிலே அம்முதலீட்டுத் தொழில்களை நிறுத்திவிடவியலும். கெடுதிக்கோ, எதற்கோ, பொதுத் தாபனங்கள் இதற்கு முரணான செயல்களையும் செய்கின்றன. இறக்கமுள்ள ஆண்டுகளிலே, பொதுத் தாபனங்களில் ஆதாயம் குறையும்பொழுது செழிப்பான ஆண்டுகளிலே வரிகளும் வேறு வழிகள் மூலம் ஆதாயமும் கூடுவதனால் இது இப்படி ஆகின்றது. வியாபார இறக்கமுள்ள வருடங்களிலே, பள்ளிக்கூடங் கட்டல், தொழிற்சாலைகள் அமைத்தல் முதலியவற்றிற்கு முதலீட்டைச் செய்

தால், பல சனங்களுக்கு உழைப்புக் கிடைக்கும் ; வியாபாரம் முன்னேற்றமடையும். இவ்வுழைப்புக்களில் ஈடுபடுவோர், வியாபாரிகளிடமிருந்து மேலும் மேலும் பண்டங்களையும் சேவைகளையும் வாங்கும்பொழுது அவ்வியாபாரிகளும் முன் கூறியவற்றை ஆக்குகிறவர்களிடமிருந்து அதிகமாகப் பண்டங்களையும் சேவைகளையும் வாங்குவார்கள். இங்ஙனம் இவர்களுக்கு முன்னைக் காட்டிலும் பெரிய ஆதாயம் கிடைக்கும். இவர்கள் அதைச் செலவழித்தால், ஏனையோரின் ஆதாயமும் அதிகரித்தல் கூடும். முதலீட்டு வேலை முறையினால், முதலீட்டைச் செய்த தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களைக் காட்டிலும் ஒரு பெரும் சனத்தொகை பயனைப் பெறும். இறக்கமுள்ள காலங்களிலே செய்யப்படும் முதலீடுகளால் இன்னுமோர் இலாபமிருக்கின்றது. அதாவது, சிரம விலையும் பண்ட விலையும் மிகவும் கீழான மட்டத்திலே இருப்பதாம். ஆனால், அவ்விதமான காலத்திலே தொடங்கிய தொழில்கள் ஆக்கக் காரியங்களைத் தொடங்கும் பொழுது நல்லவொரு விற்பனையளவைக் காத்திருக்க முடியாது.

எங்ஙனமாயினும், சில நாடுகளில் இவ்விதமான முதலீடுகள் மூலம் நட்டங்களுமுண்டாகும். இலங்கை சார்பாக எண்ணும்போது இது உண்மையாகும். இறக்கமுள்ளவொரு காலத்திலே ஒரு முதலீட்டு வேலை ஏற்பாட்டினால் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கள் கிடைப்பது உண்மையாகும். ஆனால், அத்தொழிலாளர் தம் ஆதாயத்தைச் செலவழிக்கும்பொழுது அதனால் இலங்கையில் செல்வமான நிலைமைக்கு அவ்வளவு இடமிருக்காது. முன்கூறிய தொழிலாளர்களின் பணம் சிறப்பாக உணவுப் பொருள்களைப்போன்ற இறக்குமதிப் பண்டங்களுக்குச் செலவிடுகிறபடியாற்றான் இது இப்படியாகும். விற்கும் பண்டம் இறக்குமதிப் பண்டமானாலும் நாட்டுப் பண்டமானாலும் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைப்பது திண்ணம். ஆனால், புதிதாக உழைப்பைப் பெறுகிறவன் வெளிநாட்டரிசி, உப்பு, மிளகாய் முதலியன வாங்குவானெனின், அதனால் இலங்கையானது இந்த வெளிநாட்டுப் பண்டங்களுக்காக அனுப்ப, வெளிநாட்டுப் பணத்தைத் தேடவேண்டும். எனின், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல் மூலம் சங்கடங்களுண்டாகும்.

நன்கொடைகளின் பயன்களைப் பெறுகிறவர்களின் ஆற்றல் அதிகரிக்குமாயின், வேலை செய்யவும் சேமிக்கவும் அவர்களுக்குள்ள வேட்கை அதிகரிக்கும். நன்கொடைகளின் காரணமாகப் பிணி, மூப்பு முதலியவற்றைப்பற்றியுள்ள நிலையாத தன்மை குறைந்தால், வேலை செய்யவும் சேமிக்கவுமுள்ள திறமைக்கும் ஆக்கத்துக்கும் ஓராதரவு கிடைக்கும். சமுதாய சம்பந்தமான, பொருளியல் சம்பந்தமான பிரயோசனமுள்ள பண்டங்களும் சேவைகளும் மிகவும் உற்பத்தியாக இடம் உண்டு. வேறு சில பண்டங்களினதும், சேவைகளினதும் ஆக்கத்தைக் குறைக்க இயலுவது நன்கொடைகள் மூலமேயாம். உதவிப் பணமூலம் ஏற்றுமதிகளை அதிகரிக்கவும், ஒருவகையான ஆக்கங்களை அதிகரித்து அவ்விறக்குமதிப் பண்டங்களோடு போட்டியிடவும் இயலும்.

நன்கொடைகளின் மேலான பொருளியற் பயனைப் பெறுதற்கெனின், நன்கொடைகளைப் பணமாகக் கொடுக்காமல், அவற்றின் கருத்து நிறைவேறும் வண்ணம், அவற்றைச் சேவைகள் மூலமாவது பண்டங்கள் மூலமாவது கொடுத்தல் ஏற்றதாகும். குழந்தைகளுக்குக் குறைந்த விலைக்கு, அல்லது இலவசமாகப் பால் கொடுத்தல், அதன் விலைக்கு நிகரான பணத்தைப் பெற்றோருக்குக் கொடுத்தலைக் காட்டிலும் உவந்ததாகும். இது, அப்பணத்தைப் பெற்றோர் வேறு பொருளுக்குச் செலவழிக்கக்கூடுமாதலாலேயாம். பொது சனங்களுக்குத் தேவையான பண்டங்களினாலும் சேவைகளினாலும் அதிகப்படியான பிரயோசனங்களைப் பெற ஆதாவளித்தால், பொதுசனங்களுடைய திறமையை மேலும் மேலும் அதிகரித்துக் கொள்ளவியலும். ஆகையால், முன்கூறிய சேவைகளை மிகவும் குறைந்த விலைக்கோ, இலவசமாகவோ கொடுத்தல் விரும்பத் தகுந்ததாகும். சிலர் தேவையான அளவுக்குமேல் இப்பண்டங்களையோ சேவைகளையோ நுகர்வதனால், மேலான பொருளியற் பயனைப் பெறாமல் சம்பத்துக்கள் அழிந்து போவதன் அபாயத்துக்கு ஆளாகின்றனர். மற்றைப்படி, கெடுதியைத் தவிர்க்க ஓரளவு பரிபாலனமுறையை அமைக்க வேண்டும். கெடுதியை நீக்கி, கடினமான ஒரு பரிபாலனம் இல்லாமல், ஒரு பண்டத்தையோ, சேவையையோ இலவசமாகப் பெறவியலுவது, அப்பண்டத்தினதும் சேவையினதும் கேள்வி முழுவதும் மீள்தன்மையிலாவியல்புடைமையினாலேயாம். கல்விச் சேவை இவ்வகையான ஒரு சேவையாகும். இங்ஙனம், வரிமுறை, பொதுச் செலவு, ஆகிய இரண்டினாலும் ஆக்கச் சார்பாகவும் பொருளியல் சார்பாகவும் விரும்பத்தக்க வழிகளில் அமைக்கவியலும்.

கடன் எடுப்பதனால் அரசாங்கத்துக்கோ, பொதுத்தாபனத்துக்கோ அதன் ஆதாயத்தை அதிகரித்துக் கொள்ள இயலுமென்பதை நாம் முன்னர்க் கூறினோம். பொதுவிற் கடன் எடுப்பதன் பொருளியற் பயன்களை நாம் இப்பொழுது விரித்துரைப்போம். கடன் எடுப்பதனால் வரவுக்கு ஒரு தொகை சேருமாயினும் வருவாய் அதிகரிப்பதில்லை. கடனுக்கெடுத்த பணமும் வட்டியும் கடன் தீர்க்கும் காலம் வரும்பொழுது, பொதுச் செலவின் ஒருபாகமாகிவிடும். பல அரசுகள் கடன்படுவது போர்ச் செயல்களாலேயாம். அக்கடனுக்கு நிகரான சொத்து அரசுகளிடம் இல்லை. ஆனால், மாகாணத்தாபனங்கள் கடன் பணமெடுப்பது மாகாணப் பொருள் பண்டங்களை அபிவிருத்திசெய்யும் பொருட்டாதலால், கடன்பணத்துக்கு நிகராகும் சொத்துக்கள் அத்தாபனங்களுக்குண்டு.

சாதாரண கடனெடுத்தல், தன்னிச்சையானது, அல்லது இச்சையில்லாதது என ஒருவகைப்படும். இச்சையில் கடனெடுத்தலைப் புதிய அரசுகள் பெரும்பான்மையில் உபயோகிப்பதில்லை. உண்மையாகவே, அது வரிவிதிப்பை நிகருமாதலாலேயாம். இச்சையான கடன் கொடுத்தலைச் சனங்கள் விரும்பிய அளவு செய்யவியலும். அப்படியானவொன்று கடனெடுக்கும் அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும் பிரதேசத்திலுள்ள சனங்களிடமிருந்தோ, தாபனங்களிட

மிருந்தோ, திரட்டப்படுமாயின் அது உட்கடனுகும். அப்படியான வொன்று வெளிக்கடன் பணமாவது, தன் பாலனத்துக்கு அகப்படாத பிரதேசங்களில் தாபனங்களிலிருந்தோ, சனங்களிடமிருந்தோ திரட்டப்படுமாயின் என்க. உட்கடனெடுப்பதனுல் நடைபெறுவது அப்பிரதேசத்தில் ஒரு கைம்மாற்ற முறை உண்டாதலேயாம். வெளிக்கடன் பணத்தினுல் நடைபெறுவது, கடன்பணத்தைக் கொடுக்கும் நாட்டிலிருந்து, எடுக்கும் நாட்டுக்குப் பணம் கைம்மாற்ற மாதலாலும் மறுபடி பணத்தையும் வட்டியையும் தீர்க்கும்பொழுது கடனைக் கொடுத்த நாட்டுக்குப் பணம் கைம்மாற்றமாதலாலுமாம். புறத்தேசத்தவருக்கும் உண்ணாட்டுக் கடனைக் கொடுக்க முடியும். அங்ஙனமே, வெளிக்கடனெடுத்தல் மூலமெனின், கடன்பட்ட அரசாங்கத்திலிருந்து கடன் கொடுப்பவர்கள் ஆவணங்களை எடுப்பார்கள். பொதுவாக, கடன் பணங்களுக்கு நியமிக்கப்பட்ட ஒரு வட்டியளவு செலுத்தப்படும்.

வெளிக்கடன் பணம் சார்பாகவெனின், கடன்பட்டவர்கள் ஒரு பிரமாணத்தில் வட்டியோடு கடன்நிதியின் ஒரு பாகத்தையும், கடன் முடியும்வரை உரிமையாளனுக்குக் கொடுக்க வேண்டும். இதனுல் நேருவது, கடன்பட்ட சனங்களிடமிருந்தும் கடனுரிமையாளர்களுக்குப் பணத்தைக் கைம்மாறு செய்யலியலும். கடன்பட்ட நாட்டிலிருந்து கிடைக்கும் அதிகப் பணத்தினுல், கடனுரிமையாளர்கள், கடன்பட்ட சனங்களிடமிருந்து பண்டங்களையும் சேவைகளையும் பெறவியலும். ஆகையால், கடன்பட்டவர் கடனைத் தீர்ப்பது அந்நாட்டில் ஆக்கிய நுகர்ச்சிக் கெடுக்கக் கூடிய பண்டம், சேவை என்பன மூலமேயாம். அது எங்ஙனமாயினும் கடனுரிமையுள்ள நாட்டினுல் கடன்பட்ட நாட்டிற் பண்டங்களுக்கும் சேவைகளுக்கும் செய்யப்படும் கேள்வி, மீள்தன்மையிலாவியல்புடையதாயின், முன் கூறிய நாடு இரண்டாவது நாட்டிலிருந்து இறக்குமதிகளை அதிகரிக்காது. அப்பொழுது, கடன்பட்ட நாடு கடனுரிமையான நாட்டுக்கு ஏற்றுமதியளவை நெகிழ்த்திக்கொண்டு போகுமாயின், கடன்பட்ட நாடு கடனுரிமையான நாட்டிலிருந்து தருவிக்கும் இறக்குமதிகளைப் பெரும்பாலும் குறைக்கும். எப்படியாயினும், கடன்பட்ட நாட்டுக்கு நேருவது, அதற்கு நுகரக்கூடிய பண்டங்களையும் சேவைகளையும் பலியிடுவதேயாம். வெளிக்கடன் பணத்தை நன்ருக உபயோகத்துக்கு எடுப்பது, அது யாதாவது வளர்ச்சித் தொழிலில் அமைக்கப்பட்டிருந்தாலேயாம். அப்படியான யாதாவது வளர்ச்சித் தொழில் மூலம் எதிர்காலப் பயன் அதிகரிக்குமாதலால், எதிர்காலத்திலே மூலப்பணத்தையும் வட்டியையும் தீர்த்து நாட்டகத்தில் இலாபத்தைச் சேமித்துக்கொள்ள இயலும். ஒரு மனிதனுக்குப்போல ஒரு அரசாங்கத்துக்கும் நுகர்ச்சிக்கெனக் கடனெடுத்தல் அபாயகரமானது ஆனுல், வளர்ச்சிக்காகக் கடனெடுத்தல் பயன்படும்.

உட்கடன் எடுப்பதனுல் மனிதரிடையே பொருள் கைம்மாற்றமாகும். அவர்களுள் அரசாங்க ஆவணங்களைத் தாங்கும் கடனுரிமையாளர்களுக்கு வட்டி செலுத்தும் பொருட்டு வரிகளை விதிக்க வேண்டியதாகும். அதன் பயனுக, ஆதாயங்களின் சமானமின்மை கூடுமோ, குறையுமோ என்பது வரிமுறையிலும் சனங்களிடையில் அரசாங்க ஆவணங்கள் பரம்பியிருக்கும் நிலையிலும் தங்கியுளது.

அரசாங்க ஆவணங்கள் அதிக பங்கு சாதாரணமாகச் சனசமுதாயத்தில் செல்வமுள்ள சனங்கள் கையில் இருக்கிறபடியாலும், அளவான விருத்தி முறையானது, வரிமுறைக்கூடாக ஆவணங்களுக்குக் கிடைக்கும் வட்டியை நிறுத்தி விடுமளவு திறமையற்றபடியாலும், பொதுக்கடன் காரணமாக, சமுதாயத்தில் ஏழைகளிடமிருந்து செல்வர்களுக்கு ஆதாயங்கள் கைம்மாற இடமுண்டு.

பொதுக்கடனைத் தீர்த்து, திரட்டும் பணத்துக்கு ஆழ்நிதி என்று பெயர். இப்பணத்தைத் திரட்டுவது புதிய கடன்பணங்களையெடுப்பதனாலெனின், அது உண்மையான ஆழ்நிதியாகாது. உள்நாட்டுப் பொதுக்கடன் நிதிகளைத் தீர்த்து விடுதல் சில காரணங்களொட்டி நன்மையாகவிருந்தாலும், பொதுக்கடன்களைத் தீர்த்து விடுதல் தொழில் தளர்ச்சிக்கும் வேலையின்மைக்கும் ஆதரவாகவிருக்க முடியும். ஆக்கத்தை மேலான நிலையில் அமைத்துக் கொள்ளும் எண்ணத்தினாலெனின், கடன் நிதிகளைத் தீர்த்தல் ஆக்க நிகழ்ச்சிக்கு இரண்டாவதாகச் செய்ய வேண்டுமென்பது தெளிவாகும். வெளிக்கடன் பணம் சார்பாகவெனின், கடன் நிதியைத் தீர்த்துவிட நிபந்தனைகள் தீர்ந்துவிடுமாதலால், இத்தீர்ப்புக்களைப் பின்னர் மாற்றுதல் நாட்டு நம்பிக்கைக்கு ஓர் இழுக்காகும்.

அரசாங்கத்திலும் வேறு தாபனங்களிலும் வரவு செலவுகளையும், அவ்வாதாயத்தைப் பெறுகிற மாதிரியினாலும் செலவிடும் மாதிரியினாலும் ஆக்கம் மாறும் வண்ணத்தையும் நாம் ஆய்ந்து பார்த்தோம். வருவாயினதும் செலவினதும் தொடர்பான அளவினாலும் ஆக்கத்தின்மேல் முகாமை செலுத்தவியலும். அதாவது, ஒரு காலத்துக்குள்ளே அவ்விரண்டும் முழுமையுமே நிகராகுமோ, இன்றேல் வருவாய் செலவுக்குக் கூடுமோ என்னும் கேள்விகளால் ஒரு காலத்துக்குள்ளே வருவாய் செலவுக்குச் சரிசமானமாகும்பொழுதும் வருவாய் செலவுக்குக் கூடும்பொழுதும், வரவு செலவு அட்டவணை சமப்படுதல் என்று சொல்லப்படும். ஒரு குறித்த காலத்துக்குள் செலவு வருவாயிலும் கூடும் பொழுது, வரவு செலவு அட்டவணை சமமன்று என்று சொல்லப்படும்.

ஒருவன், கடன்படாதபடி, வருடாந்த வரவு செலவு அட்டவணை நிகராதல் வேண்டுமென்றே, ஒரு மீதி உண்டாகவேண்டுமென்றே, பல வருடங்களாகப் பொருளியலறிஞர்கள் நம்பினர்கள். ஆனால், ஆக்கப் பரிமாணத்தைப் பரிபாலிக்க மிகைகளும் குறைகளும், மிகவும் முக்கியமான உபாயங்கள் என்பது தற்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

அங்ஙனமெனின், வருடந்தோறும் வரவு செலவு அட்டவணைகளை ஒப்பிடுதல் வேண்டப்படாமை காணப்படும். மேலும், நெடுங்காலப் பொருளியல் வளர்ச்சி முறைகளை அனுசரிக்குமோரரசாங்கம் வரவு செலவு ஒப்பிடுதற் பொருட்டு, வருடம் வருடம் ஏற்ற காலவரையறையாகத் தீர்மானிக்க வேண்டியதில்லையென்றும், தன்மையறிவோர் கூறுகின்றனர். வருவாயையும் செலவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, அதனுட் சேரவேண்டியன யாவையென்பதுபற்றி இன்னும் உரையாடுகின்றனர். தீர்த்தற் கடன்களையும் வளர்ச்சித் தொழில்களுக்காக எடுத்த கடன்களையும், வரவு செலவுக் காரியங்களுக்காகக் கருதப்படும் செலவு

களிலிருந்து நீக்கவேண்டும். வரவு செலவுகளுக்காகக் கருதப்படும் வருவாய்களிலிருந்து பொதுச் சொத்துக்களையும் விற்பனைகளையும் கடந்த வருடங்களின் மீதிகளிலிருந்து எடுத்தவற்றையும் நீக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

கணக்குப்பார்க்கும் காலத்தைப்பற்றிய நியதி மிகவும் முக்கியமாகும். பல வருடங்களுக்குள்ளாயின, வரவு செலவு மீதிகளையும் வரவு செலவுக் குறைகளையும் சமமாக்கக் கூடும். தவிர, வருடந்தோறும் வரவு செலவு அட்டவணைகளைச் சமப்படுத்தச் செய்யும் முயற்சியின் காரணமாகப் பொருளியல் முறையில் ஏற்றவிறக்கங்கள் உண்டாகவியலும். அது எங்ஙனமாயினும் நெடுங்கால வரையறைக்குள்ளெனின், வரவுக் குறைகள் வரவு மீதிகளுக்குக் கூடுதல் விரும்பத்தக்கதன்று என்று சிலர் கூறுவர். அக்குறைகளைத் தீர்த்துவிடப் பொதுக் கடன்கள் எடுத்தாலே ஆகும்.

அங்ஙனமாயினும், எந்த வருடத்திலாவது வரவுக் குறைவு அதிகப்படுமாயின், அதனுற் பொருளியல் அசையாத் தன்மையைப்பற்றிய பொது சன நம்பிக்கையும் முயற்சியாளர்களின் இன்பமும் நீங்கிவிட இடமுண்டு. உண்மையாகவே, இது ஒரு அரசாங்கத்துக்கு இதமாகாது. ஆனல், இதனல் நாட்டின் பொருளியற் சீவியத்தில் உண்டாகும் மூகாமை செலுத்துதல் பெரிதும் ஆபத்தானது. ஆகையால், ஒருவருடத்திலே வரவு செலவு அட்டவணைக் குறைவின் அளவைத் தீர்மானிக்கும் பொழுது, விவசாய காரியங்களின்மேல் அதனுலுண்டாகக் கூடிய மூகாமை செலுத்துதலும் மதிக்கத்தக்கது.

அரசாங்கத்தின் வேண்டுதலாலாகாதபோதிலும், 1930 ஆம் ஆண்டின் பின் பத்து வருடங்களிலே உண்டானதுபோல், வியாபாரத் தளர்ச்சியுற்ற வருடங்களிலே அரசாங்க வரவு செலவு அட்டவணைகளிற் குறைகளுண்டாகும். ஆதாயங்கள் குறையவே வரியும் குறையும். சாதாரண தொழில்களின் ஆதாயம் குறைவது, சனங்களின் செலவுக்காகவுள்ள பணம் குறைவதால் அவர்கள் பண்டங்களையும் சேவைகளையும் குறைவாகப் பெறுவதனுலேயாம். இக்காரணத்தினுல், அரசாங்க வருமானம் குறையும். அது எங்ஙனமாயினும், செலவு அவ்வளவு குறையாது. வேறு விலைகள் குறையினும், பொதுச் செலவின் பெரிய பங்கு, திருத்தவியலாத செலவுகளாதலால் அவற்றை இலேசாகக் குறைக்கவியலாது. வியாபாரத் தளர்ச்சியுற்ற காலத்திலே அரசாங்கம் வேலையின்மையுதவிகளைக் கொடுக்குமாயின், இந்தப் புதிய செலவுகளையும் அரசாங்கம் தாங்கவேண்டும். மற்றைப்படி செழிப்பான சமயம் சனங்களுடைய ஆதாயம் கூடும்பொழுது, அரசாங்க வருமானமும் கூடும். ஆனல், அரசாங்கச் செலவு அவ்வளவு சீக்கிரமாக அதிகரிப்பதில்லை.

1930 ஆம் ஆண்டின் பின்னர் தோன்றிய பத்து வருடங்களின் முதற் சில ஆண்டுகளிலே, சமப்படாத வரவு செலவு அட்டவணைகளை மறுபடியும் சமப்படுத்தப் பல அரசுகள் எத்தனித்தன. இதற்கு அவைகள் செலவுகளைக் குறைக்கவும் வருமானத்தை வளர்க்கவும் எத்தனித்தன. இதனுல், இந்நாடுகளில் வர்த்தகத்

தளர்ச்சி மேலும் கூர்ந்து தாக்கிற்று. செலவின் சிக்கனம் காரணமாகப் பொருளியல் முறையில் வேலையின்மை அதிகரித்தது. அதிகமாக வருமானத்தைப் பெறச் செய்த முயற்சியின் காரணமாகத் தளர்ச்சியுற்ற யுகத்திலே, ஆதாயம் குறைந்தவர்களின் ஆதாயம் மேலும் குறைந்தது. சில அரசுகள் வருடாந்த வரவு செலவு அட்டவணைகளைப் பயன்படும் வண்ணம் நிகாக்கியதனுல் அந்தச் சனங்கள் கடினமான கட்டங்களையனுபவிக்க நேர்ந்தது.

இன்னும் சில அரசுகள், செலவைக் குறைக்கவும் வருமானத்தை வளர்க்கவும் எத்தனிக்காமல், வரிகளையதிகரிக்காமல், வரவு குறைவுக்குப் பயப்படாமல் ஆக்கத்துக்கு உதவியளித்தன. வியாபாரத்துக்கு உதவியளிப்பதனுலும் பெரிய பொதுக் காரியங்களை ஏற்றுக் கொள்வதனுலுமே அவை ஆக்கத்தைப் பெருக்க முயன்றன. இங்ஙனம் முன்னேற்றமடைந்த பொருளியல் முறைகள் மூலம் அவை வரவு செலவு அட்டவணையை ஒரு வருடத்தைக் காட்டிலும் நெடுங்காலம் சமப்படுத்த நிச்சயித்தன.

அரசாங்க வரவுமிகைகளையும் குறைகளையும் உண்டாக்குவதனுல் இடைவிடாமல் ஏறும் ஆக்கமட்டத்தை வருவிக்கவியலுமென்பது அண்மை வருடங்களிற் கண்டுகொள்ளப்பட்டது. அதனுல் பூரணமான உழைப்பையும் அதிகமான முதலீட்டு மட்டத்தையும், இவ்விரண்டின் காரணமாக வருங்காலத்தில் அதிகமான ஆக்க மட்டத்தையும் உண்டாக்கவியலும். அரசாங்க வரவு செலவுப் பரிபாலனமும் விலைமட்டத்தின் மாற்றத்தைக் குறைக்கவியலுமென்பதும் நம்பத்தகும். உண்மையாகவே, இவையெல்லாவற்றையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளல் கடுமையாகும். உதாரணமாக, பூரண வேலை இருக்கையில், சில சமயங்களில் விலையானது மதிக்கத்தக்க அளவில் ஓங்குதல் இயற்கையாகும். இப்பணிகளுள் முதலில் நிறைவேற்ற வேண்டியது யாது என்பதைப்பற்றிச் சனங்கள் ஒருமனதாகவிருப்பதில்லை.

உண்மையாகவே, ஆக்கத்தைப் பரிபாலிப்பதன் ஒரு வழியாக வரவு செலவுப் பரிபாலனத்தை அமைத்துக் கொள்ளல் துன்பமான காரியம். இது இப்படியாதல், வரவு செலவு அட்டவணை நிகாதலைக் காட்டிலும், இது ஒரு கடினமான காரணமாதலாலே என்க. மேலும், வரவு செலவு அட்டவணைப் பரிபாலனத்தின் முகாமை செலுத்துதலைப்பற்றி முன் கூறிய கொள்கைகள் புதிய கொள்கைகளாதலால் அவைகளைப் பொதுவில் அங்கீகரித்துக் கொள்வதற்கில்லை. ஆனுல், அரசாங்க வரவு செலவுப் பரிபாலனம் ஒரு நாட்டின் பொருளியல் ஏற்பாட்டை ஒழுங்கு செய்வதில் பேராற்றலுள்ள ஆயுதமென்பதை உயர்வு நவிற்சியணி நீக்கி நிச்சயிக்கவியலும்.

14 ஆம் அத்தியாயம்

## கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| 1 | Minimum | இழிவுநிலை |
| 2 | Collectivism | ஒருங்கு சேரியல் |
| 3 | Distribution | பங்கீடு, பரம்பல் |
| 4 | National income | நாட்டு வருமானம் |
| 5 | Booms | செழிப்பு, எற்றம் |
| 6 | Depressions | இறக்கம், மந்தம் |
| 7 | Banking system | வங்கித் தொழின்முறை |
| 8 | Level of economic activity | பொருளியல் முயற்சி மட்டம் |
| 9 | Allowance | அனுமதி |
| 10 | Fluctuation | தளம்பல், ஏற்றவிறக்கம் |
| 11 | Taxes | இறைவரிகள், வரிகள் |
| 12 | Savings | சேமிப்பு, மிச்சம் |
| 13 | Direct taxes | இயக்குதல், நேரானவரி |
| 14 | Indirect taxes | நேரில் வரிமுறைகள் |
| 15 | Incidence of taxation | இறைபடுகை, வரித்தாக்கம் |
| 16 | Income taxes | வருமானவரி |
| 17 | Imports | இறக்குமதிப் பொருள்கள் |
| 18 | Exports | எற்றுமதிப் பொருள்கள் |
| 19 | Death duties | மரணவரிகள் |
| 20 | Proportional | விகிதசமம் |
| 21 | Progressive | விருத்திமுறை |
| 22 | Regressive | தேய்வு முறை |
| 23 | Equal sacrifice | சமவழங்கல் |
| 24 | Proportional sacrifice | விகிதசமவழங்கல் |
| 25 | Minimum sacrifice | இழிவுநிலைவழங்கல் |
| 26 | Inheritance tax | சந்ததிப்பேற்றுவரி |
| 27 | Property tax | சொத்துவரி |
| 28 | Disincentive | சோர்வு |

| | | |
|---|---|---|
| 29 | Without Hoarding | .. குவித்தலில்லாத |
| 30 | Subsidy | .. உதவிப்பணம் |
| 31 | Diversion | .. மறுவழிப்படுத்தல் |
| 32 | Transfer-Expenditure | .. கைமாற்றன்முறைச் செலவு |
| 33 | Grants | .. அரசாங்கக் கொடைகள் |
| 34 | Purchase price | .. கொள்வனவு விலை |
| 35 | Public debt | .. பொதுப்படுகடன் |
| 36 | Voluntary | .. இச்சையான |
| 37 | Involuntary | .. இச்சையில்லாத |
| 38 | Sinking fund | .. ஆழ்நிதி |
| 39 | Deficit | .. குறைவு |